ஸ்ரீ பகவத்கீதை

ACC NO 39253

KOVIL… LIBRARY, KOVIL…
39253

தத் ஸத்

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மநே நம:

ஸ்ரீ பகவத்கீதை

இது,

ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய்
முமுக்ஷுக்களுக்கு உபயோகப்படும்படி

கடப்பை ஜில்லா கடிகோட்டை ஆசிரமவாசிகளாகிய
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த
யோகீஸ்வரர் அவர்களால்
இயற்றப்பட்டு,

சென்னை சூளை
ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தில்,
ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனியாரால்
பதிப்பிக்கப்பட்டது.

நான்காம் பதிப்பு 2000

1—3—1928

All Rights Reserved] [விலை ரூபா 2-4-0

வி. பி. தபால் பார்க்கிங் சிலவுகள் பிரத்தியேகம்.

முக்கிய கவனிப்பு.

குரங்கைப்போல் ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல் நிறுத்தி முக்தியடைவதற்காக இந் நூலாசிரியரால் வெளியாகிய முக்கியமான நூல்கள்:— ரூ. அ.

ஒன்பதாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" அநேக ஆப்டோன் பிளாக் படங்களுமுள்ள மிகவும் அற்புதமான நூல் காலிகோபயிண்டு	4	0
ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக ஸாராம்ருதம் தெலுங்கு	4	4
"ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" இங்கிலீஷ் முதற்பாகம்	2	8
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை நான்காம் பதிப்பு காலிகோ பயிண்டு ...	2	4
ஞானார்த்தமாய் எழுதிய ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம், ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து கன்னடத்திலும், கன்னடத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்த்தது; இதுவரையில் வெளியாகாதது இரண்டாம்பதிப்பு காலிகோபயிண்டு...	2	4
தத்துவபரிசோதனை அன்னதானபலன் மூன்றும் பதிப்பு	0	8
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம் மூன்றும் பதிப்பு	0	6
மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல் தமிழ் ...	0	4
ஷை நூல் இங்கிலீஷ்	0	4
பூஜை அறைக்குவேண்டிய உயர்ந்த பரிமளமுள்ள $1\frac{1}{4}$-மணி நேரம் எரியும் ஊதுவத்தி 100-க்கு விலை	2	0
இந்நூலாசிரியர் பெரிய போடோ பூஜைக்கு உபயோகமானது. வி.பி. அனுப்புவதில்லை. முன்னதாய் ரூபா மூன்று, அணா எட்டு அனுப்பினால் படம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்	3	8

இவைகள் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி.
169, ஸ்டிராஹன்சு ரோட்டு, ஞூளைப் பட்டாளம்,
பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், சென்னை.

இந்நூலாசிரியர் வரவேற்பு.

திருவேவருக திறம்பொலிந்த
சிவமேவருக செழுஞ்சுடரின்
உருவேவருக உண்மைநிலை
உயர்வேவருக உலகமதின்
கருவேவருக கருத்துதவக்
கனியேவருக காரணசற்
குருவேவருக குறையகற்றுங்
குணமேவருக வருகவே. (1)

மறையேவருக மாதவத்தின்
மலையேவருக வளர்யோகத்
துறையேவருக தொலைவறுநற்
சுகமேவருக தொண்டர்மன
நிறையேவருக நிர்மலநன்
நிலையேவருக நிகிலமதற்
கிறையேவருக வெம்முளத்தின்
இனிவேவருக வருகவே (2)

பொருளே பொறியே புகன்றிடுநற்
புகழே பொலிவே புயலெனச்செய்
அருளே அளியே அசைவுதவிர்
அறிவே அழலே அருவுருவே
இருளை யொளியே யிலதுளதென்
றிசைக்காப்பொருளே இடரகற்றும்
தெருளே செல்வச் சிவம்வருகத்
தேனே வருக வருகவே. (3)

திகழுமகண்ட பரிபூர்ணத்
தேஜோன்மய ஸச்சிதாநந்த
புகழுநிகில நிராங்கார
புண்யபரம நிஷ்களங்க

நிகழுமரிய பரப்ரம்ம
நித்யானந்த நிராதார
மகிழுமழியாப் பொருள்வருக
மதியேவருக வருகவே (4)

அடியார் வேண்டுகோள்.

உண்மைநிலையை அறியாமல்
உழலுமடியேம் உணர்ந்திடவே
வண்மைமொழி மந்திரமொன்றும்
மலர்வாய்த்திறந்து வழுத்திடுவீர்
திண்மைப்பொருளைத் தெரிந்தபசுந்
தேனே திகட்டாத் தெள்ளமுதே
தண்மைப்பொழில்சூழ் கடப்பைநகர்
தனில்வீற்றிருக்கும் தவக்கொழுந்தே. (5)

மதத்தைத்தவிர்த்து மலமொழித்து
மயலைக்கெடுத்து மனநிறுத்தும்
விதத்தையுணர்த்தி விளங்குகின்ற
மெஞ்ஞானப் பேரின்பநல்ல
முதத்தையருந்திப் பிறப்பாழி
முழுகா தருளுமுளரியஞ்செம்
பதத்தைமனதில் நிலைநிறுத்திப்
பணிந்தோம்சிரத்தி லணிந்தோமே. (6)

புன்சொல் எனினும் புகலுமிவையெல்லாம்
இன்சொல் என்மனதில் எண்ணியே—நன்சொல்
திருவாய் மலர்ந்தருள்வீர் சேவித்தேன் பாதம்
குருவாய்ச் சிரமீதில் கொண்டு.



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை, கடப்பை ஜில்லா.

மூன்று மாதம் பதின்மூன்று தினங்கள் யோகசமாதியிலிருந்து வெளிவந்தவுடன் பிடித்த போட்டோ. 1865ஹு பிப்ரவரி 16உ குருவாரம் சிம்மலக்கினத்தில் ஜநநம். வயது 63.



ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை, கடப்பை ஜில்லா.

மூன்று வருஷங்கள் வரையில் யோகாப்பியாசம் செய்யாமல் விட்டிருந்தபோது இருந்த சரீரம். வயது 61, இது, யோக சமாதியில் உட்காரும் இரவு 9-மணிக்கு இருந்த சரீரம்.

இந்நூலாசிரியர் யோகத்திலிருந்து வெளிவந்தவுடன் பிடித்த போட்டோ.

இதோ, எதிரில் காட்டியிருக்கும் ☞ இந்நூலாசிரியர் போட்டோ, யோகாப்பியாசம் செய்யாமல் விட்டுவிட்டிருந்தபோது 61-வது, வயதில் பிடித்த போட்டோ. இவர், யோகாப்பியாசம் செய்யாமல் விட்டுவிட்டபடியால், எதிரில் காட்டியிருக்கும் சரீரம் ஸ்தூலமாய்விட்டது. ஏனென்றால் இவர், மூன்று வருஷங்களுக்கு அதிகமாகவே அங்கங்கு தேச ஸஞ்சாரம் செய்துவந்தபடியால் அவ்விடங்களிலெல்லாம் யோகாப்பியாசம்செய்ய தமக்குச் சாத்தியப்படாமலிருந்தபடியால் தம் யோகசாதனையைச் செய்யாமல் பூர்த்தியாய் விட்டுவிட்டனர். யோகசாதனையை விட்டவுடன், இவர் சரீரம் ஸ்தூலமாய், ரோமங்களெல்லாம் மிகவும் வெளுமையாய் நரைத்து விட்டதுகள். யோகிகளுக்கு ரோமங்கள் நரைக்கலாகாது என்று, யோகசாஸ்த்திரப் பிரமாணமுண்டு. ஆதலால், அதன்பிறகு இவர் மலஜல விசர்ஜ்ஜனத்திற்கும், ஸ்நானத்திற்கும் வெளிவராதபடி ஓர் சிறிய இருட்டு ஏகாந்த அறையிலேயே எல்லாம் ஏற்படுத்திக்கொண்டு 23-7-27 தேதி இரவு, 9-மணிக்கு அவ்வறைக்குள்சென்று, 5-11-27, தேதி வரையில் என்றால், மூன்றுமாதம் பதின்மூன்று தினங்கள்வரையில் வெளிவராமல், அவ்வறையிலேயே பிரதிதினம் இரவு, 2-மணிக்கு மலஜல விசர்ஜ்ஜனை, ஸ்நானம் முதலானவைகளைச்செய்து மற்றக்காலங்களிலெல்லாம் அவ்வறையில், உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திராதபடி இருந்து, வாயுபக்ஷணைசெய்து (காற்றைப்புசித்து) ஒரே யோக சமாதி நிஷ்டையிலேயே இருந்தனர். இவ்வாறிருக்கும்போது இவர் வெண்மை ரோமங்களெல்லாம், க்ரமக் கிரமமாய் மூன்று மாதம் பதின்மூன்று தினத்திற்குள் கால்பாகம் வெண்மை ரோமங்கள், கரப்புநிரமாய் மாறிவிட்டதுகள். இந்த வெண்மை ரோமங்கள் கரப்புநிரமாய் எவ்வாறு மாறிற்றோ அதுவிஷயம், இந்நூலாசிரியர் அனுபவ ரஹஸ்யத்தை உங்களுக்கு இதனடியில் தெரிவிக்கிறார் கேளுங்கள் :—

"ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பிராணயாமத்தில் சொல்லியிருப்பதுபோல், வெளிவாயுவை (காற்றை) மூக்குத் துவாரங்களின்வழியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி மறுபடியும் அவ்வாயுவை வெளியில்விடாமல் நிறுத்தியபோது, அனேகவருஷ பழக்கத்தால் அவ்வாயுவானது, பாதப் பெருவிரல்முதல் உச்சி வரையில் சரீரமெங்கும் ஓடித்திரியும். அப்போது, அவ்வாயுவானது சரீரத்திலிருக்கும் எழுபத் திராயிரம் ரோமத்துவாரங்களின் வழியாய் வெளியிலும் வரும். அவ்வாறு வெளிவரும்பொழுது அவ்வாயுவு ஓடும் வேகத்தினால் சரீரத்திற்கு நடுக்கல் உண்டாகும். அதாவது, ரெயில் மிகவும் வேகமாய் ஓடும்பொழுது அது ஓடும் அதிர்ச்சியினால் ரெயில் சமீபமாய் இருக்கும் பெரிய பெரிய கட்டடங்களுடன்கூட எப்படி அதருகின்றதோ அதுபோல், சரீரத்திற்குள் ஓடும் வாயுவேகத்தினால் சரீரமெல்லாம் அசைந்து நடுக்கலுண்டாகும். அச்சமயம் சரீரத்திற்கு மிகவும் நோயை உண்டாக்கும். அந்த நோய்களுக்கெல்லாம் சஹித்துக் கொண் டிருக்கவேண்டும். அவ்வாறு சஹித்துக்கொண் டிருக்கும்போது அவ்வாயுவானது எழுபத்திராயிரம் ரோமத் துவாரங்களின்வழியாய் வெளிவந்து, எல்லா ரோமத்திற்குள்ளும் பிரவேசித்து வெண்மையா இருக்கும் ரோமங்களையெல்லாம் நாளாவட்டத்தில் சிறுகச்சிறுக கரப்புநிரமாய் மாற்றிக்கொண்டேவந்து, கடைசியில் எல்லா வெண்மை ரோமங்களையும் பூர்த்தியாய் மிகவும் கரப்புநிரமாய் மாற்றிவிடும்.

ஆனால் அவ்வாயுவு எப்படி கரப்புநிரமாய் மாற்றுமென்றால், மிருதுவாய் இருக்கப்பட்ட இடங்களில் சீக்கிரகாலத்தில் கரப்புநிரமாய் மாற்றும். தாடிமுளைக்கும் இடமாகிய முகவாய்க்கட்டை (மோக்கட்டை) என்னும் முதலான இடங்களில் மிகவும் கடினமாயிருக்கும். ஆதலால், அவ்விடங்களிலுள்ள தாடிரோமங்கள் மாத்திரம் மிகவும் நிதானமாய் நாளாவட்டத்தில் கரப்புநிரமாய் மாறிக்கொண்டேவரும். சரீரத்திலுள்ள எழுபத் திராயிரம் ரோமத்துவாரங்களின்வழியாய் இந்நூலாசிரியராகிய ஷை யோகீஸ்வரருக்குவாயுவு ஓடிய அனுபவத்தைச்சொல்லி, இவர் தாடிரோமங்கள் மிகவும் நிதானமாய்க் கறுத்துவருவதனால், அதற்குக்காரணம்,

அந்தயிடம் மிகவும் கடினமாய் (பிருசாய்) இருக்கப்பட்ட இடமென்று தம் அனுபவத்தையும் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறாக வெண்மை ரோமங்கள் கரப்புநிறமாய் மாறியபிறகு, அந்த ரோமங்களைச் சவரைத்தபோதிலும் மறுபடியும் உள்ளேயிருந்து புதிதாய்ப் புறப்பட்டுவரும் ரோமங்களெல்லாம் கரப்புநிறமாய் வருமேயொழிய வெண்மை ரோமங்களாய்ப் புறப்பட்டு வரமாட்டாதுகள். இவைகளையெல்லாம் இந்நூலாசிரியர் அனுபவித்த பிரத்தியக்ஷ திருஷ்டாந்தங்களையெல்லாம் உங்களுக்கு இந்நூல் மூலமாய்த் தெரிவித்தார். இவைகளெல்லாம் எந்த சாஸ்த்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கவில்லை. இந்நூலாசிரியர் அனுபவத்தைக்கொண்டு சொல்லப்பட்டதென்று அறியக்கடவீர்களாக.

இவர் யோகத்திலேயே ஒருவருஷகாலம் இருப்பாராகில் எல்லா ரோமங்களும் கருப்பாய் மாறிவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. மூன்றுமாதம் பதின்மூன்றுதினங்கள் யோகநிஷ்டையிலிருந்து வெளிவந்தவுடன் இவர்ரூபமும், ரோமங்களும், சரீரமும் மாறுபட்டிருப்பதைப் போட்டோ பிடித்திருக்கின்றார்கள். ஏனென்றால்,

நரைபோம், மூப்புநீங்கும், விருத்தரும் பாலராவார் மேனியும் சிவந்திடும் என்று, பெரியோர்கள் பாடல்களாய்ப் பாடி இருக்கின்றார்களேயொழிய இப்படிப்பட்ட சாதனையில் இருப்பவர்களை இதுவரையில் அனேகர்கள் கண்டதில்லை. ஆதலால், பெரியோர்கள் சொல்லியவாக்கு சத்தியம் என்பதற்காகவே இந்நூலாசிரியரை இப்போது திருஷ்டாந்தமாய்ச்சொல்ல போட்டோ பிடிக்கப்பட்டது. இவர் வயது, 63-ஜநநம், 16-2-1865. குருவாரம் சிம்ம லக்கணம்.

மூன்றுமாதம், பதின்மூன்று தினங்கள் யோகநிஷ்டையிலிருந்து வெளிவந்தபிறகு பிடித்தபோட்டோ, 61-வது, வயதில் பிடித்த போட்டோவிற்குப் பின்புரத்தில் இந்நூலுக்கு முதலில் காட்டப்பட்டிருக்கின்றது. அந்த யோகசரீர படத்தைப் பாருங்கள். இப்படம் பூஜைக்காக வேறாய் விற்கப்படுகின்றது.

அது, 12-அங்குலம் உயரம் 10-அங்குலம் அகலமுள்ள பெரிய சயிஸ்போட்டோ. பூஜைக்கு மிகவும் உபயோகமானது. வி. பி.

மூலமாய் அனுப்புவதில்லை. முன்னதாய் ரூபா 3—8—0 அடியில் கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் அனுப்பினால் ஷை போட்டோ ரிஜிஸ்டர்மூலமாய் அவர்களுக்கு அனுப்பப்படும். இந்த யோகத்தினால் வெண்மைரோமங்கள் கரப்புரமாய் மாறி விடுவது மிகவும் பெரிதான கார்யமென்று எண்ணவேண்டாம். இந்த யோகமானது, வெண்மைரோமங்களையெல்லாம் கரப்புரமாய் மாற்றுவதுமே யல்லாமல், மனோ ஓட்டத்தைநிறுத்தி மிகவும் ஆனந்தசுகத்தை உண்டாக்குவது என்னவென்று சொல்லலாம். அப்பப்பா! அந்தசுகம் இப்படிப்பட்டதென்றுசொல்லத் தெரியாமலிருக்கின்றது. ஆயினும், அந்தச்சுகம் எப்படி இருந்ததோ அந்த அனுபவத்தை இனி இதனடியில் சொல்லப்போகின்றார் கேளுங்கள் :—

T. K. சுந்தரம்.

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி, 169, ஸ்டிராஹன்ஸ் ரோட்டு, தூளைப்பட்டாளம் பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

இந்த போட்டோ பெறலாம்.

இந்நூலாசிரியர் யோகநிஷ்டையிலிருந்த சுவானுபத்தை வெளியிடுதல்.

இப்போது, இந்நூலாசிரியர் தம் யோகசாதன அனுபவங்களையெல்லாம் இதனடியில் சொல்லப்போகின்றார் கேளுங்கள் :—

அய்யா! இந்நூலாசிரியர், யோகத்திலிருப்பதற்காக இதுவரையில், முன் பக்கங்களில் சொல்லியிருப்பதுபோல் தயார்செய்து வைத்திருந்த ஷை அறைக்குள் சென்றபிறகு, இரவு, 2-மணிக்கு ஸ்நானம் செய்து யோகாப்பியாசம் பிராரம்பம் செய்வது வழக்கம். இவ்வப்பியாசத்திற்கு முன், பெரிய எலிமிச்சம்பழம் அவ்வளவு பிரமாணம் வெண்ணெயைச் சாப்பிடுவார். ஏனென்றால், யோகம் செய்வதனால் விசேஷ அக்நி ஜ்வாலை உண்டாகும். ஆதலால், வெண்ணெ சாப்பிடுவதனால் ஷை அக்நி ஜ்வாலை சாந்தமாகும். இவ்வாறு வெண்ணெயைச் சாப்பட்டபின் அவ் வர்த்தராத்திரி வேளையில் பால் கிடைக்காதபடியால், வலது நாசியில் சுவாசம் இழுத்து

போகாப்பியாசம் செய்யும்போதும், அதுபோல் இடது நாசியிலும், இரண்டு நாசிகளிலும் சுவாசம் இழுத்து யோகாப்பியாசம் செய்வதற்குமுன், ஒவ்வொருநாசிகளிலும் செய்யும்போதெல்லாம் பாலுக் குப்பதிலாய் மூன்றுவிழுங்கு ஜலம் சாப்பிட்டு, யோகாப்பியாசம் செய்வதுண்டு. பிறகு காலை 6-மணிமுதல், ஒவ்வொரு நாசிகளிலும் சுவாசம் இழுத்து யோகாப்பியாசம் செய்யும்போதெல்லாம், மூன்று விழுங்கு பால்மாத்திரம் சாப்பிட்டு குடல் நிரம்ப வாயுவை (சுவாசத்தை=மூச்சை)ப் பூர்த்தியாய் உள்ளுக்கிழுத்து விழுங்கி மறுபடியும் அவ்வாயுவை வெளிவிடாமல் நிறுத்தி, எவ்வளவு எண்ணிக்கை வரையில் நிறுத்தவேண்டுமோ அவ்வளவு எண்ணிக்கைவரையில் நிறுத்தி முடிந்தவுடன் பிறகு, உள்ளே நிறுத்தியிருக்கும் வாயுவை (சுவாசத்தை) யெல்லாம் மறுபடியும் வெளிவிடாமல் அவ்வாயுவிலிருந்து நாலங்குலம் நீளமவ்வளவு வாயுவைமாத்திரம் வெளியில் விட்டு, மறுபடியும் அந் நாலங்குல வாயுவைமாத்திரமே உள்ளுக் கிழுத்து, மறுபடியும் அந்த நாலங்குல வாயுவைமாத்திரம் வெளியில் விட்டுக்கொண்டும், மறுபடியும் உள்ளுக் கிழுத்துக்கொண்டுமாய் இருந்து, மற்றவாயுவை யெல்லாம் குடலில் நிறுத்திவைத்து நிஷ்டையி லிருக்கவேணடும். மேற்சொல்லியதுபோல் வாயுவை குடலில் நிறுத்திவைத்தால் பசி உண்டாகமாட்டாது. இதையே வாயுபக்ஷணை என்று (காற்றைப் புசிப்பதென்று) பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்த வாயுபக்ஷணைக்குத் திருஷ்டாந்தம் நம்மாழ்வார் வைபவத்தில் என்ன சொல்லுகின்றதென்றால். "செத்ததத்தின் வயற்றில் சிறியது பிறந்தால், எத்தைத்தின்றெங்கே கிடக்கும்" என்று மதுரகவியாழ்வார் கேட்டனர், அதற்கு, "கானலோடிய காட்டில் சிறியது பிறந்தால் அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று, நம்மாழ்வார் பதிலளித்தனர். இதன் கருத்து என்னவென்றால், வயற்றில் பசி எடுத்தால், எதைத் தின்று பசியாரவேண்டுமென்றாலோ, காற்றைத் தின்று பசியாரவேண்டு மென்பதேயாம். இந்நூலாசிரியர் மேற்சொல்லியதுபோல் பாலும், காற்றும் இவ்விரண்டும் சாப்பிட்டு யோகத்திலிருந்து கலைந்தவுடன் பகல் 12-மணிக்குப் பாதி ஆப்பிலும், (Apple) அதுபோல், இரவு பாதி ஆப்பிலும் மாத்திரமே ஆஹாரமாய் எடுத்துக்

கொண்டு யோகத்திலேயே இருந்து, அதில் தான் அனுபவித்த தம் அனுபவங்களை எல்லாம் இதனடியில் வெளியிடுகின்றார் :—

இவர், பத்மாசனத்தில் உட்கார்ந்து யோகாப்பியாசம் செய்து முடித்துச் சும்மாய் உட்கார்ந்திருக்கும்போது இவர் மனமானது எங்கும் ஓடாமல், அசைவற நின்றிருக்கும் தீபம்போல் நின்றிருந்தது. மனம் இவ்வாறு சும்மாய் நின்றிருக்கும் சமயத்தில் உண்டாகிய ஆனந்தசுகம் இவ்வாறிருக்கின்றதென்று உங்களுக்குச் சொல்லவும், அதை யோசித்து இந்நூலில் எழுதவும் ஸக்தியற்றவராயிருக்கின்றார். இப்படிப்பட்ட சுகத்தை இந்திராதி தேவதைகளும், பிரமதேவனும் கண்டிரார்கள். ஏனென்றால், அவர்கள் ஓர் எண்ணத்தைக்கருதி விசேஷ புண்ணியங்களைச் செய்து தேவலோக பதவிக்குப் போனவர்களாதலால், அவர்களுக்கு ஊசி முனி அவ்வளவுமாத்திரமும் இச்சுகம் கிட்டமாட்டாதென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லலாம். இவர்களின் புண்ணியம் இருக்கும் வரையில் மாத்திரம் அவ்விடமிருந்து "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஸந்தி" என்னும் கீதாவாக்கியர்தியாய்ப் புண்ணியம் முடிந்தவுடன் மரணமடைந்து மறுபடியும் யோகியாய்வந்து பிறந்தால் மாத்திரம் இந்தச் சுகத்தை அனுபவிப்பார்களே யொழிய மற்றப்படிக்கு ஷை இந்திராதி தேவதைகளும் அனுபவிக்கமாட்டார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. எந்த பூஜைகளினாலும், ஜபங்களினாலும், தவங்களினாலும் இப்படிப்பட்ட சுகம் கிடைக்குமென்று இந்நூலாசிரியருக்குத் தோன்றவில்லை. இதனால் என்ன யேற்படுகின்றதென்றால், யோகம் ஒன்றிற்கே மனதைநிறுத்த ஸக்தி உண்டென்று இந்நூலாசிரியர் புத்திக்கு ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. யோகத்தில் இப்படிப்பட்ட மஹிமை இருப்பதனால்தான், ஸ்ரீ கிருஷ்ணபகவான் யோகமே சிரேஷ்டமானதென்று சொல்லுவதுமே யல்லாமல், மஹான்களாகிய பெரியோர்களும் யோகமே சிரேஷ்டமானதென்று சொல்லுகின்றார்கள். இந்த யோகத்தையே சமாதியென்றும் சொல்லுவார்கள். இந்தச் சமாதியிலிருக்கும்போது இந்நூலாசிரியருக்கு இருந்தவைகளையெல்லாம் வெளியிட்டுச் சொல்லுகின்றார் கேளுங்கள் :—

யோகாப்பியாசம் செய்துமுடித்துச் சமாதியிலிருக்கும்போது அவ்விடம் மனம் இல்லாமலிருப்பதனால் அச்சமயத்தில் இருந்தச் சுகம் இப்படிப்பட்டதென்று சொல்ல சாத்தியமாகாதென்று இதுவரையில் முன்னமே சொல்லியிருக்கின்றோம். அப்படிப் பட்ட சுகத்திலிருக்கும்போது நாவரண்டிருக்கும். எச்சலை விழுங்க விடாது. கண், வாய்களைத் திறக்கவிடாது. கைகால்களை அசைக்க இச்சை இராது. மூச்சு ஆடுவதும், ஆடாததும் தெரியவராது. யார் உரத்த சப்தத்துடன் பேசியபோதிலும் கேழ்க்கமாட்டார். வெளிச்சத்தையும், மனிதர்களையும் பார்க்கவும் பேசவும் இச்சை யிராது. எப்பொழுதும் ஏகாந்த இருட்டு அறையிலேயே இருக் கும்படி எண்ணத்தை உண்டாக்கும். அன்னியர்களிடம் பேசி னால் அசசுகம் போய்விடுமென்று எண்ணி எப்படிப்பட்டவர்களா யிருந்தபோதிலும் அவர்களிடம் பேச இஷ்டமிராது.

இவ்வாராக பத்மாசனத்தில் இருக்கும்போது சிலமணிநேரம் இருந்து பிறகு, சுவற்றில் மணையும், தலையணையும் சாற்றி இருப்ப தில் சாய்ந்து பத்மாசனத்திலிருக்கும் காலை நீட்டிக் கைகளைத் தன்னிஷ்டம்போல் வைத்துக்கொண்டு சும்மாய் உட்கார்ந் திருந்த போதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக்கும் இவ்வாறாக சில மணிநேரங்கள் இருந்தபிறகு, சாய்ந்தபடியே இருந்து இடது காலின்பேரிலாகிலும் அல்லது, வலது காலின்பேரிலாகிலும் கால் மேல் கால்போட்டு இரண்டுகைகளின் விரல்களைக் கோர்த்து ஷை முழங்காலில் மாட்டிப் பிகுமானமாய் உட்கார்ந்து ஷை தலையணை யில் சாய்ந்துகொண்டு சிலமணிநேரம் இருக்கும்வரையிலும், அந்தச் சுகம் அப்படியே இருக்கும். பிறகு, கைகளை முழங்காலில் கோர்க் காமலே கால்மேல் கால்போட்டுச் சாய்ந்து சிலமணிநேரம் இருந்த போதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக்கும். பிறகு, கால்களை மாற்றி கால்மேல் கால்போட்டு உட்கார்ந் திருந்தபோதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக்கும். பிறகு, இடது குதிக்காலை வலது துடையின்கீழ் வைத்து, வலது பாத மணிக்கட்டை இடது முழங் கால்மீது வைத்திருந்தபோதிலும் அந்தச் சுகம் அப்படியே இருக் கும். இதையே வீராசனம் என்று சொல்லுவார்கள். பிறகு, குத் துக் கால்களாய் உட்கார்ந்து முதுகிற்கும், குத்துக்கால்களுக்கு யோகப்பட்டையை மாட்டி இரண்டு முழங்கைகளையும் ஷை குத்துக் கால்களுக்கும், மார்புக்கும் மத்தியில் வைத்து இரண்டு கைகளின் விரல்களைக் கோர்த்து உட்கார்ந்திருந்தபோதிலும் அந்தச் சுகம் அப்படியே யிருக்கும். இதற்கு யோகப்பட்டை ஆசனமென்று சொல்லப்படும். பிறகு, தனக்கிஷ்டம் எப்படியோ அதுபோல் உட்கார்ந்திருந்தாலும்சரி ஷை சுகத்தில் எள்ளுமூக்கு நுனி அவ்

வளவுமாத்திர சுகமும் குறைவுபடாமலே இருந்துகொண்டிருக்கும். இந்நூலாசிரியர் மேற்சொல்லியவைகளைப்போல் உட்கார்ந்திருந்து அந்தச் சுகத்தை அனுபவித்தபடியால், அது விஷயங்களெல்லாம் இங்கு விவரமாய் எழுதநேர்ந்தது. இவ்வாராக தன் இஷ்டம் போல் எப்படி உட்காரவேண்டுமென்று எண்ணி உட்காருகின்றார்களோ அதையே சுகாசனமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

பிராணாயாமமென்கிர யோகத்தில் இப்படிப்பட்ட மஹா மஹிமையாகிய சுகம், இருப்பதனால்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவான் யோகத்தைப்பற்றி மிகவும் சிரேஷ்டமாய்ச் சொல்லியதுமேயல்லாமல் சாஸ்த்திரங்களும் சொல்கின்றது. பெரியோர்களெல்லோரும் இப்படிப்பட்ட யோகசாதனையை அனுஷ்டித்துவந்து மேற்சொல்லிய சுகத்தில் சொக்கிஇருந்து இச்சுகத்தை எவர்களுக்கும் வெளியிடாமல் தம்வரையில் தாமே யனுபவித்துச் சென்றுவிட்டார்கள். சிலர், இச்சுகத்தை பாடல்களாய்ப்பாடிச் சென்றுவிட்டார்கள். ஆதலால், நாம் மானவஜன்மமெடுத்து இப்படிப்பட்ட சுகத்தை அடையாமல் விருதா காலங்கழித்துச் சென்றுவிடுவதனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. இப்படிப்பட்ட சிறந்த யோக சாதனையை எல்லோரும் அனுஷ்டித்துவர இந்நூலாசிரியர் "ஜீவப்பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" நூலில், தம் அனுபவங்களையெல்லாம் உபதேசமாய்ச் சொல்லி வெளியிட்டிருக்கின்றார். இவர், இந்நூலில் சொல்லி யிருப்பதுபோல் நீங்களும் அந்த யோக சாதனையை அப்யசித்துவந்தால், அவ் வப்பியாசமுதிர்ச்சியினால் மேற்சொல்லிய சுகங்களை, இந்நூலாசிரியர் அனுபவித்து வருவது போல் நீங்களும் தப்பாமல் அனுபவிக்கலாம். யோகத்தின் மஹிமையினால்தான், மனம் கட்டுப்பட்டு சுக மனுபவிக்கவேண்டுமே யொழிய மற்ற எவைகளாலும் கட்டுப்படமாட்டாதென்று ஸ்பஷ்டமாய் இந்நூலாசிரியர் அனுபவத்தால் தெரியவருகின்றது. மனம் யோகத்தினால் கட்டுப்பட்டபிறகு உலகத்தில் அவர்களுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை.

இப்படிக்கு,

பரமஹம்ஸ ஸச்சிதானந்தர்

கடிகோட்டை, கடப்பை ஜீல்லா.

மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம்செய்வதனால் உண்டாகும் பலன்.

ஓ சகோதரி! சகோதரர்களே!

யார், ஸந்தியாவந்தனம் அல்லது ஜபம், பூஜை, செய்து வந்தபோதிலும், மணை (பலகை)மேல் மான்தோல்போட்டு அதன்மேல் வெள்ளை வேஷ்டி மடித்துவிரித்து நிஷ்காம்யமாய் ஜபம்செய்ய வடக்குமுகமாய் உட்கார்ந்து, ஜபம் செய்துவரவேண்டும். அப்படிக்குச் செய்யாமல், பூமியின் மீதோ மணை (பலகை) யின்மீதோ அல்லது, வேஷ்டியின் மீதோ உட்கார்ந்து ஜபம்செய்துவந்தால், ஜபத்தின் பலனை, ஊசியைக் காந்தம் இழுத்துக் கொள்வதுபோல் பூமி புருஷன் செய்யும் ஜபத்தை இழுத்துக்கொள்ளும். மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்துவந்தால், ஜபத்தின் பலனை பூமி இழுத்துக்கொள்ள சக்தியிராது. ஆதலால், மான்தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கின்றார். மான்தோல் மீது உட்கார்ந்து ஜபம் செய்யவேண்டுமென்று, ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லிய ரஹஸ்யம் இதுவேயாம். இந்த ரஹஸ்யம் குருவினால் தெரிந்துகொள்ளும்பொருட்டு, ஸ்ரீ கிருஷ்ண பகவான் வெளிப்படுத்தவில்லை; அப்படிப்பட்ட குருரஹஸ்யம் உங்களுக்கு இந்நூல் மூலமாய்த் தெரிவித்தோம். மான்தோலில், எந்தத் தோலா யிருந்தபோதிலும் சரி. அதன்மேல் உட்கார்ந்து ஜபம்செய்யலாம். புள்ளிமான் தோலே வேண்டுமென்பது அனாவஸ்யம். மான்தோல் அநேக இடங்களில் கிடைக்கமாட்டா. ஆதலால், ஸந்தியாவந்தனம், ஜபம், அல்லது பூஜை செய்து வரப்பட்டவர்களுக்காக ஸ்ரீசுவாமிகள் கடப்பையில், மான்தோல் விற்பனை செய்ய லோகோபகாரார்த்தமாய் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்; இந்தியாவிற்குள் மான்தோல் வாங்கப்பட்டவர்கள், ஒவ்வொருதோலுக்கும் ரூபா. 5-0-0 முன்னதாய் அடியிற்கண்ட விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் அனுப்ப வேண்டும். பினாங்கு, சிங்கப்பூர் முதலாகிய அந்நியதேசங்களி

ளுள்ளவர்கள் மான்தோலுக்காக ரூபா. 6-0-0 சரியான அவர்களின் விலாசத்துடன் கடிதமும், மணியார்டரும் அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டர் அனுப்பவேண்டாம். மேற்படி தோல், வீ. பீ. மூலமாய் அனுப்புவதில்லை. ரூபா அனுப்பியவர்களுக்கு எந்த சிலவுகளும் இல்லாமல் தபால் மூலமாய் மான்தோல் ரிஜிஸ்டர்செய்து அனுப்பிவிடு வார்கள்.

ஐயா! மானைக்கொன்று அதன் தோலை எடுத்தல்லவோ பூஜை அல்லது, ஜபம் செய்யவேண்டும். அது, பாபமான காரியமல்லவா என்று, சிலபுருஷர்கள் நினைக்கலாம். அது, பாபமான காரியமல்ல. ஏனென்றால், உலகத்தில் அனேக மான்களைக்கொன்று தம் ஜீவனத்திற்காக அதன்தோலை விற்பனைச் செய்கின்றார்களேயொழிய, புருஷன் ஜபம் செய் வதற்காகக் கொல்லப்பட்டவைகளல்ல. அம்மான்களில் எந்தமான் விசேஷ புண்ணியம் செய்திருக்கின்றதோ அம் மான்தோல் மாத்திரம் பூஜை அல்லது, ஜபம் செய்யப்பட்ட வர்களுக்கு வருமேயொழிய மற்றவர்களுக்கு வரமாட்டா. இம்மான் தோல்மீது உட்கார்ந்து ஜபம் செய்வதனால் அந்த ஜபத்தின்பலன் மேற்படி மானுக்கும் கிடைத்து அது, எந்த ஜன்மத்தை அடைந்திருந்தபோதிலும் அந்தச் ஜீவன் ஞானத்திற்குரிய சாதனங்களையே செய்துவரும். புண் ணியம் செய்யாத மான்களுக்கு இப்படிப்பட்ட சுகுர்தம் உண்டாகவேமாட்டா. புண்ணியம்செய்யாத மான்களின் தோல் கார்பெட்பாக்ஸ், பாதரக்ஷை வார், மேல்பட்டை கள் தைக்கவும், பாமரஜனங்கள் உட்காரவும், படுக்கவும் உபயோகப்படும். இப்படிப்பட்ட காரியங்களினால் அம் மான்களின் ஜீவன் யாதொரு ஞானமார்க்கத்தையும் அடையமாட்டாதென்று அறியக்கடவர்களாக.

மான்தோல் விற்பனை செய்யும் விலாசம்:—

காயல, வெங்கடசாமி.

நாகராஜ பேட்டை, கடப்பை ஜில்லா.

Kayala. Venkatasawmy,

Nagarajapet, **Cuddapah.**

கடப்பையிலும் கடிகோட்டையிலும்,
மடாலயம் கட்ட

பொருள் உதவிசெய்த கனவான்களின் ஜாபிதா.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர்
பாதக்குரடு படம்.

உலகத்திலுள்ள மானவ ஜனங்களெல்லோரும் எந்த ஸாஸ்த்திரங்களையும் வாசிக்காமல் ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் சொல்லியிருக்கும் யோகாப்பியா

சம், சிவராஜயோகம், பஞ்சாக்ஷரம் முதலாகிய இன்னும் அனேக ரகஸ்யங்களை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" நூலில் எழுதி, எட்டுபதிப்புகள் விற்பனையாய் இப்போது ஒன்பதாம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது.

இந்நூலாசிரியராகிய மேற்படி யோகீசுவரர் தேச சஞ்சாரார்த்தமாய்ப்புறப்பட்டு, தஞ்சாவூர் மதுரை கோயம்புத்தூர் நீலகிரி சேலம் முதலாகிய ஜில்லாக்களும், அதைச் சார்ந்த தாலூக்கா கிராமங்களும் சென்று, அங்கங்கு வேதங்களிலுள்ள தேவ ரஹஸ்யங்களையும், யோகாப்பியாசம் செய்யவேண்டிய வழியையும், ராஜயோகம் செய்யும் ரஹஸ்யங்களையும் உபந்யாச மூலமாயும், உபதேச மூலமாயும் எளியனடையில் தெரிந்துக்கொள்ளும்படி உபதேசித்து, நமது முன்னோர்கள் மிகவும் ரஹஸ்யமாய் வைத்திருந்த வேதாந்த ரகஸ்யங்களையெல்லாம். வெட்டவெளியாய் உபந்யாசம் செய்துவந்தனர். அச்சமயம் கோயம்புத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலூக்கா, கண்மலியம்பட்டி, இன்னும் அதைச்சார்ந்த சில கிராமத்திலுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும், தம்தம் கிராமங்களுக்கும் வரவேண்டுமென்று இந்நூலாசிரியரை அழைத்துக்கொண்டுச் சென்றார்கள். மேற்சொல்லிய கிராமத்தில் பழனிசாமி கவுண்டர் பார்யாள், ஸ்ரீமதி சௌபாக்கியவதி செல்லம்மாள் மேற்படி சுவாமிகளால் இயற்றிய நூல்களை இதற்குமுன் வாசித்து ஆனந்தமடைந்திருந்தபடியால், மேற்படி சுவாமிகள் தம் கிராமத்திற்கு எழுந்தருளியதற்காக மிகவும் சந்தோஷமடைந்து சகல உபசாரங்களும் செய்து, எதிரில் காட்டியிருக்கும் ☞ இறநூறு ரூபா எடையுள்ள வெள்ளிப்பாதக்குறட்டை செய்வித்து, 1923௵ மார்ச்சி௴ 13உயில் ஈசுவரார்ப்பணமாய்ச் சமர்ப்பித்தார்கள்.

ஆதியில், ருஷிகளும் சக்ரவர்த்திகளும் அரசர்களும், ஆஸா பாஸங்களையெல்லாம் அறுத்து மனோவேகத்தை அடக்கி, ஜீவாத்மாவை பரமாத்மாவில் ஐக்கியம் செய்ய எண்ணி, தம் ராஜ்ஜியங்களை விட்டு மனித சஞ்சாரமில்லாத கானகம் (காடு) சென்று விட்டதுபோல், இந்நூலாசிரியராகிய மேற்படி சுவாமிகள் கடப்பையைவிட்டு, கடப்பைக்கு நாற்பது மைல் தூரத்திலிருக்கும் கடிகோட்டை யென்னும் நான்கு மலையடிவாரம் மத்தியில் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அங்கு ஓர் மடம் கட்டி அதில், ஸ்ரீ ஏகாம்பரீசுவரரை பிரதிஷ்டை செய்யப்போகின்றார்கள். மேற்படி கடிகோட்டை யென்னும் மலையடிவாரத்திற்குப்போக சரியான பாட்டை இல்லாததனால், சென்னைக்கு வடக்கு 140-மைமில் தூரத்திலிருக்கும் நந்தலூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் இருந்து கடிகோட்டைப் போக 17-பதினேழு மைமில் தூரம் பாட்டை போடுவதற்கும், மடம் கட்டுவதற்கும் ரூபா வேண்டும். ஆதலால், இக்கட்டட தர்மத்திற்கு பொருளுதவிசெய்யும் ஸ்திரீகளும், புருஷர்களும் அடியில் கண்ட ஸ்ரீ சுவாமிகளின் விலாசத்திற்கு மணியார்டர் மூலமாய் ரூபா அனுப்பினால் அவர்களின் பெயர்களையெல்லாம் ரிஜிஸ்டர் செய்து பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்திலும், ஐந்தாம் பதிப்பு "ஸ்ரீ பகவத் கீதை"யிலும், நான்காம் பதிப்பு "ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திர"த்திலும் சேர்க்கப்படும்.

ரூபா அனுப்பவேண்டிய விலாசம்:—

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்

கடிகோட்டை, விரபல்லி போஸ்டு.

ராயசோடி தாலூக்கா, கடப்பை ஜில்லா.

இவ்விலாசத்திற்கு அனுப்பலாம்.

பொருளுதவி செய்தவர்களின் ஜாபிதா.

கடிகோட்டை மலையடிவாரத்தில் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் மடாலய கட்டடம் கட்ட இந்தியாவிலுள்ளவர்களும் சிலோன், இரங்கூன், பினங்கு F. M. S. சிங்கப்பூர் முதலாகிய அன்னிய தேசத்திலுள்ளவர்களும் பொருளுதவி செய்த, புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத்மாக்களின் ஜாபிதா.

1923ஹூ மார்சிமீ முதல்
1927ஹூ செப்டம்பர்மீ 5உ வரையில் வந்த
வ ர வு க ள்.

		ரூபா.
1	கடிகோட்டை மடாலயம் மதில்சுவர் கட்டுவதற்காக, நா. நாகமுத்து சேதுவராயர், வந்துசாறேட்டு, 15-ங், கட்டை, கோலாலம்பூர். F. M, S. இன் ஷேர் மூலமாய் கடிகோட்டைக்கு அனுப்பிய ரூபா	300
2	K. தம்பய்யா, ரெண்டாங்கட்டை நல்லூர், யாழ்ப்பாணம் [Jaffna) இவர் கடிகோட்டைக்கு நேரில் வந்து கட்டடவேலைக்காகக் கொடுத்த ரூபா ...	130
3	V. Ethirajulu Naidu, 11th, Thalvala Chall, Front of Mahadeve Temple, Thana Post, Bombay, மேற்படியார் பொம்பாயில் வசூல்செய்து அனுப்பிய ரூபா	100
4	பெரியதேசாசாரி, சின்னதேசாசாரி, குண்ருஜாகுப்பம், நகரிபோஸ்ட்	60
5	M. S. Lazarus, Confectioner, Robertsonpet, K. G. F.	50
6	Ramasawmy Fandithar, G. Arimoetoe Goiffeur No. 85, Senen Weltevreden, Batavia (Java)...	50
7	M. S. சீனிவாச அய்யர், அசிஸ்டெண்டு பார்சல் கிளர்க்கு G. I. P. Ry. விக்டோரியா டர்மினெஸ், பாம்பே. மேற்படியார் பொம்பாயில் வசூல் செய்து அனுப்பிய ரூபா	45
	Carried over. Rs.	785

		ரூபா.
	Brought-forwad.	735
8	R. M. P. R. R. M. Venkataramraja, Myaungmya Bassein...	43
9	T. R. நாராயணசாமி பிள்ளை, போஸ்ட் மாஸ்டர், கொடுமுடி	25
10	செ. துரையப்ப. வாகூன்பஜார் ரோட்டு, Telukanson F. M. S...	25
11	Rustonji Fardanji, Contractor, Dahod ...	25
12	Edalji Rustonji, Panibanda Excise Contractor, Baroda	25
13	Sir Manubhai N. Mekta; K. C. S. I. Diwan Saheb Baroda State	25
14	Lhambay Krishnajee Row, Mankojee Row, Naicknoor Hill, Via Vellaguttai Post ...	20
15	T. G. Narayana Iyar, Sirunallai Villrge, Palghat, S. Malabar	20
16	சீதாலக்ஷ்மியம்மாள், இராஜம்மாள், 48-40-வது, தெருவு ரங்கூன்	20
17	சி. ரு. பொன்னுசாமி, coy, Q. V. O. Mardas & S. M.	20
18	Miscellaneous Subscriptions From Baroda City through K. N. Subbramaniya Mudaliar ...	20
19	K. S. Loganatha Reddy, Kavanur Village, Arkonam Post	16
20	S. ராமசாமிஸர்மா, காளிமுத்தன் வீதி, Sivaganga, Ramnad Dist	15
21	G. R. கிருஷ்ணராவ், மீனாக்ஷிபுரம் ஸரஸ்வதி ஸ்கூல் மானேஜர், மதுரை	15
22	P. S. தங்கவேலு முதலியார், P. மாணிக்கம் பிள்ளை M. & S. M. ரயில்வே, அரிசிக்கரை ...	15
23	சிவானந்தன், பச்சபாளையம், திரிச்சங்கோடு தாலுக்கா	15
	Carried over. Rs.	1079

		ரூபா.
	Brought forward.	1079
24	ஸுபேதார் சக்கரபாணி Q.V.O. M.&S.M. பெங்களூர்	15
25	S. முத்துகுமாரசாமி 94 சன்னதி தெருவு திருப்பாபுலியூர்	13
26	K. R. ராமசாமி, P. K. P. S. Firm, சகேங், Upper Burma	11
27	பூ. நா. சு. குப்புசாமி அய்யர் அண்டு சன்ஸ், சீதாராமை யர், மதுரை	10
28	இராமானுஜன், பச்சபாளையம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
29	இ. இராமசாமி செட்டி, மேளியப்பள்ளி, திரிச்சங்கோடு தாலுக்கா	10
30	கி. மு. பழனிவேல் கவுண்டன், குட்டிக்காபாளயம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
31	இராகவராமானுஜர், பண்ணைபாளயம், திரிச்சங்கோடு தாலுக்கா	10
32	சின்னய்யா கவுண்டன், பூலாங்காடு, திரிச்சங்கோடு தாலுக்கா	10
33	கி. மு. குலசேகரன், பண்ணிக்குத்திபாளயம், திரிச்சங் கோடு தாலுக்கா	10
34	மேற்படியார் தம்பி கி. மு. கேசவன் ...	10
35	செ. மு. சோமசுந்திரம் செட்டியார், ரைஸ்மில், திண்டி வனம்	10
36	T. S சுப்பய்யகோனார், பழயசன்னதி தெருவு, திரு நெல்வேலி ஜில்லா	10
37	K. ராமசாமி. இண்டியன் ஸ்டேஷன் ஆஸ்பத்திரி, மேமியோ, இரங்கூன்	10
38	V. அமுர்தம்நாயுடு, 16-பீச்சுரோட்டு, கொளம்பு, சிலோன்	10
39	S. காளியப்பபிள்ளை, 76 பீச்சுரோட்டு, கொளம்பு, சிலோன்	10
40	S. T. P. சிதம்பரம் பிள்ளை, தேவகோட்டை ...	10
41	C. அருணாஜலம் பிள்ளை, பெண்ஷன் போலீஸ் கானிஸ் டேபில், ஆஸ்பத்திரி தெருவு, முத்துப்பேட்டை, தஞ்சாவூர் ஜில்லா	10
	Carried over.	Rr. 1268

		ரூபா
	Brought forward.	1268
42	லக்ஷ்மிநாராயணன், சித்தலபட்டடை, நகரி போஸ்ட்டு	10
43	தர்மம்மாள், 48-40-வது தெருவு, இரங்கூன் ...	10
44	நெ. 2143, கிருஷ்ணசாமி முதலியார், 2-கம்பெனி, கன்னிகோவில் தெருவு, இராயவேலூர் ...	10
45	S. R. ராமய்யா முதலியார், வீரகொளம்பத்தூர் கிராமம், தென்காசி, திருநெல்வேலி ஜில்லா ...	10
46	லக்ஷ்மண முதலியார், நெ. 2-கம்பெனி K. டிவிஷன், ஜண்டேலா, N. W. F. F.	10
47	K. V. முனுசாமி நாயுடு பிஜுங்கு சென்றபோது இந்தியாவிலிருந்து 5-1-24-ல்ல், பிஜுங்குவந்து சேர்ந்த ரூ.	10
48	P. S. தங்கவேலு முதலியார், வொர்க் மேஸ்த்திரி, M. & S. M. Ry. அல்னுவர் போஸ்ட்டு, தார்வார் ஜில்லா	10
49	K. நடேசம்பிள்ளை, கிளர்க்கு. தாலுக்கா போர்டு ஆபீஸ். பெரம்பலூர், அரியலூர் போஸ்ட்டு ...	10
50	M. S. சீனிவாச அய்யர், அசிஸ்டெண்டு பார்சல்கிளர்க்கு, G. I. P. Ry. விக்டோரியா டர்மினெஸ் ஸ்டேஷன், பொம்பாய்	10
51	முத்துகிருஷ்ணன் பிள்ளை No, 2652 ?. Du; சிக்நெல், Quetta	10
52	லக்ஷ்மண முதலியார், வீரகளம்பத்தூர் போஸ்ட்டு, தென்காசி தாலுக்கா	10
53	P. மாரிமுத்து நெ. 104, F. M. S. Ry. தைபிங் ...	10
54	A. M. வீரய்ய பண்டிதர், வைத்தியம், நெ. 2, Kuala Kettil, Keddah F. M. S. ...	10
55	V. A. கோவிந்தராஜுலு முதலியார், பட்டாணி வர்த்தகம், சின்னகடை, நெல்லூர் ...	10
56	மேற்படியார் 3-5-25ல் இரண்டாம்முறை கொடுத்தது	10
57	K. தில்லையம்பலம், Raub. Pohang, F. M. S. ...	10
	Carried over. Rs.	1428

		ரூபா.
	Brought forward.	1428
58	R. நாராயணசாமி அய்யர், Forester, பாலசமுத்திரம், அட்டகோட்டை போஸ்ட், பழனி ...	10
59	K. தம்பைய்யா, P. W. D. Nuwara Eliya, Ceylon...	10
60	சின்னமலை கங்காணி, Sungei Puloh Estate, Kuala Selangor, F. M. S.	10
61	ஆ. இ. கு. கோவிந்தசாமி ராஜா, ஸ்ரீரங்கம், திருச்சிணுப் பள்ளி	10
62	மு.ரு. செ. ரு. வன்னியப்ப செட்டியார், கண்டர மாணிக்கம், ராமநாதபுரம் ஜில்லா ...	10
63	முத்து. பெரி. முத்துராமஞ் செட்டியார், மிதுலைப்பட்டி ராங்கியம் போஸ்ட்டு புதுக்கோட்டை ஜில்லா ...	10
64	செ. மு. கருப்பஞ்செட்டியார், ஆற்பநாதபுரம், ஆவடையார்க்கோவில் போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ...	10
65	அ. சு. ப. சோமசுந்திரம் செட்டியார், மிதுலைப்பட்டி, ராங்கியம் போஸ்ட்டு, புதுக்கோட்டை ஜில்லா ...	10
66	ப. ரு. செ. இ. வீரய்யஞ் செட்டியார், அறந்தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா... ...	10
67	A M. பொன்னுசாமிராஜா, தெற்குத்தெரு, ராமனாத புரம்	10
68	M. அப்பாதுரை உபாத்தியார், Anglo Chireseau School, Singapore	10
69	T. ராஜா, சர்வே ஆபீஸ் Seramban, British Malaya 15-Shillings Postal order... ...	10
70	K. தம்பைய்யா, P. W. D. Nuwara Eliya, Ceylon	10
71	சிவன்மலை கங்காணி, Sungei Buloh Estate, Kula-S langor F. M. S.	10
72	ஆ. இ. கு. கோவிந்தசாமிராஜா. ஸ்ரீரங்கம், திரிச்சிணுப் பள்ளி ஜில்லா	10
	Carried over Rs.	1578

ரூபா.

Brought forward. 1578

73 மு. ரு. செ. ரு. வன்னியப்ப செட்டியார், கண்டர மாணிக்கம், ராமநாதபுரம் ஜில்லா ... 10

74 முத்து. பெரி. முத்துராமஞ்செட்டியார், புதூர், கண்ணங்குடி போஸ்ட்டு, ராமநாதபுரம் ஜில்லா ... 10

75 தெ. மு. கருப்பஞ்செட்டியார். ஆற்பநாதபுரம், ஆவடையார்கோவில் போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ... 10

76 அ. சு. ப. சோமசுந்தரம் செட்டியார் மிதிலைப்பட்டி, ராங்கியம் போஸ்ட்டு, புதுக்கோட்டை ஜில்லா ... 10

77 ப. ரு. வெ. இ. வீரய்யஞ் செட்டியார், அறந்தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ... 10

78 A. M. பொன்னுசாமி ராஜா, South Street, Ramnad, Pamban Branch 10

79 V. அப்பாதுரை உபாத்தியாயர், Anglo Chirestan School, Singapore 10

80 கு. சி. செ. ச. சிதம்பரம் செட்டியார், அமராவதி பாளையம், பொன்னுக்காளிபாளையம்போஸ்ட்டு (Via)திருப்பூர், கோயம்புத்தூர் ஜில்லா 10

81 K. S. K. S. வேலாயுதம்பிள்ளை, Alvay, North Point Pedro. P. O. Ceylon 10

82 P. Marimuthu, Porter, Railway statio , Matang Road, Mataxg Post, Via Taiping F. M. S. ... 10

83 P. Marimuthu, Porter, No. 1015, F. M. S. Railway, Parit, Buntar, F. M. S. ... 10

84 S S. Arunachalam Iyer, Sathanoor, Villupuram Taluq, Gudalur Dist. 10

85 M. Narasima Naick, Nazir, Bhad, Mysore ... 10

86 K. Munisawmy Raj, Koracharapalayam, Bangalore City 10

87 லெ. ராமசாமி, காவனூர் 10

Carried over, Rs. 1728

		ரூபா
	Brought forward.	1728
88	W. V. Naidu, Chief Auditor, G. B. S. Ry. Goyagate, Baroda	10
89	Pestomji, F. Contractor, near Station, Baroda...	10
90	A. K. Savant, Goyagate, Baroda ...	10
91	Piroj Shah, P. Contractor, Baroda ...	10
92	V. K. Doraisawmy Moodr; Vandipalayam, Thorapadi, Vellore	10
93	G. Sundara Row, Thiruvaiyar, Tanjore Dist ...	10
94	K. தில்லையம்பலம், Raub, Pahang F. M. S. ...	10
95	அகிலாண்டம்மாள், தோரூர் கிராமம், நாமக்கல் போஸ்ட் சேலம் ஜில்லா	8
96	Rao Bahadur E. A. Ghotge, Police Commissioner, Baroda State	7
97	வடிவாம்பாள், பினங்கு சென்றபோது இந்தியாவிலிருந்து 5-1-24-ல், பினங்கு வந்த ரூபா ...	6
98	S. சிதம்பரம் பிள்ளை, Asst. Statio Master, S. I. R. Punalur Post, Travancore ...	6
99	R. சிங்கார முதலியார், அசிஸ்டெண்டு ஸ்டேஷன் மாஸ்டர், M. & S. Ry. ராமகிரி	5
100	நெ. 3986, முனியப்பன் சிப்பாய் C. 1. கமபெனி, சிக்னல் ஸெண்டர் டிப்போ, ஜப்பல்பூர் ...	5
101	வீராசாமி, டாடா பங்களா, கல்யாண் ...	5
102	சீதாமுத்துப்பிள்ளை, ஸன்றி ஷாப்பு நெ. 29, மார்க்கெட் தெருவு, பினங்	5
103	S. கணபதி, ரெயில்வே ஸப் அசிஸ்டெண்டு இஞ்சினீர், மூப்பன், மோல்மின்	5
104	2148, சாபர் கிருஷ்ணசாமி, 2 கம்பெனி, டாரா இஸ்மால்கான், வஜிரிஸ்டான்	5
105	மாயாண்டிப் பிள்ளை குமாரன் சிதம்பரம் பிள்ளை, தெற்குத்தெருவு, சோளவந்தான் போஸ்ட், மதுரைஜில்லா	5
	Carried over. Rs.	1860

		ரூபா
	Brought forward.	1860
106	M. வாசுதேவன், டாடா பங்களா கல்யாண ...	5
107	வேயர், நெ. 7, சர்வே பார்ட்டி, சிவகங்கை, ராமநாதபுரம் ஜில்லா	5
108	சிக்நெல் நெ. 2148, கிருஷ்ணசாமி, E. டிவிஷன் சிக்நெல் ஸெக்ஷன், Quetta	5
109	P. T. லக்ஷ்மண நாயுடு, மடன் மர்ச்செண்டு, கீழ்வாசல், தஞ்சாவூர்	5
110	N. A. பொன்னுராஜா, தெற்குத்தெருவு, ராமநாதபுரம்	5
111	P. S. தங்கவேலு முதலியார், F. M. S. Ry. Alnavar Post, Dharwar Dist.	5
112	அ. நா. பொன்னுசாமி ராஜா, தெற்குத்தெருவு, ராமநாதபுரம், வி. அழகிய நாகலிங்கம் பிள்ளை வரவு ...	5
113	டையார் மூலமாய் வையூர் S. தெய்வநாயகம் பிள்ளை வரவு	5
114	A. N பொன்னுராஜா, தெற்குதெருவு, ராமநாதபுரம்	5
115	T. P. லக்ஷ்மண நாயுடு, மடன் மர்ச்சண்டு, கீழ்வாசல், தஞ்சாவூர்	5
116	P. S. தங்கவேலு முதலியார், F. M. S. Ry. Alnavar Post, Dharwar Dist	5
117	V. அழகிய நாகலிங்கம் பிள்ளை, Pamban Branch, Ramnad	5
118	S. தெய்வநாயகம் பிள்ளை, வையூர் ...	5
119	K. S. கந்தப்ப கவுண்டர், கூகலூர் போஸ்ட், கோபி செட்டி பாளயம் தாலுக்கா	5
120	M. வீரபத்திர முதலியார், 2nd Grade Clerk No, 10 Fld, Company, Q. V. O. M. & S. M. Razmak, Waziristan	5
121	சிதம்பரம் பிள்ளை, தெற்குத் தெருவு, Sholavandan Post, Madura Dist	5
	Carried over. Rs.	1940

ரூபா.

Brought forward. 1940

122 G. Viresalingam Pantulu, Sub Registrar, Cocanada, Godavari Dist 5

123 M. S. P. Menens, 9th Company, Manzai, W. F. Force 5

124 K. Ganapathi Pillay, Govt. Hospital, Kuala Kangsor F. M. S. 5

125 L. D. Hanumantha Rao Manay H. S. Q. Mysore, Hebbel Post, Bangalore ... 5

126 S. K. I. Kandiah Pillay, 215, Cal Street, Kandy (Colombo) 5

127 K. Ganapathi Pillay, Govt. Hospital, Kuala Kangsor. F. M. S. 5

128 அ. ப. ருமலிங்கம், சதுர்வேதமங்கலம் ... 5

129 கா. சி. சோ. சோமசுந்தரம் 5

130 S. Sidyah, alias Kuttiah, Chelversankapal ... 5

131 K. N. Doraisawmy Mudaliar, 5, Thandavaraya St., Sowcarpet, Madars 5

132 Belgula jatti, Mysore 5

133 Swami Bhakta, Baroda 5

134 Hargovindas, Gordhandas Shab, Coach Factory, Baroda 5

135 Kodarlal Raichand, Coach Factory, Mistri Baroda 5

136 Majar Ganapatrao, Nimbalker Camp, Baroda ... 5

137 Kaji Abdul Latif, Palace Engineer, Shiyabag, Baroda 5

138 Damodar Bhai, Motar Driver, Guest House Baroda 5

139 European Guest House Staff, Baroda ... 5

Carried over. Rs. 2030

		ரூபா.
	Brought forward.	2030
140	R. R. Shastri. Private Secretary to Diwan Sahab, Baroda	5
141	Sakarlal J. Thakar, Diwan, office, Baroda ...	5
142	Thakore Pratapsingji Baqnsingji Swasthan, Aglod	5
143	Abdul Rajak, Painter, Camp Baroda ...	5
144	P. V. Kamdar, Stores Superintendent G. P. S. Ry. Goyagate, Baroda	5
145	Purushottam Pannachand, Contractor P. W. D. Bajwada, Hanumampole, Baroda ...	5
146	ஸ்ரீ ராமபஜனை மந்திரம், Barr Lines, BangaloreCity	5
147	Inamdar Amarsing, Barote, North Gujrat Pattan	5
148	Fatehsing Dipsingji, Kanjri, Thakore, Baroda...	5
149	Patel Brothers, Sayajigamy Baroda ...	5
150	Lalloo mulji, Contractor, Leather goods, Pimpla Gate, Baroda	5
151	Magan Bhai, Shanker Bhai, P. W. D. Contractor, Baroda	5
152	Pawaskar Brothers, Goldsmiths, Dandia Bazaar Road, Baroda	5
153	D. B. Shukla, Engineer, G. B. S. Ry. Goyagate, Baroda	5
154	Bhailal Bhai Daji Bhai, Amin Alembie Chemical Works, Baroda	5
155	Shantilal Chimaulal, Olempia Cinema, Baroda	5
156	Rnstomji Jamsetji, Contractor, Jubeli Bag. Baroda-...	5
157	Ganpat, Narottam Electric Maistri, G. B. S. Ry. Goyagate, Baroda	5
158	Pannalal Hirachand, Cloth merchant, Ruopma Road, Baroda	5
	Carried over. Rs.	2125

		ரூபா.
	Brought Forward.	2125
159	Sheth Chimanlal Motilal, Samal Becharwala, Baroda	5
160	Chimanlal Maneklal, Badshah Ahmedabadi Pole, Baroda	5
161	Chhotalal, B. Patel Sayaji Iron Works, Baroda	5
162	Girdharlal Dosabhai Parikhi, High Court Pleader, Baroda	5
163	Gauri Amma, Tanjavar wala, Baroda ...	5
	Total, Rs.	2150

1927ஆ செப்டம்பர்மீ 6உ முதல் 1928ஆ ஜனவரிமீ 1உ வரையில் வந்த வரவுகள்.

		ரூபா.
1	நெல்லூர், தாமரமடுகு சுப்பராம ரெட்டியார் வசூல் செய்து அனுப்பிய ரூபா	166
2	63rd Field Company, Q. V. O. Madras & M. Baghdad இக்கம்பெனியில் ஜமேதார் குப்புசாமி வசூல் செய்து அனுப்பிய ரூபா ...	120
3	V. சிங்காரவேலுமுதலியார், Sub Dvl Officer, Haveri, Dharwar Dist	100
4	M. S. Raman Chetty, Yaungoo Post ...	56
5	V. Suppaiya Thavar, Singapur ...	50
6	சிங்கபூர வரவு	50
7	V. Nadarajan No. 37, Fordes Road, Maradana, Colombo	50
8	முசுனூரு சுப்பய்யா தேவர், ரத்தின வியாபாரி, சந்தப் பேட்டை, நெல்லூர்	35
	Carried over. Rs.	627

		ரூபா.
	Brought forward.	627
9	Miscelleneous Subscription, Baroda ...	34
10	Jamadar Kuppusawmy No. 3615. D. I. Company Q. V. O. Madras Sappers & Miners, Bangalore (Contt)	30
11	S. Shanmuganathan, Man mathury Camp, Remban N. S. (Via) Penang ...	30
12	V. A. கோவிந்தராஜ முதலியார், பட்டாணிக்கடை, சின்ன பஜார், நெல்லூர்	20
13	V. A. முனுசாமி முதலியார், Watch repairer, சின்ன பஜார், நெல்லூர்	20
14	Kilachand Denchand & Co., L. T. D. 63. Appala Street, Fort, Bombay	20
15	G. Kondiah, Health officer, Johore, F. M. S. ...	20
16	சா. பெரியண்ணன், கண்ணங்காரகுடி, திருமயம் ...	16
17	அனுமால செட்டி கிருஷ்ணய்ய செட்டி, ஜவுளி வியாபாரம், சின்ன பஜார். நெல்லூர்	15
18	Matloobhai Kantawala c/o Maharaja Mills, Baroda	15
19	V. A. ரங்கசாமி முதலியார், பட்டாணி வியாபாரம், சின்ன பஜார், நெல்லூர்	12
20	நாலுகோட்டை. மூ. சு. கருப்பையயர் சிவகங்கை, இராமாதபுரம் ஜில்லா	11
21	மன்னூஜி போஜகடே ஜமேதார், மைசூர் லான்ஸர்ஸ், பெங்களூர்	11
22	துளசி அம்மாள், தோளூர். நாமக்கல் போஸ்ட்டு ...	10
23	T. R. Sadakopa Naidu No. 5, Annaikatti Muttu Street, Trichinopoly	10
24	நா. சு. நா. சுப்பையயர், ஜவுளி வியாபாரம், ரேணுகா தேவி தெருவு, டிண்டிக்கல் ...	10
25	K. Rathinapandaram, Ayyanarkoil St. Trivallur, Tanjore Dt., ...	10
	Carried over, Rs.	921

		ரூபா.
	Brought forward..	921
26	முசனூரு வெங்கடம்மாள் ஆஞ்சநேய ஸ்வாமி தெருவு நெல்லூர்...	10
27	சுபேதார் முனுசாமி, D. I. Company. Q. V. O. Madras Sappers and Miners, Bangalore Cantonment	10
28	V. Ethirajalu Naidu, No. 11, Thalval Chall Oppt., Mahadeo temple, Thana Post, Bombay ...	10
29	V. A. மாணிக்கம்மாள், பட்டாணி வியாபாரம், கோவூர், நெல்லூர் ஜில்லா	10
30	பைண்டர் குப்புசாமி முதலி, மூலப்பேட்டை, நெல்லூர்	10
31	M. C. குஞ்சிராமன், போலீஸ், கான்ஸ்டேபில், நெல்லூர்	10
32	அம்படிபூடி சேஷகிரி ராவ், The great Indian Austrical Company Manager, Bezawada ...	10
33	Shanmugam. Zigon, Tharravaday Dt., ...	10
34	Malagan, Rawang Kuala Lumpur ...	10
35	Krishnaswamy, fitter, Ticket No. 2255 N. G. S, Ry. Lallaguda	10
36	T. A. Subramaniya Pillai, Building Contractor, Lower Bazar, Ootacamund	10
37	T. Swami Krishniyah, Overseer, Investigation Division, Nizamabad Residence, Hydrabad ...	10
38	Sirdar V. A. Kibdar Dhaibar, Kewadabag, Baroda ...	10
39	Maharaja Kumar Pravinsingji of Sant State, Baroda	10
40	R. N. Ghero & Co., Naotari, Baroda Street ...	10
41	Appasawmi Pillai, and Kanlimacli Amma, Tanjavarwala Dandiya, Bazaar Road, Baroda ...	10
42	R. V கனகசபாபதி, நடுத் தெருவு, ராஜவல்லியபுரம் Palamadi Post, Tinnevelly	10
43	A. M. R. Gopal, Clerk, Indian Military Hospital Mandalay, Burma	10
	Carried over, Rs.	1101

		ரூபா.
	Brought forward.	1101
44	சா. கு. ரும. சிவசாமி செட்டியார், தாந்தாணி, அருந்தாங்கி போஸ்ட்டு, தஞ்சாவூர் ஜில்லா ...	10
45	சிந்தலபாடு. சுப்பராசு சிநசின்ட்ரகொலனு, கைகரம் போஸ்ட்டு, Via தாடேபல்லிகூடம் ...	10
45-A.	அண்ணாஜிராவ் பந்துலு கொட்டபாட், ஜெய்பூர், விசாகபட்டணம்	7
46	சேஷய்ய, டின்மர்ச்சன்ட், சின்னபஜார், நெல்லூர் ...	7
47	K. Srasrikanta, Supt., Palace Dairy & Cattle breeding form, Baroda	7
48	அவுல்தார் முனுசாமி No. 4124, D. I. Company Q. V. O. Madras Sappers & Miners, Bangalore (cantt)	5
49	do சூப்பர்வைஸர் பாபுதிவான்கான் ...	5
50	do அவுல்தார் கோவிந்தசாமி No. 3949 ...	5
51	do லான்ஸ்நாய்க் குப்புசாமி No, 1056 ...	5
52	do மில்டெரி ஹெட்குவார்டர் பரமபிள்ளை பாபு	5
53	do சாப்பர் No. 12100 சாரங்கபாணி ...	5
54	do சாப்பர் No. 11238 இலுக்காணம் ...	5
55	do No. 7243 வீரபத்திர முதலியார் ...	5
56	do No. 11713 உத்தண்டிப் பிள்ளை ...	5
57	do No. 6676, நரசய்யர் ...	5
58	do No. 8671 தாயார் வெங்கம்மாள் ...	5
59	do டோபி. வி. முனுசாமி ...	5
60	K. V. முனுசாமி நாயுடு, O. N M. H. OR No. 39 D. Company, Secunderabad, Deccan ...	5
61	T. G. Sundararajalu Naidu, Kanakdi East gate Market Tanjore	5
62	இடையன் மேலூர் மூ. சி. ஆ. முத்தையா, சிவகங்கை	5
63	இளயூர். இ. ரங்கசாமி சேர்வை, புதுக்கோட்டை, திரிச்சி ஜில்லா	5
64	S. L. Moorthi Pillay Hd. Clerk, R. D. M. Railway B. Section, Munnu Buildings, Rangoon ...	5
	Carried over, Rs.	1227

		ரூபா.
	Brought forward.	1227
65	S. V. Hanumiah, Satulur, Narasaraopet ...	5
66	Gundlapathy. Venkataramacharlu Vettapalem Post (Via) Samalkota	5
67	T. அருணசல ஆசாரி, சின்ன பஜார், நெல்லூர் ...	5
68	மாசிலாமணி ஆசாரி, கிட்டங்கி தெருவு, நெல்லூர் ...	5
69	ரத்தினசாரி, கிட்டங்கி தெருவு, நெல்லூர் ...	5
70	முசுனூரு சுந்தர ராமய்யர் தேவர, ரத்தின வியாபாரி, ஸந்தப்பேட்டை, நெல்லூர்	5
71	சேட் ஜவான்வல் தாராசந் கம்பெனி, சின்ன பஜார், நெல்லூர்	5
72	கந்துகூரு மல்லய்ய தேவர, மூலபேட்டை, நெல்லூர் ...	5
73	மத்முனூரு ரங்கநாயகம்ம, ஸந்தபேட்டை, நெல்லூர் ...	5
74	பைடா. பெஞ்சலசெட்டி, ஸந்த பேட்டை, நெல்லூர் ...	5
75	தேவள்ள, மஹாலக்ஷ்மியம்மாள், ஸந்தபேட்டை, நெல்லூர்	5
76	வாஸம் மங்கம்மாள், சந்தபேட்டை, நெல்லூர் ...	5
77	லக்ஷ்மிநாராயண, முனிசீப் கோர்ட்டு கிளர்க்கு, பெஜவாடா	5
78	N. Govindaswamy, Agent Bombay Company Ltd., Bellary Collectorate	5
79	கா. ஆ. ரு. சுப்பையஞ் செட்டி, மளிகை, திருப்பூண்டி, Nagapatam	5
80	C. Manohar Swami Modaliar, Vaidya Chanpaner Road, Baroda	5
81	I. N. Mehta, Professor, Baroda College ...	5
82	R. A. Borker, Contractor P. W. D. & Ry., Borker's Bunglow, Baroda	5
83	Chimanlal Girdharlal c/o Zanerlakshmichand Mills, Baroda	5
84	Dorasawmy Pillai, Annand Bag, Baroda ...	5
	Carried over.	Rs. 1327

		ரூபா.
	Brought forward.	1327
85	Ramalal Dayachai Stewerd, State General Hospital Baroda	5
86	S. & Company, Oppt., State General Hospital, Baroda	5
87	Sirdar Narsingjairao Rachadrarao Ghorpade Jubile, Bazaar, Baroda	5
88	A. Fernandig Motor Mechanical Driver of His Highness Baroda State	5
89	Zinabhai Himatlal Ladwada, Baroda ...	5
90	Mangalbhai Girdharbhai, city Municipal Inspector Baroda	5
91	Parikh Maganlal Chimanlal (Mulji Suntuwala) Dhrinarsinghji's pole Baroda	5
92	Baganna Balaji, Electric Engineer, Baroda ...	5
93	Baroda Cycle & Electric stores, Palace Road, Baroda	5
94	Shankerrao Shivaji Thakkar (Near Record office, behind Anandpura) Baroda	5
95	Kesarising Surajsing Thakore, Motor Driver to Managar G. B. S. Ry. Baroda	5
96	பகிரிசாமி படையாச்சி, வெட்சிகுடி, திருப்பனந்தாள் போஸ்ட்டு, கும்பகோணம் தாலூக்கா ...	5
97	ஷியார் குழந்தை ஆவடையாச்சி ...	5
98	A. Sreeramamurty Vamavaram, Atchanta Post, W. G. D.	5
99	T. N. Swamy, Temavaram, Atchanta Post. W. G. D.	5
100	G- Appalasawmy, Nakkavani Palayam, Waltair ...	5
101	K. V. Munusawmy Naidu No. 39, O. M. Hdr., D. Coy., 3rd. M Regt., Secunderabad, Deccan ...	5
102	மு. காளியப்ப கவுண்டன் தரகுமண்டி கருவம்பாளையம் திருப்பூர்...	5
103	T. முத்துசாமி, மலாகா	5
	Total, Rs.	1422

☞ K. N. சுப்ரமண்ய முதலியார் c/o திவான் சாஹேப் ரேஸ்கோர்ஸ் ரோட்டு, பரோடா; கடிகோட்டையி

யிருக்கும் இந்நூலாசிரியராகிய ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் மடத்திலிருந்து, நந்தலூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷன் போக ரோட்டு (பாட்டை) போடுவதற்காக மேற்படி முதலியார் தேக கஷ்ட மெடுத்துக்கொண்டு இந்நூலில் தெரிவித்திருக்கும் பரோடா விலாசாதாரர்களிடம் ரூபா. 500 எழுத்தால் ரூபா ஐந்நூறு வசூல் செய்து, இந்நூலாசிரியராகிய யோகீஸ்வரரவர்களுக்கு இன்ஷூர் மூலமாய் அனுப்பியிருக்கின்றார்.

. மேற்படி தர்ம கைங்கர்யத்திற்காகப் பொருளுதவி செய்யப்பட்டவர்கள் இந்நூலாசிரியராகிய யோகீஸ்வரரவர்களுக்கு, அடியில் கண்ட விலாசப்படி ரூபா அனுப்பினால், அவர்களின் பெயர்களை ரிஜிஸ்டர் செய்து வைத்து, பத்தாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" அச்சிடும்போது வரிசைக் கிரமமாய் அந்தந்தத் தொகையுடன் சேர்த்து அச்சிடுவதும் தவிர ஸ்ரீ பகவத்கீதை, ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரத்திலும் சேர்த்து அச்சிடப்படும்.

ரூபா அனுப்பவேண்டிய விலாசம்.

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர்
கடிகோட்டை. வீரபல்லி போஸ்ட்டு,
ராயசோடி தாலுக்கா, கடப்பை ஜில்லா.

கடிகோட்டை மலையடிவாரத்தில் ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் மடாலய கட்டடம் கட்ட, S. S. பினாங், சிங்கப்பூர், மலாகா முதலாகிய நாடுகளுக்கும், F. M. S. கிட்டா, பேராக், கோல சிலாங்கூர், ஜோகூர், பஹாங் முதலிய மலாய் நாடுகளுக்கும் அடியேன், 1923ஷு டிசம்பர்மீ 17உ சென்றிருந்த போது, அந்நாடுகளிலுள்ள புண்ணிய ஸ்திரீ புருஷ தர்மாத்மாக்கள் பொருளுதவி செய்தவர்களின் ஜாபிதா:—

1924ஷு ஜனவரிமீ முதல், ஷ வருஷம்
செப்டம்பர்மாதம் 17உ வரையில்
மலாய் நாடுகளில் வந்த

வரவுகள்.

			வெள்ளி $
1	மு. குமாரசாமி, கோலாலம்பூர், F. M. S.	...	150
2	நகரத்தார், மலாகா, S. S. ...	...	150
3	நகரத்தார், மூவார், ஜோகூர் ...	...	101
4	நா. நாகமுத்து சேதுவராயர், வங்குசாரோட்டு, 15ங் கட்டை. கோலாலம்பூர், F. M. S.	...	80
5	S. சின்னதுரை ரிஸிடெண்டு ஆபீஸ், கோலா லிப்பிஸ், F. M. S. பஹாங், இவர் மூலமாய் கிராணிமார்கள் (Clerks) கொடுத்தது ...	...	65
6	சி. தியகராஜன் பண்டிதர், நெ. 31, ஆச்சாரோட்டு, சிங்கப்பூர்	...	62
7	பேட்டாம் தோட்டம் அண்ணாவிமுத்து நாடார் வகயரா கிராமணிமார்கள், (Clerks) கப்பல் பத்தாஸ், கிட்டா		54
8	நகரத்தார், வத்தூ பஹாரு, ஜோகூர்	...	51
9	அ. ரு. ரு. ம. சொ. பினாங்கு ஸ்டிரீட்டு, பினாங்கு	...	50
10	V. சீனிவாசம் பிள்ளை, செகிரிடெரி, இந்து சங்கம்; செந்துல் கோலாலம்பூர், F. M. S. (கடிகோட்டை மடாலயத்திற்கு ரத்ன கம்பளம் தர்மம் செய்தது)	...	50

Carried over, $ 813

		வெள்ளி. $
	Brought forward.	813
11	A. சிற்றம்பலம், ஸ்டேஷன் மாஸ்டர், F. M. S. & E. அய்யாதுரை, போஸ்ட்டு மாஸ்டர், ஙிமாஸ் F. M. S. இவர்கள் மூலமாய் வந்த வரவு ...	50
12	S. சதாசிவம், சீப் கிளார்க், F. M. S. Railway, சிங்கப்பூர், இவர் மூலமாய் வந்த வரவு ...	46
13	N. V. N. பினன், சித்தியவான், F. M. S. ...	40
14	செட்டிகள், தமிழாதிகள் சுங்குப்பட்டாணி, கிட்டா ...	39
15	கா. சின்னய்ய கோனார், Chartered Bank Watchman, Singapur, இவர் மூலமாய் வந்தது ...	36
16	கா. மெ. சொ. அரு. கிட்டங்கி, பினங்ஸ்டிரீட்டு, பினங்கு	35
17	நகரத்தார். ஜோகூர் பாரு	31
18	கா. நமசிவாயம், ஸ்ரீ உமயவள் பஜனைகூடத்து தலைவர், பட்டர்வொர்த், (கோலப்பிரை) ...	30
19	V. விரகத்தி பிள்ளை, ஆஸ்பத்திரி ஸர்ஜன், சுங்குப்பட்டாணி, கிட்டா	30
20	மு. முனுசாமி உடையார், பாரிட், ஈப்போ, F. M. S.	30
21	நகரத்தார், சிகமெட், S. S.	27
22	டாக்டர் P. நாகலிங்கம் பார்யாள், சிரஞ்சீவி சௌபாக்யவதி அந்நலக்ஷிமியம்மாள், கோலாசிலங்கூர், F. M. S.	25
23	அ.ரு. ரு. ம. நா. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	25
24	தி. சொ. do do ...	25
25	வீ. செங்கல்வராயன், மேசனார், ஈப்போ, F. M. S. ...	25
26	செ. முருகப்பிள்ளை, இஞ்சினீர் ஆபீஸ், முனிசிபாலடி, சிங்கப்பூர்	25
27	S. கணபதி பிள்ளை, P. W. D. ஓவர்சீர், சுங்குப்பட்டாணி, கிட்டா	20
28	அ. மு. க. மு. ரு. ம. பினங்கு ஸ்டிரீட், பினங்கு ...	20
	Carried over,	$ 1372

		வெள்ளி. $
	Brought forward.	1372
29	E. வேலுபிள்ளை, போஸ்ட்டு மாஸ்டர், பாரபந்தா, F. M. S.	20
30	E. Aune (ஒனி) சூப்பிரெண்டெண்டு, சர்வே ஆபீஸ், சிறம்பான், F. M. S.	20
31	பெ. ரி. நா. நா. மார்கெட் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	20
32	T. சுப்பிரமண்யம் பிள்ளை, கண்டிராக்டர், அலஸ்டார், (டிட்டோ) ...	15
33	சீனிவாசம் பிள்ளை, வட் ஓவர்சியர், P. W. D. பஹாங், F. M. S. ...	15
34	A. சாமிவேல், F. M. S. ரெயில்வே கிளார்க், கோலாலம்பூர் ...	15
35	வே. மாணிக்க முதலியார் மார்க்கெட்டு, கோலாலம்பூர், F. M. S. ...	15
36	ப. ள. க. ன. மு. சி. த. கோலாகங்சர், F. M. S. ...	15
37	பொ. வீ. ரு. வீராசாமி, சாத்தாங்கோவில், மலாகா, S. S. ...	15
38	செ. மு. சுப்பய்யா பிள்ளை, அறிமளம், மலாகா, S. S....	15
39	பி. நடராஜபிள்ளை சூவேஜ டிபார்டுமெண்டு, முனிசிபல் ஆபீஸ், சிங்கப்பூர், இவர் மூலமாய் வந்தது ...	15
40	செ. ரு. ம. பெ. சி. த. பினங் ஸ்டிரீட்டு, பினங்கு ...	10
41	ராஜா, கஸ்டம் ஆபீஸ் சீப் கிளார்க், பட்டர் வொர்த்து, டிட்டா ...	10
42	அருணாஜலம் செட்டியார், பட்டர் வொர்த்து, டிட்டா ...	10
43	R. M. உடையப்ப செட்டியார், சுங்குப்பட்டாணி, டிட்டா ...	10
44	Dr. முத்துக்குமரு, பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு ...	10
45	அ. ரு. ரு. ம. சொ. அ. சொக்கலிங்கம் செட்டியார், அலஸ்டார், (டிட்டா)	10
	Carried Over. $	1612

			வெள்ளி.
			$
	Brought forward.		1612
46	வெ. சி. தா. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	10
47	மு. மு. do do	...	10
48	மெ. ரு. ம. வெ. ல. do do	...	10
49	உ. ரு. ம. மெ. சு. ப. சே. வு. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	10
50	உ. ரு. ம. உ. மு. பினங்கு ஸ்டிரீட்டு, do	...	10
51	வெ. ரு. ம. சு. do do	...	10
52	க. வீ. அ ள. do	...	10
53	சா. நா. அ. அ. ள. do	...	10
54	சா. நா. அ. சொ. do	...	10
55	சா. ரு. ம. மு. அ. do	...	10
56	சொ. மு. அ. do	...	10
57	ரு. ம. நா. நாகப்பிள்ளை do	...	10
58	K. கணபதி பிள்ளை, ஆஸ்பத்திரி, கோலாகங்ஸர், F. M. S.	...	10
59	ரு. ம. மு. சோ. ம. தையிங், F. M. S.	...	10
60	ப. ள. க. ஏ. ஆ. ரு. ம. கொமரப்பசெட்டி, கோலாகங்சர்		10
61	செ. ப. ள. மலையாண்டி கவுண்டர், செட்டிக்குரிச்சி, துவரங்குரிச்சி போஸ்ட்டு, மணப்பாரை மார்க்கம்	...	10
62	சு. ப. அ. ப. ள. பழனியப்ப செட்டியார், கோலாகங்சர் F. M. S.	...	10
63	சி. ப. ள ரு. ம. கோலாகங்சர், F. M. S.	...	10
64	முத்து, மு. முத்தய்யா செட்டி, கோலாகங்சர், F. M. S.	...	10
65	வை. பெ. கோவிந்தசாமி, கண்ட்ராக்டர், ஈப்போ, F. M. S.	...	10
66	மு. அப்பாதுரை பிள்ளை, ஈப்போ. F. M. S.	...	10
	Carried over.	$	1822

		வெள்ளி.
		S
	Brcught forward	1822
67	சிவன்மலை கங்காணி, சுங்கைபூலோ எஸ்டேட், கோல சிலங்கூர் போஸ்ட்டு, F. M. T. ...	10
68	K. சின்னப்ப. ஸ்டேஷன் மாஸ்டர், கோலசிலங்கூர், F. M. S. ...	10
69	வி. மாரிமுத்து, கௌரவகாரியதரிசி, இந்து சங்கம் சென்றல், கோலாலம்பூர், F. M. S. ...	10
70	லெ. நா. க. அ. ள. ரு. ம. ஈப்போ, F. M. S. ...	10
71	வி. சிதம்பரம் பிள்ளை, கண்ட்ராக்டர், கோலலங்காட் டிஸ்டிக்டு, F. M. S. ...	10
72	A. T. கோவிந்தசாமி பிள்ளை, மர்ச்செண்டு, சுங்கைபிசி, F. M. S. ...	10
73	கா. துரைசாமி பார்யாள், கோலாலம்பூர் F. M. .S ...	10
74	ராசர் do ...	10
75	K. வேலுபிள்ளை, கண்ட்ராக்டர், கோலாலம்பூர் F. M. S. ...	10
76	ரு. ம. ப. ள. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
77	உ. ரு. ம. உ. மு. ச. ப. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
78	கு. சோமசுந்தரம், நெ. 41—1, அல்பர்ட் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	10
79	கு. மு. சொ. கிட்டங்கி, சிறம்பான், F. M. S. ...	10
80	வ. கோ. பக்கிரிசாமி, நெ. 26, ரெயில்வே ரோட்டு கும்பகோணம், கியாம்பு, நெ. 26, ஜாலான் இங்கான் ரோட்டு, வத்துபஹார், ஜோகூர் ...	10
81	K. O. நாயுடு, P. W. D. கோதாதிங்கி, ஜோகூர் பாரு ...	10
82	S. சதாசிவம். சீப் கிளார்க், F. M. S. ரெயில்வே, சிங்கப்பூர் ...	10
	Carried over, $	1982

			வெள்ளி. $
		Brought forward.	1982
83	ச. வே. வரதராஜலு நாயுடு, நெ. 243 பெங்குலன் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர்	...	10
84	ரு. ம. அ ரு. சோ. ஈப்போ, F. M. S.	...	9
85	ப. ள. மு. நா. ஈப்போ, F. M. S.	...	9
86	ப. ள. மு. நா. சிறம்பான், F. M. S.	...	9
87	சி. மு. ரு. ம. do	...	8
88	பெ. ப. வீ., பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	8
89	ஆ. வி. ப. ள. do do	...	8
90	க. அ. ள. ரு. ம. do do	...	7
91	உ. வீ. ர. do do	...	7
92	க. அ. ள. ரு. ம. ராமசாமி செட்டி, கிட்டா	...	7
93	க. மு. நா. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	6
94	சி. க. ரு. சோ. do do	...	6
95	மெ. ரு. ம. அ. do do	...	6
96	க. வெ. ரு. ம. do do	...	6
97	சா. அ. ரு. ம. do do	...	6
98	சா. நா. சா. தெ. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	6
99	மெ. செ. ஈப்போ, F. M. S.	...	6
100	முத்து, க. மா. மு. சோ. ம. அ. ரு. ஈப்போ, F. M. S.	...	6
101	மெ. செ. மெ. மெ. ஈப்போ, F. M. S.	...	6
102	மு. ஆ. ரி. நா. ஈப்போ, F. M. S.	...	6
103	க. சொ. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	5
104	ஆ. ரு. ப. ட. சி. ப. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	5
105	ப. ள. க. ரு. ம. do do	...	5
106	சா. நா. ரு. மா. சு. do do	...	5
107	ஆ. ரு. ப. ள. சி. ப. ள. do do	...	5
108	மு. வெ. மு. do do	...	5
109	பெ. க. அ. சி. த. do do	...	5
		Carried over. $	2158

			வெள்ளி.
			$
		Brought forward.	2158
110	அ. ரு. ரு. ம. மெ. மெ. பினங் ஸ்டிரீட்டு, பினங்	...	5
111	உ. ரு. ம. மெ. சு. செ. do do	...	5
112	அ. ரு. வீ. ர. do do	...	5
113	அ. ரு. ரு. ம. do dc	...	5
114	அ. ள. ரு. ம. சி. மெ. கி. சி. கி. தே. பினங்கு ஸ்டிரீட்டு, பினங்கு	...	5
115	ப. ள. பெ. ரி. தைபிங். F. M. S.	...	5
116	யே. மு. வ. do do	...	5
117	பெ. ரி. ப. ள. அ. கோலாகங்சர், F. M. S.	...	5
118	அ. ள. ஆ. do do	...	5
119	மு. ரு. ம. சொ. do do	...	5
120	சைவம் சிவசுப்ரமண்யம், கோலாகங்சர், F. M. S.	...	5
121	தேவசகாயம். கோட்டு துபாஸ். கோலாகங்சர், F. M. S.	...	5
122	கொழுந்தவேலு பிள்ளை, போஸ்ட் ஆபீஸ், கோலாகங்சர் F. M. S. ...	...	5
123	R கோவிந்தராஜுலு, கோலாகங்சர், F. M. S.	...	5
124	T. A. ஆரோக்யசாமி பத்தர், கோலாகங்சர்	...	5
125	அ. ள. ரு. ம. ரு. ம. கோலாகங்சர், F. M. S.	...	5
126	மு. மு. do	...	5
127	சி. மு. ப. மு. do	...	5
128	முத்து, சு. do	...	5
129	வீ. ர. க. ரு. செ. கோலாகங்சர், F. M. S.	...	5
130	வீ. ர. க. ரு. தைபிங், F. M. S.	...	5
131	டாக்டர் சுப்ரமண்யம், காஜாங், F. M. S.	...	5
132	அங்கம்மா, கோலாலம்பூர் do	...	5
133	அய்யாகண்ணு, கோலாலம்பூர் do	...	5
134	செ. கெ. செல்லய்யா, கோலாலம்பூர் do	...	5
		Carried over, $	2288

		வெள்ளி
		$
	Brought forward	2283
135	மு.ரு. ம. சு. ப. வத்துகாஜா, F. M. S. ...	5
136	உ. ரு. ம. உ. மு. சு. ப. இட்டங்கி. தாப்பா. F. M. S.	5
137	H. பெருமாள், கோலாலம்பூர். F. M. S. ...	5
138	செ. ருமசாமி do do ...	5
139	V. S. வேலுபிள்ளை, புடு. சிலாங்கூர். F. M. S. ...	5
140	A. செல்வதுரை, கோலசிலாங்கூர், F. M. S. ...	5
141	P. நாகலிங்கம் do do ...	5
142	மு. கிருஷ்ணன் do do ...	5
143	ப. ள. நா. சிறம்பான், F. M. S. ...	5
144	தெ. சொ. ப. ள. do do ...	5
145	அ. யெ. அ. ரு. இட்டங்கி. சிறம்பான். F. M. S. ...	5
146	வேதாசலம் கோர்ட்டு, கோலபிலா F. M. S. ...	5
147	S. நாகலிங்கம், டிஸ்டிரிக்ட் ஆபீஸ் do ...	5
148	V. தர்மலிங்கம், P. W. D. கோலபிலா, F. M. S. ...	5
149	V. கணபதி பிள்ளை, ரெயில்வே போலீஸ் ஆபீஸ், சிங்கப்பூர் ...	5
150	செ. இந்திரராஜா, ரெயில்வே ஸ்டேஷன் டாங் ரோட்டு, சிங்கப்பூர் ...	5
151	சு. லெ. வீரப்பசெட்டி, ராபர்ட் லேயின், சிங்கப்பூர் ...	5
152	T. கந்தய்யா, பிளாண்டர்ஸ் ஸ்டோர் & ஏஜென்சி Let, கோலாலம்பூர். F. M. S. ...	5
153	E. பொன்னம்பலம். போஸ்டு மாஸ்டர், புடு. சிலங்கூர் கோலாலம்பூர். F. M. S. ...	5
154	K. சரவணமுத்து, கமர்ஷல் பிரஸ். கோலாலம்பூர். F. M. S. ...	5
155	பெ. யெ. பெரிய அய்யாப்பிள்ளை, வத்துபஹார், ஜோகூர்	5
	Carried over,	$ 2388

		வெள்ளி.
		$
	Brought forward	2388
156	ரு. வெ. பெருமாள் நாயுடு, துபாஸ், போலீஸ் கோர்ட்டு, ஜோகூர்பாரு	5
157	மு. ப. துரைசாமி பண்டிதர், தஞ்சாவூர் ...	5
158	ச. ஆ. கோவிந்தசாமி பண்டிதர், ஒத்தைத்தெருவு, புதுச்சேரி ...	5
159	வே. வேலு. ஜனரல் போலீஸ் ஸ்டேஷன், ஜோகூர்பாரு ...	5
160	வே. குளந்தவேலு மேஸ்த்திரி, சலிவம்பேட்டை. வேலூர் ...	5
161	மாணிக்கம் தம்பு, முனிசிபல் ஆபீஸ், சிங்கபூர் ...	5
162	K. கணபதி பிள்ளை, வைத்தியசாலை, சிங்கபூர் ...	5
163	சபாபதி பத்தர், நெ. 37, ஆச்சாரோட்டு, சிங்கப்பூர் ...	5
164	நா. தெ. தெய்வநாயகம் செட்டியார், நெ. 182, அரப் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர்	5
165	ரு. சு. சி. சுப்பா ரெட்டியார், 183, அரப் ஸ்டிரீட்டு, சிங்கப்பூர் ...	5
166	அ. ப. தண்டபாணி ஸ்ரீ நெ. 245, அரப் ஸ்டிரீட்டு சிங்கப்பூர் ...	5
167	அ. வ. க. கந்தசாமி பிள்ளை, ஜாங்கி, 8¼ மையில் சிங்கப்பூர் ...	5
168	ப. அம்பிகைபாகன், சர்வே ஆபீஸ், சிங்கப்பூர் ...	5
169	சு. வைத்யலிங்கம், P. W. D. ஜோகூர்பாரு ...	5
170	அ. தி. ஆறுமுகம், எமிகிரேஷன் ஆபீஸ், ஜோகூர்பாரு ...	5
171	வி. கே. ருமன் நாயர், ஜோகூர்பாரு ...	5
172	நா. டாக்டர் முத்துத்தம்பி, ஜோகூர்பாரு ...	5
	Total, $	2473

One of the Seven Wise Men of Greece

A Sophist wishing to puzzle him with difficult questions, the sage of Miletus replied to them all, without the least hesitation, and with the utmost precision:—

1. What is the oldest of all things?
"GOD, Because He has all always existed."
2. What is the most beautiful of all things?
"THE WORLD, Because it is the work of God."
3. What is the greatest of all things?
"SPACE, Because it contains all that has been created"
4. What is the most constant of all things?
"HOPE, Because it still remains with man, after he has lost everything else."
5. What is the best of all things?
"VIRTUE, Because without it there is nothing good."
6. What is the quickest of all things?
"THOUGHT, Because in less than a moment it can fly to the end of the universe."
7. What is the strongest of all things?
"NECESSITY, Which makes man face all the dangers of life."
8. What is the easiest of all things?
"TO GIVE ADVICE."
9. What is the most difficult of all things?
"TO KNOW THYSELF."
10. What is the wisest of all things?
"TIME, Because it discovers all things."

Extract from the Indian Patriot of the 10th February 1914.

LECTURES BY A YOGI AT GOOTY.

A correspondent writes:—

Swami Paramahamsa Sachidananda is the name of a very earnest and learned person and he lives now at Cuddapah. He rigidly endeavours to practise the Ashtanga Raja Yoga and knows the Gita and the Upanishads by heart. He delivered three eloquent lectures in Telugu in this town on the great imperative need for man to aspire and strive for true and spiritual enlightenment, and to live a clean and pious life. His copious and ready quotations in Sanskrit from the Gita and the Upanishads are so apt and illuminative. He is anxious to deliver lectures in different centres before entering into a stage of meditation, called Samadhi.

Extract from the Army and Civil News, Bangalore, 18th January 1915.

An Indian Correspondent writes the following:—

His Holiness, Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, performed with success the Jalasthambha, feat, as advertised yesterday, Sunday the 17th instant, in the tank of the Subramanya's temple, Old Madras Road, Ulsoor, Bangalore. His Holiness remained floating on the water with hands and legs folded, for over an hour and a half, and spoke with the people around him from that posture, about the practice of Brahmasutram. The feat, rare in itself, was made rarer by the beautiful exposition of "Mind, Atman and Paramatman" but owing to the large concourse of people which continued pouring in till late in the evening, and owing to the unmanageableness of the crowd which numberd over 5000, the lecture b-came inaudible, espe-

cially at the end. Swamiji, therefore at the request of many gentlemen, has kindly consented to perform the same feat, once again, next Sunday the 24th instant, at the same place with the programme a little changed as stated under: (1) Lecture on "Mind and How to control it?" in the Subramanya's temple, Ulsoor, 2 to 3 P. M., (2) Jalasthamba performance in the tank attached to that temple, 3 to 4 P. M. (3) Lecture again in the Contonment in the Sankaranarayana Sabha Hall, Sivan Chetty Garden Street, on "Atman and its relation to the body."

Extract from the New India, dated Saturday, *the 15th May 1916.*

A LECTURE IN FLOATING POSTURE.—The Kristnappa Naicken Tank, George Town, was this morning at 6 o'clock, the scene of a huge crowd of anxious spectators, numbering over 7,000 ladies and gentlemen, young and old, rich and poor, educated and uneducated, to see Swami Paramahamsa Sachidananda Yogeeswarar of Cuddapah, perform Julasthambanam Yogam (floating on water) and to hear him deliver a lecture in Tamil in that posture on "Brahmasutram and how to practice." There were also spectators on house tops round the tank. The Swami began to demonstrate his floating feats and to deliver his lecture precisely at the appointed time at the north ghaut of the tank and took one hour and forty-five minutes to finish it, arriving in the end at the same ghaut. During this long time he kept himself floating round the big tank with his legs in what is known as *Padmasanam* and his hands in sleeping posture. The Swami was always in touch with people by floating near the parapet walls, so that the people might see and hear him. However, it was impossible to hear him distinctly, owing to very large number of people round the parapet walls and to the low level of the water in the tank. A very smart sale of the Swami's photographs and his book on Yoga in Telugu and Tamil was made on the spot.

Extract from the Malaya Tribune, Singapore, Dated 5th September 1924.

YOGA MAGIC.

A rare opportunity of seeing some feats of Yoga practice will be afforded to the public of Singapore when Yogeeswarar Sachithananda Swamy of Cuddapah, India, will deliver a lecture in Tamil on "Yoga practice whilst floating on the surface of water "**Jalasthambhanam" posture** "Padmasanam" at 4 p. m. on Saturday the 6th instant at the Sand Pits Ponds opposite the Bidadari, Upper Serangoon-road, weather permitting. The ponds and premises have been kindly lent for the occasion by Mr. S. N. S. Meyyappa Chettiyar. There is standing accommodation for about 2,000 people all round the tank and the general public irrespective of nationality are cordially invited. The lecture will last about 1½ hours.

Extract from the Malaya Tribune Singapore, Dated 8th September 1924.

IMPRESSIVE YOGI DEMONSTRATION.

Several hundreds of Indians including a number of Europeans and members of other communities were present at the "Sand Pits Pond" in Upper Serangoon-road, on Saturday afternoon when Yogeeswarar Sachithananda Swami of Cuddapah, India, gave a very interesting demonstration of Yogic practice.

The banks of the pond were bordered by the people when the Swami entered the water and whilst floating on the water went round delivering his sermon. The lecture lasted for nearly an hour and a half.

PREFACE.

I thought I was singularly fortunate in having had my request granted by Swami Paramahamsa Sachithananda Yogeeswarar of Cuddapah, who has been known to me for the last few years, to write a preface to the second edition of the mystic treatise "*Jeeva Brahmaikya Vedanta Rahasyam*" (the secrets of the human soul becoming the part and parcel of the Universal Soul) In my hurried preparations on my professional tours to Burma and Siam, I went hurriedly through here and there some of his instructive lectures and lessons in "Upanishad." The main object of these lessons seems to me to be that the five senses of human beings can be controlled without allowing themselves to fall victims to Temptations.

The Swami floating on the surface of water in various tanks with arms and legs folded (*Padmasanam*) and preaching sermons in that mystic posture has attracted the admiration of the religious public and the photo describing the posture is appended to his book. When **Swamiji** was questioned by me to explain as to how he could float on water and speak in that posture, he told me that he could breathe in fully into the stomach of 22 ft, and lie down on the surface of water, when he could flooat. Then a small quantity of air should be given out and the same quanitity should be breathed in and this process repeated will help the **Swami** to deliver lectures. The original quantity of air, after expunging the small quantity should remain fixed so long as he delivers lecture on the surface

of water, only the small quantity of air should be alternately breathed in and breathed out. All these can be fully understood in the *Jeeva Brahmaikya Vedanta Rahasyam*, in Tamil, Telugu and English—Ist and 2nd parts.

All the illustrations necessary for understanding these lectures together with the expcsition of their deep significan e are well expatiated by the Swami in the first Six Chapters of his BHAGAVADGEETA.

The treatise has been prepared at the request of the several disciples of the **Swami** and it is considered desirable that these papers should be given a wide publication; and he made it easily accessible both to the rich and to the poor and with this object in view it has been decided to issue at a cheap rate.

The papers have been arranged under different headings and suppiled with glossaries to understand the Sanskrit words written in Tamil and photos to suit the lectures for the convenience of those that read the treatise.

I hope that these lectures will prove helpful in disseminating religious knowledge among the people.

A. TIRUVENKATASWAMI, MUDALIAR, B. A.,
Consulting Geologist.

CONSTIPATIAN

மலச்சிக்கல் நிவாரணை செய்யும் அன்னரஸ ஸஞ்ஜீவி.

ஓ சகோதரி சகோதரர்களே !

உலகத்திலுள்ள ஜனங்களின் சரீரங்களெல்லாம், பிருதிவி (மண்) அப்பு (ஜலம்) தேயு (அக்கி) வாயு (காற்று) ஆகாசம் (வெளி) என்னும் பஞ்ச (ஐந்து) பூதங்களினால் உண்டாயிற்று. இவ்வாறு எல்லோருடைய சரீரங்களும் பஞ்சபூதங்களினால் உண்டானபோதிலும், இச்சரீரங்களெல்லாம் ஒரேவிதமாயிராமல் வெவ்வேறு பேதங்களா யிருப்பதை இதனடியில் சொல்லுகின்றோம். அதாவது,

சிலருக்குப் பித்தம் அதிகமாயும், சிலருக்குச் சமமாயும், சிலருக்கு குறைவாயுமிருக்கும். அதுபோல், உஷ்ணம் அதிகமாயும், சமமாயும், குறைவாயும் இருக்கும். அதுபோல், நாடிகளும் வெட்டைச் சூடுகளும் சிலேஷ்ம (சீதள)ங்களும் ஜன்னிகளும் திமிர்களும் காமாலைகளும் தித்திப்புகளும் கசப்புகளும் புளிப்புகளும் உட்காங்கல்களும் ஸ்தூலமாகுதலும் கருகுதலும் (மெலிந்து போகுதலும்) நரம்புவலிகளும் தொண்டைக் கட்டுதலும் மூச்சு அதிகமாய் விடுதலும் மேல்சுவாசம் உண்டாகுதலும் பச்சை காமாலைகளும் மஞ்சள் மூத்திரங்களு முடையவர்களா யிருக்கின்றார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் ஒன்பதாம்பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" 169-வது பக்கம் நாடிகளும் அவற்றின் குணங்களும் என்பதில் காண்க.

மேற்சொல்லிய சரீரங்களில், சிலர் சரீரங்களுக்கு மலச்சிக்கல் (Constipation) உண்டாய் மல விசர்ஜனை செய்யும் பொழுது (விடும்பொழுது) மலம் தாராளமாய் (தளர்ச்சியாய்) வாராம லிருப்பதனால், மூச்சைப்பிடித்து நிறுத்தி

முக்கலிடும்போது அம்மலம் அழுத்தமாயும் உருண்டை உருண்டைகளாயும் மூச்சின்பலத்தால் மிகவும் கஷ்டத்துடன் சிலமலம் வெளியில்வரும். இவ்வாறு வரும் மலத்திற்கே மலச்சிக்கல் (Constipation) என்று சொல்லப்படும். இவ்வாறான மலச்சிக்கலுடையவர்களுக்கும், மலம் தாராளமாய் வரப்பட்டவர்களுக்கும் எப்பொழுதும் எந்த நோய்களும் வராமலிருக்க பிரதிதினம் பழயசாதமும், அந்த சாதத்தின் ரசமாகிய அந்நரச சஞ்சீவியையும் சாப்பிடவேண்டிய முறையை இதனடியில் சொல்லியிருப்பது போல் சாப்பிட்டுவந்தால் எப்பொழுதும் மலச்சிக்கலும், வியாதிகளும் வராமல் மிகவும் சுகமா யிருக்கலாம். இனி, பழயசாதம் செய்யவேண்டிய முறையும், அதைச் சாப்பிட வேண்டிய விதமும் இதனடியில் சொல்லுகின்றோம். அது போல் செய்து சாப்பிட்டுவரவேண்டும்.

ஐயா! இரவில் போஜனமுண்டு (சாப்பிட்டு) மிகுதியாயிருக்கும் சாதத்தில், சில பெண்டுகள் குளிர்ந்த ஜலத்தையும், மற்றும் சில பெண்டுகள் வென்னீரையும் விட்டுப் பழயசாதமாய்ச் செய்து, மறுநாட்காலை அந்த சாதமும் நீரும் விட்டுச் சாப்பிடுவார்கள். இவ்வாறு சாப்பிடாமல் அடியில் சொல்வதுபோல் செய்து பழயசாதமும் அதன் நீரும் சாப்பிட்டுவந்தால், அவர்களுக்கு மலச்சிக்க லில்லாமலும், சரீரத்திற்கு எவ்வித வியாதிகளும் வாராமல் எப்பொழுதும் சுகமாயிருப்பார்கள். இனி, பழயசாதம் செய்யவேண்டிய முறை இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல் எல்லாக் குடும்பங்களிலும் செய்து சாப்பிட வேண்டும்.

இரவில் சாதம் வடித்தபிறகு, சுத்தஜலம் ஒரு பாத்திரத்திலாகிலும் அல்லது பாண்டத்திலாகிலும் விட்டு நன்றாய்த் தெள்ளும்படி (கொதிக்கும்படி) எரிவிட்டு, கொதித்

தபின் அச்சலத்தை வேறாய் எடுத்து ஆறவைக்கவேண்டும். பிறகு, சாதம் வடித்த கஞ்சிநீர் எட்டை நீக்கி அந்தக் குடும்பத்திற்கு வேண்டுமளவு கஞ்சிநீர் வேறோர் பாண்டத்தில் விட்டு, அந்த கஞ்சிநீர் இரண்டளவு பிரமாணம் முன் காச்சிய வென்னீறை ஆற்றி, ஷை கஞ்சிநீரில்விட்டுக் கலந்து தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

இரவில் எல்லோரும் சாப்பிட்டபிறகு, மிகுதியாகும் சாதத்தில், முன் தயார்செய்து வைத்த கஞ்சிநீர் ஜலத்தை ஷை சாதமுள்ள பாண்டத்தில் குடும்பத்திற்கு வேண்டும் பிரமாணம் ஷை ஜலம்விட்டு, அப்பாண்டத்தை மூடிவைக்கவேண்டும். பிறகு, இரவு நித்திரைசெய்து காலையில் எழுந்து காலக்கடனை முடித்து பல்தேய்த்து ஸ்தானம் செய்து நெற்றியில் விபூதியோ அல்லது, ஸ்ரீ சூர்ணமோ அணிந்து, சிவபூஜையோ, அல்லது விஷ்ணுபூஜையோ செய்து முடித்து, ஷை பழயசாதம் இலையில் சாப்பிடாமல், ஒரு கிண்ணியில் போட்டு, ஷை பழயசாதம் நீர் சாதத்திற்குமேல் இரண்டு அங்குல மிருக்கும்படிவிட்டு, அதில் சமுத்திரலவணம் (உப்பு) கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படிபோட்டுப் பிசைந்து ஏதாகிலும் ஊர்காய் வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கடைசியில் அந்நீரையும் சாப்பிடவேண்டும். எவ்வளவு மழைகாலமாயிருந்தாலும் அல்லது, குளிர்காலமாயிருந்தாலும் ஒருநாளும் தவராமல், தம் ஆயுள் உள்ளவரையில் ஷை பழயசாதம் சாப்பிட்டு வருவாராகில், அவர்களுக்கு எப்படிப்பட்ட வியாதிகளும் எக்காலத்திலும் உண்டாகவே மாட்டா. ஆதலால், பிரதிதினம் சிறுவர்களும் சிறுமியர்களும் பெரியோர்களும் ஆறுமாத காலம் வரையில் தவராமல் மேற்சொல்லியதுபோல் பழயசாதம் செய்து சாப்பிட்டுவாருங்கள். அதன் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

நமது முன்னோர்காலத்தில் காலையில், இட்லி சாம்பார் றவைதோசை உப்புமா இன்னும் அநேக பக்ஷணங்களும், காபி, டீ முதலானவைகள் இல்லை. இவைகள் யாவும் கலியுகம்பெருகப்பெருக இப்போது உண்டாயிற்று. நமது முன்னோர் காலத்தில் முன் சொல்லியதுபோல், பழய சாதம் செய்து சாப்பிட்டுவந்து எந்நோய்களும் இல்லாமல் மிகவும் சுகஜீவிகளாயிருந்து காலங்கழித்துச் சென்றார்கள். பழயசாதம் அதன்நீர் விஷயம் இவ்வளவு விஸ்தாரமாய் எழுதுவதற்குக் காரண மென்னவென்றால், இப்பழயசாதமும் அதன்நீர் விஷயமும் அனேகர்களுக்குத் தெரியவராது; ஆதலால், இதை எல்லோரும் தெரிந்துக்கொண்டு அதுபோல் பழயசாதம் செய்து சாப்பிட்டு வருவதற்காக இந்நூல் மூலமாய்த் தெரிவித்தோம். இனி இதுமுதல் எல்லாக் குடும்பத்தி லுள்ளவர்களும் பழயசாதம் செய்து சாப்பிட்டுவாருங்கள். எந்த பக்ஷணங் (பலகாரங்) களும் காபி, டீ முதலானவைகளும் சாப்பிடவேண்டாம். சுவற்றின்மே லல்லவோ சித்திரம் (படம்) எழுதவேண்டு மென்பதுபோல், சரீரம் வியாதி இல்லாம லிருந்தா லல்லவோ சிவபூஜையும், யோகாப்பியாசமும், ஞானமும் அடையலாம். சரீரம் நல்ல ஸ்திதியி லில்லாவிட்டால் எதையும் அடையமாட்டார்கள். ஒரு சாதத்தின்நீர் ரகசியம் இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

முன்சொல்லிய பழயசாதம் நீரை நன்றாய்க் கலக்கி ஓர் கலாய்ப் பாத்திரத்தில், மூன்று டம்ளர், அல்லது இரண்டரை டம்ளருக்குக் குறையாமல் அளந்துவிட்டு அதில் உப்புகொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படி போட்டுக் கலக்கி காலையில் எதுவும் சாப்பிடாமல் வெறும்வயற்றில் அந்நீரைச் சாப்பிட்டு உடனே தாம்பூலம் போட்டு விழுங்க வேண்டும். இவ்வாறு சாப்பிட்டால் ஒன்று அல்லது

இரண்டுமுறை அந்தந்த தேகத்திற்குத் தக்கபடி பேதி யாய்ப் பிறகு, அந்நீர் குடலையெல்லாம் கழுவி வெறும் ஜல மாய்க் கொண்டுவந்து வெளியில் தள்ளும். உப்பு கொஞ் சம் அதிகமாய்க் கரிக்கும்படி போட்டுச் சாப்பிட்டால் இக்குணத்தைத்தரும்; உப்பு அவ் வளவிற்குமேல் விசேஷ மாய்ப் போட்டு, அதன் காரத்தினுல் திகட்டும்படி கஷ்டத் துடன் சாப்பிட்டால், வயிர்நோய் உண்டாகும். வாந்தி யாகும். குடலைமுறுக்கும். தாஹமெடுக்கும். நன்ருய்ப் பேதியாகும். ஆதலால், உப்பு அவ்வளவு அதிகமாய்ப் போடாமல், சாதாரணமாப்ச் சாப்பிடும் உப்பைவிட கொஞ்சம் அதிகமாய்க் கரிக்கும்படிப்போட்டுச் சாப்பிட் டால் மிசவும் சுலபமாய்ப் பேதியாகும், இவைகளையெல் லாம் அடியேன் பரிக்ஷித்துப்பார்த்து உங்கள் எல்லோருக் கும் இப்புஸ்தகமூலமாய்த் தெரிவித்த கைகண்ட அன்னரச அமிர்தசஞ்சீவி ஔஷதமென்று அரியக்கடவீர்களாக.

ஓ சகோதரிகளே! உங்கள் பிள்ளைகளாகிலும், பெண் களாகிலும் வாசிக்கப் பள்ளிக்குச் செல்லும்போது, இது வரையில் கொடுத்திருந்த பக்ஷணங்கள், காபி அல்லது டீ முதலானவைகளை நிறுத்தி, முன்சொல்லிய பழயசாதம் இலையில் போடாமல் கிண்ணியில் போட்டு, மேற்படி சாதத்தின்நீர் அதிகமாய்விட்டு, ஊர்காய்வைத்து சாப் பிட்டபிறகு, அந்நீரை சிறிதேனும் நிறுத்தாமல் எல்லா நீரையும் சாப்பிடும்படிச்செய்து பள்ளிக்கு அனுப்புங்கள். ஆறுமாதம் சென்றபிறகு அதன் அனுபவம் உங்களுக்குப் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும். உங்கள் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இது கைகண்ட அவு ஷதமா யிருந்தால், அவர்களின் ஜீவகாலபரியந்தம் மழைக்காலமென்றும், குளிர்க்காலமென்றும் பாராமல் பிரதிதினம் இப்பழயசாதமே சாப்பிட்டுவரும்படிச்

சொல்லவும். நீங்களும் அதுபோல் சாப்பிட்டுவாருங்கள். உங்களுக்கும் எந்நோயும் உண்டாகவே மாட்டா; தேகம் மிகவும் ஆரோக்கியமாயிருக்கும்.

மேற்சொல்லிய பழய சாதத்தில், தயிராகிலும் மோராகிலும் விட்டுச் சாப்பிடலாகாது. அவ்வாறு சாப்பிட்டால் திமிர், சோம்பேரித்தனம், கோட்டாவி, தூக்கம், மந்தபுத்தி முதலானவைகள் உண்டாவதுமேயன்றி வியாதிகளுக்கும் தாய்வீடாயிருக்கும். மேற்படி பழயசாதத்திற்கு இரவு மிகுதியாகும் பதார்த்தம் வைத்துச் சாப்பிடலாகாது. எந்த ஊர்காயாகிலும் வைத்துச் சாப்பிடவேண்டும். இப்பழயசாதமும் ஓர் ஔஷதமென்று நினைத்துச் சாப்பிட்டுவாருங்கள்.

இப்படிக்கு

பரமஹம்ஸ ஸச்சிதாநந்தன்

கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு,

ராயசோடி தாலூக்கா,

கடப்பை ஜில்லா.

ஸ்ரீ சற்குரு பாதந்துணை.

சிறப்புப்பாயிரம்.

இது,

ஸ்ரீ ஷண்முகாநந்தர் மரபில்வந்த

ஸ்ரீ சதாநந்த ஸரஸ்வதி

இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

உலகெலாம் போற்று மொருதனிப் பரஞ்சுடர்
அருளிய வாரணம் பிரம சூத்திரமுங்
கண்ணனெம் பெருமான் கனிந்த கீதையும்
அவன்பதம் பரவிய வனந்தமா முனிவரர்
வேத பாரகர் வித்தகச் செல்வரும்
பாதஞ் சலமுநி பகர்ந்தநூன் முறையும்
யோக சிகோப நிடதக் குண்டலி
யோக தத்துவம் யோக சூடாமணி
ஆத்ம போதம் யாஞ்ஞ வல்கியம்
சர்வ சாரந் தக்ஷிணா மூர்த்தம்
ஏகா க்ஷரத்தோ டிசைந்த சந்யாசம்
ஓதிய வுபநிடத் தாதிய வுயர்நூல்
ஆங்காங் கமைதரு மரும்பொரு ளாய்ந்து
ஈங்குளம் வியம்ப வின்சுவை யிஃதெனாஅ
முத்தமிழ்க் கவிஞர் சித்தங் களிப்புற
எளிதினி லியாவரு மின்பவீ டெய்தும்
யோக சாதனத் துயர்பொரு ளோர்ந்தே
தன்னனு பவத்தைத் தாரணி யுவப்பப்
பொருளல்ல வற்றைப் பொருளென மருளும்

பொய்திக ழுலக முய்வகை முறையே
பொருளி னரும்பொருள் புகன்றனன் புண்ணியன்
அன்னவன் யாரெனி லறைகுதுங் கேண்மின்
கிஞ்சுக மஞ்ஞையுங் கிளர்பூங் காவினங்
கொஞ்சு மாவளர் கோகிலங் குலவு
மதுமலர்ச் சோலையு மாதவிச் சாலையும்
அன்னங் கண்படு பகவிதழ்க் கமலம்
உன்னருந் தண்பணை யோங்கு மொருதனி
நீர்வள நிலவள நெல்வள நிலவிய
சீர்வளம் பொருந்துந் தேடரு மளவில்
அலகில் புகழ்பெறாஉ மாடவர் மங்கையர்
இலகு மெழில்பட ரின்னிசை மன்னிய
பொன்னி னனையர் பொருந்து பூம்பதி
உருப்படு முத்தம ருயர்நலங் கிளர்ந்த
திருப்பனங் காடெனுந் திருப்பதிச் செல்வன்
ஆடகம் வேய்ந்த கூட லம்பதி
சுந்தரன் சோம சுந்தரன் தாய்பதம்
சந்ததம் பரவுஞ் சிந்தைய னுவந்த
சுந்தரன் சோம சுந்தர வள்ளல்
மாட்சி வளர்விசா லாட்சிமுற் பவத்தில்
பழுத்த மனத்தே வழுத்திய தவமெலாம்
ஒருங்கே குழீஇ பொருமக வாகித்
திருந்திய திருவிற் றிருக்குலந் தழைக்கும்
அருந்தவ மியற்ற வாரிய னமர்ந்துளன்
பவக்கடல் கடக்கும் பற்பல துறையே
தவத்திறம் பூண்ட தனியோ குடையரும்
மறைமறை பயின்ற மாதவ ரோதிய
முறைமுறை தேர்ந்த மூதறி வாளன்
குறைவில் சீர்த்தியன் குணப்பெருங் குன்றம்

அன்பருள் வாய்மை யடக்கம ளவில்சீர்
தன்பொரு ளாமெனத் தம்முளம் வளர்த்தோன்
மாரக மிருதரு மாமறைப் பொருளாம்
தாரக நாமத் தனிமுத லிராமன்
தாரகச் சரிதையின் தத்துவ முணர்த்தினன்
முற்று மாய்ந்துணர் தத்துவ னுத்தமன்
வெட்ட வெளியில் விளங்குநன் மதியினன்
முத்தி சாதனத் துத்தம பாகத்
தெத்தகை ஞருமிஃ தெளுதி னுணர்வதாம்
இத்தகை நூலிங் கியற்றி யளித்தனன்
நன்னயம் பெருகும் பெண்ணையாற் றருகின்
கனிமது குடையுங் காவுஞ் சோலையும்
அளிமளர் நந்தன மனந்தம் வளர்ந்தரும்
மாட மாளிகை மதிதவழ் கோபுரச்
சிகர மோங்கித் திருமக டிகழ்தருங்
கடைப்பையம் பதியின் கருதருந் தவத்தினன்
அருளொரு வடிவத் தமர்ந்த வாரியன்
நித்தியா னந்த நிமலருக் கினியவன்
ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகசியம்
தாவிலி யோகந் தழைக்கத் தந்ததில்
நிலைநிலை யாமை நிகழ்த்தினன் வெளியாய்
அலையு மனத்தை யகத்தி லடக்கிடும்
பூரக ரேசகம் பொருந்துங் கும்பம்
பயிலும் பான்மையும் பாங்குறும் பத்தியம்
ஆதியா யனைத்து மநுபவித் தறைந்தனன்
உச்சிமேற் புலவ ருவக்கும்
ஸச்சிதா நந்தத் தபோதனன் மாதோ

சாற்றுகவி.

இது,

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல்

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கரர் ஆலயம்,

ஓம் அசலபீட உலகோபகார வித்யாதன சபை

ஸ்ரீ ஓம் ப்ரகாச சுவாமிகள்

இயற்றியது.

அருசீர்க் கழிநெடி லடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட மதிகண்ட பெரியர்வாழ் கடப்பையார்
    தேசம் வந்தோர்
நீர்கொண்ட புவியாளர் நலமோட்ச மின்னதென
    நேர்ந்து கொள்ளப்
பேர்கொண்ட பிரபல சாஸ்திரம் ஜீவப் பிரம்மைக்யப்
    பெட்டு நூலைத்
தார்கொண்ட பரமஹம்ஸ ஸச்சிதாநந்தன் தமிழிற்
    சாற்றி னானே.

பெங்களூர், சூளை

ஸத் குஹாசிரம்

ஸ்ரீ ப்ரஹ்ம வித்யாதன சபை

ஸ்தாபகர்

ஓம் அசலபீடம் நிச்சல ப்ரகாசரென்னும்

ச மு நாராயணசுவாமிகள்

அபிப்ராயம்.

ஸர்வாதிஷ்டான ப்ரத்யக் ப்ரஹ்ம ஸத்தையே ஸ்வபாவ ஸத்தெனக் கூறி, நிரம்பவும் விசாலமான கொடுமுடியாய் விளக்கும் வேதோப நிஷத்தின் பிரமாணங்களை, அதிக சூக்ஷ்ம புத்தியுடையோர்களுக்கே யல்லாது மற்றும் எனையோர்களும், அறியும்படி ஆசார்ய பிரசாதம் போல்வதான "ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" என்னும் இந்த கிரந்தமானது, கடப்பை ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவா ரவர்களால், தமிழில் சுலோகமும் அழகிய வியாக்கியானத்துடன் எழுதி, வெளி வந்துள்ளது. வேதாந்த விசாரணைசெய்ய முற்படும் ஒவ்வொருவரும் இதனை ஆசிரயித்து ஆநந்த முறுவார்களாக.

தத்துவ பரிசோதனை,

அன்னதான பலன்.

ஓ ஸஹோதரர்களே, கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர ரவர்களால் எழுதிய தத்துவ பரிசோதனை, அன்னதான பலன், வெளிவந்திருக்கின்றது.

மறுஜன்மத்தில் நல்லகதி யடையவேண்டுமென்று நினைக்கப்பட்ட ஸ்திரீ புருஷர்க ளனைவரும், இந்நூலில் சொல்லியிருக்கும் மிகவும் சிறிதாகிய இவ்வொரு அன்ன

தான தர்மத்தையே செய்து வந்தால் அது, மிகவும் மஹத்தாகிய பரம பதமென்று சொல்லும் பெறுத்த மோக்ஷ சாம்ராஜ்ய பதவியை யுண்டாக்கும். ஆயிரக் கணக்காகவும், லக்ஷக்கணக்காகவும் செலவு செய்து பெருந் தர்மங்களைச் செய்துவந்த போதிலும், அவைகள் யாவும் இச்சிறிய அன்னதான தர்மத்திற்கு இணையாக மாட்டாது. காட்டில் வசித்திருந்த வேடன், ஓரிரவு, காட்டில் அகப்படும் மிகவும் ருசிகரமாகிய சுட்டக்கிழங்குகளையும், தேன் தினைமாவுகளையும் ஒரு, பிராமணச் சிறுவனுக்குக் கொடுத்து அவன் பசியைத் தணிக்கும்படிச் செய்தான். இப்புண்ணிய விசேஷத்தினால், அவவேடன் மறுஜன்மத்தில் அரசன் வீட்டில் போய்ச் ஜன்மித்தான். இதன்

ரகசியமும், இவ்வன்னதானத்தினுல் என்னபலன் உண்டாகின்றதோ அதை அறியவேண்டுமென்று எண்ணி பெரியோர்களைத் தரிசிப்பதற்காக காட்டுக்குச்சென்ற ஒருவன் காட்டில் ஓர் மஹரிஷியைக்கண்டு, அன்னதான பலன் ரகஸ்யார்த்தங்களை யெல்லாம் ஷை ரிஷியால் தெரிந்துகொண்டு, வரும்பொது அளவற்ற பொருளுடன் வந்து பிறகு, அப்பொருள்களை யெல்லாம் அன்னதானம் செய்ய சாஸ்வதமான சிலாசாஸனம் ஏற்படுத்திவைத்த விஷயமும் இந்நூலில் எழுதியிருக்கின்றார்.

எல்லா தானங்களிலும் நிதானமே பெரிது. அதற்குத் தாழ்ந்ததானம் அன்னதானமேயாம். கோதான, பூதான, வஸ்திரதான, கன்னிகாதான, திலாதானமென்று சொல்லும் முப்பத்திரெண்டு தானங்களுக்கெல்லாம் மேற்சொல்லிய அன்னதானத்திற்குக் கீழ்ப்பட்டனவேயாம். ஆதலால், ஒவ்வொரு குடும்பத்திலும், இவ்வன்னதான நூல் அத்தியாவஸ்யமாய் இருக்கவேண்டும். இந்நூலை வரவழைத்து வாசித்தவுடன், இப்படிப்பட்ட அன்னதானமே செய்துவரவேண்டுமென்று ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களுக்கும் இச்சையுண்டாகும். இவ்வாறுன, அன்னதானங்களைச் செய்துவந்தால், மறுஜன்மத்தில் நல்லகதிக்குப் பாத்திரர்களாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதி இந்நூலை வரவழைத்துப் பார்த்து அன்னதானம் செய்துவாருங்கள்

தத்துவபரிசோதனை, அன்னதான பலன் மூன்றும் பதிப்பு
விலை அணு 0—8—0 வி. பி. சிலவு, பிரத்தியேகம்.

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,
169, ஸ்டிராஹன்ஸ் ரோட்டு, குளைப்பட்டாளம்
பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

முகவுரை.

பக்தஜன சிரோன்மணிகளே!

இவ்வுலகத்தில், சகல மனிதர்களும் துக்கத்தை வெறுத்துச் சுகானுபவத்தையே கோருகின்றார்களென்பதை நாம், தெரிந்துகொண்டிருக்கின்றோம். ஆனால், இவர்களில் பெரும்பாலர் சுகத்தின் தாரதம்மியம் தெரியாமல், எதை வாஸ்தவமாகக் கோரவேண்டியதோ அதை விட்டு, கோரத்தகாதவைகளை யெல்லாம் கோருகின்றார்கள். ஆதலால், சுகத்தின் தாரதம்மியத்தை விசாரிப்போம்.

இந்தச்சுகமானது உத்தமம், மத்யமம், அதமம், என மூன்று வகைப்படும். இவைகளில் மத்யமம், அதமங்களின் சுகங்களை இப்போது விசாரிக்க அவசியமில்லை. உத்தம சுகத்தையே எடுத்துக்கொள்ளவேண்டும். உத்தமசுகம் எது வென்றால், சர்வ சிரேஷ்டமான மோக்ஷமேயாம். மோக்ஷம் என்கிற பதத்திற்கு விடுதலை அடைகிற தென்பதே சரியான அர்த்தம். எதிலிருந்து விடுதலை அடைகிறதென்றால், ஜநந மரணங்களாகிய சம்சார துக்கத்திலிருந்தேயாம். சம்சாரம் எப்படி துக்கமாகிறதென்றால், மலமூத்திர ரக்த மாமிசம் முதலானவைகள் நிறைந்துள்ள தாயின் கர்ப்பத்திலிருக்கும் பையிற்குள் கட்டுண்டிருந்து எட்டு ஒன்பதாவது மாதங்களில் பூர்வஞ்ஞானமுண்டாய் ஜகத்திலுள்ள எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளின் அதாவது,
"ஸ்தாவரோ லக்ஷவிம்ஸத்ய ஜலஜோ நவலக்ஷஃ க்ரிமீணாம் ருத்ரஸங்க்யாஸ்ச சாதுர்லக்ஷந்து மாநுஷஃ த்ரிம்ஸல் லக்ஷம் கவாநாம்ச பக்ஷீணாம் தஸலக்ஷஃ."

விருக்ஷாதி ஸ்தாவரங்கள் இருபதுலக்ஷம், மச்சாதி ஜலவர்க்கங்கள் ஒன்பதுலக்ஷம், புழு முதலாகிய கிருமி

(நகரும்)வர்க்கங்கள் பதினேறுலக்ஷம், மனுஷ்யஜாதி பேதங்கள் நான்குலக்ஷம், கோக்கள் முதலாகிய மிருகவர்க்கங்கள் முப்பதுலக்ஷம், பக்ஷிவர்க்கங்கள் பத்துலக்ஷம், ஆகமொத்தம் எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளின், "நாநாயோநி ஸஹஸ்ராணித்ருஷ்ட்வா சைவ ததாமியா, ஆஹாரா விவிதா புக்தா: பீதாஸ்ச விவிதாஸ்தநா:" என்னும் கர்ப்போபநிஷத் வாக்கியரீதியாய், நாநாயோநிகளில் பிறந்து பிறந்துஉழன்று மரித்த தனது பூர்வஜன்மங்களை எல்லாம் கெர்ப்பையிலிருந்து நினைத்துக்கொண்டிருப்பதும் துக்கமே; இப்படி துக்கித்துக்கொண் டிருக்கும்போது பத்துத் திங்களும் பூர்த்தியாய், பிண்டம் தாயிற்கு நோயை உண்டாக்கி மேற்படி பையிலிருந்து தனஞ்ஜயனென்னும் வாயுவின் ஸகாயத்தினல் பூமியின்மீது தள்ளப்பட்டபிறகு "ஜ்ஞாநாங் நேஜவநம் ப்ராப்திர் யோநி மத்யஸ்ச கஸ்சதி யோநி ஸ்பர்ஸ மாத்ரேண ஜ்ஞாநரூபம் நஸம்ஸய:" என்னும் சுருதிரீதியாய், பிண்டம் கீழே விழும்போது வெளி ஸ்பர்சம் (காற்றுப்)பட்டவுடன் பூர்வஞானம்கெட்டுத் தன்னை மறந்திருக்கும் சமயத்தில் கலியுக ஜலத்தை சிசுவின் முகத்தின் மீது தெளிக்க, குவா! குவா! குவா! அதாவது, எங்கே! எங்கே! எங்கே! எனக்குப் பூர்வ ஞானமிருந்ததே அந்த ஞானம் எங்குபோயிற்றென்று அழுதுகொண் டிருப்பதும் துக்கமே; இப்படிப் பிறந்தபிறகு பால்ய, யௌவன, கௌமார(கிழத்தன) தசைகளில் பசி, தாஹம், வியாதி, குடும்ப ஸம்ரக்ஷணையில் மனவருத்த முண்டாகுதல், முதலியவைகளும் துக்கமே; கடைசியாய் மரணவஸ்தையும் துக்கமே இதிலிருந்து விடுபடுவதாகிய மோக்ஷமானது, அழிவற்றதாயும் நித்தியானந்தமான தாயும் பிரம்மானந்தமானதாயும் இருக்கிறதென்று சுருதி, ஸ்முருதி, இதிஹாஸ, புராணுதிகளில் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. சுருதி

யென்றால் வேதம். இந்த வேதமானது கர்மகாண்டம் ஞானகாண்டமென இருவகைத்து. நித்திய நைமித்திய கர்மங்களைப்பற்றியும், அவைகளை அநுஷ்டிக்கவேண்டிய விதத்தைப் பற்றியும் சொல்லுகிறபாகம் கர்மகாண்டமெனவும், எது மோக்ஷத்திற்கு முக்கிய காரண ஞானத்தை உண்டாக்குகின்றதோ, அதுவே வேதாந்தமெனவும் சொல்லப்படுகின்றது. இக்கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற நித்திய நைமித்திய கர்மங்களும், அவைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற பலனை அடையவேண்டுமென்கிற கோரிக்கையுடன் செய்தால், மத்யமசுகம் அடைவார்களென்றும் சொல்லப்படும். ஆனால், பலனில் அபேக்ஷையில்லாமல் விதிப்படி ஈசுவரார்ப்பணமாய்ச் செய்துவந்தால், அதனால் சித்தசுத்தியும், அந்த சித்தசுத்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமும் அடையலாம்.

வேதங்கள் ஞானகாண்டத்தையே சொல்லாமல் துச்ச சுகமும் நசாஸ்வதமாகிய (அழியத்தக்க) இஹபர சுகங்களாகிய கர்மகாண்டத்தை என் சொல்லுகிறதென்றால், இந்த உலகத்தில் மனிதர்கள் திரிகுணாத்ம குணங்களை உடையவர்கள். அதாவது ஸத்வ, ரஜோ, தமோ குணங்களென்னும் மூன்று விதங்களையும் உடையவர்களாய் இருக்கின்றார்கள். எப்படியென்றால்,சிலர் இம்மூன்று குணங்களையும் சமத்துவமா யுடையவர்களும், சிலர் சத்வகுணம் அதிகமாயும் ரஜோ தமோ குணங்கள் குறைந்துள்ளவர்களாயும், சிலர் ரஜோகுணம் அதிகமாயும் சத்வ தமோகுணங்கள் குறைந்துள்ளவர்களாயும், மற்றும் சிலர் தமோகுணம் அதிகமாயும் சத்வ ரஜோகுணங்கள் குறைந்துள்ளவர்களாயும் இருக்கின்றார்கள். ஆதலால், இப்படிப்பட்டவர்கள் எல்லோருக்கும உபயோகப் படும்படி அவரவர்களின் குணங்களுக்குத் தக்கபடி அனுகூலமாய் வேண்டிய விஷ

யங்கள் அந்த வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில், எவரெவர்களுக்கு எந்தெந்த விஷயம் வேண்டுமோ, அவரவர்கள் அந்தந்த விஷயங்களைக் கிரஹிக்கிறார்கள். அஃதெப்படியெனில்:—ஒரு பெரிய தடாகத்தில் அநேக துறைகள் இருக்கின்றனவல்லவா? அதில் ஒரு துறையில் விசேஷ பாசிக்கொடிகளும், ஒரு துறையில் தாமரையும், ஒருதுறையில் மச்சங்களும், ஒரு துறையில் முட்களும், ஒரு துறையில் சேறும், ஒரு துறையில் பள்ளமும், ஒரு துறையில் மணற்பாங்கும், நிர்மலோதகமும் இருக்கின்றனவல்லவா? அந்தத் தடாகத்தில் அநேகர் அநேககாரியங்களுக்காகப் போகின்றார்கள் அல்லவா. ஏனென்றால், சிலர் மச்சங்களைப் பிடிப்பதற்கும், சிலர் தாமரையிலை, புஷ்பம் முதலானவைகளைப் பறிப்பதற்கும், சிலர் சேறு எடுப்பதற்கும், சிலர் முள் எடுப்பதற்கும், சிலர் பாசிகளை எடுப்பதற்கும், சிலர் நத்தைகளைப் பிடிப்பதற்கும், சிலர் கொட்டிக்கிழங்குகளை எடுப்பதற்கும், சிலர் ஸ்நானம் செய்வதற்கும், மற்றும் சிலர் ஜலம் திரட்டுவதற்காக மணற்பாங்கிலுள்ள நிர்மலோதகத்திற்கும் போகின்றார்கள் அல்லவா. அப்படிப்பட்டவர்க ளெல்லோரும் ஒரே துறையில் போவார்களென்று எண்ணுகின்றாயா, அல்லது வெவ்வேறு துரையில் போவார்களென்று நினைக்கின்றாயா?

சுவாமீ! வெவ்வேறு வேலைகளுக்குப் போகப்பட்டவர்கள் எல்லோரும் ஒரே துறையில் எப்படிப் போவார்கள்? அப்படிப்போனபோதிலும், அவர்களின் காரியம் எப்படி சித்தியாகும். எதை யெதை நினைத்து எந்தெந்த துரைக்குப் போகவேண்டுமோ அந்தந்தத் துறையில் சென்றால்தான் காரியம் சித்தியாகும். மற்ற துறைகளுக்கு ஏன் போகவேண்டும்?

அப்பா, குழந்தாய், இந்த வேதங்களும் அந்தத் தடாகம் போன்றனவே யென்று அறியக்கடவாய். தடாகத்தில் எத்தனைவித வஸ்துக்கள் கலந்திருக்கின்றனவோ, அது போல், வேதத்திலும் ஸத்வ, ரஜ, தமோ குணங்களென்னும் மூன்று குணங்கள் சேர்ந்தே யிருக்கின்றன, ஐஹிகங்களாகிய (பூலோக சுகங்களாகிய) தாரா, புத்திர, பௌத்திர, தன, தான்யாதி சம்பத்துக்கள் வேண்டுமென்று நினைக்கப் பட்டவர்களுக்கு, அவைகளை அநுபவிக்கத்தக்க புத்திர காமேஷ்டி முதலாகிய யஞ்ஞ மந்திரங்களும், பிதுர் தர்ப்பணாதிகளைச் செய்யப்பட்டவர்களுக்குத் தக்க மந்திரங்களும், விவாஹாதி சுபகார்யங்களைச் செய்யப்பட்டவர்களுக்குத் தக்கயந்திரங்களும், பூத பேதாள பிசாசாதிகளை உபாசிக்கப் பட்டவர்களுக்குத்தக்க மந்திரங்களும் சக்திபூஜை செய்யப் பட்டவர்களுக்குத் தக்க மந்திரங்களும் இன்னும் இப்படிப்பட்ட அநேக விதங்களாகிய மந்திர தந்திராதிகளும், கேவல நிர்க்குண பரப்பிரம்மத்தை உபாசிக்கப்பட்டவர்களுக்குத்தக்க தத்துவ போதனையும், இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் அந்த வேதத்தில் சேர்ந்திருக்கின்றன. இதில், எவரெவர்களுக்கு எது இஷ்டமோ, அவரவர்கள் அந்தந்த விஷயங்களுக்குத் தக்க மந்திரங்களை கிரஹித்து தம்தம் இஷ்டசித்தியை நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால், வேதங்கள் ஜநந மரணாதி சம்சார காரணமாகிய காம்ய கர்மங்களை அநுசரித்துச் சொல்லுகின்றனவேயன்றி அதுவே சிரேஷ்டமானதென்றும், எல்லாரும் அதையே அநுஷ்டிக்க வேண்டுமென்றும் ஊன்றிச் சொல்லவில்லை. நிஷ்காம்மிய கர்ம சித்தியை அடையத்தக்க தத்துவ போதனையைக் குறித்து மாத்திரம் ஊன்றிச் சொல்லுகின்றது. இவ்விரண்டையும் அநுஷ்டிக்க பிரயத்தினப்பட்டால் அதனால் மனதிற்கு பிரமையை உண்டாக்குமே

யன்றி தத்துவ ஞானோதயம் உண்டாகமாட்டாது. ஒரு வேளை அந்த வேதத்திலுள்ள கர்மகாண்டத்தில் அநேக நல்ல கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே யென்று கேட்கின்றாயா? அப்படிப்பட்ட நல்ல கர்மங்களினால் அழியத்தக்க சொர்க்காதி போகங்கள் லபிக்குமேயன்றி சாஸ்வதமான மோக்ஷ சாம்பிராஜ்ஜியபதவி உண்டாகமாட்டாது. ஆதலால், வேதாந்த விசாரணையினால் அழியத்தக்க போகங்களும் சாஸ்வதமாகிய மோக்ஷபதவியும் தெரிந்துகொள்ளத் தக்கதாயிருக்கின்றன. இவ்விரண்டில் முதற்சொல்லிய அழியத்தக்க போகங்களைவிட்டு, சாஸ்வித மாகிய மோக்ஷபதவியை ஆசிரயிக்கவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். விஸ்தாரமாய் மஹாத்மாக்களுக்கே அர்த்தமாகக் கூடியதாயும், உத்தமசுகம் அடைவிக்க முக்கிய சாதனத்தை வெளிப்படுத்துவதாயும் இருக்கிற வேதாந்தமாகிய உபநிஷத்துக்களின் அர்த்தங்களைப் பூர்ணமாய் அறிந்துகொள்ளும் சக்தி நமக்கு இல்லையே என்றாலோ, இக்கொடுமையான கலியுகத்தில நாம் இப்படிப்பட்ட நிலைமைக்கு வருவோமென்பதை உத்தேசித்தே சாக்ஷாத் மஹாவிஷ்ணுவானவர் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் செய்திருந்தகாலத்தில் அர்ஜுனனை வியாஜ்ஜியமாகக் கொண்டு சகலரும் கடைத்தேறச் சுலபமாயிருக்கும் பொருட்டு வேதாந்த அர்த்தங்களின் சாரமாகிய கீதா சாஸ்த்திரத்தை உபதேசித்திருக்கின்றார்.

மஹாவிஷ்ணுவானவர் கிருஷ்ணாவதாரம் செய்து, அர்ஜுனனை வியாஜ்ஜியமாகக்கொண்டு உபதேசித்திருக்கின்றார் என்னும் விஷயம், சாதாரணமாய்ப் பலருக்கும் தெரிந்திருந்தாலும் தெரியாதவர்களின் பொருட்டு அவ்விஷயத்தை இவ்விடத்தில் சுருக்கி அத்தியாயம் 4-சுலோகம் 7-8-ல், சொல்லுகின்றோம்.

யதா யதா ஹி தர்மஸ்ய க்ளாநிர் பவதி பாரத !
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.
பரித்ராணய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

என்கிற பகவத்கீதா வாக்கியத்தின்படி எந்தக் காலத்தில் வேதோக்தம தர்மங்கள் க்ஷீணித்து அதர்மம் விருத்தியடைகின்றதோ அப்போதெல்லாம் என்னை நானே சிருஷ்டித்துக்கொண்டு, நானும் ஓர் மனுஷ்யனுக பிரதியுகங்களிலும் அவதரித்து அதர்மத்தை விருத்தி செய்துகொண்டிருக்கும் துஷ்டர்களை நசிக்கச்செய்வதற்கும், தர்மங்களைச் சரியாய்ப் பரிபாலனம் செய்துகொண்டிருக்கும் சத்புருஷர்களுக்கு, துஷ்டஜனங்களால் கெடுதியுண்டாகாமல் இருப்பதற்காக ரக்ஷிக்கும்பொருட்டும், தர்மாசார பத்ததிகளை ஜனங்களுக்குக் காண்பித்து அவர்களை ஆசிரயிக்கச் செய்து அதன் மூலமாய் க்ஷீணித்த தர்மங்களை மறுபடியும் சீர்திருத்தம் செய்வதற்கும், யாதவ வம்சத்தில் பிறந்தவர்களும் மஹா பக்தர்களுமான வசுதேவர் தேவகீ இவர்களுடைய இஷ்ட பூர்த்திக்காகவும்அவர்களுக்குப் புத்திரனுக மஹாவிஷ்ணு அவதாரம் செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆனுல், ஈசுவரனுகிய என்னுல் சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்த ஜனங்களையும் சமமாய்ப் பரிபாலனம் செய்யாமல் சத்புருஷர்களை மாத்திரம் ரக்ஷிப்பதும், துஷ்டர்களை நசிக்கச்செய்வதும் உனக்குத்தகுமா" என்று கேட்கின்றுயோ சொல்லுகின்றேன் கேள்.

சுலோ || "லாலநே தாடநே மாதுர்ந வைஷம்யம் யதார்பகே.
தத்வதேவ மஹேஸஸ்ய நியந்துர்க்குண தோஷயோ:"

தாய் தான் சொன்னபடி கேட்கப்பட்ட குமாரன்மீது சந்தோஷிப்பாள். தன் வார்த்தையைக்கேளாத குமாரனை

அடிப்பாளன்றோ? அப்படி அடிப்பதனால் சொன்னபடி கேட்டு அவனும் நல்லொழுக்கத்திற்கு வருவானென்கிற எண்ணத்தினால் அவனை அடிக்கின்றாளேயொழிய அவன் மீது விரோதத்தினாலல்ல. அதுபோல், சர்வ சமரசனும், சர்வ பரிபாலனனும, ஸர்வேஸ்வரனும் இருக்கப்பட்ட பகவானான என்னால் ஏற்படுத்திய வேதங்களில் சொல்லப்பட்டது போல் நடந்துகொள்ளும் சத்புருஷர்களை ரக்ஷிக்கின்றேன். அப்படி நடவாத துஷ்டர்கள் மேன்மையை அடைவதற்காக அநுக்கிரஹத்துடன் புத்திவரும்படியாய்த் தக்கபடி அவர்களைச் சிக்ஷிக்கின்றேனே யொழிய அவர்களிடத்தில் துவேஷத்தினாலாகிலும், பக்ஷபாதத்தினாலாகிலும் செய்கின்றேனென்று எண்ணவேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால்,

அஸ்தினாபுரத்தை ஆண்டுவந்த சந்திரவம்சத்து அரசர்களின் சந்ததியில், திருதராஷ்ட்டிர னென்றும், பாண்டு வென்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். திருதராஷ்ட்டிரன் பிறவிக்குருடன். அவன் பட்டத்திற்கு அருஹன் ஆகாவிடினும், தம்பியான பாண்டு, தமையனிடத்தில் உள்ள பக்ஷத்தினால் தமையனை ராஜாவாக்கித் தான் இளவரசனானான். திருதராஷ்ட்டிரனுக்குத் துர்யோதனாதி நூறுகுமாரர்களும், பாண்டுவுக்குத் தர்மபுத்திரன், பீமசேனன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் என ஐந்து குமாரர்களும், இருந்தார்கள். பாண்டு குமாரர்களான ஐவர்களும் வித்தையிலும், வல்லமையிலும், பெருந் தன்மையிலும், புத்தியிலும், சகலவித நற்குணங்களிலும் துர்யோதனாதிகளைவிட சிரேஷ்டர்களாயும், சகலராலும் புகழத்தக்கவர்களாயும் இருந்ததனால், தன் தகப்பனுக்குப் பிறகு ராஜ்ஜியம் தனக்குக் கிடைக்காமற் போய்விடும் என்கிற பயத்தினால், துர்யோதனன்

இவர்களைத் தந்திரமாய் விரோதித்துக் கொன்றுவிடுவதற்காக எண்ணங்கொண்டான். தன் குமாரன் பாண்டவர்களை விரோதிக்கின்றான் என்கிற விஷயம் திருதராஷ்ட்டிரன் அறிந்து பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்ஜியம் கொடுத்து, இந்திர பிரஸ்தம் என்கிற பட்டணத்தில் அவர்களை வசிக்கச் செய்தான். துர்யோதனன் அத்துடன் திருப்தி யடையாமல் பாண்டவர்களைக் கொன்றுவிடுவதற்காகவே பலவித முயற்சிகளைச் செய்தும், பயன்படாததனால் அவர்களை அடுத்து சிநேகம் பாராட்டிக் கடைசியில் மோசவடியாய் தர்ம புத்திரரைச் சூதாட்டத்திற்கு உட்படுத்தித் தனக்கும், தர்மபுத்திரருக்கும் அம்மானுன சகுனி என்பவனைக் கொண்டு மாயச் சூதாடுவித்துப் பாண்டவர்களுடைய சகல சொத்துக்களையும் அபகரித்துக்கொண்டதுமே யல்லாமல், பாண்டவர்களையும், அவர்களுடைய பத்தினி பதிவ்விரதா சிரோன்மணியுமாகிய த்ரௌபதியையும், துர்யோதனன் சபையில் மானபங்கம்செய்வித்தான். பிறகு பீஷ்மாசாரியர் முதலான பெரியோர்களுடைய வேண்டுகோளின்மேல் பாண்டவர்கள் பன்னிரெண்டு வருஷங்கள் காட்டில் சஞ்சரித்துப் பதின்மூன்றுவது வருஷம் தனக்குத் தென்படாத இடத்தில் வசித்திருந்து பிறகு வந்தால் பாதிராஜ்ஜியம் கொடுப்பதாகத் துர்யோதனன் உடன்பட்டான்.

பாண்டவர்கள் ஐவரும் மஹா பலசாலிகளாய் இருப்பினும் தர்மமென்கிற கயிற்றால் கட்டுப்பட்டவர்களாதலால், அப்படியே காட்டுக்குச் சென்று நிபந்தனைத் தவராமல் பதின்மூன்று வருஷங்கள், காடு மலை முதலிய இடங்களில் சஞ்சரித்துப் பிறகு, பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படி துர்யோதனனைக் கேட்டனுப்பினர்கள். அதற்கு அவன் சம்மதிக்கவில்லை. அதன்பிறகு, தங்களுக்கு அம்மான்பிள்ளையும் தங்களிடத்தில் அதிக வாத்சயல்

முடையவருமான ஸ்ரீ கிருஷ்ணபகவானை பிரார்த்தித்து அவர் மூலமாக துர்யோதனனைப் பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படிக் கேட்டனுப்பினார்கள். துர்யோதனன் ஊசிநாட்டும் இடமுள்ள பூமியும் கொடுக்கச் சம்மதமில்லை என்றான். அதன் பிறகு, இருதறத்தாரும் யுத்தம் செய்ய வேண்டியதாய் நேர்ந்தது. இந்த யுத்தத்திற்குப் பாரத யுத்தம் என்று பெயர். இருதறத்துச் சேனைகளும் யுத்தகளத்தில் நிற்கும் போது, யுத்தத்தொடக்கத்தில் அச்சேனைகளை அர்ஜுனன் பார்த்துப் பெரும்பாலும் தன் பந்துக்களும், சிநேகிதர்களும், ஆசாரியர்களுமாய் இருக்கக்கண்டு பரிதாபமடைந்து தனக்குச் சாரதியாய் எழுந்தருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி, "நான் இந்தச் சேனைகளைக் கொல்லத் துணியேன். எவ்விடத்தை நோக்கினும் பந்து, மித்திர, ஆசாரியர்களாகவே இருக்கின்றார்கள். அவர்களைக் கொன்றால் நான் நரகமடைவேன், எனக்கு ராஜ்ஜியமே வேண்டாம். காட்டுக்கே மறுபடியும் செல்வேன்" என்றான். அந்த வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவானானவர் அர்ஜுனனை வியாஜ்ஜிமாகக் கொண்டு, சகலமான பேர்களும் கடைத்தேறும் பொருட்டும், தம்தம் வர்ணாசிரம தர்மத்தை விட்டவர்கள் நரகமடைவார்கள் என்பதையும், ஆத்மா அநாத்ம விவேகத்தையும், உத்தமசுகத்தையும் அடைய வேண்டியதற்காகவும், ஞான கர்ம மார்க்கங்களை உபதேசித்தார். ஆகையால், இந்த கிரந்தமானது, பகவானான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியால் உபதேசிக்கப்பட்டபடியால், இதற்கு பகவத்கீதை யென்றும், வேதாந்த அர்த்தங்களைத் திரட்டிச் சொல்லியிருப்பதனால் உபநிஷத்தென்றும், பரப் பிரம்மத்தைத் தெரிவிக்கின்ற வித்தையாயிருப்பதனால் பிரம்ம வித்யை யென்றும், ஆத்மா அநாத்ம விவேகத்தை விளக்குகிற சாங்கிய யோகமும், கர்மயோகமும் சொல்லப்பட்

டிருப்பதனுல் யோக சாஸ்த்திரமென்றும், ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த உத்தர பிரதி யுத்தரங்களா யிருப்பதனுல் ஸ்ரீ கிருஷ்ணுர்ஜுன சம்வாத மென்றும் சொல்லப்படுகின்றது.

இந்த கீதாசாஸ்திரத்தின் சாராம்சம் என்னவென்றல், காணப்படும் பிரபஞ்சம் நசிக்கத்தக்க வஸ்து. ஆத்மா ஒன்றே சத்பதார்த்தம் (சாஸ்வதமா யிருக்கப்பட்டது) என்பதாம். இந்த ஆத்மா, ஜீவாத்மா வென்றும், பரமாத்மா வென்றும் இரண்டுவிதமா யிருக்கின்றது.

அதில், ஜீவாத்மா என்பது அஞ்ஞானத்துடன் கூடி பிரபஞ்சத்திலுள்ள சமஸ்த ஜந்துக்களிலும் வியாபித்திருக்கும் சைதந்யம். இதற்கே ஜீவனென்றும், உயிரென்றும், பிராணனென்றும் இவ்வாருக, அநேக பெயர்கள் உண்டு.

பரமாத்மா என்றல், மாயையில்லாத சுத்த ஞானுநந்த சொரூபம்: பிரபஞ்சோத்பத்தி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணபூதமா யிருந்தபோதிலும் இந்த பிரபஞ்சத்திற்கு விலக்ஷணமா யிருக்கப்பட்டதே சைதந்யம். இதுவே, பரப்பிரம்மமென்றும், த்ரிமூர்த்தியாத்மகமென்றும் அதாவது, சிருஷ்ட்டியாதி விருத்திபேதங்களினுல் பிரமன், விஷ்ணு, மஹேசுவர சொரூபமென்றும் சொல்லப்படுகின்றது.

ஜீவாத்மாவைக் காணவொட்டாமல் மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞானமானது எப்பொழுது ஒழிந்துவிடுகின்றதோ, அப்பொழுதே அது சுத்த ஞானுநந்த சொரூபமாய் பரமாத்மாவில் கலக்கும். அதாவது, ஜீவாத்மா பரமாத்ம சொருபத்தை அடைந்து ஜநநமரணுதிகள் இல்லாமல் இருக்கும். ஜீவாத்மாவிலிருக்கும் அஞ்ஞானம் ஒழியாவிடில் ஜநநமரணங்கள் சம்பவித்துக் கொண்டே யிருக்கும். இது விஷயம் முன் அத்யாயங்களில் விவரமாய்க் காணலாம்.

பரமாத்மாவினுடைய தத்துவம் இப்படிப்பட்டதென்று நிச்சயமாய் அறிவது எதுவோ அந்த அறிவே ஞானமென்று சொல்லப்படும். இந்த ஞான மடைந்தவன் எந்ததேச, எந்தமதஸ்தனு யிருந்தாலும் அவனே மோக்ஷத்திற்கு அதிகாரியாவான். அவனிடத்திலுள்ள ஜீவாத்மாவைப் பற்றியிருக்கும் அஞ்ஞானமானது நசித்துப் பரமாத்மாவிற் கலப்பதற்கு அதிகாரியா யிருக்கின்றான். இந்த ஞானசித்தியை யடைய விரும்பு மவனே முமுக்ஷு வெனப்படுவான்.

வேதவியாச மஹாருஷியானவர் மஹாபாரதமென்கிற கிரந்தம் செய்தபோது இந்த கீதையை மஹாபாரதத்துடன் சேர்த்தார். அப்படிச் சேர்த்தது ஐயாயிர வருஷங்களுக்கு அதிகமாகவே யிருக்கவேண்டும். அதற்குப்பின் இந்த சாஸ்திரார்த்தத்தைச் சரியாய்த் தெரிந்துகொள்ளும் சக்தி ஜனங்களிடத்தில் குறைந்துபோனபடியால், இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் இந்த கீதார்த்தத்தை விவரித்துக்காட்டி அத்வைதமத சித்தாந்தத்திற் கிணங்கவும், அதன்பின் ஸ்ரீ ராமானுஜாசாரிய சுவாமிகள் விசிஷ்டாத்வைதமத சித்தாந்தத்திற் கிணங்கவும், அதற்குப்பின் ஸ்ரீ மத்துவாசாரிய சுவாமிகள் துவைதமத சித்தாந்தத்திற் கிணங்கவும் பாஷ்யங்களைச் செய்தார்கள்.

இந்த கீதாசாஸ்திரமானது, அநேக வருஷங்களாய் வந்து கொண்டிருந்தபோதிலும் பிராம்மணர்கள் மாத்திரம் இதனைப் பாராயணம் செய்துகொண்டும், மற்றவர்கள் பார்ப்பதற்கு யோக்கியதையுடையவர்க ளல்லவென்றும் மறைக்கப்பட் டிருந்தபடியால் இதுகாலம்வரையில் இந்த கீதை வெளியாகாம லிருந்ததுபோல் தோன்றுகின்றது. இப்படி கோப்பியமாய் வைத்துக்கொண்டு பிராம்மணர்

களிலும் வித்தியா விவேக சம்பன்னர்களாகிய சிலர் மாத்திரமே இந்த உத்கிருஷ்டமான கிரந்தத்தைப் பாராயணம் செய்துவந்தார்கள். மற்றவர்களுக்கு இந்த கிரந்தம் இருப்பதே தெரியாமலிருக்கலாமென்று எண்ணவேண்டியதாயிருக்கின்றது. அதன் பிறகு தயாளத்துவமுடைய பிராம்மணர்களில் சிலர், எல்லா வர்ணஸ்த்தர்களும் இதனைப் பாராயணஞ் செய்யத் தக்கவர்களே என்றெண்ணி, இந்த கீதா சாஸ்த்திரத்தை உரையுடன் அச்சிட்டு வெளியாக்கினார்கள். அதனால், இந்த சாஸ்த்திரத்தை பிராம்மணர்களே யல்லாமல் இதர வர்ணஸ்தர்களும் வாசிப்பதற்கும், அதிலுள்ள ஸாராம்சத்தைப் பூர்த்தியாய் கிரஹிக்காவிடினும் சிறிதேனும் கிரஹிப்பதற்கு அவகாசம் ஏற்பட்டது. முப்பது வருஷங்களுக்கு முன் இந்த கீதா சாஸ்த்திரம், சென்னையில் அநேகர்களுக்குத் தெரியாமலிருந்தது. பிறகு,

1892௵த்தில் சென்னை கோவிந்தப்ப நாய்க்கர் ஸ்கூலில் ஸ்ரீமாந்-பண்டித-லக்ஷ்மணாசாரியர் இதன் ஸாராம்சத்தை எல்லோருக்கும் தெரியும்படித் தெளிவாய் உபந்நியாசரூபமாய்ப் போதித்தார். அன்றுமுதல் அவர் உபந்நியாசம் செய்துகொண்டு வந்ததனால் கீதாசாஸ்த்திரம் இதுவரையில் அறியாதவர்கள் இப்பொழுது அதன் ருசியறிந்து இன்னும் அபிவிருத்தியாவதற்கு அநேகர்கள் சேர்ந்து அதை விருத்தி செய்துகொண்டே வருகிறார்கள்; பண்டித லக்ஷ்மணாசாரியார் 1920௵ பரமபத பதவியை அடைந்தனர். இது வரையில் கோப்பியமாய் வைக்கப்பட்டிருந்த இந்த உத்கிருஷ்டமான கிரந்தத்தை லக்ஷ்மணாசாரியராயகிய இந்த மஹானால் வெளியாக்கப்பட்டது எப்படியிருக்கின்றதென்றால், பூர்வம் அதிகோப்பியமாய் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று குருவினால் உபதேசிக்

கப்பட்ட திருமந்திரார்த்தத்தைச் சகல ஜனங்களும் கிரகித்து உஜ்ஜீவிக்க வேண்டுமென்னும் எண்ணத்தினால் ஆசார்யரது வார்த்தையை மீறிக் கோபுரத்தின் மீதேறி வெளியாக்கிய ஆதிசேஷாம்சமாகிய ஸ்ரீ ராமாநுஜாசாரிய (உடையவ) ருடைய உத்தேசம் போன்றதாயிருக்கின்றது.

ஷை ஸ்ரீமான் - பண்டித - லக்ஷ்மணாசாரியர் முதலானவர்களின் உபந்நியாசங்கள் சென்னை நிவாசர்களுக்கேயன்றி இதரர்களுக்குப் போதையாகாததனால், கிஞ்சிக்ஞனான அடியேனால் உபநிஷத் வாக்கியங்களால் எழுதப்பட்ட "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்ய" மென்னும் நூலிற்கு இந்த கீதையை உபமானமாய், முதல் ஆறு அத்தியாயம்வரையில் விசேஷமாய் விஷயாம்சங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த கீதையிலும் ஆங்காங்கு உபநிஷத் வாக்கியங்கள் உதகரிக்கப்பட்டிருக்கின்றன.

இனி அடியேன் நிர்விகல்பசமாதி நிஷ்டையிலிருக்க கடப்பை விட்டு கடிகோட்டை யென்னும் மலையடிவாரம் சென்றுவிட்டபடியால், மற்ற பன்னிரெண்டு அத்யாயங்களுக்கும் உரை எழுதவில்லை.

இப்படிக்கு
அடியார்க்குமடியேன்,

பரமஹம்ஸ ஸச்சிதானந்தன்

கடிகோட்டை,
வீரபல்லி போஸ்ட்டு,
ராயசோடி தாலூக்கா,
கடப்பை ஜில்லா.

ஓ சகோதரி! சகோதரர்களே!

உலகத்தில் எல்லா தானங்களிலும் நிதானம் பெரிது; இரண்டாவது அன்னதானம் பெரிது; மூன்றாவது வித்யா தானம் பெரிது. இம்மூன்று தானங்களைவிட விசேஷமானது உலகத்தில் வேறொன்றில்லை. ஆதலால், அடியேனெழுதிய நூல்களில் வரப்பட்ட லாபங்களையெல்லாம் அவ்வவ் வருஷத்தில்வரும் வைகுண்ட ஏகாதசி மறுநாள் துவாதசி தினத்திலும், சித்ராபௌர்ணமி தினத்திலும் சென்னையிலும், கடிகோட்டையிலும் அன்னதானம் செய்துவர டிரஸ்டிகளை ஏற்படுத்தி அவர்களுக்குப் பத்திர மூலமாய் ரிஜிஸ்டர்செய்து சர்வ அதிகாரமும் கொடுத்து சென்னை, பேரம்பூர் பாரக்ஸ் ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனியிடம், **1925**ஞு முதல் ஷை அன்னதானம் ஈஸ்வரார்ப்பணமாய் நடத்திவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். ஆதலால், இந்நூலை வாசிக்கும் அடியேனுடைய சகோதரிகளும், சகோதரர்களும் தங்கள் தங்கள் சக்தியானுசாரமாய் அன்னதானத்திற்குப் பொருளுதவி செய்தால், கடிகோட்டையிலும், மேல்கண்ட கம்பெனியிலும் அன்னதானம் ஷை டிரஸ்டிகள், மேற்சொல்லிய நாட்களில் செய்து வருவார்கள்.

இவ்வன்னதானத்திற்குப் பொருளுதவி செய்தால், அப்பொருளால் வாங்கும் பதார்த்தங்கள் பெரியோர்களின் குக்ஷியிலும், ஏழைகளின் குக்ஷியிலும் விழுவதனால் பொருள் கொடுத்த உங்களுக்கு நல்ல புண்ணியமுண்டாய் அப்புண்ணிய பலனை மறு ஜன்மத்தில் தப்பாமல் ஸத்யமாய் அடைவீர்கள்: ஆதலால், உங்கள் சக்தியானுசாரம்

அன்னதானத்திற்குப் பொருள் மேல்கண்ட கம்பெனிக்கு உதவி செய்யலாம்: உங்கள் பெயர் ரிஜிஸ்டர் செய்து கொள்வார்கள். தர்மராஜர் யாகம் செய்தபோது, அந்த யாகத்திற்கு வடித்த கஞ்சிநீரைச் சாப்பிட்டவுடன், சாப்பிட்ட மஹாத்மாவினால் உண்டான புண்ணியம் "சத்துவ பரிசோதனை, அன்னதான பலன்" என்னும் நூலில் தெரிவித்திருக்கின்றோம். ஆதலால், நீங்களும் அன்னதானங்களையே செய்துவரவேண்டும். இதைவிட வேறு எந்த தானமும் பெரிதல்ல.

முகவுரை.

யக்தஜன சிரோன்மணிகளே!

இவ்வுலகத்தில் சகல மனிதர்களும் துக்கத்தை வெறுத்துச் சுகானுபவத்தையே கோருகின்றார்களென்பதை நாம் நிமிஷந்தோறும் காண்கிறோம். ஆனால், இவர்களில் பெரும்பாலர் சுகத்தின் தாரதம்மியம் தெரியாமல், எதை வாஸ்தவமாகக் கோரவேண்டியதோ அதைவிட்டு, கோரத்தகாதவைகளைக் கோருகின்றார்கள். ஆதலால், சுகத்தின் தாரதம்மியத்தை விசாரிப்போம்.

இந்தச்சுகமானது உத்தமம், மத்யமம், அதமம், என மூன்று வகைப்படும். இவைகளில் மத்யமம், அதமங்களின் சுகங்களை விசாரிப்பது இப்போது அவசியமில்லை. உத்தம சுகத்தையே எடுத்துக்கொள்ளவேண்டும். உத்தமசுகம் எதுவென்றால், சர்வ சிரேஷ்டமான மோக்ஷமேயாம். மோக்ஷம் என்கிற பதத்திற்கு விடுதலை அடைகிறதென்பதே சரியான அர்த்தம். எதிலிருந்து விடுதலை அடைகிறதென்றால், ஜனன மரணங்களாகிய சம்சார துக்கத்திலிருந்தேயாம். சம்சாரம் எப்படி துக்கமாகிறதென்றால், மலமூத்திர ரக்த மாமிசம் முதலானவைகள் நிறைந்துள்ள தாயின் கர்ப்பத்திலிருக்கும் பைபிற்குள் கட்டுண்டிருந்து எட்டு ஒன்பதாவது மாதங்களில் பூர்வஞ்ஞானமுண்டாய் ஜகத்திலுள்ள எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளின் அதாவது,

"ஸ்தாவரோ லக்ஷவிம்ஸத்ய ஜலஜோ நவலக்ஷக: க்ரிமீணாம் ருத்ரஸங்க்யாஸ்ச சாதுர்லக்ஷந்து மாநுஷ: த்ரிம்ஸல் லக்ஷம் கவாநாம்ச பக்ஷீணாம் தஸலக்ஷக:."

விருக்ஷாதி ஸ்தாவரங்கள் இருபதுலக்ஷம், மச்சாதி ஜலவர்க்கங்கள் ஒன்பதுலக்ஷம், புழு முதலாகிய கிருமிவர்க்

கங்கள் பதினேறு லக்ஷம், மனுஷ்யஜாதி பேதங்கள் நாலு லக்ஷம், கோக்கள் முதலாகிய மிருகவர்க்கங்கள் முப்பது லக்ஷம், பக்ஷிவர்க்கங்கள் பத்துலக்ஷம், ஆகமொத்தம் எண்பத்து நான்குலக்ஷ ஜீவராசிகளின், "நாநாயோநி ஸஹஸ்ராணித்ருஷ்ட்வா சைவ ததாமியா,ஆஹாரா விவிதா புக்தாஃ பீதாஸ்ச விவிதாஸ்தநாஃ" என்னும் கர்ப்போபநிஷத் வாக்கியரீதியாய் நாநாயோனிகளில் பிறந்து பிறந்து உழன்று மரித்த தனது பூர்வஜன்மங்களை எல்லாம் அடி கர்ப்பப்பையி லிருந்து நினைத்துக்கொண்டிருப்பதும் துக்கமே; இப்படி துக்கித்துக்கொண் டிருக்கும்போது பத்துத் திங்களும் பூர்த்தியாய், பிண்டம் தாயிற்கு நோயை உண்டாக்கி மேற் படி பையிலிருந்து தனஞ்ஜயனென்னும் வாயுவின் ஸகா யத்தினுல் பூமியின்மீது தள்ளப்பட்டபிறகு "ஜ்ஞாநாங் நேஜவநம் ப்ராப்திர் யோநி மத்யஸ்ச கஸ்சதி யோநி ஸ்பர்ஸ மாத்ரேண ஜ்ஞாநரூபம் நஸம்ஸயஃ" என்னும் சுருதிரீதி யாய்.

யோனிப் பையிலிருந்து வெளிவரும் சிசுவிற்கு, வெளி காற்றுப் பட்டவுடன் பூர்வஞானம் கெட்டுத் தன்னை மறந் திருக்கும் சமயத்தில் கலியுக ஜலத்தை சிசுவின் முகத்தின் மீது தெளிக்க, குவா! குவா! குவா! அதாவது, எங்கே! எங்கே! எங்கே! எனக்குப் பூர்வஞானமிருந்ததே அந்த ஞானம் எங்குபோயிற்றென்று அழுதுகொண் டிருப்பதும் துக்கமே; இப்படிப் பிறந்தபிறகு பால்ய, யௌவன, கௌமார, தசைகளில் பசி, தாஹம், வியாதி, குடும்ப ஸம்ரக்ஷணை குடும்பவியோகம், அசக்தி முதலியவைகள் உண்டாகு வதும் துக்கமே; கடைசியாய் மரணவஸ்தையும் துக்கமே. இதிலிருந்து விடுபடுவதாகிய மோக்ஷமானது, அழிவற்ற தாயும் நித்தியானந்தமானதாயும் பிரம்மானந்தமானதாயும் இருக்கிறதென்று சுருதி, ஸ்முருதி, இதிஹாஸ, புராணதி

களில் பிரசித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. சுருதி யென்றால் வேதம். இந்த வேதமானது கர்மகாண்டம், ஞானகாண்டமென இருவகைத்து. நித்திய நைமித்திய கர்மங்களைப்பற்றியும் அவைகளை அநுஷ்டிக்கவேண்டிய விதத்தைப் பற்றியும் சொல்லுகிறபாகம் கர்மகாண்டமெனவும், எது மோக்ஷத்திற்கு முக்கிய காரண ஞானத்தை உண்டாக்குகின்றதோ, அதுவே வேதாந்தமெனவும் சொல்லப்படுகின்றது. இக்கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற நித்திய நைமித்திய கர்மங்களும், அவைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற பலனை அடையவேண்டுமென்கிற கோரிக்கையுடன் செய்தால், மத்தியமசுகம் அடையப்படும். ஆனால், பலனில் அபேக்ஷையில்லாமல் விதிப்படி ஈசுவரார்ப்பணமாய்ச் செய்துவந்தால், அதனால் சித்த சுத்தியும், அந்த சித்தசுத்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமும் அடையலாம்.

வேதங்கள் ஞானகாண்டத்தையே சொல்லாமல் துச்ச சுகமும் நசாஸ்வதமாகிய (அழியத்தக்க) இஹபர சுகங்களாகிய கர்மகாண்டத்தை ஏன் சொல்லுகிறதென்றால், இந்த உலகத்தில் மனிதர்கள் திரிகுணாத்ம குணங்களை உடையவர்கள். அதாவது ஸத்வ, ரஜோ, தமோ குணங்களென்னும் மூன்று விதங்களையும் உடையவர்களாய் இருக்கின்றார்கள். எப்படியென்றால், சிலர் இம்மூன்று குணங்களையும் சமத்துவமாயுடையவர்களாயும், சிலர் சத்வகுணம் அதிகமாயும் ரஜோ தமோ குணங்கள் குறைந்துள்ளவர்களாயும், சிலர் ரஜோகுணம் அதிகமாயும் சத்வ தமோகுணங்கள் குறைந்துள்ளவர்களாயும், மற்றும் சிலர் தமோகுணம் அதிகமாயும் சத்வ ரஜோகுணங்கள் குறைந்துள்ளவர்களாயும் இருக்கின்றார்கள். ஆதலால், இப்படிப்பட்டவர்கள் எல்லோருக்கும உபயோகப் படும்படி அவரவர்களின்

குணங்களுக்குத் தக்கபடி அனுகூலமாய் வேண்டிய விஷயங்கள் அந்த வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில், எவரெவர்களுக்கு எந்தெந்த விஷயம் வேண்டுமோ, அவரவர்கள் அந்தந்த விஷயங்களுக்குவேண்டிய மந்திரங்களைக் கிரஹித்து கார்யசித்தி அடைகின்றார்கள். அஃதெப்படியெனில்:—ஒரு பெரிய தடாகத்தில் அநேக துறைகள் இருக்கின்றனவல்லவா? அதில் ஒரு துறையில் விசேஷ பாசிக்கொடிகளும், ஒரு துறையில் தாமரையும், ஒருதுறையில் மச்சங்களும், ஒரு துறையில் முட்களும், ஒரு துறையில் சேறும், ஒரு துறையில் பள்ளமும், ஒரு துறையில் மணற்பாங்கும், நிர்மலோதகமும் இருக்கின்றனவல்லவா? அந்தத்தடாகத்தில் அநேகர் அநேககாரியங்களுக்காகப் போகின்றார்கள். ஏனென்றால், சிலர் மச்சங்களைப் பிடிப்பதற்கும், சிலர் தாமரையிலை, புஷ்பம் முதலானவைகளைப் பறிப்பதற்கும், சிலர் சேறு எடுப்பதற்கும், சிலர் முள் எடுப்பதற்கும், சிலர் பாசிகளை எடுப்பதற்கும், சிலர் நத்தைகளைப் பிடிப்பதற்கும், சிலர் கொட்டிக்கிழங்குகளை எடுப்பதற்கும், சிலர் ஸ்நானம் செய்வதற்கும், மற்றும் சிலர் ஜலம் திரட்டுவதற்காக மணற்பாங்கிலுள்ள நிர்மலோதகத்திற்கும் போகின்றார்கள். அப்படிப்பட்டவர்களெல்லோரும் ஒரே துறையில் போவார்களென்று எண்ணுகின்றாயா, அல்லது வெவ்வேறு துரைக்குப் போவார்களென்று நினைக்கின்றாயா?

சுவாமீ! வேறுவேறு வேலைகளுக்குப் போகப்பட்டவர்கள் எல்லோரும் ஒரே துறையில் எப்படிப் போவார்கள்? அப்படிப்போனபோதிலும், அவர்களின் கார்யம் எப்படி சித்தியாகும். எதை யெதை நினைத்து எந்தெந்த துரைகளுக்குப் போகவேண்டுமோ அந்தந்தத் துறையில் சென்றால்தான் கார்யம் சித்தியாகும். மற்ற துறைகளுக்கு ஏன் போகவேண்டும்?

இந்த வேதங்களும் அந்தத் தடாகம் போன்றனவே யென்று அறியக்கடவாய். தடாகத்தில் எத்தனைவித வஸ்துக்கள் கலந்திருக்கின்றனவோ, அதுபோல், வேதத்திலும் ஸத்வ, ரஜ தமோ குணங்களென்னும் மூன்று குணங்கள் சேர்ந்தே யிருக்கின்றன, ஐஹிகங்களாகிய தாரா, புத்திர, பௌத்திர, தன, தான்யாதி சம்பத்துக்களைக் கோரப்பட்டவர்களுக்கு, அவைகளை அனுபவிக்கத்தக்க புத்திர காமேஷ்டி முதலாகிய யஞ்ஞங்களும், பிதுர் தர்ப்பணாதிகளைச் செய்யப்பட்டவர்க்குத் தக்க மந்திரங்களும், விவாஹாதி சுபகார்யங்களைச் செய்யப்பட்டவர்களுக்குத் தக்கயந்திரங்களும், பூத பேதாள பிசாசாதிகளை உபாசிக்கப்பட்டவர்களுக்குத்தக்க மந்திரங்களும் சக்திபூஜை செய்யப்பட்டவர்களுக்குத் தக்க மந்திரங்களும், இன்னும் இப்படிப்பட்ட அநேக விதங்களாகிய மந்திர தந்திரங்களும், கேவல நிர்க்குண பரப்பிரம்மத்தை உபாசிக்கப்பட்டவர்களுக்குத்தக்க தத்துவ போதனையும், இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் அந்த வேதத்தில் சேர்ந்திருக்கின்றன. இதில், எவரெவர்களுக்கு எது இஷ்டமோ, அவரவர்கள் அந்தந்த விஷயங்களுக்குத் தக்க யந்திரங்களை கிரஹித்து தம்தம் இஷ்டசித்தியை நிறைவேற்றிக் கொள்வார்கள். ஆனால், வேதங்கள் ஜனன மரணாதி சம்சார காரணமாகிய காம்ய கர்மங்களை அனுசரித்துச் சொல்லுகின்றனவேயன்றி அதுவே சிரேஷ்டமானதென்றும், எல்லாரும் அதையே அனுஷ்டிக்க வேண்டுமென்றும் ஊன்றிச் சொல்லவில்லை. நிஷ்காம்மிய கர்ம சித்தியை அடையத்தக்க தத்துவ போதனையைக் குறித்து மாத்திரம் ஊன்றிச் சொல்லுகின்றது. இவ்விரண்டையும் அனுஷ்டிக்க பிரயத்தினப்பட்டால் அதனால் மனதிற்கு பிரமையை உண்டாக்குமேயன்றி தத்துவ ஞானோதயம் உண்டாகமாட்டாது. ஒரு

வேளை அந்த வேதத்திலுள்ள கர்மகாண்டத்தில் அநேக நல்ல கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவே யென்று கேட்கின்றாயா? அப்படிப்பட்ட நல்ல கர்மங்களினால் அழியத்தக்க சொர்க்காதி போகங்கள் லபிக்குமேயன்றி சாஸ்வதமான மோக்ஷ சாம்பிராஜ்ஜியபதவி உண்டாகமாட்டாது. ஆதலால், வேதாந்த விசாரணையினால் அழியத்தக்க போகங்களும் சாஸ்வதமாகிய மோக்ஷபதவியும் தெரிந்துகொள்ளத் தக்கதாயிருக்கின்றன. இவ்விரண்டில் முதற்சொல்லிய அழியத்தக்க போகங்களை விட்டு, சாஸ்விதமாகிய மோக்ஷபதவியை ஆசிரயிக்கவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். விஸ்தாரமாய் மகாத்மாக்களுக்கே அர்த்தமாகக் கூடியதாயும், உத்தமசுகம் அடைவிக்க முக்கிய சாதனத்தை வெளிப்படுத்துவதாயும் இருக்கிற வேதாந்தமாகிய உபநிஷத்துக்களின் அர்த்தங்களைப் பூர்ணமாய் அறிந்துகொள்ளும் சக்தி நமக்கு இல்லையே என்றாலோ, இக்கொடுமையான கலியுகத்தில் நாம் இப்படிப்பட்ட நிலைமைக்கு வருவோமென்பதை உத்தேசித்தே சாக்ஷாத் மஹாவிஷ்ணுவானவர் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் செய்திருந்தகாலத்தில் அர்ஜுநனை வியாஜ்ஜியமாகக்கொண்டு சகலரும் கடைத்தேறச் சுலபமாயிருக்கும் பொருட்டு வேதாந்த அர்த்தங்களின் சாரமாகிய கீதாசாஸ்த்திரத்தை உபதேசித்திருக்கின்றார்.

மஹாவிஷ்ணுவானவர் கிருஷ்ணாவதாரம் செய்து, அர்ஜுநனை வியாஜ்ஜியமாகக்கொண்டு உபதேசித்திருக்கின்றார் என்னும் விஷயம், சாதாரணமாய்ப் பலருக்கும் தெரிந்திருந்தாலும் தெரியாதவர்களின் பொருட்டு அவ்விஷயத்தை இவ்விடத்தில் சுருக்கி அத்தியாயம் 4-சுலோகம் 7-8-ல், சொல்லுகின்றோம் கேளுங்கள்.

யதா யதா ஹி தர்மஸ்ய க்ளாநிர் பவதி பாரத !
அப்யுத்தாந மதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்.

பரித்ராணய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

என்கிறபகவத்கீதா வாக்கியத்தின்படி எந்தக் காலத்தில் வேதோக்த்தம தர்மங்கள் க்ஷீணித்து அதர்மம் விருத்தியடைகின்றதோ அப்போதெல்லாம் என்னை நானே சிருஷ்டித்துக்கொண்டு, நானும் ஓர் மனுஷ்யனுக பிரதியுகங்களிலும் அவதரித்து அதர்மத்தை விருத்தி செய்துகொண்டிருக்கும் துஷ்டர்களை நசிக்கச்செய்வதற்கும், தர்மங்களைச் சரியாய்ப் பரிபாலனம் செய்துகொண்டிருக்கும் சத்புருஷர்களுக்கு, துஷ்டஜனங்களால் கெடுதியுண்டாகாமல் இருப்பதற்காக ரக்ஷிக்கும்பொருட்டும், தர்மாசார பத்ததிகளை ஜனங்களுக்குக் காண்பித்து அவர்களை ஆசிரயிக்கச் செய்து அதன் மூலமாய் க்ஷீணித்த தர்மங்களைப் புனருத்தானம் செய்வதற்கும், யாதவ வம்சத்தில் பிறந்தவர்களும் மஹா பக்தர்களுமான வசுதேவர் தேவகீ இவர்களுடைய இஷ்ட பூர்த்திக்காகவும் மஹா விஷ்ணுவானவர் அவர்களுக்குப் புத்திரனுக அவதாரம் செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ஆனல், ஈசுவரனுகிய என்னல் சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்த ஜனங்களையும் சமமாய்ப் பரிபாலனம் செய்யாமல் சத்புருஷர்களை மாத்திரம் ரக்ஷிப்பதும், துஷ்டர்களை நசிக்கச்செய்வதும் உனக்குத்தகுமா என்று கேட்கின்றயோ என்ன அதற்குக் காரணம் சொல்லுகின்றேன் கேள்.

சுலோ || "*லாலநே தாடநே மாதுர்ந வைஷம்யம் யதார்பகே*
தத்வதேவ மஹேஸஸ்ய நியந்துர்க்குண தோஷயோ:"

தாய் தான் சொன்னபடி கேட்கப்பட்ட குமாரனிடத்து

சந்தோஷிப்பாள். தன் வார்த்தையைக்கேளாத குமாரனை அடிப்பாளன்றோ? அப்படி அடிப்பதனால் சொன்னபடி கேட்டு அவனும் நல்லொழுக்கத்திற்கு வருவானென்கிற எண்ணத்தினால் அவனை அடிக்கின்றாளேயொழிய விரோதத்தினாலல்ல. அதுபோல், சர்வ சமரசமாயும், சர்வபரிபாலனனாயும், ஸர்வேஸ்வரனாயும் இருக்கப்பட்ட பகவானால் ஏற்படுத்திய வேதங்களில் சொல்லப்பட்டது போல் நடந்துகொள்ளும் சத்புருஷர்களை ரக்ஷிக்கின்றேன். அப்படி நடவாத துஷ்டர்கள் மேன்மையை அடைவதற்காக அநுக்கிரஹத்துடன் புத்திவரும்படியாய்த் தக்கபடி அவர்களைச் சிக்ஷிக்கின்றேனே யொழிய அவர்களிடத்தில் துவேஷத்தினாலாகிலும், பக்ஷபாதத்தினாலாகிலும் செய்கின்றேனென்று எண்ணவேண்டாம், என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அக்காலத்தில், அஸ்தினாபுரத்தை ஆண்டுவந்த சந்திரவம்சத்து அரசர்களின் சந்ததியில், திருதராஷ்ட்டிரனென்றும், பாண்டு வென்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். திருதராஷ்ட்டிரன் பிறவிக்குருடன். அவன் பட்டத்திற்கு அருஹன் ஆகாவிடினும், தம்பியான பாண்டு, தமையனிடத்தில் உள்ள பக்ஷத்தினால் தமையனை ராஜாவாக்கித் தான் இளவரசனானான். திருதராஷ்ட்டிரனுக்குத் துர்யோதனாதி நூறுகுமாரர்களும், பாண்டுவுக்குத்தர்மபுத்திரன், பீமசேனன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் என ஐந்து குமாரர்களும், இருந்தார்கள். பாண்டு குமாரர்களான ஐவர்களும் வித்தையிலும், வல்லமையிலும், பெருந் தன்மையிலும், புத்தியிலும், சகலவித நற்குணங்களிலும் துர்யோதனாதிகளைவிட சிரேஷ்டர்களாயும், சகலராலும் புகழத்தக்கவர்களாயும் இருந்ததனால், தன் தகப்பனுக்குப் பிறகு ராஜ்ஜியம் தனக்குக் கிடைக்

காமற் போய்விடும் என்கிற பயத்தினால், துர்யோதனன் இவர்களைத் தந்திரமாய் விரோதித்துக் கொன்றுவிடுவதற்காக எண்ணங்கொண்டான். தன் குமாரன் பாண்டவர்களை விரோதிக்கின்றான் என்கிற விஷயம் திருதராஷ்ட்டிரன் அறிந்து பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்ஜியம் கொடுத்து, இந்திர பிரஸ்தம் என்கிற பட்டணத்தில் அவர்களை வசிக்கச் செய்தான். துர்யோதனன் அத்துடன் திருப்தி யடையாமல் பாண்டவர்களைக் கொன்றுவிடுவதற்காகவே பலவித முயற்சிகளைச் செய்தும், பயன்படாததனால் அவர்களை அடுத்து சிநேகம் பாராட்டிக் கடைசியில் மோசவடியாய் தர்ம புத்திரரைச் சூதாட்டத்திற்கு உட்படுத்தித் தனக்கும், தர்மபுத்திரருக்கும் அம்மானான சகுனி என்பவனைக் கொண்டு மாயச் சூதாடுவித்துப் பாண்டவர்களுடைய சகல சொத்துக்களையும் அபகரித்துக்கொண்டதுமே யல்லாமல், பாண்டவர்களையும், அவர்களுடைய பத்தினி பதிவ்ரிதா சிரோன்மணியுமாகிய த்ரௌபதியையும், துர்யோதனன் சபையில் மானபங்கம்செய்வித்தான். பிறகு பீஷ்மாசாரியர் முதலான பெரியோர்களுடைய வேண்டுகோளின்மேல் பாண்டவர்கள் பன்னிரெண்டு வருஷங்கள் காட்டில் சஞ்சரித்துப் பதின்மூன்றாவது வருஷம் தனக்குத் தென்படாத இடத்தில் நிவாசம்செய்து, வந்தால் பாதிராஜ்ஜியம் கொடுப்பதாகத் துர்யோதனன் உடன்பட்டான்.

பாண்டவர்கள் ஐவரும் மஹா பலசாலிகளாய் இருந்த போதிலும் தர்மமென்கிற கயிற்றால் கட்டுப்பட்டவர்களாதலால், அப்படியே காட்டுக்குச் சென்று நிபந்தனைத் தப்பாமல் பதின்மூன்று வருஷங்கள், காடு மலை முதலிய இடங்களில் சஞ்சரித்துப் பிறகு, பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படி துர்யோதனனுக்குத் தூதனுப்பினார்கள். அதற்கு, அவன் சம்மதிக்கவில்லை. அதன்பிறகு, தங்களுக்கு

அம்மான்பிள்ளையும் தங்களிடத்தில் அதிக வாத்சல்ய முடையவருமான ஸ்ரீ கிருஷ்ணபகவானை பிரார்த்தித்து அவர் மூலமாக துர்யோதனனைப் பாதிராஜ்ஜியம் கொடுக்கும்படிக் கேட்டனுப்பினார்கள். துர்யோதனன் ஊசிநாட்டும் இடமுள்ள பூமியும் கொடுக்கச் சம்மதமில்லை என்றான். அதன் பிறகு, இருதறத்தாரும் யுத்தம் செய்ய வேண்டியதாய் நேர்ந்தது. இந்த யுத்தத்திற்குப் பாரத யுத்தம் என்று பெயர். இருதறத்துச் சேனைகளும் யுத்தகளத்தில் நிற்கும் போது, யுத்தத்தொடக்கத்தில் அச்சேனைகளை அர்ஜுனன் பார்த்துப் பெரும்பாலும் தன் பந்துக்களும், சிநேகிதர்களும், ஆசாரியர்களுமாய் இருக்கக்கண்டு பரிதாபமடைந்து தனக்குச் சாரதியாய் எழுந்தருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி, "நான் இந்தச் சேனைகளைக் கொல்லத் துணியேன்; எவ்விடத்தை நோக்கினாலும் பந்து, மித்திர, ஆசாரியர்களாகவே இருக்கின்றார்கள். அவர்களைக் கொன்றால் நான் நரகமடைவேன், எனக்கு ராஜ்ஜியமே வேண்டாம். காட்டுக்கே மறுபடியும் செல்வேன்" என்றான். அந்த வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவானனவர் அர்ஜுனனை வியாஜ்ஜிமாகக் கொண்டு, சகலமான பேர்களும் கடைத்தேறும் பொருட்டும், தம்தம் வர்ணாசிரம தர்மத்தை விட்டவர்கள் நரகமடைவார்கள் என்பதையும், ஆத்மா அநாத்ம விவேகத்தையும், உத்தமசுகத்தையும் அடைய வேண்டியதற்காகவும், ஞான கர்ம மார்க்கங்களை உபதேசித்தார். ஆகையால், இந்த கிரந்தமானது, பகவானான ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியால் உபதேசிக்கப்பட்டபடியால், இதற்கு பகவத் கீதை யென்றும், வேதாந்த அர்த்தங்களைத் திரட்டிச் சொல்லியிருப்பதனால் உபநிஷத்தென்றும், பரப் பிரம்மத்தைத் தெரிவிக்கின்ற வித்தையா யிருப்பதனால் பிரம்ம வித்யை யென்றும், ஆத்மா அநாத்ம விவேகத்தை விளக்கு

கிற சாங்கிய யோகமும், கர்மயோகமும் சொல்லப்பட்டிருப்பதனால் யோக சாஸ்த்திரமென்றும், ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த உத்தர பிரதியுத்தரங்களாயிருப்பதனால் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமென்றும் சொல்லப்படுகின்றது.

இந்த கீதாசாஸ்திரத்தின் சாராம்சம் என்னவென்றால், காணப்படும் பிரபஞ்சம் நசிக்கத்தக்க வஸ்து. ஆத்மா ஒன்றே சத்பதார்த்தம் (சாஸ்வதமாயிருக்கப்பட்டது) என்பதாம். இந்த ஆத்மா, ஜீவாத்மா வென்றும், பரமாத்மா வென்றும் இரண்டுவிதமா யிருக்கின்றது.

அதில், ஜீவாத்மா என்பது அஞ்ஞானத்துடன் கூடி பிரபஞ்சத்திலுள்ள சமஸ்த ஜந்துக்களிலும் வியாபித்திருக்கும் சைதந்யம். இதற்கே ஜீவனென்றும், உயிரென்றும், பிராணனென்றும் அநேக பெயர்கள் உண்டு.

பரமாத்மா என்றால், மாயையில்லாத சுத்த ஞானநந்த சொரூபம்: பிரபஞ்சோத்பத்தி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணபூதமா யிருந்தபோதிலும் இந்த பிரபஞ்சத்திற்கு விலக்ஷணமாயிருக்கப்பட்டதே சைதந்யம். இதுவே, பரப்பிரம்மமென்றும், த்ரிமூர்த்தியாத்மகமென்றும் அதாவது, சிருஷ்ட்டியாதி விருத்திபேதங்களினால் பிரமன், விஷ்ணு, மகேஸ்வர சொரூபமென்றும் சொல்லப்படுகின்றது.

ஜீவாத்மாவைக் காணவொட்டாமல் மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞானமென்னும் மாயை, எப்பொழுது ஒழிந்துவிடுகின்றதோ, அப்பொழுதே அது சுத்த ஞானநந்த சொரூபமாய் பரமாத்மாவில் கலக்கும். அதாவது, ஜீவாத்மா பரமாத்ம சொருபத்தை அடைந்து ஜனன மரணாதிகள் இல்லாமல் இருக்கும். ஜீவாத்மாவிலிருக்கும் அஞ்ஞானம் ஒழியாவிடில் ஜனனமரணங்கள் சம்பவித்துக்

கொண்டே யிருக்கும். இது விஷயம் முன் அத்யாயங் களில் விவரமாய்க் காணலாம்.

பரமாத்மாவினுடைய தத்துவம் இப்படிப்பட்ட தென்று நிச்சயமாய் அறிவது எதுவோ அந்த அறிவே ஞானமென்று சொல்லப்படும். இந்த ஞான மடைந்தவன் எந்ததேச, எந்தமதஸ்தனயிருந்தாலும் அவனேமோக்ஷத் திற்கு அதிகாரியாவான். அவனிடத்திலுள்ள ஜீவாத்மா வைப் பற்றியிருக்கும் அஞ்ஞானயானது நசித்துப் பரமாத் மாவிற் கலப்பதற்கு அதிகாரியா யிருக்கின்றான். இந்த ஞானசித்தியை யடைய விரும்பு மவனே முமூக்ஷு வெனப்படுவான்.

வேதவியாச மஹாருஷியானவர் மஹாபாரதமென்கிற கிரந்தம் செய்தபோது இந்த கீதையை மஹாபாரதத்துடன் சேர்த்தார். அப்படிச் சேர்ந்தே ஐயாயிர வருஷங்களுக்கு அதிகமாயிருக்கவேண்டும். அதற்குப்பின் இந்த சாஸ்தி ரார்தத்தைச் சரியாய்த் தெரிந்துகொள்ளும் சக்தி ஜனங்க ளிடத்தில் குறைந்துபோனபடியால், இரண்டாயிரம் வரு ஷங்களுக்குமுன் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் இந்த கீதார்த் தத்தை விவரித்துக்காட்டி அத்வைதமத சித்தாந்தத்திற் கிணங்கவும், அதன்பின் ஸ்ரீ ராமாநுஜாசாரிய சுவாமிகள் விசிஷ்டாத்வைதமத சித்தாந்தத்திற் கிணங்கவும், அதற்குப் பின் ஸ்ரீ மத்துவாசாரிய சுவாமிகள் துவைதமத சித்தாந் தத்திற் கிணங்கவும் பாஷ்யங்களைச் செய்தார்கள்.

இந்த கீதாசாஸ்திரமானது, அநேக வருஷங்களாய் வந்து கொண்டிருந்தபோதிலும் பிராம்மணர்கள் மாத்திரம் இதனைப் பாராயணம் செய்துகொண்டும், மற்றவர்கள் பார்ப்பதற்கு யோக்கியதையுடையவர்க ளல்லவென்றும் மறைக்கப்பட்டிருந்தபடியால் இதுகாலம்வரையில் இந்த கீதை வெளியாகாமலிருந்ததுபோல் தோன்றுகின்றது.

இப்படி கோப்பியமாய் வைத்துக்கொண்டு பிராம்மணர்களிலும் வித்தியா விவேக சம்பன்னர்களாகிய சிலர் மாத்திரமே இந்த சிரேஷ்டமான கிரந்தத்தைப் பாராயணம் செய்துகொண்டு வந்தார்கள். மற்றவர்களுக்கு இந்த கிரந்தம் இருப்பதே தெரியாமலிருக்கலாமென்று எண்ண வேண்டியதாயிருக்கின்றது. அதன் பிறகு தயாளத்துவமுடைய பிராம்மணர்களில் சிலர், எல்லா வர்ணஸ்தர்களும் இதனைப் பாராயணஞ் செய்யத் தக்கவர்களே என்றெண்ணி, இந்த கீதா சாஸ்த்திரத்தை உரையுடன் அச்சிட்டு வெளியாக்கினார்கள். அதனால், இந்த சாஸ்த்திரத்தை பிராம்மணர்களேயல்லாமல் இதர வர்ணஸ்தர்களும் வாசிப்பதற்கும், அதிலுள்ள ஸாராம்சத்தைப் பூர்த்தியாய் கிரஹிக்காவிடினும் சிறிதேனும் கிரஹிப்பதற்கு அவகாசம் ஏற்பட்டது. முப்பது வருஷங்களுக்கு முன் இந்த கீதா சாஸ்த்திரம், சென்னையில் அநேகர்களுக்குத் தெரியாமலிருந்தது. பிறகு,

1892ஹ த்தில் சென்னை கோவிந்தப்ப நாய்க்கர் ஸ்கூலில் ஸ்ரீமாந்-பண்டித-லக்ஷ்மணாசாரியார் இதன் ஸாராம்சத்தை எல்லோருக்கும் தெரியும்படித் தெளிவாய் உபந்நியாசரூபமாய்ப் போதித்தார். அன்றுமுதல் 1919ஹ வரையில் அவர் உபந்நியாசம் செய்துகொண்டு வந்ததனால் கீதா சாஸ்த்திரம் இதுவரையில் அறியாதவர்கள் இப்பொழுது அதன் ருசியறிந்து இன்னும் அபிவிருத்தியாவதற்கு அநேகர்கள் சேர்ந்து விருத்தியாகியே வருகின்றது. இவர் 1920ஹ பரமபத பதவியை அடைந்தார். இதுவரையில் ரஹஸ்யமாய் வைக்கப்பட்டிருந்த இந்த சிரேஷ்டமான கிரந்தத்தை பண்டித லக்ஷ்மணாசாரியாரால் வெளியாக்கப்பட்டது எப்படியிருக்கின்றதென்றால், பூர்வம் அதி கோப்பியமாய் வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று

குருவினால் உபதேசிக்கப்பட்ட திருமந்திரார்த்தத்தைச் சகல ஜனங்களும் கிரகித்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்னும் எண்ணத்தினால் ஆசார்யரது வார்த்தையை மீறிக் கோபுரத்தின் மீதேறி வெளியாக்கிய ஆதிசேஷாம்சமாகிய ஸ்ரீ ராமானுஜாசாரிய (உடையவ) ருடைய உத்தேசம்போன்றதாயிருக்கின்றது.

ஷை ஸ்ரீமான் - பண்டித - லக்ஷ்மணசாரியர் முதலானவர்களின் உபந்நியாசங்கள் சென்னை நிவாசர்களுக்கேயன்றி இதரர்களுக்குத் தெரியாததனால், கிஞ்சிக்ஞனை அடியேனால் உபநிஷத் வாக்கியங்களால் எழுதப்பட்ட "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்ய" மென்னும் நூலிற்கு இந்த கீதை உபமானமாய், முதல் ஆறு அத்தியாம் வரையில் விசேஷமாய் விஷயாம்சங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த கீதையிலும் ஆங்காங்கு உபநிஷத்வாக்கியங்கள் உதகரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படிக்கு
அடியார்க்குமடியேன்,

பரமஹம்ஸ ஸச்சிதானந்தேந்திரர்

கடிகோட்டை, கடப்பை ஜில்லா.

உ

சற்குரு பாதந்துணை.

சிறப்புப் பாயிரம்.

இஃது

ஸ்ரீ சண்முகானந்தர் மரபில்வந்த

சதானந்த ஸரஸ்வதி

இயற்றியது.

நிலைமண்டில வாசிரியப்பா.

மணிவளங் கொழிக்கும் வளைகட லிடையே
அணிதரு மாடையி லணைதரு நிலமகள்
இலகு மதிமுகத் திலக நிகரெனு அத்
தலைமை சான்றோர் தலைமிசை நிலவும்
ஒரு பெருந்தல மோதரு பொற்றலம்
தருவளர் வானவர் தங்கு தவத்தலம்
வானம் வழங்கும் வளமிகு மித்தலம்
தானந் தவமுந் தளரா வளர்தரும்
ஆயிடை மாந்த ரருந்ததி மானுவர்
சேயிதழ்க் கமலத் திருவி னனையவர்
பூவலர் பொதுளிய பொங்கர் பொதும்பரும்
காவலர் சீதக் கடிமணங் கமழும்
நண்ணி வாழ்குநர் நாளு நயப்புற
வெண்ணிய வெணியாங் கெய்து மித்தலம்
ஒருப்படு முள்ளத் தோங்கு மொருதலம்
திருப்பனங் காடெனுந் தேவர் வாழ்தலம்
சுந்தரன் சோம சுந்தரன் தூய்பதச்
சுந்தரன் சேயெனத் தோன்றிய சுந்தரன்
செய்தவஞ் செழீஇய தென்னு மோர்வடி

வெய்த வாய விருநிலத் தொருவன்
அவத்திற மனுகா வண்ணிலாத்
தவத்திறம் வாய்ந்த சாந்த சுசீலன்
ஏக அம்பர னிணையடி பரவும்
யோக சாதனத் துய்வகை யோர்ந்தனன்
பற்றறு பற்றினை பற்றிய பற்றினன்
வெற்ற வெளியில் விளங்கு மரபினன்
நித்தியா னந்த நிமல னருள்வழி
சித்த முவப்பத் திருந்திய சீர்த்தியன்
ஆரியன் மொழிந்த வருண்முறை தேர்ந்த
சீரியன் சீரிய செல்வரிற் செல்வன்
மாதவன் பாதம் வழுத்துபு வணங்கும்
ஏதமில் குணத்தவ னெவர்க்கு மினியவன்
பொன்னடி போற்றிப் பொருந்துமி யோகத்
தன்னடி யார்க்குத் தகுவகைத் தாக
ஜீவ ப்ரமைக்ய வேதாந்த ரஹஸ்யம்
பூவி லெவர்க்கும் பொருந்த வுரைத்தனன்
தாவி லரும் பொரு டாமரி தரிதெனு
யாவரும் புகழ்வ தாகு மதன்பொருள்
துன்பந் தணியாத் துயர்தரும் பிறவிக்
கின்பம் பயக்கு மின்சுவை மணக்கும்
பிறத்தல் வளர்தல் பேணுதல் பிணிபல
திறத்த வாமெனத் தேர்ந்தவர் சிலரே
மயக்குறு மகில மாந்தர்தம் பாசக்
கயப்படு வலையின் கண்படப் புண்படும்
என்ன வெளிதி லெவர்க்கு மியைபுறப்

பின்னும் பெருந்தகை பேசினன் கீதையின்
சீருஞ் சிறப்புந் தேம்படு திப்பிய
சாரந் திரட்டித் தந்தன னதற்கே
அத்தகை நூலுக் காங்காங் கொருங்கே
வித்தக மறைப்பொருள் விளக்கி வைத்தனன்
எம்மறைப் பொருளையு மிசைத்தன னேற்கும்
அம்மறை நான்முடி வாகு மதன் பொருள்
பெருமறை தெரிதரப் பேசுவ தெளிதோ
ஒருமுறை யிந்நூ லுள்ளத் துணர்வரேல்
அருமறை முடிவி னும்பொரு ளார்ந்த
திருமறை யேயெனச் செப்புவர் தேர்வுளர்
அருவ னுருவன் அருவு முருவிலன்
ஒருதனிப் பரஞ்சுட ரோதருஞ் ஜோதியன்
வேத வேதியன் வித்தகன் விமலன்
ஆதி முதல்வன் ஹரி நாராயணன்
தாயினு மன்பன் தயாள குணக்கடல்
தூய வனைத்தினுந் தூய மாயவன்
புண்ணிய புருஷன் புருஷோத் தமனுங்
கண்ணன் வந்தனன் காசினி யுலகம்
வேத சார மிகுவுப நிடதப்
போத சாரம் புகட்டினன் புனிதன்
உலகில் வாழுநர்க் குயர்நலங் கருதி
அலகில் சீர்க் கீதை யருமறை யமிர்தம்
அருந்தவக் குருநிலத் தருச்சுன னுக்கே
வருந்து தன்னவன் மாண்புற வகுத்தனன்
எந்தை யெம்பிரா னிசைந்த வரும்பொருள்
நந்தா விளக்கென நானிலம் போற்றும்
அந்த முகுந்த னருளிய வாங்கே

வந்த ஞானம் வகையுளந் தெளிய
எண்ணிலடியா ரியற்றுபு தருகென அப்
பண்ணியல் பொருந்தப் பகர்ந்தன னல்லுரை
தன்னை யன்னதே யாகத் தருவதாச்
சொன்ன விரகசியந் தோன்ற வியற்றினன்
அன்னவன் றன்னை யறைகுதுங் கேண்மின்
பொன்னில மாமெனப் பொருந்து போதனர்
பழுத்த மனத்தர் வழுத்துபு வணங்கும்
விழுத்தல மென்ன வேதகு மொருதலம்
மறச்செய லறியா மாந்தர் வாழ்தலம்
அறச்செய லெங்கு மமர்ந்த வருந்தலம்
கற்றவர் நற்றவர் காட்சிக் கொருதலம்
பொற்றொடி மடவார் பொருந்து பூந்தலம்
பணில நித்திலம் பாண்செயும் பண்ணையும்
அணியு மாவின மருங்கனிக் காவினம்
ஆதுலர்க் கன்ன மளிக்குஞ் சாலையும்
தாதகு பூமலர்த் தண்ணாஞ் சோலையும்
அன்னங் கண்படு மம்புயப் பங்கயம்
பொன்னம் பூவையர் பொங்க வருங்கயம்
சுரும்பு மிதிப்ப வரும்பவிழ் வகைபே
வருங்குரு நறவ மாந்தி மகிழ்ந்திடும்
மாங்குயின் மிழற்றும் வளநகர் மாண்புற
ஆங்கொரு மடத்தை யணிபெற வமைத்தனன்
எல்லா வளமு மிசைபடப் பொருந்தும்
நல்லார் வாழ்த்து நலந்தருங் கடப்பை
உச்சித யோகத் துயர் பரமாம்ஸ
ஸச்சிதா நந்தத் தபோநிதி தானே.

ஸ்ரீ கிருஷ்ண பர பிரஹ்மணே நம:.

ஸ்ரீ பகவத்கீதை.

குருத்யாந ஸ்தோத்ர சுலோகா:.

ஸ்லோ॥ வந்தே குரூணாம் சரணாரவிந்தே
ஸந்தர்ஸித ஸ்வாத்ம ஸுகாவபோதே
ஜநஸ்ய யே ஜாங்கலி காயமாநே
ஸம்ஸார ஹாலாஹல மோஹ ஸாந்த்யை.

வந்தே குருபதத்வந்த்வ மவாங்மாநஸ கோசரம்
ரக்த ஸுக்ல ப்ரபாமிஸ்ர மதர்க்யம் த்ரைபுரம் மஹ:.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்;

அஸ்மத்குரு ஸமாரம்பாம் நாதயமுந மத்யமாம்
லக்ஷ்மீவல்லப பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

இத்யாதி தத்தத்ஸம் ப்ரதாயாநுகுணம் குருபரம்பராநு
ஸந்தாநாந்தர மநுஸந்தேயா:.

ஸுக்லாம்பரதரம் விஷ்ணும் ஸஸிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸந்ந வதநம் த்யாயே ஸர்வவிக்நோப ஸாந்தயே.

யஸ்ய த்விரத வக்த்ராத்யா: பாரிஷத்யா: பரஸ்ஸதம்
விக்நம் நிக்நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் த மாஸ்ரயே.

ஸம்யஜ்ஞாய சலாபேந மஹதா பாரதேந ச
உபப்ரும்ஹித வேதாய நமோ வ்யாஸாய விஷ்ணவே.

வ்யாஸம் வஸிஷ்டநப்தாரம் ஸக்தே: பௌத்ர மகல்மஷம்
பராஸராத்மஜம் வந்தே ஸுகதாதம் தபோநிதம்.

வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாசரூபாய விஷ்ணவே
நமோ வை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய நமோ நம:

முநிம் ஸ்நிக்தாம் புதாபாஸம் வேதவ்யாஸ மகல்மஷம்
வேதவ்யாஸம் ஸரஸ்வத்யாவாஸம் வ்யாஸம் நமாம்யஹம்.

அசதுர்வதநோ ப்ரஹ்மா த்விபாஹுரபரோ ஹரி:
அபாலலோசந: ஸம்புர் பகவாந் பாதராயண:

க்ருஷ்ணம் கமலபத்ராக்ஷம் புண்ய ஸ்ரவணகீர்த்தநம்
வாஸுதேவம் ஜகத்யோநிம் நௌமி நாராயணம் ஹரிம்.

க்ருஷ்ணாய யாதவேந்த்ராய ஜ்ஞாநமுத்ராய யோகிநே
நாதாய ருக்மிணீஸாய நமோ வேதாந்தவேதிநே

ப்ரபந்ந பாரிஜாதாய வேத்ரதோத்ரைகபாணயே
ஜ்ஞாநமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருததுஹே நம:.

ஸாரத்ய மர்ஜுநஸ்யாஜௌ குர்வந் கீதாம்ருதம் ததௌ
லோகத்ரயோபகாராய தஸ்மை க்ருஷ்ணாத்மநே நம:

ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபால நந்தந:
பார்த்தோ வத்ஸ ஸ்ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்.

மலநிர்மோசநம் பும்ஸாம் ஜலஸ்நாநம் திநே திநே
ஸக்ருத் கீதாம்பஸி ஸ்நாநம் ஸம்ஸார மலமோசநம்.

ஸர்வஸாஸ்த்ரமயீ கீதா ஸர்வதேவமயோ ஹரி:
ஸர்வதீர்த்தமயீ கங்கா ஸர்வதர்மமயோ மநு:.

ஏகம் ஸாஸ்த்ரம் தேவகீபுத்ரகீத
மேகோ தேவோ தேவகீபுத்ர ஏவ
ஏகோமந்த்ரோ தேவகீபுத்ர நாம கர்மாப்
யேகம் தேவகீபுத்ர ஸேவா.

ஸ்தோத்ர சுலோகங்கள்.

ஓம் ஜ்ஞாநாத்மநே ஸ்ரீ க்ருஷ்ணாய அங்குஷ்டாப்யாம் நம:.
ஓம் ஐஸ்வர்யாத்மநே கோவிந்தாய தர்ஜநீப்யாம் ஸ்வாஹா.

ஓம் ஜ்நாத்மநே ஸ்ரீ க்ருஷ்ணாய ஹ்ருதயாய நம:.
ஓம் தைஜஸாத்மநே வாசுதேவாய கநிஷ்டிகாப்யாம் வஷட்.

ஓம் ஸக்த்யாத்மநே வேதவ்யாஸாய மத்யமாப்யாம் வஷட்.
ஓம் பலாத்மநே பலப்த்ராய அநாமிகாப்யாம் ஹூம்.

ஓம் தைஜஸாத்மநே வாசுதேவாய நேத்ரத்ரயாய வஷட்.
ஓம் ஐஸ்வர்யாத்மநே கோவிந்தாய ஸிரஸே ஸ்வாஹா.

ஓம் வீர்யாத்மநே காண்டவதந்வநே அர்ஜுநாய
கரதலகரப்ருஷ்டாப்யாம் பட்.

ஓம் பலாத்மநே பலபத்ராய கவசாய ஹூம்,
ஓம் வீர்யாத்மநே காண்டவ தந்வநே அர்ஜுநாய.
பூர்புவ ஸ்வரோம் இதி திக்பந்த:. [அஸ்த்ராயபட்

ஸ்ரீ பகவத் கீதா மஹாத்ம்ய ப்ராரம்ப:

இந்த கீதா மஹாத்மியத்தை ஸ்ரீ மஹாவிஷ்ணுவான வர் பூமிதேவிக்கு உபதேசித்ததாக ஸ்ரீ வராஹபுராணத்தில் சொல்லப்பட்டிருப்பதை இதனடியில் எழுதப்பட்டிருக்கும் சுலோகங்களினால் அறியலாம்:

தரோ உவாச

ஸ்லோ || பகவந் பரமேஸாந பக்தி ரவ்யபிசாரிணீ
ப்ராரப்தம் புஜ்யமாநஸ்ய கதம் பவதி ஹேப்ரபோ.

பூமிதேவி கேட்கிறாள் :—ஹே ப்ரபு! பிராரப்தகர்மம் அநுபவித்துக்கொண் டிருக்கப்பட்டவனுக்குச் சலனமில்லாத பக்தி எவ்விதமாய் உண்டாகும்? இதை "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல் சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்கள் என்பதை பார்க்க.

விஷ்ணு உவாச.

ப்ராரப்தம் புஜ்யமாநோபி கீதாப்யாஸரத ஸ்ஸதா
ஸ முக்த ஸ்ஸ ஸுகீலோகே கர்மணா நோபலிப்யதே.

விஷ்ணுமூர்த்தி சொல்லுகின்றார்:—பிராரப்த கர்மங்களை அனுபவிக்கப்பட்டவன் பகவத்கீதையை பாராயணம் செய்துவந்தால் உலகத்தில் சுகியும் முக்தனும் ஆவான். இப்படிப்பட்டவன் கர்மங்களுக்கு, பந்தனாகமாட்டான்.

மஹா பாபாதி பாபாநி கீதாத்யாநம் கரோதிசேத்
க்வசித் ஸ்பர்ஸம் நகுர்வந்தி நளினீதள மம்பஸா.

பகவத்கீதையை த்யானம்செய்வதனால், தாமரையிலையின்மீது ஜலம் ஒட்டாமலிருப்பதுபோல் மஹாபாபங்கள் முதலாகிய பாபங்கள் ஒருபோதும் ஒட்டமாட்டா.

கீதாயா: புஸ்தகம் யத்ரயத்ர பாட: ப்ரவர்த்ததே
தத்ர ஸர்வாணி தீர்த்தானி ப்ரயாகாதீனி தத்ரவை.

ஸ்ரீ பகவத்கீதை எவ்வெவ்விடங்களில் பாராயணம் செய்யப்பட்டுவருகின்றதோ அவ்வவ்விடங்களில் அது, பிரயாகை முதலிய புண்ய தீர்த்தங்கள்போல் தப்பாமல் பாபத்தைப் போக்கும்.

ஸர்வே தேவாஸ்ச ருஷயோ யோகிந: பந்நகாஸ்ச யே
கோபால கோபிகாவாபி நாரதோத்தவ பார்ஷதை:
ஸஹாயோ ஜாயதே ஸீக்ரம் யத்ரகீதா ப்ரவர்த்ததே.

ஸ்ரீ பகவத்கீதை இருக்கும்படியான இடங்களில் தேவதைகள், ருஷிகள், யோகிகள், கோபாலர்கள், கோபிகைகள், நாரதர், உத்தவர், விஷ்ணு த்வாரபாலகர்கள் முதலானவர்கள் இருந்துகொண் டிருப்பார்கள்.

யத்ர கீதாவிசாரஸ்ச படநம் பாடநம் ஸ்ருதம்
தத்ராஹம் நிஸ்சிதம் ப்ருத்வி நிவஸாமி ஸதைவஹி.

ஓ ப்ருதிவியே (பூமி தேவியே) கேளாய்! பகவத்கீதையினுடைய அர்த்தங்களைக் கேட்குமிடத்திலும் வாசிக்குமிடத்திலும் விசாரிக்குமிடத்திலும் நான் எப்பொழுதும் இருப்பேன் என்பது நிஸ்சயம்.

கீதாஸ்ரயோஹம் திஷ்டாமி கீதா மேசோத்தமம் க்ருஹம்
கீதாஜ்ஞாந முபாஸ்ரித்ய த்ரீம்லோகா ன்பாலயாம்யஹம்.

நான் கீதையை ஆசிரயித்திருப்பேன், கீதையே எனக்கு வீடு: கீதையில் சொல்லப்பட்ட ஞானத்தை அவலம்பித்தே நான் மூன்று லோகங்களையும் காப்பாற்றுகின்றேன்.

யோஷ்டாதஸ ஜபே நித்யம் நரோ நிஸ்சலமாநஸ:
ஜ்ஞாநஸித்திம் ஸ லபதே ததோ யாதி பரம் பதம்.

நிச்சலசித்தத்துடன் பிரதிதினம் பதினெட்டு அத்தியாயங்களையும் பாராயணம் செய்யப்பட்டவன் பிரம்மஞாநஸம்பந்நனுய், புனராவர்த்தி (மறுஜனனம்) யில்லாத ஸ்தாநத்தை அடைகின்றான்.

பாடே ஸமர்த்த ஸ்ஸம்பூர்ணே ததர்த்தம் பாடமாசரேத்
ததா கோதாநஜம் புண்யம் லபதே நாத்ர ஸம்ஸய꞉

கீதைமுழுதும் பாராயணம் செய்யச் சக்தியற்றவன் பாதி வாசிக்கலாம்; அப்படி வாசித்தாலோ கோதாநம் செய்த புண்ணியத்தைத் தப்பாமல் அடைவான்.

த்ரிபாகம் படமாநஸ்து கங்கா ஸ்நாநபலம் லபேத்
ஷடம்ஸம் ஜபமாநஸ்து ஸோமயாகபலம் லபேத்.

மூன்றில் ஒருபாகம் ($\frac{1}{3}$) வாசித்தவன் கங்காஸ்நாநபலனையும், ஆறில் ஒருபாகம ($\frac{1}{6}$) வாசித்தவன் சோமயாகபலத்தையும் அடைவான்.

ஏகாத்யாயந்து யோ நித்யம் படதே பக்தி ஸம்யுத꞉
ருத்ரலோக மவாப்நோதி கணோ பூத்வா வஸேச் சிரம்

நாள்தோறும் ஓர் அத்தியாயம் பக்தியுடன் வாசித்தவன் ருத்ரலோகம்சென்று அநேகதினங்கள் பிரதமகணங்களுடன் கூடியிருப்பான்.

அத்யாய ஸ்லோகபாதம்வா நித்யம் ய꞉ படதே நர꞉
ஸ்யாதி நரதாம் யாவ ந்மநுகாலம் வஸுந்தரே.

நித்தியம் அத்தியாயத்தில் நாலாவது ($\frac{1}{4}$) பாகம் பாராயணம் செய்பவன் கடைசிவரையில் நல்லமனுஷ்யனுய்ப் பிறப்பான்.

கீதாயா ஸ்லோக தஸகம் ஸப்த பஞ்ச சதுஷ்டயம்
த்வி த்ரி ஏகம் ததர்த்தம் வா ஸ்லோகாநாம் ய꞉ படேந்நர꞉.

சந்த்ரலோக மவாப்நோதி வர்ஷாணா மயுதம் த்ருவம்
கீதாபாட ஸமாயுக்தோ ம்ருதோ மானுஷதாம் வ்ரஜேத்.

பத்து சுலோகமேனும், ஏழு சுலோகமேனும், ஐந்து சுலோகமேனும், நான்கு சுலோகமேனும், மூன்று சுலோகமேனும் இரண்டு சுலோகமேனும், ஒரு சுலோகமேனும், பாதி சுலோகமேனும், நாள்தோறும் பாராயணம் செய்யப்பட்டவன் சந்திரலோகம்சென்று பதினாயிரவருஷம் இருப்பான். பாராயணம்செய்யும் தினங்களில் மரணமடைந்தவன் தேவதாசரீரத்தைஅடைவான்.

கீதாப்யாஸம் புந: க்ருத்வாலபதே முக்தி முத்தமாம்
கீதேத்யுச்சார ஸம்யுக்தோ ம்ரியமாணோ கதிம் லபேத்.

கீதாசாஸ்த்திரம் பாராயணம்செய்தவன் மோக்ஷத்தையடைவான். ஆயினுமேன் மரணகாலத்தில் கீதையை ஸ்மரிக்கபட்டவன் உத்தமகதியை அடைவனாதின்னம்.

கீதார்த்த ஸ்ரவணாஸக்தோ மஹாபாபயுதோபிவா
வைகுண்டம்ஸமவாப்நோதி விஷ்ணுநாஸஹ மோததே.

மஹாபாபத்மனாயிருந்தபோதிலும் கீதையினுடைய அர்த்தத்தைக்கேட்பதற்கு ஆசையுடையவன் வைகுண்டம் போய் விஷ்ணுவுடன் ஆனந்தித்திருப்பான்.

கீதார்த்தம்த்யாயதேநித்யம் க்ருத்வா கர்மாணிபூரிஸ:
ஜீவன்முக்தஸ்ஸ விக்ஞேயோ தேஹாந்தே பரமம்பதம்.

பிரதிதினம் நித்ய நைமித்யக கர்மங்களைச் செய்து, கீதையின் அர்த்தத்தை தியானிக்கப்பட்டவன், ஜீவன் முக்தி யவஸ்தையடைந்து மறுஜனனமில்லாத பதவியை அடைவான்.

கீதாமாஸ்ரித்ய பஹவோ பூபுஜோ ஜநகாதய:
நிர்தூதகல்மஷா லோகே கீதா யாதா: பரம்பதம்.

ஜநகர் முதலான ராஜாக்கள் அநேகர் கீதையை ஆசிரயித்து உலகத்தில் நிர்தோஷ கல்மஷர்களென்று பெயரெடுத்து மோக்ஷத்தை அடைந்தார்கள்.

ஏதந்மாஹாத்ம்ய ஸம்யுக்தம் கீதாப்யாஸம் கரோதியஃ
ஸதத்பல மவாப்நோதி துர்லபாம் கதி மாப்நுயாத்.

இத்தகைய மஹாத்மியத்துடன் கூடிய கீதையை வாசித்தவன், பலத்தை அடைவதே யன்றி மோக்ஷத்தையும் அடைவான்.

மஹாத்ம்ய மேதத்கீதாயா மயாப்ரோக்தம் ஸநாதநம்
கீதாந்தேச படேத்யஸ்து யதுக்தம் தத்பலம் லபேத்
இதி ஸ்ரீ வாராஹ புராணே ஸ்ரீ கீதா மாஹாத்மியம்
ஸம்பூர்ணம்.

இந்தகீதா மஹாத்மிய மஹிமையைக்குறித்து வராஹ புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது; பிராசீனமாகிய இந்தகீதாமாஹாத்மியத்தை நான்கூறினேன். கீதையைப் பாராயணம்செய்தால் மேற்சொல்லியபலன்களைத் தப்பாமல் அடைவார்கள்.

ஸிதாநந்தேநக்ருஷ்ணேநப்ரோக்தா ஸ்வமுகதோர்ஜுநம்
வேதத்ரயீ பராநந்தா தத்வார்த்த ஞாநமஞ்ஜஸா.

இப்படிப்பட்ட கீதாசாஸ்திரத்தை ஸச்சிதாநந்த சொரூபனான ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுநனுக்கு உபதேசித்தார். இது வேத த்ரய சொரூபம்: பரமாநந்த தத்வார்த்தத்தை சீக்கிரமாய் போதிக்கத்தக்கதா யிருக்கின்றது.

ஸ்ரீ கிருஷ்ண பர ப்ரஹ்மணேநம:

ஸ்ரீ பகவத்கீதா ப்ராம்ப:.

அர்ஜுந விஷாத யோக

அத்யாயம்—1.

த்ருதராஷ்ட்டிரன் வாசா.

ஶ்லோ || தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ:
* மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய!

திருதராஷ்ட்ரன் சொல்லுகின்றான் "ஓ சஞ்ஜயா யுத்தம் செய்வதற்காக பிரயத்தனைப்பட்டு புண்ணியபூமியாகிய குருக்ஷேத்திரத்தில் என்னுடைய சேனைகளும், பாண்டு ராஜன் குமாரர்களாகிய தர்மராஜா முதலானவர்களின் சேனைகளும் என்ன செய்கின்றார்கள்?"

திருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை பிரஸ்னைசெய்வதில் * (மாமகா:) என்னும் பதத்திற்கு தன்புத்திரர்களாகிய துர்யோதனாதிகளையும், தன் தம்பிபுத்திரர்களாகிய தர்மபுத்திரர் முதலானவர்களை பிரத்தியேகமாய் "பாண்டவா:" என்று சொல்லுவதனால் திருதராஷ்ட்ரனுக்கும் பாண்டவர்களின்மீது பேதபுத்தி உண்டாயிருக்கின்றதென்றே எண்ணவேண்டியதா யிருக்கின்றது. இப்படி எண்ணுவதற்கு பாரதத்தில் ஆங்காங்கு அநேகபிரமாணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸஞ்ஜய உவாச.

த்ருஷ்ட்வாது பாண்டவாநீகம் * வ்யூடம் துர்யோதந
ஸ்ததா, ஆசார்ய முபஸங்கம்ய ராஜா வசந மப்ரவீத். 2.

ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே! உங்களுடைய சைன்யமும், பாண்டவர்களினுடைய சைன்யமும், குருக்ஷேத்திரத்தில் சேர்ந்தபிறகு யுத்தத்திற்குவேண்டிய வியூஹங்களாய்த் தம்தம் சைன்யங்களை ஏற்படுத்தி யுத்தம் பிராரம்பிக்கும் சமயத்தில் உனக்குப் புத்திரனும் ராஜனுமாயிருக்கும் துர்யோதனன் வியூஹாகாரமாய் ஏற்படுத்தியிருக்கும் பாண்டவர்களின் சைன்யத்தை ஏறெடுத்துப் பார்த்துத் தன்குருவாகிய துரோணாசார்யரிடம் சென்று அவரிடத்தில் ஓர் வார்த்தையாடினார். அது யாதெனில்:—

பஶ்யைதாம் பாண்டுபுத்ராணா மாசார்ய மஹதிம்சமூம்
வ்யூடாம் த்ருபத புத்ரேண தவ ஶிஷ்யேண தீமதா. 3.

ஓ ஆசார்யரே! நமது எதிரில்இருக்கப்பட்ட இந்தப் பாண்டவ சைன்யம் எவ்வளவு பெரியதாயிருக்கின்றது பாருங்கள். பெரியதாயிருப்பதுமேயல்லாமல் அநேக வியூஹங்களாயும் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த வியூஹங்களைக் கட்டினவன் யாரென்றால் உமது சிஷ்யனும்,

---

* வ்யூடம்=வியூஹம் என்பது யுத்தாங்கத்தின் சைன்யங்களை, அஃதாவது:—தண்டவியூஹம், சகடவியூஹம், வராஹவியூஹம், மகரவியூஹம், சூசிகாவியூஹம், காருடவியூஹம், பத்மவியூஹம், முதலிய அநேக பிரிவுகளையுடையது:—

தண்டவியூஹம் என்பது:—முன் சேனாநாயகனும், மத்தியில் ராஜனும், பின்புறம் சேனாதிபதியும், இருபக்கங்களில் குதிரைகளும், அதற்கப்புறம் பதாதிகள் அதாவது சிப்பாயிகளையும் வரிசை வரிசையாய் நிறுத்தப்பட்டிருப்பது.

சகடவியூஹம் என்பது:—ராஜனுக்கு முன்புறத்தில் சைன்யம் கொஞ்சமாயும், பின்புறத்தில் திட்டமாயும் இருப்பது.

புத்திமானுமாகிய த்ருபதராஜனுடைய புத்திரனும், பாண்டவ சைன்யங்களுக்குச் சேனா நாயகனுமாகிய திருஷ்டத்யும்னனுவான்.. இவன் வியூஹங்களைக் கட்டுவதில் மிகவும் நிபுணன். ஆகையினாலேயே, பாண்டவர்கள் இவனைத் தமது சேனைகளுக்கு நாயகனாய் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

அத்ர ஶூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுனஸமா யுதி
யுயுதானோ விராடஶ்ச த்ருபதஶ்ச மஹாரதஃ 4

த்ருஷ்டகேதுஶ்சேகிதானஃ காஶிராஜஶ்ச வீர்யவாந்
புருஜித் குந்திபோஜஶ்ச ஶைப்யஶ்ச நரபுங்கவஃ. 5.

யுதாமந்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவாந்
ஸௌபத்ரோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வஏவ மஹாரதாஃ. 6.

இவர்களன்றியும் இந்தப் பாண்டவ சைன்யத்தில் மிக்க சூரர்களும், வில்வித்தையில் கைதேர்ந்தவர்களும், யுத்தத்தில் பீமார்ஜுனர்களுக்குச் சமானமான அபிமந்யு முதலாகிய மஹாரதர்கள் அநேகர்கள் இருக்கின்றார்கள். மஹாரதர்களென்றால்:—

வாராஹவியூஹம் என்பது:—முன்னும் பின்னும் சொல்ப சேனைகளும், மத்தியில் விசேஷ சேனைகளும், இருப்பது.

மகரவியூஹம் என்பது:—முன் சைன்யம் அதிகமாயும், பின் சைன்யம் கொஞ்சமாயும் இருப்பது.

சூசிகாவியூஹம் என்பது:—எறும்புகள் ஊருவது போல் ஒரே வரிசையாயிருப்பது.

காருடவியூஹம் என்பது:—முன்புறத்தில் குறுகலாயும், பின்புறத்தில் அகலமாயும் சேனைகளை நிறுத்துவது.

பத்மவியூஹம் என்பது:—தாமரை இதழ்களைப்போல் சுற்றிலும் வரிசைவரிசையாய்ச் சேனைகள் சூழ்ந்துகொண்டிருப்பது. இந்த பத்ம வியூஹத்தில் அபிமந்யு மாண்டான்.

ஏகோதஸ ஸஹஸ்ராணி யோதயேத் யஸ்து தந்விநாம்
ஸஸ்த்ரஸாஸ்த்ர ப்ரவீணஸ்ச மஹாரத யிதி ஸ்ம்ருதஃ.

எவன், தான்ஒருவனே தநுசுகளையுடைய பதினாயிரம் சூரர்களுடன் யுத்தம்செய்யச் சமர்த்தனும் ஆயுதவித்தையில் பண்டிதனுமா யிருக்கின்றானோ அவனே மஹாரதனென்று சொல்லப்படுவான். அப்படிப் பட்டவர்கள் யாரென்றால் சொல்லுகின்றேன்கேள்,

யுயுத்தானன்:—இவன் யுத்தத்தில் கைதேர்ந்தவனாதலால் இவனுக்கு யுயுத்தானனென்னும் பெயரும், ஸத்யகைக்குப் பிறந்தவனாதலால் ஸாத்யகியென்னும் பெயரும் படைத்தவன் இவன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்குச் சஹோதர முறை கொண்டவன்.

விராடன்:—இவன், மச்யதேசாதிபதியும், அபிமந்யுவுக்கு அம்மானும் ஆவான்: சத்துருக்களை விசேஷமாய் வருத்துபவனாதலால் இவனுக்கு விராடனென்னும்பெயர் வந்தது.

த்ருபதன்:—இவன், பாஞ்சாலதேசாதிபதியும், த்ரௌபதிக்குத் தந்தையும் உம்மைக் கொல்லுவதற்காக அக்னி குண்டத்தில் புத்திரனையும் (என்றால், இப்போது பாண்டவ சைன்யங்களுக்குச் சேனா நாயகனான திருஷ்டத்யும்னனைப்) பெற்றவன். இவன் மஹாரதிகன்.

துருஷ்டகேது:—இவன், சேதிதேசாதிபதியாகிய சிசுபாலனுக்குப் பிறந்தவன்: சத்துருக்களுக்கு பயங்கரமான துவஜ முடையவன், ஆதலால், இவனுக்கு திருஷ்டகேது என்னும் பெயருண்டாயிற்று.

இன்னும், சேகிதானனும், பராக்கிரமசாலியாகிய காசிராஜனும், புருஜித்துவும், குந்திபோஜனும், புருஷ சிரேஷ்டனை சைப்பியனும், பராக்கிரமசாலியாகிய யுதா மந்யுவும், வீர்யமுள்ள உத்தமௌஜசுவும், ஸுபத்ரா குமாரனை அபி

மந்யுவும், த்ரௌபதேயர்கள் அதாவது, தர்மபுத்திருக்கும் த்ரௌபதிக்குப்பிறந்த பிரதிவிந்தியன், பீமனுக்குப்பிறந்த சுருதசோமன், அர்ஜுநனுக்குப்பிறந்த சுருதகீர்த்தி, நகுலனுக்குப்பிறந்த ஸதாநீகன், ஸகாதேவனுக்குப்பிறந்த சுருதசேனன் ஆகிய உப பாண்டவர்களும் தனுர் வித்தையில் கை தேர்ந்தவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் பதினாயிரம் வில்யுத்தர்களுடன் யுத்தம்செய்யும் சக்தியுடையவர்களா யிருக்கின்றார்கள்.

அஸ்மாகந்து விஶிஷ்டாயே தாந்நிபோத த்விஜோத்தம
நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தாந் ப்ரவீமிதே. 7.

ஓ பிராஹ்மணசிரேஷ்டரே! பாண்டவ சைன்யங்களிலுள்ள இவர்களை நான் இப்படி வர்ணிப்பதனால், அவர்களைப் பார்த்துப் பயப்படுகிறேனென்று எண்ணுகின்றீரோ என்ன! அப்படி எண்ணவேண்டாம். அவர்களைவிட சிரேஷ்டர்களே நமது சைன்யத்தில் சேனாநாயகர்களாய் இருக்கின்றார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் இன்னாரென்பதும், அவர்களின் பல பராக்கிரமங்கள் இப்படிப்பட்டதென்றும், உமக்குத் தெரிந்தேயிருக்கும். ஆயினும், மறுபடியும் உமக்கு ஞாபகார்த்தமாய்த் தெரிவிக்கின்றேன், கேட்கக்கடவீர்.

பவாந் பீஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜயঃ
அஶ்வத்தாமா விகர்ணஶ்ச ஸௌமதத்தி ஸ்ததைவச. 8.

அந்யேச பஹவ ஶூரா மதர்த்தே த்யக்த ஜீவிதாঃ
நாநாஶஸ்த்ர ப்ரஹரணா ஸ்ஸர்வே யுத்தவிஶாரதாঃ 9.

அவர்களில் நீரே பிரதான புருஷரா யிருக்கின்றீர்: உம்முடைய பிரபாவம் எப்படிப்பட்டதென்றால், நீர் அயோநிசம்பவரல்லவா? இஃதன்றியும், கௌரவர்களாகிய எங்களுக்கும், பாண்டவர்களாகிய தர்ம புத்திராதிகளுக்கும்,

யில் வித்தையைக் கற்பித்த ஆசாரியரும் நீரேயல்லவா? இப்பேர்ப்பட்ட நீர் எங்கள் உபய சைன்னியங்களிலுள்ள வியூஹர்களை விட சிரேஷ்டரென்று வேறே சொல்லவேண்டியதேன்? இன்னும், பீஷ்மர் எப்பேர்ப்பட்டவரென்றால், பிரபாஸனென்னும் எட்டாவது வசுவின் அம்சத்தில் சந்தன மஹாராஜனுக்குக் கங்கையில் பிறந்தவர். ஆதலால், இவருக்குச் சாந்தவனென்றும், காங்கேயனென்றும் பெயர் உண்டாயிற்றல்லவா? மேலும், இவரது பிரபாவம் எப்படிப் பட்டதென்றால், அவதார புருஷனாகிய பரசுராமனைச் ஜெயித்த பலசாலியல்லவா? இன்னும், கர்ணன் எப்படிப் பட்டவனென்றால், ஸஹஜ குண்டலங்களையுடையவன், சௌரியமுடையவன், சமதீர்ண பாஹுபலமுடையவன்.

கிருபாசாரியரோ, எங்களெல்லோருக்கும் தநுராசார்யராயிருந்தவரல்லவா? உமது புத்திரனாகிய அஸ்வத்தாமா வென்றாலோ, அதிக பல பராக்கிரமசாலி யென்பது உமக்குத் தெரிந்தே யிருக்கின்றதல்லவா? இஃதன்றியும், நாநாவித ஸஸ்திராஸ்திரங்கள் உண்டாய் யுத்தத்திற்கு வந்த பூரி, ஸ்ரவுணன், விகர்ணன் முதலாகிய அநேக சூரர்கள் எனக்காக பிராணன்களைக் கொடுக்கச் சித்தமாயிருப்பதை நீர் அறிவீரல்லவா?

அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபி ரக்ஷிதம்
பர்யாப்தம் த்வித மேதேஷாம் பலம் பீமாபி ரக்ஷிதம். 10.

நமது சைன்னியமோ பீஷ்மரால் ரக்ஷிக்கப்பட்டு யுத்தத்திற்கு அபரிமிதமாயிருக்கின்றது. நமது சத்ருக்களின் சைன்னியமோ பீமனால் ரக்ஷிக்கப்பட்டு பரிமிதமாயிருக்கின்றது. அதாவது, நமது சேனையோ பதினொராக்ஷௌஹிணி. அவர்களின் சேனையோ ஏழு அக்ஷௌஹிணி. இது விஷயத்தில் நாம் பயப்படவேண்டியதில்லை. திருஷ்டத்யும்நனே நாமகார்த்தமாய் அவர்களுக்குச் சேனாநாயகனாயிருக்கின்றான்.

இந்த பீமன் மெத்த பலசாலியென்றும், கௌரவர்களைக் கொல்வதற்கு சபதம் கூறிக்கொண்டானென்றும், இவனது சகாயத்தினாலேயே ஜயத்தை அடைவோமென்றும் தர்ம புத்திராதிகள் மிகவும் நம்பியிருக்கின்றார்கள். அந்த பீமன் எப்படிப்பட்டவனென்றால், தேகபலமுடையவனேயல்லாமல் தநுர்வித்தையில் சமர்த்தனல்லன். மிக்க முரட்டுத்தனமுடையவனே யல்லாமல், சாமர்த்தியனானான். ஆதலால், அவனது பல பராக்கிரமங்கள் பிரயோஜனப்படமாட்டாது.

அயநேஷு ச ஸர்வேஷு யதாபாக மவஸ்த்திதா:
பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த ஸ்ஸர்வஏவஹி. 11.

ஆயினும், நமது விஷயத்தில் மாத்திரம் நாம் பயமுடையவர்களாய் ஜாக்கிரதையாய் பிரவர்த்திக்கவேண்டும். பீஷ்மரது பலபராக்கிரமத்தைக் குறித்து, இதுவரையில் சொல்லியிருக்கின்றேனல்லவா? அப்படிப்பட்ட பீஷ்மர் இப்பொழுது நமது சைன்னியங்களுக்கெல்லாம் நாயகனாய் சம்ரக்ஷண கர்த்தாவாய் இருக்கின்றார். அவருக்கு ஏதேனும், அபாயம் உண்டானால், நமது சைன்னியங்களுக்கெல்லாம் கெடுதிசம்பவிக்கும். ஆதலால், நீங்கள் எல்லோரும் எல்லாத் திக்குகளிலுமுள்ள வியூஹ மார்க்கத்தில் சத்துருக்களை நுழையாவண்ணம் பத்திரமாய் இருந்து பீஷ்மரைக் காப்பாற்றவேண்டும்.

பீஷ்மர் நம் எல்லோரினும் சூரனாயிருக்க, அவரை நாம் ஏன் காப்பாற்றவேண்டியது என்று எண்ணுகின்றீரோ என்ன! அதற்குக் காரணம் சொல்லுகின்றேன்கேளும். மிருகராஜனாகிய சிம்மமானது அதிக பராக்கிரம முடையது. அது, ஏமார்ந்திருக்கும் சமயத்தில் நரிகளாலும் அபஜயப்படுமல்லவா? அதுபோல், பீஷ்மரைச் சமயம்

பார்த்து, சிகண்டியானவன் உட்பிரவேசித்து பீஷ்மரைக் கலக்கப்படுத்தலாகாதா? அதனால், நமது கார்யங்களெல்லாம் விருதாவாய்ப் போய்விடும். ஆகையினால், நீங்கள் எல்லோரும் எப்பொழுதும் சிகண்டிக் கெதிரிலேயே ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

தஸ்ய ஸஞ்ஜநயந் ஹர்ஷம் குருவ்ருத்த: பிதாமஹ:
ஸிம்ஹநாதம் விநத்யோச்சை ஶங்கம் தத்மௌ ப்ரதாபவாந் 12.

ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே! உமது புத்திரனாகிய துர்யோதனன் இவ்விதமாய் துரோணாசார்யரிடம் சொல்லிய விஷயங்களை, சத்ருக்கள் பார்த்துப் பயப்படும்படியான வல்லமையுடையவரும், குருவம்சத்தில் உள்ளவர்களுக்குள் வயது சென்றவரும், பாட்டனருமான பீஷ்மர் கேட்டு, துர்யோதனன் என்மீதும் துரோணாசார்யர்மீதும் சகல பாரங்களையும் சுமத்தியிருக்கிறானென்று தெரிந்துகொண்டவராய், துர்யோதனனுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி நம்பகத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவும் யுத்த விஷயத்தில் தமக்கு உண்டாகிய உத்ஸாஹத்தை துர்யோதனனுக்குத் தெரிவிப்பதற்காகவும், சிம்மம்போல் கர்ஜித்துத் தம் சங்கத்தை எடுத்துப் பீஷ்மர் பூரித்தார்.

தத ஶங்காஶ்ச பேர்யஶ்ச பணவாநக கோமுகா:
ஸஹஸைவாப்ய ஹந்யந்த ஸஶப்தஸ்துமுலோபவத். 13.

பீஷ்மர் சங்கத்தைப் பூரித்தவுடனே, கௌரவர்களின் சேனைகளெல்லாம், தமது சேனாநாயகராகிய பீஷ்மர் யுத்தத்தை பிராரம்பிக்கச் சைகை செய்தாரென்றறிந்து, தம் தம் சங்கங்கள், நகாராக்கள், மிருதங்கங்கள், தப்பட்டைகள், கொம்பு(பாங்காக்)கள், கோமுகங்கள், பேரி, துந்துபி, உடுக்கை முதலாகிய யுத்தவாத்தியங்களைச் சீக்கிரமாக ஒன்றுசேர்த்து திக்குகள் அதிரும்படி தொனிசெய்தார்கள்.

ததஸ்வேதைர் ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ
மாதவ: பாண்டவஸ்சைவ திவ்யௌ ஸங்கௌ ப்ரதர்
மது:. 14.

அப்படி கௌரவர்களின் சைன்யத்தில் யுத்தவாத்திய தொனி கிளம்பினவுடனே, பாண்டவ சைன்யத்தில், வெள்ளைக்குதிரைகளைப் பூட்டியிருக்கும் பெருத்தரதத்தில் இருக்கப்பட்ட க்ருஷ்ணார்ஜுநர் இவர்களும் யுத்தத்திற்கு சித்தமாயிருக்கின்றோமென்று தெரிவிப்பதற்காக திவ்யமாகிய தம்தம் சங்கங்களை எடுத்துப் பூரித்தார்கள்.

பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேஸோ தேவதத்தம் தநஞ்ஜய:
பௌண்ட்ரம் தத்மௌ மஹாஸங்கம் பீமகர்மா வ்ரு
கோதர:. 15.

அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்ட்டிர:
நகுலஸ் ஸஹதேவஸ்ச ஸுகோஷ மணிபுஷ்பகௌ. 16.
காஸ்யஸ்ச பரமேஷ்வாஸ: ஸிகண்டீச மஹாரத:
த்ருஷ்டத்யும்நோ விராடஸ்ச ஸாத்யகிஸ்சாபராஜித: 17.
த்ருபதோ த்ரௌபதேயாஸ்ச ஸர்வஸ: ப்ருதிவீபதே
ஸௌபத்ரஸ்ச மஹாபாஹுஸ் ஸங்காந் தத்மு: ப்ரு
தக் ப்ருதக். 18.

ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே கேளும்! * பாஞ்சஜந்யமென்னும் சங்கத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவானும், தேவதத்தமென்னும் சங்கத்தை அர்ஜுநனும், பௌண்ட்ரமென்னும் மஹா சங்கத்தை யுத்தரங்கத்தில் பயங்கரமான குரூர

---

* பஞ்சஜன் என்கிற அசுரனுடைய வயிற்றைக் கிழித்து, அவனுடைய எலும்பிலிருந்து எடுத்துச் செய்யப்பட்டதனால் இதற்குப் பாஞ்ச ஜந்யம் என்று பெயர்வந்தது. இது விவரங்கள் விஷ்ணு புராணம், 5-வது அம்சம், 21-வது-அத்யாயத்திலும், பாகவதம் 10-வது-ஸ்கந்தம், 45-வது அத்தியாயத்திலும் காண்க.

காரியங்களைச் செய்யப்பட்டவனும் செந்நாயின் வயிற்றைப் போல் வயிற்றை யுடையவனுமான பீமசேனனும், அநந்த விஜமென்னும் சங்கத்தை குந்திதேவியின் ஜேஷ்ட புத்திரனும் பாண்டவ சைன்யங்களுக்கு ராஜனுமாகிய யுதிஷ்டிரரும் (தர்மபுத்திரரும்), சுகோஷமென்னும் சங்கத்தை நகுலனும், மணிபுஷ்பகமென்னும் சங்கத்தை சகாதேவனுமாகப் பூரித்தார்கள்.

இவர்கள் இப்படி பூரித்துக்கொண்டிருக்க, இவர்களுக்கு சகாயமாய்வந்த, தநுர்வித்தையில் கைதேர்ந்த சிரேஷ்டமானவில்லையுடைய காசிராஜனும், மஹாரதிகனான சிகண்டியும், திருஷ்டத்யும்நனும், விராடராஜனும், ஜயசீலனாகிய (அபஜயமடையாதவனான) சாத்யகியும், துருபத மஹாராஜனும், த்ரௌபதி குமாரர்களாகிய பிரதிவிந்யன், சுருதசோமன், சுருதகீர்த்தி, சதாநீயன், ஸ்ருதசேனன் என்னும் பெயர்களையுடைய உபபாண்டவர்கள் ஐந்துபேர்களும், சுபத்ரை புத்திரனும் ஆஜாநுபாஹுவு மாகிய அபிமந்யுவும் ஆகிய இவர்களெல்லோரும் தனித்தனியாய் அவரவர்களினுடைய சங்கங்களை எடுத்துப் பூரித்தார்கள்.

ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்
நபஶ்ச ப்ருதிவீம்சைவ துமுலோ வ்யநுநாதயந் 19.

அப்படி பாண்டவ சைன்யங்களால் பூரிக்கப்பட்ட அந்த தொனியானது, பூமி ஆகாசம் பிளக்க எதிரொலி (பிரதிதொனி) உண்டாகும்படிச் செய்ததுமே யல்லாமல், திருதராஷ்ட்ரனுடைய நூறு பிள்ளைகளின் மனதையும் பிளக்கும்படிச்செய்தது.

அதவ்யவஸ்திதாந் த்ருஷ்ட்வா தார்த்தராஷ்ட்ராந் கபித்வஜ:
ப்ரவ்ருத்தே ஶஸ்த்ர ஸம்பாதே தநுருத்யம்ய பாண்டவ: 20
ஹ்ருஷீகேஶம் ததா வாக்ய மிதமாஹ மஹீபதே 20½

ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே! அப்படி உபய சைன்யங்களும் தம்தம் சங்கங்களைப் பூரித்தபிறகு, ஆயுதங்களை பிரயோகிக்கத் தொடங்கியபோது * அனுமக்கொடியோனாகிய அர்ஜுனன், யுத்தம்செய்ய சித்தமாயிருக்கிற உன்புத்திரன் முதலானவர்களைப்பார்த்து தன் தநுசு என்னும் காண்டீவத்தை நாணேற்றிக் கையில் பிடித்து † ஹ்ருஷீகேசனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லப்போகின்றான்:—

ஸேநயோ ருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மே ச்யுத ! 21.
யாவதேதாந் நிரீக்ஷேஹம் யோத்துகாமா நவஸ்திதாந்
கைர்மயா ஸஹ யோத்தவ்ய மஸ்மிந் ரணஸமுத்யமே 22.
யோத்ஸ்யமாநா நவேக்ஷேஹம் ய ஏதேத்ர ஸமாகதா:
தார்த்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர்யுத்தே ப்ரிய சிகீர்ஷவ:23.

ஹே ‡ அச்யுதா! பாண்டவர்களாகிய எங்களுக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டிய அர்த்தராஜ்ஜியத்தைக்

* பீமசேனனுடைய பிரார்த்தனையின்பேரில் அனுமானனவர், பாரதயுத்தத்தில் பாண்டவர்களுக்கு ஜயமுண்டாகும்பொருட்டு அர்ஜுனன் ரதத்தின்கொடியில் வந்திருப்பதாக வரங்கொடுத்திருந்தப்ரகாரம், அர்ஜுனனுடைய ரதத்தின்கொடியில் அனுமான் வந்திருப்பதால் அர்ஜுனனுக்கு அனுமக்கொடியோன் என்று பெயர்வந்தது.(மஹாபாரதம் ஆரண்யபருவத்தில் 151-வது, அத்தியாயம் பீமன் மந்தார புஷ்பம் கொண்டுவரும் கதையைப் பார்க்க.)

† இந்திரியங்களுக்குச் ஸாக்ஷியாயும், எஜமானனாயும், க்ஷேத்திரஞ்ஞனாயும் இருக்கிறவனாதலாலும்,சூர்யசந்திர ரூபங்களாக இருக்கிற பகவானானவர் அந்த சூர்ய சந்திராதிகளினுடைய கேசங்(மயிர்)கள் என்று சொல்லப்பட்ட கிரணங்களே ஜகத்திற்கு, ஜாக்ரம், சுஷுப்தி என்கிற அவஸ்தைகளினால் சந்தோஷத்தை உண்டு பண்ணுகிறவனாதலாலும் ஹ்ருஷீகேசனென்று பெயர் வந்ததை விஷ்ணு ஸஹஸ்ரநாமபாஷ்யம் 25-வது, பக்கத்தில் பார்க்க.

‡ ஸ்வரூப ஸாமர்த்யத்திற்கு நாசமில்லாதவனாதலாலும், தன் ஸ்தானத்திலிருந்து சலிக்காதவனாதலாலும் அச்யுதனென்று பெயர் வந்தது.

கொடாமல் கஷ்டப்படுத்திக் கடைசியில் யுத்தத்திற்கும் பிரயத்திநப்பட்ட துர்யோதனன் எவ்வளவு துர்ப்புத்தியுடையவனென்று சொல்லலாம். இப்படிப்பட்ட துர்ப்புத்தியுடைய துர்யோதனனுக்கு நன்மை செய்ய எண்ணங்கொண்டு, அவர்களிடத்தில் பிரியமும் எங்களிடத்தில் அப்பிரியமும் செய்து எங்களுடன் யுத்தத்திற்குவர நினைத்தவர்கள் எவ்வளவு பெரிய மனுஷ்யர்களென்று சொல்லலாம். அப்படி எங்களுடன் யுத்தம்செய்ய நினைத்து யுத்தசந்நத்தர்களாய் வந்தவர்கள் யாவர்களோ அப்படிப்பட்டவர்களை நான் பார்க்கவேண்டுமாதலால், நமது ரதத்தை இரண்டு சைன்னியங்களின் மத்தியில் கொண்டுபோய் நிறுத்தக்கடவாய்.

சஞ்சயன் உவாச!

எவமுக்தோ ஹ்ருஷீகேசோ குடாகேசேந பாரத !
ஸேநயோ ருபயோர்மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம். 24

பீஷ்மத்ரோண ப்ரமுகத ஸ்ஸர்வேஷாம்ச மஹீக்ஷிதாம்
உவாச பார்த்த பஸ்யைதாந் ஸமவேதாந் குரூநிதி. 25

சஞ்சயன் சொல்லுகின்றான்:—ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே ! அர்ஜுநன் இப்படிச் சொன்னவுடனே ஸ்ரீ கிருஷ்ணபகவான், உபயசைன்யங்களின் மத்தியில் பீஷ்மத்துரோணர்களுக்கும் மற்றுமுள்ள ராஜர்களுக்கும் முன்னே அந்த சிரேஷ்டமான ரதத்தைக் கொண்டுபோய் நிறுத்தி ஓய் அர்ஜுநா, இதோ இவ்விடத்திலுள்ள கௌரவ சைன்யங்களைப்பார் என்று சொல்லினர். ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தை யுத்தரங்கத்தில் கொண்டுபோய் நிறுத்தியது ☞ எதிரிலிருக்கும் படத்தில்காண்க.

தத்ர பஸ்யத் ஸ்திதாந் பார்த்தஃ பித்ரூந் நத பிதா மஹாந்
ஆசார்யா ந்மாதுலாந் ப்ராத்ரூந் புத்ராந் பௌத்ராந் ஸகீம்
ஸ்ததா. 26

அர்ஜுனன் உத்திரவின்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் ரதத்தை
யுத்தத்திற்குக் கொண்டுபோகுதல்.



ஶ்வஶுராந் ஸுஹ்ருதஶ்சைவ ஸேநயோ ருபயோரபி. 26½
தாந் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய ஸ்ஸர்வாந்பந்தூ நவஸ்தி
தாந். 27.
க்ருபயா பரயா விஷ்டோ விஷீத ந்நித மப்ரவீத் 27½

அத-பிறகு, பார்த்தஃ - அர்ஜுநன், தத்ர - அவ்விடத்திலுள்ள, உபயோஃ ஸேநயோஃ அபி-உபய சைன்யங்களிலும், ஸ்திதாந்-இருக்கப்பட்ட, பித்ருந்-தந்தைகளையும், பிதாமஹாந்-பாட்டன்மாரையும், ஆசார்யந்-ஆசார்யர்களையும், மாதுலாந்-அம்மான்மாரையும், ப்ராத்ருந்-தமையன் தம்பிமாரையும், புத்ராந்-குமாரர்களையும், பௌத்ராந்-பேரன்மாரையும், ஸகீந் - ஸ்நேஹிதர்களையும், ததா - அதுபோல், ஶ்வஶுராந்-மாமன்மாரையும், ஸுஹ்ருதஃ ச ஏவ-நன்மை கோரப்பட்ட சிநேகிதர்களையும், அபஶ்யத்-பார்த்தான், ஸஃ கௌந்தேய-அந்த அர்ஜுநன், அவஸ்திதாந்-யுத்தரங்கத்தில நின்றிருக்கும், ஸர்வாந்-ஸமஸ்தமான, தாந் பந்தூ - தன்பந்துக்களை, ஸமீக்ஷ்ய - பார்த்து, பரயா க்ருபயாந்-மிகுந்த கருணையுடன், ஆவிஷ்டஃஸந்-ஆவேசமுடையவனாய் விஷீதந்-வ்யசனப்பட்டு, இதம்-இதனடியில் சொல்லப்போகும் வாக்கியத்தை, அப்ரவீத்-சொல்லினன்.

தாத்பர்யம்:—அப்பொழுது அர்ஜுநன் உபய சைன்யங்களில் உள்ளவர்களை யெல்லாம் ஏறெடுத்துப்பார்த்து அவர்களில் கௌரவ சைன்யங்களில் இருக்கப்பட்டவர்கள், கௌரவர்களுக்கு எப்படி பந்துத்வ முடையவர்களாய் இருக்கின்றார்களோ, பாண்டவர்களாகிய தமக்கும் அப்படிப்பட்ட பந்துத்வ முடையவர்களாகவே இருப்பதனுலேயும், தம் சைன்யத்தில் இருக்கப்பட்டவர்கள் தமக்கு எவ்வித பந்துவா யிருக்கின்றார்களோ அதுபோல் கௌரவர்களுக்கும் இவர்கள் அவ்வித பந்துக்களாகவே இருப்பத

றும், உபயசைன்யங்களில் உள்ளவர்களெல்லாம் தன் வரிசைக்குத் தந்தைகளும், பாட்டன்களும், ஆசார்யர்களும், அம்மான்களும், தமையன் தம்பிகளும், புத்திரர்களும், பேரன்மார்களும், மாமன்களும்: முதலாகிய பந்து ஜனங்களையும், அப்படி பந்துவல்லாமல் இருப்பவர்கள் உபய சைன்யங்களுக்கும் சகாயம் செய்யவந்தவர்களுமாயிருக்கக்கண்டான். அப்படி உபய சைன்யங்களிலும் யுத்த ஸந்நத்தர்களாய் நின்றிருக்கும் பந்துஜனங்களை யெல்லாம் பார்த்தவுடனே அர்ஜுநன், மிகவும் கிருபா பரவசனாய் இவர்களைக் கொல்லவேண்டியதாய் நேரிட்டதே யென்று வியசனமுடையவனாய் ஸ்ரீ கிருஷ்ணனிடம் பின்வருமாறு சொல்லுகின்றான்:—

த்ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண யுயுத்ஸும்
ஸமுபஸ்திதம். 28.

ஸீதந்தி மமகாத்ராணி முகஞ்ச பரிஶுஷ்யதி
வேபதுஶ்ச ஶரீரேமே ரோம ஹர்ஷஶ்ச ஜாயதே. 29.

ஓ கிருஷ்ணமூர்த்தியே! உபய சைன்யங்களில் உள்ளவர்களெல்லாம் தந்தைகள், பாட்டன்மார்கள், அண்ணன் தம்பிகள், புத்திரர்கள், பௌத்திரர் (பேரன்மார்)கள், அம்மான்கள், மைத்துனர்கள் முதலாகிய வரிசையுடைய பந்துக்களா யிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து சத்துரு ராஜன்மேல் யுத்தத்திற்குப் போக ஸகஜமானதா யிருக்க, அப்படிக்கில்லாமல் நம்மில் நாமே யுத்தத்திற்கு பிரயத்தனப்பட்டு நம்மால் அவர்கள் கொல்லப்படுவதற்கும், அவர்களால் நாம் கொல்லப்படுவதற்கும் சித்தமாய் யுத்தரங்கத்தில் வந்திருக்கின்றோமல்லவா? ஆஹா! இது எவ்வளவு ஆச்சர்யகரமாயிருக்கின்றது! இவர்களை எல்லாம் பார்த்தவுடனே என் அவயவங்கள் சோர்வையடைகின்றன. அன்றியும், வாயில் பூர்த்தியாய்

ஜலமில்லாமல் நா வறட்சியடைகின்றது. தேகத்தில் நடுக்கமும், மயிர்க்கூச்சம் உண்டாகின்றன. மேலும்,

காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே
நச ஶக்நோ ம்யவஸ்தாதும் ப்ரமதிவச மே மந꞉. 30.

என் கையிலிருக்கும் காண்டீபம் நழுவுகின்றது ; என் தேகத்தின் மேல்தோல் எரிகின்றது ; இந்த ரதத்தின்மீது நிற்பதற்கும் சாத்தியமில்லாதவனா யிருக்கின்றேன் ; என் மனம் சஞ்சலப்படுகின்றது.

நிமித்தாநிச பஶ்யாமி விபரீதாநி † கேஶவ.
நச ஶ்ரேயோ நுபஶ்யாமி ஹத்வா ஸ்வஜந மாஹவே. 31.

ஓ கேசவா ! என்னுடைய ஸ்திதி இப்படியிருக்க அநர்த்தமாகிய அநேக அபஜய குணங்களும் எனக்குக் காணப்படுகின்றன.

இவைகளை யெல்லாம் யோசித்துப் பார்க்குமளவில் பந்து ஜனங்களைக் கொல்லுவதனால் எனக்கு யாதொரு சிரேயசும் (மேன்மையும்) காணப்படவில்லை. அப்படி அவர்களைக் கொன்று மேன்மையை அடையலாமென்று எண்ணினாலோ அப்படி எண்ணுவதற்கும் கூடாமையாயிருக்கின்றது. ஏனென்றால், பந்து ஜனங்களை யெல்லாம் கொன்று ஜயத்தை அடைந்த போதிலும் நமக்கு மேன்மையே காணப்படவில்லை.

நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ! நச ராஜ்யம் ஸுகாநிச
கிம்நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகை ர்ஜீவிதேநவா 32.

ஓ கிருஷ்ணமூர்த்தி! ஆகையினாலேயே எனக்குச் ஜெயமடையவேண்டுமென்றாகிலும், ராஜ்ஜியம் சம்பாதிக்க

† அழகான மயிர்களை யுடையவனாதலாலும், கேசியென்கிற அசுரனைக் கொன்றவனாதலாலும் கேசவனென்று பெயர் வந்தது. (விஷ்ணுபுராணம் 22-23-ம் பக்கங்களைப் பார்க்க.)

வேண்டுமென்றாகிலும், இப்படிப்பட்ட ராஜ்ஜியத்தில் சுகத்தை அடைய வேண்டுமென்றாகிலும் இச்சையில்லை. ஆனால், அப்படி இச்சையில்லாமலே இந்தயுத்தத்திற்கு பிரயத்தப்பட்டு ஏன் வந்தாயென்று கேட்கின்றீரோ என்ன சொல்லுகின்றேன் கேளும்.

ஓ ‡ கோவிந்தா ! எனக்கு இதற்முன் யுத்தம் செய்ய வேண்டுமென்று எண்ணமிருந்தது நிஜமே? இப்பொழுது இந்த யுத்தரங்கத்தில் சேர்ந்திருக்கும் பந்துஜனங்களை ஏககாலத்தில் பார்த்தவுடனே என் எண்ணம் ஒழிந்தது. இதற்குக் காரணம் யாதெனில், இவ்வளவு பந்துஜனங்களையும் கொன்றபின்பு நாம் ஜீவித்திருப்பதே வியர்த்தமாயிருக்கின்றது. அப்படி க்ரூர கிருத்தியங்களினால் ஸம்பாதிக்கப்பட்ட ராஜ்ஜியத்தினாலாகிலும் அப்படிப்பட்ட ராஜ்ஜியத்தினால் உண்டாகும் போகங்களினாலாகிலும் நமக்கு யாதொரு பிரயோஜனமும் உண்டாகமாட்டா. அஃதெப்படியென்றால் சொல்லுகின்றேன் கேட்பீராக:—

யேஷா மர்த்தே காங்க்ஷிதம்நோ ராஜ்யம் போகா ஸ்ஸுகாநிச
தஇமேவஸ்த்திதாயுத்தே ப்ராணாம் ஸ்த்யக்த்வா தநாநிச. 33.
ஆசார்யா: பிதர: புத்ரா ஸ்ததைவச பிதாமஹா:
மாதுலா: ஶ்வஶுரா: பௌத்ரா: ஸ்யாலா: ஸ்ஸம்பந்திந ஸ்ததா. 34.

உலகத்தில் யாவராயினும் ராஜ்ஜியமும், தன கனக (தனம்-பொன்) வஸ்து வாஹனாதிகளும் சம்பாதிக்க எண்ணுவது, தமது பெண்டு பிள்ளை, பந்து, சிநேகிதர்களு

‡ வராஹரூபமெடுத்து, ஜலத்தில் மூழ்கியிருந்த பூமியை வெளிப்படுத்தினவராதலால், கோவிந்தனென்று பெயர் உண்டாயிற்று.

டன் கூடி அநுபவித்துச் சுகிப்பதற்கே யல்லவா? அப்படிக் கில்லாமல் தனிமையா யிருக்கப்பட்டவனுக்கு அப்படிப் பட்ட போக பாக்கியங்களினால் என்ன சுகமுண்டாகும்? அதுபோல், நாம் இந்த ராஜ்ஜியத்தைச் சம்பாதிக்கக் கோருவது பந்து மித்திரர்களுடன் கூடி அனுபவிப்பதற்கே யல்லவா?

அப்படியிருக்க எந்த பந்துமித்திராதிகளுடன் கூடி நாம் அப்படிப்பட்ட ராஜ்ஜியசுகம் அனுபவிக்கத்தக்கவர்களா யிருக்கின்றோமோ அப்படிப்பட்டவர்களெல்லாம், என்றால் ஆசார்யர்களும், தந்தைகளும், புத்திரர்களும், பாட்டன் மார்களும், அம்மான்களும், மாமன்களும், பேரன் மார்களும், மைத்துனர்களும், சம்பந்திகளும் இதோ நமது எதிரிலேயே யுத்தத்திற்கு வந்து பிராணனுக்குத் துணிந்து இந்த உபய சைன்னியங்களிலும் நின்றிருக்கின்றார்கள். யுத்தத்தை பிராரம்பிப்போமேயாகில் இந்த சைன்யத்திலுள்ளவர்கள் அந்த சைன்னியத்தையும், அந்த சைன்யத்திலுள்ளவர்கள் இந்த சைன்யத்தையும் கொல்லுவார்களல்லவா? அப்படியே யுத்தமுடிவில் இவர்களெல்லாம் மாளப்போகிறார்களல்லவா? அப்படி இவர்களெல்லாம் மாண்டபிறகு, நாம் மாத்திரமே ஏகாங்கியா யிருந்தால், இந்த ராஜ்ஜியத்தினால் நமக்கு என்ன பிரயோஜனம் உண்டாகும்? இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேளும்:—

ஒரு புருஷன், தனது கிருகத்தில் தாய், தந்தை, அண்ணன்மார், தம்பிமார், பார்யை, புத்திரர்கள், புத்திரிகள், மருமக்கள்மார், பேரன்மார், பேத்திமார் முதலான பந்துக்களுடன் கூடி சௌக்கியமாயிருக்க, அப்படிப்பட்டவனுக்கு ஒரு நாள் தனபிசாசம் நேரில்வந்து "ஓரிடத்தில் அநேக கோடி திரவ்வியம் பூஸ்தாபிதமாயிருக்கின்றது; அதன்பொருட்டு, உன் வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகளை

யெல்லாம் பலிகொடுத்தால் அது உனக்கு லபிக்கும், அதனால், நீ கோடீசுவரனாவாய்" என்று சொல்லுகின்றது. அப்பொழுது அவன் என்ன செய்வான்! அந்த தனத்திற்கு ஆசைப்பட்டுத் தன் ஜனங்களையெல்லாம் தன் கையினால் பலிகொடுப்பதற்கு ஒப்புக்கொள்வானா? நல்லது ஒருவேளை துர்ப்புத்தியால் ஒப்புக்கொண்டு அப்படியே எல்லோரையும் பலிகொடுத்து அந்த தனத்தை அடைந்து தன்வீட்டில் தானே தனிமையாயிருந்தால் அதனால் அவன் என்ன சுகமடைவான்? வீடுமுற்றும் ஜனங்களில்லாமையால் தனக்கு அநேக விதமாய் உபசரித்துக் கொண்டிருந்தவர்களெல்லோரையும் கொன்றுவிட்டேனே யென்று பெருத்த துக்கத்தையே அனுபவிப்பானல்லவா? அப்படியே நாமும் இந்த பந்துஜனங்களை யெல்லாம் கொன்று ராஜ்ஜியத்தை அடைந்தபோதிலும் துக்கத்தையே அனுபவிக்க வேண்டியதாய் நேரிடும்.

ஏதாந்நஹந்து மிச்சாமி க்நதோபி * மதுஸூதந ! 35
அபி த்ரைலோக்ய ராஜ்யஸ்ய ஹேதோ: கிந்நு மஹீக்ருதே.

ஓ * மதுசூதநா! ஆகையினாலேயே, இந்தக் கௌரவ சைன்னியங்களிலுள்ளவர்களைக் கொல்வதனால், சொர்க்க மத்ய பாதாள லோகங்களினுடைய பிரபுத்துவம் வந்தபோதிலும் இவர்களைக் கொல்வதற்கு எனக்கு விருப்பமில்லாமல் இருக்கின்றது. இப்படியிருக்க, இந்த மூன்று உலகங்களில் ஒன்றாகிய மத்ய லோகத்திற்கும் சொல்பபாகமாகிய இந்த ராஜ்ஜியத்திற்காக இவர்களைக் கொல்வதற்கு எனக்கு எப்படி மனம் துணிவுபெறும் கிருஷ்ணா!

ஓ அர்ஜுனா! நல்லது நீ கனிகரமுள்ள இருதயமுடையவனாதலால் இப்படிச்சொன்னாய். சரி, இதனாலேயே

* மதுவென்கிற ராக்ஷதனைக் கொன்றதனால் மதுசூதனன் என்று பெயருண்டாயிற்று.

யல்லவா உனது தமையன் தர்மபுத்திரரும் யுத்தம் செய்ய லாகாதென்று எண்ணி உங்கள் ஐவருக்கும் ஐந்து ஊராகி லும் கொடுக்கவேண்டுமென்று தூதனுப்பினர். அதற்கும் கௌரவர்கள் ஒப்புக்கொள்ளாமல் யுத்தம் செய்வதற்கு முயன்று பந்துஜன வதையைக் குறித்து அவர்களுக்கே கனிகரம் இல்லாமலிருப்பது சரியா? இதற்குமுன் அரக்கு மாளிகையில் உங்களைக் கூடியிருக்கச் செய்து தீ மூட்டிய தும், உங்களுக்கு விஷத்தைத் தந்தது முதலான காரியங் களை யோசிக்குமளவில் எப்படியாகிலும் உங்களைக் கொல்ல வேண்டுமென்னும் கெட்ட எண்ணமே துர்யோதனாதி களுக்கு இருப்பதாய் ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்ற தல்லவா? இப்படிப்பட்ட சமயத்தில் இப்பொழுது இந்த உபய சைன்யங்களும் யுத்தத்திற்கு முயன்று சித்தமாயி ருக்க நீ மாத்திரம் கனிகரத்தினால் யுத்தத்தைச் செய்யா விடினும், அவர்களும் இப்படியே கனிகரத்துடன் யுத்தம் செய்யாமலே இருப்பார்களென்று எண்ணுகின்றாயோ! நீ யுத்தம் செய்யாமலிருந்தால் அவர்கள் ஜயிப்பதற்கு மிகவும் சுலபோபாயம் செய்தவனாகின்றாய்.

நிஹத்ய தார்த்தராஷ்ட்ராந்ந: காப்ரீதி ஸ்யாஜ் † ஜநார்த்
பாபமேவாஶ்ரயேதஸ்மாந் ஹத்வைதாநாததாயிந: [கசு]. 36.

ஹே ஜநார்த்தநா! அவர்கள் என்னைக் கொன்றாலும் சரி, நான் அவர்களைக் கொல்லமாட்டேன். அவர்களைக் கொன்றாலோ அதனால் நாம் கொஞ்சமேனும் ஐஹிக சுகத்தை அனுபவிப்போமா? எள்ளளவேனும் அனுபவிக்க மாட்டோம். இந்த யுத்தத்திற்குக் காரணபூதமாயிருக்

† துஷ்ட நிக்ரஹம் செய்பவனாதலாலும், இஹத்திலும் பரத் திலும் சௌக்யங்களைக் கொடுக்கும்பொருட்டு ஜனங்களால் யாசிக் கப் படுபவனாதலாலும் ஜநார்த்தனன் என்னும் பெயர் வந்தது.

கும் நமக்குப் பரம சத்துருவாகிய துர்யோதனனையும் அவனைப் ப்ரோத்சாஹம் செய்விக்கும் துஷ்டர்களையும் மாத்திரம் கொன்று, மற்ற யாவத் பந்து மித்திராதிகளுடன் கூடி ராஜ்ஜியசுகம் அநுபவிக்கலாம். ஆனால், அப்படிச்செய்ய நம்மால் சாத்தியமாகுமா? துர்யோதனன் ராஜனல்லவா? அவனுக்கு சகாயமாய் வந்திருக்கும் மற்ற ராஜர்களெல்லாம் இறந்த பிறகல்லவோ அவனைக் கொல்வதற்குச் சாத்தியமாகும். அவனது சைன்யங்களிலுள்ள ராஜர்களெல்லாம் நமது சைன்னியங்களிலுள்ள பந்து மித்திரர்கள் எல்லோரையேனும் அல்லது சிலரையேனும் கொல்லாமல் அவர்கள் சாகார்களல்லவா? இப்படி உபய சைன்யங்களிலுள்ள பந்து மித்திராதிகளெல்லோரும் இறந்த பிறகல்லவோ துர்யோதனனை நாம் கொல்லவேண்டும். நமக்குச் சத்துருவாயிருக்கும துர்யோதனனைக் கொன்றால் சந்தோஷம் உண்டு என்று எண்ணுகின்றீரா! அப்படியானால் நமக்கு பரம மித்திரர்களும், பந்துக்களுமாயிருக்கும் அநேகர்கள் மாளுவதனால் உண்டாகும் பரம துக்கத்தை அடைந்தபிறகல்லவா, இந்தச் சந்தோஷத்தை அடையவேண்டும். அப்போது ராஜ்ஜியம் கிடைத்த சொல்ப சந்தோஷமானது பரமதுக்கத்தை நிவர்த்திசெய்யிக்குமா? துர்யோதனாதிகளாகிய சில துஷ்டர்களுக்காக நிரபராதிகளாகிய பரம மித்திரர்களும், பந்துக்களுமாகிய அநேகர்களைக் கனிகரமில்லாமல் கொல்லுவதனால் உண்டாகும் பாபமும், அந்தத் துஷ்டர்களாகிய சிலரைக் கொல்லுவதனால் உண்டாகும் சுகிர்தமும் ஹரிக்கப்படமாட்டா. ஆதலால், பரலோகத்திலும் நமக்குப் பாபமே உண்டாகும்.

தஸ்மாந் நார்ஹாவயம் ஹந்தும் தார்த்தராஷ்ட்ரா
ஸ்ஸபாந்தவாந்
ஸ்வஜநம் ஹி கதம் ஹத்வா ஸுகிந ஸ்யாம ‡ மாதவ! 37.

ஓ மாதவா! நம்மால் சாத்தியமானல் நமது விரோதிகளாகிய துர்யோதனதிகளை மாத்திரமே கொல்லலாமேயன்றி, மற்ற பந்து ஜனங்களைக் கொல்லுவது கொஞ்சமேனும் தகாது. ஏனென்றால், இதுவரையில் நான் சொல்லியதுபோல், இந்தத் துஷ்டர்களைக் கொல்லுவதனல் உண்டாகும் சுகத்தைக் காட்டிலும், பந்து ஜனங்களைக் கொல்லுவதனல் உண்டாகும் மஹா பாதகம் அதிகமாதலால் நமக்குச் சுகம் எப்படி உண்டாகும்.

ஓ அர்ஜுநா! இந்த உபய சைன்யங்களிலுள்ள ராஜர்கள் நமக்கு எவ்வாறு பந்துக்களாயும், சிநேகிதர்களாயுமிருக்கின்றார்களோ அதுபோல், துர்யோதனதிகளுக்கும் பந்துக்களாயும் சிநேகிதர்களாயுமிருக்கின்றார்களல்லவா? அப்படியிருக்க, அவர்களுக்கில்லாத இந்த யோசனை உனக்கு மாத்திரம் ஏன் உண்டாயிற்று?

யத்ய ப்யேதே நபஶ்யந்தி லோபோபஹத சேதஸ:
குலக்ஷயக்ருதம் தோஷம் மித்ரத்ரோஹேச பாதகம். 38
கதம் நஜ்ஞேய மஸ்மாபி: பாபா தஸ்மாந் நிவர்த்திதும்
குலக்ஷய க்ருதம்தோஷம் ப்ரபஶ்யத்பி ர்ஜநார்தந! 39

ஓ ஜநார்த்தநா! சொல்லுகிறேன் கேள்! துர்யோதனதிகளுக்கு இப்பேர்ப்பட்ட யோசனை உண்டாகாததற்குக் காரணம் யாதெனில், அவர்கள் எங்கள் பாதிராஜ்ஜியத்தைக்

‡ சாந்தோக்யோபநிஷத்தில் உள்ள மதுவித்தை யென்னும் வேத பாகத்தினல் புகழப்பட்டவனுதலாலும், லக்ஷ்மீ பதியாதலாலும், மௌனம், தியானம், யோகம், இவைகளை உடையவனுதலாலும் மாதவன் என்னும் பெயர் வந்தது.

கொடாமல் தாங்களே எல்லாவற்றையும் அநுபவிக்க வேண்டு மென்னும் பேராசை கொண்டவர்களாய் இருக்கின்றார்களாதலால், அப்பேர்ப்பட்டவர்களுக்கு குருக்கள், பந்துக்கள், சினேகிதர்கள் முதலியவர்களெல்லோரும் யுத்தத்தில் நசிக்கின்றார்களே அதனால் நமக்குப் பாபம் சம்பவிக்குமே என்னும் யோசனை கொஞ்சமேனும் இராது. மேலும், அவர்கள் மித்திர துரோக முடையவர்களாயிருக்கின்றார்கள். எப்படியெனில், பூர்வம் வாரணாபுரத்தில் புரோசனென்பவனால் அரக்கு மாளிகையைக் கட்டி வைத்து அதில் எங்களைக் குடியிருக்கச்செய்து கொல்ல நினைத்தானல்லவா? அப்பொழுது விதுரனது சகாயத்தினால் அந்த யுக்திகளைத் தெரிந்துகொண்டு அந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டோ மல்லவா? இஃதன்றியும் அவர்கள், தர்மபுத்திரரை வரவழைத்து விநோதார்த்தமாய் சகுனியோடு சூதாட்டம் ஆடுவித்து எல்லாவற்றையும் தோற்கச் செய்து எங்களைக் காட்டிற்கு அனுப்பவில்லையா? மேலும், நீர் எங்கள் பக்ஷமாய் தூதுசென்றபோது உள்ளுக்குள்ளே உம்மைக் கொல்வதற்கு பிரயத்தநப்படவில்லையா? இவைபோல் அநேக காரியங்களைச் செய்தார்களல்லவா? இப்பேர்ப்பட்ட மித்திர துரோகிகளுக்கு இது புண்ணியம், இதுபாபம், இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது என்னும்விவேகம் எவ்விதமாய் உண்டாகும்? வம்சநாசனம் செய்வதனாலும் மித்திர துரோகம் செய்வதனாலும் உண்டாகும் பாபம் இப்பேர்ப்பட்டதென்று துர்யோதனாதிகள் தெரிந்து கொள்ளாவிடினும் குலக்ஷயத்தினால் உண்டாகும் தோஷம் இப்பேர்ப் பட்டதெனத் தெரிந்துகொண்ட நாம் ஏன் பாபகார்யத்தில் பிரவேசிக்கவேண்டும்.

குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குருதர்மா ஸ்ஸநாதநாஃ
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்ந மதர்மோபி பவத்யுத 40.

அதர்மாபி பவாத் க்ருஷ்ண ! ப்ரதுஷ்யந்தி குல ஸ்த்ரிய:
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே
வர்ணஸங்கர:. 41.
ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்யச
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்த பிண்டோதக க்ரியா: 42.
தோஷை ரேதை: குலக்நாநாம் வர்ண ஸங்கரகாரகை:
உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாஸ்ச ஸாஸ்வதா: 43.
உத்ஸந்ந குலதர்மாணும் மநுஷ்யாணும் ஜநார்த்தந !
நரகே நியதம் வாஸோ பவதீ த்யநுஸுஸ்ரும:. 44.

குலக்ஷயத்தினுல் உண்டாகும் தோஷம் எப்பேர்ப்பட்டதென்றால், இந்த உலகத்திலுள்ள ஜனங்களில் அநேக குலங்கள் (ஜாதிகள்) ஏற்பட்டு அந்தந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடந்துகொண்டு வருகின்றனவல்லவா? ஒரு குலத்தில் கட்டுத்திட்டம் செய்துவரும் பெரியதனக்காரன் (நாட்டான்) நசித்துவிட்டால் அப்பொழுது அந்தக்குலம் க்ஷீணித்து விடுகின்றது அதனுல், அந்தக் குலத்தில் உள்ளவர்களெல்லாம் தலைத்தலைக்குப் பெரியதனம் வகித்து அவரவர்களின் இஷ்டம்போல் நடந்துகொண்டு வருவதனுல் அதுவரையில் நடந்தேறிவந்த ஆசாரங்களெல்லாம் கெட்டுவிடுவதற்குக் காரணமாயிருக்கின்றது. அப்படி அந்த ஆசாரம் எப்பொழுது கெட்டுவிடுகின்றதோ அப்பொழுதே அந்தக் குலத்தில் இல்லாத நூதன ஏற்பாடுகள் உண்டாகின்றன. அப்படிப்பட்ட அநாசாரம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுதே குலபந்துத்வம் கெட்டு ஸ்திரீகள் கட்டுக்கு அடங்காமல் பரபுருஷகவனமுடையவர்களாய் துஷ்டகாரியங்களில் பிரயத்தினப்பட்டு பிரஷ்டத்துவமடைந்து, அதனுல் பிறந்த புத்திரனைத் தந்தையானவன் தனக்குப் பிறந்த புத்திரனுக நினைக்கின்றன். இதனுல், அவன் செய்யப்பட்ட சிரார்த்த, தர்ப்பணம்

அவர்களின் பிதுர் தேவதைகளுக்குச் சேராமல் வியர்த்த மாகின்றன. எப்படியென்றால், கேசவனென்பவனுடைய பார்யாள் மாதவனென்பவனுடன் வியபிசரித்து உண்டாகிய கோதண்டனென்னும் புத்திரன், மாதவனென்பவனே தனது நிஜமாகிய தந்தையென்று அறியாமல் தன் தாயாருக்குப் பர்த்தாவாகிய கேசவனே தன் தந்தையென்றெண்ணிக்கொண்டிருந்து கேசவன் மரண மடைந்தவுடன், அவனுக்குப் பிண்டோதகாதி கிரியைகளைச் செய்கின்றான். அந்தப் பிண்டோதகாதி கிரியைகள் கேசவனுக்கு எப்படிச் சேரும். ஆதலால், அந்தப் பிதுர் தேவதைகளும் பிண்டோதகாதி கிரியைகளில்லாமல் நரகத்தில் விழுகின்றார்கள். குலக்ஷயமானது, இவ்வளவு அநர்த்தங்கள் உண்டாவதற்குக் காரணமாயிருக்கின்றது.

ஆகையினால், ஓ ஜநார்த்தநா! நசிக்கத்தக்க ஆசாரங்களையுடைய குலத்திலுள்ள மனிதர்களுக்கு நரகவாசம் தப்பாமல் உண்டாகுமென்று பெரியோர்கள் சொல்லுவதையும் கேட்கின்றோமல்லவா?

அஹோ பத மஹத்பாபம் கர்த்தும் வ்யவஸிதா வயம்
யத்ராஜ்ய ஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜந முத்யதா:. 45.

பத! ஐயையோ! அஹோ! இது என்ன ஆச்சர்யம். நாம் இப்படிப்பட்ட குலக்ஷயகாரணமாகிய பந்து ஜனவதை செய்வதற்காக எப்பொழுது பிரயத்நப்படுகின்றோமோ அப்பொழுதே மகாபாதகத்தைச் செய்ய பிரயத்நப்பட்டவர்களாகின்றோமல்லவா? நல்லது, இப்படிப்பட்ட மகா பாதகத்திற்கு மடி பிடிக்கும் காரணம் யாதெனில், ராஜ்ஜியத்தின் ஆசையேயல்லவா? இந்த ராஜ்ஜிய சுகம் எவ்வளவு காலம் அனுபவிப்போம். சொல்பகாலமேயல்லவா? அதன்பிறகு, இந்த மகாபாதகத்தினால் உண்டா

ரும் சாஸ்வதநரகபாதை அனுபவிக்கவேண்டியதா யிருக்கின்றதல்லவா ? இவ்வளவு யோசனையில்லாமல் இப்படிப்பட்ட,

யதி மா மப்ரதீகார மஶஸ்த்ரம் ஶஸ்த்ர பாணய:
தார்த்தராஷ்ட்ரா ரணே ஹந்யு ஸ்தந்மே க்ஷேமதரம் பவேத். 46.

மகா பாதகங்களுக்கு நான் உட்படமாட்டேன்; காண்டீபத்தைக் கையிலெடுத்து யுத்தஞ்செய்வதில்லை, நான் நிராயுத பாணியாயிருந்தபோதிலும் துர்புத்தியுடைய துர்யோதனுதிகள் ஆயுதபாணிகளாயிருந்து என்னைக் கொன்றபோதிலும் அதனுல் எனக்கு க்ஷேமகரமே உண்டாகும். எப்படியென்றால், ஆயுதம் இல்லாதவனுடன் யுத்தம் செய்வது தர்மவிருத்த மாதலால், அவர்களுக்குப் பாபம் அதிகரித்து சாஸ்வதமான நரகத்திற்குப் பாத்திராாகின்றார்கள். ஆதலால், அவர்கள் என்னைக்கொல்லும் விஷயத்தில் எனக்குச் சந்தோஷமே யல்லாமல் பயமென்பதே இல்லை.

சஞ்ஜயன் உவாச.

ஏவமுக்த்வார்ஜுந ஸ்ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத்
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம் விக்நமாநஸ:. 47.

சஞ்ஜயன் சொல்லுகின்றான்:—ஓ திருதராஷ்ட்ர மகாராஜனே! அர்ஜுனன் இவ்விதமாய் கிருஷ்ணமூர்த்தியுடன் சொல்லித் துக்கத்துடன் துடிக்கிற மனமுடையவனுய்த் தனது ஹஸ்தத்திலிருக்கும் தநுஸ்ஸைக் கீழே நழுவவிட்டுத் தனது ரதத்தின்மீது உட்கார்ந்தான்.

அத்யாய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் சுலோகம்.

ஸத்யோமோக்ஷாதிகாரீ ஸபவதிகனுய: பாபபீருர் விக்ருஷ்ண
ஸ்தாத்ருக் பார்தோ ஸ்திதஸ்மாந் நிஜகுலதமநாத்ராஜ்யபோ
காந்நிவ்ருத்த:, மத்வைவம்யாதவேஸோ ப்யநு பதமகரோத்
ப்ரஹ்ம வித்யோபதேஸமும் பூப்ருத் தர்மாநுரூபம் ததிதமயி
ஹிதம்த்வாதி மாத்யாக்ருதம்.

அர்ஜுநன் பாபத்திற்குப் பயந்தவனாயும், துராசை யில்லாதவனாயும், பிரம்மநிஷ்டைக்குத் தகுந்தவனாயும், கௌரவர்களைக்கொன்று ராஜ்ஜியசுகத்தை அடைய இச்சை யில்லாதவனாயும் இருக்கின்றானென்று ஸ்ரீ கிருஷ்ணபக வான் எண்ணினவராய் க்ஷத்திரியர்களுக்கு வேண்டிய பிர ம்ம வித்தையை உடனே உபதேசித்தார் என்னும் அம்சம் இந்த முதல் அத்யாயத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ பகவத்கீதா ஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஸாஸ்த்ரே ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதே அர்ஜுநவிஷாத யோகோநாம ப்ரதமோத்யாய:.

இது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுநனை யுத்தத்திற்கு பிரயத்நப்படுத்தி லோகோத்தாரணார்த்தமாய் கிருபைசெய்த பிரம்ம வித்தையென்னும் யோகசாஸ்திரத்தை உபநிஷதர்த்த பிரதிபாதகமாகிய பகவத்கீதா சாஸ்திரத் தில் அர்ஜுந விஷாத யோகமென்னும் பிரதமாத்தியா யம் ஸமாப்தம்.

அர்ஜுநன் மாயாந்தகாரத்தினால் (மாயையென்னும் இருளினால்) மூடப்பட்டவனாயிருப்பதால், அந்த மாயை யென்னும் இருளை நீக்கி பிரம்மஞானத்தினால் அர்ஜுநனுக் கும் உலகத்திலுள்ள யாவத்திராளுக்கும் ஞானக்கண்களைத் திறப்பித்து மோக்ஷமடைவதற்காக இந்தக் கீதையை முன் உபதேசிக்கப்போகிறார்.

ஸ்ரீ க்ருஷ்ண பரப் பிரஹ்மணே நம:.

இரண்டாமத்தியாயம் – ஸாங்கிய யோகம்.

தம் ததா க்ருபயாவிஷ்ட மஶ்ருபூர்ணா குலேக்ஷணம்
விஷீதந்த மிதம் வாக்ய முவாச மதுஸூதந:. 1.

ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே! நான் இதுவரையில் முதல் அத்தியாயம் 28-வது, சுலோகம்முதல் 47-வது; சுலோகம் வரையில் சொல்லியதுபோல், அர்ஜுனன் பந்து ஜனங்களின்மீது கனிகரமுடையவனாயிருந்து அவர்களைக் கொல்லவேண்டியதாய் நேரிட்டதே என்னும் துக்கத்தினால் கண்களில் ஜலம்ததும்பி வியசனப்பட்டு யுத்தம் செய்ய இஷ்டமில்லாததனால் தன் கையிலிருக்கும் தநுஸ்ஸை நழுவவிட்டு ரதத்தின்மீது சாய்ந்திருக்கும் சமயத்தில் மதுசூதநன் அர்ஜுனனைப் பார்த்து பின்வருமாறு சொல்லப்போகின்றார்.

ஸ்ரீ பகவாந் உவாச.

குதஸ்த்வா கஶ்மல மிதம் விஷமே ஸமுபஸ்திதத்
அநார்யஜுஷ்ட மஸ்வர்க்ய மகீர்த்திகர மர்ஜுந!

ஓ அர்ஜுனா! சத்துருக்களை தஹிப்பிக்கிறவனே! நீ பயத்தை அடையாதே! அது உனக்குத் தகுந்ததல்ல! நீ இப்பொழுது அடையும் மனோவியாகூலத்தினால், இஹலோகத்தில் (இவ்வுலகத்தில்) அபகீர்த்தியும் பரலோகத்தில் சொர்காதி போகங்களுக்கு ஆனியும் உண்டாக்கத் தக்கதாயிருக்கின்றது. வியாகூலமானது பாமரர்களாகிய அஞ்

ஞானிகளுக்கே இருக்கவேண்டியதேயன்றி உன்னைப்போன்ற சூரனுக்கு இருக்கப்பட்டதல்ல. அப்படியிருக்க, உபய சைன்யங்களும் யுத்தத்திற்கு முயன்று ஒருவர்மேல் ஒருவர் பாணப்பிரயோகம் செய்யும் சமயத்தில் இப்படிப்பட்ட மனோவியாகூலமான குழப்பம் என்னகாரணத்தினால் இந்த யுத்தகாலத்தில் உனக்கு உண்டாயிற்று? இது, மிகவும் ஆச்சர்யமாயிருக்கின்றது. அப்படி உண்டாவதற்குக் காரணம் தெரியாமலிருக்கின்றது.

க்லைப்யம் மாஸ்மகம: பார்த்த ! நைதத்வ ய்யுபபத்யதே
க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்பல்யம் த்யக்தவோத்திஷ்ட பரந்தப ! 3.

சத்ருக்களைப் பரிதபிக்கச் செய்வதில் சாமர்த்தியமுடைய ஓ பார்த்தா ! இப்படிப்பட்ட அதைரியம் அற்பர்களுக்கேயன்றி உனக்கு உண்டாகத் தகுந்ததல்ல. ஏனென்றால், நீ சத்ருக்களைத் தஹிக்கப்பட்டவனென்று மிகவும் கீர்த்தியைப் பெற்றவனாயிருக்கின்றாய். ஆதலால், நீ இந்த துச்சமாகிய மனக்கவலையை விட்டு யுத்தத்திற்கு எழுந்திருக்கக்கடவாய்.

கதம் பீஷ்ம மஹம் ஸங்க்யே த்ரோணஞ்ச மதுஸூதந !
இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹா வரிஸூதந ! 4

ஓ மதுசூதநா ! சத்ரு சம்ஹாரம் உனக்கு சுபாவமாதலால் கௌரவர்களைக் கொல்லுகொல்லென்று பிரரேபணைச் செய்கின்றாய். "அஹிம்ஸா பரமோ தர்ம" என்று சொல்லப் பட்டிருப்பதனால் இதுவே உத்தம தர்மமென்று நிச்சயித்துக்கொண்ட நான் சத்ருக்களைக் கொல்லமாட்டேன். நீர்சொல்வதையோசிக்குமளவில் நான் இதுவரையில் முதல் அத்தியாயம் 28-வது, சுலோகம் முதல் 46-வது சுலோகம் வரையில் சொல்லிவந்த வார்த்தைகளெல்லாம் சத்ரு சைன்யங்களைப்பார்த்துப் பயப்பட்டு யுத்தம்செய்ய இஷ்டமில்லாதவனா யிருக்கின்றேனென்று நீர் அபிப்பிராயம்

பட்டதுபோல் தோன்றுகின்றது. அப்படி எண்ணவேண்டாம். பந்துஜனங்களை எப்படிக்கொல்வது என்னும் கனிகரத்தினுலேயேயன்றி வேறல்ல. ஆனுல், துஷ்டர்களான துர்யோதனுதிகளையும், பந்துக்களையும் அவர்களுக்கு சகாயமாய்வந்த பூதர்களையும் கொல்லுவது நியாயமேயல்லவா என்று சொல்லுகின்றீரோ? நான் அவர்களின் விஷயமாய் இவ்வளவு யோசனை செய்யவேண்டிய அவஸ்யமில்லை. அவர்களுடன் சேர்ந்திருக்கும் பீஷ்மத் துரோணர்களைக் குறித்து மாத்திரமே யோசிக்கவேண்டும். பீஷ்மர் எப்படிப்பட்டவரென்றுல் எங்களுக்குப் பாட்டனுராயும், ஆதியிலிருந்து எங்களை மிகவும் பிரீதியுடன் காப்பாற்றினவராயும், எப்பொழுதும் எங்களுடைய க்ஷேமத்தைக் கோரப்பட்டவராயும் இருக்கின்றவர். துரோணரோ, தநுர் வித்தையைக் கற்பித்த ஆசாரியரும், தமது சிஷ்யர்கள் எல்லோரைக்காட்டிலும் என்னிடத்தில் அதிக பிரேமையுடையவருமாயிருக்கின்றூர். இவர்கள் இருவரும் பாண்டவர்களாகிய எங்களிடம் த்வேஷமுடையவர்கள் அல்லர். எப்பொழுதும் எங்களிடம் பக்ஷபாத முடையவர்களாகவே இருக்கின்றவர்கள் இவர்களிருவரும் பூஜிக்கத் தகுந்தவர்களேயன்றி த்வேஷிக்கத் தகுந்தவர்கள் ஆகார்கள். இப்படிப்பட்ட இவர்களை யுத்தத்தில் எதிர்த்து எனது பாணத்தினுல் இவர்களைக் கொல்வதற்குக் கைகள்தான் எப்படி யெழும்.

குரூ நஹத்வாஹி மஹாநுபாவாந் ஸ்ரேயோ
போக்தும் பைக்ஷ்மபீஹ லோகே,
ஹத்வார்த்த காமாம்ஸ்து குரூ நிஹைவ
புஞ்ஜீய போகாந் ருதிர ப்ரதிக்தாந். 5.

இவர்களைக் கொல்லுவதனுல் ராஜ்ஜியசுகம் அனுபவிக்கலாமென்று சொல்லுகின்றீரோ? அந்த சுகம் அர்த்தகாமாத்மகமானதும், நசிக்கத்தக்கதுமே யன்றி சாஸ்வத

மாய் அனுபவிக்கப்படுவதன்று. நாம் இவ்வுலகில் ஜீவித்திருக்கும்வரையில் அதனை அனுபவிக்கத் தக்க க்ஷணபங்கமானதாயிருக்கின்றது. இப்படிப்பட்ட துச்சபோகத்தை அனுபவிப்பதற்காக மகாநுபாவர்களாகிய இவர்களைக் கொன்று அதனால் பரலோகத்தில் சாஸ்வத நரகத்திற்குப் பாத்திரர்களாவதைப் பார்க்கிலும் மாட்சிமைதங்கிய ஆசாரியர்களைக் கொல்லாமலிருப்பதே மேன்மையல்லவா? ஆனால், அவர்களைக் கொல்லாவிடில் நமக்கு ராஜ்ஜியம் லபிக்காது என்று சொல்லுகின்றீரோ? அது நமக்கு லபிக்க வேண்டாம். இத்தகைய க்ரூர க்ருத்தியங்களைச் செய்து ராஜ்ஜியம் பெறுவதைக்காட்டிலும் பிக்ஷாந்நத்தைப் புஜித்திருப்பது மேன்மையல்லவா?

நசைதத்வித்ம: கதரந்நோ கரீயோ
யத்வாஜயேம யதிவா நோ ஜயேயு:,
யாநேவஹத்வா நஜிஜீவிஷாமஸ்தே வஸ்திதா:
ப்ரமுகே தார்த்தராஷ்ட்ரா:. 6.

அப்படியல்லாமல், எங்களிடம் அதிக பிரீதியையுடைய மஹாநுபாவர்களாகிய இந்த பீஷ்மத் துரோணர்களைக் கொல்லுவோமாகில் அவர்கள் மாண்டபிறகு நாங்கள் ஜீவித்திருப்பதனால் பிரயோஜனமில்லையே! போகட்டும், அவர்களை மாத்திரம் கொல்லாமல் மற்றவர்களைக் கொல்லலாமென்றாலோ, அதற்கும் சாத்தியப் படமாட்டாது. ஏனெனில், இந்த பீஷ்மத் துரோணர்களே அந்தக் கௌரவ சைன்னியங்களுக்கு நாயகர்களாய் முதலில் நின்றிருக்கின்றார்கள். அவர்களைக் கொன்றாலேயன்றி மற்றவர்களைக் கொல்லுவதற்குச் சாத்தியமாகாது. நல்லது, ஒருவேளை அபிமானத்தையும் விட்டு அவர்களையும் கொல்லத் துணிந்தாலோ அப்படிச்செய்வதனால் நமக்கு பிரயோஜனம் உண்டாகுமென்று நிச்சயிப்பது எப்படி? ஏனென்றால்

அவர்களிருவரும் மஹா பலபராக்கிரமசாலிகளல்லவா? எப்படியென்றால், பீஷ்மர் பரசுராமனை ஜயித்தவரும், துரோணர் பாண்டவர்களாகிய எங்களுக்கும், கௌரவர்களாகிய துர்யோதனாதிகளுக்கும் அஸ்த்திராசார்யரும் அல்லவா? இப்படிப்பட்டவர்களைக் கொல்வோமென்றாவது, ஜயிப்போமென்றாவது நாம் எண்ணக்கூடுமா! நம்மைப் பார்க்கிலும் அவர்கள் மிகவும் பலபராக்கிரம சாலிகளாதலால், அவர்களே நம்மை ஜயிப்பார்கள். இவைகளையெல்லாம் யோசிக்குமளவில் இப்பொழுது நாம் யுத்தம் செய்தல் அல்லது செய்யாதிருத்தல் ஆகிய இந்த இரண்டில் எது சிரேஷ்டமோ அதை அறியாமலிருக்கின்றேன்.

கிருஷ்ணன்:— அர்ஜுநா! பீஷ்மத் துரோணர்கள் மஹாநுபாவர்களென்றும், மிகவும் பல பராக்கிறமசாலிகளென்றும் பாண்டவ பக்ஷபாதமுடையவர்களென்றும், கௌரவர்களுடன் யுத்தத்திற்கு பிரயத்திநப்பட்டால் அந்த சைன்யத்திற்கு அவர்கள் சூரர்களாதலால் அவர்களை கொல்ல நேரிடுமென்றும் நீ இதுவரையில் அறிந்திருக்கலாமல்லவா? அப்படியிருக்க, இப்பொழுது உபய சைன்னியங்களும் யுத்த ஸந்நத்தர்களாய் நின்று பாணத்தை பிரயோசிக்கும் சமயத்தில் இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன.

கார்பண்ய தோஷோப ஹத ஸ்வபாவஃ
ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸம்மூட சேதாஃ,
ய ச்ரேய ஸ்யாந்நிஸ்சிதம் ப்ரூஹி தந்மே
ஸிஷ்யஸ்தே ஹம் ஸாதி மாம் த்வாம் ப்ரபந்நயம். 7.

அர்ஜுநன்:—ஆம், வாஸ்தவமே, பீஷ்மத்துரோணர்கள் பூஜ்ஜியர்களென்றும், பாண்டவர் பக்ஷபாதமுடையவர்களென்றும் நான் இது வரையில் அறிவேன்; ஆயினும் கௌரவர்கள் ராஜ்ஜியத்தை அபகரித்ததனால் குரு, பந்து, மித்திராதிகளிடத்தில் உண்டாயிருந்த பக்தி விசுவாசங்களை

மறந்தவனாய் தீர்க்கயோசனை செய்யாமல் யுத்தத்திற்கு பிரயத்தனப்பட்டேன். ஆனால், இப்பொழுது அவர்களெல்லோரையும் ஒரேகாலத்தில் யுத்தரங்கத்தில் பார்ப்பதனால் சொல்ப ராஜ்ஜியசுகத்தின்பொருட்டு இவர்களை யெல்லாம் கொல்லநேர்ந்ததே என்னும் கனிகரத்தினால் என்மனம் மிகவும் பரிதாபமடைகின்றது. இப்போது என்ன செய்யவேண்டுமோ அதனை அறியாமலிருக்கின்றேன். நீர் சர்வஞ்ஞமூர்த்தி யாதலால் உமது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளத் தக்கவனா யிருக்கின்றேன். நான் உமது சிஷ்யன். உம்மைச் சரணமடைந்தேன். சரியாய் யோசித்து யுக்தமானதை நிச்சயித்துச் செய்யவேண்டியதை எனக்கு ஆஞ்ஞாபிக்கவும் கிருஷ்ணா!

நஹி ப்ரபஶ்யாமி மமா பநுத்யா த்யச்சோக
முச்சோஷண மிந்த்ரியாணாம்.
அவாப்ய பூமா வஸபத்ந ம்ருத்தம்
ராஜ்யம் ஸுராணா மபி சாதிபத்யம். 8

ஆனால், ஆஞ்ஞாபிக்கும் விஷயத்தில் நீர் ஒரு விஷயம் மாத்திரம் சரியாய் ஆலோசிக்கவேண்டியதா யிருக்கின்றது. அஃதென்னவெனில், குரு பந்து மித்திரர்களைக் கொல்ல நேர்ந்ததே என்று எனக்கு இப்பொழுது உண்டான துக்கம் மஹத்தானதேயன்றிச் சாமான்யமானதன்று இந்தத் துக்கத்தினால் எனக்கு இந்திரிய பலமும் தப்பிப்போகின்றது. இப்பொழுது ஜயாபஜய நிர்ணயங்கள் தெரியாமலிருப்பதனாலேயே இப்படி துக்கப்படுகின்றேனென்றும், ஒருவேளை யுத்தத்தில் நான் ஜயித்து தனகனக (தனம், பொன்) வஸ்திர வாஹனாதி சமஸ்த ஐஸ்வர்யங்களினால் நிறைந்திருக்கும் ராஜ்ஜியத்தைச் சம்பாதித்தபோது இந்தத் துக்கம் உண்டாகமாட்டாதென்றும் யோசிக்கின்றீரோ? எவ்வளவேனும் அப்படி யோசிக்கவேண்டாம். துக்க

மானது இந்த ராஜ்ஜியமேயல்ல, இதற்குமேலான தேவேந்திரபதவியே லபித்தபோதிலும் மாறாது. இந்த சோகத்தைப் போக்கடிக்கும் வஸ்து எனக்கு ஒன்றும் காணப்படவில்லை

ஏவ முக்த்வா ஹ்ருஷீகேஶம் குடாகேஶః பரந்தப:
நயோத்ஸ்ய இதி கோவிந்த முக்த்வா தூஷ்ணீம் பபூவஹ. 9

சஞ்சயன் சொல்லுகின்றான் :—ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே! சத்துருக்களை தஹிக்கச்செய்கிற அர்ஜுனன் இதுவரையில் நான் சொல்லியதுபோல் (அ. 2. சுலோ, 4-முதல் 8-வரையில், ஸ்ரீ கிருஷ்ணனிடம் சொல்லி, உபய சைன்யங்களின் மத்தியிலுள்ள ரதத்தில் தநுர்ப்பாணங்களை கீழேவைத்து ரதத்தின்மீதே சாய்ந்தவனாய், மறுபடியும் கோவிந்தனைப் பார்த்து, நான் யுத்தம்செய்வதில்லையென்று தீர்மானமாகச் சொல்லிச் சும்மா இருந்துவிட்டான். ஆஹா இஃதென்ன ஆச்சர்யம் !!

தமுவாச ஹ்ருஷீகேஶః ப்ரஹஸந்நிவ பாரத !
ஸேநயோ ருபயோர் மத்யே விஷீதந்த மிதம் வச:. 10

ஓ திருதராஷ்ட்ர மஹாராஜனே ! இப்படி உபய சைன்யங்களின் மத்தியில் வியசனப்பட்டுக் கொண்டிருக்கும் அர்ஜுனனைப்பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவனது தயாளத்துவ ஹிருதயத்தையும், புஜபலபராக்கிரமத்தையும் அறிந்தவராதலால் அவன் யுத்தம்செய்ய இப்படி வியசனப்படுபவனல்லவனென்றும், குரு பந்து மித்திர ஜனாதிகளின் மேல் உண்டாயிருக்கும் பக்தி விசுவாசங்களினால் அவர்களைக் கொல்வதற்குக் கைமெழும்பாமல் வியசனப்படுகின்றானென்றும் தெரிந்துகொண்டவரா யிருந்தாலும், தான் பூபாரம் நிவாரணார்த்தமாய் அவதரித்த ஸ்ரீமந் நாராயணமூர்த்தி யாதலால், தான் அவதரித்த காரியம் நிறைவேறுவதற்கு அர்ஜுனனை யுத்தத்திற்கு பிரயத்தினப்

படுத்துவதற்காக அர்ஜுநனைப் பார்த்து பரிஹாசம் செய்பவரைப்போலச் சிரித்தவராகச் சொல்லுகின்றார்.

ஸ்ரீ பகவாந் உவாச.

அசோச்யாநந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஸ்ச பாஷஸே
கதாஸூநகதாஸூம்ஸ்ச நாநுசோசந்தி பண்டிதா꞉. 11.

ஓ அர்ஜுநா! உன் விஷயத்தைப் பார்க்குமளவில் மிகவும் விசித்திரமாயிருக்கின்றது. எப்படியென்றால், நீசொல்லுகின்ற வார்த்தைகளோ சகலதர்மங்களையும் அறிந்த பண்டிதர்களுடைய வார்த்தைகளைப்போல் இருக்கின்றது. துக்கிக்கப்படாத பீஷ்மத் துரோணர்களின் மரணத்தைக் குறித்துத் துக்கிப்பதைப் பார்த்தால் எந்த தர்மங்களையும் அறியாத பாமரனைப்போல் காணப்படுகின்றாய்: வார்த்தையிலோ விவேகிகளைப்போல் பேசுகின்றாய்; அஃதெப்படி என்றால், பீஷ்மத் துரோணர் இருவர்களும் பெரியோர்களென்றும், பூஜ்யர்களென்றும், அவர்களை கொல்வது தர்மமல்லவென்றும் சொன்னாயல்லவா? அவர்கள் இப்பொழுது உனது சத்துருக்களாகிய கௌரவசைன்யத்திற்கு ஆதிபத்தியம் வஹித்து உங்களுடன் யுத்தம்செய்ய முயன்று ஆயுதபாணிகளாய் வந்திருக்கின்றார்களல்லவா? யுத்தத்தில் ஆயுதபாணியாய் வந்தவன் பிரம்மஞான சம்பந்நனாயிருந்தபோதிலும் அவனைக் கொல்வதனால் பாபமில்லையென்று தர்மசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இப்பொழுது யுத்தத்தில் உன்னைக் கொல்வதற்கு ஆயுதபாணிகளாய் வந்திருக்கும் பீஷ்மத் துரோணர்கள் எப்பேர்ப்பட்ட மஹாநுபாவர்களாயிருந்தபோதிலும் அவர்களைக்கொல்வது அதர்மமென்று நினைப்பது வியர்த்தமே யல்லவா?

ஓ கிருஷ்ணமூர்த்தியே! இவர்களைக் கொல்வது அதர்மம் அல்லவென்று சொன்னீரல்லவா? இவ்விருவர்களிலும்

பீஷ்மருடைய விஷயம் இருக்கட்டும். துரோணாசார்யர் பிராம்மணோத்தமரல்லவா? இவர் சாமான்ய பிராம்மணராயிருந்தபோதிலுமே இவரைக்கொல்வது பாதகமாயிருக்க, பிராம்மணர்களில் சிரேஷ்டமானவரும், எங்களுக்குக் குருவுமாகிய இவரைக் கொல்வது எங்களுக்குப் பாபமல்லவா?

கிருஷ்ணன்:—ஓஹோ! நீ அவ்வாறாகவா என்னுகின்றாய்? அதிலுள்ள தர்ம சூக்ஷ்மத்தை நீ அறியவில்லையே! நீ சொல்லியதுபோல் பிராம்மணரைக் கொல்வது பாபகார்யமே! சாந்தமே குடிகொண்டுள்ள பிராமணனாயிருந்தாலும் அவன் ஆயுதங்களைத் தரித்து யுத்தரங்கத்தில் வந்து நின்றுவிட்டால் அவனைக் கொல்வதே தர்மமென்று தர்மசாஸ்திரங்களும், வேதங்களும் முறையிடுகின்றன. ஆதலால், இப்பொழுது துரோணாசார்யர் ஆயுதபாணியாய் உன்னுடன் யுத்தம்செய்ய வந்திருக்கின்றாரல்லவா? அப்படிப்பட்டவரைக் கொல்வது அதர்மமல்ல.

ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இப்பொழுது நீர் சொல்லியதை யோசிக்குமளவில் இந்த பீஷ்மத் துரோணர்களைக் கொல்வது பாபகாரியமல்லவென்று தோன்றுகின்றது. அப்படியிருக்க துஷ்டர்களாகிய துரியோதனாதிகளைக் கொல்வதனால் பாபம் உண்டாகுமென்று எப்படி யோசிக்கலாம்? ஆயினும், இப்பொழுது எனக்கு உண்டாயிருக்கும் துக்கத்திற்கு அதுவே முக்கியகாரணம் அல்ல; எனக்கு குருக்களாயும் பந்துக்களாயும் இருக்கப்பட்டவர்களைக் கொல்வதற்கு இஷ்டமில்லாமல் வியசனப்படுகின்றேன்.

கிருஷ்ணன்:—அப்படி வியசனப்படுவது அறியாத் தன்மையினாலேயேயன்றி வேறல்ல. நீ ஆத்மா நாத்ம விவேகம் அறியாதவனாயிருப்பதுபோலக் காணப்படுகின்றாய்! அப்படி ஆத்மா நாத்ம விவேகமுடையவர்கள் ஜீவித்திருக்கப்பட்டவர்களைக் குறித்தேனும், இறந்தவர்

-களைக் குறித்தேனும், இப்படி வியசனப்படமாட்டார்கள். அஃதெப்படி யென்றால் சொல்கின்றேன் கேள் :—

இதுவரையில் நீ சொல்லி வந்ததில் குலக்ஷயத்திற்குக் காரணபூதர்கள் நரலோகத்திற்குப் போவார்களென்றும், துர்யோதனாதிகள் மித்திரத் துரோஹாதி பாபகார்யங்கள் செய்ததனால் அவர்களுக்கு நரகப்ராப்தி உண்டாகுமென்றும், அவர்களைக் கொல்லாமலிருப்பதனால் உனக்குப் புண்ணியலோகம் பிராப்திக்குமென்றும் இவைமுதலான சங்கதிகளைச் சொல்லிக்கொண்டு வந்தாயல்லவா. இவர்கள் யுத்தரங்கத்தில் இறந்தபிறகு, புண்ணிய லோகத்திற்கேனும், அல்லது பாபலோகத்திற்கேனும் எப்படிப்போவார்கள்?

அர்ஜுனன்:—இவர்களின் சரீரங்கள்மாத்திரம் இறக்கின்றதேயொழிய ஆத்மா இறப்பதில்லை. இவ்விடத்தில் இந்த தேஹத்தைவிட்டபோது இவர்களின் ஆத்மா, புண்ணிய லோகத்திற்கேனும் அல்லது பாபலோகத்திற்கேனும் போகின்றது.

கிருஷ்ணன்:—ஆனால், இந்த தேஹம் வேறு ஆத்மா வேறு என்றல்லவா உனது அபிப்பிராயம்.

அர்ஜுனன்:—ஆம்: இந்த தேகம்வேறு, ஆத்மாவேறுதான். தேகம் வீட்டைப்போன்றது; ஆத்மா வீட்டில் குடியிருப்பவனைப்போன்றது. ஒரு வீட்டில் குடியிருப்பவன் அந்த வீட்டைவிட்டு வேறு வீட்டிற்கு எப்படிக் குடி போகின்றானோ அதுபோல், இந்த ஆத்மா இத்தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிக்கின்றது. (இதுவிஷயம் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய" த்தில் பரமாத்மா சரீரத்தில் குடியிருந்து கிளம்பிவிடுதல் என்பதைப்பார்க்க.)

கிருஷ்ணன் :—நல்லது அப்படியானால், இந்த யுத்தரங்கத்தில் பீஷ்மத் துரோணர்கள் இறந்தால் இவர்களின் ஆத்மாக்கள் எப்படியாகும்?

அர்ஜுனன் :—அவர்களின் ஆத்மா, பரலோகத்திற்கே போகும்.

கிருஷ்ணன் :—பரலோக மென்றால், புண்ணியலோகமா? அல்லது பாபலோகமா?

அர்ஜுனன் :—புண்ணிய லோகத்திற்கே போகும். ஏனென்றால் அவர்கள் மஹான்கள் : எப்பொழுதும் புண்ணியகார்யங்களைச் செய்தவர்களே யொழிய பாபகார்யங்களைச் செய்தவர்களல்லர் ; ஆதலால், அவர்களுக்கு சொர்க்காதி புண்ணியலோகமே லபிக்குமென்றுதோன்றுகின்றது.

கிருஷ்ணன் :—நல்லது, அவர்களின் ஆத்மா புண்ணிய லோகத்தை அடையுமல்லவா! அப்படி அவ்விடம் சென்ற பிறகு அவர்கள் இவ்வுலகில் அனுபவித்த சுகத்தைவிட அதிக சுகத்தை அனுபவிப்பார்களா? அல்லது கஷ்ட தசையை அனுபவிப்பார்களா?

அர்ஜுனன் :—அவர்கள் இவ்விடத்தில் அனுபவித்த சுகத்தைக்காட்டிலும் அதிக சுகத்தையே அனுபவிப்பார்களேயன்றி துக்கத்தை அனுபவிக்கமாட்டார்களென்றே தோன்றுகின்றது.

கிருஷ்ணன் :—அவர்கள் அவ்விடத்தில் மோக்ஷத்தை அடையத்தக்க யோக்கியதை யுடையவர்களாயிருந்து எப்பொழுதும் மோக்ஷ சாம்ப்ராஜ்ஜியத்தை அனுபவிக்கின்றார்களல்லவா? அப்படி யிராவிட்டால் அவர்களின் புண்ணியத்திற்குத்தக்க சௌக்கியத்தை அனுபவித்தபிறகு, "க்ஷீணே புண்யே மர்த்யலோகே விஸந்தி" என்னும் பிரமாணரீதியாய் புண்ணியம் முடிந்தவுடன் அவர்கள் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரவேண்டுமல்லவா? அப்பொழுது, அவர்களுக்கு இதைவிட மேலாகிய ஜன்மம் இங்கு உண்டாகுமென்று எண்ணுகின்றாயா? அல்லது, தாழ்ந்தஜன்மம் உண்டாகுமென்று எண்ணுகின்றாயா?

அர்ஜுநன்:—அவர்கள் புண்ணிய புருஷர்களாதலால் அவர்களுக்கு இதைவிட மேலாகிய ஜன்மமே அங்கு உண்டாகுமென்று தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! இப்பொழுது உன்வார்த்தையால் என்ன ஏற்படுகின்றதென்றால், நீ இப்பொழுது யாரைக்குறித்து வியசனப்படுகின்றாயோ அப்படிப்பட்ட பீஷ்மத்துரோணர்கள் இந்த யுத்தரங்கத்தில் மரணமடைந்தால் பரலோகத்தில் இதைவிட மேலாகிய சுகத்தை அநுபவிப்பார்களென்றும், அவர்கள் மறுபடியும் இவ்வுலகில் ஜன்மிக்கவேண்டியதாய் நேரிட்டால் இதைவிட மேலான ஜன்மமெடுப்பார்களென்றும் ஏற்படுகின்றதல்லவா? அப்படிப்பட்ட இவர்களைக்குறித்து நீ வியசனப்படுவதேன்? இது அப்படியிருக்கட்டும். உன்னுடைய சத்ருக்களாகிய துர்யோதனாதிகள் மரணமடைந்தால் அவர்களுக்குப் பரலோகத்தில் எப்படிப்பட்ட கதியுண்டாகுமென்று எண்ணுகின்றாய்!

அர்ஜுநன்:—அவர்கள் ராஜ்ஜியத்தை அபகரித்தவர்களும், மித்திர துரோஹிகளும், பாபாத்மர்களுமாதலால் அவர்களுக்கு நரலோகமே பிராப்தியாகுமென்றும், மறுபடியும் அவர்கள் இவ்வுலகில் ஜன்மிக்கவேண்டியதாய் நேரிட்டால் இதைவிடத் தாழ்ந்த ஜன்மமே உண்டாகுமென்றும் தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—அவர்களுக்கு அப்படி உண்டாவதனால் உனக்கு ஏதாகிலும் வியசனமுண்டாகுமா?

அர்ஜுநன்:—அவர்கள் எனக்கு விரோதம் செய்தவர்களாதலால் அவர்களுக்குச் சம்பவிக்கும் துற்கதியைக் குறித்து எனக்கு வியசனமுண்டாகாது. அவர்களுக்கு அப்படி உண்டாவதனால், துக்கத்திற்குப் பதிலாய் சந்தோஷகரத்தையே உண்டாக்கும்.

கிருஷ்ணன்:—நல்லது, நீ யாரைக்குறித்து எதற்காக வியசனப்படவேண்டும்?

அர்ஜுநன்:—பீஷ்மத் துரோணாதிகள் மரணமடைந்தால் அவர்களுக்கு ஸத்கதியே உண்டாகும். அந்த விஷயத்தில், எனக்கு வியசனம் ஒன்றுமேயில்லை. ஆனால், நமது எதிரில் இல்லாமல் போகின்றார்களே என்று வியசனப்படுகின்றேன்.

"அர்ஜுநன் மோஹத்தினால் ஆசார்யர்களையும் பந்துக்களையும் எப்படிக் கொல்லுகிறதென்பதாய்த் துக்கப்படுகின்றானல்லவா? அந்தத் துக்கத்தைப் போக்கடிப்பதற்காக இனி சொல்லப்போகும் சுலோகத்தில் பகவானுனவர் தத்வோபதேசம் செய்யப்போகின்றார்.'

நத்வேவாஹம் ஜாதுநாஸம் நத்வம் நேமே ஜநாதிபா:
நசைவ நபவிஷ்யாம ஸ்ஸர்வே வயமத:பரம். 12

ஓ அர்ஜுநா! நான் இவ்வளவுதூரம் சொல்லியும், மறுபடியும் விஷயம் தெரியாமலேயிருக்கின்றாய்; நீயாகிலும், நானாகிலும், நமது எதிரிலிருக்கும் இந்த ராஜர்களாகிலும், மற்ற யாராயிருந்தபோதிலும் ஒருபோதிருந்தும் மற்றொருபோதில்லாமலும் இருப்பதுண்டா? நீ இதுவரையில் எத்தனையோ ஜன்மங்களெடுத்து இப்பொழுது இந்த ஜன்மம் எடுத்திருக்கின்றாயல்லவா? அப்படியிருக்க நீ துக்கப்படுவது எதைப்பற்றி? தேகத்தைப்பற்றியா அல்லது ஆத்மாவைப்பற்றியா? தேகம் போய்விடுகின்றதே என்று வியசனமுண்டாயிருந்தால், ஒரு தேகம் போகவும் மற்றொரு தேகம் வரவுமாகவே இருக்கிறபடியால், ஜடமாகிய தேகம் ஒருநாள் அழிவது நிச்சயம். நிச்சயமாய் அழியும் சொபாவமுடைய தேகத்தைக்குறித்து நீ வியசனப்படுவதனால் அழியாமலிருக்குமோ? ஜடமாகிய தேகத்தைக்குறித்து நீ

வியசனப்படவேண்டியதேன்? 'ஆத்மா போய்விடுகின்றதென்பதைப்பற்றி வியசனப்படுவதானால், பின் சொல்லப்போகிற பல சுலோகங்களினாலும் பரமாத்மா எப்படி நித்தியனோ அப்படியே ஜீவனும் நித்தியனென்று சொல்லப்பட்டிருப்பதால் அழிவற்ற சொபாவத்தையுடைய ஆத்மாவைக்குறித்து வியசனப்படவேண்டிய காரணமேயில்லை. தேகத்தை அடைவதும் விடுவதும் ஜீவனுடைய காரியமே. தேகமும் ஜீவனும் ஒன்றாயிருந்தால், தேகம்போனால் ஜீவனும் போய்விட வேண்டியதல்லவா? ஒரு தேகத்தை விடுவதும் மற்றொரு தேகத்தை அடைவதும் ஜீவனுடைய காரியமென்று சொல்லப்பட்டிருப்பதனால் தேகமே ஆத்மாவல்ல. ஆகையால், நீ துக்கப்படவேண்டாம். இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால் பகவானைப்போல் ஜீவனாகிய நீயும் அநாதி நித்தியனென்று ஏற்படுகின்றது. இத்தேகத்தைவிட்டு இன்னும் எத்தனையோ ஜன்மங்கள் எடுக்க வேண்டியவனாயிருக்கின்றாயல்லவா? இப்படிப்பட்ட விஷயத்தில் நீ இதுவரையில் இல்லாமலிருந்தாயென்றும், இப்போது மாத்திரம் இருக்கின்றாயென்றும், இனிமேல் இல்லாமலிருப்பாயென்றும் எண்ணலாமா?

அர்ஜுனன்:—அப்படி எண்ணலாகாது. நான் முன்னிருந்தவனே: இப்பொழுதும் இத்தேகத்துடன் இருக்கின்றேன்: இனிமேலும் ஏதோ ஒருதேகத்தை அடையவேண்டியவனாய் இருக்கின்றேன். சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலங்களிலும் இல்லாமல் இருப்பவனல்ல.

கிருஷ்ணன்:—அதுபோலவே நாமும் நமது எதிரிலிருக்கும் இந்தராஜர்களும் மற்றும்யாவத்திராளும் மூன்று காலங்களிலும் இருக்கப் பட்டவர்களேயல்லவா? அப்படியிருக்க பீஷ்மாதிகள் இல்லாமற்போகின்றார்களே என்னும் துக்கம் உனக்கேன் உண்டாயிற்று?

அர்ஜுனன்:—என் அபிப்பிராயத்தை நீர் சரியாய் கிரஹித்ததுபோல் காணப்படவில்லை. பீஷ்மாதிகள் பூர்த்தியாய் சொரூப நாசமாய்ப் போகின்றார்கள் என்றல்ல நான் வியசனப்படுவது ; அவர்கள் இந்த ஜன்மத்தில் எந்தத் தேகத்துடன் எனக்குப் பாட்டனாயும், குருவாயும் ஏற்பட்டு என்னிடத்தில் எவ்வளவோ பிரேமாதிசய முடையவர்களாகச் சதா என் க்ஷேமத்தைக் கோரிக்கொண்டிருந்தார்களோ அப்படிப்பட்ட அந்தத் தேகத்தைவிட்டு அவர்கள், மஹான்களாதலால் அவர்கள் வகையில் கிருதார்த்தர்களானபோதிலும், அப்படிப்பட்டவர்களின் சகவாசமும் ஆதரணையும் எனக்கு தப்பிவிடுகின்றதல்லவா என்று துக்கப்படுகிறேன்.

கிருஷ்ணன்:—ஓஹோ? அதுவா, உன் துக்கத்திற்குக் காரணம்? அப்படி எண்ணுவதும் சரியல்ல? எப்படியென்றால், சொல்லுகிறேன் கேள்:—

தேஹிநோஸ்மிந் யதாதேஹே கௌமாரம் யௌவனம் ஜரா
ததா தேஹாந்தர ப்ராப்திர்தீரஸ்தத்ர நமுஹ்யதி. 13.

இந்த பிரபஞ்சத்தில் மனிதர்கள் ஜன்மித்தவுடன் யாதொன்றும் தெரியாத சிசுவாயிருந்து பிறகு சில நாட்களில் பால்யதசை அடைந்து ஆட்டம், பாட்டங்களில் காலங்கழித்து, சிலநாள் சென்றபிறகு யௌவனதசையையடைந்து ஸ்திரீ, சந்தன, புஷ்ப, தாம்பூலாதிகளுடன், போகமனுபவித்துக் காலங்கழித்து சிலநாள் சென்றபிறகு கிழத்தனம் உண்டாய், கண் முதலாகிய இந்திரியங்களினுடையவும், கை கால் முதலாகிய அவயவங்களினுடையவும் பலம் குறைந்து கடைசியில் கையில் ஓர் ஊன்றுகோலாகினும் இல்லாமல் நடக்கச் சக்தியற்றவனாய் இருந்து பிறகு மரணமடைகின்றானல்லவா? அப்படியாவதற்குக் காரணமென்ன? ஆத்மா எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கப்

பட்டவனல்லவா? அப்படியிருக்க முதல் பிறந்தபோது எப்படி யிருந்ததோ அப்படியேயிராமல் தேகம் இத்தனை விதங்களாய் மாறவேண்டியதேன் ?

அர்ஜுனன்:—ஓ சுவாமி நீர் சொல்லியது வாஸ்தவமே. அது மனிதர்களுக்கு மாத்திரமே அன்று. பிரதி ஜீவஜந்துக்களுக்கும் இப்படியே மாறுகின்றதைப் பார்க்கின்றோம். இதனை யோசிக்குமளவில், இது தேகதர்மமெனத் தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—ஆம், நீ சொல்வது சரிதான். இப்படி மாறுபடுவது, தேகதர்மமேயன்றி ஆத்ம சொபாவமன்று. ஆகையினாலேயே, ஒரு மனிதன் மரணமடைந்தால் தேகதர்மனானென்று சொல்வதற்குக்காரணமாயிருக்கின்றது. ஆதலால், தேஹதாரியாகிய ஆத்மா, அந்தத் தேகத்தில் எப்படி பால்ய யௌவன கௌமார தசைகளை அடைகின்றதோ அதுபோல் அந்தத் தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பது ஆத்மாவிற்கு இயல்பாயிருக்கின்றது. ஆதலால், பீஷ்மாதிகளினுடைய ஆத்மாவும் தேகதர்மானுகுணங்களாய் அந்தத் தேகத்தை விடுவது சகஜமாயிருக்கின்றது. ஞானியானவன் இப்படிப்பட்ட விஷயங்களில் உன்னைப்போல்வியசனப்படமாட்டான். உனக்குஇப்படிப்பட்ட ஞானமில்லாததனால் நீ வியசனப்படுகின்றாய்.

அர்ஜுனன்:—நீர் சொல்லியவைகளெல்லாம் நிஜமே. எவ்வளவு வைராக்கியசீலனாயிருந்தபோதிலும் இந்த பந்துஜனங்கள் மரணமடைந்தால் கொஞ்சமேனும் வியசனமில்லாமலிருக்குமா ?

மாத்ரா ஸ்பர்சாஸ்து கௌந்தேய ! ஸீதோஷ்ண ஸுகது:கதா:
ஆகமாபாயினோ அநித்யாஸ்தாம் ஸ்திதிக்ஷஸ்வ பாரத ! 14.

கிருஷ்ணன்.—ஓ அர்ஜுனா ! நீ சொல்லியது வாஸ்தவமே. பந்துமித்திராதிகள் மரணமடைந்தபோது எப்படிப்

பட்டவனுக்காயினும் வியசனம் உண்டாகலாம்; ஆனால், அந்த வியசனம் க்ஷணமாத்திரமேயன்றி நித்தியமானதல்ல. எப்படியென்றால், இந்திரியங்கள் விஷயங்களோடு சம்பந்தப்படாவிட்டால் சீதோஷ்ணாதி சுகதுக்கங்களை உண்டாக்கமாட்டா. அவைகள், விஷயங்களில் அபிமானத்தோடு கூடிய சம்பந்தந்தான் சீதோஷ்ண சுகதுக்கங்களை உண்டாக்குவதற்குக் காரணம். அந்த சுகதுக்கங்கள் இந்திரியங்களுக்கு விஷய சம்யோகம் உண்டாயிருக்கும்வரையில் மாத்திரம் இருக்குமேயன்றி அதன் பிறகு இருக்கமாட்டா. விஷய சம்யோகம் எப்படிப்பட்டதென்றால், கண்களுக்கு ஏதாகிலும் ஒருவஸ்து காணப் பட்டபொழுது சக்ஷு (கண்) இந்திரியத்திற்கு விஷய சம்யோகம் உண்டாகின்றது. ஆனால், காணப்படும் பதார்த்தம் நல்லரூபமாயிருந்தால் நேத்திரோச்சவம் செய்கின்றது. அதன் வழியாய் மனதிற்குச் சில ஆனந்தம் உண்டாகின்றது. அந்த வஸ்துவானது கோரரூபமாகவாவது விகாரரூபமாகவாவது இருந்தாலோ, அப்பொழுது அந்த வஸ்துவை திருஷ்டிப்பதற்கே பயங்கரமும், அஸஹ்யமும் உண்டாகின்றன. அன்றியும், இப்படிப்பட்ட வஸ்துவைப் பார்க்கவேண்டியதாய் நேர்ந்ததேயென்று மனதில் துக்கம் உண்டாகின்றது.

செவிகள் சங்கீதமுதலான நல்ல சப்தங்களைக்கேட்கும்பொழுது சந்தோஷமும், புலம்பல் முதலான சப்தங்களைக் கேட்கும்பொழுது துக்கமும் மனதில் உண்டாகின்றன. இவ்வாறாகவே, மற்ற இந்திரியங்களும் நல்ல விஷயங்களோடு சம்பந்தப்படுவதனால் சுகத்தையும், கெட்டவிஷயங்களில் சம்பந்தப்படுவதனால் துக்கத்தையும் அடைகின்றன. அந்தந்த விஷயங்களிலுள்ள சம்பந்தம் நீங்கினவுடனே சுகதுக்கங்கள் உண்டாகமாட்டா. ஆதலால், இந்த பீஷ்மாதிகளின் களேபரம் (பிணம்) உனது திருஷ்டிக்குக்

காணப்படும் வரையில் உனக்கு வியசனம் உண்டாகும். அதனை க்ஷணமாத்திரம் சகித்துக்கொண்டிருந்தால் பிறகு அது தானே உன்னை விட்டு விலகிப்போம். ஆதலால், அப்படிப்பட்ட அபிமானத்தோடு கூடிய விஷயேந்திரிய சம்பந்தங்களை விட்டுவிடக்கடவாய்.

யம் ஹி ந வ்யதயந்த்யே தே புருஷம் புருஷர்ஷப !
ஸமது:கஸுகம் தீரம் ஸோ ம்ருதத்வாய கல்பதே. 15

ஆனால், எல்லோரும் அப்படியே சகித்துக்கொண்டிருப்பதற்குச் சாத்திய மாகமாட்டார், சுக துக்கங்களாகிய இவ்விரண்டையும் சமமாகப் பார்ப்பது திடசித்த முடையவர்களுக்கேயன்றி இதரர்களுக்கு அதாவது, பேதைத்தனமுடையவர்களுக்கு அவ்வாறு செய்ய சாத்தியமாகாது. இப்படிப்பட்ட கஷ்ட சாத்தியமான கார்யத்தை உன்னைச் செய்யும்படிச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், நீ புருஷ சிரேஷ்டனேயன்றி சாமான்னியனல்ல; ஆகையால் இவ்வாறு செய்ய உன்னால் சாத்தியமானதே ; இப்பேர்ப்பட்ட கஷ்ட சாத்தியமான கார்யத்தை ஏன் செய்யவேண்டும் என்று நினைக்கின்றாயோ? சொல்லுகின்றேன் கேள்:— எவன் இந்த மாத்ரா ஸ்பர்சத்தினால் உண்டாகும் சுகதுக்கங்களினால் சலிக்காமலிருக்கின்றானோ அப்பேர்ப்பட்டவனுக்கே திடஞானம் உண்டாகும்.

நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத:
உபயோரபி த்ருஷ்டோந்த ஸ்த்வநதோ ஸ்தத்வ தர்ஸிபி:. 16

"ஸத்" என்றால், நித்தியமான (கெடாத) பதார்த்தம் "அஸத்" என்றால், அநித்தியமான (நசிக்கத்தக்க) பதார்த்தம். ஸத்பதார்த்தத்திற்கு அநித்தியமும், அஸத்பதார்த்தத்திற்கு நித்தியமும் எந்தக்காலத்தும் உண்டாகமாட்டா. இவ்விரண்டின் யதார்த்தத்தை தத்வவேத்தர்களும், பெரி

யோர்களும் அறிவார்களேயன்றி மற்றவர்கள் அறியமாட்டார்கள்.

அர்ஜுனன்:—"ஸத்" என்றால் எது? "அஸத்" என்றால் எது?

கிருஷ்ணன்:—என்னிடத்தி லிருக்கும் பரமாத்மாவும் உன்னிடத்திலும் நம் எதிரிலிருக்கும் ராஜர்களிடத்திலும் இன்னும் இந்த பிரபஞ்சத்திலுள்ள பிபீலிகாதி பிரம பர்யந்தம் சமஸ்த ஜந்துக்களிடத்திலும் இருக்கப்பட்ட ஜீவாத்மாவும் எந்தக் காலத்தும் நசிக்கத்தக்கதல்ல. ஆதலால், இந்தப் பரமாத்மா ஜீவாத்மாக்கள் "ஸத்" என்றும், மற்று திருஸ்ய (கண்களுக்குக் காணப்படும்) பிரபஞ்சமெல்லாம் நசிக்கப்படுவதாதலால் "அஸத்" என்றும் சொல்லப்படும்.

அர்ஜுனன்:—உம்மிடத்தில் இருப்பது பரமாத்மாவென்றும், நான் முதலான மற்ற ஜந்துக்களில் இருப்பது ஜீவாத்மாவென்றும் சொன்னீரல்லவா? அங்ஙனம் கூறுவதற்குக் காரணமென்ன? பரமாத்மா ஜீவாத்மாக்கள் வெவ்வேறு வஸ்துக்களா? அப்படியானால், அவ்விரண்டிற்கும் உள்ள பேதமென்ன? நான் முதலான மற்ற ஜந்துக்களில் வியாபித்திருப்பது ஜீவாத்மா என்றீரல்லவா? அந்த ஜீவாத்மாவொன்றே சகல ஜந்துக்களிலும் வியாபித்திருக்கின்றதா? அல்லது, அந்தந்த ஜந்துக்களில் வெவ்வேறு ஜீவாத்மாக்கள் இருக்கின்றனவா? இந்த ஜீவாத்மா பரமாத்மாக்கள் மாத்திரம் எப்படி நாசமில்லாமல் இருக்கும்?

கிருஷ்ணன்:—"பரமாத்மா" என்றால், சகல பிரபஞ்சங்களின் சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு ஹேதுபூதமாகிய பரப்பிரம்மத்திற்குப் பெயர். "ஜீவாத்மா" என்றால், அந்தப் பரப்பிரம்மத்தின் அம்ச(பாக)மேயன்றி வேறல்ல. அதுவே சகல ஜந்துக்களிலும் வியாபித்திருக்கின்றது. ஆனால், அது பிரகிருதி சம்பந்தத்தை அடைந்திருப்பத

ஞல் அதற்கு ஜீவாத்மா என்று சொல்லப்படுகின்றது. பிரகிருதி என்றால் மாயை. இதற்கே அவித்யையென்றும், அஞ்ஞானமென்றும் நாமங்களுண்டு. பரமாத்மாவானது அப்பேர்ப்பட்ட அஞ்ஞான சம்பந்தமில்லாமல் சுயம்பிரகாசமாயிருக்கும். அதனாலேயே அது பரமாத்மா எனப்படும். அந்தப் பரமாத்மா பிறப்பு, இறப்பு, உயர்வு, தாழ்வு, முதலான எவ்வித விகாரங்களுமில்லாததாய் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும். அப்படிப்பட்ட பரமாத்மாவே உன் முதலானவர்களிடத்து இருக்கும் ஆத்மா. இது, பிரகிருதி சம்பந்தமான அஞ்ஞானத்துடன் கூடியிருப்பது. அப்படி அஞ்ஞானத்துடன் கூடியிருக்கும் வரையில் பிறப்பு, இறப்பு அதாவது, ஒரு தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்தல் முதலான விகாரங்களை அடைவதனால் அது ஜீவாத்மாவென்றே சொல்லப்படுகின்றது. இந்த ஜீவாத்மாவிற்கு எப்பொழுது அஞ்ஞானம் விட்டு ஒழிகின்றதோ அப்பொழுதே அது பரமாத்மாவில் கலக்கும். அப்படி கலந்தபிறகு அதற்கு ஜநநமரணாதி விகாரங்கள் உண்டாகமாட்டா. பரமாத்மாவில் கலத்தலே "மோக்ஷம்." எனப்படும். இதற்கு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—

இவ்வுலகில் சுயமாயிருக்கப்பட்ட சொர்ணத்திற்குத் தங்கம் அல்லது அபரஞ்சி யென்றும், செம்பு முதலான இதர லோகத்தினால் சேர்ந்திருக்கும் தங்கத்திற்குப் பொன்னென்றும் நாமபேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன அல்லவா? அப்படி நாமபேதங்கள் உண்டான காரணத்தையும், அவற்றின் பேதத்தையும் நீ அறிவாயா?

அர்ஜுனன்:—ஆம் அறிவேன். தங்கம் சொயமானது என்றால், வேறு எந்தலோகங்களுடனும் கலவாமலிருப்பது; அதனை எத்தனைவிசை உருக்கினாலும் அல்லது புடம் வைத்

தாலும் அது தன் மாற்றிலாவது எடையிலாவது குறைவதும் உயர்வதுமில்லை. பொன்னைப் புடம்வைத்தால் மாற்று உயர்ந்து எடை குறைந்துவரும். அப்படியே, புடம் போடப்போட அதிலிருக்கும் மலினங்க (அழுக்குக)ளெல்லாம் ஒழிந்து அதுவும் சோயமான தங்கமேயாகும். அதன் பிறகு அதை எத்தனை புடங்களிட்டாலும், அது மாற்றும் எடையும் குறையாமலும் உயராமலும் தங்கமேயாகும்.

கிருஷ்ணன்:—ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கும் உள்ள பேதங்களும் அதுபோலவே ஆமென்று அறிக. ஜீவாத்மா பொன்னைப்போன்றதும், பரமாத்மா தங்கத்தைப் போன்றதும் ஆகும். தங்கத்தை எத்தனைப்புடங்களிட்டாலும் அது தன் மாற்றிலாயினும் இடையிலாயினும் எப்படி மாறுவதில்லையோ அதுபோல், பரமாத்மாவும் எப்பொழுதும் எந்த விகாரங்களையும் அடையாமல் ஒரே விதமாயிருக்கும். பொன்னானது புடங்களால் எடை குறைந்துகொண்டும், மாற்று உயர்ந்துகொண்டும் வரவர அதிலிருக்கும் மலினங்களெல்லாம் நீங்கி சோயமான வர்ணமாய் தங்கத்துடன் எப்படி கலக்கின்றதோ அதுபோல், ஜீவாத்மாவிற்கும், அநேக ஜன்ம ஸம்ஸ்காரத்தினால் அஞ்ஞானம் நீங்கிக்கொண்டே வரவர, கடைசியில் பூர்த்தியாய் நீங்கினபிறகு பரமாத்மாவில் கலக்கின்றது.

அர்ஜுனன்:—நீர் பரமாத்மாவென்றும், நான் முதலானவர்கள் ஜீவாத்மாவென்றும் சொன்னீரல்லவா? எங்களைப்போல் நீரும் மாத்ருகர்ப்பத்தில் ஜனித்து கரசரணாதி அவயவங்களையுடைய தேகத்துடன் கூடி சம்சாரசம்பந்தமாகிய கர்மங்களைச் செய்துகொண்டிருக்கின்றீரே. இப்படியிருக்க, பரமாத்மாவிற்கு ஜீவாத்மாவைப்போல் ஜநநமரணாதி விகாரங்கள் இல்லையென்று நீர் சொல்லியவார்த்தையை எப்படி நம்பலாம்?

கிருஷ்ணன் :—பரமாத்மாவாகிய நான், லோகோத்தாரணார்த்தமாய் இந்தப் பூலோகத்தில் ஜநித்து ஜீவாத்மர்களாகிய உங்களுடன் கூடி நடித்துக்கொண்டிருந்த போதிலும் நான் தரித்துக்கொண்டிருக்கும் லீலா மானுஷ விக்கிரஹம், பார்க்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் மானுஷ ரூபமாகக் காணப்படுகின்றதேயன்றி மனுஷ்யர்களைப் போல் சோக மோஹ பயபிராந்தி முதலானவைகள் இல்லாதவனும், பிரகிருதி சம்பந்தமாகிய அஞ்ஞானத்தினால் மூடப்படாதவனும் இருக்கின்றேனென்று அறிக. என்னிடத்தில் இருக்கும் பரமாத்மா, இப்பொழுது நீ பார்த்துக்கொண்டிருக்கும் இந்தத் தேகத்தில் இருந்தபோதிலும், அல்லது, இந்தத் தேகத்தினின்றும் நீங்கியபோதிலும் பிரகிருதிசம்பந்தமாகிய அஞ்ஞானத்தினால் மூடப்படாமலிருக்கின்றது.

அவிநாஶிது தத்வித்தி யேந ஸர்வ மிதம் ததம்
விநாஶ மவ்யய ஸ்யாஸ்ய நகஸ்சித் கர்து மர்ஹதி. 17.

நான் இதுவரையில் சொல்லிவந்த பஞ்ச பூதங்களினால் உண்டாகிய சரீரம் நசித்தபோதிலும், அந்த தேகத்தைத் தரித்திருந்த ஆத்மாவானது எப்பொழுதும் நாசமில்லாமல் இருக்கும். நாசமில்லாத இந்த ஆத்மாவை வேறெந்தப் பதார்த்தமும் நசிக்கச் செய்யமாட்டா. ஒரு தேகம் மரணமடைந்தால், அத்தேகத்திலுள்ள ஆத்மாவும் மரணமடைகிறதென்று எண்ணுகின்றாயோ? அப்படி எண்ணவேண்டாம். அதற்குக் காரணம் என்னவென்றால், சொல்லுகின்றேன் கேள் :—

அந்தவந்த இமே தேஹா நித்ய ஸ்யோக்தா ஶ்ஶரீரிண:
அநாஶிநோ ப்ரமேயஸ்ய தஸ்மா த்யுத்யஸ்வ பாரதயு 18.

மரணமடைவது என்றால், சாஸ்வதமாயிருக்கப்பட்ட ஆத்மா, ஒரு தேகத்தினின்று மற்றொரு தேகத்தில் பிரவே

சிப்பதாம். ஆதலால், எந்தத் தேகத்தினின்று ஆத்மா கிளம்பிவிடுகின்றதோ அந்தத் தேகம்மாத்திரம் மரணமடைந்ததாகின்றது. அதிலிருந்த ஆத்மா, அத்தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிக்கும். அதில் சில நாள் குடியிருந்து அந்தத் தேகத்தையும் விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்து இப்படியே எப்பொழுதும் எதையோ ஒரு தேகத்தை ஆச்ரயித்துக்கொண்டே யிருக்கும். ஆகையால், அசத்தாகிய தேகாதி ஸர்வ பிரபஞ்சமும், கானல்ஜலத்தை முதல் பார்த்தவுடன் அது நிஜமாகிய ஜலம்போல் தோன்றி பிறகு அது ஜலமல்லவென்று அறிந்த ஒருவன் மற்றொருவனை நம்பும்படி ச்சொல்லியும், சமீபத்தில் அழைத்துப்போய்க்காட்டியும் அவன் ஸம்சயம் எப்படி நசிக்கப்படுகின்றதோ அதுபோல் நசிக்கப்படவேண்டும். அநேக ஜன்மங்களாய் செய்துவந்த புண்யவிசேஷத்தினால் சத்குருவை அடைந்து ஆத்மாவின் நிஜ சொரூபத்தைத் தெரிந்து ஜநந மரணாதி ரூபமாகிய தேகதாரணை விசர்ஜனங்களில்லாத அவஸ்தைகளை அடைந்தால், அப்பொழுது அந்த ஆத்மா, பரமாத்மாவுடன் ஐக்கியமாகுமேயன்றி, பஞ்ச பூதங்களால் உண்டாகிய தேகத்தைப்போல் சொரூப நாசமாகப்பட்டதல்ல. என்றால், பஞ்சபூதங்களினால் உண்டாகிய தேகம் மாத்திரம் நாசமடையத் தக்கதென்றும், ஆத்மா நித்தியமாகிய வஸ்துவென்றும் அறியவேண்டும். ஆதலால், பீஷ்மாதிகளினுடைய சரீரங்கள் மாத்திரம் நசிக்கின்றனவேயன்றி அவர்களின் ஆத்மா நசிக்க மாட்டா. நீ யுத்தம் செய்யக்கடவாய்.

ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யச்சைநம் மந்யதே ஹதம்
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே. 19.

இந்த ஆத்மா, ஒருவனால் எப்படிக் கொல்லப்படும்? தானும் எப்படி ஒருவனைக் கொல்லும்? ஒருவன் மற்றொரு

-வனால் கொல்லப்பட்டால் இவனுடைய சரீரம், அவனுடைய சரீரத்தினால் கொல்லப்படுகின்றதேயன்றி இவனுடைய ஆத்மா, அவனுடைய ஆத்மாவைக் கொல்லமாட்டாது. ஆத்மா, அவயவங்கள் இல்லாதது. ஆதலால், அது எவரையும் கொல்லாது: அல்லது, அது ஒருவராலும் கொல்லப்படாது. ஆத்மா, கொல்லுகின்றதென்று சொல்பவனும், கொல்லப்படுகின்றதென்று நினைப்பவனும் ஆகிய இவர்கள் இருவரும் தத்துவத்தை அறியாதவராவர். ஆதலால், நான் இப்பொழுது தெரிவித்த வேதமந்திர வாக்கியங்களை எண்ணிக் கௌரவர்கள் என் கைபால் கொல்லப்படுகின்றார்களென்றாகிலும், கௌரவர்களை நான் கொல்லுகின்றேனென்றாகிலும், எண்ணாமல் சர்வம் ஈசுவராக்கினையே என்று நினைத்து நிர்ப்பயமுடையவனாகயிருந்து யுத்தம் செய்.

ந ஜாயதே ம்ரியதேவா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வாநபூய:
அஜோ நித்திய ஶ்ஶாஶ்வதோ யம் புராணோ நஹந்யதே ஹந்ய
மாநே ஶரீரே. 20.

ஆத்மா, ஒருபோது பிறப்பதும் மற்றொருபோது இறப்பதுமில்லை, என்றால், சிருஷ்டிகாலத்தில் பிறப்பதும் பிரளயத்தில் இறப்பதுமில்லை. ஆதியில் இல்லாமல் மத்தியில் நூதனமாய் உண்டானதல்ல: புராதன (பழைய) புருஷனாயிருக்கின்றான். சிருஷ்டி ஸ்திதி லயங்களில், பிறப்பது வளருவது இறப்பது முதலான மாறுதல் தேகத்திற்கேயன்றி ஆத்மாவிற்கல்ல. தேகம் நசித்தபோதிலும் ஆத்மா நசிக்கமாட்டாது. ஜாயதே, அஸ்தி, வர்த்ததே, விபரிணமதே, அபக்ஷீயதே, நஸ்யதே என ஷட்பாவ (ஆறுவித) விகாரமென்று சொல்லப்படும். ஜாயதே - பிறப்பது, அஸ்தி - இருப்பது. வர்த்ததே-வளருவது. விபரிணமதே-மாறுவது. என்றால், பால்யன் யௌவனமாவது.

யௌவனமுடையவன் வார்த்திக்ய (கிழத்தன) மாவது. அபக்ஷியதே-இளைப்பது. நஸ்யதி-இறப்பது. முதலானவைகளையாம். ஸாஸ்வத சப்தத்தினால் ஸ்திரரூப முடையவனென்று எப்படிச் சொல்லலாமென்றால், ஸாஸ்வத்+பவ:=ஸாஸ்வதம். என்றால், எப்பொழுதும் ஒரேவிதமாய் இருக்கப்பட்டவன். எப்பொழுதும் சலிக்காதவன். புராண-சப்தத்தினால் அநாதியானவனென்று எப்படிச் சொல்லலாமென்றால், அவயவங்கள் வளருவதனால், வளர்ந்தவனென்று நூதனமாகச்சொல்லப்படும். இப்படி வளருதல் இல்லாதவனாதலால் ஈசுவரனுக்கு புராதனபுருஷனென்று பெயர் வந்தது. (இந்த சுலோகம் வேதமந்திரம். ஈசுவரனைப் போல் ஜீவனும், பிறப்பு இறப்பில்லாதவன் ஈசுவர சொரூபத்தைப்போல் ஆத்மாவும், சமமான ரூபமுள்ளவன் என்று சொல்லப்படுகிறான்.(இதற்குப் பிரமாணம்:—. சுலோகம். "உத்பத்யம் ப்ரளயம் சைவ பூதாநாமாகதிம். கதிம், வேத்தி வித்யா மவித்யாஞ்ச ஸவாசயோ பகவாநிதி" ப்ருதிவி அப் தேஜஸ் வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களின் உத்பத்தியும் அவைகளின் நாசமும் வருகிற ஆபத்தும் ஞான ஞானமும் எவன் அறிகின்றானோ அவனே பகவான் எனப்படுவான். ஆனால், பிறப்பு இறப்புள்ளவனாக. என் சொல்லவேண்டுமென்றால், தேகத்தை அடைவதும் விடுவதுமாயிருப்பதால் அஞ்ஞானிகள் பிறக்கின்றான், இறக்கின்றான் என்று வியவகரிக்கின்றார்கள். இந்தப் பிறப்பு இறப்பிற்கு வித்தாயிருப்பது மனது. இப்படிப்பட்ட மனதை நாசம்செய்தால் ஜீவனுக்குப் பிறப்பு இறப்பில்லாமல், கடாகாசம் மஹாகாசத்தில் ஐக்கியமாவதுபோல், கடத்தைப் போன்ற இந்த சரீரத்திலுள்ள ஆத்மா பரப்பிரம்மத்தில் ஐக்யமாகும்.

வேதா விநாஸிநம் நித்யம் ஏந மஜமவ்யயம்
கதம் ஸ புருஷ: பார்த்த! கம் காதயதி ஹந்தி கம். 21.

ஆதலால், ஒ அர்ஜுனா! இந்த ஆத்மா ஜன்மமில்லாதவனும், நித்யனும் அதாவது, எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கப்பட்டவனும், க்ஷீணிக்கப் படாதவனும், நாசரகிதனும், சாஸ்வதனும், பரிணாமங்களில்லாதவனும் ஆவானென்று எவன் அறிகின்றானோ அப்படிப்பட்ட புருஷன் மற்றொருவனை நான் கொல்லுகின்றேனென்றாகிலும், அல்லது கொல்லச்செய்கின்றேனென்றாகிலும் எப்படி நினைப்பான்? ஆனால், ஒ அர்ஜுனா! உலகத்தில் மனிதர்கள் வியாதியினாலும், ஆயுதங்களினாலும் மரணமடைவதைப் பார்த்து அவர்களின் ஆத்மாவும் மரணமடைகின்றதென்று பிரமிக்கின்றாயா? சொல்லுகின்றேன் கேள்:—

> வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
> நவானி க்ருஹ்ணாதி நரோபராணி
> ததா ஶரீராணி விஹாய ஜீர்ணா
> ந்யந்யானி ஸம்யாதி நவானி தேஹீ. 22.

ஆத்மாவிற்கு விநாசத்வம உண்டானபொழுது பிறப்பு இறப்பு அதாவது, ஒருவன் கிழிந்த பழைய வஸ்திரத்தைக் களைந்து புதியவஸ்திரங்களைத் தரிக்கும்போது, தான் எப்படி மாறாமல் இருக்கின்றானோ அதுபோல், வியாதி முதலானவைகளினால் சரீரம் நசித்தவுடன் ஆத்மா இந்தச் சரீரத்தைவிட்டு வேறு சரீரத்தில் பிரவேசிக்கின்றான். அப்படி எத்தனை சரீரங்களில் பிரவேசித்தபோதிலும் ஆத்மா எவ்வளவேனும் மாறுதலடையாமல் எப்பொழுதும் சுயம் பிரகாசமாயிருக்கின்றான். ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" 'கர்பத்தில் பிண்டம் தரிப்பது' என்பதைப் பார்க்க.) மரணமடைந்தது சரீரமேயன்றி ஆத்மாவல்ல. இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன்கேள். ஒரு சபையில் சேஷய்யனென்பவனை நீ பார்க்கின்றாய். அப்பொழுது அவன் வெள்ளை வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு

சிறிய தலுவத்தைப் புஜத்தின்மீது போட்டுக்கொண்டிருந்தான். சிலநாள் சென்றபிறகு மற்றொரு சபையில் தலைப்பாகை முதலிய உடுப்புகளுடன் இருந்தான். நீ அவ்விடம் சென்று அவனைப் பார்த்தபோது சேஷய்யனென்று நினைக்கின்றாயா, அல்லது வேறுமனிதனென்று நினைக்கின்றாயா?

அர்ஜுனன்:—வேறுமனிதனென்று எப்படி நினைக்கலாம்? சேஷய்யனேயென்று நினைக்கவேண்டும். ஏனென்றால், சேஷய்யனை நான் முதலில் பார்த்தபோது தான் கட்டிக்கொண்டிருந்த வஸ்திரங்களை அவன் மாற்றினனேயன்றி, தான் மாத்திரம் மாறவில்லை. அந்தமனிதனே யில்லாவிட்டாலல்லவோ, சேஷய்யன் இல்லையென்று சொல்லலாம்

கிருஷ்ணன்;—ஆகையினாலேயே, ஒரு தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசித்தபோது தேகம் மாத்திரம் மாறுகின்றதேயன்றி ஆத்மா மாறுவதும், நசிப்பதும் இல்லை. ஆதலால், இதை வாசிக்கப்பட்ட ஸகோதரிகளே, ஸகோதரர்களே உங்கள் குடும்ப ஸம்ரக்ஷணையில் யாவரேனும் தைவாநுகூலத்தினால் காலகதியடைந்தால் அவர்களுக்காக நீங்கள் துக்கப்படவேண்டாம். அவர்கள் நம்முடன்கூட வந்தவர்களுமல்ல, வரப்பட்டவர்களுமல்ல, சந்தையில் கூட்டம்போல் மத்தியில்வந்து மத்தியிலேயே சென்று விடுகின்றார்கள். அவர்களுக்காகத் துக்கிப்பதேன்.

நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் தஹதி பாவக:
நசைநம் க்லேதயந் த்யாபோ ந ஶோஷயதி மாருத:. 23.

அச்சேத்யோ யமதாஹ்யோ யமக்லேத்யோ ஶோஷ்ய ஏவச
நித்ய ஸ்ஸர்வகத: ஸ்தாணுரசலோ யம் ஸநாதந:. 24.

அவ்யக்தோய மசிந்த்யோய மவிகார்யோய முச்யதே
தஸ்மா தேவம் விதித்வைநம் நாநுஶோசிது மர்ஹஸி. 25.

இத்தேகம் ஆயுதங்களினால் வெட்டுப்பட்டபோதிலும், அக்கினியினால் தகிக்கப்பட்டபோதிலும், ஜலத்தினால் நனைக்கப்பட்ட போதிலும், காற்றினால் அலைந்து சோஷிக்கப் பட்டபோதிலும் இத்தேகத்திலிருக்கும் ஆத்மா அதனை விட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிக்கின்றதேயன்றி தேகத்துடன்கூடவே நசிக்கப்படமாட்டாது. அப்படி சேதிப்பது, தகிப்பது, நனைப்பது, சோஷிப்பது, நிந்திப்பது முதலானவைகள் சரீரத்திற்குச் சம்பந்தப்பட்டதேயன்றி ஆத்மாவிற்குச் சம்பந்தப்பட்டதல்ல. சரீரத்திற்கு மாத்திரம் மாறுதலுண்டேயன்றி ஆத்மாவிற்கு எப்பொழுதும் மாறுதலில்லை. இந்த ஆத்மா ஆயுதம், அக்னி, ஜலம், வாயு முதலானவைகள் எவற்றினாலும் நசிக்கப்படமாட்டாது. இது நித்தியமானது; என்றால், ஒருபோதிருந்தும், ஒருபோது இல்லாமல் இருப்பதுமல்ல. எப்பொழுதும், எதையோ ஒரு தேகத்தை ஆசிரயித்துக்கொண்டே யிருக்கும். ஸர்வகதம் என்றால், இந்த ஆத்மா, பிபீலிகாதி பிரம பரியந்தம் சகல ஜந்துக்களின் தேகத்தில் வியாபித் திருக்கப்பட்டது.

ஸ்தாணு. நிச்சலமானது; என்றால், தான் தரித்திருக்கும் தேகங்கள் அப்போதைக்கப்போது மாறினாலும் தான் மாத்திரம் மாறாமல் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும்.

இன்னும் இந்த ஆத்மசொரூபம் எப்படிப்பட்டதென்றால், ஞானேந்திரியங்களினாலும், கர்மேந்திரியங்களினாலும் அறியக்கூடாதவனென்பதற்குச் சுருதிப் பிரமாணமென்னவென்றால், "ந தத்ர சக்ஷுர் கச்சதி ந வாக்கச்சதி நோ மநஃ ந வித்மோ ந விஜாநீமஃ." ஆத்மா, கண்களுக்குக் காணப்படாதது. மனதினால் நினைப்பதற்குச் சாத்தியப்படாதது. இப்படிப்பட்டதென்று நிரூபித்துச் சொல்ல, வாக்கிற்குச் சாத்தியப்படாதது. இப்பேர்ப்பட்ட எந்த விகாரங்களும் ஆத்மாவிற்கு இல்லையென்று தத்வஞானிகள்

சொல்லுகின்றார்கள். ஒருதடவை சொல்லிய விஷயங்களைப் போலவே மறுபடியும் சொல்லுகின்றேனென்று யோசிக்கின்றாயோ? பரமாத்ம சொரூபம் இப்படிப்பட்டதென்று உன் மனதிற்கு நன்றாகப் பிடிப்படும்படி விஷயங்களை மாற்றி மாற்றித் தெரிவிக்கின்றேன். ஆதலால், ஆத்மா இப்படிப்பட்டதென்று தெரிந்துகொண்டு யுத்தம்செய்வதற்குத் துக்கப்படவேண்டாம்.

அத சைநம் நித்யஜாதம் நித்யம் வா மந்யஸே ம்ருதம்
ததபி த்வம் †மஹாபாஹோ நைநம் ஶோசிது மர்ஹஸி. 26.

ஓ அர்ஜுநா! ஆத்மதத்துவம் இப்படிப்பட்டதென்று நான் இதுவரையில் போதித்தேன். ஆதலால், மறுபடியும் இந்த ஆத்மா பிறக்கின்றவனென்றும்; இருக்கின்றவனென்றும் நினைக்கவேண்டாம். இந்த ஆத்மாவைக்குறித்து நீ துக்கப்படவேண்டாம்; ஏனென்றால், பிறந்தவன் இறப்பதும், இறந்தவன் மறுபடியும் பிறப்பதும் தப்பாதல்லவா? ஆதலால், பிறந்து இறந்துகொண்டிருக்கும் சுபாவமுடைய பீஷ்மாதிகள் இன்று உன்னால் கொல்லப்பட்டாலும், நாளைய தினம் மறுபடியும் தப்பாமல் பிறப்பார்கள்; பூர்த்தியாய் நாசமாவதானால் வியசனப்பட வேண்டியதுதான். நித்திரை செய்து எழுந்தவனைப்போல் இன்றைக்கிறந்து நாளையதினம் பிறப்பவர்களைக் குறித்து விசாரப்படவேண்டாம். இறந்தவர்கள் பிறப்பார்களல்லவா?

---

†"மஹாபாஹோ" என்றழைப்பது ஏனென்றால், யுத்தம் செய்வேனென்று ஆயுதபாணியாய் வந்த உன்னைப்போல் பராக்கிரமசாலிக்கு இப்படிப்பட்ட விசாரம் கூடாதென்றும், உனக்கு புஜபலமேயொழிய நல்லது கெட்டது என்று ஆலோசிப்பதற்குத் தகுந்த மனோபலம் இல்லாததனால் இப்படி துக்கத்தை அடைகின்றாய் என்னும் பாவனையுடன் சொன்ன வார்த்தையாகும்.

அர்ஜுநன்.—ஆம் வாஸ்தவமே.

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜந்மம்ருதஸ்ய ச
தஸ்மா தபரிஹார்யேர்த்தே நத்வம் சோசிது மர்ஹஸி. 27.

கிருஷ்ணன்:—பிறப்பதும் இறப்பதும் சுபாவமா யிருக்க பிறப்பு இறப்புகளை நிவர்த்திசெய்வதற்கு நீ கர்த்த னல்ல. ஆகவேண்டியது ஆகாமற்போகாது. இப்படிப் பட்ட விஷயங்களுக்கு நீ ஏன் விசாரப்படவேண்டும். பீஷ் மாதிகள் எப்பொழுதேனும் மரண மடையவேண்டியவர் களே யல்லவா? அவர்களுக்காக நீ துக்கப்படுவதேன். இன் னும் பந்துக்களென்னும் ஆசாபாசங்கள் உன்னைப் பாதிக் கின்றதா? (இதைக்குறித்து "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" ஞானமடையும் மார்க்கம் என்பதைப் பார்க்க) அவர்களைக்குறித்துச் சொல்லுகின்றேன் கேள்:—

அவ்யக்தாதீநி பூதாநி வ்யக்தமத்யாநி பாரத!
அவ்யக்தநிதநா ந்யேவ தத்ர கா பரிதேவநா. 28.

அர்ஜுநா! புத்திர பௌத்ர களத்திர மித்திராதி களின் முற்பிறப்பு நமக்குத் தெரியவரமாட்டா. அவர்கள் பிறந்த பின்புதான் நம்முடையவர்களென்று தோன்றி, பிரமையை உண்டாக்குகின்றார்கள். மறுபடியும் மரண மடைந்தபிறகு எப்படி ஆகின்றார்களோ தெரியவராது. மத்தியில் சிலநாள் மாத்திரம் நம்முடையவர்களென்று பிரமையை உண்டாக்கும் புத்திர மித்திராதிகளைக்குறித்து ஏன் வியசனப்படவேண்டும்? காணப்படும் வஸ்துக்களெல் லாம் நசிப்பது நிச்சயம். இது உன் மனதிற்குத் தெளி வாய்த் தெரியும்படி விவரித்துச் சொல்லுகின்றேன் கேள். இந்த பந்துக்களில் சிலர் உனக்கு முன் பிறந்தவர்களும் சிலர் உனக்குப் பின் பிறந்தவர்களுமா யிருக்கின்றார்களல் லவா? உனக்கு முன் பிறந்தவர்களுக்குப் பின் நீ பிறவாம ருந்தபோது அவர்களுக்கு என்ன பந்துவதா யிருந்தாய்?

அர்ஜுநன்:—ஓ ஸ்வாமி! அதை நான் எப்படிச் சொல்லுவேன்! யானும் அவர்களும் பிறப்பதற்கு முன்னே இவ்விடத்தில் இப்படி இருந்தோமென்று யாதொன்றுஞ் சொல்ல எனக்குத் தெரியவரமாட்டா.

கிருஷ்ணன்:—நல்லது, அவர்கள் இறந்த பிறகாயினும் எவ்விடத்தில் எப்படியிருக்கின்றார்களோ தெரியுமா?

அர்ஜுநன் :—அதுவுந் தெரியவரமாட்டா. அவர்கள் பிறந்து ஜீவித்திருக்குங்காலம் வரையில் எனக்குக் காணப்படுகின்றார்களே யன்றி, பிறப்பதற்குமுன்னும் இறந்த பின்னும் எவ்விடத்தில் எப்படி யிருப்பார்களோ எனக்குத் தெரியவராது. அவர்களுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமேனும் இருக்குமென்று தோன்றவில்லை.

கிருஷ்ணன்:—அப்படிப்பட்டவர்களுக்காக நீ வியசனப் படுவதேன்?

அர்ஜுநன்:—வாஸ்தவமே. யோசித்துப் பார்க்குமளவில் துக்கப்படவேண்டிய காரணம் யாதொன்றும் இல்லையென்றே தோன்றுகிறது. இந்த ஆத்மா பிறவாமுன்னே எவ்விடத்தில் எப்படி யிருந்ததோ, இறந்தபின்னே எப்படியாகின்றதோ தெரியாமலிருக்கின்றது. அது, மத்ய காலங்களில் மாத்திரம் கண்களுக்குக் காணப்பட்டு நமது பந்துக்களென்று பிரமிக்கச் செய்கின்றது. ஆஹா! இதென்ன விசித்திரம்! இந்த ஆத்மதத்வ மஹிமை மஹா கோசரமாயிருக்கின்றது.

ஆஸ்சர்யவத்பஸ்யதி கஸ்சிதேந மாஸ்சர்யவ த்வததிதைவ சாந்ய:
ஆஸ்சர்யவச்சைந மந்ய ஸ்ருணோதி ஸ்ருத்வாப்யேநம் வேத நசைவ கஸ்சித். 29.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! இந்த ஆத்மதத்வம் உனக்கு மாத்திரமேயல்ல, ஆத்மாவின் சுபாவம் இப்பேர்ப்பட்டதென வர்ணிப்பதற்குச் சாத்தியப்படாது. அது,

அற்புதமான வஸ்துவென்று உனக்கு இப்பொழுது
தோன்றுகின்றதல்லவா? பிரபஞ்சத்தில் அநேகர்களுக்கு
இது, இப்படியே தோன்றிக்கொண்டிருக்கும். ஆதலால்,
இதுவரையில் கண்டும் கேட்டும் இராத அற்புதவஸ்துவைத்
தெரிவித்தால் ஆச்சர்யம் உண்டாகும். தத்வமறியாத ஒரு
வன் சாஸ்திரங்களை வாசித்து பரபிரம்மம் இப்படிப்பட்
டது, அப்படிப்பட்டதெனத் தோன்றியவாறெல்லாம்
சொல்லிக்கொண்டிருப்பான் அதை மற்றொரு பாமரன்
ஆச்சர்யமாய்க் கேட்டுக்கொண்டிருப்பான், அது சரியல்ல.
அப்படி கேட்கப்பட்டவன் பிரம்மதத்துவத்தைத் தெரிந்து
கொள்ளமாட்டான். பிரம்மதத்துவ விசாரணையில் பகு
சாவதானமுடையவனு யிருக்கவேண்டும்.

சுரு || "ஸ்ரவணுயாபி பஹுபிர் யோ ந லப்யः ஸ்ருண்வந்தோபி
பஹவோ யம் ந வித்யுः, ஆசார்யோ வக்த்யகுமலே ஸ்ய
லப்தா வாஸ்சர்யோ ஜ்ஞாதா குஸலாநுஸிஷ்டः"

யः - எந்த பரமாத்மா, ஸ்ரவணுயாபி - ஆசார்யனால்
கேட்பதைவிட, பஹுபிः - அநேகர்களால், ந லப்யः-சுலப
மாய் அடையத்தக்கவனல்ல ; தைவயோகத்தினால் பர
ப்ரஹமதத்வம், ஆசார்யோபதேசம் கேட்பதில் அநேகர்
களில் ஒருவனுக்கே ஸாத்தியப்படுமேயன்றி மற்றை யாவ
ருக்கும் சாத்தியப்படமாட்டா. யம் - எந்தப் பரமாத்ம
தத்வத்தை, ஸ்ருண்வந்தோபி-கேட்டபோதிலும், பஹவः-
அநேகர்கள், ந வித்யுः - அறிந்து கொள்ளாதவர்களா யிருக்
கின்றார்கள் ; ஆசார்யோபதேசம் அடைந்தவர்களில் புண்
ணியவசத்தால் எவனோ ஒருவன் பிரம்மதத்வத்தை அறி
கின்றானேயன்றிக் கேட்டவர்களெல்லாம் அறியமாட்டார்
கள். இந்த சுருதியின் தாத்பர்யமே கீதை அத்யாயம்
7-சுலோகம், 3-ல்,

மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கஶ்சித் யததி ஸித்தயே
யததாமபி ஸித்தாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்வதஃ.

பிரம்ம தத்வஞானம் லபிப்பது மிகவும் கஷ்டம். ஏனென்றால், அநேக ஆயிரமனுஷர்களில் ஒருவன் தான் யோகாப்பியாசம்செய்து, ஞானசித்தியை அடைவதற்குப் பிரயத்தினப்படுகின்றான். இப்படிப்பட்ட கஷ்டவித்தையை அப்பியசிப்பதற்கு பிரயத்தினப் படமாட்டார்கள். அப்படிக் கஷ்டப்பட்டு யோகாப்பியாசம் செய்வது துர்லபமாகவே யிருக்கும். ஒருவேளை கஷ்டப்பட்டு யோகாப்பியாசம் செய்து மோக்ஷத்தையடைய பிரயத்தினம் செய்த அநேகர்களில் ஒருவன் மாத்திரம் சித்தியடைகின்றான். (இந்தக் கஷ்டங்களையெல்லாம் "ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பிராணயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல். என்பதைப் பார்க்க.) அநேகநாள் யோகாப்பியாசம் செய்துகொண்டிருந்து, யோகம் சித்தியாகாமுன் ஒருவேளை மரணமடைந்தால், தரித்திரர்களாயும் மஹா யோகீசுவரர்களாயும் இருக்கப்பட்டவர்களின் வீட்டில் ஜநிக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஜன்மம் பூலோகத்தில் கிடைப்பது மஹா அரிதரிதென்று அத்யாயம் 6-ச்லோகம் 42-ல் சொல்லப்பட்டிருக்கின்றது. அஸ்ய-அப்படிப்பட்ட பரமாத்மாவை,லப்தெள-தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களை, அகுசலஃ - அப்பியாசமில்லாத, ஆசார்ய உபதேசங்களால், அஸ்சர்யஃ-மோஹத்தை அடைந்தவனாய், வக்தி-சொல்லுகின்றான் ; என்றால், மோசம் போகின்றான் ; அகுசலாநு சிஷ்டஃ-பிரம்மதத்வத்தைத் தெரிந்துகொள்ள அறியாத குருவினால் உபதேசிக்கப்பட்ட,ஞாதா-சிஷ்யன், அஸ்சர்யஃ+பவதி-மோசம் போகின்றான். ஆதலால், ஸாவதான சித்தமுடையவனாய் தத்வ விசாரணை செய்யப்பட்டவன் ஆயிரத்திலொருவன் இருப்பான். ஆத்

மா அற்புதவஸ்துவென்று தமக்குள் தாம் ஊஹிப்பவர்கள் சிலர்; இதரர்களுக்குச் சொல்லுபவர்கள் சிலர்; சொல்லும்பொழுது கேட்பவர்கள் சிலராயிருக்கின்றார்களே யன்றி, அதனுடைய நிஜஸ்திதி இப்படிப்பட்டதென்று எவராயினும் அறியமாட்டார்கள். ஒருவன், சாஸ்திராதிகளினால் ஆத்மா மேற்சொல்லிய சொரூப முடையவனென்று தான் தெரிந்துகொண்டதை மற்றொருவனுக்குச் சொல்லுகின்றான். அப்படிச் சொல்லும்போது, தான் தெரிந்து சொல்லுகின்ற அந்த ஆத்ம சொரூபத்தை நினைத்துநினைத்து ஆச்சரியப்படுகின்றான். இப்படிச் சொல்வதைக் கேட்டவன், இப்படிப்பட்ட வஸ்துவும் ஒன்று உண்டாவென்று ஆச்சரியப்படுகின்றான். கடைசியில், பார்த்தவர்களும் சொன்னவர்களும் கேட்டவர்களும் நித்தியானந்த சொரூபமான ஆத்மாவைப் பூரணமாய் அறிந்தவர்களல்லர்.

அர்ஜுனன்:—அதனுடைய நிஜஸ்திதி அறிந்தவர்கள் தான் யாவர்?

கிருஷ்ணன்:—பிரம்மஞானமுடையவர்களே தெரிந்து கொள்வார்கள்.

அர்ஜுனன்:—ஆத்மதத்வம் எப்படிப்பட்டது? அதனைத் தெரிவிக்கவேண்டும் சுவாமி?

தேஹீ நித்ய மவத்யோயம் தேஹே ஸர்வஸ்ய பாரத!
தஸ்மாத் ஸர்வாணி பூதாநி ந த்வம் சோசிது மர்ஹஸி. 31.

ஓ அர்ஜுனா! ஆத்மதத்வம் இப்படிப்பட்டதென்று இதுவரையில் (அ-2-சு-20தில், நஜாயதே என்று) சொல்லியிருக்கின்றேன். அதனை மறந்தனையோ? ஆயினும், மறுபடியும் சொல்லுகின்றேன் கேள். இந்த பிரபஞ்சத்தில் பிபீலிகாதி பிரம்ம பரியந்தம் சமஸ்த ஜந்துக்களிலுமுள்ள ஜீவாத்மா எப்பொழுதும் நசிக்கத்தக்கதல்ல. தேகம் மாத்திரம்

நசிக்குமேயொழிய ஆத்மா எப்பொழுதும் நசிக்கப்படுவ தல்ல. இந்த ஆத்மதத்வம் அறிந்தபிறகு பீஷ்மாதிகளின் ஜீவாத்மாக்களைக் குறித்தாவது அல்லது, மற்றவர்களின் ஜீவாத்மாக்களைக் குறித்தாவது நீ துக்கிக்கவேண்டாம்.

ஸ்வதர்ம மபி சாவேக்ஷ்ய ந விகம்பிது மர்ஹஸி
தர்ம்யாத்தி யுத்தாத் ச்ரேயோ ந்யத் க்ஷத்ரியஸ்ய ந வித்யதே. 31.

க்ஷத்திரியர்களுக்கு யுத்த, தர்மத்தைப் பார்க்கிலும் சிரேஷ்டமானது வேறொன்றில்லை; க்ஷத்திரியன் யுத்தத்தில் சத்துருராஜனை ஜயித்து ராஜ்ஜியத்தை சுவாதீனம் செய்துகொள்ளாவிடில், அப்படிப்பட்ட சத்துருவினால் தனக்கு அநேக உபத்திரவங்கள் நேரிடும். க்ஷத்திரியனுக்கு யுத்தம் செய்வதே முக்கியமான தர்மமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட யுத்தம்செய்ய நீ பின்வாங்கவேண்டாம். அது, தர்மயுத்தமும் நியாயமும் பொருந்திய காரணங்களுடன் செய்யப்படுகின்றது. இப்படி உனக்குச் சம்பவித்திருப்பதே தர்மயுத்தமாகும். எப்படியென்றால், இதரர்களினால் துன்மார்க்கமாய் அபஹரிக்கப்பட்ட உனது ராஜ்ஜியத்தை மறுபடியும் சம்பாதித்துக் கொள்வதற்காகச் செய்யப்பட்டதாதலால் தர்மயுத்தமென்று சொல்லப்படும்

யத்ருச்சயா சோபபந்நம் ஸ்வர்கத்வார மபாவ்ருதம்
ஸுகிநஃ க்ஷத்ரியாஃ பார்த்த! லபந்தே யுத்த மீத்ருஸம் 32.

இப்படிப்பட்ட யுத்தம் க்ஷத்திரியர்கள் அவசியமாகச் செய்ய வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். துர்யோதனாதிகள் துன்மார்க்கமாய் உங்களுடைய ராஜ்ஜியத்தை அபகரித்துக் கொண்டதனால் அப்படிப்பட்ட ராஜ்ஜியத்தை மறுபடியும் சம்பாதித்துக்கொள்வதற்காக நீங்கள் யுத்தத்திற்கு பிரயத்தினப்படவேண்டியவர்களாயிருக்க, அப்படிச் செய்வதைவிட்டு ஐந்து ஊர்களாயினும் கொடுத்தால் போது

மென்று தூதனுப்ப, அதற்கும் ஒப்புக்கொள்ளாமல் இப்
படிப்பட்ட யுத்தம்செய்ய நேர்ந்தபடியால் உங்களுக்கு
சொர்க்கவாசல் திறக்கப்படும். இந்த யுத்தம் பாக்கியம்
செய்த ராஜர்களுக்கே லபிக்கும். இப்படிப்பட்ட யுத்தம்
செய்து, எந்த க்ஷத்திரியனும் இதுவரையில் சுகிக்கவில்லை.
யுத்தம் செய்து ஜபித்து ராஜ்ஜியபரிபாலனம் செய்து தர்ம
கார்யங்களை விசேஷமாய் அனுஷ்டித்தால் சொர்க்கம் உண்
டாகும் அல்லது யுத்தத்தில் மரணமடைந்தால் வீரசொர்க்
கம் உண்டாகும். இந்த இரண்டு விதங்களால் சொர்க்கம்
உண்டாகுமேயன்றி கோழைத் தனமாய் யுத்தம்செய்யா
மல் பின்வாங்கினால் உனக்கு இஹபர சுகங்களில்லை. ஆத
லால், உனக்குச் சுகம் வேண்டுமானால் யுத்தம்செய், இல்லா
விடில் போகக்கடவாய்.

அத சேத்த்வம் மிமம் தர்மம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி
தத ஸ்வதர்மம் கீர்த்திஞ்ச ஹித்வா பாப மவாப்ஸ்யஸி, 33.

க்ஷத்திரியனான உனக்குத் தனக்குத் தானாய் லபித்த
தர்ம யுத்தத்தை நீ செய்யாவிடில் அதனால் நீ ராஜ்ஜிய
பிரஷ்டனாவதேயன்றி தர்ம பரித்தியாகியென்று சொல்லப்
படுவதுமேயல்லாமல், இன்னும் அநேக அனர்த்தங்களுக்
கும் பாத்திரனாகின்றாய். அஃதெப்படியென்றால், நீ க்ஷத்
திரியனாயிருந்தும் அப்படிப்பட்ட குலத்திற்குத் தனக்குத்
தானாய் லபித்த யுத்தத்தைச் செய்யாவிடில் உனது குல
தர்மத்தை விட்டவனாகின்றாய். அதனால், பரலோகத்தில்
குலதர்மத்தை ஆசிரயிக்காத பாபாத்துமர்களுக்கு உண்டா
கும் நரகம் சம்பவிப்பதே யல்லாமல் இஹலோகத்தில் சூர
னென்று உனக்கு உண்டாயிருக்கும் பிரக்கியாதியும் போய்
இதற்குப் பதிலாய் கோழைத்தனமுடையவன் என்னும்
அபகீர்த்தியும் உண்டாகும்.

அகீர்த்திஞ்சாபி பூதாநி கதயிஷ்யந்தி தேவ்யயாம்
ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர் மரணாததிரிச்யதே. 34.

கஷ்டசாத்தியமாய் சம்பாதிக்கப்பட்டுச் சுலபமாய்ப் போக்கடித்துக்கொள்ளும் கீர்த்தியும், சுலபமாய்ச் சம்பாதிக்கப்பட்டு கஷ்டஸாத்தியமாய்ப் போக்கடித்துக்கொள்ளும் அபகீர்த்தியைப்போலாகும். இந்த அபகீர்த்தி அநேக காலம் வழங்கும். இதுவரையில் புஜபல பராக்கிரம சாலியென்றும், சூரனென்றும் கீர்த்தியடைந்த உனக்கு அபகீர்த்தி உண்டாய் ஜீவிப்பதைவிட யுத்தத்தில் மரணமடைவதே உத்தமம்.

ஏனென்றால், உலகத்திலுள்ள சமஸ்த ஜனங்களும் இந்த அபகீர்த்தியை ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்வார்கள். உலகத்தில் தர்மார்த்தனனென்றும், சூரனென்றும் கீர்த்தியடைந்தவன், தனக்கு மரணம் சம்பவித்தாலும் சகிப்பானேயன்றி தர்மத்தியாகி, கோழையென்று பிரஜைகளால் சொல்லப்பட்ட அபகீர்த்தியை ஸகிக்கமாட்டான். ஏனென்றால், மரணம் தற்காலமே அந்தவேதனையை உண்டாக்கும். அபகீர்த்தியோ, பிரபஞ்சம் உள்ளவரையில், அவனுக்கும் அவன் வம்சத்தாருக்கும் அந்த வேதனையை உண்டாக்கிக் கொண்டேயிருக்கும். ஆதலால், அபகீர்த்தி மரணத்தைவிட அஸஹ்யமானது.

பயாத்ரணாதுபரதம் மம்ஸ்யந்தே த்வாம் மஹாரதாঃ
யேஷாஞ்ச த்வம் பஹுமதோ பூத்வா யாஸ்யஸி லாகவம். 35.

நீ யுத்தம் செய்யாவிடில் இதுவரையில் பூர்வத்தில் உன்னுடைய விஷயத்தில் கௌரவமாய் எண்ணியிருந்த பீஷ்மத் துரோணாதிகளாகிய மஹாரதிகர்கள் என்ன சொல்லுவார்களென்றால், ஓஹோ! இதுவரையில் அர்ஜுநனை மஹாசூரனென்று நினைத்தோமல்லவா? இப்பொழுது இவ

னுடைய சங்கதி தெரியவந்தது. இதுவரையில் உத்தார கோக்கிரணம் முதலாகிய சமயங்களில் சொல்பமாயிருக்கும் கௌரவ சைந்நியங்களைப்பார்த்து தைரியத்துடன் எதிர்த்தான். அப்போது நாம் அவனைப் பார்த்து மகாசூரனென்று எண்ணினோம், இப்பொழுது கௌரவ சைன்யங்களை ஒருங்கே கண்டவுடனே இந்த அர்ஜுனன் பயந்து ஓடினானென்று எண்ணி இதுவரையில உன்னிடமிருந்த கௌரவமான அபிப்பிராயங்களெல்லாம் போவதனால் உனக்கு எவ்வளவு அவமானகரமாயிருக்குமோ அதை நீயே யோசித்துப் பார்.

அவாச்ய வாதாம்ஶ்ச பஹூந் வதிஷ்யந்தி தவா ஹிதாஃ
நிந்தந்த ஸ்தவ ஸாமர்த்யம் ததோ துஃகதரம் நு கிம். 36.

உன்னிடத்தில் கௌரவமுடையவர்களும் உனது க்ஷேமத்தை விசாரிக்கப்பட்டவர்களுமாகிய பீஷ்மாதிகளே அர்ஜுனன் பெருத்த சத்துருசைன்னியங்களைப் பார்த்துப் பயந்து ஓடினானென்று எண்ணும்போது, உனக்குச் சத்துருவாயிருக்கும் கர்ணன் முதலானவர்களுடன் யுத்தம் செய்யப் பயந்து ஓடினானென்று துரியோதனனாதி மஹாரதிகர்கள் எல்லோரும் சொல்லுவார்களேயன்றி, நீ உன் கைகளால் பந்துக்கள் எல்லோரையும் கொல்லப் பிரியமில்லாத கனிகரத்துடன் யுத்தம்செய்யாமல் சென்றுவிட்டாயென்று சொல்லமாட்டார்கள். ஏனென்றால், யுத்தம் செய்வதற்குச் சித்தப்பட்டுவந்த சூரன் யுத்தம் செய்யாமல் முதுகைக்காட்டுவது (ஓடுவது) தர்ம விருத்தம். சூரனாயிருப்பவன் யுத்தம்செய்தே தீரவேண்டுமேயன்றி ஏதோ ஓர் எண்ணத்தை வைத்துக்கொண்டு திரும்புவது தகுதியல்ல. நீ யுத்தம்செய்யாமல் திரும்பினால் அர்ஜுனன் யுத்தம் செய்ய பயந்து சென்றுவிட்டானென்று நிந்திக்கப்படுவதைச் சொல்லவும்வேண்டுமோ? அவர்கள் உன் சாமர்த்தி

யத்தையும் புஜபல பராக்கிரமத்தையும் இதுவரையில் பல தடவைகளில் பார்த்திருந்தும் உன்னை மிகவும் லேசாக நிந்தித்தார்களல்லவா? அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது உன்னுடைய அதைர்யத்தைப் பார்த்து அவர்களிஷ்டம் போல் வாயினால் வையக்கூடாத வார்த்தைகளெல்லாம் சொல்லிக்கொண்டு கேலி செய்யார்களா? இதைக்காட்டிலும் பெறுத்த துக்கமும், அவமானமும் உனக்கும் எனக்கும் வேறொன்று வேண்டுமோ?

ஹதோ வா ப்ராப்ஸ்யஸே ஸ்வர்க்கம் ஜித்வா வா போக்ஷ்யஸே [மஹீம்
தஸ்மா துத்திஷ்ட கௌந்தேய! யுத்தாய க்ருத நிஶ்சயः. 37.

ஓ அர்ஜுநா! இந்தக்காரணத்தினால், யுத்தத்தை நிறுத்துவது உனக்குத்தகாது: ஆதலால், நீ பனேறிருடமுடையவனாய் யுத்தம் செய்ய எழுந்திருக்கக் கடவாய். நீ மரணமடைவாயென்று பயப்படுகின்றாயா? அப்படி நீ மரணமடைந்தால் உனக்கு சொர்க்கத்துவாரம் திறக்கப் படுமென்று இதுவரையில் (அ 2, ஈ 32-ல்) சொல்லியிருக்கின்றேன். நீ தர்மயுத்தம் செய்து சத்துருவினால் கொல்லப்பட்டால் பரலோகத்தில் இதைப்பார்க்கிலும் மேலான சொர்க்காதி போகங்களை அநுபவிப்பாய். நீ சத்துருக்களை ஜெயித்தால் இஹத்தில் ராஜ்ஜிய சுகம் அநுபவிப்பதேயல்லாமல் உனக்குச் சமானமாகிய கர்ணாதிகளையும், உனக்கு அதிகப்பட்ட பீஷ்மத் துரோணாதிகளையும் கொன்றால் பரலோகத்திலும் உனக்குப் புண்யலோகமே சித்திக்கும். நீ இனிமேல் எந்தச் சந்தேஹமும் வைத்துக்கொள்ளாமல் யுத்தம்செய். கர்ணாதிகளை ஜயித்தால் சாம்பிராஜ்ஜிய லக்ஷ்மியை அடைகுவாய். கர்ணாதிகள் உன்னைக் கொன்றாலும் சொர்க்கசுகத்தை அநுபவிப்பாய். ஆதலால், யுத்தத்தில் சத்துருக்களை ஜயித்து ராஜ்ஜியத்தையாயினும் அடைய வேண்டும்; அல்லது சத்துருக்களால் கொல்லப்பட்டு வீர

சொர்க்க ராஜ்ஜியமாயினும் அடையவேண்டும். தைரியத்துடன் யுத்தம்செய்ய எழுந்திரு. அப்படிச் செய்வதனால் உனக்கு அபகீர்த்தி உண்டாகமாட்டாது. இதன்றியும், பாபமும் உனக்கில்லை. ஆகையால், மனதை தைர்யத்துடன் என்மீது பாரத்தைப்போட்டு நீ யுத்தம் செய்தால் தப்பாமல் ஜயமடைவாய்.

ஸுகதுஃகே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாப மவாப்ஸ்யஸி. 38

ஓ அர்ஜுனா! நான் இவ்வளவுதூரம் சொல்லியும், நீ இதுவரையில் நினைத்தது உங்கள் திருதராஷ்ட்ரர்கள் துன்மார்க்கர்களான போதிலும் அவர்களைக் கொல்லுவதனால் பாபமே சித்திக்குமென்றும் இதர பிரயோஜனங்கள் உண்டாகமாட்டாதென்றும் (அ 1, சு 36ல்,) சொல்லியிருந்தாய். அதற்கு ஓர் உபாயம் சொல்லுகின்றேன் கேள். நீ யுத்தம் செய்யும்பொழுது ஜயாபஜயம், லாபநஷ்டங்கள், சுகதுக்கங்கள் இவைகளில சமபுத்தியுடையவனாய் இருக்கவேண்டும். சுகதுக்கங்களுக்குக் காரணம் லாபநஷ்டங்கள்; லாபநஷ்டங்களுக்குக் காரணம் ஜயாபஜயங்கள். அஃதெப்படியென்றால், உனக்கு ஜயமுண்டானால் லாபத்தைக் குறித்துச் சந்தோஷிப்பது, அபஜயமடைந்தால் அதனால் உண்டாகும் நஷ்டங்களைக் குறித்துத் துக்கிப்பது இவ்விரண்டும் இல்லாமல் சமபுத்தியுடன் இருந்து யுத்தம்செய்யவேண்டும். அப்படிச்செய்வதனால் உன்னைப் பாபம் அணுகமாட்டாது. இப்படிச்செய்வதே "நிஷ்காம கர்மயோகம்" எனப்படும். ஆதலால், காரண காரியங்கள் இரண்டையும் விட்டுவிடு. நிரபிமானனாய் இருந்து யுத்தம்செய். அப்படிச்செய்வதனால் உன்னை எந்தப் பாபங்களும் அணுகமாட்டா.

ஏஷா தே பிஹிதா ஸாங்க்யே புத்திர்யோகே த்விமாம் ப்ருணு
புத்யா யுக்தோ யயா பார்த்த கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி. 39

"இந்த அத்யாயம், 12-வது சுலோகமுதல் 30-வது சுலோகம்வரையில், ஆத்ம தத்துவத்தைத் தெரிவிக்கும் யோகத்தைச் சொல்லுகின்றது என்னவெனில், "ஸ்வதர்ம மபி சாவேக்ஷ்ய" என்று அ 2, சு 31-முதல், 38-வது சுலோகம் வரையில் அர்ஜுநனுடைய சோகமோஹத்தைப் போக்கடிக்க உத்தேசித்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் லௌகிக நியாயம் சொல்லினர். அது பிரதானமானதன்று. ஆதலால், இப்போது பரமார்த்த ஞானோபதேசம் இந்த சுலோகத்துடன் முடிந்து, 40-வது சுலோகம்முதல் 54-வது சுலோகம் வரையில் கர்மபந்தத்தை நிவர்த்திக்கச்செய்து மோக்ஷ சாதனமாகிய ஞானத்தை உண்டாக்கும் கர்ம யோகத்தைச் சொல்லப்போகின்றார்."

ஓ அர்ஜுநா! ஸம்சாரஹேதுவாகிய சோகமோஹாதி தோஷங்களைப் போக்கடிக்கத்தக்கதும், பரமார்த்த வஸ்து விவேக விஷயமானதுமாகிய, ஞானயோகத்தை உனக்கு இதுவரையில், (அ 2, சு 12-முதல் 30-வரையில்) சொல்லியிருந்தேன். அப்படிச் சொல்லியிருந்தும், உன்னுடைய துக்கம் ஆறாததனால் உனது குலதர்ம சம்பந்தமான லௌகிக நியாயங்கள் சிலவற்றையும் (அ 2, சு 31-முதல் 38-வரையில்) சொன்னேன். அவைகளினாலும் உனக்குப் பந்து ஜனங்களிடத்தில் உண்டாயிருக்கும் அஞ்ஞானம் இன்னும் விடவில்லையெனக் காணப்படுகின்றது; ஆதலால், இப்போது கர்மயோகத்தைச் சொல்லுகின்றேன். இந்தக் கர்மயோகத்தினால் சித்தசுத்தியும், அதன் மூலமாய் ஞானமும் உண்டாகும். சோகமோஹாதிகளைவிட்டு அதன் மூலமாய் ஈசுவராராதனை நிமித்தமாய், கர்மத்தை ஆசிரயிப்பதும்,ஸமாதியோகமும் கர்மயோகமென்றே சொல்லப்படும் அப்படி கர்மயோகத்தால் ஈசுவரபிரஸாதம் கிடைத்து அதனால் புண்ணியபாபங்களிலிருந்து விடுபட்டு ஞானியாகின்

றான். ஆதலால், கர்மயோகத்தின்படி இனி தெரிவிக்கின்றேன். அதை அனுசரித்து யுத்தம் செய்தால் அதனால் உண்டாகும் பாபம் உன்னை அணுகமாட்டாது.

நேஹாபிக்ரமநாஸோஸ்தி ப்ரத்யவாயோ நவித்யதே
ஸ்வல்ப மப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் 40.

இப்பொழுது நான் சொல்லப்போகிற கர்மயோகம் எப்படிப்பட்டதென்றால், இதை யாவராயினும் பிராரம்பித்தவுடனே நிவர்த்தி செய்துகொண்டபோதிலும் அதற்குத்தக்க பலத்தைக் கொடுக்குமேயன்றி, பூர்த்தியாய் நிஷ்பிரயோஜன மாகமாட்டாது. என்றால், சொல்பமாய் அனுஷ்டித்தபோதிலும், மஹத்தாயிருக்கும் சம்சாரபந்தத்தைக் காப்பாற்றும்.

அர்ஜுனன்:—கர்மயோகத்தினால் பிராரம்ப நாசனம் எப்படி உண்டாகும்? யாவராயினும் ஏதாகிலும் ஒரு கார்யத்தை பிராரம்பித்தவுடனே நிவர்த்தி செய்துகொண்டால், அது எப்படி பிரயோஜனத்தையுண்டாக்கும்?

கிருஷ்ணன்:—இந்தக் கர்மயோகம் மற்ற எல்லாக் காரியங்களைப்போன்றதல்ல; சித்தசுத்தி உண்டாகிப் பலாபேக்ஷையில்லாதவனாய் பகவதர்ப்பணமாகச் செய்யும் காரியமாக இருக்கின்றது. எப்பொழுது பகவதார்ப்பணமாகச் செய்யப்படுகின்றதோ அப்பொழுதே அக்கார்யத்திற்கு மிகவும் சிரேஷ்டத்வம் உண்டாகின்றது. ஆதலால், அது சொல்பமாயிருந்தபோதிலும் காலக்கிரமத்தினால் சம்ஸாரபந்த விமுக்தியென்னும் பெறுத்த பலனைக் கொடுப்பதற்குக் காரணமாயிருக்கின்றது.

அர்ஜுனா! பயிர்த்தொழில் ஆரம்பிக்கும்போது மழை காலங்களில் சரியாக மழை பொழியுமோ பொழியாதோ, பயிர் விளையுமோ விளையாதோ என்னும் சந்தேகம் உண்டாகும். கர்மத்தை ஆரம்பிக்கும்போது அப்படிப்பட்ட சந்

தேகம் வேண்டியதில்லை. ஏனென்றால், கர்மம்செய்தால் அதன் பலன் தப்பாமல் சித்திக்குமென்று சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதனால் சாஸ்திரங்களை நம்பப்பட்டவர்கள் கர்ம பலன்களைக் குறித்துச் சந்தேஹிக்கவேண்டியதில்லை. இஃதன்றியும், வியாதியைப் போக்கடித்துக் கொள்ள ஔஷதம் சாப்பிடும்போது அதனால் வியாதி தீராவிட்டால் மரணங் கிட்டுமென்று நிச்சயிக்கின்றார்கள். கர்மத்தை ஆசிரயிப்பது அப்படியல்ல. கர்மத்தைச் செய்வதனால் அந்தந்தக் கர்மம் அதற்குத்தக்க பலனைக் கொடுக்கின்றது. இஃதன்றியும்,

சுலோ || "ஸர்வபாபப்ரஸக்தோபி த்யாயந் நிமிஷமச்யுதம்
பூயஸ் தபஸ்வீ பவதி பங்க்திபாவந பாவந:"

ஸமஸ்த பாபங்களுடன் கூடினவனாய் இருந்தபோதிலும் ஒரு க்ஷணம் பகவத்தியான ரூபமாகிய பிராணாயாமம் செய்து யோகசமாதியிலிருந்தால் அவனே கிரமமாய் சமாதி நிஷ்டனான யோகியென்றே சொல்லப்படுவான். அப்படிப் பட்டவன் பங்க்திபோஜனம் செய்யமாட்டான். அப்படி ஒருவேளை செய்தபோதிலும் அவனுடைய பங்க்தியி லிருக்கப்பட்டவர்களும் பவித்திரர்க ளாகின்றார்கள். அதனால் அவனுக்குப் பங்க்திபாவநனென்று சுருதி பிரமாணங்கள் உண்டு. ஈசுவரார்ப்பணமாகச் செய்யப்பட்ட கர்மயோக ரூபமாகிய தர்மம் எவ்வளவு சொல்பமா யிருந்தபோதிலும் அது, பெரிதாகிய சம்ஸார பயத்திலிருந்து ரக்ஷிக்கச்செய்கின்றது. அஃதில்லாமல், செய்யும் காம்யகர்மம் அப்படிச் செய்யமாட்டா. ஏனென்றால், "க்ஷீணேபுண்யே மர்த்ய லோகம் விஸந்தி" என்கிற கீதாவாக்கியத்தால் தான் எந்தபலத்தை அனுபவிக்க எண்ணி எவ்வளவு புண்ணியம் செய்தானோ அவ்வளவு புண்ணியம் சென்றவுடன் அந்தப் பலபோகத்தை விட்டு மறுபடியும் பூலோகத்தில் ஜனிக்கின்

ருன். ஜன்ம பரம்பரை ரூபமாகிய சம்ஸாரநிவர்த்தி, சம்ஸார மூலமாகிய காம்யகர்மத்தினுல் உண்டாகமாட்டா.

சுலோ || "நாநாஸாஸ்த்ர பரேலோகே நாநாதேவஞ்ச பூஜநம்
ஆத்மஞாநம் விநா பார்த்த ! ஸர்வகர்ம நிரர்தகம்."
" ஆசாரக்ரியதே கோடிதாநஞ்ச கிரிகாஞ்சநம்
ஆத்மதத்வம் விநாநாஸ்தி முக்திர்நாஸ்தி குருர்விநா.''
கோடியஜ்ஞம் க்ருதம் யேந கோடிகோஹய தாநகம்
கஜதாநம் ஸஹஸ்ரஞ்ச முக்திஃ ஞானம்விநா நச." [கர்ப்பகீதை]

ஓ அர்ஜுனா ! சகல சாஸ்திரங்களையும் வாசித்துப் பண்டிதனென்று பேரெடுத்தபோதிலும், பிரமா விஷ்ணு மஹேசுவராதி சகலதேவதைகளையும் பூஜித்தபோதிலும் ஆத்மஞானமில்லாவிடில் மேற்சொல்லியவைகளெல்லாம் நிஷ்ப்பிரயோஜனமே ; வர்ணாசிரமங்கள் தப்பாமல் நடத்தியபோதிலும், இமவத்பர்வதமவ்வளவு சுவர்ணம் (தங்கம்) கோடிதடவைகளில் தானம்கொடுத்தபோதிலும் ஆத்மஞானமில்லாவிடில் நிஷ்பிரயோஜனமே ; கோடியஞ்ஞங்கள் செய்தபோதிலும் பசுக்கள் அசுவங்கள் யானைகள் கோடிகோடியாகத் தானங்கொடுத்தபோதிலும் முக்தி உண்டாகமாட்டா. குரு கடாக்ஷமில்லாமல் ஆத்மஞானம் லபிக்காது

வ்யவஸாயாத்மிகா புத்தி ரேகேஹ குருநந்தந!
பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோ வ்யவஸாயிநாம். 41.

ஆதலால், பலாபேக்ஷை யில்லாமல் பகவதர்ப்பணம் செய்து அதனுல் உண்டாகும் சுகதுக்கங்களில் சமபாவமுடையவனு யிருக்கிறவன் எவனே அப்படிப்பட்டவனுடைய மனம் எந்த விகாரங்களையும் அடையாமல், மோக்ஷத்திலேயே நின்று எப்பொழுதும் ஒரே நிலையிலிருக்கும். அஃதெப்படியென்றால்,

சுரு || "ப்ரணவோ தநு ஸ்ஸரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே, அப்ரமத்தேந வேத்தவ்யம் ஸரவத்தந்மயோ பவேத்." [த்யாநபிந்தூபநிஷத்.]

பிரணவமே தநுசு, ஜீவனே பாணம் லக்ஷியமே பரப்பிரம்மம் என்று சொல்லப்படும். ஆதலால், ஒரு வேடன் ஒரு குறியில் லக்ஷியம்வைத்துப் பாணத்தைவிட்டபொழுது அந்தப் பாணம் குறித்தப்பாமல் அந்த லக்ஷியத்திலேயே சேர்ந்து அதிலேயே ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் பிரம்ம ஞானியும் மனமென்னும் தநுஸ்ஸில்,ஜீவனென்னும் பாணத்தைப்பூட்டி பிரம்மமென்னும் லக்ஷியத்தில் குறிவைத்துப் பிரயோகித்தபோது, இந்த ஜீவனென்னும் பாணமானது அந்த லக்ஷியமென்னும் பரப்பிரம்மத்தில் சேர்ந்து, அதில் லயித்து தத்ரூபமாகும். அப்படி நிச்சயபுத்தி யில்லாதவர்களின் மனோவியாபாரம் எப்படிப்பட்டதென்றால், இந்த சரீரமென்னும் விருக்ஷத்தில் நானாவித எண்ணங்களே அநேகவித கிளைகளாய் உற்பத்தியாவதனால் அதாவது, இஹத்தில் தரேஷணை, தனேஷணை, புத்ரேஷணையென்னும் ஈஷணாத்திரயங்களினாலும்,பரத்தில் சொர்க்காதி போகாபேக்ஷயினாலும் பிடிப்பவர்களா யிருப்பதனால் அப்படிப்பட்டவர்கள் அநேக விதங்களாகிய மனோவிகாரங்களையடைந்து முக்தியைக் காணாதவர்களா யிருக்கின்றார்கள்.

ஆதலால், இதுவிஷயத்தில் நீ எள்ளளவேனும் ஸம்சயம் வைக்கவேண்டாம். "ஸம்ஸயாத்மா விநஸ்யதி" என்னும் சுருதிரீதியாய் ஸம்சயமுடையவன் கெட்டுப்போவான்; நான் சொல்லியதுபோல ஆசிரயிக்கக்கடவாய். நிஷ்காம்ய கர்மத்தைச் செய்யப்பட்டவன் மோக்ஷரூபமாகிய ஓர் பலத்தையே எண்ணி எப்பொழுதும் சமாதி செய்துகொண்டிருக்கவேண்டும். காம்மிய கர்மங்களைச்

செய்யப்பட்டவன் அநேக விஷயங்களில் புத்தியைச் செலுத்தவேண்டியதா யிருக்கின்றது. எப்படி என்றால்:— சொர்க்கத்தைக் கோரி யாகம்செய்ய நினைத்தபோது தக்க சாமக்கிரியைகளும் தயாராயிற்றோ யில்லையோ என்றும், நல்ல பசுக்கள் அகப்படவேண்டுமேயென்றும், யாகம் நிர்விக்கினமாய்ப் பூர்த்தியாக வேண்டுமேயென்றும், இவை முதலாகிய அநேக விஷயங்களில் அநேக விதமாய் புத்தி வியாபித்துக்கொண்டிருக்கும். அதில் ஆசை அதிகமாயும் பலன் குறைந்ததாயும் இருக்கும். அப்படிப்பட்ட கர்மங்களின் ஆசையைவிட்டு நிஷ்காம்மிய கர்மத்தை பகவதர்ப்பணமாகச் செய்தால் சித்தசுத்தியும் அதன்மூலமாய் ஞானமும், அந்த ஞானத்தினால் பரம புருஷார்த்தமான மோக்ஷமும் உண்டாகும்.

அர்ஜுனன்:—ஓ கிருஷ்ணமூர்த்தியே! நீர் இப்படிச் சொல்லுகின்றீரல்லவா? இவ்வுலகத்திலுள்ள பண்டிதர்களாகிய அநேகர்கள் இஹபரங்கள் இரண்டிலும் பலத்தைத் தரும் கர்மங்களை என்றால், அக்நிஹோத்ர அஸ்வமேத புத்ரகாமேஷ்டி முதலாகிய கிருத்யங்களும், அன்னதானாதி முதலாகிய அநேக தர்மங்களும் செய்யவேண்டுமென்று சொல்லுவதுமே யல்லாமல், அவைகளுக்கு உபமானமாய் வேதவாக்யங்களையும் பிரமாணமாகச் சொல்லிக்கொண்டு பிரேரேபிக்கின்றார்களே! இதனை யோசிக்குமளவில் எதையாகிலும் ஓர் பலத்தை ஆசிரயித்தேயல்லவா எந்தக் கர்மத்தையாயினும் ஆசிரயிக்கவேண்டியதாய் வேதப் பிரமாணங்களினால் தெரியவருகின்றது. அப்படியிருக்க எந்தப் பலாபேக்ஷையு மில்லாமலே கர்மத்தை ஆசிரயிக்க வேண்டுமென்று நீர் சொல்வதற்குக் காரணமென்ன?

யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஸ்சித: 42.
வேதவாத ரதா: பார்த்த! நாந்ய தஸ்தீதி வாதிந:.

காமாத்மாந ஸ்வர்க்கபரா ஜந்மகர்ம பலப்ரதாம்
க்ரியாவிசேஷபஹுளாம் போகைஸ்வர்ய கதிம்ப்ரதி. 43.

போகைஸ்வர்ய ப்ரஸக்தாநாம் தயா பஹ்ருத சேதஸாம்
வ்யவஸாயாத்மிகா புத்திஸ் ஸமாதௌ ந விதீயதே. 44.

கிருஷ்ணன்:—ஆம், அநேகர் அப்படிச் சொல்வது வாஸ்தவமே. நானும் கேட்டிருக்கின்றேன். அப்படிச்சொல்லுபவர்கள் வாஸ்தவமான பண்டிதர்களாகார். வேதத்தில் பலத்தைத்தெரிவிக்கும் அர்த்தவாதத்தில் பிரீதியுடையவர்களும், சொர்கத்தைவிட வேறு விசேஷபலன்களில்லையென்று சொல்லுமவர்களும், புத்திர மித்திர களத்திராதிகளில் ஆசையுடைவர்களுமாகிய அவிவேகிகள் போகைசுவர்யங்களும் பெறுவதற்காக அநேக கர்மபேதங்கள் சொல்லப்படுவதும், ஜன்மமும் கர்மமும் கர்மபலன்களைத் தரப்பட்டதென்று எந்தவார்த்தைகளைச் சொல்லுகின்றார்களோ, அந்த வார்த்தையினால் அபஹரிக்கப்பட்ட இருதயமுடையவர்களாயும், போகைசுவர்யங்களில் ஆசையுடையவர்களாயும் இருக்கப்பட்டவர்களுக்கு நிச்சயரூபமான புத்தி உண்டாகவேமாட்டா. என்றால், யஞ்ஞமுதலான கர்மங்களுக்கு சிரேஷ்டமாகிய பலன் சொர்க்காதிகளென்றும், யஞ்ஞம்செய்வதனால் புத்திர மித்திர களத்திர தனதான்யாதி வஸ்து வாஹனாதி பலன்களுங்கூட உண்டாகுமென்றும் வேதத்திலுள்ள பலத்தைத் தெரிவிக்கும் அர்த்தவாதங்களைக்கேட்டுப் போகைசுவர்யாதிகளில் ஆசையுண்டாய் அவைகளினால் அபஹரிக்கப்பட்ட மனதையுடையவனுக்கு ஆத்மசொரூப ஞானத்தில் பிரவிருத்தியே உண்டாகும். காமாத்மிகளுக்கோ என்றால், தாரேஷணை தனேஷணை தனேஷணைகளென்னும் இச்சையினால் பீடிக்கப்படும் மனமுடையவர்களும், சொர்க்கபோகமே மேலாகிய புருஷார்த்தமென்று எண்ணி இதை விட வேறு புரு

ஷார்த்தமில்லையென்று தாம் சொல்லுவதில் நம்பிக்கை யுண்டாகும்படி சுருதிகளைக் கர்மத்திற்கு அனுகூலமாய் அந்வயிக்கும்படி வேதவாக்யங்களைத் ததனுகுணமாய் அர்த்தங்களைக் கற்பனைசெய்து சொல்லிக்கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட கர்மானுஷ்டர்கள் வேதவாதிகளே யொழிய வேதக்ஞர்களல்லர். வேதபாண்டியத்வம் எப்படிப்பட்டதென்றால், வேதங்களினால் தெரிந்து கொள்ளத்தக்க பரப்பிரம்மத்தைஅறியாதவர்களுடைய வேதபாடம். அந்த வேதபாடத்தை வாசிக்காமல் வாயினால் வாசிப்பவர்களுக்கு எவ்வளவு பிரயோஜனம் உண்டாகுமோ அவ்வளவு பிரயோஜனம் உண்டாகும். அப்படிப்பட்டவர்களின் உபதேசங்கள் எப்படிப்பட்டவைகளென்றால், கேட்கப்பட்டவர்களின் மனதிற்கு ஆநந்தகரத்தையும், செவிகளுக்கு இன்பத்தையும் விளைவிக்கும் அழகான வாக்கியார்த்தங்களாகவேயிருக்கும். அவைகளெல்லாம் யதார்த்த வார்த்தையேயொழிய பிரயோஜனகரமானவையல்ல. நேத்திராநந்தத்தை விளைவிக்கப் புஷ்பங்களைப் புஷ்பிக்கும் விருக்ஷம் எப்படி நிஷ்ப்பிரயோஜனகாரியோ அதுபோல் அத்யாபகர்களின் உபதேசங்களும் நிஷ்ப்பிரயோஜனமாகிய வார்த்தைகளாகும். இப்படிப்பட்டவர்களின் வார்த்தைகளை நம்பலாகாது.

அர்ஜுனன்:—நீர் இப்பொழுது சொல்லிக்கொண்டு வந்த வார்த்தைகளையெல்லாம் யோசிக்குமளவில், வேதவாதிகளாயிருக்கப்பட்டவர்கள் சொல்லும் வார்தைகள் நம்பத்தகுந்தவை யல்லவென்று தெரியவருகின்றதல்லவா? ஆனால், அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு அனுகுண்யமாகிய வேதவாக்கியங்களை திருஷ்டாந்தமாய்க் காட்டுகின்றார்களே, அப்படிப்பட்ட வேதவாக்கியங்கள் வியர்த்தமானவைகளா ?

த்ரைகுண்ய விஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந !
நிர்த்வந்த்வோ நித்ய ஸத்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவாந். 45.

ஓ அர்ஜுநா ! வேதவாக்கியங்கள் வியர்த்தமென்று எப்பொழுதும் சொல்லத்தகாது. ஆனால், அதில் திரிகுணங்களாகிய சமஸ்த வஸ்துக்களும் சேர்ந்திருக்கின்றன. எப்படியென்றால், ஸத்வகுண பிரதானமாகிய அறிவு ஸம்பிரீதி பிரஸந்நத்வமும், ரஜோகுண பிரதானமாகிய ராகலோப ரோஷாதிகளும், தமோகுண பிரதானமாகிய தர்ப்ப சோகாதிகளுமாகிய இவைகளெல்லாம் மிசிரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட திரிகுணாத்மகங்களாகிய வேதவாக்கியங்களை அநுசரித்தால் அவைகள் ஞானத்திற்கு விரோதமாகும். ஆதலால், அப்படிப்பட்ட கெடுதி வாராமலிருப்பதற்காக புத்திமான்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், அந்தவேதவாக்கியங்களில்உள்ள கேவல ஸத்வகுண பிரதானமாகிய விஷயங்களை மாத்திரம் அநுசரிக்கவேண்டும். அப்படிச்செய்வதனால் அவர்கள் அடையும் பிரயோஜனம் என்னவெனில், இதுவரையில், உண்டாயிருந்த ரஜோகுண தமோகுணங்கள் கிரமக்கிரமாய் க்ஷீணித்து நாளாவட்டத்தில் ஸத்வகுணமே விருத்தியடைந்து கடைசியில் அவைகளிலுள்ள ராஜஸ தாமஸகுணங்கள் பூர்த்தியாய் நசித்துக் கேவல ஸாத்விககுணமே பிரதானமாய் நிற்கும் நிலைமையை யடையும் அந்நிலைமையை எப்பொழுது ஒருவன் அடைகின்றானோ அப்பொழுதே அவன் பிரம்ம ஞானத்திற்குப் பாத்திரனாகின்றான். ஆதலால், ஓ அர்ஜுநா ! நீ அந்நிலையை அடையக்கடவாய். திரிகுணாத்மகங்களாகிய வேதவாக்கியங்களெல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளாமல் அவைகளில் சத்வகுண பிரதானமானவைகளை மாத்திரம் கொள்ளல்வேண்டும். மேலும், சுகதுக்கங்கள், சிதோஷ்ணங்கள், ஜயாபஜயங்கள், மாநாவமானங்

கள் முதலானவைகளில் சமபுத்தியுடையவனும், யோக க்ஷேமரஹிதனும். இல்லாதவைகளைச் சம்பாதிக்கவேண்டு மென்னும் எண்ணமும்,இருப்பதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்னும் ஆசையில்லாதவனும் இருக்கக்கட வாய். அப்படி எப்பொழுது ஆகின்றாயோ, அப்பொழுதே ஆத்மஞான சம்பன்னனாகின்றாய்.

அர்ஜுநன்:—ஓ சுவாமீ! வேதங்கள் பகவத்வாக்ய மென்று பெரியோர்கள் சொல்லுகின்றார்களல்லவா? அப் படி யிருப்பதனால், அது பகவத்சொரூபத்தைமாத்திர மல் லவா தெரிவித்தல்வேண்டும்? அப்படிக்கில்லாமல் துச்ச மும், நசாசுவதமுமாகிய இஹபர சுகங்களுக்குக் காரண மாயிருக்கப்பட்ட விஷயங்களையும் ஏன் தெரிவிக்கின்றது?

யாவா நர்த்த உதபாநே ஸர்வதஸ் ஸம்ப்லுதோதகே
தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத꞉ 46

கிருஷ்ணன்:—வாஸ்தவமே! அது பகவத்வாக்யந் தான். ஆனபோதிலும், இவ்வுலகத்தில் மனிதர்கள் திரி குணாத்மக (மூன்று குணமுடைய) சுபாவ முடையவர்க ளாதலால், ஸத்வ ரஜ தமோகுணங்களென்னும் மூன்று விதங்களும் மிசிரமுடையவர்களா யிருக்கின்றார்கள். அதில் சிலர் இம்மூன்று குணங்களை ஸமத்துவமாயுடையவர்களும், சிலர் ஸத்வகுண பிரதானமுடையவர்களும், அதாவது ஸத் வகுணம் அதிகமாயும்,ரஜ தமோ குணங்கள் குறைந்தவர்க ளாயும், சிலர் ரஜோகுண பிரதான முடையவர்களாயும் அதாவது, ரஜோகுணம் அதிகமாயும், ஸத்வ தமோகுணங் கள் குறைந்தவர்களாயும், மற்றும் சிலர் தமோகுண பிர தானமுடையவர்களாயும், அதாவது தமோகுணம் அதிக மாயும் ஸத்வ ரஜோகுணங்கள் குறைந்தவர்களாயும் இருக் கின்றார்கள். ஆதலால், இப்படிப் பட்டவர்களுக்கெல்லாம்

உபயோகப்படும்படி அவரவர்களுக்குத் தக்கபடி அனுகூலமாய் வேண்டிய விஷயங்கள் அந்த வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் எவரெவர்களுக்கு எந்தந்த விஷயம் வேண்டுமோ அவரவர்கள் அந்தந்த விஷயங்களை கிரஹிக்கின்றார்கள். இதனுடைய விபரங்களை இந்தக் கீதையின் முகவுரையில் ஒரு பெரிய தடாகத்தில் அநேக துறைகள் இருக்கின்றன அல்லவா? என்பதைப் பார்க்க,

ஆத்மானுபவமுடைய பிரம்மஞானி வேதங்களிலுள்ள ஸமஸ்த விஷயங்களிலிருந்து தனக்குவேண்டிய நித்தியானந்த பதவிக்கு மூலமாகிய நிர்மலஞானம், தபஸ்ஸு, ஸாதுஸங்கம் ஆகிய இவைகளை மாத்திரமே கிரகித்து மற்ற விஷயங்களை யெல்லாம் நிவர்த்தி செய்வான்.

கர்மண்யே வாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந
மாகர்ம பலஹேதுர் பூர்மாதே ஸங்கோஸ்த்வ கர்மணி. 47.

உன்னுடைய ஸ்திதியைப் பார்த்தால் உனக்குக் கர்மத்திலேயே அதிகாரமேயொழிய ஞானநிஷ்டைக்குத் தக்க யோக்கியதை இல்லை. எப்படியென்றால், கர்மத்தைச் செய்யும்பொழுது கர்மபலத்தில்மாத்திரம் உனக்கு அபேக்ஷை இருத்தல் கூடாது. அப்படி நீ கர்மத்தில் பலாபேக்ஷையை வைத்தால் அப்படிப்பட்ட கர்மபலத்தினால் உன்னை ஜன்மங்கள் தப்பாமல் தொடரும். அதனால், ஜன்ம பரம்பரா ரூபமான ஸம்ஸாரம் உனக்கு எப்பொழுதும் நிவர்த்தியாகாது. ஆகலால், ஸம்சாரத்தில் வைராக்கிய முடையவனாய் துக்கரூபமாகிய காம்யகர்மத்தினால் எனக்கு என்ன பிரயோஜனம் என்று நினைத்து நீ கர்மங்களைச் செய்யாமல் விட்டு விடலாகாது. ஆதலால், உன்சொந்த பிரயோஜனமாய் எதையும் அபேக்ஷிக்காமல் உனது குலாசார தர்மங்களாகிய நித்திய நைமித்யகாதி ஸமஸ்த கர்மங்களையும் ஈசு

வரார்ப்பணமாகச்செய்வதே உனது கடமையா யிருக்கின்றதே யொழிய அதனால் உண்டாகும் பலாபலன்களுக்கு நீ கர்த்தனாகமாட்டாய். ஏனென்றால், சூத்திரதாரியினால் ஆட்டப்பட்ட பிரதிமை (பொம்மை) யைப்போல இந்தஉலகத்திலுள்ள ஜனங்கள் பகவதாஞ்ஞானுசாரமாய் காலானுகுண்யமாகிய கர்மங்களை ஆசிரயித்துக் கொண்டிருப்பார்களென்று தெரிந்துகொள்ளக்கடவாய். அப்படியல்லாமல் நீயே சுவேச்சையாய் செய்வதுபோல் நினைத்தாயாகில் அப்படி ஆஸ்ரயிக்கும் கர்மங்களினுடைய புண்ணியபாபங்கள் உனக்கு ஜநநமரணாதி ரூபமாகிய ஸம்ஸாரத்திற்கு ஹேதுவாயிருக்கும். ஆதலால், பலத்தைக் கோராமலே சமஸ்த கார்யங்களையும் செய்துகொண் டிருக்கவேண்டும். பலாபேக்ஷையில்லாதவன் எந்தக் கர்மத்தையாகிலும் ஏன் செய்யவேண்டும்? எந்தக் கர்மங்களும் செய்யாதவனுக்கு பலப்பிராப்தி எப்படி யில்லையோ அப்படியே நிஷ்காமியாய் கர்மங்களை ஆசிரயிப்பவனுக்கும் பலப்பிராப்தி உண்டாகமாட்டாதல்லவா? அப்படிப்பட்ட விஷயத்திற்குக் கஷ்டப்பட்டுக் கர்மங்களைச் செய்தும் எந்தக் கஷ்டங்களும் அநுபவிக்காமல் சும்மா இருப்பவனைப்போல் எந்தப்பலத்தையும் அடையாம லிருப்பதைவிட அவனைப் போல் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதே மேலானதென்று எண்ணுகின்றாயோ ? அப்படி எண்ணவேண்டாம்.

யோகஸ்தஃ குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய!
ஸித்த்ய ஸித்த்யோ ஸ்ஸமோ பூத்வா ஸமத்வம் யோக உச்யதே 48.

யோகநிஷ்டனாய் சித்தியிலும், அசித்தியிலும் சமபுத்தியுடையவனாய் ஈசுவரார்ப்பணமாய் கர்மத்தைச் செய். அப்படிச்செய்வதனால் ஈசுவரன் சந்தோஷிப்பானென்னும் அபிப்பிராயத்துடன் செய்லாகாது. யோகம் எப்படிப்பட்

டதென்றால், ஞானப்ராப்தியை உண்டாக்குவது. அதனை அடையாமலிருப்பதே அஸித்தி; ஞானம் ஸித்தித்தாலும் ஸித்திக்காவிட்டாலும் ஒரே விதமாயிருப்பதே யோகம் எனப்படும். இதுவரையில், நான் சொல்லியதுபோல பலாபலன்களில் ஸமபுத்தியுடையவனாய் என்றால், உன்னுடைய விதியின்பிரகாரம் செய்யவேண்டிய கர்மத்தினால் மேன்மையை அடைந்தபோது ஸந்தோஷிக்காமலும், தாழ்மையை அடைந்தபோது துக்கிக்காமலும் அந்தக் கர்மத்தின் பலாபலன்களை ஈசுவரார்ப்பணமாய்ச் செய்து உன்னுடைய ப்ராரப்தானுஸாரமாய் நடக்கின்றதென்றும், என்னுடைய இச்சானுஸாரமாய் நடப்பதில்லை என்றும், நிச்சய புத்தியுடன் கர்மத்தை அநுஷ்டிக்கக்கடவாய். இப்படி அநுஷ்டிப்பதே யோகமென்று சொல்லப்படும். இந்த யோகத்தை அநுஷ்டித்து ஜயாபஜயங்களைச் ஸமமாய் எண்ணி கோரிக்கையில்லாதவனாய் யுத்தமென்னும் கர்மத்தைச் செய்.

தூரேண ஹ்யவரம் கர்ம புத்தி யோகாத் தநஞ்ஜய!
புத்தௌ ஶரணமந்விச்ச க்ருபணா: பலஹேதவ:. 49.

ஓ தநஞ்ஜயா! நான் இவ்வளவுதூரம் உனக்குச் சொல்ல வேண்டிய காரணம் என்னவென்றால், இவ்வுலகத்தில் பலத்தைக் கோரி கர்மங்களைச் செய்யப்பட்டவர்கள் நீசர்களாகின்றார்கள். ஆதலால், பலாபேக்ஷையில்லாமல் ஆசிரயிக்கப்படும் நிஷ்காம்ய கர்மத்தைவிட, பலாபேக்ஷயுடன் செய்யப்படும் காம்யகர்மம், மிகவும் நீசமானதாயிருக்கின்றது. அப்படிப்பட்ட நீச கர்மத்தை ஆசிரயிக்கவேண்டாம். எப்பொழுதும் நிஷ்காம்ய கர்மத்தை ஆசிரயிப்பதிலேயே உன் புத்தியை நிறுத்து.

சுரு || "யோ வா ஏததக்ஷரம் கார்க்ய விதித்வா ஸ்மால்லோகாத் ப்ரைதி ஸக்ருபணோ தய ஏததக்ஷரம்கார்கி விதித்வாப்ரைதி ஸ ப்ராஹ்மண:."

பரமாத்மாவைத்தெரிந்துகொள்ளாமல் பலாபேக்ஷையுடன் கர்மம் செய்பவன், மரணமடைந்து பரலோகம் சென்று சொர்க்க போகங்களை அனுபவித்து மறுபடியும் பூலோகத்திற்கு வந்து ஜநநமரணாதி துக்கஸம்ஸார பரம்பரையைச் சதா அனுபவித்துக்கொண்டிருப்பான். பரமாத்மாவைத்தெரிந்துகொண்டு மரணமடைந்தவன் பிரம்மசொரூபனாவானென்றும் சுருதி கோஷிக்கின்றது.

† புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே ஸுக்ருத துஷ்க்ருதே
தஸ்மா த்யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு கௌஶலம். 50.

சமத்துவபுத்தி யுடையவனாய் பலாபேக்ஷை யில்லாதவனாய் சுயதர்ம கர்மங்களைச் செய்பவன் அடையும் பலத்தைத் தெரிவிக்கின்றேன் கேள். அவன் ஸத்துவ சுத்தியும் ஞானமும் அடைந்து, தான்செய்த புண்ணிய பாபங்களைத் தன் தேகத்துடனே விட்டுவிடுவான். பந்த சுபாவமாகிய கர்மங்களைச் சமபுத்தியுடன் செய்தால், அது தனது சுபாவம் நீங்கி ஞானப் பிராப்திக்குச் சாதனங்களாகின்றது. ஆதலால், சமபுத்தியுடையவனாய் நீ கர்மத்தைச் செய்.

---

† கர்மங்களினுடைய சொபாவமானது பந்தத்தைக் கொடுப்பினும், அந்தக் கர்மத்தையே பலாபேக்ஷையின்றி ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்து அதனையே மோக்ஷத்திற்குச் சாதனமாகச் செய்துகொள்ளல்வேண்டும். புண்ணியமும் பாபத்தைப்போலவே மறுபடியும் ஜநந மரணத்தை யுண்டாக்கப்பட்டதாகையால், ஞானியானவன் பாபங்களின் பலனை எப்படி அபேக்ஷிக்கமாட்டானோ அப்படியே புண்யபலனையும் அபேக்ஷிக்கமாட்டான். புண்யபலனை விடலாகாதென்று சிலர் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுபவர்கள் அவிவேகிகளே. புண்ய கர்மபலன்களினால் மறுபடியும் ஜநநத்தை உண்டாக்கப்பட்ட புண்ணிய பலன்களையும் விட்டுவிடவேண்டும். மோக்ஷத்தில் ஆனந்தத்தை விருத்திசெய்கிற புண்யகர்மங்களின் பலன்களைமாத்திரம் விடுதல் கூடாது.

ஆனால், பாபத்தை மாத்திரம் விட்டுவிடலாமேயன்றி புண்யத்தை விட்டுவிடுவது நஷ்டமல்லவா என்று யோசிக்கின்றாயோ? அப்படியல்ல, பாபத்தினால் நரகத்தை அநுபவித்து முடிந்தவுடன் மறுபடியும் பூமியில் எப்படி ஜன்மமுண்டாகின்றதோ அதுபோல, புண்யங்களினாலும், சொர்க்காதி போகங்கள் உண்டாய் அப்படிப்பட்ட அனுபவம் பூர்த்தியானவுடனே மறுபடியும் பூமியில் ஜநிக்கவேண்டும். ஜன்மரகிதமாகிய ஸம்ஸார நிவர்த்தியானது புண்யத்தினாலும் உண்டாகின்றது. ஆதலால், புண்யபாபங்கள் இரண்டையும் ஞானியானவன் விடுதல் வேண்டும். இதற்கு சுருதிப் பிரமாணம் "உபே வித்வாந் புண்ய பாபே விதூய நிரஞ்ஜநஃ பரம ஸாம்யமுபைதி." பரப்பிரம்ம சொரூபத்தைத் தெரிந்துகொண்ட ஞானி, புண்ய பாபங்கள் இரண்டையும் விட்டு நிஷ்களங்கனாய் பரப்பிரம்மத்தில் ஐக்கியமாகின்றானென்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது. கர்மானுஷ்டானர்களில், நிஷ்காம்ய கர்மானுஷ்டானனே சிரேஷ்டமானவன். ஆதலால், நீயும் நிஷ்காம்ய கர்மானுஷ்டானத்தைச் செய்யவேண்டும்.

† கர்மஜம் புத்தி யுக்தா ஹி பலம் த்யக்த்வா மநீஷிணஃ
ஜந்ம பந்த விநிர்முக்தாஃ பதம் கச்சந்த்ய நாமயம். 51.

நிஷ்காம்ய கர்மங்களையே செய்யவேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் யாதெனில், எந்த புத்திமான்கள் நிஷ்காம்ய கர்மங்களை அனுஷ்டிக்கின்றார்களோ அப்படிப்பட்டவர்களுக்குப் புண்யபாபங்கள் அணுகமாட்டாது.

---

† சமபுத்தி யுடையவர்களாய் பலத்தைக்கோராமல் கர்மம் செய்யப்பட்டவர்கள், ஞானமடைந்து ஜன்மமென்னும் சிறைச்சாலையிலிருந்து விடுபட்டவர்களாய் ஸர்வோபத்திர ரகிதமாகிய மோக்ஷமென்னும் பிரம்மஸ்தானத்தை அடைவார்கள்.

எப்பொழுது புண்ய பாபங்களில்லாமல் போகின்றனவோ அப்பொழுதே புனர்ஜன்மம் இல்லாமல் போகின்றது. புண்யம் செய்வதனால் அந்தப் புண்யபலத்தையும், பாபம் செய்வதனால் அந்தப் பாப பலத்தையும் ஜநநமெடுத்து அனுபவிக்கவேண்டும். புண்ய பாபங்களில்லாவிடில் ஜன்மம் உண்டாகவேமாட்டா. அப்படி ஜன்ம ரஹிதமாவதே மோக்ஷமென்று சொல்லப்படும். ("ஜீவப்பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" கர்பத்தில் பிண்டம்தரிப்பது என்பதில் கடோபநிஷத் பார்க்க.) நிஷ்காம்ய கர்மானுஷ்டானத்தினால் சித்தசுத்தியும் அந்த சித்தசுத்தியினால் ஞானமும் எப்பொழுது உண்டாகுமென்று கேட்கின்றாயோ? அதனைச் சொல்லுகின்றேன் கேள். ஆத்மாநாத்ம விவேகங்கள் கெட்டு விஷயங்களில், மனம் புத்தி சித்த அஹங்காரமென்னும் அந்தக்கரணங்கள் எப்பொழுது பிரவர்த்திக்காமல் இருக்கின்றனவோ அப்பொழுதே இதுவரையில் கேட்ட வேதாந்தங்களினாலும், இனிமேல் சொல்லப்போகும் வேதாந்தங்களினாலும் வைராக்யத்தை அடைவாய். என்றால்,மனது நிர்விஷயமாய்,நிர்மலமாய் ஸ்வாதீனமானால் உபதேசங்களினால் பிரயோஜனமில்லை. அப்பொழுது ஞானம் தனக்குத் தானாகவே உண்டாகும். ஆதலால், ஓ அர்ஜுனா! இதுவரையில் நான் சொல்லி வந்தது போல் நிஷ்காம்யனாய் யுத்தம் செய்யக்கடவாய்.

யதா தே மோஹகலிலம் புத்திர் வ்யதி தரிஷ்யதி
ததா கந்தாஸி நிர்வேதம் ஸ்ரோதவ்யஸ்ய ஸ்ருதஸ்யச. 52.

ஸ்ருதி விப்ரதிபந்நா தே யதா ஸ்தாஸ்யதி நிஸ்சலா
ஸமாதா வசலா புத்திஸ்தா யோக மவாப்ஸ்யஸி. 53.

அர்ஜுநன்:—ஐயா, கிருஷ்ணமூர்த்தியே! நீர் இவ்வளவு தூரம்சொல்லியும் யுத்தம்செய்ய என் மனதிற்கு

இஷ்டமில்லாமலிருக்கின்றது. அதற்கு நான் என்செய்ய வேண்டும்.

கிருஷ்ணன்:—ஆம், இப்பொழுது நான் சொல்லியவைகளெல்லாம் உன் புத்திக்குப் பிடிபடாதது நிஜமே; ஏனென்றால், நீ இதுவரையில் வேதத்திலுள்ள கர்மகாண்ட விஷயங்களை யெல்லாம் வேதவாதிகளா யிருக்கப்பட்ட அநேகர்களினால் அநேக விஷயங்களைக் கேட்டிருப்பதனால் உன் புத்தி கலங்கியிருக்கின்றது. ஆதலால், நான் சொல்லும் முக்கியமான வாக்கியங்கள் உன் புத்திக்கு பிடிபடுவது கஷ்டமே! ஜலம் தெளிவாயிருக்கும்போது அதில் முகம் காணப்படும், ஜலம் கலங்கியவுடன் முகம் காணப்படாதல்லவா? அதுபோல், உன் மனம் கலங்கியிருப்பதனால் நான் சொல்லும்விஷயங்கள் தெரியவரமாட்டாது. இப்பொழுது அஞ்ஞானத்தினால் உன் மனம் கலங்கி யிருக்கின்றது. இந்தக் கலக்கம் எப்பொழுது நீங்குகின்றதோ அப்பொழுதுதான் உன்மனம் நிச்சலமாகும். உனக்கு நான் இதுவரையில் சொல்லிவந்த விஷயங்களெல்லாம் அப்போதுதான் பிடிபடும். அன்றியும், இனி சொல்லப்போகும் விஷயங்களிலும் உனக்கு வைராக்கியம் உண்டாகும். அப்படிப்பட்ட வைராக்கியம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுது உன் புத்தி சலிக்காமல் சமாதியில் நிற்கும். அப்படிநின்றபோது உனக்கு யோகம் சித்திக்கும்.

அர்ஜுந உவாச.

ஸ்தித ப்ரஜ்ஞஸ்ய கா பாஷா? ஸமாதி ஸ்தஸ்ய கேஶவ !
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத? கிமாஸீத? வ்ரஜேதகிம். 54.

அர்ஜுநன்:—ஓ கேசவா! சமாதியில் புத்தி நிஸ்சலனமாய் எப்பொழுது நிற்கின்றதோ, அப்பொழுது யோகம் சித்திக்குமென்று சொன்னீர்களல்லவா? சமாதியில் புத்தி

நிஸச்சலனமாய் நிற்பது எப்படி? நிச்சலன புத்தி உடையவனுடையலக்ஷணம் எப்படிப்பட்டது? அவன் எப்படி வார்த்தையாடுவான்? எவ்விதமாயிருப்பான்? அவனது நடவடிக்கைகள் எப்படிப்பட்டவைகள்? எந்த லக்ஷணங்களையுடையவன் யோகி எனப்படுவான்? பார்த்தமாத்திரத்தில் இவன் இப்படிப்பட்டவனென்று தெரிந்துகொள்ளலாமா?

உதீரிதோர்த்த: பசுநாபிக்ருஹ்யதே ஹயாஸ்சநாகாஸ்ச வஹந்தி சோதிதா:, அநுக்தமப்யூஹதி பண்டிதோ ஜந: பரேங்கிதஜ்ஞாந பலா ஹி புத்தய:

என்னும் சுருதி ரீதியாய், சொல்லிய சங்கதிகளைப் பசுக்களும் கிரஹிக்கின்றன. குதிரைகளும் யானைகளும் சொல்லியது போலக் கேட்டுச் சுமையைச் சுமக்கின்றன. ஞானிகளோ சொல்லிய விஷயங்களை ஊஹிப்பதுமேயல்லாமல் இதரர்களின் மனசிலுள்ள சங்கதிகளைத் தெரிந்துகொள்ளுகின்றார்கள். இதுதான் ஞானத்திற்கு ஸார்த்தகம். உன்னைப்போன்ற ஸம்பூர்ண ஞானிகள், இவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று ஊஹிக்கலாம். ஞானிகளுடைய நடவடிக்கைகளை நீர் அறிவீர். ஆதலால், எனக்குத் தெரிவித்து என்னை கிருதார்த்தனாய்ச் செய்யும், கிருஷ்ணா!

ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த்த! மநோகதாந்
ஆத்மந்யே வாத்மநா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ் ததோச்யதே. 55.

"ஸ்தித ப்ரஜ்ஞ: (இதி) உச்யதே" நிஸ்சலமாகிய ஞானியென்று சொல்லப்படுகின்றான்.

"பிர்மசர்ய முதலாகிய கர்மங்களை அனுஷ்டித்து ஞானயோக நிஷ்டனையும் நிஷ்காம்ய கர்மயோகனையும் இருக்கப்பட்ட இவர்கள் இருவரிலும் ஞானயோக நிஷ்டனைக்குறித்து இந்த சுலோகமுதல் இந்த அத்தியாயம் பூர்த்தியாகும்வரையில் சொல்லுகின்றார். அத்யாத்ம சாஸ்த்தி

ரங்களில், கிருஹஸ்தனுக்கு எப்படிப்பட்ட லக்ஷணங்கள் சொல்லப்பட்டனவோ, அவைகளே ஞானப்பியாசிக்குச் சாதனமென்று தெரிவிக்கின்றனர்.''

அர்ஜுநா! மனது பிரவேசித்த ஸமஸ்த இச்சைகளை யெல்லாம் பூர்த்தியாய் விட்டுவிட்டு அதாவது, பாஹ்ய (வெளி) விஷயங்களில் எவ்வளவேனும் அபேக்ஷையில்லா மல் இதர விஷயங்களிலெல்லாம் எப்பொழுது விரக்தனா கின்றானோ, அப்பொழுது ஸ்திர பிரஞ்ஞனென்று சொல்லப் படுவான். ஸ்திர பிரஞ்ஞனென்றால், ஆத்மாநாத்ம விவேகத்தினால் உண்டாகிய நிச்சல ஞானமுடையவன். அதாவது, தாரேஷணை புத்ரேஷணை தனேஷணைகளை விட்டவனாய்(ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்) சொல்லி யிருக்கும் ராஜயோக மந்திரத்தில் நிரந்தரானுபவ நிஷ்டனா யிருக்கப்பட்டவனே ஸ்திர பிரஞ்ஞனென்றும், ஜீவன்முக்த னென்றும் சொல்லப்படுவான். (இந்த ஜீவன் முக்தன் லக்ஷணம் ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் காணலாம்.)

சுரு||''யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேஸ்ய ஹ்ருதிஸ்திதாః
அத மர்த்யோ ம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஸ்நுதே.''
[கடோபநிஷத்.]

இருதயத்திலிருக்கப்பட்ட சகல எண்ணங்களும் எப் பொழுது விடப்படுகின்றனவோ, அப்பொழுது ஸம்ஸார விரக்தனாய் இந்த ஜன்மத்திலேயே பிரம்மானுபவம் உடைய வனாவான். என்றால், ஜீவன் முக்தனாவானென்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த சுருதியின் தாத்பர்யம் என்ன வென்றால், நமது தேகமத்தியில் புத்தியென்னும் குகையில் ஆத்மா சுயம் பிரகாசமாய் சாக்ஷிமாத்திரனாய் ஜீவாத்மாவாய் வாசஞ்செய்துகொண் டிருக்கின்றது. அப்

படி சுயம் பிரகாசனும் சும்மா இருக்கப்பட்டவனிடம், காம க்ரோத லோப மோஹ மத மச்சரமென்று சொல்லப்பட்ட அழுக்குகளெல்லாம் சேர்ந்து ஜநநங்கள் தோறும் அதிகரித்துக் கொண்டே வருவதனால் ஜீவாத்மா அசுத்தனாய் விட்டான். இந்த ஆசா பாசங்களென்னும் அழுக்குகளெல்லாம் எப்பொழுது நீங்கி ஆத்மா பரிசுத்தமாகின்றதோ அப்பொழுது இந்த ஆத்மாவென்னும் ஜீவன் முக்தியடைகின்றது. இந்த அழுக்குகளெல்லாம் ஒழியும்வரையில் ஜன்மங்கள் வந்துகொண்டேயிருக்கும். புருஷன், காமக்ரோத லோப மோஹ மத மச்சரமென்னும் ஆறு குணங்களையும்,

அதாவது:—

1. காமமென்பது:—தனம் தான்ய புத்திர பௌத்திராதிகளின் மீது அதிகப் பிரீதி வைத்தல்.

2. க்ரோதமென்பது:—ஒருவனைக் கெடுப்பதற்குப் பிரயத்தினப்படுதல்.

3. லோபமென்பது:—தனது சொத்திலிருந்து ஞானிகளுக்கும் கிஞ்சித்தேனும் கொடுக்கக்கூடாது என்னும் எண்ணங் கொள்ளல்.

4. மோஹமென்பது:—தாய் களத்திராதி முதலானவர்களின்மீது அதிகபிரீதிவைத்துத் தனக்கு உண்டாயிருக்கும்பொருள் போதாதென்றும், இன்னும் அதிகமாய்ச் சம்பாதிக்கவேண்டுமென்னும் ஆசையை விருத்திசெய்தல்.

5. மதமென்பது:—திரவ்வியப்பெருக்கினால் செருக்குற்றுப் பிறரை மதியாமையை விளைவித்தல்.

6. மச்சரமென்பது:—தன்னைப்போல் பிறரும் சுகமுறுவதைச் சகியாமையை விளைவிக்கும் சித்தவிருத்தியை உண்டாக்குதல்.

இப்படிப்பட்ட ஆறு குணங்களும், தாரா புத்திராதிகளாகிய ஈஷணாத்திரயங்களும், சொர்க்காதி போகாபேக்ஷை

களும், இன்னும் இதரமாகிய எல்லாக் கோரிக்கைகளும் தன் மனசிலிருந்து எப்பொழுது விடுகின்றனவோ, அப்பொழுது அவனுடைய மனம் எதிலும் பற்றாமல், தன்னிடத்திலேயே ஆனந்தத்தை அடைந்துகொண்டிருக்கும். இப்படிப்பட்ட ஸ்திதி எப்பொழுது வருகின்றதோ, அப்பொழுது ஸ்திதப்பிரஞ்ஞனாகின்றான். தாரேஷணை புத்திரேஷணா தானேஷணை இவைகள் எப்படிப்பட்டனவோ அவைகளை ஜீவப் பிரமைக்கிய வேதாந்த ரஹஸ்யத்தில் பாருங்கள்.

து:கே ஷ்வநு த்விக்நமநாஸ் ஸுகேஷு விகத ஸ்ப்ருஹ:
வீத ராகபய க்ரோத ஸ்திததீ ர்முநி ருச்யதே. 56.

அப்படிப்பட்ட ஸ்தித பிரஞ்ஞாலக்ஷணம் இன்னும் எப்படிப்பட்டதென்றால், அத்யாத்மிக அதிதைவக அதிபௌதிகமென்னும் துக்கங்களில் எது சம்பவித்தபோதிலும் மனோகிலேச மடையாதவனும், ஸ்திரீ சந்தன புஷ்ப தாம் பூலாதி போகங்களினால் உண்டாகும் சுகங்களில் ஆசையில்லாதவனும், ராக (இல்லாதவைகளின்மீது இச்சித்தல்,) பய (இஷ்டமானது போவதனாலும், அனிஷ்டமானது வருவது காரணமாயிருப்பதனாலும் அவைகளைப் பார்த்துத் துக்கித்தல்.) இவைகளெல்லாம் இல்லாதவனாய் எப்பொழுதும் பகவத்விஷயமான சிந்தை செய்யப்பட்டவனே ஸ்தித பிரஞ்ஞனென்று சொல்லப்படுவான்.

அர்ஜுநன்.—சுவாமி! துக்கங்கள் அத்யாத்மிக அதிதைவிக அதிபௌதிகமென்று மூன்று விதங்களாய்ச் சொன்னீரல்லவா? அவை எப்படிப்பட்டவைகள்? தெரிவிக்க வேண்டும்.

கிருஷ்ணன்:—அர்ஜுநா சொல்லுகின்றேன் கேள்? தொண்ணூற்றாறு தத்வங்களுடன்கூடிய சரீரத்திற்கும் இந்திரியங்களுக்கும் வாத பித்த சிலேஷ்மங்களினால் உண்டாகும் சுரம், தலைநோய், காசம், அஜீர்ணம், மூலம், இருமல்

முதலாகிய வியாதிகள் சம்பவித்துத் துக்கிப்பது அத்யாத்மிகமென்றும்; பசு, யானை, புலி, சிங்கம், காட்டுப்பன்றி, நாய், நரிகள், பாம்பு, தேள், கொசு, பேன், மூட்டுப்பூச்சி, முதலாகிய ஜந்துக்களினுல் உண்டாகும் உபத்திரவங்களும், தனக்கு வேருயிருக்கும் தாரா புத்திராதி சிநேகிதர்களுக்கும் சம்பவிக்கும் வியாதிகள் முதலாகியவைகளினுல் உண்டாகும் துக்கத்தினுல் தப்பித்துக்கொண்டிருப்பது அதிதைவிகமென்றும்; வெய்யில், மழை, காற்று, இடி, அக்னி, ஜலம், கோயில், பிரகாரம், மண்டபம், மெத்தை கோட்டைக்கொத்தளம், முதலானவைகளால் கெடுதி சம்பவிப்பது அதிபௌதிகமென்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட துக்கங்களில் தனக்கு எது சம்பவித்த போதிலும் மனோவிகாரங்கள் ஆடையாதவனே யோகி யெனப்படுவான்.

யஸ் ஸர்வத்ரா நபிஸ்நேஹ ஸ்தத்த்ப்ராப்ய ஶுபாஶுபம்
நாபிநந்தி நத்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா. 57.

அப்படிப்பட்ட யோகசித்தி யடைந்தவனுடைய லக்ஷணம் இன்னும் எப்படி யிருக்குமென்றால், சுகங்களுக்குக் காரண பூதமாயிருக்கும் சுகங்களில், அதாவது ஏதாயினும் ஒரு வியாபாரத்தினுல் விசேஷ தனலாப முண்டாவது, சபையில் சன்மானமுண்டாவது, கிருஹத்தில் விவாஹம், புத்திரலாபம் முதலாகிய சுபகாரியங்களுண்டாவது, தான் செய்யத் தொடங்கிய சகல விஷயங்களும் நிர்விக்நமாய் நடந்தேறுவது இவை முதலாகிய அநேக சுபங்கள் நடந்தேறியபோது சந்தோஷிக்காமலும்; அல்லது, துக்ககரமாகிய அசுபங்கள் அதாவது, ஒரு வியாபாரத்தில் விசேஷ நஷ்டமுண்டாவது, சபையில் அவமானப்படுவது, கிருஹத்தில் தாரா புத்திராதிகளில் எவராயினும் மரணமடைவது, அல்லது அவர்களுக்கு வியாதி சம்பவிப்பது இவை முதலாகிய அசுபங்களில் எப்பொழுது எது சம்வித்தபோதிலும்

அதனால் துக்கிக்காமலும், சுபா சுபங்களெல்லாம் காலானு குண்யமாய் பகவதாஞ்ஞானுசாரமாய் நடக்கின்றன என்னும் மனோநிச்சய முடையவனாய் நிச்சிந்தையாய் எவன் இருக்கின்றானோ அப்படிப்பட்டவனே ஸ்திரமான ஞான முடைய யோகி எனப்படுவான்.

யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்கானீவ ஸர்வஶ:
இந்த்ரியா ணீந்த்ரியார்த்தேப்ய ஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா. 58.

அப்படிப்பட்ட யோகியின் லக்ஷணம் இன்னும் எப் படிப்பட்டதென்றால், ஆமையானது பூமியில் நடந்து கொண்டு அபாயகரமாகிய வஸ்துவைக் கண்டபோது எப் படி அவயவங்களை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளு கின் றதோ அதுபோல் இந்த ஞானநிஷ்டனும் கண்கள் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் ஐந்து இந்திரியங்களை யும் விஷயங்களிலிருந்து திருப்பிக்கொள்ளுவான். இப்படி திருப்பிக்கொள்ளுவதனால் அவனுடைய ஞானம் ஸ்திரமா கின்றது.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! மனதிற்கு விகாரத்தை யுண் டாக்கும் இந்திரியங்களைத் திருப்பிக்கொண்டமாத்திரத் தில் அந்த விகாரங்கள் போய்விடுமா? அதாவது, ஒரு ஸ்திரீயினுடைய சௌந்தர்யத்தைப் பார்த்து மனோவிகா ரம் உண்டானவுடன் திருஷ்டியைத் திருப்பிக்கொண்ட மாத்திரத்தில் அதுவரையில் பார்த்த மனோவிகாரமும் அடங்கிவிடுமா?

விஷயா விநிவர்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் திருஷ்ட்வா நிவர்ததே. 59.

கிருஷ்ணன்:—அந்த மனோவிகாரம் உடனே அடங்க மாட்டாது; † இந்திரியங்களுக்கு மனமே பிரதானமானது.

† இந்திரியங்கள் வெளியிலுள்ள விஷயங்களாகிய வஸ்துக் களையே எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிறபடியால், இந்திரி

மனதில் உண்டாயிருக்கும் விகாரம் அடங்கினால், இந்திரியங்கள் யாதொன்றும் செய்யமாட்டா. அதெப்படியெனில், ஒரு புருஷன் தன் மனதில் ஏதாயினும் ஒன்றை நினைத்த பொழுது, அவன் எதிரில் அப்பொழுதிருக்கும் வஸ்துவின் மீது திருஷ்டிவைத்துப் பார்த்துக் கொண்டிருந்தபோதிலும் இப்படிப்பட்ட வஸ்துவென்று தெரிந்துகொள்வதாயினும், அல்லது தனது சமீபத்தில் இருக்கப்பட்டவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருக்கும் சம்பாஷணைகளைக் கேட்டுக் கொண்டிருந்தபோதிலும், அந்தச் சம்பாஷணை இப்படிப்பட்டதென்று அறிவதாயினும், அவைகளில் மனது செல்லாமலிருப்பதும், நாம் அறிவோமல்லவா? ஆதலால், இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பின மாத்திரத்திலேயே மனதிற்கு அப்படிப்பட்ட விஷயங்களிலிருக்கும் இச்சை அடங்கமாட்டாது. ஆதலால், விஷயங்களில் மனதை ஓடவிடாமல் திருப்பிக்கொண்டவனுக்கு அந்த விஷயங்களினுடைய அனுபவமாத்திரம் இல்லாவிட்டாலும் அவைகளிலுள்ள அபேக்ஷைமாத்திரம் விடாமலிருக்கும். ஆனபோதிலும், இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பிக் கொண்டே வந்தால் அப்படிப்பட்ட விஷய வாஞ்சை கிரமக்கிரமமாய் நசித்துக்கொண்டேவரும். அதனால், ஆத்மசொரூப ஞானம் கிரமக்கிரமமாய் உயர்ந்துகொண்டே வரும். இப்படியே உயர்ந்து வரவர சில நாளைக்குள் விஷய வாஞ்சை (இச்சை) பூர்த்தியாய் நசித்துவிடும்,

அர்ஜுனா! தேஹமுடையவன் தேஹியென்பது சாமான்ய அர்த்தம். தேஹியென்றால் ஜீவனென்றும், பரமாத்

யங்களுக்கு விஷயங்கள் ஆஹாரமாயிருக்கின்றன. ஆதலால், முதலில் இந்திரியங்களை அடக்கவேண்டும். இந்திரியங்கள் அடங்கினாலும் இச்சா சொரூபம் அடங்கமாட்டாது. பரமாத்ம தர்சனத்தினால் அந்த மனதிலுள்ள இச்சை அடங்கிவிடும்.

மாவைவிட வேறாய் மற்றொருவன் இருக்கின்றானென்றும் விசிஷ்டாத்வைதிகளும், துவைதிகளும் சொல்லுவார்கள். அத்துவைதமதத்தில் அவித்தியா (அஞ்ஞான) சம்பந்தம் வரையில் பரபிரம்ம பிரதிபிம்பம் ஜீவனென்று விவகரிக்கப் படுமேயொழிய, பாரமார்த்திகதசையில் ஜீவன் வேறாய் ஒருவனிருக்கின்றானென்றும், பரமாத்மா வேறாய் ஒருவனிருக்கின்றானென்றும் இல்லை. அதுபோல், ஆத்மா என்னும் வார்த்தை வியவஹாரத்தில், ஜீவாத்மா பரமாத்மா என்று உபயத்திராளுக்கும் சாமான்யமான வார்த்தையாகும். பாரமார்த்தத்தில், கேவல பரப்பிரம்மமேயாதலால், இவ்விடத்தில் தேஹியென்றால் பரப்பிரம்ம பிரதிபிம்ப சிதாபாஸனான ஜீவனென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

யந்ததோ ஹ்யபி கௌந்தேய! புருஷஸ்ய விபஸ்சித:
இந்திரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:. 60

ஓ அர்ஜுனா! மோக்ஷத்திற்காக திடப் பிரயத்தினப் பட்டுக்கொண்டிருக்கும் * விவேகியினுடைய மனதையும், இந்திரியங்கள் பலாத்காரமாய் விஷயங்களில் இழுக்கச்செய்கின்றன. அதனால், அவனுக்கும் விஷயங்களில் இச்சை விடமாட்டாது. எப்படிப்பட்ட விவேகியாயிருந்தபோதிலும் அவனுடைய மனதை இந்திரிய வியாபாரங்களுடன் போகவிடாமல் இழுத்துப் பிடிப்பது கஷ்டசாத்தியமாயிருக்கும்.

---

* விவேகிகளின் மனதையும், இந்திரியங்கள் பலவந்தமாய் விஷயங்களில் இழுத்துக்கொண்டு போகும்போது, அவிவேகிகளினுடைய மனதை இழுத்துக்கொண்டுபோவது ஆச்சர்யமல்ல. ஆதலால், எல்லோரும் இந்திரியங்களை விஷயங்களில் போகவிடாமல் அடக்கவேண்டியது முக்கியம். அப்படியே மனதையும் அடக்க வேண்டும். இந்திரியங்களை ஜயித்தாலேயொழிய ஆத்மதர்சனம் உண்டாகமாட்டாது.

அர்ஜுநன்:—இப்பொழுது நீர் சொல்லிக்கொண்டு வந்த விஷயங்களை ஆலோசிக்குமளவில், மனதைவிட இந்திரியங்களே அதிக பலமுடையனவாகக் காணப்படுகின்றன. அப்படியிருக்க மனதை இந்திரியங்கள் சுலபமாய் இழுக்கத் தக்கதாயிருந்தபோதிலும் பலாத்காரமாய் இழுக்கின்றதென்று சொல்வதற்குக் காரணமென்ன?

கிருஷ்ணன்:—ஆம், அவை பலமுடையனவா யிருந்தபோதிலும், விவேகியானவன் அவைகள் போகும் வழியாகவே தன் மனதைப்போகவிடாமல் திருப்பிக்கொண்டு வருவான். அப்படிப்பட்டவன் பிரயத்தினத்தையும் பங்கப்படுத்தி, அவன் மனதையும் விஷயங்களில் இழுத்துச் செல்லும். ஆதலால், அவன் இந்திரியங்கள் அப்படிச்செய்வது சுலபசாத்தியமல்ல. அவனுடைய சக்தியைப் பார்க்கிலும் அந்த இந்திரியங்களினுடைய சக்தியே பலமுடையது. அப்படிப்பட்டவனுடைய மனமும், கஷ்டத்தினால் நசிக்கச்செய்யும். பலாத்காரமாய் நசிக்கச்செய்யும் என்பதற்குக் காரணமென்னவென்றால், இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள். ஒரு வண்டியில் குதிரையைக்கட்டி நடத்தும்போது அக்குதிரை, வண்டியை வேகமாயிழுத்துக்கொண்டு போகின்றதல்லவா? அப்படி வேகமாய்ப போகும்போது பின்புறமாய் இரண்டு மூன்று மனிதர்கள் இழுததுக்கொண்டிருந்தால், அந்தக் குதிரை சுலபமாய் முதல் இழுத்ததுபோல் இழுக்காமல் மிகவும் கஷ்டத்துடன் யிழுக்குமல்லவா? அதுபோல், மனமென்னும் வண்டியை இந்திரியங்களென்னும் குதிரைகள் இழுக்கும்போது விவேகியானவன் தன் புத்தியினால் அந்த மனமென்னும் வண்டியை இழுத்துப்பிடிக்கின்றான். அப்படி இழுத்துப்பிடிக்கப்படுவதனால், இந்திரியங்களென்னும் குதிரைகள் இழுப்பதற்குச் சுலபசாத்யமாகமாட்டாது.

அர்ஜுநன்:—விவேகியினுடைய மனதை இந்திரியங்கள் பலாத்காரமாய் இழுக்குமென்று சொன்னீரல்லவா? விவேக சூன்னியனுடைய மனதைக்கூட அப்படியே பலாத்காரமாய் இழுக்கவேண்டியதுதானு?

கிருஷ்ணன்:—வேண்டியதில்லை. நான் முன்சொல்லிய திருஷ்டாந்தம்போல் வண்டியை பின்புறமாய் இழுத்துப் பிடிக்காவிடில் அந்த வண்டியைக் குதிரைகள் கஷ்டமில்லாமல் சுலபமாய் எப்படி இழுத்துக்கொண்டோடுமோ அது போல், விவேகசூன்யனுனவன் மனதை தன்புத்தியினுல் இழுத்துப்பிடிக்கமாட்டான். ஆதலால், அப்படிப்பட்டவனுடைய மனதை இந்திரியங்கள் அதி சுலபமாய் இழுக்கும்.

அர்ஜுநன்:—அப்படியானுல், இந்திரியங்களை இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கும் விவேகியினுடைய மனதையும் இந்திரியங்கள் பலாத்காரமாய் இழுத்துக்கொண்டிருந்தால் அப்படிப்பட்ட இந்திரியங்களை அவன் எப்பொழுதேனும் ஜயிப்பானு?

† தானி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பரஃ
வஶேஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய பிரஜ்ஞா ப்ரதிஷ்டிதா. 61.

கிருஷ்ணன்:—ஆஹா! ஜயிப்பான். இந்திரியங்கள் யோகாப்பியாசியினது மனதையும் பலாத்காரமாய் இழுத்துக்கொண்டிருக்கும். அதனுல், அவைகளை சுவாதீனப்படுத்திக்கொள்ள அவனுக்கும் கஷ்டசாத்தியமாயிருப்பது நிஜமே. ஆயினும், யோகாப்பியாசியானவன் இந்திரியங்க

† ஆத்மதத்வத்தை விசாரிக்குமளவில், இந்திரியங்களுக்கெல்லாம் மனதே ராஜன். அந்த மனமென்னும் ராஜனைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்தபோது, அதாவது பரப்பிரம்ம சொரூபமாயிருக்கும் ஆத்மாவில் மனதை ஐக்கியம் செய்தபோது சபலத்வமுடைய (சங்கல்பமென்னும்) சேவகர்களெல்லாம் ஓடிப்போய் விடுவார்கள்.

ளென்னும் குதிரைகளினால் இழுத்துக்கொண்டிருக்கும் தன் மனதென்னும் ரதத்தைத் துன்மார்க்க விஷயங்களில் போகவிடாமல், புத்தியென்னும் கயிற்றால் இழுத்துப் பிடித்துச் சன்மார்க்கத்திற்குத் திருப்பிக்கொண்டு வரவேண்டும்; அப்படிச் செய்வதனால், காரில்லாத கலப்பை எப்படி உழமாட்டாதோ அதுபோல், மனதில்லாத எந்த இந்திரியங்களும் பிரயோஜனப்படமாட்டாது. இந்திரியங்களில் ஏதேனும் ஒன்று தப்புமார்க்கங்களில் ஓடினால், அது மனதினுடைய தப்பாகவே இருக்கின்றது. அப்படிப்பட்ட மனதை முதலில் வசப்படுத்திப் பிறகு, இந்திரியங்களை வசப்படுத்துவதற்குப் பிரயத்னிக்கவேண்டும். அப்படி மனதை வசப்படுத்தச் சாதனம் புத்தியேயாம். ஆதலால், எவனொருவன் தன்புத்தியினால் யுக்தா அயுக்தங்களை ஆலோசித்துத் தன்மனதை, இந்திரியங்களுடன் தப்புமார்க்கத்தில் போகவிடாமல் இழுத்துப்பிடிக்கின்றானோ, அவனுக்குத்தேவதைகள் பிரசன்னமாவார்கள். என்றால், அப்படிப்பட்டவனுக்கு முக்தி சுலப சாத்தியமாகும் என்பதாம்.

அர்ஜுனன்:—ஆனால் மனதை வசப்படுத்துவதற்குப் புத்தியே சாதனமென்று சொன்னீரல்லவா? அதனை எப்படிச்செய்யவேண்டுமோ விவரித்துச்சொல்லவேண்டும்

கிருஷ்ணன்:—நல்லது, சொல்லுகின்றேன் கேள். மனிதன் ஸ்திரீ ரூபத்தைப் பார்த்தவுடன் அவனுடைய மனம் அதில் நாடுகின்றதல்லவா? அப்பொழுது விவேகியானவன் என்ன செய்யவேண்டுமென்றால், "நாரீ ஸ்தனபர நாபீதேஸம் த்ருஷ்ட்வா மாகா மோஹாவேஸம் ஏதன்மாம்ஸ வஸாதிவிகாரம் மநஸி விசிந்தய வாரம் வாரம்" என்னும் சுருதிரீதியாய் ஸ்திரீரூபம் ரக்தம், கொழுப்பு, நரம்பு, எலும்பு, மாமிசம், முதலானவைகளுடன்கூடி, நாற்றமுடைய கெட்டபதார்த்தமென்று எண்ணினால் அப்படிப்

பட்டவனுடைய திருஷ்டிக்கு ஸ்திரீகள் காணப்பட்டபோதி லும், மோஹத்தை அடையாமல் இருப்பான். இப்படி யிருந்தபோதிலும் அவனது இந்திரியங்கள் அப்போதைக் கப்போது தர்விஷயங்களில் ஓடிக்கொண்டேயிருக்கும். அப்படி ஓடாமலிருப்பதற்காக யோகியானவன் தன் மன தை என்னிடம் சேர்த்து என்னையே ஆசிரயித்திருந்தால் அப்பொழுது அவன் மனது அந்த இந்திரியங்களைத் தப்பு மார்க்கத்தில் திருப்பாமல் நிறுத்திவிடும். அஃதெப்படி யெனில், இதுவரையில் மனம் வண்டியைப் போன்றதென் றும், இந்திரியங்கள் குதிரைகளைப்போன்றனவென்றும், பின்புறமாய் இழுத்துப்பிடிப்பவன் யோகியைப் போன்ற வனென்றும், அப்படி இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த போதிலும் அந்தக் குதிரைகள் கஷ்டத்தோடாயினும் வண் டியை இழுத்துக்கொண்டிருக்கு மென்று சொல்லி இருந் தேனல்லவா ? அப்படி பின்புறமாய் மனிதன் இழுத்துப் பிடிப்பதைவிட உறுதியான கயிற்றால் ஒரு விருக்ஷத்தில் கட்டிவிட்டால் அப்பொழுது அந்தவண்டியைக் குதிரை இழுக்குமா ?

அர்ஜுநன்:—அப்படிக் கட்டினபிறகு அந்த வண் டியை இழுப்பதற்கு அந்தக் குதிரை எவ்வளவு பலமுடை யதா யிருந்தபோதிலும் பூர்த்தியாய் சாத்தியமாகாமல் நின்றேவிடும்.

கிருஷ்ணன்:—அதுபோல், யோகியானவன் தன் மன தென்னும் வண்டியை "நான்" என்னும் விருக்ஷத்தில் கட்டி விட்டால் அதாவது, மனதை ஆத்மாவில் ஐக்யம் செய் தால், அப்பேர்ப்பட்டவனுடைய இந்திரியங்கள் விஷயங் களில் இழுத்துச்செல்லமாட்டாது. இதன்விஷயமாய் ஒரு கதையுண்டு. அதைச் சொல்லுகின்றேன் கேள். ஒருபட் டணத்தில் கள்ளன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள்

இரவு, அந்தப் பட்டணத்தை ஆளும் இராஜனுடைய படுக்கைஅறையில் ரகஸ்யமாய் பிரவேசித்து, ராஜனும் அவனுடைய பத்நியும் நல்லநித்திரை செய்யும்பொழுது அவர்களினுடைய ஆபரணங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டு ஒருபுறமாய்ப் பதுங்கியிருந்தான். ராஜனும் பத்நியும் பள்ளியறையில் பிரவேசித்துச் சந்தோஷமாய் வார்த்தை யாடிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் ராஜனானவன், தன் குமாரத்தியை ஒரு பாகவதோத்தமனுக்கு அதாவது, ஸதாகாலமும் பகவந்நாம ஸ்மரணை செய்து கொண்டிருக்கப்பட்டவனுக்கு, அவனுடைய குல கோத்திரம் யாதாயிருந்தபோதிலும் விசாரிக்காமல் கொடுத்து விவாகம்செய்வித்து தன்னுடைய ராஜ்யத்தில் பாதிராஜ்யம் கொடுப்பதாய்த் தன் பத்நியினிடம் சொல்லினன். அப்போது, அங்கு பதுங்கியிருந்த கள்ளன் இவைகளைக் கேட்டமாத்திரத்தில் தான் முன் எண்ணியிருந்த திருட்டுவேலைச் செய்வதனால் அது நிர்விக்நமாய் நடந்தேறியபோதிலும் சொல்ப பலனே உண்டாகுமென்றும், அல்லது ஒருவேளை கிரஹசாரம் போதாமல் பிடிபட்டாலோ ராஜதண்டனைக்குப் பாத்திரனாகவேண்டுமென்றும் எண்ணினவனாய், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதைப் பார்க்கிலும் சிலகாலம் வரையில் பகவத்பக்தனாய் வேடந்தரித்து சதா பகவத்குணானுபவம் செய்து வந்தால் தனக்கு ராஜகுமாரத்தியும், அர்த்தராஜ்ஜியமும் கிடைக்குமென்று எண்ணி அதுபோல் செய்ய நிச்சயித்து தான் எப்படி பிரவேசித்தானோ அப்படியே ரகஸ்யமாய் வெளியே சென்று, மறுநாள்முதல் அருணோதயத்திலேயே நதிதீரஞ்சென்று ஸ்நாநம் செய்து ஊர்த்வ புண்ட்ரங்களை (பன்னிரெண்டு நாமங்களை)த் தரித்துப், பகவத்பக்த சின்னங்களுடன் சர்வகால சர்வாவஸ்தைகளிலும் பகவந்

நாமத்தையே ஜபித்துக்கொண்டிருந்தான். இவ்வாறிருக்க; மறுநாள் உதயத்தில், ராஜன் படுக்கையினின்றும் எழுந்து காலக்கிரம கிருத்தியங்களை முடித்துக்கொண்டு ஆஸ்தான மண்டபத்தில் உட்கார்ந்து மந்திரிமார்களைப் பார்த்துத் தன் குமாரத்தியின் விவாகத்தைக் குறித்து தான்கொண்டிருக்கும் மனோநிச்சயத்தைத் தெரிவித்து, அப்பேர்ப்பட்ட புருஷன் எவ்விடத்திலேனும் காணப்பட்டால், ஆறுமாதம் வரையில் அவனுடைய நடக்கைகளைப் பார்த்து, அதன் பிறகு அவனைத் தன்னிடத்தில் அழைத்துக்கொண்டுவரும்படி ஆஞ்ஞாபித்து, தகுந்த சேவகர்களை நியமிக்கவேண்டுமென்று கட்டளையளித்தான். அதுபோல், மந்திரிமார்களும் தகுந்த சேவகர்களை நியமித்து அனுப்பினார்கள். அந்தச் சேவகர்கள் சென்று பட்டணமெங்கும் தேடியலைந்தபோது அன்றிரவு ராஜனது படுக்கையறையில் பதுங்கியிருந்து வெளியான அந்த வேஷதாரியே சேவகர்களுக்குத் தென்பட்டான். சேவகர்களும் அவன் சென்ற இடமெல்லாம் அவனுக்குத் தெரியாமல் மறைந்து உடன் சென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். சேவகர்கள் தன்னைக் கண்டுபிடிக்கத் திரிந்துகொண்டிருப்பதை வேஷதாரி அறிந்து, தன் மனோரதம் சித்திக்குமென்னும் நம்பகத்துடன் ஒருக்ஷணமேனும் ஓயாமல் பகவந்நாமத்தை முன்னைவிட விசேஷமாய் ஸ்மரித்துக்கொண்டேவந்தான். இவ்வாறு செய்யவே அப்யாசவசத்தினால் பகவந்நாமத்தில் உண்மையாகவே ருசியுண்டாய் அவனுக்கு முன்னிருந்த துன்மார்க்க எண்ணம் கிரமக்கிரமமாய் நசித்து பகவத்பக்தி அதிகரித்து நாளுக்குநாள் விஷயங்களில் விரக்தி உயர்ந்து கொண்டேவந்தது. இதனைக் கண்ட சேவகர்கள் ஆறுமாதம் சென்றதும், அவனை இராஜசபைக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள். ராஜன், சேவகர்களால் அவ

னது ஸவிஸ்தாரங்களையெல்லாம் செவ்வனனே கேட்டுத் தன் உத்தேசத்தின்படியே தனது குமாரத்திக்குத் தகுந்த வரன் இவனேயாவானென்று நிச்சயித்துத் தன் குமாரத்தியைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளவேண்டுமென்றும், தனது அர்த்தராஜ்ஜியத்தை அங்கீகரிக்கவேண்டுமென்றும் அவனைப் பிரார்த்தித்தான். அவனோ அப்யாசவசத்தினால் பகவந்நாமத்திலுள்ள ருசியறிந்து முன்னிருந்த துர்விஷயம் நசித்துப்போய் விஷயவாஞ்சை பூர்த்தியாய் விட்டவனாதலால், ராஜனுடைய பிரார்த்தனையின்மீது அசங்கியமுண்டாகி அதனை அங்கீகரிக்காதவனாய் திடீலென்று எழுந்து வெளியே சென்றான். கதை முடிந்தது. ஆதலால், பகவத்குணானுபவத்தின் ருசியறிந்து ததேகநிஷ்டனான ஆத்மானுபவமுடையவனுக்கு ஐஹிகவிஷயங்களில் ருசி உண்டாகுமா? உண்டாகமாட்டாது, சிலசமயங்களில் அவனுடைய மனம் துர்விஷயங்களில் திரும்பினாலும், அவ்வாறு போகவிடாமல் அதனை உடனே திருப்பிக்கொள்வான். ஆதலால், மேற்சொல்லியதுபோல் எவனொருவன் தன்னுடைய மனம் ஸதா பகவத்விஷயத்தில் லயிக்கும்படி அப்பியசித்து வருகின்றானோ அவனுக்கு கிரமக்கிரமமாய் இந்திரியங்கள் வசமாகும். அவ்வாறே சகல இந்திரியங்களும் எப்பொழுது சரியாய் வசப்பட்டு நிற்கின்றனவோ அப்பொழுது ஸ்திரமான ஞானமுடையவனா யிருப்பான். ஆதலால், மனதையும் இந்திரியங்களையும் சுவாதீனம் செய்துகொண்டு சமாதியில் இருக்கவேண்டும். அதாவது, ஸர்வ சொரூபியாகிய பரபிரம்மமே நான் என்னும் நிச்சயத்துடன் ஆனந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். இந்திரியங்களை சுவாதீனம் செய்துகொண்டு குரு உபதேசித்ததுபோல் அப்பியாசம் செய்துகொண்டு

எம்பொழுதும் சமாதியில் இருக்கப்பட்டவனுக்கு ஞானம் ஸ்திரமாகும். இதற்குச் சுருதிப் பிரமாணம்.

"யஸ்தவ விஜ்ஞானவார் பவத்யயுக்தேந மநஸா ஸதா தஸ்யேந்த்ரியாண்யவஶ்யாநி துஷ்டாஶ்வா இவ ஸாரதே꞉. யஸ்து விஞ்ஞாநவாந் பவதி யுக்தேந மநஸா ஸதாத ஸ்யேந்த்ரியாணி வஶ்யாநி ஸதஶ்வா இவ ஸாரதே꞉. [யஜுர்வேதத்தில் கடோபநிஷத்.]

மனதை சுவாதீனம் செய்துகொள்ளாமல் எவன் ஞானநிஷ்டனைப்போல் நடிக்கின்றானோ, அவனுடைய இந்திரியங்கள், ஸாரதிக்கு உதவாத குதிரையைப்போல் சுவாதீனமாகமாட்டா. அதாவது, இந்திரியங்கள் விஷயங்களில் ஓடி ஞானநிஷ்டையைக் கெடுக்கும் எனபதாம். சுவாதீனமான மனதுடையவனாய் எவன் ஞான நிஷ்டையைச் செய்கின்றானோ அவனுக்கு, ஸாரதிக்கு உட்பட்டிருக்கும் நல்ல குதிரையைப் போல் இந்திரியங்கள் அடங்கியிருக்கும். அதனால் அவன் ஞானநிஷ்டை நிர்விக்கினமாய் நிறைவேறும்.

த்யாயதோ விஷயாந் பும்ஸ ஸ்ஸங்கஸ்தே ஷூபஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம꞉ காமாத் க்ரோதோபிஜாயதே. 62

க்ரோதாத் பவதி ஸம்மோஹஸ் ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம꞉
ஸ்ம்ருதிப்ரம்ஶாத் புத்திநாஶோ புத்திநாஶாத் ப்ரணஶ்யதி. 63

அப்படி யில்லாமல், எவனொருவன் இந்திரிய விஷயங்களிலேயே மனதை ஓடும்படிச் செய்கின்றானோ, அவனுக்கு விஷயங்களில் ஆசை உண்டாகின்றது; ஒருவன் நினைத்த வஸ்துவை மற்றொருவன் இச்சித்தால், அவனுக்கு கோபம் உண்டாகின்றது; கோபம் உண்டாவதனால் தேகத்தில் ரத்தம் பொங்குகின்றது; ரத்தம் பொங்குவதனால் தேகம் நடுக்கலடைகின்றது; தேஹம் நடுக்குதலினால் மீசை துடிக்கின்றது. இதற்குத் திருஷ்டாந்தம் யாதெனில், ஒரு பாத்திரத்தில் ஜலத்தை ஊற்றி அடுப்பின்மேல் வைத்து அதன்

மேல் தட்டை மூடி எரித்தபோது ஜலம் பொங்குகின்றது, அப்போது பாத்திரத்தின்மேல் மூடப்பட்டிருக்கும் தட்டானது எகிறிக்கொண்டே இருக்கும். அதுபோல், அதிக கோபத்தினால் உஷ்ணமுண்டாகி ரத்தம் பொங்கும். அதனால் தேகத்திற்கு நடுக்கல் உண்டாகின்றது. அச்சமயத்தில் தான் கற்ற, ஸ்மிருதி புராணேதிஹாசங்களும், ஆசாரியோபதேசத்தினால் தெரிந்துகொண்ட சத்விஷயங்களும் மறந்தும் அவிவேகத்தினால் மதிகெட்டு, புத்திநாசமாய்அறிவில்லாதவனாய் நசிக்கின்றான். அப்பொழுது இஹபரங்க, ளிரண்டிற்கும் வியர்த்தனாகின்றான், அதாவது, இகத்தில் ராஜதண்டனையும், பரத்தில் நரகமும் அனுபவிக்கின்றான் என்பதாம். ஆதலால், இந்திரியங்கள் விஷயங்களில் ஓடும் போது தன் மனதை அந்த விஷயங்களில் ஓடவிடாமல் எவன் நிறுத்துகின்றானோ அவனுக்கு, அவ்வாறான துர்க்குணங்கள் ஒன்றையொன்று அனுசரித்து உண்டாக மாட்டாது.

பலோகயேஷ விஷயாநுரஞ்ஜநம் து:ககர்ப்ப மபியுர்யதே ஸுகம்
ஆமிஷம்படிஶகர்ப்பமப்யஹோமோஹதோக்ரஸதியத்வதண்டஜ:’

தூண்டிலுள்ள மாமிசத்தை மச்சங்கள் மோசம்போய் எப்படி விழுங்குகின்றனவோ அதுபோல், மனிதர்கள் விஷயானுபவங்களை (து:ககரமாகிய விஷயங்களை) மோகத்தினால் சுகமென்று எண்ணுகின்றார்கள். இவ்வாறான மோஹமாகிய விஷயாசக்தியை விட்டவர்கள் துக்கமில்லாத அகண்டானந்த சொரூபத்தை அடைகின்றார்கள்.

ராகத்வேஷ வியுக்தைஸ்து விஷயா நிந்த்ரியை ஶ்சரந்
ஆத்மவஶ்யைர் விதேயாத்மா ப்ரஸாத மதிகச்சதி. 64.

எவனொருவன் தன் மனதை சுவாதீனப்படுத்திக் கொள்ளுகின்றானோ அவனுக்கு இந்திரியங்கள் சுவாதீனமா

கவே யிருக்குமாதலால், அப்பேர்ப்பட்டவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் ஒடினாலும், அவனுக்கு ராக த்வேஷாதிகள் உண்டாகமாட்டாது. ராக த்வேஷாதிகள் எப்பொழுது இல்லையோ அப்போது அவனுக்குச் சித்தசாந்தி உண்டாகின்றது. அதாவது, அவனுடைய மனம் சாந்தியாயிருக்கும். எப்பொழுது மனம் சாந்தியாகின்றதோ, அப்பொழுது ராகத்துவேஷ க்ரோதாதிகளாகிய மற்ற துர்க்குணங்களெல்லாம் தலைகாட்டுவதற்குக் காரணமில்லாமற் போகும். இப்பேர்ப்பட்ட மனோவிகாரங்கள் எப்பொழுது இல்லாமலிருக்கின்றனவோ அப்பொழுதே அவனுடைய மனம் சாந்தப்படுகின்றது. அதாவது, இந்திரியங்களினால் விஷயபோகங்களை திரஸ்கரித்து சுவாதீனமான மனமுடையவனாய், பரிசுத்தமாயிருப்பான். இதற்குப் பிரமாணம்.

சுலோ|| "அக்நி ஸங்காத் யதா லோஹமக்நித்வமதிகச்சதி
ஆத்மஸங்காத் ததா கர்ச த்யாத்மதா மிந்த்ரியாதிகம்."

அக்கினியின் சேர்க்கையினால், இரும்பு அக்கினி சொரூபத்தை அடைவதுபோல், இந்திரியம் மனது முதலானவைகள் ஆத்மாவுடன் சேருவதனால் ஆத்ம சொரூபத்தையே அடைகின்றன.

ப்ரஸாதே ஸர்வ து:காநாம் ஹாநி ரஸ்யோபஜாயதே
ப்ரஸந்ந சேதஸோ ஹ்யாசு புத்தி: பர்யவதிஷ்டதே. 65.

பரிசுத்தமடைந்த மனதுடையவனுக்கு சமஸ்த துக்கங்களும் நசிக்கும். துக்கங்கள் எப்பொழுது நசித்துப் போகின்றனவோ அப்பொழுதே அவனுடைய ஞானம் ஸ்திரமாகின்றது. துக்கம் எப்படி நசிக்குமென்றால், சமஸ்த போகங்களை அனுபவித்துக்கொண்டிருந்தபோதிலும் அந்த போகங்கள் சாசுவதமல்லவென்றும், தாய்தந்தை முதலாகிய பந்துவர்க்கங்களும், மித்திராதிகளும் மரணமடைந்தபோது

அவர்களுக்காகத் துக்கிக்காமல் இருந்தால், ஒருசமயத்தில் தனக்குப் பெறுத்த ஆபத்து சம்பவித்துத் துக்கம் உண்டானல், அந்த துக்கம் நீடித்தகாலம் இருக்க மாட்டாது. அஃதெப்படியெனில், நீர்ப் பெருக்கையுடைய ஒரு பெரிய மடுவில், ஏதோ ஒரு காரணத்தால் நீர் கலக்கமுற்று அந்த க்ஷணமே தெளிந்து எப்படி நிர்மலமாகின்றதோ அது போல், பரிசுத்தமடைந்த மனமுடையவன் ஏதேனும் ஒரு பெறுத்த ஆபத்தினல் துக்கமடைந்தபோதிலும் அந்தத் துக்கம் உடனே தனக்குத்தானய் சாந்தியாகுமே யன்றிச் சிறிதுகாலமும் இராது. இப்படி மனோசுத்தி அடைந்தவனுக்குச் சீக்கிரமாய் "ஸோஹம்" பிரம்மமென்னும் நிச்சயாத்மக புத்தி, ஆகாசத்தைப்போல் எங்கும் அகண்ட பிரம்மாகாரமா யிருக்கும்.

"ஸோஹம்" பிரம்மமென்னும் நிச்சயாத்மகபுத்தி யில்லாவிடில் விஷயவாசனை நசிக்காது; விஷயவாசனை நசிக்காவிடில், பிரம்மஞானம் உண்டாகாது; பிரம்மஞானம் உண்டாகாவிடில், ஆனந்தம் தோன்றாது. ஆதலால், விஷயங்களை வாசனையினின்றும் நீக்கி மனதுடனே இந்திரியங்கள் எல்லாவற்றையும் வசப்படுத்திக்கொண்டு எப்பொழுதும் பிரம்ம நிஷ்டனய் இருக்கப்பட்டவனே ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான். இந்த ஜீவன்முக்த விவரங்கள், ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் காணலாம்.

நாஸ்தி புத்தி ரயுக்தஸ்ய நசா யுக்தஸ்ய பாவநா
நசா பாவதஶ்ஶாந்தி ரஶாந்தஸ்ய குதஸ் ஸுகம். 66.

மனோ சுத்தியடைந்தவனுடைய லக்ஷணம் இப்படியிருக்க, மனோ சுத்தியடையாதவனுடைய லக்ஷணம் எப்படி இருக்குமென்றால், சொல்லுகின்றேன் கேள். மனது, ஆத்ம விஷயத்தில் நிறுத்தாமல், காணப்படும் பிரபஞ்ச

மென்னும் விஷயங்களில் ஓடும்படிச் செய்யுமவனுக்கு சுவாதீனமாகமாட்டாது. மனது சுவாதீனமாகாவிடில் இந்திரிய நிக்கிரஹம் உண்டாகமாட்டா. அப்படி இந்திரிய நிக்கிரஹங்கள் எப்பொழுது உண்டாகவில்லையோ அப்போது அவன் புத்தி யுக்தா (நல்லது) அயுக்தங்களை (கெட்டவைகளை) அறியமாட்டாது; அப்பேர்ப்பட்ட யுக்மா அயுக்த பரிஞானம் எப்பொழுது இல்லையோ அப்போது அவனுக்கு விஷய வாஞ்சை நிவர்த்தி உண்டாகமாட்டாது. அதாவது அவனுடைய மனம் விஷயங்களிலேயே ஓடிக்கொண்டிருக்கும். அப்படி விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்கும் மனதுடையவனுக்குச் சுகமுண்டாகமாட்டாது

இந்த்திரியாணாம் ஹி சரதாம் யந்மநோ௨நு விதீயதே
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர் நாவமிவாம்பஸி. 67.

ஏனென்றால், மெய் வாய் கண் மூக்கு செவிகளாகிய பஞ்சேந்திரியங்களினும் எந்த இந்திரியத்தின் வழியாய் மனம் பிரவேசிக்கின்றதோ அதில் ஆசையுண்டாகின்றது. அந்த இந்திரியம், அவனுடைய மனதை வசப்படுத்தி, அந்த விஷயங்களில் ருசி யுண்டாக்கித் தப்பு மார்க்கங்களுக்கு இழுக்கும். எப்படியென்றால், ஜலத்தின்மீது மிதந்து கொண்டிருக்கும் படகை நடத்துபவன் சுக்கானால் அந்தப் படகு போகவேண்டிய மார்க்கமாய்ப் போகும்படி திருப்பாவிட்டால் அந்தப் படகைக் காற்றானது தப்பு மார்க்கத்தில் எப்படி இழுக்குமோ அதுபோல், புருஷனும் தன் மனதென்னும் படகை சன்மார்க்கத்தில் போகும்படி புத்தி என்னும் சுக்கானால் திருப்பாவிட்டால் அவனுடைய மனதை இந்திரியங்களென்னும் காற்று, தப்புமார்க்கங்களுக்கு இழுக்கச் சந்தேகமில்லை. இதற்கு திருஷ்டாந்தம் என்ன வென்றால்:—

ஓர் அரசனிடம் சம்பளம் பெற்றுக்கொண்டு அவனுடைய ஆஞ்ஞையின்கீழ் உத்யோகம்செய்து ஜீவித்துக் கொண்டிருக்கும் சயின்யங்களை அழைத்து, "வேற்றரசனைக் கொன்று அந்த ராஜ்ஜியத்தில் இருக்கும் திரவ்வியங்களைக் கொண்டுவாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தான். அப்பொழுது கார்யாகார்ய விவேகிகளாகிய அவன் சைன்னியர்கள் நிஷ்காரணமாய் அவனைக்கொன்று தனத்தைக் கொண்டுவருதல் அந்நியாயமாதலால் நாங்கள் அவ்வாறு செய்யோமென்று எதிர் உத்தரங்கொடுத்தார்கள். அதற்கு ராஜன் நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் சம்பளத்தைக் குறைத்துவிடுவேனென்று மருட்டினான். அதனைக்கேட்ட சைன்னியர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து "நீங்கள் சம்பளத்தைக் குறைத்தால் தர்மசீலனாகிய வேறோர் அரசனிடம் சென்று ஜீவனம் செய்வோமேயன்றி இப்பேர்ப்பட்ட அதர்மகார்யங்களுக்கு உட்படோம்" என்று சொல்லுவார்களாயின் அவ்வரசனானவன் இந்தச் சேனைகளெல்லாம் இல்லாவிடில் நம்முடைய பிரபுத்தவம் ஏது. இவர்களின் அபிப்பிராயம்போல் சன்மார்க்கமாகவே யிருந்து ராஜ்ஜியபரிபாலனம் செய்யலாமென்று துஷ்டவிருத்திகளை விட்டுவிடுவானல்லவா? அதுபோல், இந்திரியங்கள் மனதின் தூண்டுகோலால் விஷயங்களில் ஓடி விவேகத்தை நசிக்கச்செய்கின்றன. அப்படி மனதின் தூண்டுகோலைக் கேட்காமல் இந்திரியங்கள் விஷயங்களில் ஓடாமல் நின்றுவிட்டால் மனது, எண்ணிய எண்ணத்தை விட்டுவிடும். அப்பொழுது மனதும், இந்திரியங்களும் சுவாதீனமாவதனால் விவேகம் சுவேச்சையாய் அபிவிருத்தியடைந்து பிரம்மத்துடன் ஐக்கியத்தை உண்டாக்கும். ஜடங்களாகிய இந்திரியங்களுக்கு மனதை எதிர்ப்பதற்குச் சக்தியுண்டா? இழுக்கும் சக்தியுடைய

ஸ்காந்தத்தில், ஒட்டிக்கொண்டிருக்கும் ஊசியானது, மற்றோரூசியைத் தான் எப்படி இழுக்கின்றதோ அது போல், ஆத்மாவின் ஸந்நிதானத்தில் மனதிற்கு பிரவர்த்தி நிவர்த்திவிஷயமாய் சுவதந்திர சக்தி உண்டாவதுபோல் மனதின் ஸந்நிதானத்தில் இந்திரியங்களுக்கு பிரவர்த்தி நிவர்த்திகளின் விஷயமாய் சுவதந்திர சக்தியுண்டென்று சொல்லப்படும்.

தஸ்மா த்யஸ்ய மாஹாபாஹோ ! நிக்ருஹீதாநி ஸர்வஶ:
இந்த்ரியா ணீந்த்ரியார்தேப்ய ஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா. 68.

ஓ அர்ஜுநா! இந்திரியங்கள் இப்பேர்ப்பட்ட துஷ்ட விருத்திகளுடையன வாதலால், எவனொருவன் தன் இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பிக்கொண்டு மனதைத் தப்புமார்க்கத்தில் ஓடவிடாமல் காப்பாற்றிக் கொள்ளுகின்றானோ அவனுக்கு ஞானம் ஸ்திரமாகும். இந்திரியங்கள் விஷயங்களில் ஓடுவது மோஷமாகும். எவன் இந்திரியங்களை விஷயங்களில் ஓடவிடாமல் சுவாதீனம் செய்து கொள்ளுகின்றானோ அவனுடைய ஞானமே ஸ்திரமானது. அப்பேர்ப்பட்டவனே யோகநித்திரை செய்யப்பட்டவனென்று சொல்லப்படுவான்.

யா நிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸாநிஶா பஶ்யதோ முநே:. 69.

யோகநித்திரை யடைந்தவனுடைய லக்ஷணம் எப்பேர்ப்பட்டதென்றால், ஆத்மாநாத்ம விசாரணை செய்யுங் காலத்தில், அஹங்கார அபிமான விஷயாஸக்தியுடைய பாமரர்களுக்கு, அவிவேகத்தினால் ஆத்மா, காணப்படாமலிருக்கும். அதனால், ஜாக்கிராவஸ்தையில் கேட்டுக்கொண்டிருந்தபோதிலும் இரவில் நித்திரிப்பவனைப்போ லிருப்பான். அஹங்கார அபிமான விஷயாஸக்தி ரஹிதமாய் இந்திரிய நிக்கிரஹம்செய்தயோகி, ஜாக்கிராவஸ்தையில்

இருந்தபோதிலும் ஆத்மவிசாரணை செய்யும்பொழுது பகலில் நித்திரிப்பவனைப்போல் இருப்பான். இப்பேர்ப் பட்ட யோகிக்கு திருசிய (காணப்படும்) பிரபஞ்சம் மித்யா (மாயா) சொரூபமாயிருக்கும்.

ஶ்லோ || "ஆத்மாநஹி ஸ்புரதி ஸர்வஶரீர பாஜாம் தேஷாம் நிஶாபவதி ஸாகலு தத்ரயோகீ, ஜாகர்த்தி ஜாக்ரதிச தே வ்யவஹார ஜாதே தந்ந ஸ்புரத்யுருதியஃ க்ஷணதாஸ்யஸாதே."

ஆத்மஞான சூன்னியர்களாயிருக்கப்பட்ட சமஸ்த பிராணிகளுக்கும், ஆத்மாநுபவ தசை இருளடைந்திருக்கும். அத்தகைய ஆத்மாநுபவ தசை, விழித்துக்கொண்டிருக்கும் தசையாய், ஞானிக்குத் தோன்றும். பிரபஞ்ச விவகார ஸமயத்தில் பிராணிகளுக்கு விழித்துக்கொண்டிருக்கும் ஸ்திதியாய்த் தோன்றும் பிரபஞ்ச விவகார சம்பந்தமில்லாமலிருப்பதால், ஞானிக்கு இரவைப்போலத் தோன்றும். ஆதலால், அப்பேர்ப்பட்ட சர்வ இந்திரிய விருத்தி சூன்னியமாய் ஆத்மானுபவ தசைக்கு வருவதற்குப் புத்திசாலியானவன், பிரயத்தினப் பட்டுக்கொண்டிருக்கவேண்டும். இப்படி யிருக்கப்பட்டவனுக்கு, விஷயாஸக்தி பூர்த்தியாய் நசித்துவிடுவதனால், இருதயகமலத்தில் எந்தக் கல்மஷங்களு மில்லாமல் போய்விடுவதனால், அவ்விடம் ஒன்றுமில்லாத ஆகாசவடிவமே நிற்கும். அப்படி, இரவும் பகலும் ஆகாசவடிவமாயிருப்பதே, யோகநித்திரை என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள் :—

ஒரு குடும்பத்தில் சிலமனிதர்கள் வசித்துக்கொண்டிருக்கின்றார்கள் அவர்களில் ஒருவன் மாத்திரம் ஆத்மாநாத்ம விவேகமுடைய யோகியாயிருக்கின்றான்: மற்றவர்களெல்லோரும் ஆத்மாநாத்ம விவேகசூன்னியர்களாய்க் கேவல விஷய சுகங்களிலேயே ஆசையுடையவர்களாயிருக்

கின்றார்கள். அவர்களுக்குள் நடக்கும் காரியங்களின் பேதம் எப்படியிருக்குமென்றால், பாமரர்களா யிருக்கப்பட்டவர்கள் ஒரு சமயத்தில் இனிப்பாகிய பக்ஷணங்களும், மதுரமாகிய பழவர்க்கங்களும் புசித்து ஆனந்திக்கின்றார்கள். மற்றொரு சமயத்தில், ஸ்திரீ சந்தன புஷ்ப தாம்பூலாதி போகங்களை அனுபவிக்கின்றார்கள். இன்னொரு சமயத்தில் சிலர் ஸ்பேட்டுகளும், சிலர் சொக்கட்டான்களும், சிலர் சதுரங்கமும் ஆடுதல் முதலானவைகளினால் பொழுதைப் போக்கடிக்கின்றார்கள். வேறொரு சமயத்தில் சங்கீதப் பாட்டுக்களின் ராகத்தைக்கேட்டு ஆனந்திக்கின்றார்கள். சிலநாட்களில் தாசியை வரவழைத்து நாட்டியமாடச் செய்து ஆனந்திக்கின்றார்கள். ஒரு சமயத்தில் சிலர் மதுபானம்செய்து சொக்கிச் சாய்ந்தாடிக்கொண்டிருப்பார்கள். மற்றும் சிலர் பரஸ்திரீ கமனமுடையவர்களாய் அவளுக்குச் சொத்திருந்தால் அதனை அபகரித்துக் காலக்ஷேபம்செய்கின்றார்கள். இப்படி அவரவர்கள் இஷ்டானுசாரமாய் அற்பமான விஷய போகங்களில் ஆசையுடையவர்களாயிருக்க, யோகியாயிருக்கப்பட்டவன் மாத்திரம் விஷயானுபவங்களில் எதிலும் ஆசையில்லாதவனாய் மற்றவர்களுடன் சேராமல் தனது தேகதாரணைக்கு வேண்டிய ஆகாராதி நித்திய கிருத்தியங்களை மாத்திரம் நடத்திக்கொண்டு மற்றவர்களுடன் கூடாமல் பிரத்தியேகித்து ஏகாந்த ஸ்தலத்திலிருந்து ஆத்மானுபவ நிஷ்டையில் இருப்பான். இப்படியிருக்க, இந்தயோகியானவன் மற்றவர்களைப்பார்த்து, இவர்கள் இந்தப் பிரபஞ்சம் மித்யை என்றறியாமல் அச்சமாகிய இந்த போகங்கள் சாசுவதமென்று நினைத்து பகவத் பக்தியில்லாமல் துஷ்டகாரியங்களைச்செய்து, அஞ்ஞானாந்தகாரமென்னும் இருளடைந்த பாழுங் கிணற்றிலாழ்ந்து பாரமார்த்திக விஷயங்

களில் கொஞ்சமேனும் ஜாக்கிரதையில்லாமல் நித்திரிப்பவனைப்போல் பிரஞ்ஞையில்லாதவர்களா யிருக்கின்றார்களல்லவா என்று நினைக்கின்றான். அப்படி நினைப்பதனால், அவன் ஒருவனே பாரமார்த்திக விஷயங்களில் விழித்துக்கொண்டு என்றால், தான் ஜாக்கிரதையா யிருக்கிறதாக நினைத்தவனாகிறான். முன் கூறிய பாமரர்களா யிருக்கப்பட்டவர்கள் யோகிவிஷயத்தில் என்ன சொல்லுகின்றார்களென்றால், நாமெல்லோரும் இப்படிப்பட்ட அநேக விதங்களாகிய போகங்களை அனுபவித்துக்கொண்டிருக்க, இவன் மாத்திரம் நம்மில் கலக்காமல் பிரத்தியேகமா யிருந்து நாம் பார்க்கும்போதெல்லாம் மௌனமாயிருக்கின்றான். இதை யோசித்துப்பார்க்குமளவில் இவன் ஸ்திரீகளின்மீது இச்சையில்லாதவனா யிருப்பதால் நபும்ஸகனாயிருக்கலாமென்று சிலரும், சந்தன புஷ்ப தாம்பூலாதிகளில் இச்சையில்லாதவனாதலால் இவன் மட்டியென்று சிலரும், ருசியான பதார்த்தங்களில் இச்சையில்லாதவனாதலால் இவனுக்குச் சாணமும் வெல்லமும் ஒன்றேயென்று சிலரும், சங்கீதத்தில் ருசி யறியாதவனாதலால் இவனுக்குமுன் சங்கீதம் பாடினால் "செவிடன்முன் சங்கு ஊதியதுபோல் இருக்கு"மென்று சிலரும் இவ்வாறு பலபலவிதங்களாய் பேசிக்கொண்டு நாம் ஆனந்திப்பதுபோல் ஆனந்திக்காமல் தூங்குகின்றவனைப்போல் அறிவில்லாதவனா யிருக்கின்றானென்று எண்ணிக்கொள்ளுகின்றார்கள். ஆதலால், இவர்கள் இருவர்களின் கார்யங்கள் பரஸ்பர விருத்தமா யிருக்கின்றன. இதற்கு திருஷ்டாந்தம் ஒன்று சொல்லுகின்றேன் கேள். பூர்வம் ருஷபனது புத்திரனாகிய பரதன் பஞ்சஜனியென்னும் பத்நியுடனே ஏகசக்கிராதிபதியாய் ராஜ்ஜிய பரிபாலனம் செய்து ராஜ்ஜியத்தைத் தன் புத்திரர்களாகிய சுமதி முதலான ஐவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து, பதரிஹாசி

ரமம் சென்று அவ்விடத்தில் தவம் செய்து கொண்டிருந்தான். ஒருநாள் சக்ரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்யப் போகும் பொழுது அவ்விடத்தில் பூர்ண கருப்பத்துடன் இருந்த ஒரு பெண்மான் ஜலம் குடித்துக்கொண்டிருந்தது. அந்தச்சமயத்தில் மிருகராஜன் அதாவது சிங்கம் லோக பயங்கரமான ஸப்தம்செய்து கர்ஜித்தது. கர்ஜனையைக் கேட்ட அந்த மானானது அதிக பயத்தினால் துள்ளி விழுந்தது. மான் துள்ளி விழுந்தவுடன் வயிற்றிலிருந்த குட்டியானது வெளிவந்து விழுந்தது. குட்டி விழுந்த உடனே தாய்மான் மரணமடைந்தன. அப்போது திக்கில்லாமலிருந்த அம்மான் கன்றைப்பரதன்கண்டு கருணையுடையவனாய் அதை தனது ஆசிரமத்திற்குக் கொண்டு போய் மிகவும் பிரீதியுடன் வளர்த்துக் கொண்டுவந்தான். அதனிடத்தில ஆசை யதிகரிக்க ஆத்மானுபவநிஷ்டை நாளுக்குநாள் கிரமக்கிரமமாய் நின்றுவிட்டது. இவ்வாறு சிலநாள் சென்றபிறகு அவன் அந்தியகாலத்தில் அதாவது, பிராணப் பிரயாண சமயத்தில் மானை நினைத்துத் தேகத்தைவிட்டான். உடனே பரதன் மான் ஜநநம் எடுத்துத் தன் பூர்வஜன்ம ஆத்மானுபவ நிஷ்டை சாமர்த்தியத்தினால் பூர்வஜன்ம ஸ்மரணையுடையவனாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்து சிலகாலம் கழித்து அந்தத் தேகத்தைவிட்டு அங்கிரஸனென்னும் தபோ பிராம்மணனுக்குப் புத்திரனாய் ஜன்மித்தான். அந்த ஜன்மத்திலும் பூர்வ ஜன்ம ஸ்மரணையுடையவனாய் சர்வசங்க பரித்தியாகம் செய்து எந்தக் கர்மங்களையும் செய்ய இஷ்டமில்லாதவனாய், எப்பொழுதும் தன்னில் தான் பிரம்மானந்த சுகத்தை அனுபவித்துக்கொண்டு உலகத்தாருக்கு பயித்தியம் பிடித்தவனைப்போல் காணப்பட்டான். இவ்வாறு சிலநாள் கழித்த பிறகு தாய் தந்தைகள் மரணமடைந்தார்கள்.

பிறகு தன் தாயின் சக்களத்திப்பிள்ளை அவனது பிரபாவம் அறியாதவனாதலால், அவனால், கிருஹ கிருத்யங்களும், வியவசாய கர்மங்களும் செய்துகொண்டு, அல்ப போஜனம் ((மிகவும் சொல்பமானபோஜனம்) கொடுத்துக் கழனிக்குக் காவலாயிருக்கும்படி வைத்தனன். இப்படியிருக்க, ஒரு நாள் சிந்து தேசாதிபதியாகிய ரஹூகனென்னும் ராஜன் கபில மஹாமுனிவரால் தத்துவோபதேசமடைய எண்ணினவனாய், பல்லக்கின்மீதேறி அந்தமார்க்கமாய் போகும் போது பல்லக்குச் சுமக்கபபட்டவர்கள், கழனிக்குக் காவலாளியாயிருக்கும் பரதனைப் பார்த்துப் பல்லக்கைச் சுமக்கச்செய்தார்கள். அப்போது அந்த பிராம்மணனுக்குக் கடைசி சரீரமாகிய பிணத்திற்கு அஹங்கார மமகாரங்களை அடையவிடாமல் மித்யா (மாயா) ரகிதனாய் மௌனத்துடன் பல்லக்கைச் சுமந்துகொண்டு வருவதைப் பார்த்து ராஜனுக்குக் கோபமுண்டாகி அவனைத் துர்பாஷைகளால் தூஷித்தான். அப்போது அவனுக்கு உத்தரமாக சில தத்துவ ஞானோபதேசமும், ஹிருதயக்கிரந்தி விமோசகங்களாகிய வாக்கியங்களைச் சொல்லினான். அதனைக்கேட்ட அந்த ராஜன் அவனை பிரம்மஞானியென்றறிந்து, பல்லக்கிலிருந்து குதித்து அந்த பிராம்மணனுக்குச் சாஷ்டாங்க தண்டப் பிரணாமங்கள் செய்து முகுளித ஹஸ்தனாய் (இரண்டு கைகளையும் குவித்து) தன் பிழைகளைப் பொறுத்தருளவேண்டுமென்று வேண்டினன். அப்போது, அந்தப் பிராம்மணன் கருணையுடையவனாய் அந்த ராஜனுக்கு "ஸம்ஸாரம் அஸாரம்" என்று போதித்து தத்வஞானத்தை உபதேசித்தான். ஆதலால், ஓ அர்ஜுன! பிரம்மஞான சம்பன்னர்களாகிய மஹான்கள் நீறு பூத்த நெருப்பைப் போல் இருப்பார்கள். அவர்களின் பிரபாவமறியாத பாமரர்கள் தாம் செய்துக்கொண்டிருக்கும் ஸம்ஸார

விஷயங்களே சிரேஷ்டமானதென்று எண்ணுவார்கள். இவர்கள் ஜாக்கிரத்திலிருந்தும் ஆத்மாநுபவ விஷயங்களில் நித்திரித்திருப்பதை அறியமாட்டார்கள்.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! இவ்வாறான கஷ்டசுகங்களுக்கும், தூஷண பூஷண திரஸ்காரங்களுக்கும் சகித்துக் கொண்டிருப்பது பஹு கஷ்டமல்லவா? மனம் மிகவும் பரிசுத்த மடைந்தவர்கள் மாத்திரம் இதற்குச் சகித்துக் கொண்டிருப்பார்களேயொழிய மற்றவர்களுக்கு இவ்வாறிருக்கச் சாத்தியமாக மாட்டாது.

† அபூர்யமாண மசல ப்ரதிஷ்டம் ஸமுத்ர மாப: ப்ரவிஶந்தியத்வத் தத்வத்காமாயம்ப்ரவிஶந்தி ஸர்வேஸஶாந்திமாப்நோதிநகாமகாமீ.

கிருஷ்ணன்:—ஆம், வாஸ்தவமே! பெறுத்த மனது என்றால், சமுத்திரத்தைப்போன்ற மனதுடையவனுக்கேயன்றி, சொல்ப மனதுடையவனுக்கு அவ்வாறு இருக்க சாத்தியமாகமாட்டாது. எப்படியென்றால், வெய்யிற் காலங்களில்சூர்ய கிரணங்களினால், ஏரி குளம் முதலானவைகளிலுள்ள ஜலம் ஆவிரூபமாய் இழுக்கப்பட்டு, நாளுக்கு நாள் கிரமக்கிரமமாய் குறைந்துபோவதைப் பார்க்கின்றோமல்லவா? அதுபோல், சமுத்திரத்திலுள்ள ஜலமும் ஆவிரூபமாய்ப் போகின்றதல்லவா? அவ்வாறு போனபோதிலும் ஏரி குளங்களில் ஜலம் வற்றிப்போவதுபோல், சமுத்திர ஜலம் வற்றிப்போகின்றதா?

---

† தனக்குத்தானே நிறைந்து, தனது நிலையைக்கடவாத சமுத்திரத்தில், நதி முதலானவைகள் எப்படி பிரவேசிக்கின்றனவோ அதுபோல், சப்தாதி விஷயங்களெல்லாம் ஆத்மாநுபவத்தால் எவன் திருப்தியடைகின்றானோ அவன் சாந்தியை அடைவான். சப்தாதிவிஷயங்களில் விருப்பமுள்ளவன் சாந்தியை அடையமாட்டான். அதாவது, விஷயாஸக்தியுடையவன் சாரிசம் மோக்ஷத்தை அடையமாட்டான் என்பதாம்.

அர்ஜுநன் :—இல்லை. சமுத்திரத்திலுள்ள ஜலம் எப்பொழுதும் வற்றுவதாய் காணப்படவில்லை.

கிருஷ்ணன் :—நல்லது, மழைகாலங்களில் மழை அதிகமாய்ப் பெய்வதனால் வெள்ளம் பெருகி, ஏரி நிறைந்து கரைகளை உடைத்துக்கொண்டு, இப்படியே அநேக ஏரிகள் நதிகள் சமுத்திரத்தில் போய்க் கலக்கின்றதை நாம் பார்க்கின்றோமல்லவா? அப்போது அந்த ஸமுத்திரம் ஏரி, முதலியவைகளைப்போல் நிறைந்து கரை புரளுகின்றதா?

அர்ஜுநன் :—இல்லை. அப்படி சமுத்திரம் புரண்டால் கரை யோரங்களிலிருக்கும் பட்டணங்கள் என்னகதியாகும். எத்தனை நதிகள் சமுத்திரத்தில் பிரவேசித்தபோதிலும் அணுவேனும் உயராமலும் குறையாமலும் எப்பொழுதும் போல் ஒரேவிதமா இருக்கின்றது.

கிருஷ்ணன் :—சமுத்திரத்தில் நதிஜலங்கள் எப்படி பிரவேசிக்கின்றனவோ அதுபோல், சமுத்திரதீரத்தில் இருக்கப்பட்ட பட்டணங்களிலுள்ள சாலவங்களின் கல்மஷங்களெல்லாம் பிரவேசிக்கின்றனவல்லவா? அப்பேர்ப்பட்ட கல்மஷங்கள் பிரவேசிப்பதனால் சமுத்திரஜலம் ஏதாகிலும் கெட்டுவிடுகின்றதா? அல்லது, ஏதாகிலும் துர்க்கந்தத்தை அடைகின்றதா?

அர்ஜுநன் :—இல்லை. சமுத்திரத்தில் சேரும் நதிகளின் ஜலம் நிர்மலமா யிருந்தாலும், கலங்கிய வண்டலா யிருந்தாலும், சாலவங்களிலுள்ள ஜலம் அழுக்கும் சேறுமாயிருந்தாலும் அந்தந்த ஜலங்களிலுள்ள சுகுண துர்க்குணங்களை அது அடையாமல், எப்பொழுதும் ஒரேவிதமா யிருக்கின்றது.

கிருஷ்ணன் :—அதுபோல், பாமரர்களின் மனது ஏரி முதலானவைகளைப் போன்றதும், யோகியினுடைய மனது சமுத்திரத்தைப் போன்றது மாகும். ஏனென்றால்

பாமரர்கள் தங்கள் கார்யங்களில் சுகமுண்டானால் விசேஷமாய் சந்தோஷித்துப் பொங்குகின்றார்கள். அந்தக் கார்யங்களில் ஏதாகிலும் பின்னமானாலும், அல்லது மற்ற எந்தக் கஷ்டங்கள் சம்பவித்தாலும் விசேஷ வியனமாய் இருக்கின்றார்கள். மேலும் அவர்களை யாராயினும் பூஜித்தபோது பொங்குவதும், தூஷித்தபோது குன்கி மனோவிகாரங்களை அடைகின்றார்கள். ஞானவானோ அப்படிச் செய்யாமல் சுகம் உண்டானபோது ப்ராரப்த கர்மம்போல் பகவதனுக்கிரஹமாய் உண்டாயிற்றென்றும், சாசுவதமாயிருக்கப்பட்டவைக ளல்லவென்றும் எண்ணங்கொண்டு கொஞ்சமேனும் பொங்காமலும், துக்கம் சம்பவித்தபோது, அதையும் சுகமென்றெண்ணி பிராரப்த கர்மம்போல் பகவதனுக்கிரஹமாய் உண்டானவையென்றும், சாசுவதமாய் இருக்கப்பட்டவைகளல்லவென்றும் எண்ணினவனாய் வியசனப்படுவதாகிலும் அல்லது சந்தோஷப்படுவதாகிலும் இல்லாமல் எப்போதும் ஒரேவிதமாய் இருக்கின்றான். ஆதலால், இப்படிப்பட்டவன் மோக்ஷத்தை அடைவதற்குத் தகுந்த சித்தசாந்தியுடையவனாயும், இருப்பான். விஷயாஸக்தியுடையவன் சித்தசாந்தியை அடையமாட்டான்.

விஹாய காமாந் யஸ்ஸர்வாந் புமாம் ஶ்சரதி நிஸ்ப்ருஹ:
நிர்மமோ நிரஹங்கார ஸ்ஸ ஶாந்தி மதிகச்சதி. 71.

ஓ அர்ஜுநா! ஆகையால், எவனொருவன் சகல எண்ணங்களையும் விட்டு விஷயங்களில் ஆசையில்லாதவனாய் அஹங்கார மமகார ரஹிதனாய் இருக்கின்றானோ அவனே, சித்தசாந்தி அடைவானென்று, தெரிந்துகொள்ளக்கடவாய்.

அர்ஜுநன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! அஹங்கார மமகாரங்களென்றால் எப்படிப்பட்டவைகளோ? அவைகளை விடுவதற்குச் சாத்தியமாகுமோ? அதன் விஷயங்களை அறிவிக்கவேண்டும்.

கிருஷ்ணன்:—அஹங்காரம் எப்படிப் பட்டதென்றால், இது இப்பொழுது என்னுடைய சக்தியால் உண்டாயிற்று. இந்தக் கார்யத்தை நான் அடையப்போகின்றேன். இந்தப்பொருள் மறுபடியும் எனக்கு வரப்போகின்றது என்றும், இந்தச் சத்துருக்களை நான் கொன்றேன். இன்னும் இதர சத்துருக்களையும் கொல்லப்போகின்றேன். எனக்குச் சமானமானவன் ஒருவனுமில்லை. நான், சுவதந்திர சக்தியுடையவன். நான், துன்மார்க்கன். நான், சம்பன்னன். நான், பலமுடையவன். நான் சுகி. நான், யாகங்களைச் செய்கின்றேன். நான், தானம்செய்கின்றேன். நான், ஆனந்திக்கின்றேன். என்றும் இவை முதலான அநேகவிதங்களான சித்தப் பிரமை அடைவது. இதுவே, அஞ்ஞானமாயிருக்கின்றது.

"நன்றாயிற் பூட்டிய சூத்திரப் பாவை நன்றாய்த்தப்பினால்
தன்னாலுமாடிச் சலித்திடுமோ அந்தத் தன்மையைப்போல்
உன்னாலியானும் திரிவதல்லால் மற்றுனைப்பிரிந்தால்
என்னாலிங்காவதுண்டோ இறைவா கச்சியேகம்பனே."

என்பதுபோல் எவனொருவன், தனது சமஸ்த கார்யங்களையும் ஈசுவரன் செய்விக்கின்றானென்றும், சூத்திரதாரியால் ஆட்டப்பட்ட பொம்மையைப்போல் நான் சகல கார்யங்களைச் செய்து வருகின்றேனென்றும் எண்ணுகின்றானோ அப்பேர்ப்பட்டவன் அஹங்கார ரஹிதனாகின்றான். மமகாரம் எப்படிப்பட்டதென்றால், இது, என்வீடு. இது, என்வாசல். இது, என்தோட்டம். இவள், எனது பார்யை. இவர்கள், எனது புத்திரர்கள். இது, என்பொருள், இவை என் பசுக்கள் என்னும் முதலாகிய பிராந்தியுண்டாய் மனோவிகாரங்களை அடைந்துகொண்டிருப்பதை ஆலோசித்துப் பார்க்குமளவில் இப்பேர்ப்பட்ட மனோவிகாரங்கள்

உண்டாகமாட்டா. எப்படியென்றால், ஒருவன் தன்னுடையபந்து மித்திராதிகள் தேகசம்பந்த முடையவர்களேயன்றி, ஆத்ம ஸம்பந்த முடையவர்களல்லர் என்று நினைக்கவேண்டும்.

"அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுகம்
மெத்திய மாதரும் வீதியட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே"

என்பதுபோல், பிராணன் நீங்கியதும் களேபரத்தை (பிணத்தை) உடனே மயானத்திற்குக் கொண்டுபோய்த் தீமூட்டி வரப்பட்டவர்களேயன்றித் தன்னுடன் கூடவே பரலோகத்திற்கு வரப்பட்டவர்களும் அல்லது, தனது புண்ணிய பாபங்களில் பங்கிட்டுக் கொள்ளப்பட்டவர்களும் அல்லர். அப்படிப்பட்டவர்களின்மீது விசேஷ மமகாரமுடைய அஞ்ஞானியானவன் என்ன செய்ய வேண்டுமென்றால், தன்னுடைய பார்யாள் புத்திரர்கள் பந்து மித்திராதிகள் தனதான்யங்கள் ருணாநுபந்த ரூபமென்றும், நசாசுவதமானவைகளென்றும் அறிந்தவனாய் அவைகளில் ஆசையில்லாதவனாய் ஜாக்கிரதை யுடையவனாய் இருக்கவேண்டும்.

ஏஷா ப்ராஹ்மீ ஸ்த்திதிஃ பார்த்த ! நைநாம் ப்ராப்ய விமுஹ்யதி
ஸ்த்தித்வா ஸ்யாமந்தகாலேபி ப்ரஹ்மநிர்வாண மருச்சதி. 72.

அர்ஜுநா ! இப்படி அஹங்கார மமகார மில்லாதவனாய் ஸர்வகாம வர்ஜிதனாய் இருப்பதே பிரம்மநிஷ்டையென்று சொல்லப்படும். இப்பேர்ப்பட்ட நிஷ்டையில் எவன் இருக்கின்றானோ அவனே அஞ்ஞானசம்பந்தமான மோஹத்தை (ஸம்ஸாரத்தை) அடையாதவனாய் மோக்ஷத்தை அடைபவனாகின்றான். ஒருவேளை எவனாகிலும்

தன் ஜீவிதகாலமெல்லாம் அஞ்ஞானாந்தகாரத்தில் வீழ்ந்திருந்து கடைசியில் அதாவது, மரணகாலத்திலாயினும் நிச்சயாத்மக புத்தியுடன் இப்பேர்ப்பட்ட நிஷ்டையை அவலம்பித்தால் அப்பேர்ப்பட்டவனும் பிரம்மைக்யத்தை அதாவது, மோக்ஷத்தை அடைகின்றான். இதுவே நிஷ்காம ஸ்திதி. ஆதலால், பிரம்மசர்யமுதல், ஸந்நியசிக்கும்வரையில் யாவத்ஜீவர்களும் பிரம்மைக்கியானுசந்தானம் செய்துவந்தால் முக்தனாவதற்குச் சந்தேகமில்லை.

அத்யாய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் சுலோகம்:—

“ஶோகோ தேஹாத்ம புத்யா நரு பவதி ம்ருஷாயோ தேஹாதிரிக்தோ

தேஹத்ரஷ்டைக ஆத்மாவிபுரநுபஹதோ ஹந்யஹந்யத்வஶூந்ய꞉. தஸ்ய ஜ்ஞாநாந் ஶோக ஸ்ததிஹநிஜமங்ஶாத்தி தஸ்யாஸ்வ தர்மாத்வேதோக்தஸ்ஸ த்விதீயே ப்ரூஶமிமவதஸ் ஸாங்க்ய யோகாதிகாரம்.”

தனக்காயினும் தன்பந்துக்களுக்காயினும் மரணம் சம்பவித்தகாலத்தில், பாமரனுக்கு தேஹமே ஆத்மா என்னும் அஞ்ஞானத்தினால், துக்கம் வியர்த்தமாய் உண்டாகும். அப்படி உண்டாகுதல் கூடாது. ஏனென்றால், தேஹத்தை அறிந்தவனும் ஸர்வவியாபியும் நித்தியனும் கொல்லுபவனும் கொல்லப்படாதவனுமான ஆத்மா தேஹத்தைவிட வேறாயிருக்கின்றான். அப்படிப்பட்ட ஆத்மாவைத் (ஸ்வரூபத்தைத்) தெரிந்துகொண்டால் துக்கம் உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட தெளிவு சித்தசுத்தியால் உண்டாகும். சித்தசுத்தி, நிஷ்காம்யகர்மங்களை அநுஷ்டிப்பதனால் உண்டாகும். அதுபோல் தம்தம் வர்ணாசிரமங்களுக்குத் தக்கபடி செய்யவேண்டுமென்று, வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சாங்க்ய யோக விஷயம்

இந்த இரண்டாவது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ஜுநனுக்கு உபதேசித்தார்.

ஸ்ரீ பகவத்கீத ாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஸாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதே ஸாங்க்ய யோகாநாம த்விதீயோத்யாயஃ.

இது, ஸ்ரீ கிருஷ்ணபகவாந் அர்ஜுநனை யுத்தத்திற்கு பிரயத்நப்படுத்தி லோகோத்தாரணார்த்தமாய் பிரம்ம வித்யையென்னும் யோகசாஸ்திரத்தைக் கிருபைசெய்த உபநிஷதர்த்த பிரதிபாதகமாகிய பகவத்கீதா சாஸ்திரத்தில் ஸாங்க்யயோகமென்னும் த்விதீயாத்யாயம் முற்றிற்று.

அன்பர்களே! இதுவரையில் இரண்டாவது அத்தியாயமாகிய சாங்கியயோகத்தில் சொல்லிவந்த எழுபத்திரண்டு சுலோகங்களிலுள்ள தாத்பர்யங்களைப் பலகால் வாசித்து, தத்வஞானத்தை அறிந்து அநித்யமாகிய சம்சார பந்தத்தில் பற்றுதலை யில்லாதவர்களாய் தாமரையிலை மீதுள்ள ஜலபிந்துவைப்போலிருந்து மோக்ஷமடையவேண்டும். மோக்ஷமென்றால், ஜீவாத்மாவைப் பரப்பிரம்மத்தில் ஐக்கியம்செய்வது. அப்படி ஐக்கியம் செய்துவிட்டால் மறுபடியும் ஜநநமுண்டாகமாட்டாது. ஆதியில் பிரம்மதேவர் எண்பத்துநான்குலக்ஷ ஜீவராசிகளை சிருஷ்டித்த நாள்முதல் இதுவரையில்,

"புல்லாகிப் பூடாகிப் புழுவாகி மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாகிப் பாம்பாகிக் கல்லாகி மனிதராகிப் பேயாகிக் கணங்களாகி, வல்லசுர ராகி முனிவராகி, தேவராய்ச், செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என்னும் திருவாசகத்தின்ரீதியாய் அநேகவித ரூபங்களான சரீரங்களில் மாறிமாறி, இப்பொழுது மானிடச் சட்டையைத் தரித்துக்கொண்டிருக்கின்றோம்.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதாகாண்
இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்"

என்னும் ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பாடலின்ரீதியாய், இச்சரீரம் சென்றவுடனே எந்தச்சரீரம் உண்டாகுமோ தெரியவரமாட்டாது. இந்த ஜன்மத்திலிருக்கும் பெண்டு பிள்ளைகளைப்போல் முன் ஜன்மங்களிலும் அநேக பெண்டு பிள்ளைகள் வந்துகொண்டே யிருந்தபடியால் அவர்களின் மீதுள்ள ஆசாபாசங்களே விதையாயிருந்து, மறுபடியும் ஜநநமெடுக்க நேர்ந்தது. முன் ஜநநத்திலேயே வித்தா யிருந்த மனதை நசிக்கச்செய்திருந்தால், இந்த ஜநநம் நேர்ந்திராது. ஆதலால், இந்த ஜந்மத்திலாகிலும் வித்தா யிருக்கும் மனதை சூன்னியம்செய்து ஜீவாத்மாவைப் பரப் பிரம்மத்தில் ஐக்கியம்செய்வதற்காக சில உபநிஷத்துக் களின் திருஷ்டாந்தங்கள் இதனடியில் எழுதப்பட்டிருக் கின்றன. அதாவது:—

ஶ்ரு || "மநஸோஹ்யுந்மநீ பாவே த்வைதம் நைவோபலப்யதே
யதா யாத்யுந்மநீபாவஃ ததா தத்பரமம் பதம்."
[பயிங்கலோபநிஷத்.]

மனதே மஹாமாயை யென்று சொல்லப்படும். இதனு லேயே நீ, நான், ஜீவன், ஈஸ்வரன், ஜகத்து, பந்த மோக்ஷம் முதலாகிய சகல துவைதபேதங்கள் தோன்றும். இந்த மனதே நித்தியமுக்த பரப்பிரம்மம் தானென்பதை மறந்து, தேஹமே தானென்னும் பிரமையை உண்டாக்குகின்றது. இந்த மனதே, புத்தி சித்தம் அஹங்காரங்களாகவும், காம க்ரோத லோப மோஹ மத மச்சரங்களாகிய குணங்களாக வும் மாறிக்கொண்டு என்வீடு, என்வாசல், என்பாரியாள் என்புத்திரர்களென்று பாதித்துக்கொண்டிருக்கும்.

ஶ்ரு||"ஸுஷுப்தௌ ஸுகமாத்ராயாம் பேதஃ கேநாவலோகிதஃ
சித்தமூலோ விகல்போயம் சித்தாபாவே ந கஶ்சந.
அதஶ்சித்தம் ஸமாதேஹி ப்ரத்யக்ரூபே பராத்மநி,"
[அத்யாத்மோபநிஷத்.]

மாயாசொரூபமாயிருக்கும் மனது, நித்திரையில் லயித்திருப்பதனுலேயே, பிரபஞ்சம் தோன்றுவதில்லை. நித்திரை விட்டு எழுந்திருந்தவுடனே மறுபடியும் மனது தோன்றுவதனுல் ஜகத்து தோன்றுகின்றது. இப்படிப்பட்ட சண்டாள மனதை பிரம்மநிஷ்டையில் லயிக்கச்செய்தால் பிரபஞ்சம் தோன்ருமல், துவைதப்பிராந்தி நசித்து, ஸர்வம் தானுன பிரம்ம சாக்ஷாத்காரம் உண்டாகும்.

ஓ சுவாமி! மனது நித்ரையில் லயித்து பிரபஞ்சமும், துவைதப்பிராந்தியும் தோன்ருமலிருக்க மறுபடியும் பிரம்மநிஷ்டையில் ஏன் இருக்கவேண்டும்?

சிஷ்யா! நித்திரைக்கும், பிரம்மநிஷ்டைக்கும் விசேஷ பேதமுண்டு. அதனைச் சொல்லுகின்றேன் கேள்:—

ஶ்ரு || "ஸுஷுப்தி ஸமாத்யோர் மநோலயா விஶேஷேபி மஹ தஸ்த்யுபயோர் பேதஃ தமஸி லீநத்வாத் முக்தி ஹேது த்வாபாவாச்ச ஸமாதௌ ம்ருதித தமோவிகாரஸ்ய ததாகாராகாரித அகண்டாகார வ்ருத்யாத்மக ஸாக்ஷிசைதந்யே ப்ரபஞ்சலயஸ் ஸம்
[பத்யதே மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

மனது, நித்ரையில் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தில் (இருளில்) லயித்து இருப்பதனுல், ஈரநிலத்தில் விழுந்த விதையானது லயித்து (மூடி) மறுபடியும் முளையெடுப்பது போல், ஜாக்கிரதாவஸ்தையில் மனது தோன்றுகின்றது. மேலும், நித்திரையில் மனதுடன்கூட ஜீவனும் அஞ்ஞானத்தில் லயித்து அஞ்ஞானியாய், தானே பிரம்மமென்று அறியாமல் தன்னைத் தான் மறந்து, அந்தகாரமாகிய (இருளடைந்த) பாழுங்கிணற்றில் வீழ்ந்த குருடனைப்போல்,

ஜீவன் வீழ்ந்திருக்கும். அதனால், ஜீவன் முக்தியடைய மாட்டாது. ஆனால், பிரம்மநிஷ்டையில் ஞானத்துடன் மனது லயித்திருப்பதனால் அக்கினியில் விழுந்த விதையானது மறுபடியும் முளையெடுக்காமல் நசிப்பதுபோல் மனதும் நசிநசித்துவிடும். ஆதலால், பிரம்ம நிஷ்டையிலிருக்கும் ஞானிக்குத் தான் ஜீவனென்னும் துவைதப் பிராந்தி நசித்து, பிரபஞ்சமும் நசித்து, தான் கேவல ஸாக்ஷிமாத்திர சுவயம் பிரகாச பரப்பிரம்மமாயிருப்பான். இவ்வப்பியாசத்திலிருந்து தவறினால் (ஒரு தடாகத்திலுள்ள பாசியை எவ்வளவுதூரம் போக்கினாலும் மறுபடியும் உடனே அந்த பாசியானது யதாப்பிரகாரமாய் அந்த ஜலத்தை மூடிக்கொள்வதுபோல்) எப்படிப்பட்ட பிரம்ம வேத்தனாயிருந்தபோதிலும் பிரம்ம நிஷ்டாப்பியாசத்தில் சிரத்தையில்லாமல் பராமரிக்கையாயிருந்தால் அவனையும் ஸம்சார சொரூபமாகிய மாயசக்தி, தக்ஷணமே ஆவரித்து (மூடிக்கொண்டு) ஜநந மரணங்களை உண்டாக்கும். ஆதலால், நித்திரை, சமாதிநிஷ்டை இவ்விரண்டிற்கும் விசேஷ பேதமுண்டு.

ஓ சுவாமி! பரப்பிரம்ம நிஷ்டையிலிருக்கும் பெரியோர்கள் நிஷ்டையிலேயேயிராமல் நிஷ்டை கலைந்து பிரபஞ்ச ஞப்தியுண்டாய் நானாவிதக்கார்யங்களைச் செய்துகொண்டிருக்கின்றார்களல்லவா? அவர்களுக்கு மனதிருந்தேயல்லவா செய்கின்றார்கள்? ஆதலால் அவர்களுக்கு மனது நசித்ததென்று எப்படிச் சொல்லலாம்?

பரு || "த்விதஸ் சித்தநாசோஸ்தி ஸரூபோ அரூப ஏவச
ஜீவன் முக்தோஸ் ஸரூபஸ்யாத் அரூபோ தேஹமுக்திஷு."
[முக்திகோபநிஷத்.]

ஸரூப மனோநாசமென்றும், அரூப மனோநாசமென்றும் இரண்டு விதங்கள் உண்டு. ஜீவன் முக்தனிடத்தில்

ஸரூப மனோநாசமும், விதேஹ முக்தனிடத்தில் அரூப மனோநாசமும் உண்டாகும். அஃதெப்படியென்றால்:—

ஃரு || சித்தநாசாபிதாநம் ஹி யதா தே வித்யதே புநஃ மைத்ரியாதிபிர் குணைர்யுக்தம் ஶாந்திமேதி ந ஸம்ஶயஃ பூயோ ஜந்மவிநிர் முக்தம் ஜீவன்முக்தஸ்ய தந்மநஃ ஸரூபோஸௌ மநோநாசோ ஜீவந்முக்தஸ்ய வித்யதே.'' [முக்திகோபநிஷத்.]

அஹங்கார மமகாரங்கள், சங்கல்ப விசல்பங்கள் மனோவிகாரமென்று சொல்லப்படும். இவையெல்லாம் நசித்து மனது நிர்விகாரமாய் என்றால், மனது இருந்தபோதிலும் தான் செய்யும் கார்யங்களில் பற்றுதல் இல்லாதவனாய் ஜீவகாருண்ய முடையவனாய் பரமசாந்தி அடைந்திருப்பவனே, ஸரூப மனோநாசமுடையவனென்று சொல்லப்படுவான். என்றால், அக்நியில் வெந்த வஸ்திரமானது மடிப்புகளுடன் இருந்தபோதிலும் எடுத்துக்கட்டிக்கொள்வதற்கு உபயோகப்படாததுபோல், பிரம்ம நிஷ்டாபரர்களாகிய ஞானிகளுக்கு மனது தோன்றிக்கொண்டு சகல காரியங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும், அவர்களின் மனது ஞானாக்கினியில் தக்தமாயிருப்பதனால் நிர்விகாரமாய் கர்த்ருத்வ சூன்யமாய் என்றால், தான்செய்யும் கார்யம் சூன்யமாய் இருக்கும். இப்படியிருப்பதே, ஸரூப மனோநாசமென்று சொல்லப்படும். இதனால், அவர்களுக்கு புனர்ஜநநம் இல்லாமற்போகும்.

“ ப்ரபஞ்சஸ்ய மநஃகல்பிதத்வாத் ததோ பேதாபாவாத் கதாசித் பஹிர்கதே பி மித்யாத்வ பாந'த் ஸக்ருத்விபாத ஸதாநந்தாநுபவைக கோசரோ ப்ரஹ்மவித் ததேவ பவதி.''

[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

ஒரு சோரஸ்திரீ தன் கணவனுடன் சம்போகித்துக் கொண்டிருந்தபோதிலும் அவளுடைய மனது மாத்திரம் தன் சோரபுருஷன்மீதே நின்று அவனையேநினைத்துக்

கொண்டிருப்பதுபோல், பிரம்ம நிஷ்டையில் மனோலயம் செய்து பிரம்மானந்தமாயிருக்கும் ஞானிகள் மறுபடியும் நிஷ்டையிலிருந்து எழுந்திருந்து மனது தோன்றிச் சகல கார்யங்களையும் செய்துகொண்டிருந்தபோதிலும், இந்த ஜகத்து மநோகல்பிதமானபடியால் சொப்நம்போல் மித்யையென்று திட நிச்சயமுண்டாகித் தானே பரப்பிரம்மமென்று தத்தேகத்யானமா யிருப்பார்களாதலால், அவர்களுக்குஜகத்துத் தோன்றியபோதிலும்தோஷமில்லை.

ச்ருதி || " அரூபஸ்து மநோநாசோ வைதேஹீ முக்திகோ பவேத்." [முக்திகோபநிஷத்.]

அரூப மனோநாசமென்றால், அக்கினியில் தக்தமான மடிப்புள்ள வேஷ்டிகளைக் கைகளால் பிசைந்து ஊதினால் ரூபமில்லாமல் தூளியாய் காற்றில் பறப்பதுபோல், மனது ரூபமில்லாமல் பூர்த்தியாய் நசிக்கும். இது விதேஹமுக்தனிடம் உண்டாகும். எப்படியென்றால், கடம் உடைந்தவுடனே கடாகாசம் மஹாகாசத்தில் கலந்து ஏகமாவது போல், பிராரப்தகர்மம் நசித்தவுடனே ஞானியினுடைய மனது முதலாகிய இருபத்துநான்கு தத்வங்களும், ஸ்தூல சூக்ஷ்ம காரணமென்னும் தேஹத்திரயமும், ரூபமில்லாமல் பூர்த்தியாய் நசிக்கப்பட்டு, பிரம்மத்தில் ஐக்கியமாகின்றான். இதுவே அரூப மனோநாசமென்று சொல்லப்படும்.

ச்ருதி || "ஸ்வாத்மந்யேவ ஸதா ஸ்தித்வா மநோ நச்யதி யோகிந:." [அத்யாத்மோபநிஷத்.]

தேஹாதி பிரபஞ்சம் ஸர்வத்தையும் அறியும்படியான ஜீவனும் (நேதி நேதி) நானல்ல நானல்லவென்று விட்டு விட்டு "பிரஞ்ஞானம் பிரம்மம்" என்னும் சுருதிரீதியாய் இவைகளை யெல்லாம் அறியும்படியான சுத்த அறிவே பிரம்மமாதலால், அப்பேர்ப்பட்ட 'அறிவே தானென்று அறிந்து, சகல எண்ணங்களையும் மறந்து, தான் சுத்த அறி

வுடையவனாய் சுவானுபவ நிஷ்டையை சாதிப்பதனால் மனது தனக்குத் தானாய் நசிக்கும்.

ஶ்ரு || "யச்சித்தஸ்தேனைஷ ப்ராணமாயாதி ப்ராணஸ் தேஜஸா, யுக்த: ஸஹாத்மா யதாஸங்கல்பிதம் லோகம்நயதி"
[ப்ரஶ்னோபநிஷத்.]

பிராணப் பிரயாணகாலத்தில் எந்தெந்த எண்ணங்கள் உண்டாகின்றனவோ, அந்தந்த எண்ணங்களுக்குத் தக்க ஜன்மங்களுண்டாகின்றன. ஆதலால், ஜீவித்திருக்கும் பொழுதே ஸதா பிரம்மத்தியானத்திலேயே இருந்து கொண்டுவந்தால் இந்த திட அப்பியாசத்தினால் மரண காலத்தில் மனம் பிரம்மத்திலேயே லீனமாய் பிரம்ம சொரூபமாகும்.

ஶ்லோ || "நஹி ப்ரமாணம் ஜந்தூநா முத்தரக்ஷண ஜீவிதம்
சரமஶ்வாஸ வேளாயாம் யத்க்ருதம் தத் ஸதா குரு."

உலகத்தில் சகல ஜனங்களும் இன்னும் க்ஷணம்வரையில் ஸ்திரமாய் ஜீவித்திருப்போமென்று நினைப்பதற்குச் ஸாத்தியமாகமாட்டாது. எப்பொழுதோ தனக்குத்தெரியாமலே இருந்தாற்போலிருந்து மரணம் சம்பவித்து பிராணன் கிளம்பிவிடும். ஆதலால், இத் தேஹத்தில் உசுவாஸ நிசுவாஸங்கள் இருக்கும்பொழுதே ப்ரதி சுவாஸமும் (மூச்சும்) மரணகாலத்தின் கடைசி மூச்சென்று நினைத்து சதாகாலமும் (ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்தில் சொல்லியது போல்) பிரம்மானுஸந்தானமே செய்து வரவேண்டும்.

ஶ்ரு || "அஹம் மமேதி யோ பாவோ தேஹாக்ஷாதவா நாத்மநி
அத்யாஸோயம் நிரஸ்தவ்யோ விதுஷா ப்ரஹ்மநிஷ்டயா."
[அத்யாத்மோபநிஷத்.]

தேஹமே நான் என்னும் அஞ்ஞானமும், என் கண்கள், என் மூக்கு, என் செவிகள், என் தேகமென்னும்

தேகாபிமானமும் பிரம்மஞானி முக்கியமாய் விட்டுவிட வேண்டும். தூஷண பூஷண திரஸ்காரங்கள் குலகோத்திரங்கள் ஜாதிபேதங்கள் சுகதுக்கங்கள் சரீரத்திற்கே யன்றி, ஆத்ம சொரூபியாகிய உனக்கு எவ்வளவேனும் இல்லை. அதாவது,

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்ல அலியுமல்லன்
காணலு மாகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்கால் பேணு முருவாகு மல்லனுமாம்
கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே"

என்பதுபோல, ஆத்மசொரூபியாகிய நீ தேகமல்ல; ஸ்திரீயல்ல; புருஷனல்ல; நபும்ஸகனல்ல; தேகத்திற்கே கண்கள், மூக்கு, செவிகள் முதலாகிய அவயவங்கள் இருக்கின்றனவேயன்றி ஆத்மசொரூபியாகிய உனக்கு அவயவங்களில்லை. நீ கேவல நிராகாரமா யிருக்கப்பட்டவன்.

ஶ்ரு || "யஸ்ய வாங்மநஸீ ஶுத்தே ஸம்யக் குப்தே ச ஸர்வதா
ஸ வை ஸர்வமவாப்நோதி வேதாந்தோபகதம் பலம்."
[நாரத பரிவ்ராஜகோபநிஷத்.]

எவனது மனது சஞ்சலமில்லாமல், வாக்கு மௌனமாயும் இந்திரியங்கள் சுவேச்சையாய் (தன்னிஷ்டம்போல்) போகாமலும் நின்று பரிசுத்தமாயிருக்குமோ அவனுக்கே வேதாந்தத்தில் சொல்லப்பட்ட ஆத்மானுபவம் லபிக்கும். இப்படி லபித்தவனுக்கு;

ஶ்ரு|| யதா ஜலேஜலம் க்ஷிப்தம் க்ஷீரம்க்ஷீரே க்ருதம் க்ருதே
அவிஶேஷோ பவேத்தத்வத் ஜீவாத்ம பரமாத்மநோ:, யதோதகே
தோய மநு ப்ரவிஷ்டம் ததாத்மரூபோ நிருபாதி ஸம்ஸ்தித:.
[பயிங்கலோபநிஷத்.]

ஜலத்தோடு ஜலமும், பாலோடு பாலும், நெய்யோடு நெய்யும் கலந்து ஏகமாவதுபோல சரீரம் நசித்தவுடனே

ஜீவோபாதி அதாவது, சங்கல்ப ரூபமாயிருக்கும் மனது நசித்து பிரம்மத்தில் ஆத்மா கலந்து ஏகமாய்ப்போகும். இதுவே விதேகமுக்தி யென்று சொல்லப்படும்.

ஓ ஆசாரியரே! சமாதிநிலையில் ஸம்பிரஞ்ஞாத சமாதியென்றும் அஸம்பிரஞ்ஞாத ஸமாதியென்றும் சொல்லுகின்றீர்களே, அந்த ஸமாதிநிலை எப்படிப்பட்டதோ அதனைச் சொல்லக்கடவீர்.

ஶ்ரு || "ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதிஃ ஸ்யாத் த்யாநாப்யாஸ ப்ரகர்ஷதஃ ப்ரஶாந்த வ்ருத்திகம் சித்தம் பரமாநந்த தீபகம்."
[முக்திகோபநிஷத்.]

சிஷ்யா! நானே பிரம்மம், பிரம்மமே நான் என்னும் ரகஸ்யத்தைக் குருமுகமாய் அறிந்து, ஏகாந்த ஸ்தலத்தில் உட்கார்ந்து மனதை நானுவிதங்களாலப் போகவிடாமல் ததேகத்தியானமாய் தியானித்துக் கொண்டிருப்பதே, ஸம்பிரஞ்ஞாத சமாதி யென்றும் சொல்லப்படும். இந்த ரகஸ்யங்களை "ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் "இதுவே சிவராஜயோக ஸமாதி இதை ஜபம் செய்யுங்கள்." என்பதைப்பார்க்க."

ஶ்ரு || "அஸம்ப்ரஜ்ஞாத நாமாயம் ஸமாதிர் யோகிநாம் ப்ரியஃ ப்ரபாஶூந்யம் மநஃஶூந்யம் புத்திஶூந்யம் சிதாத்மகம்."
[முக்திகோபநிஷத்.]

நானே பிரம்மம் பிரம்மமே நான், என்னும் "ஸோஹம்" மந்திரதியானத்தையும் மறந்து மனோ புத்திகள் இரண்டும் சூன்னியமாய், சகல எண்ணங்களும் மறந்து, தேகாதி பிரபஞ்ச முதலாகிய சகல திருசியங்களும் மறந்து, தானே தானய், தன்மயமாய், கேவல சின்மாத்திரனய், ஸாக்ஷியா யிருப்பதே அஸம்பிரஞ்ஞாதசமாதி யென்றும், நிர்விகல்ப ஸமாதியென்றும் சொல்லப்படும்.

ப்ரு || "அஜ்ஞாநஹ்ருதய க்ரந்தேர் நி:சேஷ விலயஸ்ததா
ஸமாதிநா விகல்பேந யதா அத்வைதாத்ம தர்சநம்."
[அத்யாத்மோபநிஷத்.]

நிர்விகல்பசமாதி நிஷ்டாப்பியாசத்தினால் அஞ்ஞான மயமாகிய சகல இருதய கிரந்திகள் என்றால், சங்கல்ப விகல்பங்கள் நசித்துக் கேவல அத்துவய பிரம்மமாகிய ஆத்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும்.

ப்ரு || "தர்மமேக மிமம் ப்ராஹு: ஸமாதிம் யோகவித்தமா:
வர்ஷத்யேவ யதா தர்மாம்ருத தாராஸ் ஸஹஸ்ரச:
அமுநா வாஸநா ஜாலே நிச்சேஷம் ப்ரவிலாபிதே."
[அத்யாத்மோபநிஷத்.]

இந்த [illegible] நிர்விகல்ப சமாதி, தர்மமேகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதனால் சுவாநுபவாமிருதம் விசேஷமாய் வர்ஷித்துத் தேகவாசனை, சாஸ்திரவாசனை, லோகவாசனை யென்னும் தாபத்திரயங்கள் குளிர்ந்துவிடும்.

ப்ரு || "ஸமாதி நிஷ்டதாமேத்ய நிர்விகல்போ பவாநக."
[அத்யாத்மோபநிஷத்.]

ஆனபடியால், ஸதா நிர்விகல்பசமாதி நிஷ்டாப்பியாசத்தினால் நிர்விகாரமாயிருப்பதற்குப் பிரயத்தினப்படக் கடவாய். அப்படி பிரயத்தினப் படாவிட்டால், மனதினால் விளைந்த தத்துவக்காட்டில் அதாவது, ஆணவமென்னும் வேங்கை ஒரு பக்கம் பயமுறுத்தவும், மாயையென்னும் கரடி ஒரு பக்கம் மயக்கவும், காம்மியமென்னும் காட்டுப் பசு ஒரு சார் கறுவவும், ஆசையென்னும் பிசாசம் ஒரு புறத்தில் அறையவும், ஜாதியென்னும் நாய் ஒரு புறத்தில் குலைக்கவும், கல்விக்காணியார் ஒரு சார் கவரவும், சமயங்களென்னும் சுழல்காற்று ஒரு பக்கம் தாக்கவும், அவாவென்னும் கொடிய தீ அறிவைக் கொளுத்தவும், மாயாவாத

வேடர்கள் ஓரிடத்தில் வெருட்டவும் இவ்விதமாய்ப் பல வழிகளில் மனம்சென்று மீளாத துக்கத்தை அனுபவித்துக் கொண்டே யிருக்கும். மனது, ஒரு க்ஷணமேனும் வசமாக மாட்டாது. மனோசாந்தியைப் பெற்றாலன்றிச் சுகம் உண்டாகமாட்டாது. சகலத்திற்கும் மனதே காரணமென உணரவேண்டும். ஆதலால், மனதை யடக்கிக் கைவசமாக்கி அகமுகமாகத் திருப்பி ஆத்மதர்சனம் பெற்று, எங்கும் வியாபியாய், எல்லாமாய், அல்லவுமாய், பேரின்பவெளியாயிருக்கும் இணையில்லாப் பெருங்கடவுளை யடைந்து பேரானந்த வாழ்வைப் பெற்று வாழக்கடவாய். இனி மூன்றும் அத்தியாயம் கர்மயோகம் சொல்லுகின்றோம்கேள்! இந்த கர்மயோகம் அனுஷ்டிப்பதனால் மோக்ஷத்தை அடையலாம். மோக்ஷமென்னும் பதத்திற்கு சரியான அர்த்தம் விடுதலை. அதாவது, சகலபந்தங்களிலிருந்து (ஆசையிலிருந்து) விடுபடுவதேயாம்.

ஸ்ரீ க்ருஷ்ண பர ப்பிரஹ்மணே நம:.

மூன்றாமத்தியாயம்—கர்மயோகம்.

ஜ்யாயஸீ சேத்கர்மணஸ்தே மதா புத்திர் ஜநார்த்தந !
தத்கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேஶவ !

சர்வ உபநிஷத்துகளிலும் புராண யோகசாஸ்திரங்களிலும் ஞானங்கமாய் முமுக்ஷுக்களுக்கு சர்வகர்ம சந்நியாசம் சொல்லப்பட்டிருப்பதனால்,

"ப்ரஹ்மசர்யம் ஸமாப்ய க்ருஹீபவேத் க்ருஹாத் வநீபூத்வா ப்ரவ்ரஜேத் யதி வேதரதா ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத் க்ருஹாத் வா வநாத்வா."

பிர்ம்மசர்யாசிரமம் பூர்த்தியானபிறகு கிருகஸ்தனாக வேண்டும். கிருகஸ்தாசிரமத்திலிருந்து வானப்பிரஸ்தனாய், பிறகு சந்நியாசசம் பெறலாம். அல்லது, பிர்மசர்யத்திலிருந்தே சந்நியசிக்கலாம்; கிருகஸ்தாசிரமத்திலிருந்தாகிலும் சந்நியசிக்கலாம்; முதற்சொல்லிய வானப்பிரஸ்தாசிரமத்திலிருந்தாகிலும் சந்நியசிக்கலாம் என்று சுருதிப்பிரமாணமுண்டு. ஸந்நியாசம் எந்த ஆசிரமத்திலிருந்தாயினும் பெறலாமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சந்நியாசிக்கோ அப்படியல்ல. மோக்ஷப்பிராப்திக்கு சர்வகர்ம பரித்தியாகம் செய்யவேண்டும். இதற்கு சுருதி பிரமாணம்:—

"நகர்மணா நப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வ மாநஶு:."

கர்மங்களை ஆசிரயிப்பதனாலும், சந்தானம் உண்டாவதனாலும், ஐசுவர்யம் உண்டாவதனாலும் மோக்ஷம் சித்திக்கதனாலும்,

மாட்டா. மோக்ஷம் கர்ம தியாகத்தினாலேயே சித்திக்கும். "ப்ரம்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத்" பிரம்மசர்யத்திலிருந்தே சந்நியசிக்கவேண்டும். இதற்கு சுருதி பிரமாணம், "த்யஜ தர்ம மதர்மம்வா உபே ஸத்யாந்ருதே த்யஜ." தர்மாதர்மங்களையும், சத்திய அசத்தியங்களையும் விடவேண்டுமென்றும் "ஸம்ஸாரமேவ நிஸ்ஸாரம் த்ருஷ்ட்வா ஸாரதி த்ருக்ஷயா ப்ரவ்ரஜந்த்யக்ருதோத்வாஹா: பரம் வைராக்ய மாஸ்ரிதா:" பிராஞ்ஞர்கள் ஸம்ஸாரத்தில் ஸாரமொன்றுமில்லை யென்று தெரிந்துகொண்டு சாரத்தை அறியவேண்டுமென்னும் எண்ணத்துடன் மிகவும் விரக்தர்களாய் பிரம்மசர்யாசிரமத்திலிருந்தே ஸந்யாஸம் பெறுகின்றார்கள்.

"பரமாத்மநி யோ ரக்தோ யோ ரக்தோ பரமாத்மநி
ஸர்வைஷணா விநிர்முக்த: ஸைக்ஷ்யம் போக்து மர்ஹதி."

சத்யமாகிய பரப்பிரம்மத்தில் பிரீதியுடையவனும், மித்தையாகிய இதர வஸ்துக்களில் விரக்தியுடையவனும், தாரேஷணை, தாரணீஷணை, தனேஷணைகளை விட்ட முமுக்ஷு ஸந்நியாஸாசிரமத்தில் பிரவேசிப்பானென்றும்,

"கர்மணா பத்யதே ஜந்து ர்வித்யயா ச விமுச்யதே
தஸ்மாத் கர்ம ந குர்வந்தி யதய: பாரதர்ஸிந:."

பிராணிகள் கர்மத்தை ஆசிரயிப்பதனால் சம்சாரபந்தம் உண்டாக்குமென்றும், ஞானத்தினால் பந்தம் விடுதலையாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், பிரம்மஞானமுடைய சந்நியாசிகள் கர்மத்தை ஆசிரயிக்க மாட்டார்கள். "ஸர்வகர்மாணி மநஸா ஸந்யஸ்யாஸ்தே ஸுகம் வஸீ." என்று அத்யாயம் 5-சுலோகம் 13-ல், சமஸ்த கர்மங்களையும் விவேகமுடைய மனதினால் விட்டு இந்திரியங்களை ஜயித்தவன் சுகிப்பானென்றும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், மோக்ஷசாதன

மாகிய ஞானநிஷ்டை நிமித்தமாய் ஏற்பட்ட ஸந்நியாஸாசிரமத்தில் இருக்கப்பட்டவர்களுக்குக் கர்மத்தை ஆசிரயிப்பது அவசியகமல்ல. ஆதலால், மோக்ஷப்ராப்திக்கு ஞானத்தைப்போல் கர்மமும்சாதனமென்று சொல்லக்கூடாது.

"முன் அத்தியாயங்களில், "கர்மண்யேவாதிகாரஸ்தே" கர்மத்தைச் செய்வதற்கே அதிகாரமுடையவனென்றும், அ-2 சு-47-ல், "ஸ்தித ப்ரஜ்ஞஸ்ய" நிஸ்சலமான தத்வஞானமுடையவனுக்கென்றும், அ-2 சு-54-ல், இவைமுதலானவைகளைச் சொல்லப்பட்டிருப்பதனால் இவ்விரண்டில் சிரேஷ்டமானது எதுவோ அதைத் தெரிந்துக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணத்தினால் அர்ஜுனன் பிரஸ்னெசெய்கின்றான்."

அர்ஜுனன்:—ஹே ஜநார்த்தநா! நீர் இதுவரையில் சொல்லிய விஷயங்களையெல்லாம் ஆலோசிக்குமளவில் சிலதூரம் கர்மாநுஷ்டானங்களைச் சிரேஷ்டமாய்ச் சொல்லிக் கொண்டுவந்து, மறுபடியும் கர்மங்களினால் பிரயோஜனமில்லையென்றும், ஞானயோகம் அதைவிட சிரேஷ்டமானதென்றும் சிலாக்கியமாய்ச் சொல்லுகின்றீர். உமது நிஜமாகிய அபிப்பிராயம் ஞானயோகமே சிரேஷ்டமாயிருந்தால் அதை ஆசிரயிக்கவேண்டுமென்று சொல்லவேண்டியதாயிருக்க, அப்படிச்சொல்லாமல் கர்மத்தை ஆசிரயிக்கவேண்டுமென்று சொல்லுகின்றீர். அந்தக் கர்மமென்றாலோ, சாதாரணமான கர்மமல்ல, எல்லாக் கர்மங்களைவிட யுத்தத்தில் கொல்லவேண்டிய குரூர கர்மமாயிருக்கின்றது. இந்த குரூர கர்மங்களிலும் பந்துஜனங்களைக் கொல்லத்தக்க மஹா குரூரமான கர்மமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட மஹா குரூமான கர்மத்தைச் செய்யச்சொல்லி என்னைத் தூண்டுகின்றீரே என் கிருஷ்ணா!

இந்திரியங்களை அடக்கிக்கொண்டு செய்வதாகிய ஆத்ம ஞான நிஷ்டையும் சொன்னீர் ; இந்திரியங்களை விஷயங்களில் ஓடவிட்டுச் செய்யப்படுவதாகிய நிஷ்காமகர்மமானது ஞானத்திற்குக் காரணமானதென்றுஞ் சொன்னீர்.

ஞான நிஷ்டைக்கு விரோதமாகிய இந்திரியங்களை விஷயங்களில் ஓடவிட்டு செய்வதுமாகிய பயங்கரமான யுத்தகர்மத்தை ஏன் என்னைச் செய்யச் சொல்லுகின்றீர் கிருஷ்ணா ?

பலத்தைக்கோரி கர்மங்களைச் செய்யப்பட்டவர்கள் நீசராகின்றார்கள். அப்படிப்பட்ட நீசகர்மங்களை ஆசிரயிக்க வேண்டாமென்று "கர்மண்யேவாதிகாரஸ்தே" என்று அ-2-சு-47-ல், சொல்லப்பட்டிருக்கின்றது. இஃதன்றியும் சொர்காதிப்பிராப்தியை அடைவிக்கும்படியான காம்ய கர்மத்தைச்செய்யும்படி ஷை அத்யாயம் 32-வது, சுலோகத்தில் சொல்லியிருக்கின்றீர். கடைத்தேறவேண்டுமென்று கேட்ட எனக்குக் காம்யகர்மங்களைச் செய்யச் சொல்லி, சம்சார சமுத்திரத்தில் கொண்டுவந்து விடுகிறவராயிருக்கின்றீர். ஷை அத்தியாயம் 40-வது, சுலோகத்தில் நிஷ்காம்ய கர்மம் வீணாகாதென்றும், செய்தவரையில் மோக்ஷ சாதனமாகிய பெரிய பிரயோஜன முண்டாகுமென்றும் இப்படிப் பலவிதங்களாய் சொல்லப்பட்டிருப்பதால் என் புத்தி கலங்கியிருக்கின்றது.

வ்யாமி ஶ்ரேணேவ வாக்யேந புத்திம் மோஹயஸீவ மே
ததேகம் வத நிஶ்சித்ய யேந ஶ்ரேயோ அஹமாப்நுயாம். 2.

மந்தபுத்தியுடைய என் மோகத்தைப் போக்கடிக்கக் கேட்டுக்கொண்ட எனக்கு அப்படிச்செய்வதைவிட்டு இன்னும் அதிகமாய் என்புத்தியை மோகிக்கச்செய்வதற்காக, ஒருபோது கர்மயோகமே சிரேஷ்டமானதென்றும், மற்றொருபோது ஞானயோகமே சிரேஷ்டமானதென்றும்,

மிஸ்ரமாய்க் (கலந்து) சொல்லி எனக்கு ஸம்சயத்தை உண்டாக்கி என்னுடையபுத்தியை மோகிக்கச்செய்கிறவர்போல் காணப்படுகின்றீரேயொழிய நான் கடைத்தேறவேண்டுமென்னும் உத்தேசத்துடன் சொல்லப்பட்டவராய்க் காணப்படவில்லை. ஆதலால் ஓ கிருஷ்ணமூர்த்தி! எதனால் நான் மோக்ஷத்தை அடைவேனோ ஞான கர்மயோகங்களிரண்டிலும் எதை அநுஷ்டித்தால் எனக்கு மேன்மை உண்டாகுமோ அந்த ஒன்றையே நிச்சயித்துச் சொல்லும் கிருஷ்ணா!

லோகேஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாநக
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம். 3.

கிருஷ்ணன்:—பாபரகிதனான ஓ அர்ஜுனா! சிருஷ்டி காலத்தில் இந்த உலகத்தில் மனிதர்களை அனுக்கிரகிக்க உத்தேசங்கொண்டு இரண்டு விதங்களாகிய மார்க்கங்களை ஏற்படுத்தினேன். எப்படியென்றால்:—

ஆத்மவிஷய விவேக ஞானமுடையவர்களும், பிரம்மசர்யா சிரமத்திலேயே தத்வவிசாரணைசெய்து சந்நியசிக்கப்பட்டவர்களும், வேதாந்த விஜ்ஞான நிஸ்சித பாதத்வமுடையவர்களும், பரமஹம்ஸ பரிவிராஜகர்களும், ஸர்வதா "ஸோஹம்" பிரம்மாத்மக சமாதி நிஷ்டையுடைய மஹான்களும் ஞானயோகம் அடைந்திருப்பார்கள். ("ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஸ்யத்தில்" '-ஸோஹம் மந்திரஜபம் கண்டனை என்பதில் த்ரிசிகி ப்ராஹமணோபநிஷத் என்பதைப்பார்க்க") பலாபேக்ஷையில்லாமல் கர்மத்தைச்செய்து அதனால் சித்தசுத்தி அடைந்து அதன் மூலமாய் மோக்ஷம் அடையப்பட்ட கர்மயோகிகள் நிஷ்காம கர்ம நிஷ்டர்களாய் இருப்பார்கள். ஆதலால், நான் இதுவரையில் சொல்லிவந்த வார்த்தைகளெல்லாம் வாஸ்தவமானதேயொழிய பரஸ்பர விருத்தமானது ஒன்றுமில்லை. ஆனால், அவை

கனை நீ சரியாய் ஆவாஹனம் செய்துகொள்ள சக்தியில்லாமல் இப்படி கலவரப்பட்டுக் கொண்டிருக்கப்பட்டவனாய்க் காணுகின்றாய். ஆதலால், அதை இப்பொழுது உன் புத்திக்குச் சரியாப்த் தெரியும்படி சொல்லுகின்றேன் கேள்:—

மோக்ஷப்பிராப்தி அடைவதற்குச் செய்யும் பிரயத்நமே யோகமென்று சொல்லப்படும். ஜீவாத்மாவாகிய தனக்கும், பரமாத்மாவாகிய ஈசுவரனுக்கும் ஐக்யானுசந்தானம் என்றால், தன் ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதமில்லை யென்று அறிவதே யோகம்.

பாரதம் ஸாந்தி 4-அத்யாயத்தில் யமாத்தியஷ்டாங்கங்கள் என்றால், யம்-நியம - ஆஸன - பிராணயாம-பிரத்தியாஹார - தாரண - தியாந - ஸமாதிஎன்னும் நாமங்களுடன் எட்டுப்படிகளா யிருக்கின்றன. அதில்,

யமமேன்றால்:—சரீரமே சாதனமாயிருக்கப்பட்டது. எப்படியென்றால், சத்தியம், தயை, க்ஷமா, த்ருதி. மித ஆஹாரம், மிதநித்திரை, ஆர்ஜனம், பிரம்மசர்யம், அஹிம்சை சௌசம், என தச (பத்து) விதங்கள்.

நியமமேன்றால் :— விக்கிரகங்களில் சாதனங்களுண்டாய் நித்தியம் ஆசிரயிக்கப்பட்டது. இது தபம், ஸந்தோஷம், ஆஸ்திகத்துவம், தானம், பகவதர்சநம், வேதாந்த சிரவணம், லஜ்ஜை, மதி, ஜபம், விரதம் என தச (பத்து) விதங்கள்.

பிராணயாமமேன்றால்:—நாசிகா ரந்திரங்களின் வழியாய் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் வாயுவை மந்திரபூர்வகமாய் உள்ளே நிறுத்துவது.

பிரத்தியாஹாரமேன்றால்:—விஷயங்களிலிருந்து இந்திரியங்களைத் திருப்பிக்கொள்வது.

தாரணை என்றால்:—பரப்பிரம்மத்தைத்தவிர மற்றொன்றில்லையென்று அறிவது.

த்யானமென்றால் :—சஞ்சலமில்லாமல் பரப்பிரம்மத்தில் சேரப் பழகுதல்.

ஸமாதி என்றால்:—மனோலயம். அதாவது, மனம் பிரம்மத்தில் ஐக்கியமாவதால் எந்த இந்திரிய வியாபாரங்களும் கோசரமாகாமல் இருப்பது.

இவைகளைக் குறித்து ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" "பிராணாயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல்" என்பதைப் பார்க்க.")

யோகத்தை அப்பியசிக்கப்பட்டவன் மேற்சொல்லிய எட்டுப்படிகளை கிரமக்கிரமமாய் ஏறிக்கொண்டு கடைசிபடியாகிய ஸமாதியில் சேர்ந்தால், அப்பொழுது மோக்ஷத்திற்கு அருகனாகின்றான். இந்த யோகம் ஏணியைப்போன்றது. இந்த யோகப்படிகளை ஏறுவதற்கு, முதல் நான்குபடிகள் அதாவது யம-நியம-பிராணாயாம-பிரத்தியாஹாரமென்னும் நான்குபடிகளைக்கடந்து ஐந்தாவது படியாகியதாரணை அடையும் வரையில் யோகாப்பியாசிகள் கர்மம் ஆசிரயிக்க வேண்டியது ஆவசியமாயிருக்கின்றது. தியானாவஸ்தையை அடைந்த பிறகு மற்றப்படிகளினால் பிரயோசனமில்லை. மனன ஸமாதியில் மனம் லயித்துவிடுவதால் அப்போது படிகளினால் எந்த பிரயோஜனமுமில்லை. முதல் நான்கு படிகள் வரையில் அதாவது யம, நியம, பிராணாயாம, பிரத்தியாஹாரம் வரையில் கர்மயோகமென்றும், அதற்கு மேற்பட்டவைகளாகிய தாரண, தியான, மனன, சமாதிகளுக்கு நிஷ்கர்மயோகமென்றும் சொல்லப்படும். இந்த நிஷ்கர்மயோகமே ஞானயோக மெனப்படும். இதனை சாங்கிய யோகமென்றும் சொல்லுவார்கள். யோகத்தினுடைய பிராரம்ப தசையில் இருக்கப்பட்டவர்களுக்குக் கர்மயோகமும், அந்த யோகத்தின் ஐந்தாவது படியாகிய

தாரணை, தியானாதி தசையிலிருப்பவர்களுக்கு நிஷ்கர்ம யோகமும் ஸாதனங்களாயிருக்கின்றன. யோகாப்பியாசிக்கு முதல் நான்கு படிகள் அதாவது, யம-நியம-பிராணாயாம-பிரத்தியாஹாரங்கள் செய்யும் வரையில் கர்ம யோகியென்றும், அதன் பிறகு கடைசி நான்கு தசைகளில் அதாவது தாரணை, தியான, மனன, சமாதிகளில் ப்ரவர்த்திக்கும்வரையில் நிஷ்கர்மயோகமென்றும் சொல்லப்படும். இந்த நிஷ்கர்மயோகிக்கு ஞானியென்றும், ஸாங்கியனென்றும் நாமங்களுண்டு. ஆதலால், நான் இதுவரையில் சொல்லிவந்த கர்மயோகம் எங்கெங்கிருக்கின்றனவோ அந்த விஷயங்களெல்லாம் ஆரம்பதசையில் இருக்கப்பட்ட உன்னைப்போன்ற கர்மயோகிக்கும், ஞானயோகம் எங்கெங்கு சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளெல்லாம் தாரணை, தியானாதிகளாகிய கடைசி தசையில் இருக்கப்பட்ட நிஷ்கர்மயோகிக்கும் (ஸாங்க்யனுக்கு) என்று அறியவேண்டும். இப்படி நீ அறிந்திருந்தால் உனக்கு இப்படிப்பட்ட கலவரம் உண்டாகமாட்டாது.

ந கர்மணா மநாரம்பா ந்நைஷ்கர்ம்யம் புருஷோ ஸ்நுதே
ந ச ஸந்யஸநா தேவ ஸித்திம் ஸமதிகச்சதி. 4.

(ஞானம்) கர்மநிஷ்டையைவிட சிரேஷ்டமானதென்று அர்ஜுநன் சொல்ல, அப்படியல்லவென்று சுவாமி நிராகரிக்காததனால் ஞானநிஷ்டையே சிரேஷ்டமானதென்றும், அப்படிப்பட்ட ஞானநிஷ்டை சந்நியாசிகள் அனுஷ்டிக்க வேண்டுமென்றும், கர்மஞான நிஷ்டைகள் பின் அதிகாரர்களுக்குச் சொல்லப்பட்டதென்றும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் அபிப்பிராயம்போல் தோன்றுகிறது, பந்தகாரமாகிய கர்மத்தை என்னை அனுஷ்டிக்கும்படிச் சொல்லுகின்றீராவென்று வியசனப்பட்டுக் கர்மத்தைக் செய்யமாட்டேனென்று சொன்ன அர்ஜுநனைக்குறித்து விருதா

கெட்டுவிடுகின்றனென்று கனிகரமுடையவராய் மேல் சுலோகத்தைச்சொல்லினர். ஞான கர்ம நிஷ்டைகள் பரஸ்பர விருத்தமாதலால், ஒரு புருஷன் ஒரே தடவையில் இரண்டையும் அனுஷ்டிக்கக் கூடாமையா யிருக்கின்றது. ஆதலால், கர்ம ஞானங்களிரண்டும் சமானமாய் புருஷார்த்த சாதனங்கள் வேண்டியதாய் நேர்ந்ததால், கர்மநிஷ்டைக்கு ஞானநிஷ்டையின் பிராப்தியே புருஷார்த்தமென்றும், ஞானநிஷ்டை கர்மயோகத்தினால் உண்டாய் இதர அபேக்ஷையில்லாமல் ஸ்வதந்திரமான புருஷார்த்த சாதனமென்னும் உத்தேசத்துடன் ஷை சுலோகத்தைச் சொல்லுகின்றார். எப்படியென்றால்,) கர்மத்திற்குப் பலாபேக்ஷையில்லாமல் ஈசுவரார்பண புத்தியுடன் செய்துவந்தால், அதனால் சித்தசுத்தியும், சித்தசுத்தியினால் ஞானமும் அந்த ஞானத்தினால் மோக்ஷமும் அடையவேண்டுமேயொழிய, கர்மத்தை அனுஷ்டிக்காமலே விட்டுவிடுவதனால் ஞானமாயினும், தத்பலமாகிய ஆத்மசொரூபானுபவ ரூபமாகிய மோக்ஷமாகினும் சித்திக்கமாட்டாது. கர்மத்தை ஆசிரயிப்பதனால் சித்தசுத்தியும்அதன்மூலமாய் ஞானமும் உண்டாகுமென்பதற்குப் பிரமாணம் "தமேதம்வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந." அந்தப் பரமாத்மசொரூபவிஷய ஞானம் வேதோக்தமான கர்மங்களை அனுஷ்டிப்பதனால் அதை பிரம்மவேத்தர்கள் அடையவேண்டுமென்றும்,

"குர்வந்நேவேஹகர்மாணி ஜிஜீவிஷேச்சதங்கம் ஸமா:
ஏவம் த்வயி நாந்யதேதோஸ்தி நகர்ம லிப்யதே நரே."

இந்த மோக்ஷமார்க்கத்தில் பலாபேக்ஷையில்லாமல் கர்மத்தைஅனுஷ்டித்துக்கொண்டே அநேகவருஷங்கள் ஜீவிப்பதற்கு எண்ணுவார்கள். இப்படிப்பட்ட கர்மத்தை ஆசிரயிக்காம லிருப்பதைவிட மரணமடைவதே உத்தமம். ஆதலால், கர்மத்தைத் தப்பாமல் ஆசிரயிக்கவேண்டும். தேகாபி

மானமுடைய மனிதன் கர்மத்தைப் பலாபேக்ஷையில்லாமல் அனுஷ்டித்துவந்தால் பரம்பராக்கிரமமாய் மோக்ஷசாதநம் உண்டாகுமேயொழிய, பலபோகங்கள் உண்டாகமாட்டாது. இதைவிட மோக்ஷசாதனம் வேறொன்றில்லை. மேலும்,

†“ ஸந்யாஸஸ்து மஹாபாஹோ ! துஃகமாப்தும யோகதஃ
யோகிநஃ கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்ம ஶுத்தயே.”

ஞானநிஷ்டையைக் கர்மயோகமில்லாதவன் அடைவது கஷ்டம் என்று 5-வது அத்யாயம் 7, 11-ச்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஓ அர்ஜுநா! இதற்குமுன் சொல்லியதுபோல், யோகத்தினுடைய முதல் நான்கு படிகளையும் அதாவது, யம, நியம, பிராணுயாம, பிரத்யஹாரங்களென்னும் படிகளை ஏருவிடில், ஐந்தாவதாகிய தாரணை, தியாநமென்னும் படிகளை ஏறமாட்டான். அந்த ஐந்தாவது படியை ஏறினுல் நிஷ்காம யோக கர்மத்தை அடைவான். முதல் நான்கு படிகளை ஏறும் வரையில் கர்மம் முக்கியமாய் வேண்டுமென்று இதுவரையில் விவரித்திருந்தேன். ஆதலால், கர்மயோகத்தை ஆசிரயிக்

† புருஷனானவன் கர்மங்களினுடைய அனுஷ்டான மில்லாமையால் ஞானத்தை அடைகிறதுமில்லை, கர்மத்தை விட்டுவிடுவதனுல் மோக்ஷத்தை அடைகிறதுமில்லை. ஞானமடைவதற்குக் கர்மானுஷ்டானம் காரணமாயிருக்கின்றது. எப்படியென்றால், கர்மங்களை பலாபேக்ஷயன்றி ஈசுவரார்ப்பணபுத்தியாய்ச் செய்து வருவதனுல் சித்தசுத்தியும், சித்தசுத்தியினுல் ஞானமும், அந்த ஞானத்தினுல் மோக்ஷமும் அடையவேண்டுமேயன்றி கர்மங்களைச்செய்யாமலே விட்டுவிடுவதனுல் ஞானமாவது, அதனுல் நிஷ்கர்மமான ஆத்மசொருபமாயிருப்பதாவது உண்டாவதில்லை. இது, மனதிற்கு நன்ருய்த் தெரியும்படி அநேக தடவைகளில் விஷயங்களை மாற்றி மாற்றிச் சொல்லப்படுகின்றது.

காமலே நிஷ்காமயோகத்தில் பிரவேசிப்பதற்குச் சாத்தியப் படமாட்டாதென்று தெரிந்துகொள்ளக்கடவாய். ஒரு வேளை கர்மயோகத்தை ஆரம்பித்துச் சிலநாள்வரையில் அனுஷ்டித்தும் பூர்த்தியாகாமலே நடுமத்தியில் விட்ட வனுக்காகிலும், அப்படிப்பட்ட நிஷ்காமயோகம் சித்திக்கு மென்று எண்ணுகின்றாயா? அப்படி எண்ணவேண்டாம். எப்படியென்றால், மேடையின்மீது ஏற நினைத்தவன், முதற் படி இரண்டாம்படி ஏறினபிறகு, மூன்று நான்காவது படி களை ஏறாமலே ஐந்தாம்படியை ஏறுவானோ? ஏறமாட்டா னல்லவா? அதுபோல், யோகப்படிகளையும் கிரமக்கிரமமாய் ஏறியே தீரவேண்டும். என்றால், யம-நியம-பிராணாயாம-பிரத்யஹாரமென்னும் படிகளை கிரமக்கிரமமாய் ஏறினா லன்றி ஞானோதய முண்டாகமாட்டாது. அப்படி ஞானோ தயமான பின்பு நிஷ்காமயோகம் அவனுக்கு அவசியமில்லை.

அர்ஜுநன்:—ஐயா! நல்லது இப்படிச்சொன்னீரல் லவா? ஸ்ரீ சுகர், ஜடபரதர் முதலானவர்களிற் சிலர் அநேக ஜன்மங்களாய் ஞான யோகிகளாகவே இருந்ததுபோல் கேட்டிருக்கின்றோமல்லவா? அவர்கள் எந்தக் கர்ம யோகத்தை அனுஷ்டித்து இந்த ஞான யோகசித்தியை அடைந்திருக்கலாம்.

கிருஷ்ணன்:—அவர்களுக்கு, ஜன்மத்துடனே ஞான சித்திஉண்டாவதற்குக் காரணமென்னவென்றால், அவர்கள் அதற்குமுன் அநேக ஜன்மங்களில் யோகத்தைச் செய்து அந்த யோகம் பழுத்து ஞானத்தையடைந்து மோக்ஷப் பிராப்திக்கு அருஹராயிருக்க ஏதோ ஓர் ஸங்கல்பத்தினால் யோகபிரஷ்டர்களாய் ஜன்மமெடுத்தவர்களா யிருக்கின்றார் கள். அவர்களின் பூர்வஜன்ம வாஸனவசத்தினால் அவர் களுக்கு இந்த ஜன்மத்தில் முதலிலேயே ஞானோதயம் உண் டாவதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆனால், அப்படி

யிருக்கப்பட்டவர்கள் மிகவும் அருமை. ஏனென்றால், கர்ம ஞானயோகங்களாகிய இரண்டிலும் பூர்த்தியாய்த் தேர்ந்து மோக்ஷஸித்தியை அடையும் தருணத்தில் இப்படித் தவறிப் போனவர்கள் மிகவும் அருமை. அப்படியோகப் ப்ரஷ்டமானவர்களுக்கே இப்படிப்பட்ட ஜன்மம் உண்டாகும். அ-6-சு-42,ல் அதைக்குறித்து விவரமாய்ச்சொல்லுகின்றேன்.

† நஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட த்யகர்மக்ருத்
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை:. ௫

ஞானமில்லாமல் கர்மத்தியாகம்மாத்திரம் செய்வதனால் நிஷ்காமரூபஸ்திதி உண்டாகமாட்டாதென்று யோசிக்கின்றாயோ? அதைச்சொல்லுகின்றேன்கேள். கர்மத்தியாகமென்றால், கர்மம் செய்யாமலிருப்பது. பிரதி மனிதனும் கரசரணாதி அவயவ சேஷ்டைரூபமாகிய கர்மங்களைச் செய்துகொண்டேயிருப்பான். அதற்குச் சுபாவமானது ஸத்வ ரஜஸ்தமோகுணங்களே காரணங்கள். அஞ்ஞானிகளெல்லோரும் ஸத்கர்மங்களைச் செய்பார்கள். ஞானிகள் குணாதீதர்களாதலால் குணத்திரய சம்பந்தமாகிய கர்மங்களைச் செய்வார்கள். கர்மயோகம் அஞ்ஞானிகளுக்கே உபதேசிக்கப்பட்டது. உலகத்தில் பிரதி மனுஷ்யனுக்கும் அவனவன் பூர்வஜன்மஸம்ஸ்காரானுசாரமாய், ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் உண்டாயிருக்கின்றன. அந்தந்தக் குணங்களுக்குத்தக்கபடி அந்தந்தச் சேஷ்டைகளைச் செய்துகொண்

† ஒருகாலத்திலும் நிமிஷமாவது ஒருவனும் கர்மம் செய்யாதவனாயிருக்கிறதில்லை. ஏனென்றால், ஜனங்களெல்லோருக்கும் சொபாவத்திலிருந்து உண்டான ஆசை, த்வேஷம் முதலிய குணங்களினாலே அவர்கள் கர்மத்தைச்செய்யப் பலவந்தம் செய்யப்படுகிறார்கள். ஜாக்ர சொப்னாவஸ்தைகளிலும் ஞானியானாலும், அஞ்ஞானியானாலும் ஒரு க்ஷணமேனும் கர்மம் செய்யாமல் சும்மாஇருக்கிறதில்லை.

டிருப்பார்களேயொழிய எப்பொழுதும் சும்மா இருக்க மாட்டார்கள். அதாவது, ஸத்வகுண சுபாவமுடைய ஒருவன், பரமஏழையாயிருந்து தனக்கே வயிறாரப் புசிக்க தக்க ஆஹாரமில்லாமலிருக்கும் சமயத்தில், கேவல க்ஷுத்பிபாஸாதி (பசி) யுடையவனாய் ஓர் அதிதி வந்தால், தனக்கே போதாமலிருக்கப்பட்ட ஆஹாரத்திலேயே அவனுக்கும் சிறிது கொடுத்து, ஸத்காரியம் செய்வானேயொழிய, எனக்கே இல்லாமலிருக்க இவனை எப்படி உபசரிப்பேனென்று சொல்லமாட்டான். ஏனென்றால், தன் சுபாவ ஸத்வகுணத்தில் தன் பசியைப்போன்றதே அவனுடைய பசியென்று, தயையுடையவனாய் தன் வயிற்றைக் கட்டியாகிலும், அந்த அதிதிக்கு திருப்தி செய்யவேண்டுமென்று எண்ணுகிறான். ரஜோகுண முடையவனது விஷயம் எப்படிப்பட்டதென்றால், இவன் விசேஷ தனமுடையவனாயிருக்கின்றான். இவனுக்கு உண்டாயிருக்கும் திரவ்யம், எந்த வியாபாரங்களும் செய்யாமலே பிள்ளைப் பிள்ளைத் தலைமுறையாய் அனுபவிக்கத்தக்கதாயிருக்கின்றது. அப்படியிருந்தபோதிலும் இன்னும் திரவ்வியம் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணமுடையவனாய் அநேக விதங்களாகிய வியாபாரங்களைச் செய்துகொண்டு, அவைகளால் நஷ்டங்களடைந்து கொண்டு, அதிக திரவ்வியத்தைச் சம்பாதிப்பதற்குப்பதிலாய் தன்னிடம் அதுவரையிலிருந்த திரவ்யமே நாளுக்கு நாள் க்ஷீணித்துப்போவதை அறிகின்றான். அப்படி அறிந்த போதிலும் விட்டுவிடாமல் மறுபடியும் அப்படிப்பட்ட வியாபாரங்களையே செய்கின்றான். இதனால், என்ன விளங்குகின்றதென்றால், எவ்விதத்திலாயினும் திரவ்வியத்தைச்சம்பாதிக்க வேண்டுமென்னும் ஆசையே இவனைப்பிடித்துக்கொண்டிருப்பதால் இந்த ஆசையினால் தனக்குப்பிரதிகூலமான அந்த வியாபாரங்

களையே மறுபடியும் செய்யும்படி பிரேரேபிக்கப் பட்டவனா கின்றான். ஆதலால், பிரதிபுருஷனும் அவனவன் சுபாவ ஜன்மகுணங்களான, ஸத்வ ரஜஸ் தமோகுணங்களால் பிரே ரேபிக்கப் பட்டவனாய் அந்தந்தக் குணங்களுக்கு அனுகூல மாகிய கர்மங்களைச் செய்துகொண்டிருப்பானே யன்றி க்ஷணப்பொழுதேனும் சும்மா இரான்.

அர்ஜுனன்:—ஆனால், இவ்வுலகத்தில் அநேகர்கள் ஸந்நியாசிகளாய், காஷாய தண்ட கமண்டலங்கள் தரித்து எந்தக் கர்மங்களையும் ஆசிரயிக்காமல் பிக்ஷான்னம் புஜித் துத் திரிந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோமல் லவா? அப்படிப்பட்டவர்களெல்லாம் நிஷ்கர்ம சித்தியை அடைந்தவர்களே யல்லவா? அப்படியிருக்க, எவனும் க்ஷணமாத்திரமேனும் கர்மத்தை அனுஷ்டிக்காம லிருக்க மாட்டானென்று சொல்வதற்குக் காரணமென்ன?

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந்
இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசார ஸ்ஸ உச்யதே. 6.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! நீ சொல்லியது வாஸ்த வமே. அப்பேர்ப்பட்ட ஸந்நியாசிகள் அநேகர்களை இவ் வுலகில் நாம் பிரதிதினம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இவர்களெல்லோரும் நிஜமாய் ஆத்ம ஞானோதயமுண்டாகி விஷயவாஞ்சை விருத்தியை ஸந்நியசித்தவர்களல்லர். பின் எப்படி என்றால். ஏதோ ஓர் காரணத்தினால் என்றால், தாராபுத்திராதிகளைப் போஷிப்பதற்குச் சக்தியில்லாமலோ அல்லது, எதாகிலும் ஓர் வியாபாரத்தில் பெறுத்த நஷ் டத்தை அடைந்தோ, அல்லது, சோம்பேறித்தனத்தி னாலோ அல்லது, பாடுபடுவதற்குச் சக்தியில்லாமலோ, உல கத்தாரை மோசடிசெய்து அவர்களால் பிக்ஷைவாங்கி உதர போஷணை செய்யலாமென்று இப்பேர்ப்பட்ட காரணங்க

ளில் எதையோ ஒன்றைவைத்துக்கொண்டு கர்மங்களை ஆசி ரயிப்பதை விட்டுவிடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் பாஹ்யத்தில் (வெளியில்) கர்மத்தை ஆசிரயிக்காவிட்டா லும், மனது மாத்திரம், இந்திரியவிஷயங்களில் பிரவர்த் தித்து (ஓடி) க்கொண்டேயிருக்கும். என்றால், நல்ல ருசி யான பதார்த்தங்களைப் பார்த்தபோது அதனைப் புசிக்க வேண்டுமென்றும், நல்லசங்கீத முதலானவைகள் தன் செவியில்கேட்டவுடனே அவைகளைக் கேட்கவேண்டுமென் றும், நல்ல யௌவன ஸ்திரீகளைப் பார்த்தபொழுது அவ ளுடன் சம்போகிக்க வேண்டுமென்றும், நல்ல பரிமள வஸ் துக்களைப் பார்த்தவுடன் அவைகளைக் கிரகிக்கவேண்டு மென்றும் அபேக்ஷித்துக்கொண்டே யிருப்பார்கள். இப் பேர்ப்பட்ட அபேக்ஷைகள் மனதில் அடித்துக்கொண் டிருக்க, அபேக்ஷை இல்லாதவனைப்போல் உலகத்தார் பார்ப்பதற்குக் கரசரணு த்யவயவங்களினுல் எந்தவேலையும் செய்யாமல் சும்மா இருப்பவனைப்போல் காணப்படுவார் கள். இப்படிப்பட்டவன், கபட ஸந்நியாசியே யன்றி நிஜ மான ஸந்நியாசியாகான். ஆதலால், இப்படிப்பட்ட ஸந்நி யாசியை, மூடனும் பாபாத்மனுமென்றே சொல்லப்படும்.

ஆயினும், அப்படிப்பட்டவர்களினும் மிகவும் அரிதாய் எவ்விடத்திலேயோ ஒருவன் நிஜமான ஸந்நியாசியாகவே யிருப்பான். அவனுடைய லக்ஷணம் எப்பேர்ப்பட்டதென் றால், சமஸ்த கோரிக்கைகளை விட்டவனாய், வீட்டை விட் டுச் சென்று சமஸ்த ஜனங்களுக்கு எந்தக்கெடுதியும் செய் யாதவனாய், பிறர் தன்னைப் பூஷித்தபோது சந்தோஷிக் காதவனாய், தூஷித்தபோது துக்கப்படாதவனாய், ஏகாந்த னாய் ஓரிடத்தில் என்றால், பாழடைந்த தேவாலயத்திலாகி லும் வீட்டிலாகிலும், மர நிழலிலாகிலும், மலைக்குகையிலாகி லும் நிவசித்துக்கொண்டு, டம்பவார்த்தைகளைப் பேசாமல்,

கிருஹஸ்தர்களின் வீடுகளில் சென்று பிக்ஷைவாங்கி கிருஹஸ்தர்களில் யாரேனும் தன்னை மிகவும் பக்தி சிரத்தையுடன் ஆதரித்தபோதிலும் அவர்களது வீட்டிற்கு மறுபடியும் எடுத்தடி வைக்காதவனாய், வேறு வேறு ஸ்தானங்களுக்குச் சென்று, குக்ஷிபாத்தை அடங்கியவுடன் அவர்களின் இருப்பிடம் சென்று ஸதாகாலமும் ஆத்மானுபவம் செய்துகொண்டு ஆனந்தித்திருப்பான். இத்தகைய லக்ஷணமுடையவன் நாம் இப்பொழுது உலகத்தில் பார்த்துக்கொண்டிருக்கும் ஸந்நியாசிகளில் ஆயிரத்தில் ஒருவன் இருப்பதும் அரிதாகும்.

என்றால், கர்மேந்திரியங்களை அடக்கிக்கொண்டு மனதினாலே விஷயங்களை எவன் தியானித்துக்கொண்டிருக்கின்றானோ அவன், மூடனான கள்ளாசார முடையவனென்றே சொல்லப்படுவான்.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! செவிகள், தேஹசர்மம், நேத்திரங்கள், நா, நாசியென்னும் ஞானேந்திரியங்களை அடக்கி மனதைமாத்திரம் விஷயங்களில் ஓடும்படிச் செய்கிறவன் சிரேஷ்டனாகவே தோன்றுகின்றான். ஏனென்றால், வாக்கு (வாய்) பாணி, (கைகள்) பாயுரு, குதம் என்னும் கர்மேந்திரியங்களை அடக்குவது எவனுக்கும் அதிக சுலபம். ஞானேந்திரியமாகிய, தேஹசர்மம் ஸ்பர்சத்தையுணராமலும், நேத்திரங்கள் ரூபத்தைப்பாராமலும், நா ருசி அறியாமலும், நாசி வாசனையை கிரகிக்காமலும், செவிகள் சப்தத்தைக் கேளாமலும் அடக்குகிறவன் பிரம்ம நிஷ்டை யோக்கியதைக்கு அதி சமீபமாய் வந்திருக்கின்றான். மனதைமட்டும் அடக்கவேண்டியது தான் ஒன்று பாக்கியாயிருக்கின்றது. இந்த இந்திரியங்கள் மனதையும் விஷயங்களில் இழுத்துக்கொண்டுபோய் விட்டுவிடத் தக்கதென்று இதுவரையில் இரண்டாவதத்தியாயம் 60 - 61-வது சுலோ

கங்களினால் தெரியவருகின்றது. ஆகையால், ஞானேந்திரியங்களை அடக்கினவன் இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற மூடன், கள்ளாசாரன் என்கிற வகுப்பில் சேரக்கூடாதவனென்று தோன்றுகின்றது.

யஸ்த்விந்திரியாணி மநஸா நியம்யா ரபதே ர்ஜுந !
கர்மேந்த்ரியை꞉ கர்மயோக மஸக்த ஸ்ஸ விஶிஷ்யதே. . 7.

அப்படி இந்திரியங்களில் மனது அடித்துக்கொண்டிருக்கக் கரசரணாதி அவயவங்களினால் கர்மத்தைச் செய்யாமல் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கும் கபட ஸந்நியாசியைவிட கிருஹஸ்தாசிரமத்திலிருந்து தனக்குத்தக்க கர்மங்களையெல்லாம் பலாபேக்ஷையில்லாமல் கரசரணாதி அவயவங்களினால் செய்யப்பட்டவனே சிரேஷ்டன். ஏனென்றால், விஷயங்களிலிருந்து இந்திரியங்களைத் திருப்புவதற்கு இவனுக்கு சாத்யப்படுவதுபோல் அந்தக் கபட ஸந்நியாசிக்கு ஸாத்தியமாகமாட்டாது. அஃதெப்படியென்றால், கிருஹஸ்தாசிரமத்திலிருந்து யோக்கியதா விருத்தியுடன் நடந்துகொண்டு கர்மயோகத்தை ஆசிரயிக்கப்பட்டவன் நியாயவிதிகளைத் தவறாமல் தன் குலாசார விருத்தியுடனிருந்து திரவ்யத்தைச் சம்பாதித்து அதனால் தனது ஜநநீஜநகர்களை (தாய் தந்தையர்களை)ப் பூஜித்துக்கொண்டு, தாரா புத்திராதிகளைப் போஷித்துக்கொண்டு, அதிதி அப்பியாகதிகளை ஆதரித்துக்கொண்டு அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி அந்தந்த இந்திரிய வியாபாரங்களை யுக்தமான மார்க்கங்களில் பிரவர்த்திக்கச்செய்து அவைகளால் சுகங்களை அனுபவித்து திருப்தி யடைந்திருப்பதுமே யல்லாமல் இவைகளெல்லாம் தனக்கு பகவதநுக்கிரகஹத்தினால் உண்டாயினவென்றும், பகவதாஞ்ஞாநுசாரமாய் நடந்துகொள்ளுகின்றேனென்றும் எண்ணிப் பகவானை அதிகப் பிரீதியுடன் தரிசநம் செய்துகொண்டு, அதன் மூலமாய்ப்

பகவதனுக்கிரஹத்திற்குப் பாத்திரனாய், ஸந்துஷ்டியடைந்திருக்கின்றான். இவன் இப்பேர்ப்பட்ட ஸ்திதியிலிருக்க, அந்தக்கபட ஸந்நியாசினுடைய ஸ்திதி எப்படிப்பட்டதென்றால். மேற்சொல்லிய ஜநநீ ஜநகர் (தாய் தந்தை) களுடைய ருணத்தைத் தீர்க்காதவனும், தாராபுத்திராதிகளைப் போஷிக்காதவனும், அதிதி அப்பியாகதிகளை உபசரிக்காதவனுமே யானதுமல்லாமல் தானாயினும் சுகப்படுகின்றானா என்றாலோ, அதுவுமில்லாமல் மோசடியாய் இதரர்களின் அன்னத்தைப் புஜித்துக்கொண்டு, விஷய வாசனைகளை விடாமல் பீடிக்கப்பட்டு, பகவத்தியானத்திற்குப் பதிலாய் இந்திரியங்கள் எப்பொழுதும் விஷயங்களை ஸ்மரித்துக்கொண்டிருக்கும். அப்பேர்ப்பட்டவன் இஹத்திற்கும், பரத்திற்கும் கெட்டவனாகின்றான். இதற்குத் திருஷ்டாந்தமானகதை யொன்றுண்டு. அதனைச் சொல்லுகின்றேன் கேள்:—

ஒரு ஸந்நியாசியானவன், மழைகாலத்தில் ஒருநாள் சாயங்காலவேளையில் ஒரு கிராமத்தில் வந்து தங்கினான். அந்தக்கிராமத்தில் தேவாலயம் விடுதியிடங்கள், பிராம்மணகிருஹம் முதலியவைகளில் ஒன்றேனும் இல்லாததனால், தனக்கு அன்று பிக்ஷை அகப்படாமலும், நிவசிப்பதற்குத் தகுந்த ஸ்தலம் அகப்படாமலும் இருந்தது. அத்துடன் மழையும் விடாமல் பெய்துகொண்டிருந்தது. தான் இருந்தவிடத்தினின்று எடுத்தடிவைப்பதற்குச் சாத்தியப்படாதவனாய், க்ஷுத்பாதையுடன் (பசியுடன்) பீடிக்கப்பட்டவனாய் ஒரு குடியானவனுடைய வீட்டுத்திண்ணையின்மீது உட்கார்ந்துகொண்டிருந்தான். இப்படியிருக்கும் சமயத்தில், அக்குடியானவன் தனது கழனிக்குச்சென்று மழையில் நனைந்துகொண்டு பசுக்களை ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்து கொட்டகையில் கட்டிவிட்டு, அந்தக்கொட்டகையி

யிருக்கும் அஸஹ்யமான சாணம், கோமயமுதலானவை களையெடுத்து சுப்பிரப்படுத்தி, அந்தப்பசுக்களை நன்றாய்த் துடைத்து, அவைகளுக்கு வேண்டிய வைக்கோல்போட்டுக் கழுநீர் முதலானவைகளைக் குடிக்கச்செய்து, கொசுக்கடிக் காவண்ணம் புகைமூட்டம் போட்டுச் சேற்றில் திரிந்து, மழையில் நனைந்து இவ்வாறாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக் தான். இவைகளை யெல்லாம் கண்களால் பார்த்துக்கொண் டிருந்த அந்த ஸந்நியாசி ஆஹா! இவன் கிருஹஸ்தனான படியாலல்லவா இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந் தது. நாம் சந்நியாசியாயிருப்பதனாலல்லவாஇப்பேர்ப்பட்ட கஷ்டங்களில்லாமல் இருக்கின்றோம், என்று எண்ணினவ னாய் அந்தக்குடியானவன் கேட்கும்படி "ஸம்ஸாரீ கஷ்டீ, ஸந்யாஸீ ஸுகீ' என்றான். பிறகு சற்றுநேரத்திற்குள் அதா வது வேலை முடிந்தவுடன் அவனது பார்யாளானவள் உஷ் ணோதகம் வைத்து அதனால் அவனுடைய தேஹமெல்லாம் நன்றாய்த் தேய்த்துக்கழுவி ஸ்நானம் செய்வித்து உலர்ந்த தாய்ச் சுத்தமான வஸ்திரங்களைக் கொடுத்து அறுசுவைக ளோடு உண்டியளித்தனள். அவன் அந்தஅன்னத்தைத் திரு ப்தியாய்ப் புசித்துத் தாம்பூலந்தரித்து, பத்நியால் அமைக் கப்பட்ட மிருதுவானசயனத்தின்மீது பள்ளிகொண்டான். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இந்த சந்நி யாசி ஆஹா! இவன் முதலில் சற்றுநேரம் கஷ்டப்பட்ட போதிலும், இப்பொழுது எவ்வளவு போகங்களை அனுப விக்கின்றான். அப்பேர்ப்பட்ட போகங்கள் தனக்கு எப் படிவாய்க்குமென்று எண்ணினவனாய், "ஸந்யாஸீ கஷ்டீ, ஸம்ஸாரீஸுகீ" யென்று உரத்த சப்தத்துடன் சொல்லி னன். இவ்வார்த்தைகளை இரண்டுவிசையாய் மாறிமாறிக் கேட்டுக் கொண்டிருந்த குடியானவன், ஸந்நியாசியைப் பார்த்து ஐயா! நீர் இவ்வாறு இரண்டு விதங்களாய்ச்

சொன்னதற்குக் காரண மென்னவென்று கேட்டான். அப்போது ஸந்நியாசியானவன், தனது விருத்தாந்தங்களை யெல்லாம் ஸவிஸ்தாரமாகச் சொன்னான். பிறகு குடியான வன் ஸந்நியாசி பசியாயிருப்பதைக் கண்டு கனிகரமுடைய வனாய், தன்வீட்டில் காய்ந்துகொண்டிருக்கும் பாலில் வேண்டியவரையில் கொடுத்துத் திருப்தி செய்தான். அதன்பிறகு, ஸந்நியாசி பசி நீங்கினவனாய்ச் சுகமாய் நித்திரை செய்தான். ஆதலால், ஓ அர்ஜுநா! எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் சலிக்காமல் திருட சித்த முடையவனே ஸந்நியாஸத்திற்கு அர்ஹனேயன்றி, இப் பொழுது நான்சொல்லிய ஸந்நியாசியைப் போன்றவன் அர்ஹனாக மாட்டான்.

† நியதம் குரு கர்மத்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மணஃ
ஶரீர யாத்ராபிச தே நப்ரஸித்யே தகர்மணஃ. 8.

ஓ அர்ஜுநா! நான் உனக்கு எவ்வளவு தூரம் சொல்லியும் மனது பரிபக்குவமடையவில்லை. மந்தர், தீவி ரர், அதிதீவிரரென்று மனிதர்கள் மூவகையராவார்கள்.

1. மந்தரென்றால்:—சாணத்தை எரித்தபோது எரி யாமலிருப்பதுபோல், மந்தபுத்தியுடையவர்களுக்கு எவ் வளவு உபதேசித்தபோதிலும் நுழையாமலிருக்கும். ஆத லால், இவர்கள் முதல் வகுப்பினர்கள் ஆவார்கள்.

2. தீவ்ரரென்றால்:— கந்தகக்குச்சியில் நெருப்புப் பட்டவுடன் நிதானமாய் எரிந்து, பிறகு வெளிச்சத்தை யுண்டாக்கும், அதுபோல், கர்மாநுஷ்டானங்களினால் சில

† எவன் ஞானேந்திரியங்களை, மனதினால் அடக்கிக் கர்மேந் திரியங்களினாலே கர்மயோகத்தைப் பலாபேக்ஷையன்றிச் செய் கின்றானோ, அப்பேர்ப்பட்டவன் சித்தசுத்தியும் தத்வாரா ஞான மும் அடைவான்.

காலத்தில் ஞானமடைபவர்களே இரண்டாவது வகுப்பினர்.

3. அதிதீவ்ரரேன்றால்:—கர்ப்பூரத்தில் தீப்பட்டவுடன் அதிசீக்கிரமாய் ஜோதியை உண்டாக்கும். அதுபோல், ஞானத்தையடைந்தவர்கள், தமது ஆத்மாவை உடனே பிரம்மத்தில் ஐக்யம் செய்வார்கள். இவர்கள் மூன்றாவது வகுப்பினர் ஆவார்கள். ஆதலால், நான் இதுவரையில் உனக்கு இரண்டாவது அத்யாயம், 33-34-35. 36-வது, சுலோகங்களில் விசேஷமாய்ப்போதித்திருந்தும் நீ அதிதீவ்ர பக்குவத்திற்கு வந்தவனாகக் காணப்படவில்லை. இப்படி யிருப்பதனால், நீ ஜீவிப்பதும் கஷ்டமாகவே யிருக்கும். என்றால், சரீரதாரணமும் சித்திக்காது. உண்பது, உறங்குவது முதலியவைகளும் கர்ம மல்லவா? அவைகளைச் செய்யாமலிருந்தால் தேஹம் நிலைக்குமோ? தேஹம் நிலைக்காவிட்டால் எந்தக் கார்யமும் இல்லை. இதற்காகத்தான் நித்ய கர்மமானது வேதங்களாலும், பெரியோர்களாலும் விதிக்கப்பட்டது. அதாவது, போஜனத்திற்கு முந்தி ஸ்நானம், ஸந்தியா வந்தனம் முதலியவைகளும் தேவ, பித்ரு, அதிதி பூஜை, தேவதார்ச்சனை (பகவதாராதனை) செய்தபிறகு புசிப்பது. இப்படிப்பட்ட நித்திய கர்மங்களை விதிப்பதற்குக் காரண மென்னவென்றால், பிரதிதினமும், நித்ய கர்மங்களைச்செய்து அவைகளின் பலனை இச்சிக்காமல் ஈசுவரார்ப்பணமாக்கி விடுவானாகில், சித்த சுத்தியாய் ஞானமடைந்து அதிசீக்கிரத்தில் மோக்ஷமடைவானென்பதே சித்தாந்தம். அத்யாயம் 3-சுலோகம் 3-ல்,சொல்லிய யமநியம பிராணாயாம பிரத்யாஹார தாரணையென்னும் ஐந்து படிகளை ஏறின ஞானிக்குத் தகுமானாலும், முமுக்ஷுவுக்குத் தகுதியல்ல. அப்படியிருக்க, அஞ்ஞானி விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? ஆதலால், நீ யுத்த

கர்மத்தை ஆசிரயிக்கக்கடவாய். ஆசிரயிக்கும்போது நீ முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது ஒன்றுண்டு. அதனைச் சொல்லுகின்றேன் கேள்.

யஜ்ஞார்தாத் கர்மணோ ந்யத்ர லோகோயம் கர்மபந்தநஃ
த தர்த்தம் கர்ம கௌந்தேய ! முக்தஸங்க ஸ்ஸமாசர. 9.

உலகத்தில் ஜனங்களெல்லோரும் தந கநக(பொன்) வஸ்து வாஹநாதி பிராப்தரூபமாகிய இஹலோக சுகங்களும், ரம்பா சம்போகாதி ரூபங்களாகிய சொர்க்காதி பரலோக ஸுகங்களும் அநித்யங்களென்று அறிந்துகொள்ளாமல், தாம் எதைச் செய்தபோதிலும் பகவதார்ப்பணமாய்ச் செய்யாமல் சொல்ப லாப அபேக்ஷையுடன் செய்வதால், கர்மவாஸனையினால் ஜநநமரண பிரவாஹ ரூபமாகிய ஸம்சார சாகர(சமுத்திர)த்தில் மூழ்கிக்கொண்டிருப்பார்கள். ஆதலால், நீ யுத்தம் செய்யும்போது உன் சத்துருக்களைக் கொன்று ராஜ்ஜியத்தை அடைந்து, தாரா புத்திராதிகளுடன் ராஜ்ஜியசுகத்தை அநுபவிக்கவேண்டுமென்னும் அபேக்ஷையுடன் யுத்தம்செய்தால், அதனால் உண்டாகும் புண்ணிய பாபங்களை நீ அநுபவிக்கவேண்டியதாய் வரும். அப்படியல்லாமல் இந்த யுத்தம் ராஜதர்மமாய் பகவானால் நியமிக்கப்பட்டது. இது நாமே கோராமல் சத்துருக்களின் பிரயத்தினத்தால் தனக்குத்தானாய் உண்டாயிற்றென்றும், பகவதாஞ்ஞை இப்படியிருக்கின்றதாகையால், நாம் இந்த யுத்தத்தை அநுஷ்டித்தே தீரவேண்டும். இதனால் ஜெயம் உண்டானபோதிலும், அபஜெயமுண்டானபோதிலும், பகவதாஞ்ஞாநுசாரமாய் உண்டாகட்டும். என் குலாசார தர்மத்தை அநுஷ்டித்து நான் செய்யவேண்டிய கர்மங்களைச் செய்கின்றேனென்று எண்ணினவனாய் இக்கர்மத்தை அநுஷ்டிப்பாயானால்; உனக்குக் கர்மத்தினால் உண்டாகும் புண்ணிய பாபங்கள் அணுகமாட்டா.

இப்படி பகவதாஞ்ஞானுசாரமாய் பிரதி காரியங்களையும் பகவத் ப்ரீதியர்த்தமாய்ச் செய்வதே யஞ்ஞமெனப்படும். "யஞ்ஞோ வை விஷ்ணுః" விஷ்ணு யஞ்ஞபுருஷனென்று சுருதி சொல்லுகின்றது.

அர்ஜுனன்.—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இந்த யுத்தத்தை இப்படிச்செய்வதே யஞ்ஞமென்று சொன்னீரல்லவா? கிருஹஸ்தனாய்இருக்கப்பட்டவன், பிரதிதினமும் தன் ஆசிரம தர்ம விதிப்படி செய்யவேண்டிய காரியங்கள் அநேகமுண்டல்லவா? அதாவது, ஜனனீஜநகர் (தாய் தந்தை)கள், தாராபுத்திராதிகள், அதிதி அப்பியாகதிகள் முதலானவர்களைப் போஷிப்பதற்காக திரவ்யம்சம்பாதிப்பது முதலான அநேக காரியங்கள் செய்யவேண்டியவனாய் இருக்கின்றானல்லவா? இப்படிச் செய்வதெல்லாம் யஞ்ஞார்த்த (பகவத்விஷய)மான கர்மங்களாகவே யிருக்கின்றதா? அப்படியில்லாவிடில் இதனால் கர்மபந்தம் உண்டாகின்றதா?

கிருஷ்ணன்:—இவைகளும் பகவதாஞ்ஞானுசாரமாய் செய்கின்றேன் என்னும் நிச்சயபுத்தியுடன் செய்தால், யஞ்ஞார்த்த (பகவத்விஷய)மான கர்மங்களாகவே யிருக்கும். அப்படிப்பட்ட கர்மத்தினால் அவன் பத்தனாகமாட்டான். எப்படியென்றால், ஒருவன் தனது தாய்தந்தையர்களின் விஷயங்களில், அவர்கள் தன்னைப் பெற்றெடுத்து வளர்த்தவர்களென்றும், அவர்களின் சம்ரக்ஷணார்த்தமாய் பகவானவர் அவர்களுக்குப் புத்திரனாய் ஜன்மிக்கச் செய்தாரென்றும், அவர்களைப் போஷிப்பது பகவந் நியமமாய் நடக்கிறதென்றும், பார்யையின் விஷயத்தில் இந்த ஸ்திரீ தன் க்ருஹிணியாயிருந்து தனக்கு வேண்டிய சமஸ்தோபசாரங்களைச் செய்வதற்கும் (ஸமஸ்த சுகங்களைக் கொடுப்பதற்கும்), தன்னால் போஷிப்பதற்குப் பகவானால் நியமிக்கப்பட்டு ஜன்மித்தாளாதலால் அவளைப் போஷிப்பது பகவ

தாஞ்ஞையே யென்றும், புத்திரர்களின் விஷயத்தில் தன் வார்திக்கிய தசையில், (கிழத்தனத்தில்) போஷித்துக் காப்பாற்றுவதற்காக இவர்களைப் பகவான் தனக்குப் புத்திரர்களாக ஜன்மிக்கச் செய்தாரென்றும், இப்படிப் பட்டவைகளை யெல்லாம் ரக்ஷிப்பது பகவதாஞ்ஞையே யென்றும், அதிதி அப்யாகதி விஷயத்தில் பகவான் என்னைப்போல் மானிடச் சட்டையைச் சாத்திக்கொண்டு அதிதியாய் வந்தாரென்று சந்தோஷித்து அவரைப்பூஜிப்பது தனக்கு விதிக்ருத மென்றும் இது, முதலாகிய கிருஹஸ்தாசிரம தர்மங்களை நடத்துவதற்காக திரவ்வியம் வேண்டியதாயிருப்பதனால் அப்படிப்பட்ட திரவ்வியத்தைத் தன் குலாசார தர்மானுசாரமாய் நியாயம் தவறாமல் சம்பாதிப்பது பகவ தாஞ்ஞையே யென்றெண்ணி அந்தந்தக் கார்யங்களை நடத்திக்கொண்டுவந்தால், அப்படிப்பட்ட கார்யங்களெல்லாம் யஞ்ஞார்த்தங்களாகவே என்றால், பகவத்பிரீத்யர்த்தமாய்ச் செய்யப்பட்ட கர்மங்களேயாகின்றன. அவைகள் ஆத்மார்த்தமாய் ஆசையுடன் செய்யப்பட்ட கர்மங்களாகமாட்டா. புண்ணிய பாபங்களெல்லாம் பகவதர்ப்பண மாகின்றனவேயன்றிச் செய்தவனைப் பற்றமாட்டா.

அர்ஜுநன்:—இப்பொழுது நீர் சொல்லிய விஷயத்தை யோசிக்குமளவில் ஒவ்வொரு மனிதனுக்கும் இப்படிப் பட்ட யஞ்ஞமும் கர்மமாகவே யிருப்பதுபோலக் காணப் படுகின்றது.

† ஸஹ யஜ்ஞாஃ ப்ரஜாஃ ஸ்ருஷ்ட்வா புரோ வாச ப்ரஜாபதிஃ
அநேந ப்ரஸவிஷ்யத்வ மேஷவோ ஸ்த்விஷ்டகாமதுக். 10.

கிருஷ்ணன்:—ஆம், இது ஸஹஜ கர்மமாகவே யிருக்கின்றது. அஃதெப்படியென்றால், பிர்மாவானவர் ஆதி

† கர்மமானது புனர்ஜநநத்தையும், சம்ஸாரத்தையும் உண்டாக்கத்தக்கதாகையால், கர்மம் செய்யக்கூடாதென்று சிலர்

காலத்தில், ஜகத்ஸிருஷ்டியில் ஜனங்களை ஸிருஷ்டித்தபோது, அவர்களுடன்கூடவே பகவதாராதன ரூபமாகிய யஞ்ஞங்களையும் ஸிருஷ்டித்தனர். என்றால், பகவதாராதனத்திற்காகவே அவர்களை ஸிருஷ்டித்து,"இந்த யஞ்ஞத்தை நீங்கள் ஆஸிரயித்து விருத்தியடைந்திருங்கள். இந்த யஞ்ஞமானது உங்களுக்கு இஷ்டமான போகங்களைத் தரபட்டது"தென்று சொல்லினர்.

இந்த சுலோகத்தினால் கார்யகர்மங்களையும் செய்ய வேண்டியதற்காகவே யஞ்ஞங்களை ஸிருஷ்டித்ததாக அர்த்தமாகின்றது. ஏனென்றால், "விருத்தியடைந்திருங்கள்" "இஷ்டமான போகங்களைத் தரப்பட்டது" என்று சொல்லினர். இந்த வாக்கியங்கள் காம்மிய பலனைக் குறிக்கின்றனவாகக் கொள்ளவேண்டியதா யிருக்கின்றன. முன் சுலோகத்தில் காம்மியகர்மங்கள் பந்தத்தை உண்டுபண்ணுமாகையால், நிஷ்காம்மியகர்மம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. இவைகள் பரஸ்பர விரோதமாகத் தோன்றப்பட்டாலும் விரோதமல்ல. எப்படியென்றால்,யஞ்ஞாதி கர்மங்கள் அவைகளுக்குள்ள பலனை அபேக்ஷித்துச்செய்தால் பந்தஹேதுவான போகத்தைக் கொடுக்கும். பலாபேக்ஷையன்றி ஈசுவரார்ப்பணமாகச் செய்தால், மோக்ஷஹேதுவான ஞானத்தைக் கொடுக்கும். ஒரே கர்மத்தை மற்றொரு விதமாய்ச் செய்தால் பந்தஹேதுவாகிறபடியால், செய்கிறவனுடைய எண்ணப்படி பலன் ஸித்திக்கட்டும் என்று கர்மத்தை ஏற்படுத்தினதாய் இதுவரையில் அத்

சொல்லும் ஆக்ஷேபனையை நிவர்த்திப்பதற்குப் பகவானனவர், யஞ்ஞமென்பது விஷ்ணுவாகையாலும், யஞ்ஞம்செய்வது விஷ்ணு ஆராதனை யாகிறதாகையாலும், யஞ்ஞாதி கர்மங்களைச் செய்து பலனை ஈசுவரார்ப்பணம் செய்வதனால், பந்தஹேது ஆகாதென்பதை இதில் விவரித்திருக்கின்றார்.

யாயம் 2-சுலோகம் 42-ல், சொல்லியிருக்கின்றது. அந்தக் கர்ம்மமானது, போகத்தைக் கொடாமல் ஞானத்தைமட்டும் கொடுக்கும்படி ஏன் அந்த பிரம்மாவானவர் விதிக்கக்கூடாதென்றால், ஞானம்மாத்திரம் அதற்குப் பலனயிருந்தால், அந்தப் பலனையடைய இச்சிக்கும் ஜனங்கள் வெகு சிலராகத்தான் இருப்பார்கள். ஞானத்தில் இச்சையில்லாமல் சொர்காதிபோகங்களை அநுபவிக்க இச்சிக்கின்றவர்களுமான மற்றவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். சொர்க்காதிபோகம் பந்த ஹேதுவாயிருக்க, அதனை ஏன் அடைய வேண்டுமென்றாலோ, அது கிரமக்கிரமமாய் மோக்ஷஹேதுவாகும். எப்படி யென்றால், சொர்க்காதிபோகத்தை அநுபவிப்பவர்கள், அந்த சொர்க்காதி போகங்களே முடிவானதென்று எண்ணி அவ்விடத்திலேயே இருக்கின்றார்களா? அல்லது அதைவிட விசேஷ சுகமிருப்பதாக வெண்ணி அதை முயலுகின்றார்களா என்பதை உணருவார்கள். அப்போது இந்த சொர்க்காதிகளைவிட விசேஷமான சுகம் வேறொன்றுண்டென்று தெரியவருகின்றது. அதனால், அதை அடைய வேண்டுமென்கிற எண்ணம் உண்டாகும். இப்படி எண்ணிக் கொண்டிருக்குங் காலத்தில், தன்னுடைய புண்ய பலத்திற்குக் குறித்தகாலம் முடிந்தவுடன் "க்ஷீணே புண்யே மர்த்ய லோகம் விஸந்தி" என்கிற வாக்கியப்படிக்கு, புண்ணியம் நசித்தவுடன் பூலோகத்திற்குத் தள்ளப் படுவதை அறிகின்றான். அப்போது அவன் என்ன நினைக்கின்றான் என்றால், நான் காம்யமாய் யஞ்ஞம் செய்ததனல் அற்பபலமான சொர்க்காதிகளை அடைந்து மறுபடியும் பூலோகத்தில் ஜநநம் எடுக்க வேண்டியதாயிற்று. நிஷ்காம்யமாய் யஞ்ஞம் செய்வோமாகில் மோக்ஷ மடையலாமென்றெண்ணி பலா பேக்ஷையற்று நிஷ்காம்யகர்மம் செய்யத்தொடங்குவான். இவ்

வாறு சில ஜன்மங்களெடுத்தபிறகு அவனுக்கு அது மோக்ஷஹேதுவாகும். ஆகையால், ஜனங்களிடத்தில் கருணையுள்ள பிரம்மாவானவர் யஞ்ஞத்தை ஜனங்கள் செய்து நற்கதி அடையும்பொருட்டு சிருஷ்டித்தார் என்பதற்குச் சந்தேஹமில்லை.

தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ:
பரஸ்பரம் பாவயந்த ஶ்ரேய: பரமவாப்ஸ்யத. 11.

மேலும், அந்த பிரம்மதேவரானவர் என்னசொன்னாரென்றால் "ஓ புருஷசிரேஷ்டர்களே! நீங்கள் இந்த யஞ்ஞத்தால் தேவதைகளைப் பூஜியுங்கள். ஆராதிக்கப்பட்ட தேவதைகள், உங்களை விருத்தி செய்யக்கடவார்கள். பரஸ்பர விருத்திசெய்து அதனால், நீங்கள் மேலான மோக்ஷத்தை அடைவீர்கள்" என்று சொல்லினர்.

அர்ஜுநன்:—இதுவரையில் இரண்டாவது அத்யாயம் 61-சுலோகத்தில் "யுக்த ஆஸீத மத்பர:" யுக்த:-ஞானமுள்ளவனாய், மத்பர:-என்னிடத்தில் வைத்த மனதையுடையவனாய், ஆஸீத்-இருக்கவேண்டும். என்றால், இந்திரியங்களெல்லாவற்றையும் என்னிடத்தில் நிறுத்தி என்னையே பிரதானமாக ஆசிரயித்திருக்கவேண்டும். இந்திரியங்கள் எவனுக்கு வசமோ, அவனுடைய ஞானம் ஸ்திரமானதென்று சொல்லியிருந்தீரல்லவா? ("ஜீவப்பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" "கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது" என்பதில் பார்க்க.)

"இந்த்ரியத்வாரா ஸங்க்ராஹ்யைர் கந்தாத்யை ராத்மதேவதாம்
ஸ்வயம் பக்த்யா ஸமாராத்யஜ் ஞாதும் ஸோயம் மஹாமக:"

அப்படியிருக்க, இப்பொழுது பிரம்மதேவர் ஜனங்களை சிருஷ்டி செய்தபோது நீங்கள் தேவதைகளை ஆராதியுங்கள் என்று சொன்னதாக பகுவசனமாய்ச் சொல்

வதைப் பார்த்தால், உம்மைவிட இதர தேவதைகளும் இருப்பதாய்க் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட தேவதைகள் யார்.?

கிருஷ்ணன்:—பிரபஞ்ச சிருஷ்டி ஸ்திதிகளுக்குக் கர்த்தன் நானே! என்னைவிட மற்றொரு தேவதைகளில்லை. ஆனால், பூலோகத்திலுள்ள மனிதர்களெல்லோரும் என்னுடைய நிஜசொரூபத்தை அறியாமல், அதில் சிலர் பிரமனென்றும், சிலர் விஷ்ணுவென்றும், சிலர் சிவனென்றும், சிலர் விஷ்வக் ஸேநனென்றும், சிலர் இந்திரனென்றும், சிலர் சூரியனென்றும், சிலர் ஏசுநாதரென்றும், சிலர் அல்லாவென்றும், மற்றும் சிலர் பரப்பிரம்மமென்றும் இவ்விதமாய் அநேகவித பாவனைகளினால் (எண்ணங்களால்) அநேகவித ரூபங்களாய் நினைத்து பூஜா திரவ்வியங்களினால் ஆராதிக்கின்றார்கள். ஆகையால், அந்த ஆராதனைகளெல்லாம் என்னிடத்திலேயே ஸமர்ப்பணமாய், நானே அவரவர்களின் இஷ்டதேவதா ரூபங்களுடன், அவரவர்களின் இஷ்டம்போல் பலன்களைக் கொடுத்துக் கொண்டிருப்பேன். எப்படியென்றால்:—

"யத் பாவம் தத் பவதி" என்பதுபோல், யார்யார் எந்தெந்த தேவதைகளைக்குறித்துத் தவம் செய்கின்றார்களோ அப்போதைக்கப்போது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாச மென்னும் பஞ்சபூதங்களால் அந்தந்த ரூபத்தைத் தரித்து அவர்களின் இஷ்டங்களைப் பூர்த்திசெய்து மறுபடியும், பஞ்சபூதங்களால் உண்டாகிய அந்த சரீரத்தை அந்தந்தப் பூதங்களில் சேர்ப்பித்து, நான் என் நிஜரூபமாகிய பரப்பிரம்மமாகவே யிருப்பேன். என்றால், நான் ஆகாசம்போல் எங்கும் வியாபித்திருப்பேன். ஆதலால், உன்னிடத்திலிருக்கும் ஆசையென்னும் அழுக்குகளையெல்லாம் நீக்கிவிட்டால்,

"லவணம் தோய ஸம்ஸ்பர்ஸ்யாத் த்ரவதோ யமயம்பவேத்
மனோ ஹி ப்ரஹ்ம ஸம் ஸ்பர்ஸ்யாத் ததா ப்ரஹ்மமயம் பவேத்"

உப்பு, ஜலத்தில் போட்டவுடன் அது ஜலசொரூபமாவதுபோல், மனது பிரம்மத்திற் கலந்தவுடனே அம்மனப், பிரம்ம சொரூபமேயாகின்றது. அப்படி அந்த மனது பிரம்ம சொரூபமானவுடனே மனோமயமாகிய பிரபஞ்சமெல்லாம் பிரம்மசொரூபமே யாகின்றது.

இஷ்டாந் போகாந் ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞ பாவிதா:
தைர்தத்தா நப்ரதா யைப்யோ யோ புங்க்தே ஸ்தேநஏவஸ: 12.

ஆதலால், ஓ அர்ஜுனா! பிரம்மதேவர் அந்த ஜனங்களுடன் இன்னும் என்ன சொல்லினர் என்றால், "ஓ புருஷ சிரேஷ்டர்களே! யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், உங்களுக்கு இஷ்டமானபோகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால், அதுபோலவே நீங்கள் போஜனத்திற்கு முந்தி தேவதாராதனை செய்து தத்(அந்த) சேஷாந்நத்தைப் புஜிக்கவேண்டும். இஃதன்றியும், எங்கெந்த இடங்களில் எங்கெந்தப் பதார்த்தங்களைப் புஜிக்கின்றீர்களோ, அந்தப் பதார்த்தங்களை அவ்விடத்திலேயே ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்து சேஷத்தைப் புஜிக்கவேண்டும். மேற்படி தேவதைகளால் கொடுக்கப்பட்ட போகங்களை அவர்களுக்கு ஆராதிக்காமலும் கொடாமலும் புஜிக்கப்பட்டவன், திருடனே யாவான்." என்று சொல்லினர்.

அர்ஜுனன்:—ஐயா, கிருஷ்ணமூர்த்தியே! தேவர்கள் சமஸ்த போகங்களைக் கொடுக்கின்றார்களென்றும், அவர்களால் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கே நைவேதிக்கவேண்டுமென்றும், அப்படி நைவேதிக்காமல் அநுபவிப்பவன் திருடனாவானென்றும் சொல்லுகின்றீரே இதற்குக் காரணமென்ன? அவர்கள் கொடுத்த பதார்த்தத்தில் சிலபாகத்தை மறுபடியும்

அவர்களுக்குக் கொடுப்பதனால் எப்படி பிரீதியுண்டாகும்? அப்படி அவர்களுக்குக் கொடாமல் புஜிப்பதனால் திருடனுவதெப்படி? இது எனக்கு விவரமாய்ப் புத்திக்கு எட்டாமலிருக்கின்றது. ஆதலால், தயவுசெய்து விவரித்துச் சொல்லவேண்டும்.

கிருஷ்ணன்:—நல்லது, நீ ராஜ்ஜியபரிபாலனம் செய்யும் ராஜனல்லவா? உன்னிடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு சேவகம் செய்கின்றார்களல்லவா? அப்படிச் செய்வதற்குக் காரணமென்ன?

அர்ஜுநன்:—அவர்கள் என்னிடம் சேவிப்பதற்காகவே நான் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்றேனாதலால், அவர்கள் என்னிடம் சேவிக்கின்றார்கள்.

கிருஷ்ணன்:—நல்லது. உன் உத்தியோகஸ்தர்களில் சிலர் உனக்கு பரிசர்யம் செய்வதேயல்லாமல், அப்போதைக்கப்போது காணிக்கையாய் ருசிகரமாகிய நல்ல பழவர்க்கங்களைக் கொண்டுவந்து கொடுக்கின்றார்கள். மற்றும் சிலர் அப்படிச் செய்யாமல் நிராகரித்தும் இருக்கின்றார்கள். அப்பொழுது இந்த இரண்டு வகுப்பினர்களிலும் எவர்களிடத்தில் உனக்கு அபிமானம் அதிகமாயிருக்கும்?

அர்ஜுநன்:—அப்போதைக் கப்போது எனக்குக் காணிக்கைகளைச் சமர்ப்பிக்கப் பட்டவர்களிடத்திலேயே அபிமானம் அதிகமாயிருக்குமேயன்றி மற்றவர்களிடத்தில் அப்படிப்பட்ட அபிமானம் இராது.

கிருஷ்ணன்:—நல்லது. நீ ஆயிரக்கணக்காகக்கொடுத்த சம்பளத்திலிருந்து பழவர்க்கங்களைக் கொண்டுவந்து காணிக்கைகளாய் கொடுக்கின்றார்களா? அல்லது மற்றொரு விதமாய்ச் சம்பாதித்துக் கொண்டுவந்த திரவ்வியத்திலிருந்து வாங்கிக் கொண்டுவந்து கொடுக்கின்றார்களா?

அர்ஜுநன்:—நான் கொடாவிடில், அவர்களுக்கு எங்கிருந்து வரும்? ஆதலால், நான் கொடுத்த திரவ்வியத்தி

லிருந்தே விரயப்படுத்திக்கொண்டு வருகின்றார்களென்று எண்ணவேண்டியதாயிருக்கின்றது.

கிருஷ்ணன்:—அப்போது அதனால் உனக்கென்ன பிரயோஜனம் உண்டாயிற்று? உனக்கில்லாத வஸ்து ஏதாகிலும் அவர்கள் கொண்டுவந்து கொடுத்தார்களா? அப்படி அவர் கொடாவிட்டால் உனக்கேதாகிலும் குறைவுபடுமா? ஆதலால், அவர்களிடத்தில் அபிமானம் வைக்க வேண்டிய காரணமென்ன?

அர்ஜுநன்:—எனக்கு அவர்கள் கொடுக்கப்பட்ட காணிக்கைகளினால் யாதொரு பிரயோஜனம் இல்லாவிடினும் அவர்கள் அப்படிச் செய்வதனால் அவர்களுக்கு என்னிடத்தில் உண்டாயிருக்கும் சிரத்தை, பக்தி, விசுவாசங்களினால் என்னை சந்தோஷப்படுத்துகின்றார்கள். ஆதலால், அவர்களிடத்தில் நான் அபிமானிப்பது சகஜமேயல்லவா?

கிருஷ்ணன்:—நல்லது. அவர்களை நீ அபிமானிப்பதனால் அவர்களுக்கு ஏதாயினும் பிரயோஜன முண்டாகுமா?

அர்ஜுநன்:—ஆஹா! உண்டாகும், எனக்கு எப்போது அவர்களிடத்தில் அபிமானம் உண்டாகின்றதோ அப்போதே அவர்களுக்கு ஆயிரக்கணக்காய் சம்பளம் விருத்தி செய்தல் முதலாகிய மேன்மையைச் செய்வேன். அதனால் அவர்கள் கிரமக்கிரமமாய் அபிவிருத்தி அடையத் தக்கவர்களா யிருக்கின்றார்கள். அப்படிச் செய்யாமலும் என்னிடத்தில் பக்தி சிரத்தையில்லாதவர்களாய்த் தோன்றினால் அவர்களுக்குச் சம்பளம் உயர்த்தி மேன்மையையுண்டாக்க எனக்கு எப்படி மனம் உண்டாகும்? அதற்குப் பதிலாய் அவர்களை நாளாவட்டத்தில் க்ஷீணகதிக்குக் கொண்டுவர வேண்டுமென்றே தோன்றும்.

கிருஷ்ணன்:—இதுபோலவே இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனுதாரமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்குப் பகவானல் நியமிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், அவர்கள் தரத்தக்க பதார்த்தங்களில் சிலவற்றை அவர்களுக்கு அர்ப்பணமாய் நைவேத்தியம் செய்வதனல் சந்தோஷித்தவர்களாய் மறுபடியும் வருஷங்களைப் பொழிய மழையை விருத்தி செய்துகொண்டே வருவார்கள். அதனல், ஜனங்கள் சிரேயஸ்கரமான அபிவிருத்தியை அடைகின்றார்கள்.

யஞ்ஞசிஷ்டாசிந ஸ்ஸந்தோ முச்யந்தே ஸர்வ கில்பிஷை:
தே த்வகம் புஜ்யதே பாபா யே பசந் த்யாத்ம காரணத். 13.

ஆதலால், ஓ அர்ஜுநா! நான் இதுவரையில் சொல்லியதுபோல் ஜனங்கள் தமக்கு ஜீவனுதாரமாகிய பதார்த்தங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும் தேவதைகளைப் பஞ்ச யஞ்ஞத்தினல் ஆராதிக்கவேண்டியது அத்தியாவசியமாதலால், புத்திமான்கள் யஞ்ஞாதிகளினல் தேவதைகளை ஆராதித்த பிரசாதங்களைப் புசித்து, ஜீவித்து சமஸ்த பாபங்களிலிருந்து விமுக்தர்களாவார்கள். அப்படிச் செய்யாமல் எவனொருவன் சுவேச்சையாய் அன்னத்தைப் புசிக்கின்றானே அவன் பாப சொரூபமான அந்நத்தையே புசிக்கின்றான். அப்படிப்பட்ட அன்னத்தைப் புசித்தால் பாபத்திற்குப் பாத்திரனுகின்றான்.

தேவ யஞ்ஞாதி பஞ்ச யஞ்ஞங்களைச் செய்து அமிருதமென்று பெயருடைய தத் (அதன்) சேஷத்தைப் புசிக்கப்பட்டவர்கள் சகல பாபங்ளிலுமிருந்து விடுபடுவார்கள். பஞ்ச யஞ்ஞமென்றால்:—

"அத்யாபநம் ப்ரஹ்மயஜ்ஞ: பித்ருயஜ்ஞஸ்து தர்ப்பணம்.
ஹோமோ தைவோபலிர் பௌதோ ந்ருயஞ்ஞோ அதிதிபூஜநம்"
"பஞ்சைதாந்யோ மஹாயஜ்ஞாந் நஹாபயதி ஶக்தித: ஸக்ருஹேபி வஸந் நித்யம் ஸூநாதோஷைர் நலிப்யதே."

இதில், பிரம்ம யஞ்ஞமென்றால் :—பிரதிதினமும் வேதாத்தியயநம் செய்வது. பித்ரு யஞ்ஞமென்றால்:—பிரதிதினமும் பித்ருதேவதைகளைத் தர்ப்பணங்கள் விட்டு திருப்தியடையச் செய்வது. தேவயஞ்ஞமென்றால்:—பிரதி தினமும் அக்நியில் ஹோமம் செய்வது. பூத யஞ்ஞமென்றால்:—பிரதிதினமும் ஜந்துக்களுக்குப் பலி கொடுத்துக் கொண்டிருப்பது. மனுஷ்ய யஞ்ஞமென்றால்:—பிரதிதினம் வரப்பட்ட அதிதிகளுக்குப் போஜன மளிப்பது. இப் பேர்ப்பட்ட பஞ்சமஹா யஞ்ஞத்தினால் பிரதிதினம் செய்யும் கிருஹஸ்தன் பஞ்ச சூநாதோஷங்களை அடையமாட்டான். பஞ்ச சூநா தோஷமென்றால்:—

"குட்டு நீபேஷணீ சுல்லி உதகும்பீ ச மார்ஜநீ
பஞ்சஸூநா க்ருஹஸ்தஸ்ய தாபிஸ் ஸ்வர்க்கம் நவிந்ததி."

உலக்கை, உரல், அம்மி, அடுப்பு, ஜலபாண்டம், துடப்பம் ஆகிய இவைகளில்லாமல் சம்ஸாரம் நடக்காததலால், இவைகளால் வேலைகள் செய்யும்போது சிறிய ஜந்துக்களாகிய புழுக்களுக்கு இம்சையுண்டாகும். ஆதலால், இதையே பஞ்சசூநமென்று சொல்லுவார்கள். கிருஹத்தில் இப்பேர்ப்பட்ட தோஷங்கள் ஸம்பிராப்தமாவதால் கிருஹஸ்தனுக்கு சொர்க்கம் உண்டாவது துர்லபம். சொர்க்கமே கிடைக்காதபோது முக்தனாவது எப்படி? முன்சொல்லிய பஞ்சமஹா யஞ்ஞங்களைச் செய்துவந்தால், இந்தத்தோஷங்கள் நசித்துவிடும். இப்படிச் செய்யாதவர்கள் பாபத்தையே அநுபவித்துக்கொண்டு வரவேண்டும். இவ்விடத்தில் யஞ்ஞமென்றால், அக்நிஷ்டோமாதி யஞ்ஞங்களே யல்ல. பிரதிபுருஷனும் ஓர் இஷ்டதேவதையை உபாசனா மூர்த்தியாய் ஆராதிப்ப துண்டல்லவா? அந்த உபாசனா மூர்த்திக்கு தான், பிரதிதினம் சமைத்த பதார்த்தங்களை ஷை பகவானுக்கு ஆராதித்து, அந்த சேஷமான அன்

னத்தைப் புசிப்பதும் யஞ்ஞமென்றேசொல்லப்படும். ஆதலால், ஓ அர்ஜுனா! அப்படி ஆராதித்தபிறகு "தைவம் மானுஷரூபேண" என்றிருக்கின்றதாதலால் அதிதி, அப்பியாகதிகளுக்கும் கொடுப்பதும், தேவதா பிரீதியர்த்தமாய்ச் செய்யப்பட்ட யஞ்ஞங்களில் சேரப்படுகின்றது. இஃதன்றியும், சகலபூதங்களும் பகவத்சொரூபமேயாதலால், பிபீலிகாதி, பிரமதேவன்வரையில் சகல ஜீவஜந்துக்களிலும் சாக்ஷாத் பரப்பிரம்மமே சாக்ஷீமாத்திரமாய் ஆத்மசொரூபமாயிருப்பதனால் தன் வீட்டை அனுசரித்துத் திரிந்துகொண்டிருக்கும் ஸுனகம் (நாய்), மார்ஜ்ஜாலம் (பூனை) முதலாகிய ஜந்துக்களுக்கும் அன்னம் போடுவது தேவதா பிரீதியர்த்தம் செய்யப்பட்ட யஞ்ஞத்திலேயே சேரப்படுகின்றது. எந்த வர்ண (குல) ஸ்தனாயிருந்தாலும், பிரதிபுருஷனும் அவன் சத்தியானுசாரமாய் இப்படிச்செய்வதற்கு சாத்தியமானதேயன்றி, அசாத்தியமானதல்ல. இப்படிச் செய்வதனால் பகவானுக்குப் பிரீதியுண்டாகின்றது. அப்படிப் பிரீதி எப்போது உண்டாகின்றதோ அப்பொழுதே அவனுடைய பாபங்கள் பரிகாரமாகின்றன (நசிக்கின்றன). அப்படிச் செய்யாதவனுக்கோ என்றால், சமைத்த பதார்த்தங்களைப் பகவானுக்கு ஆராதிக்காமலும், தன் சக்தியானுசாரம் அதிதி அப்பியாகதிகளுக்குப் போடாமலும், தன்வீட்டைக் காத்துக்கொண்டிருக்கும் நாய், பூனைகளுக்கும் போடாமல் எவனொருவன் தன் குடும்பவரையில் போஜனம் உபயோகித்துக்கொள்ளுகின்றானோ அப்பேர்ப்பட்டவன் பாபியென்றே சொல்லப்படுவான்.

அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜந்யா தந்ந ஸம்பவஃ
யஜ்ஞாத் பவதி பர்ஜந்யோ யஜ்ஞஃ கர்ம ஸமுத்பவஃ 14

ஆனால், இப்படி யஞ்ஞரூபமாகிய தேவதாராதனையினால் உண்டாகும் பிரயோஜனமென்னவென்று கேட்கின்

ருயோ? அதன் பிரயோஜனத்தைச் சொல்லுகின்றேன் கேள்:— அப்படிப்பட்ட யஞ்ஞத்தினால் தேவதைகளுக்குப் பிரீதியுண்டாகின்றது. அதனால், அவர்கள் காலமழையைச் சரியாய் வர்ஷிக்கின்றார்கள். அம்மழையால், பயிர்கள் சரியாய் பலன்களைக் கொடுக்கின்றன. அதனால், ஜனங்களுக்கு ஆஹாரங்கள் புஷ்களமாய் உண்டாகின்றது. அப்படிக் கொடுப்பதனால், மனிதர்கள் பசு பக்ஷி முதலானவைகள் விருத்தியாகின்றது. ஆதலால், ஜனங்கள் தேவதாராதனையைச் சரியாய் நடத்திக்கொண்டு வரவேண்டும். தவறாமல் தேவதாராதனை நடத்தப்பட்டவர்கள் வடதேச பிராம்மணர்களேயன்றி, மற்ற பிராம்மணர்களும் க்ஷத்திரிய வைசிய் சூத்திராதி மானவர்களும் கிருத்திகை, அமாவாசைகளில் மாத்திரம் ஆராதிக்கின்றார்கள். இம்மூன்று ஜாதியர்களும் பிரதிதினம் ஆராதிப்பது மிகவும் அரிது. பிராம்மணர்களைப் போல், இவர்களும் புலாலை வெறுத்து பிரதிதினம் ஆராதித்துக் கொண்டுவந்தால் இவர்கள் மேலானஸ்திதிக்கு வருவதே யல்லாமல், மாதம் மும்மாரியும் மழை பெய்யலாம். ஆதலால், கரசரணாதி அவயவங்களுடன் கூடவே அந்தந்தக் காலங்களில் தக்கவேலையைச் செய்யாமல் அந்தத் தேவதாராதனையைச் செய்வதனால் பிரயோஜன முண்டாகமாட்டாது. பிரதிமனுஷ்யனும் கர்மத்தை அவசியமாய் அனுஷ்டிக்கவேண்டும்.

கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷர ஸமுத்பவம்
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்மநித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டிதம். 15.

அப்படிப்பட்ட கர்மமென்றாலோ பிரம்மாவினால் உண்டானதாயிருக்கின்றது. பிரம்மா, ஜனங்களை யஞ்ஞத்துடன் கூடவே சிருஷ்டித்தாரென்று, இதுவரையில் அத்தியாயம் 3, சுலோகம் 10-ல், சொல்லியிருந்தேனல்லவா? அப்படிப் பட்ட யஞ்ஞம், கர்மத்தினால் உண்டாயிற்றென்று இப்

பொழுது ஏற்படுகின்றதல்லவா? ஆகையால், யஞ்ஞத்திற்கு ஹேதுபூதமாகிய கர்மம், பிரம்மாவினாலேயே உண்டானதா யிருக்கின்றது. அர்ஜுனா! பிரம்மா என்றால், சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஜாபதி. என்றாலோ "அக்ஷர ஸமுத்பவம்" நாச ரகிதமாகிய விராட்புருஷனால் அதாவது, பரப்பிரம்மத்தி னின்று பிறந்தவனா யிருக்கின்றான். ஆதலால், சமஸ்த வஸ்துக்களிலும் அந்த பரப்பிரம்மமே வியாபித்திருக்கின்ற தென்றும், அதுவே இந்த யஞ்ஞத்திலிருக்கின்ற தென்றும் அதாவது, கர்மயோகமாகிய யஞ்ஞமும் அந்தப் பரப்பிரம்ம சொரூபமே யென்றும் அறிய வேண்டும்.

ஏவம் ப்ரவர்திதம் சக்ரம் நாநுவர்தயதீஹ யஃ
அகாயு ரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி. 16

அர்ஜுனா! இந்த யஞ்ஞம் சக்ராகாரமாய்த் திரிந்து கொண் டிருக்கின்றது; அஃதெப்படியென்றால், யஞ்சம் ஜனங்களுடனே பிரம்மாவினால் உர்பத்தி செய்யப்பட்டது. அந்த யஞ்ஞத்தினால் தேவதைகள் பிரீதியாகின்றார்கள். பிரீதியாவதனால் மழை பெய்கின்றது. மழை பெய்வதனால் ஆஹாரவஸ்துக்கள் விசேஷமாய் உண்டாகின்றன. அப்படி உண்டாவதனால் பகவதாராதனா ரூபமாய்க் கர்மத்தைச் செய்ய சக்தி யுடையவர்களாகின்றார்கள். அப்படிப்பட்ட கர்மம் மறுபடியும் அந்தப் பகவானிடத்திலேயே சமர்ப்பணமாகின்றது. ஆதலால், இந்த யஞ்ஞரூபமாகிய கர்மம், எந்த பரப்பிரம்மத்திலிருந்து பிறந்ததோ அந்த பரப்பிரம்மத்திலேயே ஐக்கியமாய், மறுபடியும் அதிலிருந்தே உண்டாகிறபடியால் இதற்குச் சக்கிரமென்று சொல்லப்படும். இந்த விஷயங்களையெல்லாம் எவனொருவன் சரியாய் அறியாமல், தான் செய்யப்பட்ட கர்மமெல்லாம் பரமாத்மாவினாலேயே உண்டாயினவென்றும், அவற்றின் பலன் அந்

தப் பரமாத்மாவிற்கே சேரவேண்டியதா யிருக்கிறதென்றும் எண்ணாமல், தன் ஆத்மார்த்தமாய் எண்ணி அதன் பலத்தைத் தானே அனுபவித்துக்கொண்டு, மனதை இந்திரியவிஷயங்களில் ஓடவிட்டுக்கொண் டிருப்பவன் பாபாத்மனாகின்றான். அப்படிப்பட்டவன் ஜீவனம் வியர்த்தமானதா யிருக்கின்றது.

ஓ அர்ஜுநா! உலகத்தில், முதல் விருக்ஷம் உண்டாயிற்று, அல்லது விதையுண்டாயிற்று என்னும் விஷயத்தை எவ்வாறு சொல்லத் துணியமாட்டோமோ அதுபோல் இந்தச் சக்கிரத்திற்கு இதுமுதலென்றும் இது கடையென்றும் சொல்வதற்குச் சாத்தியப்படமாட்டா. அதுபோல் சம்சாரப் பிரவாஹமும் அனாதியென்று சொல்லப்படுகின்றது. அஃதெப்படியென்றால், ஒரு சக்கிரத்தின் மீதேறி அந்தச் சக்கிரத்தை அநேகதடவைகளில் சுற்றிவரும் எறும்பானது, தான் வெகுதூரம் திரிகின்றதென்று எண்ணுமேயன்றி மறுபடியும் யதாஸ்தானத்திற்கே வருகின்றதென்று தெரிந்து அந்தச் சக்கிரத்தைவிட்டு அப்புறம் போவதற்கு எப்படிப் பிரயத்தினப்படாதோ அதுபோல், ஸம்ஸாரி தான் ஒருமுறை செய்தகாரியங்களையே மறுபடியும் செய்துகொண்டு அப்போதைக்கப்போது, நூதன வியவகாரங்கள் செய்வதுபோல் பிரமையடைந்து இந்த சம்சாரமென்னும் சக்கரத்தில் பிறந்துகொண்டும் இறந்துகொண்டுமா இருப்பானேயன்றி, இதிலிருந்து விமுக்தனாவதற்குப் பிரயத்தினப்படமாட்டான்.

யஸ்த்வாத்மரதிரேவஸ்யா தாத்ம த்ருப்தஶ்ச மாநவ꞉
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட ஸ்தஸ்ய கார்யம் நவித்யதே 17.

† நைவ தஸ்ய க்ருதேநார்த்தோ நாக்ருதே நேஹ கஶ்சந
நசாஸ்ய ஸர்வபூதேஷு கஶ்சி தர்த்த வ்யபாஶ்ரய꞉. 18.

---

† பிரம்மத்தைத் தவிர வேறு யாதொன்றையும் நினையாதவனாய், அஸம்பிரஞ்ஞாத சமாதியில் இருப்பவன், தேவதைகள்,

"இந்த அத்யாயம் 3-வது சுலோகம் முதல், 17-வது சுலோகம் வரையில், அஞ்ஞானி அந்தஃகரண சுத்தி நிமித்தமாய்க் கர்மத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. 18-வது சுலோகம் முதல், பிரம்மஞானிக்குக் கர்மத்தினல் பிரயோஜனம் இல்லையென்பதைச் சொல்லப்போகின்றார்."

எவனொருவன் கேவல பிரம்மஞானியா யிருக்கின்றானோ, அதாவது பிரபஞ்சமெல்லாம் மித்யை (மாயை) யென்றும், ஆத்மா ஒன்றே நித்தியமாகிய வஸ்துவென்றும் நிச்சயமாய் அறிகின்றானோ, அவனுக்குப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா விஷயங்களிலும் உண்டாயிருக்கும் ஆசாபாசங்களெல்லாம் நிவர்த்தியாய்க் கேவலாத்மானுபவத்திலேயே ஆஸக்தியுடையவனாய்த் தன்னில் தான் சுகித்துக் கொண் டிருப்பான். அவன், தன் திருப்தி நிமித்தமாயாகிலும். சுகநிமித்தமாயாகிலும் செய்யவேண்டியது எதுவுமிராது. அன்றியும் அவன், எந்தக் கர்மத்தையும் ஆசிரயிப்பதனல் பிரயோஜனமும், ஆசிரயிக்காவிடில் லோபமும் இல்லாமற் போவதுமேயன்றி, எந்த விஷயத்தைக் குறித்தாயினும் எவராயிருந்தபோதிலும்சரி, அவர்களை ஆசிரயிக்கவேண்டிய ஆவசியமும், இராது.

அர்ஜுனன்:— ஓ சுவாமி! அப்பேர்ப்பட்டவன் தன்னில் தான் சுகித்துக்கொண்டிருப்பானென்று சொன்னீரல்லவா? அதனை விவரித்துச் சொல்லவேண்டும்.

கிருஷ்ணன்:—எப்படியென்றால், காமியானவன் ஒரு ஸ்திரீ லபித்தால், அவளுடன் போகித்துக் காமத்தைத் தீர்த்துக்கொண்டு திருப்தியடைகின்றான். அந்த ஸ்திரீ

குரு முதலானவர்களை வணங்கவேண்டிய காலங்களில் வணங்காவிட்டாலும் அவனுக்கு, யாதொரு பாதகமுமில்லை. அ றியும், அவனுக்கு ஒருவராலும் ஆகவேண்டிய பிரயோஜன மொன்றுமில்லை.

லபிக்காவிடில், அந்தவிஷயத்தில் எப்பொழுதும் சிந்தாக்கிராந்தனு யிருப்பான். ஞானியோ அப்படிப்பட்ட ஸ்திரீ வாஞ்சை (இச்சை) பூர்த்தியா யில்லாதவனு யிருக்கின்றுனுதலால், மேற்சொல்லிய காமியானவன் ஸ்திரீலபித்தவுடன் எப்படி திருப்தியடைந்திருக்கின்றுனே அதுபோல், ஞானியும் எப்பொழுதும் திருப்தனுகவே யிருப்பான். மேலும் ஜிஹ்வாசாபல்யம் (நாருசி) உடைய ஒருவன் நல்ல ருசியுடைய பதார்த்தங்கள் லபித்தபோது அவைகளைப் பக்ஷிப்பதனுல் திருப்தனுகின்றுன். அந்தப் பதார்த்தம் லபிக்காவிடில் அதிருப்தனுகின்றுன். ஞானியோ அப்படிப்பட்ட நாருசி இல்லாதவனுதலால், தனது ஆஹாரார்த்தம் பகவதிச்சானுசாரமாய் எப்பொழுது அப்பிரயத்தினமாய் (தனக்குத்தானுய்) லபிக்கின்றதோ, அப்பொழுது அதனைப் பஞ்சபக்ஷ பரமான்னமாய் எண்ணி பக்ஷித்து திருப்தியடைகின்றுன். ருசித்த பதார்த்தம் லபித்தபோது திருப்தி யடைவதும், ருசிக்காத பதார்த்தம் லபித்தபோது, திருப்தியில்லாமற் போவதும் அவனுக்கிராது. இதுபோலவே, மற்ற எல்லாவிஷயங்களிலும் ஸதா திருப்தியடைந்தவனு யிருக்கின்றுன்.

அர்ஜுனன்:—அப்படிப்பட்ட ஞானி பிரபஞ்ச விஷயத்தில் எதிலும் ஆசையில்லாதவனு யிருக்கும்போது தன்னில் தான் சந்தோஷிப்பதற்கு எப்படியாகும்.

கிருஷ்ணன்:—அப்படிப்பட்ட ஞானியானவன் பிரபஞ்சமெல்லாம் மித்தையென்றும் ஆத்மா ஒன்றே நித்தியமாகிய பதார்த்தமென்றும் அறிந்தவனு யிருக்கின்றுன். ஆதலால், அப்படிப்பட்ட அநித்தியமாகிய பதார்த்த விஷயத்தில் உலகத்தார் பிரமையடைந்து மூடர்களாய் அவைகளையே நித்திய பதார்த்தமாய் எண்ணி அந்த விஷயங்களில் அநேக பாடுகள் பட்டுக்கொண்டு நித்திய பதார்த்த

மாகிய ஆத்மவிஷயத்தில் யாதொன்றும் பிரயத்தினப்படாமல், சம்சார சமுத்திரத்தில் மூழ்க்கிக்கொண்டும், மிதந்து கொண்டும் அதாவது, "மனமென்னும் மச்சமானது கோரமாகிய சம்சாரமென்னும் சமுத்திரத்தில் தாரா புத்திராதிகளென்னும் ஜலத்தில்அழுந்தி" வேறொன்றும்தோன்றாமல் முதலிருந்து கடைசிவரையில் அதாவது, ஆதியில் பிரம்மதேவர் பிரபஞ்ச சிருஷ்டிசெய்த நாள்முதல் நாளதுவரையில் எப்பொழுதும் புண்ணிய பாபங்களுக் குட்பட்டு வண்டியின் சக்கிரம்போல் திரிந்து திரிந்து இருக்கப்பட்ட வர்களைப்பார்த்து ஆஹா ! இவர்கள் மூடர்களாய் நித்தியாநித்திய வஸ்து விவேகமில்லாமல் கெடுகின்றார்களல்லவா, நானோ பகவ தனுக்கிரஹத்தினால் இப்படிப்பட்ட மூடத்துவமில்லாமல் நித்தியபதார்த்தத்தை அறிந்து சம்சாரபந்தத்தை விடுவித்துக்கொண்டு மோக்ஷத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செய்து கொண்டிருக்கின்றேனல்லவா என்றெண்ணித் தன்னில் தான் சந்தோஷிக்கின்றான். ஆதலால், அப்படிப்பட்டவன் எப்பொழுதும் விஷயங்களில் ஆசக்தியில்லாமல் அஸம்பிரஞ்ஞாத சமாதியிலிருந்து பரப்பிரம்ம சொரூபமாகிய ஆத்மாவையே தியானித்துக்கொண்டிருப்பான்.

தஸ்மா தஸக்தஸ் ஸததம் கார்யம் கர்ம ஸமாசர
அஸக்தோஹ்யா சரந் கர்ம பரமாப்நோதி பூருஷஃ. 19.

பிரம்மநிஷ்டனுக்கு தான் இருக்கப்பட்ட ஸ்திதியைவிட அதிகமாய் உண்டாகமாட்டாது. ஆதலால், கர்மத்தை அனுஷ்டிக்கவேண்டியது ஆவசியகமில்லை. அவன் விதி நிஷேதாதீதன். சுவாநுபவத்தைவிட அவனுக்கு வேறொரு பிரயோஜன மில்லாதலால், "ஆப்ரஹ்ம ஸ்தம்பபர்யந்தம்" என்றால், பிரம்மதேவன்முதல் திருணம்வரையில் எந்தப் பதார்த்தங்களினாலும் ஒரு பிரயோஜன நிமித்தமாய் ஆசி

யிக்கவேண்டியது அவனுக்கில்லை. ஆதலால், ஞானி கர்மத்தை ஆசிரயிப்பது அநாவசியமென்று இப்பொழுது நான் சொல்லிய அம்சத்தினால் தெரிந்துகொண்டிருப்பாயல்லவா? உனக்கென்றாலோ அப்படிப்பட்ட ஞானசம்பத்து இல்லாததால் கர்மத்தை ஆசிரயித்தே தீரவேண்டும். ஆகையால், பலாபேக்ஷையை விட்டு எப்பொழுதும் விதிப்படி செய்யவேண்டிய கர்மத்தைச்செய்தே தீரவேண்டும். பலாபேக்ஷையில்லாமல் கர்மத்தைச்செய்து வரவர ஞானோதயமாகும். அதனால், மோக்ஷத்திற்கு அருஹனாகின்றாய்.

கர்மணைவ ஹி ஸம்ஸித்தி மாஸ்த்திதா ஜநகாதய:
லோக ஸங்க்ரஹ மேவாபி ஸம்பஶ்யந் கர்த்து மர்ஹஸி. 20.

உனக்கு ஞானோதயம் உண்டாகாததனால் கர்மத்தை ஆசிரயிப்பது அத்தியாவசியம். ஒருவேளை நீ ஞானியாயிருந்து கர்மத்தினால் பிரயோஜனமில்லாவிடினும், ஜனங்களுக்கு நல்லொழுக்கத்தைக் காட்டுவதற்காகிலும் நீ கர்மத்தை ஆசிரயிக்கவேண்டியதா யிருக்கின்றது. ஜனகர் பிரம்ம ஞான சம்பன்னராயிருந்த விஷயம் நீ கேள்விப்பட்டிருக்கின்றாயல்லவா? அவரது ஞானம் எப்படிப்பட்டதென்றால், சாதாரணமான ராஜனைப்போல் ராஜ்ஜியபரிபாலனம் செய்துகொண்டு அந்த ராஜாங்கத்திற்கு வேண்டிய யாவத் காரியங்களையும் யாதபவிதிப்படி நிறைவேற்றிக்கொண்டுவந்தார்.

இப்படி நிறைவேற்றிக்கொண்டுவந்தும் ஒன்றின்மீதாகிலும் கிஞ்சித்தேனும் பற்றுதலில்லாமல் தாமரையிலையின் மீதுள்ள ஜலபிந்துவைப்போல் இருந்தார். அப்படிப்பட்டவர் ஏன் இந்த ராஜ்ஜியபாரத்தை வஹித்துக் காயிகமான சகல க்லேசங்களுக்குக் காரணமாகிய கார்யங்களைச் செய்தாரென்று நினைக்கின்றாயோ? அதனைச் சொல்லுகின்றேன் கேள்:— தன்னைப்போன்ற இதர ராஜர்கள் தானாசிரயித்

ததுபோல் ராஜகார்யங்களை நடத்திக்கொண்டு நியாய பரிபாலனம் செய்து அதன்மூலமாய் ஜனங்களுக்கு சுகமுண்டாகும்படிச்செய்து ரக்ஷிக்கும்படி வழிகாட்டுவதற்காகவேயொழிய மற்ற எந்தப் பிரயோஜனத்திற்கும் அல்ல. ஆதலால், கர்மத்தை அனுஷ்டித்தால் ஞானம் உண்டாவது நிச்சயம். எப்படியென்றால்:—

“ஸர்பிரஸ்தி பயஸீக்ஷுகோரஸ ஸ்தைலமஸ்தி திலமத்ய ஏவதத் லப்யதே மதந யந்த்ரகர்மணு கர்மணுஹ்ருதி கதாதநைவஸித்.”

என்னும் சுருதிரீதியாய் பாலில் நெய்யுண்டு, கரும்பில் பானகமுண்டு, எள்ளில் எண்ணெயுண்டு. பாலைக்காய்ச்சிப் பிரைகுத்தித் தயிராக்கி மத்தினால் கடைதலாகிய கர்மத்தி (வேலையி)னால் வெண்ணெயும் தத் (அதன்) மூலமாய் நெய்யும் உண்டாகும். கரும்பை ஆலையில் ஆட்டினால் பானகமுண்டாகும். எள்ளைச் செக்கிலிட்டாட்டினால் எண்ணெயுண்டாகும். அதுபோல், கர்மத்தை அனுஷ்டிப்பதனால் மனம் புத்தி சித்த அஹங்காரமென்னும் அந்தஃகரணத்தில், கரும்பில் ரசமும், எள்ளில் எண்ணெயும், பாலில் நெய்யும், மறைவுபட்டிருப்பதுபோல் மறைவுபட்டிருக்கும் ஞானம் ஸம்பிராப்தமாகும். ஆதலால், நீ கர்மத்தை அனுஷ்டித்துவந்தால் இதரர்களுக்கும் பிரயோஜனம் உண்டாகும்.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! இவ்வாறாகச் சொன்னீரே, எனக்கு ஏற்பட்ட கர்மத்தை நான் ஆசிரயிப்பதனால் இதரர்களுக்கு எந்தப் பிரயோஜனமாகிலும் எப்படி உண்டாகும்? எனக்கு ஏற்பட்ட கர்மத்தை நான் செய்யாவிடில் இதரர் களுக்கு பாதகங்கள் எப்படி உண்டாகும்?

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! ஜனகாதிகள் நிஷ்காம கர்மத்தினாலேயே ஞானத்தை அடைந்தார்கள். ஜனங்களுடைய பிரயோஜனத்தை உத்தேசித்தாகிலும் நீ கர்மத்

தைச் செய்ய வேண்டியவனா யிருக்கின்றாய். ஞானம் உண்டாய்விட்டது, கர்மம் செய்ய வேண்டியதில்லை என்றெண்ணினாலும் ஞானத்தில் பிரவிருத்தி யில்லாமல் கர்மத்திலேயே அதிகாரம்பெற்று அஞ்ஞானத்திலிருக்கிற ஜனங்கள் ஸத்கர்மங்களைச் செய்ய இச்சையை அடையவும், துஷ்கர்மங்களில் பிரவர்த்திக்காமலிருக்கவும் வேண்டி அதன் பொருட்டுப் பெரியவர்களாயிருப்பவர்கள் தங்களுக்குக் கர்மம் செய்து ஆகவேண்டியதொன்று மில்லாவிட்டாலும் லோக ஜனங்களுக்காக சத்கர்மங்களைச் செய்து காட்ட வேண்டும். ஏனென்றால், உலகத்தில் ஜனங்களுக்கு நன்மை செய்பவனிடத்தில் ஈசுவரனுக்குப் பிரீதியுண்டாகின்றது. ஜனகராஜனை திருஷ்டாந்தமாகச் சொன்ன உத்தேசம் என்னவென்றால், உன்னைப்போல் ராஜாவாயிருந்தது மாத்திரமேயல்ல, மஹா ஞானியாயுமிருந்த ஜனகமஹாராஜனே கர்மம் செய்திருக்க நீ கர்மம் செய்யவேண்டியதில்லையென்று எண்ணுவது பிசகேயாம்.

யத்ய தாசரதி ஸ்ரேஷ்ட ஸ்தத்ததே வேதரோஜநః
ஸ யத்ப்ரமாணம் குருதே லோக ஸ்த்தநு வர்ததே. 21.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா ! உலகத்தில் புத்திமான்களாயிருப்பவர்கள் சிலரும் புத்தி யீனர்களாயிருப்பவர்கள் பலருமாயிருக்கின்றார்கள். யுக்தா அயுக்த பரிஞ்ஞானம் புத்திமான்களுக்கு இருப்பதுபோல், அந்தப் புத்தியீனர்களுக்கு இராது. ஆதலால், இது யுக்தம், இது அயுக்தம் என்று தெரிந்துகொள்வதற்குச்சக்தியில்லாதவர்களாயிருந்து, யுக்த அயுக்த பரிஞ்ஞான முடைய விவேகிகள் எந்தக் காலத்தில் எந்த வேலையைச் செய்கின்றார்களோ அந்தந்தக் காலங்களில் அந்தந்தவேலைகளைச் செய்வதே யுக்தமென்று நினைத்தவர்களாய், தாமும் அதுபோல் நடந்துகொள்வதுமே யல்லாமல், அவர்கள் எந்தப் பிரமாணமாய் வசிக்-

கின்றார்களோ அதை அனுசரித்து மற்றவர்களும் நடந்து கொள்ளுகின்றார்கள். விவேகியானவன் ஏதேனும் பிசக்காய் வேலைசெய்தாலும் அதுவே யுக்தமென்று எண்ணினவர்களாய் அவர்களும் அதுபோல் செய்வார்கள். எப்படியென்றால், இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—பூர்வகாலத்தில் க்ரஹணஸமயத்தில் சில ஜனங்கள் சமுத்திரஸ்நானத்திற்குப் போயிருக்கும்போது, அவ்விடத்தில் சாஸ்திரவேத்தனுகிய ஒரு பிராம்மணன் ஸமுத்திரஸ்நானம் செய்ய உத்தேசித்திருந்தபோது தன் கையிலிருக்கும் செப்புப்பாத்திரத்தைக் கரையில் வைத்துச்சென்றால் அவ்வளவு ஜனங்களில் எவனாயினும் அபகரித்துக்கொள்வானென்னும் உத்தேசத்தினால் அதை எவர்களும் காணுதபடி ஓரிடத்தில் மணலில் புதைத்துவைத்து அடையாளத்திற்காக அதன்மீது லிங்காகாரமாய் மணலைக்குவித்து ஸ்நானத்திற்குச்சென்றான். மணலைலிங்காகாரமாய்க் குவித்து வைத்திருப்பதைப் பார்த்திருந்த சிலர், இவர் சாஸ்திரஞ்ஞராயிருக்கின்றார், இப்படிச் செய்வதைப்பார்த்தால் கிரஹணகாலத்தில் சமுத்திரஸ்நானம் செய்யும்போது பிரதிமனிதனும் இப்படியே மணலினால் லிங்கம் செய்வது சாஸ்திர பத்ததியாயிருக்கலாமென்றெண்ணி, அவர் ஸ்நானத்திற்குச் சென்றவுடன் இந்தலிங்கத்தின் சுற்றுப்பக்கங்களெல்லாம் அநேக லிங்கங்களைக் குவித்து வைத்தார்கள். இவ்வாறே ஒருவரைப் பார்த்து ஒருவராய் யாவரும் அதே அபிப்பிராய முடையவர்களாய் சமுத்திரக்கரையெல்லாம் லிங்காகாரமாய்ச் செய்துவைத்தார்கள். பிறகு, அந்த பிராம்மணன் ஸ்நானஞ்செய்து வந்து அந்த லிங்கங்களையெல்லாம் பார்த்து அதில் தான் செய்து வைத்த லிங்கத்தின் அடையாளம் தெரியாதவனாய் சிந்தாக் கிராந்தனாய்,

ஸ்லோ || † "கதாநுகதிகோ லோகோ ந லோகஃ பாரமார்த்திகஃ: ஸேதௌ ஸைகத லிங்கேந நஷ்டம் மே தாம்ரபாஜநம்."

இவ்வுலகத்திலுள்ள மனிதர்கள், ஒருவன் எந்தமார்க்கமாய் நடக்கின்றானோ அந்தமார்க்கத்தையே எல்லோரும் அவலம்பிக்கின்றார்களேயன்றி, பாரமார்த்திகமாய்ச் செய்பவர்களல்லர். நான் சமுத்திரதீரத்தில் மணல் லிங்கத்தைச் செய்தபடியால் என் செப்புப்பாத்திரத்தைப் போக்கடித்துக் கொண்டேன். என்று சிந்தித்தான். ஆதலால், உலகமெல்லாம் இப்படியேயென்று அறியக்கடவாய். நீ இப்பொழுது பாண்டவ சைன்னியங்களுக்கெல்லாம் சிம்மமாயிருக்கின்றாய். நீ இப்பொழுது எதைச்செய்தாலும் எல்லோரும் அதையே செய்ய ஸம்சயமில்லை. நீ யுத்தம்செய்யாமற் போய்விட்டால் உன் புஜபல பராக்கிரமங்களில் பாரம் வைத்திருக்கப்பட்ட உன் சகோதரர்கள், ஒஹோ! நமது அர்ஜுநனே சத்துரு சைன்னியங்களைப் பார்த்துப் பயந்து ஓடுகின்றானே இனி நாம் எப்படி யுத்தம் செய்வோமென்றெண்ணி அவர்களும் முதுகைப் பின்காட்டுவதற்குக் காரணமாயிருக்கும். அவர்கள் இப்படிச் செய்தவுடனே உங்களுக்கு ஸகாயார்த்தமாய் வந்திருக்கும் ராஜர்களெல்லோரும் அதுபோல் செய்வார்களல்லவா? அப்படி நடந்தேறுவதனால், உனக்கும் உன்னைச் சார்ந்தவர்களுக்கும் உண்டாகும் அவமானம் இப்படிப்பட்டதென்று இது

---

† வயது, யோக்கியதை, ஆசாரமுதலியவைகளில் பெரியவராயிருக்கப்பட்டவர்கள் எந்தக் கர்மத்தைச் செய்கின்றார்களோ, அதையே மற்றவர்களும் செய்கின்றார்கள். அந்தப் பெரியவர்களாயிருக்கப்பட்டவர்கள் எந்த சாஸ்திராதிகளைப் பிரமாணமாக எண்ணி அதன்படி செய்கின்றார்களோ, உலகமும் அதனையே அனுசரிக்கும்.

வரையில் அத்யாயம் 2, சுலோகம் 33, 34, 35, 36ல், சொல்லியிருக்கின்றேனல்லவா?

"ஸந்தஃ பரீக்ஷ்யாந்யதரத் பஜந்தே மூட: பர ப்ரத்யய நேய புத்திஃ." விவேகியானவன், இது நல்லது இது கெட்டதென்று பரிசோதித்து நடப்பான். அவிவேகியோ, ஒருவர் எப்படி சொல்லுகின்றார்களோ அதுவே சரியென்று சொல்லிக்கொண்டிருப்பதை அறியாயோ? இஃதன்றியும் அர்ஜுநா! "யதா ராஜா ததா ப்ரஜாஃ" ப்ரபு எப்படி நடக்கின்றானோ பிரஜைகளும் அப்படியே நடப்பார்களென்னும் வார்த்தையைப்போல், நீ ராஜனுகையால் கர்மத்தை ஆசிரயிக்காவிட்டால் உன் தேசஸ்தர்களாகிய பிரஜைகள், கர்மத்தை ஆசிரயிப்பார்களா? ஆசிரயிக்கமாட்டார்கள். ஆதலால், கர்மத்தை விடுவது சாஸ்திர ஸம்மதமல்ல.

நமே பார்த்தா ஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந நாநவாப்த மவாப்தவ்யம் வர்த்த ஏவச கர்மணி. 22.

ஹே பார்த்தா! மற்றொரு விஷயம் சொல்லுகின்றேன்கேள்: கர்மத்தை ஆசிரயிக்கவேண்டுமென்று உனக்கு மாத்திரம் உபதேசிக்கின்றேனென்று எண்ணவேண்டாம். நான் இந்த மூன்றுலோகங்களுக்கும் சிருஷ்டி, ஸ்திதி, லய காரணகாரண கர்த்தாவா யிருக்கின்றேன். இந்த மூன்றுலோகங்களிலும் நான் இதுவரையிலும் அடையாததைவிட இப்பொழுது நூதனமாய் அடையவேண்டியது ஒன்றுமில்லையல்லவா? அப்படியிருந்தும் நானும் மற்ற ஜனங்களைப்போல் கர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டே யிருக்கின்றேனல்லவா? என்றால், பிரதியுகத்திலும் இதரஜனங்களைப்போல் நானும் இப்பூமியில் ஜனித்து ஜநனீ ஜநக, தாரா புத்திர, பந்து மித்திராதிகளுடன்கூடி

கடித்துக்கொண்டு, அவர்களைப்போல் எல்லாக் காரியங்களையும் செய்துவருருகின்றேனல்லவா? இவ்வாராக நான் ஏன் செய்கின்னென்று தெரியுமா? அந்தக்காரணத்தைச் சொல்லுகின்றேன் கேள்:—நான் சாமான்னிய புருஷனல்லவென்றும், லோக சம்ரக்ஷணார்த்தமாய் அவதரித்த விராட் புருஷனென்றும் உனக்குத் தெரிந்திருக்கின்றதல்லவா? இப்படிப்பட்ட எனக்கு இந்த உலகத்தில் மற்ற ஜனங்களைப்போல் ஆசிரயிக்கவேண்டிய கர்மம் எனக்கேன்?

நான் இதுவரையில் அடையாத விஷயம் என்ன இருக்கின்றது? அல்லது இப்பொழுது புதிதாய் அடைய வேண்டியது என்ன இருக்கின்றது? ஒன்றுமில்லை யல்லவா? அப்படியிருந்தும் நான் உங்கள் எல்லோரைப்போலவும் கர்மத்திற்கு உட்பட்டு அதனை ஆசிரயிக்கின்றேனல்லவா? என்றால், ஜநந மரணாதிகளில்லாத நான், உங்களைப்போல் மாத்ரு கர்ப்பத்தில் ஜனித்து ஜநனீ ஜநகர்கள், தாரா புத்திரர்கள், பந்து மித்திராதிகளுடையவனாய், ஸமஸ்த கர்மங்களையும் ஆசிரயிக்கின்றேனல்லவா? அதற்குத் திருஷ்டாந்தமாய் நான் உனக்கு மைத்துனனாயிருப்பதுமே யல்லாமல் மித்திரனாயிருந்து உங்கள் பக்ஷமாய் தூதுமுதலான காரியங்களை நடத்தி இப்பொழுது இந்த யுத்தரங்கத்தில் உனக்கு ஸாரத்தியமும் செய்கின்றேனல்லவா? இப்படிப்பட்ட வேலைகளை நான் செய்யாவிடில், எனக்கென்ன குறைவு நேரிடும். இவைகளெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; நான் உங்கள்விஷயமாய் தூதுசென்றபோது கௌரவ சபையில் துர்ப்புத்தியுடை துர்யோதனன் என்னைப் படுகுழியில் தள்ளியபோது நான் அவனுக்குப் பயங்கரமாகிய என் விஸ்வரூபத்தைக் காட்டவில்லையா? அப்பொழுது நான் அவர்களை பஸ்பம் செய்யவேண்டுமானால் செய்திருக்

'கேனு? அப்படிச் செய்திருந்தால் இந்த யுத்தம் ஸம்பவித்திராதலல்வா. அப்பேர்ப்பட்ட சக்தி என்னிடத்திலிருந்தும் அப்படிச்செய்யாமல் இப்பொழுது உனக்கு சாரத்தியம் செய்து, உன்னுல் யுத்தம் செய்வித்து அவர்களைக் கொல்ல வேண்டுமென்னும் ஆவசியகம் எனக்கு என்ன இருக்கின்றது? ஏதாகிலும் கோரிக்கை ஒன்று இருந்தாலல்லவா ஒரு காரியத்தைச் செய்யவேண்டும்? எல்லாம் என்னுடையதே. ஆதலால், வேண்டும் பதார்த்தங்களெல்லாம் என்னிடத்திலேயே இருக்கின்றன. நான் ஒரு வஸ்துவை புதிதாய்ச் சம்பாதிக்க வேண்டுமென்னும் உத்தேசத்தினுல் ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்னும் அவசியம் எனக்கில்லை. ஆனுல், முக்திவிஷயமாயாகிலும் செய்ய வேண்டாமோ என்று நினைக்கின்றுயா? முக்தியென்றுல் பரப்பிரம்ம சொரூபப் பிராப்தி யல்லவா? நானே பரப்பிரம்ம சொரூபமாயிருப்பதனுல் நூதனமாய் அடையத் தக்க அவஸ்தையில்லை. நீயே பரப்பிரம்ம ஸ்வரூபனுயிருக்க கர்மத்தை ஏன் ஆசிரயிக்கவேண்டுமென்று கேட்கின்றுயோ, "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று அத்யாயம் 4-சு-8-ல், தர்மத்தைக் கிரமமாய் பிரவர்த்திக்கச் செய்வதற்காக பிரதியுகங்களிலும் அவதரித்திருக்கின்றேன். என்று சொல்லியிருக்கின்றேன். நான் அனுஷ்டிப்பதனுல் உலகத்தாரும் அனுஷ்டிப்பார்களென்று அனுக்கிரஹித்துக் கர்மத்தை அநுஷ்டிக்கின்றேன்.

† யதி ஹ்யஹம் நவர்தேயம் ஜாது கர்மண்ய தந்த்ரிதஃ
மம வர்த்மாநு வர்தந்தே மநுஷ்யாஃ பார்த்த ! ஸர்வஶஃ

† மனிதர்கள் என்னுடைய மார்க்கத்தை ஏன் அனுசரிக்கின்றுர்களென்றுல், நான் பரமபுருஷனென்று அறியாதவர்களும் அஞ்ஞானிகளுமான ஜனங்கள், உயர்ந்த குலத்தில் பிறந்தவனும்

ஓ பார்த்தா ! இப்படிச் செய்வ தெல்லாம் என் சொந்த பிரயோஜனார்த்தத்திற்கு அல்லவென்றும், லோக நடனார்த்தமே யென்றும் அறியக்கடவாய். எப்படி யென்றால் நான் துஷ்ட ஸம்மாரம்,சிஷ்டபரிபாலனம் செய்வதற்கும், ராஜர் முதலானவர்களுக்கும் யுத்தப் பிரவர்த்தனங்களைப் போதிப்பதற்குமே இவ்வுலகத்தில் யாதவகுலத்தில் அவதரித்தவனாதலால் ஸாமான்னிய ஜனங்களெல்லோரும் என்னிடத்திலேயே குறிவைத்து நான் செய்யும் கார்யங்களைக் கவனித்துக்கொண்டு நான் எப்படிச் செய்வேனோ அது போல், அவர்களும் செய்துகொண் டிருப்பார்கள். நான் ஏதேனும் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் நிறுத்தி விட்டாலும், அல்லது பிசகாய் ஏதேனும் செய்யக் கூடாத வேலையைச் செய்தாலும் அவர்களும் அப்படியே செய்வார்கள். ஆதலால், நான் எப்பொழுதும் வேலைகளை ஜாக்கிரதையுடன் செய்துக்கொண்டே யிருப்பேன்.

உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சே தஹம்
ஸங்க்ரஸ்யச கர்தாஸ்யா முப ஹந்யா மிமாஃ ப்ரஜாஃ. 24.

நான் ஜாக்கிரதையுடையவனாய் இராமல், பிசகாய் செய்யக்கூடாத வேலையைச் செய்தால் ஜனங்களும் அது போல் செய்வார்களாதலால், நான் அவர்களைத் தப்பு மார்க்கத்தில் காட்டினவனாகின்றேன், அதனால், ஜனங்களைக் கெடுத்தவனுமாகின்றேன் அஃதெப்படியென்றால் ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—

பூர்வகாலத்தில் ஓர் ஊரில் சிஷ்டாசார சம்பன்னனும் வேதோத்தமனுமாய ஒரு மஹா பண்டிதனிருந்தான்.

சக்தி, சாமர்த்தியம், கீர்த்தி முதலியவைகளினால் பெரியவனென்றெண்ணப்படுகிறவனுமான நானே கர்மம் செய்யாமலிருப்பேனேயானால், அதைப்பார்த்துக் கிருஷ்ணனே கர்மம் செய்யாததனால் நாம் ஏன் செய்யவேண்டுமென்று ஜனங்கள் கர்மத்தை விட்டுவிடுவார்கள்.

அவனைப்பார்க்கிலும் வித்வாம்சன் அவ்வூரிலும், சுற்றுப் பக்கங்களிலும் இல்லை. ஆதலால், அவனையே ஸர்வோத்கிருஷ்டமாய்ப் பாவித்து அவ்விடத்திலுள்ள பிரஜைகளெல்லோரும் அவன் எப்பொழுது எதைச்செய்தாலும் அதையே எல்லோரும் ஆசிரயித்துக்கொண்டு வந்தார்கள். இப்படியிருக்க, ஒருநாள் கிரஹணகாலத்தில் அநேக பிராம்மணர்களுடனே சமுத்திரத்திற்குச் சென்று ஸ்நானம்செய்து கரையின்மேல் எல்லோரும் வரிசையாய் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் பண்டிதனுடைய வேஷ்டியும்,பின்புறத்திலிருக்கும் கோவணமும் அவிழ்த்து கீழேவிழுந்திருந்தன. அவன் அதை அறியாமலே தமேதகநிஷ்டையுடன் ஜபம் செய்துகொண்டிருந்தான். இப்படியிருக்க, அவன் பின்புறமாய் வரிசையாய் உட்கார்ந்திருந்த பிராம்மணர்கள் அதைப் பார்த்து கிரஹணகாலத்தில் சமுத்திரஸ்நான ஜபம் செய்யும்பொழுது கோவணத்தை அவிழ்த்து ஜபம் செய்ய வேண்டிய விதியாயிருக்கலாமென்றெண்ணி எல்லோரும் அதுபோலவே ஒருவரைப்பார்த்து ஒருவர் கோவணத்தை அவிழ்த்துக்கொண்டு ஜபம் செய்துகொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்குப்பின் பண்டிதன் ஜபத்தை நிறுத்தி எழுந்திருந்து பின்புறமாய் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருப்பவர்களையெல்லாம் பார்த்தான். அவர்களுடைய கோவணங்களெல்லாம் அவிழ்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுத் தன் கோவணத்தையும் பார்க்கலானான். அப்பொழுது தன் கோவணமும் அப்படியே அவிழ்ந்திருப்பதைக் கண்டு ஓஹோ! இந்தக்காரணத்தினலேயே அவர்களும் கோவணத்தை அவிழ்த்துக்கொண்டார்களென்று தெரிந்துகொண்டவனாய் மறுபடியும் கோவணத்தைச்சரிப்படுத்திச் சொருகிக்கொண்டான். அதைப்

பார்த்து மற்றவர்களெல்லோரும் அதுபோல் செய்து கொண்டார்கள்.

† ஸக்தா: கர்மண்ய வித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத
குர்யாத் வித்வாம் ஸ்ததா ஸக்த ஸ்சிகீர்ஷுர் லோகஸங்க்ரஹம் 25.

ஆதலால், ஓ அர்ஜுனா! இந்த உலகத்திலுள்ள பாமர ஜனங்கள் ஆஸக்த சித்தர்களாய் கர்மத்தை ஆசிரயிக்கின்றார்களல்லவா? என்றால், தாரா புத்திராதிகள் போஷணார்தமாய் கஷ்டப்பட்டுத் தனத்தை ஆர்ஜித்து (சம்பாதித்து) அவர்களைப் போஷித்துக்கொண்டு, அவர்களின் மீது அதிகப் பிரீதியுடையவர்களாய் நடந்துகொண்டு பந்து மித்திராதிகளுடன் அதிக சிநேகமுடையவர்களாகி அவரவர்களை அந்தந்த விதமாய் ஆதரித்துக்கொண்டு, அதிதி அப்பியாகதிகளை ஆதரிப்பதனால் தமக்குப் புண்ணியமுண்டாகுமென்னும் எண்ணத்தினால் அவர்களை ஆதரித்துக்கொண்டும் இப்படியே மற்ற எல்லாக்காரியங்களிலும் ஆசையுடையவர்களாய் கர்மத்தைக் செய்கின்றார்கள். ஞானியோ "ருணநுபந்தரூபேண பஸுபத்நி ஸுதாலய:" என்பதுபோல, தாரா புத்திராதிகளெல்லாம் ருணநுபந்தத்தினால் உண்டானவர்களேயொழிய, அவர்களுக்கும் தனக்கும் யாதொரு ஸம்பந்தமில்லையென்றும், இவைகளெல்லாம் க்ஷணபங்கமேயொழிய சாஸ்வதமல்லவென்றும் நன்றாய் அறிவான். அதனால் அவனுக்கு யாதொன்றிலும் பற்றுதல்

---

† ஆத்மாவலோகன ஸக்தனானவனுக்குக் கர்மம் செய்வதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை ஆதலால், அவன் கர்மம் செய்கிறதில்லை. அஞ்ஞானியானவனுக்கு ஆத்மாவலோகன முண்டாகவுமில்லை; கர்மம்செய்து ஞானம் அடையவுமில்லை; இரண்டும் கெட்டவனாகின்றான். ஆதலால், மனிதர்கள் ஞானமடைய கர்மத்தை கிரமமாய்ச்செய்து வருவதற்காக ஞானிகள், செய்தும் செய்வித்தும் காட்டவேண்டும்.

உண்டாகமாட்டா. அப்படியிருந்தபோதிலும் தாரா புத்திராதிகளுக்காக நாம் ஏன் கஷ்டப்படவேண்டும். இந்த வீடு பூமி முதலானவைகளினால் நமக்கென்ன பிரயோஜனமென்று விட்டுவிடாமல் எல்லாவற்றிலும் தமக்கு பிரயோஜனமுண்டென்று எண்ணி ஆசையுடையவர்களாய்க் கர்மத்தைச் செய்யப்பட்ட பாமரர்களைப்போல் பற்றுதலில்லாமல், தானும் கர்மத்தைச் செய்யவேண்டும். ஏனென்றால், ஞானியானவன் இப்படிச் செய்யாவிட்டால் பாமரஜனங்கள் அவனைப்பார்த்துத் தாமும் தாரா புத்திராதிகளிடத்தில் அநாதரண புத்தியுடன் பிரவர்த்திப்பார்கள் (நடப்பார்கள்.) ப்ரதி மனிதனும் அப்படிச்செய்தால் பிரபஞ்ச நடனம் நடப்பது கஷ்டஸாத்தியமாகும். ஆதலால், ஞானியும் உலகத்தாரைப்போல் நடித்துக்கொண்டு கர்மத்தைச் செய்யவேண்டும்.

* நபுத்திபேதம் ஜநயே தஞ்ஞாநாம் கர்ம ஸங்கிநாம்
ஜோஷயேத் ஸர்வ கர்மாணி வித்வாந் யுக்த ஸ்ஸமாசரந். 26.

ஏனென்றால், இந்த உலகத்தில் அஞ்ஞானிகளாகிய மனிதர்கள் ஆசையுடையவர்களாய் கர்மத்தைச் செய்கின்றார்களல்லவா? அப்படி அவர்கள் அனுஷ்டிக்கும் கர்மத்தில் அவர்களுக்கு உண்டாயிருக்கும் ஆசையைவிட்டுப் போகும்படி ஞானியானவன் செய்யக்கூடாது. பின் எப்படிச் செய்யவேண்டுமென்றால், தானும் அந்தப் பாமரர்களைப்போல் விசேஷ ஆசையுடையவனாய் அபிநயித்துக் கொண்டு கர்மத்தை ஆசிரயித்துக்கொண்டு அதன்மூலமாய்

---

* இந்தக்கர்மத்தை அனுஷ்டிப்பதனால் இந்தப் பலன் உண்டாகுமென்னும் ஆசையுடன் கர்மத்தைச் செய்யப்பட்ட அவிவேகியினுடைய புத்தியை, மற்ற எந்த உபதேசங்களினாலும் கெடுக்கலாகாது. பிரம்ம ஞானியானவன் தானும் கர்மத்தை அநுஷ்டித்து இதரர்களையும் அநுஷ்டிக்கச்செய்ய பிரேரபனைச் செய்யவேண்டும்.

அந்தப் பாமரர்களுக்கு அதுவரையில் உண்டாயிருந்த ஆசையை இன்னும் கொஞ்சம் அதிகரிக்கச்செய்து முன்னை விட அதிக சிரத்தையுடன் கர்மம் செய்வதற்குப் பிரயத்நம் செய்விக்கவேண்டும்.

அர்ஜுநன்:—நீர் இப்படிச்சொல்லுகின்றீரே, இதனால் உமது அபிப்பிராயமென்ன? ஞானியானவன் பாமர ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் அஞ்ஞானத்தைப் போக்கடித்து ஸுஜ்ஞானத்தை உண்டாக்குவதற்குப் பதிலாய் அவர்களுக்கு அதுவரையில் உண்டாயிருக்கும் அஞ்ஞானத்தை இன்னும் அதிகமாய் விருத்தியடைவதற்காக அப்படிச் செய்விக்கவேண்டுமென்பது உமது அபிப்பிராயம்?

கிருஷ்ணன்:—ஓஹோ! அதுவல்ல எனது அபிப்பிராயம். உலகத்தில் எல்லோரும் அஞ்ஞானிகளாகவே யிருக்கின்றார்கள். ஞானிகளோ மிகவும் அரிதா யிருக்கின்றார்கள். அந்த ஞானிக்குக் கர்மயோகத்தினால் கிரமக் கிரமமாய் ஞானம் உயர்ந்து அந்த ஞானம் பழுத்தபிறகு கர்மத்தை விட்டுவிடுவது சரியான மார்க்கமாயிருக்கும். ஆதலால், ஞானியானவன் கர்மத்தை ஆசிரயிக்கவேண்டும். அப்படி ஆசிரயிக்காவிட்டால், பாமரர்களும் ஞானியைப்போல் கர்மத்தை ஆசிரயிக்காமல் விட்டுவிடுவார்கள். இதனால் உபய பிரஷ்டர்க ளாகின்றார்கள். இதற்கொரு திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள். இப்பொழுது கௌரவ சைன்னியத்திலிருக்கப்பட்ட பீஷ்ம த்ரோணர்கள் உனக்கு வேண்டியவர்களா? அல்லது விரோதிகளா?

அர்ஜுநன்:—எனக்கு வேண்டியவர்களே யல்லாமல், பாட்டன்மாராயும் குருக்களாயும் இருக்கின்றார்கள்.

கிருஷ்ணன்:—இப்பொழுது அவர்கள் எந்த சைன்னியத்தில் சேர்ந்திருக்கின்றார்கள்? என்னவேலையைச்செய்யநினைத்திருக்கின்றார்கள்.

அர்ஜுநன்:—கௌரவ சைன்னியங்களில் சேர்ந்து எங்களுடன் யுத்தத்திற்கு வந்திருக்கின்றார்கள்.

கிருஷ்ணன்:—ஏதேன்! உங்களிடத்தில் அவர்களுக்கு த்வேஷமில்லாவிடில் இப்படி ஏன் செய்ய முயன்றார்கள்?

அர்ஜுநன்:—ஆதியிலிருந்து துர்யோதனனால் போஷிக்கப் பட்டவர்களாதலால், இப்பொழுது அவர்களின் இஷ்டத்திற்கு விரோதம் வாராதபடி யெண்ணி எங்களுடன் யுத்தத்திற்கு வரவேண்டியதாய் நேரிட்டது.

கிருஷ்ணன்:—ஏதேன் அப்படிச் செய்யவேண்டும்? ஒரு வேளை அவர்களால் இவர்கள் போஷிக்கப்பட்டவர்களா யிருந்தபோதிலும் இப்பொழுது அவர்கள் அக்கிரமத்திற்கு பிரயத்நப்பட்டிருப்பதனால் அவர்களைவிட்டு நியாயஸ்தர்களா யிருக்கப்பட்ட உங்களுடன் ஏன் சேரலாகாது?

அர்ஜுநன்:—ஐயையோ! அதெப்படிச்செய்யலாம்! அந்த சைன்னியங்களுக்கெல்லாம் ஆதார பூதர்களாயும், ஸர்வஞ்ஞர்களுமாயு மிருக்கப்பட்ட இவர்களே இப்படிச் செய்தால், இனி எந்த ராஜர்களும், யாரையாயினும் எப்படி நம்புவார்கள்?

கிருஷ்ணன்:—ஆனால், இப்போது பீஷ்மத் துரோணாதிகள் அப்படிச்செய்வதனால், உலகத்திலுள்ள ராஜர்களெல்லாம் தம்தம் சேனா நாயகர்கள் முதலானவர்களை நம்புவதற்கு இடமில்லாமல் போகுமென்றும், அதனால் ராஜகார்யங்கள் சரியாய் நிறைவேறாமல் போகுமென்றும், அப்படி நிறைவேறாமல் போவதனால் உலகமெல்லாம் கெட்டுவிடுமென்றும், அப்படி கெட்டுவிடுவதற்குத் தாமே காரணபூதர்களா யிருப்பார்களென்றும், எண்ணியல்லவா, துர்ப்புத்தியுடைய துரியோதனனிடத்தில் அநிஷ்டர்களா யிருந்தபோதிலும், அவன் கார்யங்களில் சிரத்தை யுடையவர்களாய் நடித்துக்கொண்டு, அவர்களுக்கு மிகவும்

பிரியனுயிருந்து உன்னிடத்தில் யுத்தத்திற்கு பிரயத்தினப் பட்டிருக்கின்றார்கள்.

அர்ஜுநன்:—ஆம்! ஆம்! அதுவே வாஸ்தவம்.

கிருஷ்ணன்:—உலக வியாபாரமென்றால், இப்படிப் பட்டதேயென்றும் ஞானியானவன், தனக்கிச்சையில்லாத கர்மத்தை பீஷ்மாதிகளைப்போல் பிரியமில்லாமல் அபிநயித்துக் கர்மத்தைச் செய்துகொண் டிருக்கவேண்டுமென்றும், தெரிந்து கொள்ளவும். ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" சங்கல்பத்தால் உண்டான ,சரீரவிருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மா நிவசிப்பது என்பதில் "ராகத்வேஷ பயாதீன மநுரூபம் சரந்நபி யோந்தர் வ்யோம வதத்யஸ்ச்ச ஜீவன் முக்த உச்யதே" என்பதைப்பார்க்க.)

அர்ஜுநன்:—ஐயா ! இப்பொழுது நீர் சொல்லியவைகளெல்லாம் வாஸ்தவமே. இதை யோசித்துப் பார்க்குமளவில் ஞானியும், அஞ்ஞானியைப்போல் கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டியது விதியா யிருக்கின்றது போல் காணப்படுகின்றது.

ப்ருக்ருதேஃ க்ரியமாணாநி குணைஃ கர்மாணி ஸர்வஶஃ
அஹங்கார விமூடாத்மா கர்தாஹ மிதி மந்யதேஃ. 27.

தத்வவித்து மஹாபாஹோ ! குணகர்ம விபாகயோஃ
குணாகுணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே. 28.

* ப்ரக்ருதேர்குண ஸம்மூடா ஸ்ஸஜ்ஜந்தே குணகர்மஸு
தாநக்ருஸ்ந விதோமந்தாந் க்ருஸ்நவிந்ந விசாலயேத். 29.

---

* மாயையினுடைய குணங்களினாலே மூடர்களாயிருக்கும் எவர்கள், இந்திரியங்களுடைய வியாபாரங்களில் அபிமானம்வைத்திருக்கிறார்களோ, ஒன்றுந் தெரியாத அறிவீனர்களாகிய அவர்களை, ஆத்மஞானியானவன் கர்மத்தைவிட்டு ஞானமார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி அவர்களுக்குப் போதிக்கக்கூடாது. எனென்றால், மூடர்களும் அவிவேகிகளுமா யிருக்கப்பட்ட அவர்களுக்கு

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் உண்டாயிருக்கும் பேதங்களைச் சொல்லுகினறேன் கேள். உலகத்தில் ப்ரதி புருஷனும் செய்யவேண்டிய வியவஹாரங்கள் அவனவன் சுபாவ குணங்களாகிய ஸத்வ ரஜஸ் தமோகுணங்களினால் பிரேபிக்கப்பட்டுச் செய்கின்றனென்று இதுவரையில் அத்யாயம 3-சுலோகம் 5-ல் சொல்லியிருக்கின்றேன். அப்படிப்பட்ட குணங்களினால் செய்துகொண்டிருக்கும் கார்யங்களை அஞ்ஞானிகள் மாயையினால் உண்டான இந்திரியங்களினால் செய்யப்படும் கர்மங்களைத் தம்முடையதாகப் பாவித்து நாம் செய்கின்றோமென்று அவித்தியா பரவசனாய் பிரமையை அடைகின்றார்கள். ஞானி என்றாலோ பிரகிருதி குணங்களினால் செய்யப்படும் கார்யங்களினுடைய தத்துவங்களை அறிந்தவனாதலால் அந்தந்தக் குணங்கள் அந்தந்தக் குணங்களில் பிரவர்த்திக்கின்றதேயொழிய தனக்கொன்றும் சம்பந்தமில்லையென்று எண்ணி அந்த வேலைகளில் ஆசையில்லாதவனா யிருக்கின்றான். ஆதலால், பிரகிருதி குணங்கள்இப்படிப்பட்டதென்று பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ளாமல் அதன்குணங்களால் செய்யப்படும் கர்மங்களைத் தானே செய்கின்றேனென்று எண்ணும் அஞ்ஞானியினுடைய நம்பகத்தை ஸர்வஜ்ஞனான ஞானி கெடுக்கலாகாது.

ஞானமார்க்கம் சித்திக்கவே மாட்டா. இந்த, ஞானியானவன் கர்மத்தினால் பிரயோஜனமில்லையென்று சொன்ன வார்த்தையை ஆதாரமாய்க்கொண்டு, மூடன் கர்மத்தைமட்டும் விட்டுவிடுவான். அதனால் கர்மபலனுண்டாக எதுவுமில்லை; ஞானசித்திக்கு யோக்கியனுமன்று; இரண்டிலும் கெட்டவனாவானன். ஆகையால் ஞானியானவன், கர்மமானது ஆத்மதரிசனத்திற்குச் சாதனமானதென்றும், அதைவிட்டால் உனக்கு வேறே பிரயோஜனங்கிடைக்க மாட்டாதென்றும் சொல்லி, தான் கர்மத்தைச்செய்தும், செய்வித்தும் காட்டவேண்டும்.

அர்ஜுனன்:—ஞானியானவன் அஞ்ஞானியினுடைய ஸம்பகத்தைப் போக்கினலல்லவோ அவன் அறிவை அறிந்து நல்லமார்க்கத்தில் பிரவேசிப்பான், அப்படி செய்யக்கூடாதென்று சொல்லுவதேன்.

கிருஷ்ணன்:—ஒன்றும் அறியாத மூர்க்கனுக்கு அப்படிப்பட்ட ஸம்பகத்தைப்போக்கடித்தால் அதனல் அவனுக்கு உண்டாயிருக்கும் துர்க்குணங்கல் இன்னும் கொஞ்சம் அதிகரிக்குமேயொழிய குறைவுபடமாட்டாது. அஃதெப்படி யென்றால் அஞ்ஞானியாகிய ஒருவன் சுகிருதத்தை யாகிலும் அல்லது துஷ்கிருத்பத்தையாகிலும் செய்து கொண்டிருக்கும்போது, ஞானியாகிய மற்றொருவன் பார்த்து, ஐயா நீர் செய்யும் உம்முடைய காரியம் உம்மிடத்திலுள்ள சுபாவ குணங்கள் செய்கின்றதேயொழிய, இதற்கு நீ கர்த்தனல்லவென்றுசொன்னல் அவன் மூர்க்கனாயிருப்பதாலும் தான் செய்துகொண்டிருப்பது சுகிருதமா யிருப்பினும் இதில் நமக்கு கர்த்துருத்வம் இல்லாவிடில் இதனல் பிரயோஜனமில்லை யல்லவா? இப்படி பிரயோஜன மில்லாதகாரியங்களை நாம் என் செய்யவேண்டுமென்று விட்டு விடுவான். இல்லாவிடில் அவன் செய்து கொண்டிருப்பது துஷ்கிருதமா யிருந்தாலும் ஓஹோ! இதில் நமக்கு கர்த்துருத்வமில்லை ; ஆதலால், இதனல் நமக்கு எப்படிப்பட்ட பாபங்களும் அணுகமாட்டாது. நாம் இப்படிப்பட்ட காரியங்கள் எவ்வளவு செய்தபோதிலும் செய்யலாம் என்றெண்ணி தான் அதுவரையில்செய்துவந்த துஷ்கிருத்தியங்களைவிட அதிகமாகிய துஷ்கிருத்தியங்களையே செய்துகொண்டிருப்பான். அப்படிஅஞ்ஞானி, தான்செய்யும் காரியங்களுக்குத்தானே கர்த்தனென்று எண்ணியிருந்தவனை ஞானியானவன் பார்த்து, ஐயா நீ இக்தக் காரியங்களைச் செய்கின்றாயல்லவா? இதன் பலா

பலன் நீயே யனுபவிக்க வேண்டியதாய் நேரிடும் என்று சொன்னால், அப்பொழுது அந்த அஞ்ஞானி, ஒஹோ! ஆம் வாஸ்தவமே, இதற்கு நானே கர்த்தனாகின்றேன்; இதன் பலத்தை நானே அனுபவிக்க வேண்டியதா யிருக்கின்றது என்று எண்ணினவனாய் துஷ்கிருத்தியங்களைவிட்டு, சுகிருதமாய் இருக்கப்பட்ட விஷயங்களைச்செய்துவந்தால்,அதனால் தனக்குச்சுகமுண்டாகுமென்று தெரிந்துகொண்டவனாய் மறுபடியும் சுகிருதவிஷயங்களைச் செய்து கொண்டுவருவான். அல்லது சுகிருதகாரியங்களைச் செய்து வரப்பட்டவனை அப்பா நீ செய்யும் காரியங்கள் சுகிருதமான காரியங்கள். இதனால், உனக்கு நன்மையுண்டாகுமென்று சொன்னால் அப்படிப்பட்ட காரியங்களையே இன்னும் அதிகமாய் விருத்திசெய்து வருவான். ஆதலால், ஞானியானவன் அஞ்ஞானி தான்செய்துவரும் காரியங்களுக்குத்தானே கர்த்தனென்னும் நம்பிக்கையைப் போக்கடிப்பான். அஃதெப்படி என்றால்:—

“தூலி தூமாம்புதைர்யத்வ ந்மலிநம் க்ரியதே நப:
பராம்ருஷ்டந் ததைவாத்மா ஸ்ஞத்த: ப்ராக்ருதைர் குணை:.”

நிர்மலமுடைய ஆகாசம் தூளியினாலும் புகையினாலும், மேகங்களினாலும் எப்படி மலினம் அடைகின்றதோ, அதுபோல் அஞ்ஞானி, பரிசுத்தமாகிய ஆத்ம பிரகிருதி (மாயா) சம்பந்தமான குணங்களினால் மூடப்பட்டு, கர்த்திருத்வாதி (செய்யப்பட்ட காரியங்களை) எல்லாம் தன்னுடையவைகளே என்று பிரமை அடைகின்றான். பிரம்ம ஞானத்தை அடைவதற்குச் சித்த சுத்தி இல்லாததனால், ஆத்மஞ்ஞானம் அவர்களுக்கு உண்டாகமாட்டாது. கர்மம் செய்யக்கூடாதென்று சொன்னாலோ செய்துகொண்டிருப்பதையும் விட்டுவிடுவார்கள். அதனால் உபய பிரஷ்டர்களாகின்றார்கள். (“ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்

யம்'' "ஜகத்சிருஷ்டி மனோ சிருஷ்டிலயம்'' என்பதில், பிரம்மஞானம் அடைவதற்காக முதல்பிரயத்தினம் யாதெனில் என்பதைப் பார்க்க.)

அர்ஜுனன்:—ஓ சுவாமி! இப்பொழுது நீர் சொல்லியவைகளை யெல்லாம் யோசிக்குமளவில் எனக்கு ராஜ்ஜியாபிலாகைஷ இல்லாவிடினும் உலகத்தாருக்காயினும் யுத்தம் செய்ய வேண்டியதாய்க் காணப்படுகின்றது. பந்து மித்திர ஜனவதை கோர கிருத்தியமா யிருக்கின்றது. அதை நான் எப்படிச்செய்வேன்! என்மனது மிகவும் பரிதபிக்கின்றது. இதற்கு நான் என்னசெய்வேன், கிருஷ்ணா?

மயி ஸர்வாணி கர்மாணி ஸந்யஸ்யாத்யாத்ம சேதஸா
நிராசீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வரஃ. 30.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! அதற்கோர் உபாயம் சொல்லுகின்றேன் கேள்! நீ யுத்தம் செய்யும்பொழுது ராஜ்ஜியத்திற்காகச் செய்கின்றே னென்னும் எண்ணம் வைக்காமல், பகவதாஞ்ஞை இவ்விதமா யிருக்கிறதல்லவா நான் பகவந் நியமாநுசாரமாய் நடத்த வேண்டியவனாய் இருக்கின்றேனென்று நிச்சயித்து சர்வாத்மகனும் சர்வஞ்ஞனும் பரமேஸ்வரனும் வாஸுதேவனுமாகிய என்னிடத்தில் ஸகலகர்மபலத்தையும் அர்ப்பணை செய்து, எஜமான் ஏற்படுத்திய வேலைகளை அடிமை, மறுவார்த்தை யாடாமல் செய்யும் ரீதியாய், வேதங்களில் பகவான் ஏற்படுத்திய கர்மங்களை விடாமல் செய்யவேண்டுமென்னும் பிடிவாதத்துடன் இருந்து ஜயத்தை அடைய வேண்டு மென்னும் அபேகைஷயையும், இந்த உபய சைன்யங்களிலு முள்ளவர்கள் நமது பந்து மித்திரர்களென்னும் மமகாரத்தை அடையாமல், அபிமானத்தினால் உண்டாகும் இல்லாத வியசனத்தை விட்டு நீ யுத்தம் செய் அப்படி செய்தாயாகில்

உனக்கு இப்போது உண்டாயிருக்கும் துக்கம் நிவாரணை யாய் மனச் சந்தேஹம் உன்னை விட்டொழியும்.

யேமே மத மிதம் நித்ய மநுதிஷ்டந்தி மாநவாஃ
ஶ்ரத்தாவந்தோ நஸூயந்தோ முச்யந்தே தேபி கர்மபிஃ. 31.

யேத்வேத தப்யஸூயந்தோ நாநுதிஷ்டந்தி மே மதம்
ஸர்வஜ்ஞாநவிமூடாம் ஸ்தாந் வித்தி நஷ்டா நசேதஸஃ. 32.

அர்ஜுநா! நான் இதுவரையில் சொன்னவைகளெல்லாம் என்றால், அ-3, சு-1-முதல் 30 வரையில் சொல்லப்பட்டவைகளெல்லாம் கர்மயோகமென்று சொல்லப்படும். இந்த யோகத்தை அநுஷ்டிப்பதே உத்தமமென்பது என் அபிப்பிராயம். ஆதலால், இந்த யோகத்தை யாராயினும் சிரத்தையுடன் என்றால், பொன் செய்யப்பட்ட ரஸவாதிகள் எத்தனை தடவை கெட்டபோதிலும் சிரமையடையாமல் மறுபடியும் சிரத்தையுடன் அதையே எப்படி அநுஷ்டிக்கின்றார்களோ அதுபோலவும் "தைல தாராமிவாச்சிந்ந தீர்க்ககண்டா நிநாதவத் உபாஸ்யம் ப்ரண வஸ்யாக்ரம் யஸ்தம் வேத ஸ வேதவித்." என்னும் தியாந பிந்தூபநிஷத் ரீதியாய், இதன் அந்தரார்த்தம் ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்." "ஜகத் சிருஷ்டி மனோ சிருஷ்டி' என்பதில் மேல் சொல்லிய சுலோகம் யிருப்பதைப்பார்த்து அதுபோல் ஸதாகாலமும் இடைவிடாமல் அப்பியசித்துக் கொண்டுவந்தால் இவ்வப்பியாச முதிர்ச்சியினால், புஷ்பத்துடன் கூடிய நாரும் எப்படி பரிமளத்தை அடைகின்றதோ அதுபோல், முன்சொல்லிய நிஷ்காம கர்மாநுஷ்டானத்தினால் கர்மபலன்களாகிய புண்ணிய பாபங்கள் ஒழிந்து நிஷ்களங்கனாகின்றான். சத்கர்மங்களையே செய்துகொண்டு வரவர கிரமக்கிரமமாய் ஞானம் விருத்தியாகும்.

"உபே வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்ய முபைதி" என்னும் சுருதிரீதியாய் எப்படி பிரம்மஞானி புண்யபாபங்களை விட்டுப் பரிசுத்தனாய் பிரம்ம சொரூபனாகின்றானோ அதுபோல், பலாபேக்ஷையில்லாமல் கர்மத்தை அனுஷ்டிக்கும் புருஷனும், சித்தசுத்தி அடைகின்றான். அந்தசித்த சுத்தியினால் பராபரவஸ்துவாகிய பிரம்ம சொரூபனாகின்றான். ஆதலால், ஓ அர்ஜுநா ! நீ சகல கர்மங்களையும் என்னிடத்தில் ஒப்பித்து (கர்மங்களின் பலன்களை எனக்கு அர்ப்பணம்செய்து) நான் பரமாத்மாவினுடைய ஏவற்காரனாக சகல கர்மங்களையும் செய்து பரமாத்மாவுக்கு அர்ப்பணம் செய்யவேண்டியவனென்னும் எண்ணத்துடன் பலாபேக்ஷையையும் மமதையையும் விசனத்தையும் விட்டு யுத்தம் செய்.

இஃதன்றியும், எந்த மனிதர்கள் என்னுடைய வாக்கியத்தில் விசுவாஸம் வைத்தும், என்னை துவேஷிக்காமலும் என்னுடைய அபிப்பிராயத்தை அனுசரித்து யார் நடக்கின்றார்களோ அவர்கள், பாபபுண்ணிய கர்மங்களினால் அநாதியாய் வந்து கொண்டிருக்கிற சகல கர்மங்களிலிருந்தும் விடுபடுகின்றார்கள். இது, இதற்கு முந்திய சுலோகத்தில் சொல்லிய அபிப்பிராயமே. அதாவது, கர்மங்களை ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்து பலனை ஈஸ்வரனுக்கு ஒப்பித்துவிட்டு தான் பலனைக்கோராமலும், அபிமானமில்லாமலும் இருக்கவேண்டும்.

அர்ஜுநன்:—சுவாமி ! கர்மயோகத்தைக் குறித்து நீர் இவ்வளவு பிடிவாதமாய்ச் சொல்வதற்குக் காரணமென்ன ? கர்மத்தை அனுஷ்டிக்காதவன் இஹபரங்களிரண்டிற்கும் எப்படி கெடுதலையடைவான்.

ஸத்ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யாஃ ப்ரக்ருதேர் ஜ்ஞாநவாநபி
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹஃ கிங்கரிஷ்யதி. 33.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! "ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி" இந்த உலகத்தில் பிரதிஜந்துக்களும் அதனதன் சுபாவ குணங்களாகிய காரியங்களைச் செய்துகொண்டிருக்குமேயன்றி அதற்கு வியதிரிக்தமாகிய வேலைகளைச் செய்ய மாட்டா. எப்படியெனில், பசுக்கள் புல்லை மேயுமேயொழிய மாம்ஸத்தை பக்ஷிக்கமாட்டா; புலிகள் மாம்ஸத்தைப் பக்ஷிக்குமேயொழிய புல்லை மேயமாட்டா; தும்பி (வண்டு)கள் புஷ்பங்களிலுள்ள மதுரமாகிய தேனை கிரஹிக்குமேயொழிய மற்றப் பதார்த்தங்களை கிரஹிக்க மாட்டா. வானம்பாடி ஓர் விசித்திரமான கூண்டு கட்டுவதைப் பார்த்திருக்கின்றாயல்லவா? மற்றொரு பக்ஷி அதுபோல் கட்டமாட்டாது. அல்லது மற்றொரு பக்ஷி கட்டுவதுபோல் வானம்பாடி கட்டுமா? கட்டாது. இப்படிப்பட்ட வேலைகளெல்லாம் எதனால் உண்டாகின்றன?

அர்ஜுனன்:—ஜந்துக்களுக்கு உண்டாயிருக்கும் சுபாவ குணங்களினாலேயே நடக்கின்றன.

கிருஷ்ணன்:—"நிக்ரஹஃ கிங்கரிஷ்யதி" என்றிருக்கிறபடியால் அப்படிப்பட்ட சுபாவ குணங்களை மாற்ற முடியுமோ? அதை யோசிக்கலாம். ஒருபசு கன்றைப்போட்டதும் பால்குடித்துப் பிறகு புல் மேயுங்காலத்தில் அதைக் கட்டிவைத்து வைக்கோல் எவ்வளவேனும் காட்டாமல் அதற்குப் பதிலாய் அதன் எதிரில் மாம்ஸ கண்டங்களைப் போட்டுக் கொண்டுவந்தால் அது அதனைப் பக்ஷிக்குமா?

அர்ஜுனன்:—அப்படி பக்ஷிக்காதென்று தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—நல்லது, ஆரண்யத்தில் ஒருபுலி, குட்டி போட்டவுடன் அதைக் கொண்டுவந்த ஒரு கூண்டில் அடைத்து, அதற்குச் சிலகாலம் பால்வார்த்து வளர்த்து ஆஹாரம் தின்னத்தக்க வயது வந்தவுடன் அதற்குப்

புல்லைப் போட்டுக் கொண்டுவந்தால் அதைத் தின்னப் பழகி, தன் ஜாதி ஆஹாரமாகிய மாம்ஸ பக்ஷணத்தை விட்டுவிடுமா ?

அர்ஜுனன்:—ஒருபோதும் விடாது. அகப்பட்டால் மாமிசத்தையே தின்னும். அகப்படாவிட்டால் பசியினால் வதையுமேயொழிய, புல்லை எவ்வளவேனும் தின்னப் பழகாது.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! மிருகங்களே அவ் வவைகளின் சுபாவ குணங்களுக்கு விருத்தமான வேலைகளைச் செய்யக்கூடாமலிருக்க மனுஷ்யர்கள் அவரவர்களின் சுபாவகுண ஜன்யங்களாகிய, சாத்விக ராஜச தாமச குணங்களை அனுசரித்துச் செய்துவரும் வேலையை நிவர்த்தி செய்வதற்கு யாருக்காயினும் சாத்தியப் படுமென்று எண்ணுகின்றாயா ?

அர்ஜுனன்:—அப்படி சாத்தியமாகுமென்று தோன்றவில்லை.

கிருஷ்ணன்:—ஆதலால், யுக்தா அயுக்த பரிஞ்ஞானமில்லாதவன், தன் சுபாவத்திற்கு அனுகுண்யமான சேஷ்டைகளைச் செய்துகொண்டிருப்பானேயொழிய எப்பொழுதும் சும்மாவிரான். (அ - 3, சு - 5. பார்க்க,) சுபாவ குணங்களுக்கு விருத்தமான வேலைகளைச் செய்யப்பட்ட ஒருவன் மற்றவனைப்போல் செய்யமாட்டான். எப்படியென்றால். பரமலுப்தனாயிருக்கப்பட்டவனுக்கு எவர்கள் எத்தனை போதித்தபோதிலும் தாத்திருத்வமுண்டாகுமா? அல்லது, தாதாவாயிருக்கப்பட்ட ஒருவனுக்கு எத்தனை பெயர்கள் துர்ப்போதனைகளைச் செய்தபோதிலும் அவனுக்கு லோபத்துவகுணங்கள் உண்டாகுமா? மற்ற எல்லா விஷயங்களிலும் இப்படியே ஊஹிக்கவேண்டியதாயிருக்கின்றது. ஆதலால், பிரதிபுருஷனும் அவனவன் சுபாவ

குணங்களுக்கேற்றபடி சுகர்மங்களை பலாபேக்ஷையில்லாமல் கிரமக்கிரமமாய்ச் செய்துகொண்டுவந்தால் ஞானம் உயர்ந்து பழுத்து அதன்மூலமாய் மோக்ஷத்திற்கு அருஹனாகின்றான். அப்படி அனுஷ்டிக்காவிடில் அவனுக்கு ஞானோதயமாகமாட்டா.

அவன் இஹத்திலும் பரத்திலும் கெட்டவனாய் உபயப்ரஷ்டனாகின்றான்.

அர்ஜுனன்:—ஓ ஸ்வாமி! ஞானியும் பாமரனைப்போல் தன் சுபாவகுணங்களை அனுஷ்டித்துவந்தால், அவனுக்கும் பாமரனுக்கும் உண்டாயிருக்கும் பேதமென்ன? அவனும் பாமரனைப்போல் கர்மபலனால் பற்றப்படுகின்றானல்லவா? அப்படியிருக்க, அவன் எப்படி மோக்ஷத்திற்கு அருஹனாகின்றான்?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! ஆத்மஞ்ஞானியும் சொந்தமான கர்மசேஷத்திற்கு அனுகூலமாகவே பிரகிருதி விஷயங்களில் பிரவர்த்திக்கின்றான். பிராணிகள் கர்மசேஷத்தை அடைகின்றார்கள். அதாவது பூர்வஜன்மத்தில் ஒருவன் தான்செய்த புண்ணிய கருமக்களுக்காக சொர்க்காதி லோகங்களில் சுகபலனையும், பாபங்களுக்காக நரகாதி லோகங்களில் துக்கபலனையும், அடைகின்றான். அப்படி சொர்க்க நரகாதிலோகங்களை அடைந்தவன், அந்தந்த லோகங்களில் சுகதுக்கங்களை அனுபவித்து மிச்சமாயுள்ள புண்ணியபாபங்களுக்குத் தகுந்தபடி அந்தந்த மனுஷ்யலோகத்திலாவது அல்லது, அதைவிட உயர்ந்த லோகத்திலாவது ஜன்மத்தை அடைகின்றான். அந்த மிச்சந்தான் கர்மசேஷ சம்ஸ்காரமென்று சொல்லப்படுகின்றது. அந்த சேஷமென்பது எப்படிப்பட்டதென்றால், கஸ்தூரி புனுகு முதலிய வாஸனையுள்ள வஸ்துக்கள் வைக்கப்பட்டிருந்த பானையில் வஸ்துமுழுதும் சிலவழிந்துவிட்டாலும் அதிலி

ருந்த வாசனை மட்டும் எப்படிப் போகாமலிருக்குமோ, அதுபோலவும், எண்ணை வைத்திருந்த பாத்திரத்தில் அது செலவானபிறகு எண்ணை சிலும்புபற்றுதல் எப்படியிருக்குமோ அதுபோலவும் புண்ணியபாப கர்மபலனை அனுபவித்தப்பின்னும், அந்தக் கர்மங்களின் வாசனை அவனைத் தொடர்ந்தே, அதற்குத்தக்கபடி ஜன்மங்களையும் பிரவர்த்தியையும் உண்டாக்குகின்றது. ("ஜீவப் பிரமைக்ய வேதாந்தரஹஸ்யம்," மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல் ஸஞ்சித பிராரப்த ஆகாம்ய கருமங்கள் என்பதைப்பார்க்க.) கர்மத்தை அனுஷ்டிப்பதில் ஞானிக்கும் பாமரனுக்கும் பேதம் தோன்றாது. அப்படி அனுஷ்டிப்பதனால் அவர்களுக்கு உண்டாயிருக்கும் உத்தேசங்களில் பேதமுண்டு. அந்த உத்தேசத்தினால் ஒருவன் மோக்ஷமடைகின்றான். அதனை விவரித்துச் சொல்லுகின்றேன். கேள்.

இந்த்ரியஸ்யேந்த்ரி யஸ்யார்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ
தயோர்ந வஶமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ. 34.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா ! பிரதி மனுஷ்யனுக்கும், பிரதி இந்திரியவிஷயங்களிலும் ராகத்துவேஷங்கள் உண்டல்லவா ? அது எப்படியென்றால், ஒருபோது இஷ்டமும், மற்றொருபோது அயிஷ்டமும் உண்டாயிருக்கும். இது பிரதி மனுஷ்யனுக்கும் அனுபவமே. அதாவது, இஷ்டமாகிய விஷயங்களில் இந்திரியங்கள் ஓடியபோது மனதுக்கு சுகமும், அயிஷ்டமாகிய விஷயங்களில் ஓடியபோது மனதுக்கு துக்கமும் உண்டாகும். ஆதலால், எப்பொழுதும் பிரதிமனுஷ்யனுடைய மனது (கடலின் அலைகளைப்போல் வந்துகொண்டும் போய்க்கொண்டுமாய்ச்) சுகதுக்கங்களால் பிடிக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும். அப்படி பிடித்துக் கொண்டிருக்கும் மனதை யோகத்தில் நிறுத்துவது அசாத்

தியமாதலால், யோகாப்பியாசிக்கு இந்த ராகத்துவேஷங்கள் இரண்டும் சத்துருக்களென்று சொல்லப்படும். ஆதலால், யோகாப்பியாசியானவன் இந்தராகத்துவேஷங்களிரண்டையும் மனதில் ஒட்டாமலிருக்கும்படிச் செய்யவேண்டும். அப்படி எப்பொழுது செய்கின்றானோ அப்பொழுது அவனுடைய மனதில் இருக்கப்பட்ட சுகதுக்கங்கள் அவனைவிட்டு ஒழிகின்றன,

சஞ்சிதகர்ம வாசனையினால் இழுக்கப்படுபவனுக்கு இந்திரிய நிக்கிரஹம் உண்டாகமாட்டாது. உபநிஷதர்த்தங்களை நன்குணர்ந்து கிரமக்கிரமமாய் இந்திரிய நிக்ரஹம் செய்துவந்தால் பிறகு காமக்குரோதங்கள் காலாந்தரத்தில் நினைநினை பிரயோஜனமடையும்.

உலகத்திலுள்ள வஸ்துக்களைப்பார்ப்பதுக் கேட்பது முதலியவைகளினால், ஆசை கோபம் அல்லது துவேஷம் உண்டாகின்றன. எப்படியென்றால், இன்பமுண்டாகத்தக்கதான ஒரு வஸ்துவைக் கண் பார்த்தவுடன் அந்த வஸ்துவினிடத்தில் ஆசையுண்டாகின்றது. ஆசைப்பட்ட வஸ்து கிடைக்க யாதொரு தடையுண்டானால், அந்தத்தடையாராலுண்டாயிற்றோ அவனிடத்தில் கோபம், அல்லது துவேஷம் உண்டாகின்றது. ஆதலால், ஆசையும் துவேஷமும் விஷயங்களாகிய வஸ்துக்களில் இருப்பதாகச் சொல்லப்படும். ஞானியானவன் வஸ்துக்களில் விருப்பம் வைப்பானாகில் அதிலிருந்து ஆசையும் கோபமும் உண்டாகி ஞானத்தைக் கெடுத்துவிடும். ஆதலால், இது ஞானிக்குச் சத்துருவென்று சொல்லப்படும். அவைகள் எப்பொழுது ஒழிகின்றனவோ அப்பொழுதே அவன் மனது யோகத்தில் நிலையாயிருக்கும். யோகாப்பியாசியானவன் இப்படிச் செய்வதனாலேயே அவனைக் கர்மபலன்கள் பற்றாமல், ஞானம் அபிவிருத்தியாய் அதன்மூலமாய் மோக்ஷத்தை

அடைகின்றான். பாமரனென்றாலோ, இந்திரியவிஷயங்களில் ராகத் துவேஷங்களுடையவனாயிருக்கின்றான். ஆதலால், அவனுடைய மனது எப்பொழுதும் சுக துக்கங்களினால் பீடிக்கப்பட்டு நிலையில்லாதவனாயிருப்பதால் ஞானோதயம் உண்டாகமாட்டாது. அதனால், அவன் மோக்ஷத்திற்கு அருஹனல்ல.

அர்ஜுநன்:—பிரதி இந்திரியவிஷயங்களிலும், இஷ்ட அநிஷ்டங்கள் உண்டாயிருப்பது எப்படி? அவைகளில் மனதை ஒட்டாமற்செய்வது எப்படி? விவரித்துச்சொல்ல வேண்டும் சுவாமீ?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! ஜிஹ்வேந்திரியத்திற்கு (நாவிற்கு) விஷயம், போஜனபதார்த்தமல்லவா? அப்பேர்ப்பட்ட போஜனபதார்த்தம், ஒருபோது ருசிகரமாயும் மற்றொருபோது ருசிகரமில்லாததாகியும் சம்பவிப்பதுண்டல்லவா? ருசிகரமான பதார்த்தம் நேர்ந்தபோது மனதுக்கு சந்தோஷமும், அருசிகரமான பதார்த்தம் நேர்ந்தபோது மனதுக்குத் துக்கமும் உண்டாவது சஹஜமல்லவா?

அர்ஜுநன்:—ஆம்.

கிருஷ்ணன்:—ஆதலால், பாமர ஜனங்களுக்கு ருசிகரமாகிய பதார்த்தம் புஜிக்கநேர்ந்தபோது மிகவும் சந்தோஷமும், மறுபடியும் அப்பதார்த்தத்தையே புஜிக்க வேண்டுமென்னும் எண்ணமும், அவர்களுடைய மனதில் எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். அல்லது, அருசிகரமாகிய பதார்த்தம் நேர்ந்தபோது ஐயோ! இப்படிப்பட்ட பதார்த்தத்தை புஜிக்கவேண்டியதாய் நேரிட்டதே நல்லபதார்த்தம் கிடைக்காமற் போயிற்றேயென்று சிந்தித்துக்கொண்டிருப்பான். அப்படியே சக்ஷு (கண்) இந்திரியத்திற்கு விஷயங்களாகிய திருசிய பதார்த்தங்களிலும், சுரோத்திரேந்திரியத்திற்கு (செவிகளுக்கு) விஷயங்க

ளாகிய தொனிகள் அதாவது, சங்கீதம், அழுகை முதலாகிய சப்தங்களினாலும், கிராணேந்த்ரியத்திற்கு (மூக்கிற்கு) விஷயங்களாகிய சுகந்த துர்க்கந்தங்களினாலும், துவகிந்திரிய (தேஹசர்ம) த்திற்கு விஷயங்களாகிய சீதோஷணங்களினாலும், அந்தந்த இந்திரியங்கள் ஒடும்போது சந்தர்ப்பானுசாரமாய் அவனவன் மனதுக்குச் சுகதுக்கங்கள் நேர்ந்து கொண்டே யிருக்கும். சுகதுக்கங்களினால் அவனுடைய மனது பீடித்துக்கொண்டே யிருக்குமாதலால், யோகத்தில் நிலையாய் நிற்கமாட்டாது. (அ-2 சு-62-63. பார்க்க) இன்னும், ஞானியோ இப்படிப்பட்ட சுகதுக்கங்கள் க்ஷணபங்கமேயொழிய, சாசுவதமானவை யல்லவென்று எண்ணி அவைகளில் எவ்வளவேனும் ஆசையை வையாமல் ஆத்மா ஒன்றே நித்தியபதார்த்தமென்று அறிகின்றான். ஆதலால், அவன்மனது ஆத்மத்தியானத்தில் அதாவது யோகத்தில் நிலையாய் நிற்கும். ஆனால் மனதை அப்படி ஸ்திரமாய் நிறுத்துவது, பகுகஷ்டசாத்தியம். அதனாலேயே யல்லவா ரிஷிகள் முதலானவர்கள் மனது இந்திரியவிஷயங்களில் மல் இருப்பதற்காக முக்கியமாய்க் காட்டில் வாசஞ்செய்கின்றார்கள்.

அர்ஜுனன்.—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! நீரே யிப்படிச்சொல்லுகின்றீரல்லவா? அதாவது, கேவல காமக்குரோதங்களே காரணமாயும், பந்துஜன வதையே பலிதமாயும் இருக்கப்பட்ட இந்த கோரமாகிய யுத்தகர்மம் செய்வதைவிட நான் காட்டுக்குச் சென்று வனவாசம் செய்து விஷய வாஞ்சையை விட்டுச் சுகமாய் ஏன் இருக்கலாகாது.

ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுணஃ பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேயஃ பரதர்மோ பயாவஹஃ. 35.

கிருஷ்ணன்:—ஓஹோ? நீ இப்படியா நினைக்கின்றாய். இப்பொழுது நான் சொன்னவைகளெல்லாம் நீ சரியாய் கிரஹித்ததுபோலக் காணப்படவில்லை. நீ உன்குலதர்மமாகிய யுத்தத்தைவிட்டு பரதர்மமாகிய அதாவது பிராம்மணர்களால் அநுஷ்டிக்கத்தக்க தவத்தை நீ செய்ய எண்ணங்கொண்டவனாய்க் காணப்படுகின்றாய்! அப்படிச்செய்வது எவ்வளவேனும் சரியல்ல. க்ஷத்திரியனுக்கு ஸமதமாதி சம்பத்துடன் கூடிய பிராம்மண கர்மத்தைவிட சுதர்மமாகிய ராஜ்ஜியபரிபாலனமே நன்மை. பிராம்மணன் தனக்குத்தகாத ராஜ்ஜியபரிபாலனம் செய்வதைவிட ஜபதபங்களைச் செய்துகொள்வதே உத்தமம். க்ஷத்திரியன் செய்யத்தக்கராஜ்ஜியபரிபாலனத்தை பிராம்மணன் செய்யத்தொடங்கினால் அவன் தன் ஜபதபங்களை விடுகின்றான். சாஸ்திரவிதிப்படி பாபமும், அதனால், நரகமும் அவனுக்குச் சம்பவிக்கும். இப்படியிருக்க இஹத்தில் பிராம்மணனுக்கு ராஜ்ஜியபரிபாலனம் வந்தால் அவன் அதைப் பரிபாலனம் செய்ய சக்தியற்றவனாயிருப்பதால் இதர அரசர்களால் அவனது ராஜ்ஜியம் அபகரிக்கப்படும். அவனுக்கு ஜபதபங்களே இராமல் உபய பிரஷ்டனாகின்றான். அதுபோல் க்ஷத்திரியர்களும் தாம் யுத்தமோ அல்லது ராஜ்ஜிய பரிபாலனமோ செய்யவேண்டியதாயிருக்க அவர்கள் அவைகளை விட்டு பிராம்மணர்கள் செய்யவேண்டிய தபஸைச் செய்ய முயன்றால். ஸ்வதர்ம பரித்தியாகிய ஜன்யமாகிய பாபங்கள் அவர்களுக்கு உண்டாவது ஒருபுறம் இருக்க, சித்த சுவாதீனமுமில்லாதலால் தபசு நிறைவேறமாட்டாது. விஷத்திலுள்ள புழுக்களை விஷமே விருத்திசெய்விக்கின்றது. அந்த விஷமே இதரஜந்துக்களுக்கு எப்படி கெடுதியை உண்டாக்குகின்றதோ அதுபோலவே சுதர்மமாகிய தர்மங்கள் தனக்கு சிரேயஸ்ஸை உண்டாக்குமேயொழிய,

இதர வர்ணாசிரம விஹிதங்களாகிய தர்மங்கள் அதோ கதியை அடையச்செய்யும். யுத்தம் க்ஷத்திரிய தர்மமா யிருக்கின்றது. தபசு பிராம்மண தர்மமா யிருக்கின்றது! இப்பொழுது நீ யுத்தத்தைவிட்டுத் தவஞ் செய்வதற்காகக் காட்டுக்குச் சென்றால் நான் இதுவரையில் அ-2சு, 33, 34, 35, 36-ல், சொல்லியதுபோல் நீ சத்துருக்களுக்குப் பயந்து ஓடினாயென்று உன் சத்துருக்களேயல்லாமல், உன் பந்து மித்திரர்களும் எண்ணுவார்கள். அதனால், உனக்கு ஈனச்சொல் உண்டாகும். அவர்கள் அப்படி எண்ணினாலும் எண்ணட்டும். பிராம்மணர்களின் விருத்தியை நீ அனுஷ்டிப்பதனால் அவர்களாயினும் உன்னைக் கௌரவிப்பார்களென்று நினைக்கின்றாயோ? அப்படி எவ்வளவேனும் எண்ணவேண்டாம். அவர்கள் உன்னுடைய வம்சத்தார்கள் எண்ணினதுபோலவே எண்ணுவதுமல்லாமல், புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டதுபோல், நீ அவர்களின் விருத்தியை அனுஷ்டித்தாயென்று உன்னிடத்தில் அசூயையுடையவர்களாயிருப்பார்கள். அதனால், உனக்கு இந்த உலகத்தில் சுகம் ஒன்றும் உண்டாகமாட்டாது. ஒருவேளை பரலோகத்திலாயினும் சுகம் உண்டாகுமென்று எண்ணுகின்றாயோ? அதுவும் உண்டாகமாட்டாது. ஏனென்றால், உன் சுதர்மமாகிய யுத்தத்தைவிட்டு தபஸின் விருத்தியை அவலம்பிப்பதனால் உன் தாராபுத்திராதிகள் பந்துமித்திரர்களின் போஷணாதி விதாயக்கிருத்யங்களை விட்டவனாகின்றாய். அதனால், அவர்களுக்கு மிகவும் கஷ்டங்கள் சம்பவிக்கும். உனக்கும் பாபமுண்டாகும். அதனால் நீ பலமாகிய நரக வாதனையை நரலோகத்தில் அனுபவிக்கவேண்டியதாய் நேரிடும். ஆதலால், நீ இகபரங்கள் இரண்டிற்கும் கெட்டவனாகின்றாய். ஆனால், ஒருவேளை யுத்தத்தில் உனக்கே மரணம் சம்பவிக்குமோ

வென்று எண்ணினாலோ, அப்படியாயினும் உபய லோகங்களிலும் நீ மேன்மையையே அடைவாய். அஃதெப்படியென்றால், இகத்தில் உன்னுடைய புஜபல பராக்கிரமத்தை அறிந்திருக்கும் பந்து மித்திரர்களும், இதரர்களும் நீ சரியாய் யுத்தம் செய்தாயென்றும், ஆனால் தைவகதியால் சத்துருக்களால் மாண்டாயென்றும் எண்ணிக்கொண்டு உன்னுடைய குணாதிசயங்களைப் புகழ்ந்துகொண்டேயிருப்பார்கள். பரத்திலோ உனக்கு வீரசொர்க்கமே உண்டாகும். (அ-2, சு-37-ல், பார்க்க) ஆதலால், யுத்தம் செய்வது மேன்மையேயொழிய பரதர்மமாகிய தபோ விருத்தி உனக்கு மேன்மையானதல்ல.

அர்ஜுனன்:—நல்லது சுவாமி! இப்பொழுது நான் என் குலதர்மமாகிய யுத்தத்தைவிட்டுத் தபோவிருத்தியை அனுஷ்டிப்பதனால், இப்படிப்பட்ட அபகீர்த்தி உண்டாகின்றதல்லவா? இப்படிப்பட்ட யுத்தம் சம்பவிக்காமலிருந்தால் நான் தபோவிருத்தியை அனுஷ்டிக்கலாகாதோ?

கிருஷ்ணன்:—இப்பொழுது மாத்திரமல்ல. எப்பொழுதுமே செய்யக்கூடாது; இது உனக்கேயல்ல. உனக்கும் மற்றவர்களுக்கும் எப்பொழுதும் கூடாது. உயர்ந்த குலஸ்தன், தாழ்ந்த குலாசார விருத்திகளையாயினும், தாழ்ந்த குலஸ்தன், உயர்ந்த குலாசார விருத்திகளையாயினும் செய்யலாகாது. அப்படி அனுஷ்டிக்கப்பட்டவனுக்கு எப்பொழுதும் ஆனியேயல்லாமல் மேன்மை உண்டாகமாட்டாது. அதெப்படியென்றால், சொல்லுகின்றேன் கேள்:—ஒரு பிராம்மணன் தன் குலாசார ரீதியாய் அநுஷ்டிக்கவேண்டிய ஸந்தியாவந்தந வேதாத்தியயநாதி கிருத்தியங்களைவிட்டு சூத்திரர்கள் அனுஷ்டிக்கத்தக்க அலுவல்களைச் செய்துகொண்டு, அவர்களைப்போல் மாம்ஸபக்ஷ

ணம் புஜித்துக்கொண்டிருந்தால் அவனை மற்ற பிராம்மணர்கள் குலத்திலிருந்து வெளிப்படுத்துவார்களல்லவா? இவர்கள் இப்படி குலத்திலிருந்து வெளிப்படுத்திய பிறகு, சூத்திரர்களாயினும் தம் குலாசாரத்தை அனுஷ்டிக்கின்ருனே யல்லவா என்று அவனிடத்தில் ஏதாயினும் கௌரவம் வைப்பார்களென்று எண்ணுகின்ருயா? அப்படியுமில்லை. அதற்குப்பதிலாய் இவன் குலபிரஷ்டனென்று எண்ணித் தம்முடன் சேர்க்காமல் அதி நீசமாய்ப் பார்ப்பார்கள். அதனுல், உபய பிரஷ்டனுகின்ருன். நல்லது. இவர்கள் இப்படி யிருக்க எவனுயினும் சூத்திரன் ஒருவன் தன் குலாசார விருத்தியை விட்டு பிராம்மண ஆசாரங்களை அனுஷ்டித்துக்கொண்டு, அவர்களைப்போல் ஸந்தியாவந்தனம் வேதாத்தியயனம் முதலானவைகளைச் செய்துவந்தால், அவனை பிராம்மணர் தம் குலத்தில் சேர்த்துக்கொள்வார்களா?

அர்ஜுநன்:—அப்படி ஒருபோதும் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். அவனைப்பார்த்து அஸஹ்யப்படுவார்கள்

கிருஷ்ணன்:—நல்லது, அவனுடைய குலஸ்தர்களாயினும் அவன் பிராம்மணுசாரத்தை அனுஷ்டிக்கின்ருனே, அவன் நம்மைவிட உயர்ந்தவனென்று எண்ணி அவனை ஏதாகிலும் கௌரவிப்பார்கள்?

அர்ஜுநன்:— இல்லை, இல்லை! அதற்குப் பதிலாய், அவன் பிராம்மண வேஷம் போட்டுக்கொண்டு பொங்கிப் போகின்ருனென்று பரிஹாசம் செய்வார்கள்.

கிருஷ்ணன்:—அப்போது அவன் உபய பிரஷ்டனுகின்ருனல்லவா?

அர்ஜுநன்:—ஆம் அதற்குத் தடையென்ன!

கிருஷ்ணன்:—ஆதலால், எவன் எந்தக் குலத்தில் பிறக்கின்றானோ அவன் அந்தக் குலாசாரத்திலுள்ள யதா விதிகளை நடத்திக்கொண்டிருப்பது மேன்மை யென்றும், இதர குலாசாரங்களை அனுஷ்டிப்பது கெட்டதென்றும் சொல்வதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆனால், அப்படி அனுஷ்டிப்பதில் பலாபேக்ஷையை விட்டு தான் செய்யும் கார்யங்களெல்லாம் பகவதர்ப்பணமாய்ச் செய்துகொண்டு பகவானை சதா தியானித்துக்கொண்டு வந்தால், அதுவே கர்மயோகமென்று சொல்லப்படும் அதனால், கிரமக்கிரமமாய் ஞானம் உதயமாய் மோக்ஷத்திற்கு அர்ஹனாகின்றான்.

அர்ஜுநன்:—ஓ, ஸ்வாமி, ஆனால் சிலகுலங்கள் அதிநீசமாயும், அவைகளிலுள்ள ஆசாரம் அதி ஹேயமாயும் இருக்கின்றனவே, அப்படிப்பட்ட குலாசாரத்தில் நடப்பவர்களுக்கும் கூட ஞானோதயமாய் அவர்களும் மொக்ஷத்திற்கு அர்ஹனாகின்றார்களா?

கிருஷ்ணன்:—ஆஹா! அதற்குச் சந்தேகமில்லை. அவர்கள் எவ்வளவு நீசர்களா யிருந்தபோதிலும் சரி, அவர்களின் குலாசாரம் எவ்வளவு யீனமாய் இருந்தாலும் சரி, அந்த குலாசாரங்களின் வேலைகளை பலாபேக்ஷயில்லாமல் அனுஷ்டித்துக்கொண்டு பகவதர்பணமாய்ச் செய்துகொண்டுவந்தால் அவர்கள் மோக்ஷத்திற்கு அர்ஹராகின்றார்கள். இதற்கு திருஷ்டாந்தமாய் நீங்கள் எல்லோரும் வனவாசம் செய்துகொண் டிருக்கும்போது மார்க்கண்டேய மஹாமுனி உன்னுடைய தமையனாகிய தர்மராஜனிடம் வந்து உபந்நியசித்த அநேக இதிஹாஸங்களில் மிதிலாபுரிவாசியாகிய தர்மவியாதன் என்னும் ஒரு கிராதன் (கசாயித்தொழிலைச் செய்யப்பட்டவன்.) கௌசிகனென்னும் ஒரு பிராமணனுக்குச் செய்த தர்மோபதேச

மும் இதிஹாசமும் ஒன்றுண்டு. அதைச் சொல்லுகின்றேன் கேள். அதை நீகேழ்க்கும் பக்ஷத்தில் உன் சம்சயமெல்லாம் நீங்கி கர்மயோகம் இப்படிப்பட்டதல்லவா! இதனால் உண்டாகும் பலன் இப்படிப்பட்டதல்லவா என்று உனக்கு நன்றாய்த் தெரியவரும். அந்த இதிஹாச மெப்படியென்றால், கௌசிகனென்னும் வேதாத்தியயன சம்பந்நனாகிய பிராம்மணன் ஒருநாள் தனக்குப் பிக்ஷையிட்ட ஒரு பதிவிரதையினால் தெரிந்துகொண்ட விஷயம் என்னவென்றால், மிதிலாநகரத்தில் ஜிதேந்திரியனென்னும் ஸத்தியவாதியும், மாத்ரு பிதுர் பக்தனுமான தர்மவியாதனென்னும் கசாயித்தொழில் செய்யப்பட்டவன் ஒருவன் இருக்கின்றான்; அவன் சமஸ்த தர்மங்களையும் அறிந்தவனென்றும் அப்படிப்பட்ட நீசவிருத்தி செய்யப்பட்டவனுக்கும் இப்படிப்பட்ட யோக்கியதை எப்படி உண்டாயிற்றோ அதை நீ சென்று அறிந்துகொள்ளக்கடவாய் என்று சொல்லியனுப்பனாள். அப்போது கௌசிகனென்னும் பிராமணன் மிதிலா நகரத்திற்குச்சென்று அவ்விடத்தில் அந்த தர்மவியாதன் இருக்குமிடம் கண்டுபிடித்து அவனைப் பார்க்கும்போது கசாயிக்கடையில் உட்கார்ந்து அல்ப மிருகத்தின் மாமிசக்கண்டங்களை விக்கிரயம் செய்துகொண் டிருப்பதைக்கண்டு அவ்விடம் செல்ல அயிஷ்டமுடையவனாய் அவனுக்குச் சிலதூரத்தில் காத்திருந்தான். அந்தக்கசாயி மாமிச விக்கிரயம்செய்து கடைமுடி தனக்காக வந்திருக்கும், அந்தப் பிராம்மணன் விருத்தாந்தங்களை யெல்லாம் தெரிந்துகொண்டவனாய் அவன் இருக்குமிடம் சென்று அவனுக்குத் தண்டம் சமர்ப்பித்து, ஐயா! நீர் ஒரு பதிவிரதை அனுப்ப இவ்விடம் வந்தவரல்லவா? அடியேனுடைய கிருகத்திற்கு எழுந்தருளவேண்டுமென்று

தன்னுடைய கிருகத்திற்கு அழைத்துப்போனன். அப்பொழுது கௌசிகன் தன் அபிப்பிராயத்தை தர்மவியாதனும் பதிவிரதையும் அறிந்ததற்கு மிகவும் ஆச்சர்யமடைந்து, இது வென்ன ஆச்சர்யமென்று தன்மனதில் எண்ணி அவனுடைய கிருகத்திற்குச் சென்று அவனால் பூஜிக்கப்பட்டான். பிறகு தர்மவியாதன் பிராம்மணனைப் பார்த்து, பிராம்மணர்களுக்குத் தபஸ்வாத்யாய பிரம்மசர்யமும், ராஜர்களுக்குத் தண்டநீதியும், வைசியர்களுக்கு வியாபாரமும், சூத்திரர்களுக்கு பிராம்மண சிஸ்ரூஷையும், எப்படி தர்மங்களோ, அதுபோல், எங்களுக்கும் மிருகமாமிச ஜீவனம் பரம தர்மமென்று சொன்னன். இது விசேஷமாய் வம்ச பரம்பரையான ஆசாரமாயிருக்கின்றது. ஆத்மவர்ணசார தர்மங்களை விட்டவன் தன் புத்திரனையும் தண்டிக்காமல்விடான். ஆதலால், நான் நிஜதர்ம பரித்தியாகி யென்று தர்மவியாதன் சொல்லினன். ஆகையால், ஓ அர்ஜுனா ! எவனுகிலும் எப்படிப்பட்ட நீச குலஸ்தனுனுலும் சரி, அவனுடைய குலவிருத்தி எவ்வளவு யிம்ஸாரூப யீனமான தொழிலா யிருந்தாலும் சரி இந்த தர்மவியாதனுக்கு உண்டாயிருக்கும் லக்ஷணங்களுடையவனுய் இருக்கப்பட்டவனே நிஷ்காம கர்மயோகி எனப்படுவான்.

அத கேந ப்ரயுக்தோ யம் பாபம் சரதி பூருஷ꞉
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித꞉. 36.

அர்ஜுனன்:—ஓ யாதவகுலத்தில் அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண ! இப்பொழுது நீர் சொல்லியவைகளெல்லாம் சரியாய் ஆலோசித்துப் பார்க்குமளவில் பிரதி புருஷனுக்கும் அவன் குலம் எப்படிப்பட்டதாலுைம் சரி, அவன் குலவிருத்தி எவ்வளவு யீனமானதாயிருந்தாலும் சரி, இப்பொழுது நான் பிரயத்தினப்பட்டிருக்கும் பந்து மித்திர

வதா ரூபமாகிய யுத்தகர்மம் எவ்வளவு குரூரமாய் இருந்தாலும், அதனால் பாப மனுகாததாயும், தன் குலவிருத்தி அலுவல்களை விதிப்படி தவருமல் அனுஷ்டிப்பதனால் அவனுக்கு நாளாவட்டத்தில் ஞானோதயமாய் மோக்ஷத்திற்கே அர்ஹனுகின்ருனென்று தோன்றுகின்றது. ஆதலால், இந்த உலகத்தில் எவராயினும் பாபகார்யங்களைச் செய்யக்கூடாது. பாபகார்யம் நரக ஹேதுவல்லவா? இவ்வுலகத்தில் எவரும் பாபகிருத்தியங்களை இச்சிக்கமாட்டார்களல்லவா? அப்படியிருந்தும் பிரதி புருஷனும் ஏதோ ஓர் பாபத்தைச் செய்துகொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கின்ருேமல்லவா? பிரதி புருஷனும் பாபம் செய்ய இச்சையில்லாதவனு யிருந்தும், ஏதோ ஓர் பிரேரேபணையினுல் பலாத்காரமாய் செய்யப்படுவதாய் இருக்கின்றதே. அதென்ன? காமக்குரோத லோப மோக மத மாச்சர்யமாகிய இந்த அரிஷட்வர்க்கங்களிலும் பிரதானமானவை, காம குரோதங்கள். இவ்விரண்டிலும் பாபத்தில் ஏவுவது எது?

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ:
மஹாஸநோ மஹாபாப்மா வித்யேந மிஹ வைரிணம். 37.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! ரஜோகுணத்திலிருந்து உண்டான வஸ்து ஆசை. அந்த ஆசையானது கோபமாகவும், அனுபவிக்கத்தக்க அநேக வஸ்துக்களை அடைய ஏதுவாகவும், மகா பாபங்களுக்குக் காரணமாகவும் இருக்கின்றது. இது மோக்ஷவழிக்கு சத்துருவாகவும் இருக்கின்றது. இதுவரையில் நான் உனக்கு அ-3, சு-34-ல், பிரதி இந்திரியங்களிலும் ராகத்துவேஷங்கள் உண்டெனவும், அவைகள் யோகாப்பியாசிக்கு விரோதமெனவும், அவைகளின் வசமாகக் கூடாதெனவும் சொல்லியிருந்தேனல்லவா, அது ஞாபகமிருக்கின்றதா?

அர்ஜுனன்:—ஆம் ஞாபக மிருக்கின்றது.

கிருஷ்ணன்:—அந்த ராகத்துவேஷங்களுக்கே காமக் குரோதங்களென்று நாமங்களுண்டு. இந்தகாமக் குரோதங்களே புருஷனை அதோகதி அடையச்செய்கின்றன. இவைகளே பாபங்களாகிய கார்யங்களைச்செய்யும்படி பிரேரேபணை செய்கின்றன. அப்படி பிரேரேபிக்கச்செய்வது "காமயேஷ:" இக்காமமே. யென்றால், இந்திரிய விஷயங்களில் உண்டாகும் எண்ணங்களேயாம்! இதற்கே ஆசையென்றும் சொல்லுவார்கள். இக்காமம் எதனால் உண்டாகின்றதென்றால், "ரஜோகுண ஸமுத்பவ:" ரஜோகுணத்தினால் உண்டாகுகின்றது. இந்தக்காமம் எப்படிப்பட்டதென்றால் "மஹாஸந:" எவ்வளவு தின்றபோதிலும் திருப்தி யடையாத சாப்பாட்டு ராமனைப்போன்றது. இந்தக் காமத்தினுடைய சொரூப ஸ்வபாவத்தைக்குறித்து உனக்கு இதுவரையில் அ-2, சு-62ல் விவரமாய்ச் சொல்லி இருக்கின்றேன். எந்தப் புருஷனாயினும் சரி, காமம் (கோரிக்கை) உண்டான மாத்திரத்திலேயே பாபம் எப்படிச்செய்வானென்று கேட்கின்றாயோ? சொல்லுகின்றேன் கேள்:—இக்காமத்தினாலேயே குரோதம் உண்டாகின்றது. அந்த குரோதமென்றாலோ மஹா பாபங்களுக்கு ஏதுவாயிருக்கின்றது. எப்படியென்றால், காமத்தினால் மோகமுண்டாய், அந்த மோகம் ஸ்மரணைதப்பி புத்தியை நாசப்படுத்துகின்றது. இவைகளையெல்லாம் இதுவரையிலேயே உனக்கு அ-2, சு-63-ல், சொல்லியிருக்கிறேன். இந்த குரோதம் பிரதி புருஷனையும் பாபம் செய்யும்படி பிரேரேபணை செய்விக்கின்றதென்று அறியக்கடவாய். இந்தக் காமக் குரோதங்களிரண்டும் பிரதி மனுஷ்யனையும் விரோதிக்கும்படிச் செய்விக்கின்றனவென்றும், பாபகார்யங்களைச் செய்வித்து அதன்மூலமாய் அவர்களுக்கு ஜநந மரணங்களாகிய

நரகபாதையை உண்டாக்குகின்றனவென்றும் அறியக்கடவாய்.

அர்ஜுநன்.—இப்பொழுது நீர் சொல்லியதுபோல் காமக்ரோதங்கள், ரஜோகுணத்தினால் உண்டானதாயிருந்தால், இந்த ரஜோகுணம் பிரகிருதியினால் (மாயையினால்) உண்டானதல்லவா? பிரதிபுருஷனுக்கும் இக்காமக் குரோதங்கள் சுபாவகுணங்களாய் இருக்கின்றனவல்லவா? இப்படிப்பட்ட விஷயத்தில் யாருக்காயினும் இக்காமக்குரோதங்களை விடுவதற்கு எப்படி சாத்தியமாகும்?

* தூமேநாவ்ரியதே வஹ்நிர் யதா தர்ஸோ மலேநச
யதோல்பே நாவ்ருதோ கர்ப ஸ்ததா தேநேத மாவ்ருதம். 38.

† ஆவ்ருதம் ஜ்ஞாந மேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா
காமரூபேண கௌந்தேய! துஷ்பூரே ணாநலேநச 39.

---

* ஸ்வயம்பிரகாசமுள்ள அக்நியானது பார்ப்பவர்களுக்குப் புகையினால் மறைக்கப்பட்டிருப்பதுபோல் சர்வஞ்ஞனான ஈசுவரன் ஜீவர்களுக்குக் காமத்தினால் மறைக்கப்பட்டிருக்கின்றான். அதனால், ஈசுவரன் ஜீவனால் அறியப்படுகிறதில்லை.

2. கண்ணாடியானது அழுக்கினால் மறைவுபட்டிருப்பதுபோல் மனம், புத்தி, சித்த, அகங்காரமென்னும் அந்தக்கரணமானது கர்மத்தினால் (ஆசையினால்) மறைக்கப்பட்டிருக்கின்றது. எப்படி என்றால், அந்தக்கரணம் காமத்தினால் மூடப்பட்டு ஜீவனுக்கு ஈசுவரன் காணப்படுவதில்லை.

3. சிசுவானது கருப்பைக்குள் இருக்கும்போது எப்படி ஒரு காரியமும் செய்யச் சக்தியற்றிருக்கிறதோ, அதுபோல், கர்மத்தினால் மூடப்பட்டிருக்கிற ஜீவன், பிரம்மத்தையாவது ஞானத்தையாவது அடையக்கூடாதவனா யிருக்கின்றான்.

† ஜடபரதனென்னும் மறுபெயருடைய பரதர் என்பவர் மகா தபசியாய் பிரம்மநிஷ்டையி லிருந்தும் அவருக்கு பிராணப்பிரயாண காலம் சமீபித்தபோது தான் வளர்ந்திருந்த மானை இனி ஸம்ரக்ஷணை செய்யப்போகின்றவர்கள் யார் என்று சங்கல்பித்த-

கிருஷ்ணன்.—ஓ குந்ீபுத்திரனே! நீ சொல்லியது போல் காமக்குரோதங்களிரண்டும் சுபாவகுணங்களென்றே சொல்லலாம். அக்கி புகையினுலும், கண்ணுடி அழுக்கினுலும், கர்ப்பத்திலிருக்கும் பிண்டம் மையினுலும், எவ்வாறு மூடப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறே ஞானமானது காமத்தி (ஆசையி) னுல் மூடப்பட்டுள்ளது. அவைகளை ஒழிப்பது மிகவும் கஷ்டசாத்யம். இம் மூன்று திருஷ்டாந்தங்களும் மூன்றுவித மனிதரைக்குறிக்கும். அம்மூவகை மனிதராவார்:—

1. புகையினுல் அக்கி மூடப்பட்டிருப்பதுபோல் ஆசையாகிய புகையினுல் ஆத்மஞானமாகிய அக்கி மூடப்பட்டிருப்பவர்கள் ஆத்மஞான முள்ளவர்களே யாவார்கள். எப்படியெனில், நிஷ்களங்கமாய் ஆத்ம ஞானத்திலேயே நிலையில்லாமலும், விஷயப் பற்றுதலை முழுதும் விடாமலும் இருப்பார்கள். அக்கியைச் சூழ்ந்திருக்கும் புகை எவ்வளவு வியாபகமாயினும் அக்கியின்மீது காற்று மோதப்படுதலால் புகை விலக்கப்பட்டு, ஜுவாலைவிட்டு பிரகாசிக்கத் தொடங்கினவுடனே புகை இருந்தவிடந் தெரியாமல் எப்படி மறைகின்றதோ, அப்படியே குரு உபதேசத்தினுலும் சத்சங்கத்தினுலும் இவர்களுக்குக் காமம் (இச்சை) நசித்து, கூடிய சீக்கிரமாகவே அப்பியாசத்தினுல் ஆத்மஞானத்தை அடைவார்கள். ஆதலால் இவர்கள் முதல் வகுப்பினர் ஆவார்கள்.

உடனே அடுத்த ஜன்மத்தில் மான்ஜநந மடைந்தார். (பாகவதம் 5-வது ஸ்கந்தம், 8-வது அத்தியாயத்தைப்பார்க்க.) இவர் முதலில் மான்குட்டியை எடுக்கும்போதும், தன்னிடம் கொண்டுவந்து சம்ரக்ஷணை செய்யும்போதும் அது தன்னுடைய ஞான நிஷ்டைக்குச் சத்துருவென்று தெரிந்திருந்தும் பூர்வஜன்ம கர்மத்தின் சேஷமானது அவருடைய நிஷ்டையைக் கெடுத்தது. ஆதலால், இது எப்போதும் ஞானிகளுக்குச் சத்துருவென்று சொல்லப்படும்.

2. அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியைப் பார்க்கும் ஒருவனது முகம், பிரகாசமாகவும் சுத்தமாகவும் தெரியாவிட்டாலும், ஏகதேசமாய்த் தெரியுமன்றோ? அவனுக்குத் தன்முகம் பிரகாசமாய்த் தெரியவேண்டும் என்கிற எண்ணம் மாத்திரம் இருக்கின்றதேயன்றி அழுக்கைப் போக்கினால் கண்ணாடியில் முகம் பிரகாசிக்கும் என்கிற ஞானம் இல்லை. அதுபோல், ஆத்மஞானத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்கிற அபேக்ஷைமாத்திரம் இருக்கப்பெற்று, ஆசையை ஒழித்தாலன்றி அதனைக்கிட்டுவது கூடாது என்கிற நிச்சயமில்லாமல் கலக்கமுற்றிருப்பான். இந்த ஆசையை போக்கடித்துக்கொண்டால், ஆத்மஞானத்தை அடையலாம் என்கிற நிச்சய ஞானம் இல்லாமலிருப்பான். இப்பேர்ப்பட்டவனுக்கு குரு உபதேசத்தினாலும், ஸத்சங்கத்தினாலும் சிலகாலங்களுக்குப்பின் ஞானோதயமாகும். இப்பேர்ப்பட்டவர்கள் இரண்டாவது வகுப்பினர் ஆவார்கள்.

3. கருப்பைக்குள் கட்டுப்பட்டிருக்கும் பிண்டமானது, தானாகவே அந்தப் பையைவிட்டுவரச் சக்தியற்றதாயிருப்பதுபோல், ஆத்மஞானமில்லாதவர்கள் ஆத்மா இப்படிப்பட்டதென்று அறியாமல், ஆசைவலையில் அகப்பட்டுக்கொண்டிருப்பார்கள். ஆசையை நிவர்த்திசெய்துகொள்ளச் சக்தியற்ற இவர்களுக்கு குரு உபதேசத்தினாலும் ஸத்ஸங்கத்தினாலும் பிரயோஜனமில்லை. இவர்களே மூன்றாவது வகுப்பினர் ஆவார்கள்.

புகைந்து கொண்டிருக்கும் அக்கினியை ஊதுவதனாலேயோ, அல்லது விசிறுவதனாலேயோ புகை நீங்கி ஜ்வாலையை உண்டாக்குகின்றதல்லவா? அழுக்கினால் மூடப்பட்ட கண்ணாடியைக் கழுவுவதனாலேயோ அல்லது, துடைப்பதனாலேயோ அழுக்குநீங்கிக் கண்ணாடி துலாம்

பாமாய் யிருக்குமல்லவா? பிரஸவித்தவுடன் சிசுவை மூடிக் கொண்டிருந்த "மா" வீழ்ந்து விடுகின்றதல்லவா? அது போல், "அப்யாஸேந து கௌந்தேய! வைராக்யேண ச க்ருஹ்யதே" யோகாப்பியாஸத்தினால் இந்தக் காமக்குரோ தங்கள் நீங்கி ஞானம் பிரகாசிக்கும்.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! புகையினால் மூடப்பட்ட அக்கினி, ஊதுவதனால் எரிந்து ஊதுவதை நிறுத்தின வுடனே எரிவது நின்று, மறுபடியும் புகைந்துகொண்டிருக் குமல்லவா? அதுபோல் இந்த ஞானமும் காமக்குரோ தங்களால் மறைபட்டுக்கொண்டும், வெளிப்பட்டுக்கொண் டும் இருக்குமல்லவா?

கிருஷ்ணன்:—ஆம், புகைந்துகொண்டிருக்கும் அக் கினியை விசிறினால் எரிந்து, மறுபடியும் அணைந்து மறுபடி யும் புகைந்து மருபடியும் எரிந்து வரவர சிலநேரத்தில் ஜுவாலை பிரகாசித்துப் பெருந்தீ யுண்டாகும். அதன் பிறகு விசிறுவதாயினும், ஊதுவதாயினும் இல்லாமலே தனக்குத்தானாய் எப்படி எரிகின்றதோ அதுபோல் யோகாப்பியாசிக்கும் காமக்குரோதங்கள், மனோபுத்தி இந் திரியங்கள் அவன் செய்யும் மனோ நிக்கிரஹத்தினால் நிவர்த் தியாய், மறுபடியும் தோன்றி மறுபடியும் மனோபுத்தி இந்திரிய நிக்கிரஹத்தினால் நிவர்த்தியாய் இப்படிச் சில நாள்வரையில் அவனைப் பாதித்துக்கொண்டிருக்கும், ஆனால், அவைகள் தோன்றும்போதெல்லாம் அந்த யோகாப்பியாசி விடாமல் பிடிவாதத்துடன் மனோபுத்தி இந்திரியங்களை நிக்கிரஹித்துக்கொண்டே வருவானானால் அவைகள் அனைத்தும் அவனைவிட்டொழியும். அப்படி ஊக்கத்துடன் விடாமல் செய்துவரும் அப்பியாசத்தி னால் சிலகாலங்களுக்குள் பூர்ண வைராக்கியம் உண்டா கும். அப்பொழுது, அந்தக்காமக்குரோதங்கள் அவனை

விட்டு ஒழியும். அதன்பிறகு ஞானம் நிர்மலமானதாய், அவிச்சின்னமாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அதன் பிறகு இந்த ஞானத்தை முன் கூறிய புகையைப்போலும் அழுக்கைப்போலும் 'மா'வை (கருப்பை)ப்போலும் இந்தக் காமக்குரோதாதிகளாகிய (காம க்ரோத லோப மோக்ஷ மத மாச்சரங்களென்னும்) அரிஷட்வர்க்கங்களும் மூடப்படமாட்டாது. (இந்தக்காமக்குரோதங்களின் விவரங்களை "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யயம்" பிரபஞ்ச விரக்திமார்க்கம் என்பதில் எழுதப்பட்டிருக்கின்றது.) ஆதலால், அப்படிப்பட்ட ஞானத்திற்கு அகண்ட ஞானமென்று சொல்லப்படும்.

*இந்த்ரியாணி மனோ புத்தி ரஸ்யாதிஷ்டான முச்யதே
ஏதைர்விமோஹய த்யேஷ ஜ்ஞான மாவ்ருத்ய தேஹிநம். 40.

அர்ஜுனன்:— இந்தக் காமக்குரோதங்களை நிவர்த்தி செய்வதற்கு மனோபுத்தி முதலாகிய இந்திரியங்களை நிவர்த்தி செய்யவேண்டுமென்று சொன்னீரல்லவா? அதற்குக் காரணமென்ன?

---

* இந்திரியங்கள் மனது புத்தி இவைகள் காமத்திற்கு இருப்பிடமாகச் சொல்லப்படுகின்றன. இந்தக் காமமானது, இந்திரியம் மனது புத்தி இவைகளினாலே ஞானத்தை மறைத்து ஜீவனை மயக்குகின்றது. ஏனென்றால், சப்தாதி விஷயங்களை இந்திரியங்கள் கிரஹித்து மனதில் சேர்ப்பிக்கின்றது. மனது விஷயங்களை கிரஹித்தவுடனே புத்தியினிடத்தில் சேர்ப்பிக்கின்றது; புத்தி ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கின்றது. நிஷ்களங்கமான ஆத்மாவினிடத்தில் விஷயங்களாகிய அழுக்குகளைக் (காமக்குரோதங்களை) சேர்ப்பித்தவை இந்திரியங்கள், மனது, புத்தி இவைகளாகையால் அவைகள் காமத்திற்கு இருப்பிடமாகச் சொல்லப்பட்டன. காமமாகிய அழுக்கை அடைந்த ஆத்மா அசுத்தனாய் விட்டபடியால் தன்னுடைய நிஷ்களங்கமான ஆத்மஞானம் மறைவுபட்டு மயங்குகின்றான்.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! உலகத்தில் சகல மனிதர்களுக்கும் ஆசையுண்டல்லவா? அந்த ஆசை இருக்கப்பட்ட இடத்தைச் சொல்லுகின்றேன் கேள்:—

ஆசை உண்டாவதற்கு ஸ்தானம் புத்தி; ஆசை விசேஷமாய் உண்டாக்குவதற்குச் சாதனம் மனது; விஷயங்களில் ஆசையை உண்டாக்குவதற்கு மார்க்கம் இந்திரியங்கள்; ஆதலால், இந்த மூன்றும் ஆசைக்கு இருப்பிடமென்று சொல்லப்படும். இதன் மூலமாகவே ஆசை ஞானத்தை பிரகாசிக்கச் செய்யாமல் ஜீவனை அநேகவிதங்களாய் மோஹிக்கச் செய்கின்றது. இந்திரியங்களில்லாவிடில் இந்தக் காமக்குரோதாதிகள் உண்டாகமாட்டா. அஃதெப்படியென்றால், ஒரு புருஷன் ஏதேனும் அதிசயமான வஸ்துவைப் பார்த்தாலல்லவோ அதில் காமம் (ஆசை) உண்டாகின்றது. (“ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்” காம சொரூபம் பார்க்க.) அந்தக் காமம் எதிலிருந்து உண்டாகின்றது?

அர்ஜுனன்:—மனதிலிருந்து உண்டாகின்றது.

கிருஷ்ணன்:—அப்பொழுது மனதும் காமத்திற்கு இருப்பிடமல்லவா?

அர்ஜுனன்:—ஆம்,

கிருஷ்ணன்:—நல்லது, அந்த வஸ்துவில் ஆசை பிறந்தவுடனே அதை அடையத்தக்கது எது?

அர்ஜுனன்:—புத்தி.

கிருஷ்ணன்:—அப்போது புத்தியும் காமத்திற்கு ஆசிரய ஸ்தானமல்லவா?

அர்ஜுனன்:—ஆம்.

கிருஷ்ணன்:—ஒருவன் இச்சித்த வஸ்து லபித்தால் சந்தோஷமடைவான். இல்லாவிடில் என்ன சம்பவிக்கும்?

அர்ஜுநன்:—அப்படி லபிப்பதற்கு எதனால் தடை உண்டாகின்றதோ, அதன்மீது கோபம் உண்டாகும்.

கிருஷ்ணன்:—அப்படிப்பட்ட கோபத்திற்கே குரோதமென்று சொல்லப்படும். ஆதலால், இந்தக் காமக்குரோதங்களுக்கு மனோபுத்தி இந்திரியங்களே இருப்பிடமென்று இப்பொழுது தெரியவந்ததல்லவா?

அர்ஜுநன்:—ஆம் தெரியவந்தது.

கிருஷ்ணன்:—நல்லது, அந்த வஸ்துவைக் கண்களால் பாராமலிருந்தால் அதில் அபேக்ஷை உண்டாகுமா?

அர்ஜுநன்:—உண்டாகமாட்டாது.

கிருஷ்ணன்:—அபேக்ஷையே உண்டாகாமலிருக்கும் போது அதை அடையவேண்டுமென்னும் இச்சை உண்டாகாதல்லவா?

அர்ஜுநன்:—ஆம் உண்டாகா.

*தஸ்மாத் த்வ மிந்த்ரியாண்யாதௌ நியம்ய * பரதர்ஷப !*
பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாந விஜ்ஞாந நாசநம் 41.

கிருஷ்ணன்:—ஓ பரதசிரேஷ்டனே! கர்மம் (ஆசை) இவ்வளவு அநர்த்தத்தை உண்டாக்குகின்ற தாகையால், நீ முதலில் இந்திரியங்களையும், மனது புத்தி இவைகளையும்

* "பரதர்ஷப" என்று சொல்லுவதை யோசிக்குமளவில் இவர்களின் வம்சத்தில் பூர்வம் பரதன் என்பவர் காம க்ரோதங்களை ஜயித்து ஞானியாயிருந்தார். ஆதலால், நீயும் காமக் குரோதங்களை ஜயிப்பதற்கு பிரயத்தினப்படு என்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ஜுநனுக்கு உபதேசித்ததாய்த் தெரியவருகின்றது. ஞானியாயிருந்தும் காமத்தை விடாததனால் முதல் ஜன்மத்திலேயே முக்தனாகவேண்டிய பரதர் வேடியா (மானு)யும், ஜடபரதராயும் இரண்டுஜன்ம மெடுக்கவேண்டியதாய் நேரிட்டது. ஏனென்றால், கர்மசேஷம் இருந்தபடியால் இரண்டு ஜன்ம மெடுக்கவேண்டியதாய்நேரிட்டது.

அடக்கி ஞான விஞ்ஞானங்களைப் போக்கடிக்கிற பாப சொரூபமான இந்தக் கர்மத்தை விட்டுவிடு. அதாவது, நீ முக்கியமாய்ச் செய்ய வேண்டிய விஷயம் என்னவென்றால், முதலில் கண் மூக்கு வாய் செவிகள் தேகசர்மம் என்னும் பஞ்சேந்திரியங்களை அடக்கவேண்டும். என்றால், அந்த இந்திரியங்கள் போகும்வழியாய் போகவிடாமல் திருப்பிக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதனால் அந்த இந்திரியங்கள் விஷயங்களில் ஓடமாட்டாது. இந்திரியங்கள் விஷயங்களில் எப்பொழுது ஓடாமல் நின்றுவிடுகின்றனவோ அப்பொழுது விஷயங்களில் ஆசை உண்டாக மாட்டாது. ஆசை எப்பொழுது இல்லாமற் போகின்றதோ அப்போதே குரோதம் ஒடிவிடுகின்றது. ஆதலால், நீ இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பிக்கொள்வதனால் ஞானத்தைக் கொடுக்கப்பட்டதுமாகிய இந்தக் கர்மத்தை நீ ஜயித்தவனாகின்றாய்.

அர்ஜுனன்:—ஐயா, கிருஷ்ணமூர்த்தியே! "இந்திரியாணி ப்ரமாதீநி" இந்திரியங்கள் மிகவும் பலமுடையதென்று இதுவரையில் அ-2, சு-60-ல், சொல்லியிருக்கின்றீர். அப்படிப்பட்ட இந்திரியங்களை இழுத்துப்பிடித்தால் காமமென்னும் சத்துருவை ஜயிக்கலாமென்று இப்பொழுது சொன்னீரே? அப்படிப்பட்ட பலமுடைய இந்திரியங்களை இழுத்துப் பிடிப்பதற்கு உபாயமென்ன?

* இந்த்ரியாணி பராண்யாஹு ரிந்த்ரியேப்ய: பரம்மந:
மநஸஸ்து பரா புத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ: 42

---

* தேஹாதிகளைவிட இந்திரியங்களும், இந்திரியங்களைவிட மனதும்; மனதைவிட புத்தியும் சிரேஷ்டமானதென்று சொல்லப்படும். எவன் புத்தியைவிட சிரேஷ்டமாயும் சாக்ஷியாயும் இருக்கின்றானோ அவனே ஜீவாத்மா. ஆத்மசொரூபத்தை ஆசிரயித்தால் ஆத்ம நிஷ்டையை அடைந்தால்) காமத்தை ஜயிக்கலாம். ஞானத்

‡ ஏவம் புத்தே: பரம் புத்வாஸம் ஸ்தப்யாத்மாந மாத்மநா
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ ! காமரூபம் துராஸதம். 43.

கிருஷ்ணன்:—ஆம், இந்திரியங்கள் பலமுடையவைகளாகவே யிருக்கின்றன. விஷயங்களில் பிரவேசிக்கப்பட்டதில் முதன்மையானது பஞ்சேந்திரியங்கள் (கண்கள், மூக்கு, வாய், செவிகள், தேஹசர்மம்). அதன்பிறகு ஆறாவது மனது ; அதன் பிறகு ஏழாவது புத்தி ; அதன்பிறகு எட்டாவது ஆத்மாவாபிருக்கின்றது. அஃதெப்படியென்றால், இந்திரியங்கள் விஷயங்களில் பிரவர்த்தித்தவுடனே அந்த விஷயங்களை மனது கோருகின்றது. என்றால், ஏதேனும் ஒரு வஸ்துவைப் பார்த்தபோதும், ஒரு சப்தத்தைக் கேட்டபோதும், ஒரு வஸ்துவை ருசி பார்த்தபோது மாத்திரமே அந்த விஷயங்கள் பற்றியிழுக்கின்றனவல்லவா? இப்படிப்பற்றியிழுப்பதற்கு முதல்காரணம் நேத்திரங்கள் முதலாகிய பஞ்சேந்திரியங்கள். அதன்பிறகு வேலைசெய்யப்படுவது மனது, அது ஆறாவது. அந்த மனது எந்த விஷயங்களிலாகிலும் ஒன்றில் அகப்பட்டுக்கொண்டு இதுநல்லதா அல்லது, கெட்டதாவென்று யோசித்து நிச்சயிப்பது புத்தி, அது ஏழாவது; இவைகள் செய்துகொண்டிருக்கும் விஷயங்கள் யாவற்றையும் சாக்ஷிபூதமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பது ஆத்மா. அந்த ஆத்மாவே எட்டாவதாய் இருக்கின்றது. இந்திரியங்களைவிட மனது உயர்ந்ததென்றும், மனதைவிட புத்தி உயர்ந்ததென்றும்,

---

திற்கு முக்கிய விரோதிகள் இந்திரியங்கள் ; அவைகளை விட அதிக விரோதி மனது, அதைவிட அதிக விரோதி புத்தி ; அதைவிட அதிக விரோதி காமம்.

‡ புத்தியைக்காட்டிலும் சிரேஷ்டமான ஆத்மாவை அறிந்து நிச்சயபுத்தியினால் மனதைநிறுத்தித் தடுக்கக்கூடாத காமரூபமான சத்துருவை நிவர்த்திசெய். என்றால், கொல்லு என்பதாம்.

புத்தியைவிட ஆத்மா உயர்ந்ததென்றும் சொல்லப்படும். ஆனால், புத்தியே எல்லாவற்றிலும் இருந்து வேலை செய்து வருகின்றது. புத்தி செய்யும் கார்யங்களையெல்லாம் ஆத்மா கேவல சாக்ஷிமாத்திரனாய்ப் பார்த்துக்கொண்டிருப்பதால் ஆத்மாவிற்கும் புத்திக்கும் விசேஷ பேதமில்லையென்றும், என்றால், புத்தியே ஆத்மாவென்றும், ஆத்மாவே புத்தியென்றும் சொல்லப்படுவதாயிருக்கின்றது. அஃதெப்படியென்றால், புத்தி ஆத்மாவுடன் இருந்துகொண்டு நேத்திரங்களின் வழியாய்ச் சென்றபோது பார்த்துக்கொண்டும், காதுகளின் வழியாய்ச் சென்றபோது கேட்டுக்கொண்டும் நாவழியாய்ச் சென்றபோது ருசி பார்த்துக்கொண்டும், மூக்குவழியாய்ச் சென்றபோது வாசனை பார்த்துக்கொண்டும் தேகசர்மவழியாய்ச் சென்றபோது தொடுகிறதாகவும் இருக்கும். இப்படிச் செய்யும்போது அந்தந்த விஷயங்களில் பிரீதியுண்டானபோது சுகித்துக்கொண்டும், பிரீதி இல்லாதபோது துக்கித்துக்கொண்டும் இருக்கும். சில சமயங்களில் இப்படிப்பட்ட சுகதுக்கங்களில்லாமல் சமபாவமுடையதா யிருக்கும். ஆதலால், இவைகளில் எல்லாவற்றையும்விட புத்தியே சிரேஷ்டமானதாயிருக்கின்றது. ஆதலால், ஓ அர்ஜுநா ! புத்திமானாயிருக்கப்பட்டவன் புத்தியினுடைய சத்து இப்படிப்பட்டதென்று அறிந்தவனாய், அந்தப் புத்தியைக்கொண்டு யுக்தாயுக்தபரிஞ்ஞான முடையவனாய் மனதையும், அதன் மூலமாய் இந்திரியங்களையும் வசப்படுத்திக்கொண்டு, சாக்ஷி பூதமாயிருக்கும் ஆத்மாவிலேயே திருஷ்டியை நிறுத்தி வைப்பானேயானால் அப்படிப்பட்டவன், சுகம் அனுபவிக்கும்போது சந்தோஷமும், துக்கம் அனுபவிக்கும்போது வியசனமும் அடையாமல், அவன் இந்திரியங்கள் விஷயங்களில் ஓடிக்கொண்டிருந்தபோதிலும்,

ஜலத்தில் இருக்கப்பட்ட பக்ஷி அந்த ஜலத்தினால் ஒட்டப்படாமலிருப்பதுபோலும், அத்திப் பழத்திலுள்ள புழுக்களால் அத்திபழம் கெடாமலிருப்பதுபோலும், எந்தவிதமான விகாரங்களையும் அடையாமலிருப்பான். ஆதலால், ஓ அர்ஜுநா! நீ உன் புத்தி பலத்தினால் உன் மனதை சலிக்கவிடாமல் திடமாயிருப்பாயாகில் அசாத்தியமாயிருக்கும் காமமென்னும் அந்த சத்துருவை ஜயிப்பாய். அப்போது, ஆத்மசொரூபத்தை ஆசிரயித்தவனாகின்றாய். என்றால், ஆத்ம நிஷ்டையை அடைந்தவன் காமத்தை ஜயிக்கலாம் என்பதாம்.

ஓ அர்ஜுநா! தத்துவங்களை அறியவேண்டுமென்று எண்ணுவாயாகில் முன்சொல்லியதுபோல் இந்திரியங்களை வசப்படுத்தி உத்கிருஷ்டமாகிய ஆத்மாவைத் தெரிந்துகொண்டு புத்தியினால் மனதை நிச்சலமாய்ச்செய்துகொண்டால், ஜயிக்க அசாத்தியமானவைகளையும், நாச சொரூபனாகிய சத்துருவையும் நசிக்கச்செய்யலாம்.

ஶ்லோ || "க்ஷமோநவாச ஶம்பிரஶோநமூலம் நசித்ததாபோ நதநோர்விமர்தஃ, நசாபிஹிம்ஸாதி ரநர்த யோகஃ ஶ்லாக்யா பரம்க்ரோத ஜயேஹமேகா."

காமத்தையும், அதன் மூலமாய் குரோதத்தையும் ஜயிக்கும் பக்ஷத்தில் வாய் கோணிக்கொண்டுபோகாது, தலை நோயுண்டாகாது, மனது பரிதபிக்கமாட்டாது, உடம்புக் கசங்கிப்போகாது, இம்சைமுதலாகிய அநர்த்தங்கள் யாதொன்றும் உண்டாகமாட்டாது. புகழத்தக்க 'ஸோஹம்' பிரம்மமென்னும் நிரந்தர நிஷ்டையே முக்கியமானது. அது, காமக்குரோதங்களென்னும் பர சத்துருக்களை எப்பொழுதும் ஜயிக்கப்பட்டது. இதற்கு சுருதிப்பிரமாணம்.

"தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸநாதந:
த்யஜேத ஜ்ஞாந நிர்மால்யம் ஸோஹம் பாவேந பூஜயேத்."

நமது சரீரமே தேவாலயமென்றும், இதில் வாசம் செய்யும் ஜீவனே புராதனபுருஷனாகிய பரப்பிரம்மமென்றும் பாவனைசெய்து, அஞ்ஞானமென்னும் பழைய புஷ்பங்களைக் களைந்து, "ஸோஹம்" பிரம்மநிஷ்டை என்னும் புதிய புஷ்பங்களினால் பூஜைசெய்யவேண்டும். இப்படிப்பட்ட நிஷ்டை செய்யச்செய்ய காமக்குரோதங்கள் தமக்குத் தாமாகவே ஒழியும். ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்) அஸம்பிரஞ்ஞாத ஸமாதி என்பதைப் பார்க்க.)

அத்யாய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் ஶ்லோகம்.

யஜ்ஞாத்யம் வர்ணதர்மோ சிதமபி நியதம் கர்மஸர்ம ப்ரதம்ஸ்யா
ந்நத்யாஜ்யம் கார்யமேதத்விகுணமபி யதோகர்மண: கர்மஶஸ்தம்
ஜீவந்மர்த்யம் கதாசித்கரசரணயுதோ நைவதிஷ்டத்யகர்மா
தஸ்மாச்ரேயாந் ஸ்வதர்மோயதுபதிகதிதா ஶசித்தஶுத்தை
[த்ருதீயே.

யாகாதி கர்மங்களை வர்ணாசிரம விஹிதங்களாகிய நித்திய நைமித்திய கர்மங்களை அனுஷ்டிப்பதனால் பரம்பராக்கிரமமாய் மோக்ஷத்தை அடையலாம். ஞானியாகாமலே ஞானியானேன் என்று கர்மத்தை அனுஷ்டிப்பதைவிட்டு உபய பிரஷ்டனாவதேயன்றி வேறொன்றுமில்லை. ஆதலால், சுதர்ம கர்மத்தைவிட்டு உபய பிரஷ்டனாவதைவிட விசேஷமொன்றுமில்லை. தன் குலத்திற்குத் தக்க கர்மத்தை விடாமல் அனுஷ்டிப்பதே முக்கியமானது. ஏனென்றால், மனுஷ்யன் ஜீவித்திருக்கும் வரையில் கரசரணாதி அவயவங்களுடையவனாய் இருப்பதால் ஏதோ ஒரு வேலை செய்யாமலிருக்கான். அப்படிப்பட்ட வேலையே கர்மமென்று சொல்லப்படும். ஆதலால், சித்தசுத்தியும், அதன் மூலமாய் ஞானமும், அதனால், மோக்ஷமும் அடை

வதற்காக ஸ்வர்ணாசிர மவிஹித கர்மத்தை அனுஷ்டிப்பது சிரேஷ்டமானதென்று மூன்றாவது அத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ஜுநனுக்கு உபதேசித்தார்.

ஸ்ரீ பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகஸாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுந ஸம்வாதே
கர்மயோகோநாம
த்ருதீயோத்யாயஃ.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுநனை யுத்தத்திற்கு பிரயத்தினப்படுத்தி லோகோத்தாரணார்த்தமாய் கிருபை செய்து உபநிஷதர்த்தப் பிரதிபாதகமாகிய பகவத்கீதா சாஸ்திரம் கர்மயோகத்தில் த்ருதீயாத்யாயம்.

பக்தஜன சிரோன்மணிகளே! இப்பொழுது ஜீவலக்ஷணத்தைக்குறித்து உபநிஷத்துக்களின் திருஷ்டாந்தங்களுடன் இதனடியில் எழுதப்பட்டிருப்பதைக் காண்க.

ஶ்ரு || "குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்தே
சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி." [கடோபநிஷத்.]

வெய்யிலும், அதன் பிரதிபிம்பமாகிய நிழலும்போல் பரப்பிரம்மமாகிய ஆத்மாவும் பிரதிபிம்பமாகிய ஜீவனும் இவர்களிருவரும் இந்த தேகத்தில் வசிக்கின்றார்கள்.

"ஏகதா பஹுதா சைவ த்ருஶ்யதே ஜலசந்த்ரவத்."
[த்ரிபுராதாபி ந்யுபநிஷத்.]

சந்திரனொருவனே அநேக நீர்க்குடங்களில் பிரதிபலித்து அநேக சந்திரர்களாய்த்தோன்றுவதுபோல், பரப்பிரம்மமாகிய ஆத்மா ஒன்றே நானா ஜந்துக்களின் சரீரத்தில், நானா அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்து அநேக ஜீவர்களாய்த் தோன்றிக்கொண்டிருக்கும்.

"ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ." [கடோபநிஷத்.]

அந்தஃகரண பிரதிபிம்பமே சிதாபாஸஜீவ னென்று சொல்லப்படும்.

"அந்தஃகரண ப்ரதிபிம்பித சைதந்யம் யத் ததேவாவஸ்தா த்ரயபாக்பவதி." [பயிங்கலோபநிஷத்]

அந்தக்கரணம் வெளி சஞ்சாரம் செய்வதனுல் மனது என்றும், அந்தர் (உள்) சஞ்சாரம் செய்வதனுல் புத்தியென்றும் சொல்லப்படும். அந்தக்கரண பிரதிபிம்பமே ஜீவனென்று சொல்லப்படும். இந்த ஜீவன், ஜாக்கிர சொப்ந சுஷுப்தி யென்னும் அவஸ்தாத்திரயங்களுக்கு உட்பட்டவனுய் அந்த அவஸ்தைகளின் விஷயங்களை அனுபவித்துக் கொண்டிருப்பான். ஆனுல், ஆத்மா இந்த அவஸ்தாத்திரயங்களுக்கு உட்படாமல் சாக்ஷி மாத்திரனுய் இருந்து கொண்டிருப்பான். கண்ணுடி ஜடபதார்த்தம்; அதில் தோன்றும் பிரதிபிம்பம் கல்பிதமாகிய ஜடபதார்த்தமாகின்றது. அதுபோல், அந்தக்கரணம் ஜடபதார்த்தம்; அதிலுள்ள பிரதிபிம்பம் கல்பிதமான ஜடபதார்த்தமாகின்றது. ஆதலால், ஜீவன் சேதனனென்று அதாவது ஞான சொரூபனென்றும், நித்தியனென்றும், எப்படிச் சொல்லலாமென்ருல், "தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி." என்னும் கடோபநிஷத் ரீதியாய் அக்கினி சம்பந்தமாகிய விறகுகள் அக்கினிரூபத்தை அடைந்து அக்கினியாய், இதர பதார்த்தங்களை தஹிப்பதுபோல், அந்தக்கரணமும் அதிலுள்ள பிரதிபிம்பமும் ஞானசொரூபமாகிய ஆத்மாவை ஆசிரயித்து ஒன்ருய்ச் சம்பந்தப்பட்டிருப்பதனுல், அந்த பிரதிபிம்பத்திற்கு ஆத்மரீதியாய் சேதநத்வம் என்ருல், என்மனது என் தேகமென்று அறிகிற ஞானம் உண்டாவதனுல், அது சேதனனென்றும், ஜீவனென்றும் சொல்லப்படும். ஆத்மாவின் சம்பந்தமில்லாவிடில் அந்தக்கரணமும், அதன் பிரதிபிம்பமும் ஞானமில்லாத ஜடபதார்த்தமா

யிருக்கும். ஆதலால், "ஆத்மேந்த்ரிய மனோயுக்தம் போக்தேத்யாஹுர்ம நீஷிணஃ." என்னும் கடோபநிஷத்ரீதியாய் ஆத்மா, அந்தக்கரணம், பிரதிபிம்பம் இம்மூன்றும் சேர்ந்து ஜீவனென்று சொல்லப்படும். ஆனால், யதார்த்தமாய் விசாரிக்குமளவில் அந்தக்கரண பிரதிபிம்பமே ஜீவனாகின்றான்.

"ஸசாவிவேக ப்ரக்ருதிஸங்கத்யா தத்ரமுஹ்யதே" "நாநாயோநி ரூதங்கத்வா ஸேதேஸௌ வாஸநாவஸாத் விமோக்ஷாத் ஸஞ்சரத்யேவ மத்ஸ்யஃ கூலத்வயம் யதா."

[த்ரிபாத் ப்ராஹ்மணோபநிஷத்.]

"கர்மேந்த்ரியாணி ஜ்ஞாநேந்த்ரியாணி தத்தத் விஷயாந் ப்ராணாந் ஸம்ஹ்ருத்ய காமகர்மாந்வித அவித்யா பூதவேஷ்டிதோ ஜீவோ தேஹாந்தரம் ப்ராப்ய லோகாந்தரம் கச்சதி, ப்ராக்கர்ம பலபாகேந ஆவர்த்தாந்தர கீடவத் விஸ்ராந்திம் நைவ கச்சதி."

[பயிங்கலோபநிஷத்.]

ஆனால், ஆகாச சந்திரனைப்போல் ஜலசந்திரனும் அசையாமல் இருந்தபோதிலும் ஜலம் அசைவதனால் ஜலசந்திரனும் அசைந்துகொண்டிருக்கும். அப்படி நிர்விகார பரப்பிரம்மமாகிய ஆத்மாவினுடைய பிரதிபிம்பமும் ஜீவனும் நிர்விகாரனாயிருந்தபோதிலும், மாயையென்று சொல்லப்படும். மாயை வலையில் அகப்பட்டு அஞ்ஞானியாய், அனேக சங்கல்ப முண்டாய் பாதரசம்போலச் சலிக்கும் அந்தக்கரணத்துடன் சேர்ந்துகொண்டு, நான் என்னுடைய தேகம் என்பார்யாள் என்னும் தேகாபிமான அகங்கார காமக்குரோத லோப மோஹ மத மச்சராதி குணங்களுடனிருந்து, ஸ்தூல சரீரத்தின் மூலமாய் அனேக கர்மங்களைச் செய்து, தத்பலன்களை அனுபவித்துக்கொண்டு மரணமடைந்தபிறகு, சூக்ஷ்மசரீரத்துடன் கூடிக்கொண்டு சூக்ஷ்மரூபியாய் சொர்க்க நரகங்களை அடைந்து சுகதுக்கங்களை அனுபவித்து மறுபடியும் கர்மசேஷத்திற்காகப்

பூர்வகர்மத்தை அனுசரித்து நானாயோனிகளில் பிறந்திறந்து இவ்விதமாய்ச் சுழல் நீரில் அகப்பட்டுக்கொண்டு அதிலிருந்து தப்பித்துக்கொண்டு போகச் சக்தியில்லாமல், சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் புழுவைப்போல், இந்த ஜீவன் ஜநநமரண துக்கசாகரத்தில் (சமுத்திரத்தில்) மூழ்கி அதைக் கடந்துபோகச் சக்தியில்லாமல் அலைந்து கொண்டிருக்கின்றது. எப்படியென்றால்,

"ஸத்கர்ம பரிபாகதோ பஹுநாம் ஜந்மநாமந்தே ந்ருணாம் மோக்ஷேச்சா•ஜாயதே. ததா ஸத்குரு மாஶ்ரித்ய சிரகாலஸேவயா பந்தம் மோக்ஷம் கஸ்சித் ப்ரயாதி."

என்னும் பிங்கலோபநிஷத் வாக்கியரீதியாய், இவ்விதமாய் ஜீவன் அநேக ஜன்மங்களாய்ச் செய்துகொண்டு வந்த புண்ணிய விசேஷத்தினால் மானவ ஜன்மமெடுத்து மோக்ஷத்தை அடையவேண்டுமென்று எண்ணமுடையவனாய் ஸத்குருவை ஆசிரயித்து, அவருக்குச் சதுர்வித சிசுருஷைகளும், வேதாந்த சிரவணமும் செய்து அதனால் ஆத்மாநாத்ம விவேகமுடையவனாய், தான் பரப்பிரம்மமாகிய ஆத்மாவின் பிரதிபிம்பமென்றும், தனக்கு இந்த ஜீவசொரூபம் கல்பிதமென்றும், நிர்விகார பரப்பிரம்மமாகிய ஆத்மசொரூபமே தனது நிஜசொரூபமென்றறிந்து, தானே பரப்பிரம்மமென்று நிச்சயித்து, நிர்விகாரனாய் அகங்கார மமகாரங்களில்லாதவனாய் உபசாந்த சித்தனாய் சதா ஆத்மத்தியானம் செய்துகொண்டு, ததாகாரமாயிருந்து,

"ப்ரஜ்ஞாநகந ஏவைதேப்யோ பூதேப்ய ஸ்ஸமுத்தாய தாந்யே வாநு விநஶ்யதி.

பிராரப்தகர்மம் நசித்தவுடனே, தேகமும் ஜீவோபாதியும் (ஸங்கல்ப ரூபமாயிருக்கும் மனதும்) நசித்து "ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி" என்னும் சுருதி ரீதியாய் கடா

காசம் மஹாகாசத்தில் கலந்து ஏகமாவதுபோல், அகண்ட ஸச்சிதாநந்த நித்திய நிர்மல பரிபூரணமாகிய பரப்பிரம்மத்தில் ஐக்கியமாய் நித்ய முக்தனாகின்றான். "ஏகோ பஹூநாம் யோவிததாதி காமாந்." என்னும் கடோபநிஷத் ஸ்ருதியாய், பரப்பிரம்மமாகிய ஆத்மா ஒருவனே சகல ஜீவ சாக்ஷியாயிருந்துகொண்டு, அவரவர்களின் இஷ்டானுசாரமாய்ப் பலத்தைத்தருகின்றான். அதாவது, பிரம்மமே தான், தானே பிரம்மமென்று அபேத பாவமுடைய ஞானிகளைத் தன்னில் ஐக்கியம் செய்விக்கின்றான். பிரம்மம் வேறு தான் வேறென்று பேதபாவமுடையவர்களுக்கு அந்த பரப்பிரம்மம், தன்னில் ஐக்கியம் செய்விக்காமல் வேறாகப் பேதரூபமுடையவனாகவே தோன்றும்படிச் செய்விக்கின்றான். ரிஷிகளும் மஹான்களும் அவரவர்கள் இருந்த இடங்களுக்கும் காலங்களுக்கும் ஏற்றவாறு ஒரே கடவுளினது சொரூபத்தையும் வியாபாரத்தையும் பலவிதமாகச்சொல்லி, அக்கடவுளை அறிவதற்கு உபாயமாக பல சாஸ்திரங்களையும், புராணங்களையும், கர்மங்களையும் ஏற்படுத்தினார்கள். ஜலம் திரட்டிவருவதற்கு, ஒருவர் குடத்தையும் ஒருவர் தவலையையும் ஒருவர் சிறிய சொம்பையும், இப்படியாகப் பலவிதமான பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு ஆற்றுக்குச் சென்றார்கள். எல்லோரும் தங்கள் தங்கள் பாத்திரங்களில் நீரை நிரப்பிக்கொண்டு வந்தார்கள். குடத்திலிருந்த நீர் குடத்தினுருவமாகவும், தவலையிலிருந்த நீர் தவலையினுருவமாகவும், மற்றப் பாத்திரங்களிலிருந்த நீர் அந்தந்தப் பாத்திரங்களின் உருவமாகவே தங்கிற்று. குடத்து நீரென்றும், தவலைநீரென்றும், செம்புநீரென்றும் ஜலம் திரட்டியவர்கள் பெயரிட்டார்கள். வித்தியாசமில்லாமல் ஒரேவிதமாய் ஆற்றில் ஓடிக்கொண்டிருந்த நீரானது, பலரூபத்தையும் பலபெயரையும் அடைந்தது. பலரூப

மும் பெயரும் அடைந்தபின்னும், வாஸ்தவத்தில் உள்ளது ஆற்று நீர்தான் : அந்தப் பாத்திரங்களிலிருந்த நீரை யருந்தினவர்கள் ஆற்று நீரைக் குடித்ததாய் எண்ணினார்களே யல்லாமல் வேறில்லை அதுபோல், அந்தந்த ஊர்களிலுள்ள அந்தந்தப் புத்திமான்களுக்கு இருந்த மனோ சக்திக்குத் தகுந்தவாறு எழுதிவைத்த சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் பேதமிருப்பினும், சொல்லும்விதம் பலவாக விருப்பினும், அவைகளெல்லாம் ஒரேமுடிவைக் கருதிக் கூறுகின்றனவென்று நாம் நன்றாய் அறியவேண்டும். இப்படி அறிந்தால் மதச்சண்டைகள் ஒழிந்துபோகும். சகோதர ஒற்றுமையும் உண்டாகும். பொதுவான மதத்தில் ஒழுகவேண்டுமானால் ஒன்றிலும் குற்றங்கூறாது. எல்லாம் முடிவில் சரியென நன்றாக அறிந்து, எந்தமதத்தில் பிறந்தாலும் அந்த மதத்தை விடாது அனுசரித்து உண்மைத்தெரிந்து பொதுவாய் எல்லோருக்கும் போதிக்க வேண்டும்.

எச்சாதியிற்பிறந்தாலும், அச்சாதிக்குரிய கர்மங்களைப் பற்றின்றிச் செய்தால் ஞானம் உண்டாகும். ஆனால், அக்கர்மபலனை உத்தேசித்துச் செய்யக்கூடாது. இதுதான் சர்வோத்கிருஷ்டமான கீதையின் கருத்து : அன்பர்களே! நம்முடைய மனது ஓர் ஏரியைப்போன்றது ; நமக்குண்டாகும் சங்கல்பங்கள் (எண்ணங்கள்) அவ்வேரியில் எழுந்து அடங்கும் அலைகளைப்போன்றன. ஏரியில் உண்டாகும் அலைகள் பார்வைக்கு அடங்கிவிட்டனவாகத் தோன்றுமேயன்றி, உண்மையில் அடங்கினவைகளல்ல. அடங்கிக் கிளம்பிக்கொண்டேதானிருக்கும். அதுபோல், மனமாகிய ஏரியில் சங்கல்பங்களாகிய அலைகளும் எழுந்து உடனுக்குடனே மறைந்து மறைந்துத் தோன்றிக்கொண்டே இருக்கும். அலைகளாகிய சங்கல்பங்கள் மறைந்தவைபோல் தோன்றினும், உண்மையில் அவைகள் மறைந்துபோகவில்லை. அவைகளின் அடையாளம் அல்லது குறிப்பு மனதில் குடிகொண்டேயிருக்கும்.

ஸ்ரீ க்ருஷ்ண பர ப்ரஹ்மணே நம:.

நான்காமத்யாயம்—ஜ்ஞாநயோகம்.

இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்த்வா நஹ மவ்யயம்
விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவே உப்ரவீத். 1.

* ஏவம் பரம்பராப்ராப்த மிமம் ராஜர்ஷயோ விது:
ஸகாலே நேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ! 2.

ஸயேவாயம் மயா தேऽத்ய யோக: ப்ரோக்த: புராதந:
பக்தோஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் 3.

---

* நாசமடையாத பலன் ஏன் நஷ்டமாய்விட்டதென்றால், காலம் செல்லச்செல்ல உபதேசிக்கிறவர்களும் அந்த உபதேசத்தைக்கேட்டு அறிந்துகொள்ளுகிற புத்தியுள்ளவர்களும், இப்பொழுது, ஒருவரும் இல்லாமல் போய்விட்டார்கள். ஆதலால், இந்தக் கர்மயோகம் வரவர க்ஷீணித்துக்கொண்டே வந்துவிட்டது. ஆதலால், ஓ அன்பர்களே ! மஹாராஜாதி ராஜர்களெல்லோரும் எத்தனை வருஷங்கள் ராஜ்ஜியபரிபாலனம் செய்து வந்தபோதிலும் தேஹத்தைவிட்டு ஓடிவிட ஒருநாளுண்டு. நமது ஆயுற்பாகமோ நீர்க்குமிழியைப்போல் சீக்கிரத்தில் அழியத் தக்கதாய் இருக்கின்றது. ஆதலால், இத்தேகம் இருக்கும்போதே ஒவ்வொருவரும் கர்மத்தை அனுஷ்டித்து அதன் மூலமாய் ஞானமடைய பிரயத்தினம் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் பெண்டு பிள்ளைகள் தனதான்னியங்கள் பூமி தோட்டம் முதலானவைகளில் இச்சை வைத்திருந்தால், இவைகளே புருஷனைத் தலையெடுக்கவிடாமல் அதோகதி செய்துவிடும். ஆதலால், இத்தேகத்தில் ஜீவன் இருக்கும்போதே ஒவ்வொருவரும் ஞானமடைய ஜாக்கிரதைப்படவேண்டும்.

கிருஷ்ணன்:—சத்துருக்களைத் தபிக்கச்செய்யும், ஓ அர்ஜுனா! நான் இப்பொழுது சொல்லிய கர்மயோகம் உன்னை யுத்தம் செய்யும்படி பிரேரபணை செய்வதற்காகக் கல்பனைசெய்து சொன்னேனென்று யோசிக்கின்றாயோ! அப்படி யோசிக்கவேண்டாம் பலாபேக்ஷையை விட்டுச் செய்யும் கர்மயோகத்தினால் சித்தசுத்தியும், அதன் மூலமாய் ஞானமும் உண்டாகும். அதுவே வேதாந்தத்தின் அபிப்பிராயமென்றும், அதுவே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமானதென்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட கர்மயோகம் மோக்ஷத்திற்கு ஏதுவாகிய ஞானயோகத்தை தப்பாமல் உண்டாக்குமென்றும் நான், ஜனங்கள் யாவரையும் பரிபாலனம் செய்யும் க்ஷத்திரிய குலத்திற்கெல்லாம் மூல புருஷனாயிருக்கும் சூர்யனுக்கு, சிருஷ்டியாதியில் தானே உபதேசித்திருக்கிறேன். சூர்யனுக்கு உபதேசிப்பதற்குக் காரணமென்னவென்றால், இந்த உலகத்தில் ராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டிருக்கும் க்ஷத்திரியர்கள், ஜனகன் முதலானவர்களைப்போல் பிரஜைகளைப் பரிபாலனம் செய்வதில் நிஷ்காம கர்மயோகானுஷ்டானபரர்களாய் இல்லாவிடில் 'ராஜ்யாந்தே நரகம் த்ருவம்' என்னும் பிரமாணரீதியாய் அவர்களுக்குப் பரலோக ஹானி சம்பவிக்கும். ஆதலால், அப்படி உண்டாகாவண்ணம் ராஜர்கள் எல்லோரும் இந்த யோகத்தை அப்பியசிக்க வேண்டியவர்களாய் இருப்பதனால், க்ஷத்திரிய குலத்திற்கு சூர்யன் ஆதி புருஷனாதலால் அவனுக்கு உபதேசிப்பதற்குக் காரணமாயிற்று. அந்த சூர்யன் இந்த யோகத்தை என் உபதேசம்போல் தன்புத்திரனாகிய மனுவுக்கு உபதேசித்தார்; அந்த மனு தன் புத்திரனுக்கும், ராஜர்களுக்கெல்லாம் முதன்மையானவனுமாகிய இக்ஷ்வாகு மஹாராஜனுக்கும் உபதேசித்தார். இப்படி வம்சபரம்பரையாய் ஒருவரால் ஒருவர்

உபதேசம்பெற்று, எல்லா ராஜர்களும் கிரஹித்ததுமேயல்லாமல் அதிலும் சிலர் சரியாய் அனுஷ்டித்து ராஜரிஷிகளும் ஆனார்கள். அந்த ராஜரிஷிகள் இந்தக் கர்மயோகத்தை நன்றாயறிந்தவர்கள். இப்படி நான் உபதேசித்து பகுகாலமாய் விட்டதாலும், இந்த யோகத்தை அனுஷ்டிப்பதில் ராஜர்களுக்கு சிரத்தை நாளுக்குநாள் குறைவுபட்டு வந்தபடியாலும், இது கிரமக்கிரமமாய் க்ஷீணித்துக்கொண்டு வந்து கடைசியில் பூர்த்தியாக நசித்துவிட்டது.

ஓ அர்ஜுநா! இப்பொழுது நான் இதுவரையில் உனக்குச் சொல்லிவந்த இந்தக் கர்மயோகம் பூர்வகாலத்தில் நான் சூர்யனுக்குச் சொன்னதேயொழிய இப்பொழுது நூதனமாகக் கல்பனை செய்ததல்ல. பூலோகத்தில் இப்படிப்பட்ட உத்தமயோக மிருக்கிறதென்று இப்பொழுது யாருக்கும் தெரிந்திராததலால், இது பகு கோப்யமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட கோப்யமான சங்கதியை உனக்கு மாத்திரம் சொல்வதற்குக் காரணமென்னவென்றால், நீ எனக்கு பந்துவாயும் சிநேகிதனாயும இருப்பதுமேயல்லாமல் அந்தரங்கத்தில் பரமபக்தனாயும் இருக்கின்றாய். ஆதலால், மற்ற ராஜர்களைப் போல் நீயும் பரலோகப் பிராப்தி அடையாமல் இந்தயோகத்தை அனுஷ்டித்து ராஜரிஷியாய், பரலோக சௌக்கியத்தை அடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் உனக்குச் சொல்லவேண்டியதாய் நேரிட்டது.

அர்ஜுந உவாச.

அபரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:
கத மேதத்விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவா நிதி. 4

"பகவானான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி விரோதமாய் சொன்னாரென்னும் சம்சயம் யாருக்கும் உண்டாகாவண்ணம் அர்ஜுநன் பிரஸ்னை செய்கின்றான்."

அர்ஜுநன்:— ஓ சுவாமி! சூர்யன் ஆதியிலேயே அதாவது பிரபஞ்ச சிருஷ்டிகாலத்திலேயே உண்டானவன். நீர் அநேக யுகங்கள் சென்றபிறகு, இப்பொழுது வசுதேவர் கிருகத்தில் அவதரித்தவராயிருக்க, இந்த யோகத்தைப் பூர்வமே சூர்யனுக்கு சிருஷ்டியாதியிலேயே சொன்னேனென்றும், அதை எனக்கு இப்போது உபதேசிக்கின்றேனென்றும் சொல்வதை நான் எப்படி நம்புவேன்!

இப்பொழுது அவதரித்த நீர் சிருஷ்டியாதியில் சூர்யனுக்கு உபதேசித்தேன் என்பது விருத்தமல்லவா என்று அர்ஜுநன் கேட்கவே ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லத் தொடங்கினார்:—

ஸ்ரீபகவாந் உவாச.

* பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந!
தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப! 5

கிருஷ்ணன்— அர்ஜுநா! நீ பிரஸ்னை செய்வதைப் பார்த்தால் நானும் உன்னைப்போல் மனுஷ்யனாயிருக்கின்றேனென்று நீ அபிப்பிராயப்படுவதாய்க் காணப்படுகின்றது. அப்படி எண்ணவேண்டாம். பின் எப்படி என்று கேட்கின்றாயோ? சொல்லுகின்றேன் கேள்:— எனக்கும் அநேக ஜன்மங்கள் கடந்தன; உனக்கும் அநேக ஜன்மங்கள் கடந்தன. ஆனால், நீ கர்ம பந்தனாய் தர்ம

---

* பகவானானவர் தன்னுடைய ஜன்மத்தைக் குறித்துமாத்திரம் பதில் சொல்லவேண்டியவராயிருக்க, அர்ஜுநனுடைய ஜன்மத்தையும் சொல்லி "நான் அறிவேன், நீ அறியமாட்டாய்" என்று சொன்னதின் உத்தேசம் என்னவென்றால், நான் பரப்பிரம்மம், நீ ஜீவன். பரப்பிரம்மம் சகலத்தையும் அறியும். ஜீவன் சகலத்தையும் அறியமாட்டாது. ஆதலால், ஜீவன்வேறு, பரப்பிரம்மம் வேறு என்று பேதத்தைக் காட்டும் பொருட்டு பகவானனவர் அர்ஜுநனையுஞ்சேர்த்து உத்தரஞ்சொல்லினார்.

அதர்மங்களினுல் மூடப்பட்ட அஞ்ஞானமுடையவன். அதனுல் நீ யாதொன்றும் தெரிந்து கொள்ளமாட்டாய். நான் நித்ய (த்ரிகாலங்களிலும் ஏகரீதியா யிருக்கப்பட்டவனும்) சுத்த (திரிகுணுதீதமானவனும்) புத்த (கேவல ஞான சொரூபமானவனும், முக்த (ஸம்சார காரணமாகிய பிரகிருதி சம்பந்த மில்லாதவனும்) ஸத்யமானவனு (ஸஹஜ குணமுடையவனு)மாய் சுவேச்சா ஜன்ம முடையவனுமாய் ஞானதீபம்போல் இருந்து அவைகளையெல்லாம் எப்பொழுதும் நன்றாய் அறிவேன்? என்றால், நீ ஜீவாத்மா நான் பரமாத்மா "நத்வே வாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபாঃ ந சைவ ந பவிஷ்யாம ஸ ஸர்வேவயமதঃ பரம்." நானுகிலும் இந்த ராஜர்களாகிலும் இதற்குப் பூர்வத்தில் இல்லாமலில்லை இனிமேல் உண்டாகாமல் போகப்படுவது மில்லை என்று இதுவரையில் அ-2, சு-12ல், நான் சொல்லியிருந்தேன். ஆதலால், நீயும் நானும் சிருஷ்டியாதி காலத்தில் இல்லாமல் இருந்தவர்களல்ல. ஆனுல், "தேஹிநோஸ்மிந் யதாதேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தர ப்ராப்திঃ" இத்தேஹத்திற்கே பால்ய யௌவன வார்த்திக்கிய தசைகள் மாறுபடுகின்றதே யொழிய ஆத்மாவிற் கல்லவென்று இதுவரையில் அத்யாயம் 2, சுலோகம் 13-ல், சொல்லியிருக்கின்றேன். ஆதலால், சிருஷ்டியாதி காலங்களிலிருந்து நீயும் நானும் அநேக ஜன்மங்கள் எடுத்து இருக்கின்றோம். நீ ஜீவாத்மா, பிரகிருதி (மாயா) சம்பந்தப் பட்டவன்! என்றால், ஞானத்தை மாயையினுல் மூடப்பட்டவனு யிருக்கின்றாய். ஆதலால், உனக்கு பூர்வ ஜன்மங்கள் தெரியவரமாட்டா. நானோ பரமாத்மா நப்ராக்ருதன் என்றால் பிரகிருதி (மாயை)க்கு விலக்ஷணனு (வேறாய்) இருக்கப்பட்டவனுயிருக்கின்றேன். ஆதலால், ஹே பரந்தபா! (சத்துருக்களைத் தபிக்கச் செய்

கிற ஓ அர்ஜுனா) நான் எத்தனை ஜன்மங்கள் எடுத்து எந்தெந்த ஜன்மத்தில் எந்தெந்தக் காரியங்களைச் செய்தேனோ அவைகளையெல்லாம் நான் நன்றாய் அறிவேன்.

அர்ஜுனன்:—ஓ சுவாமீ! நான் ஜீவாத்மா ஆதலால், பிரகிருதிபந்தனாய், என்றால் பிரகிருதி சம்பந்தமாகிய ஸத்வ ரஜஸ் தமோகுணங்களால் செய்யப்படும் கர்மங்களுக்குத்தக்க அநுகூலமான ஜன்மங்களை எடுத்துக்கொண்டு வந்தேனல்லவா? நீரோ பரமாத்மாவாயும் பிபீலிகாதி பிரம பரியந்தமுள்ள ஜந்துக்களுக்கெல்லாம் சிருஷ்டி ஸ்திதிலயங்களுக்குக் கர்த்தனாயும், மாயைக்கு விலக்ஷணனாயும் இருக்கின்றீர். அப்படிப்பட்ட உமக்கும் என்னைப் போல் ஜன்மம் எப்படி உண்டாயிற்று?

அஜோபிஸந்ந வ்யயாத்மா பூதாநா மீஶ்வரோபி ஸந்
ப்ரக்ருதிம் ஸ்வா மதிஷ்டாய ஸம்பவாம் ம்யாத்மமாயயா. 6.

கிருஷ்ணன்:—எப்பொழுதும் ஈசுவரனாயிருக்கப்பட்ட எனக்கும் தர்ம அதர்ம ஸம்ஸ்காரம் இல்லாவிட்டால் ஜன்மம் உன்னைப்போல் எனக்கும் எப்படிவந்ததென்றல்லவோ உனது அபிப்பிராயம். அதைச் சொல்லுகின்றேன் கேள். பிபீலிகாதி பிரம்ம பரியந்தமுள்ள ஸமஸ்த பிராணிகளையும் சிருஷ்டிப்பதற்கும், ரக்ஷிப்பதற்கும், ஸம்ஹாரம் செய்வதற்கும் நானே கர்த்தனாயிருக்கின்றேன். ஆதலால், என்னை திரிகுணாத்மகங்களாகிய மாயை பற்றாது. அப்படிப்பட்ட மாயையை என்னில் நானே ஸங்கல்பித்துக்கொண்டு இந்த உலகத்தில் அவதாரம் செய்கின்றேன். அப்படி அவதாரம் செய்வதனால் என்னுடைய ஈசுவர ஸ்வபாவத்தை விட்டுவிடுவேனென்று எண்ணுகின்றாயோ? நான் இந்த பூலோகத்தில் அவரித்துச் சாமான்னிய மனுஷ்யனைப்போல் நடித்துக்கொண்டிருந்த போதிலும், என் நிஜ சுபாவத்தை விடாமல் ஆசிரயித்தே

இருப்பேன். ஆதலால், நான் அப்போதைக்கப்போது எந்தெந்த அவதாரமெடுத்து எந்தெந்தவேலைகளைச் செய்ததும் அறிவதற்குக் காரணமாயிருக்கின்றது.

அர்ஜுநன்:—ஓ சுவாமி! உமது நிஜ சுபாவம் எப்படிப்பட்டதோ அதை விவரித்துச் சொல்லவேண்டும்.

கிருஷ்ணன்:—எனது நிஜ சுபாவம் எப்படிப்பட்டதென்றால், * நித்ய சுத்த புத்த முக்த ஸத்ய சுபாவமுடையது.

அர்ஜுநன்:—ஐயா! இப்படிப்பட்ட சுபாவமுடைய நீர் பிரகிருதியினால் பந்தப்பட்டு இந்த உலகத்தில் ஸ்வகல்பிதமான மாயையினால் அவதரிக்க வேண்டிய காரணமென்ன?

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத!
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம். 7.

கிருஷ்ணன்:—ஹே பரதவம்சத்திற் பிறந்த அர்ஜுநா! அப்படி அவதரிக்கவேண்டிய அவசரமென்னவெனில், சொல்லுகின்றேன் கேள். இந்த உலகத்தில் எப்பொழுது தர்மங்கள் க்ஷீணித்து அதர்மங்கள் விருத்தி அடைகின்றதோ அப்போதைக்கப்போதெல்லாம் என்னை நானே சிருஷ்டித்துக்கொண்டு நானும் மனுஷ்யனைப்போல் ஒரு மனுஷ்யனாய்ப் பிறக்கின்றேன்.

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே. 8.

---

* நித்யமென்றால்:—எப்பொழுதும் ஒரேவிதமாயிருப்பது. சுத்தமென்றால்:—திரிகுணாத்மகமாகிய பிரகிருதி பற்றாமல் விலக்ஷணமாயிருப்பது. புத்தமென்றால்:—கேவல ஞானமே சொரூபமாயிருப்பது. முக்தமென்றால்:—சம்ஸார ரூபமாகிய பந்தங்கள் இல்லாமலிருப்பது. ஸத்ய சுபாவமென்றால்:—நிஜமானது.

கிருஷ்ணன்:—பிரதியுகத்திலும் நான் ஏன் அவதரிக்கின்றேனென்றால், நான் இதுவரையில் சொல்லியதுபோல் தர்மம் க்ஷீணித்து அதர்மம் எப்பொழுது விருத்தி அடைகின்றதோ அப்போதைக்கப்போது அதர்மத்தைச் செய்து கொண்டிருக்கும் துஷ்ட ஜனங்களை சிக்ஷித்து தர்மத்தைச் சரியாய்ப் பரிபாலனம் செய்துகொண்டு வருகிற சத் புருஷர்களுக்கு அப்படிப்பட்ட துஷ்ட ஜனங்களால் பாதையுண்டாகாமல் இருப்பதற்காக அவர்களை ரக்ஷித்து, தர்மத்தை அனுஷ்டிக்கும் மார்க்கங்களை ஜனங்களுக்குத் தெரிவித்து, அவர்கள் அதை அனுஷ்டிக்கும்படிச் செய்வித்து, க்ஷீணித்த தர்மங்களைப் புனருத்தாரணம் செய்வதற்காக அவதரிக்கின்றேன். மேலும், ஜனங்கள் வர்ணாசிரமம் கெடாமலிருப்பதற்காக அணையைப்போல் இருந்து அவர்களை ரக்ஷிக்கின்றேன். ஆனால், 'உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்த ஜனங்களையும் சமமாய்ப் பரிபாலனம் செய்யாமல், சாதுக்களை மாத்திரம் ரக்ஷிக்கிறதும், துன்மார்க்கர்களைச் சிக்ஷிக்கிறதுமாகிய பக்ஷபாதம் உனக்குத் தகுமா' என்று கேட்கின்றாயோ! சொல்லுகின்றேன் கேள்.

"லாலநே தாடநே மாதுர் ந வைஷம்யம் யதார்பகே,
தத்வதேவ மஹேசஸ்ய நியந்துர் குண தோஷயோ:."

தாய் சொல்வதுபோல் கேட்கும் குமாரனை அவள் அதிகப் பிரீதியுடன் பார்ப்பாள். தன்வார்த்தையைக் கேளாத குமாரனை அடிப்பாளன்றோ? அப்படி அடிப்பதும், தான் சொன்னபடி கேட்டு அவனும் நல்வழிக்கு வரவேண்டுமென்னும் எண்ணத்தினால் அடிக்கின்றாளே யொழிய அவன்மீதுள்ள விரோதத்தினாலல்ல? அது போல், சர்வஞ்ஞனும் சர்வபரிபாலகனும் சர்வேசுவரனும் இருக்கப்பட்ட பகவானானவன் என்னால் ஏற்படுத்தப் பட்ட வேதத்தில் சொல்லப்பட்டதுபோல் நடந்துகொள்

னும் சத்புருஷர்களை ரக்ஷிப்பேன். அப்படி நடந்து கொள்ளாத துஷ்டர்களை, சத்புருஷர்களைப்போல் நடந்து கொண்டு மேன்மையை அடையவேண்டுமென்று, அனுக்கிரஹித்து, புத்திவரும்படி அவர்களை சிக்ஷிக்கின்றேனேயொழிய அவர்களின்மீது துவேஷத்தினாலாகிலும் பக்ஷபாதத்தினாலாகிலும் சிக்ஷிக்கின்றேன் என்று நினைப்பது மிகவும் பிசகென்று தெரிந்துகொள்ளக்கடவாய்.

அர்ஜுநன்:—ஐயா! நீர் சொன்னவைகளெல்லாம் சரியே, ஆனால், ஒன்று சொல்லுகின்றேன் கேளும். நீர் பிரபஞ்சத்திற்கு ஈசுவரனாயிருந்தும சங்கல்பித்த மாத்திரத்திலேயே சகல சராசரங்களையும் சிருஷ்டி செய்யவும், லயிக்கச்செய்யவும் சக்தியுடையவராயிருக்க அப்படிச் செய்யாமல் துஷ்டர்களை சிக்ஷிப்பதற்கும், சாதுக்களை சம்ரக்ஷணை செய்வதற்கும் இந்தப் பூமியில் ஜன்மித்து சம்சார சம்பந்தமாகிய கஷ்டாஷ்டங்களை அனுபவிக்கவேண்டியதேன்? நீர் நினைத்த மாத்திரத்தில் துஷ்டர்கள் நசித்து சாதுக்கள் சுகத்தை அடையமாட்டார்களா?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! நீ சொன்னது வாஸ்தவமே நான் சங்கல்பித்த மாத்திரத்திலேயே துஷ்ட நாசமும் சிஷ்ட பரிபாலனமும், செய்யக்கூடும். அப்படிச் செய்வதனால் நானும் அவர்களைப்போல் ஒருவனாய் அவதரித்துச் செய்யும் வேலைகளினால் உண்டாகும் பிரயோஜனத்தைப் போல், பிரயோஜனம் உண்டாகமாட்டாது. அஃதெப்படியென்றால், விவரமாய்ச் சொல்லுகின்றேன் கேள்:—

கிருதயுகத்தில் இரண்யகசிபனுக்குக் குமாரனும், எனக்குப் பரம பக்தனுமான பிரக்லாதனை அநேக விதங்களாய் இம்சைசெய்து உன் ஹரி எவ்விடத்திலிருக்கின்றானோ காட்டென்று கர்ஜித்து அகங்காரத்துடன் தனது சபா மண்டப ஸ்தம்பத்தைக் காட்டி, இந்த ஸ்தம்பத்தில்

காட்டுவாயா வென்று கேட்கவில்லையா? அப்போது சபா மண்டப ஸ்தம்பத்தில் உத்பவிக்காமலே, அவன் நசிக்க வேண்டுமென்று சங்கல்பித்த மாத்திரத்திலேயே, அவன் நசித்து பிரக்லாதனது இம்சை நிவாரணையானால், என் பக்தனான அவனுக்கு நான் ஸர்வாந்தர்யாமியென்று உண்டாயிருந்த நம்பகம் கெடாமல் இருக்குமா? அப்படிப்பட்ட பரம பாகவதோத்தமனுடைய நம்பகத்திற்கே பங்கமுண்டானால், மற்ற பாமரஜனங்களுக்கு எனது ஸர்வாந்தர்யாமியாகிய விஷயங்களில் நம்பகம் எப்படி உண்டாகும்? அதனாலேயே நான் பிரகலாதனுக்காக ஸ்தம்பத்தில் உத்பவித்தே தீரவேண்டியதாய் நேரிட்டது. இதன்றியும், திரேதாயுகத்தில் ராவணன். சாதுக்கள் முதலாகிய அநேகர்களை அநேக பாதைகள் படுத்திக்கொண்டு தசகண்டனென்று பெயரெடுத்திருந்தானல்லவா? அப்படிப்பட்டவன் நாசமடையும்படி சங்கல்பித்தால் ஒரு க்ஷணமாத்திரத்திலேயே நசித்துப்போவானல்லவா? அப்படிச் செய்யாமல் நான் கௌசல்யா கர்பத்தில் அவதரித்து பதினான்கு வருஷங்கள் கஷ்டப்பட்டு வனவாசம்செய்து, பார்யையைப்போக்கடித்துக்கொண்டு சாமான்னிய மனுஷ்யனைப்போல் பார்யையின் மோகவலையில் அகப்பட்டு, துக்கத்தை அநுபவிப்பவனைப்போல் நடித்துக்கொண்டு, ராவணனுடன் யுத்தஞ் செய்து அவனைக்கொல்வதற்குக் காரணமென்னவென்றால், அந்த அவதாரத்தில் பதினான்கு வருஷங்கள் வனவாசம் செய்ததால் உலகத்திலுள்ள ஜனங்கள் பிதாரு(தந்தை) வாக்கிய பரிபாலனம் இப்படி ஆசிரயிக்கவேண்டுமென்றும்; பரதனும் லக்ஷ்மணனும் நடந்துகொண்டதுபோல் தம்பிமார்கள் தமயனிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறை இப்படிப் பட்டவைகளென்றும்; பதிவிரதையாகிய பார்யை இருக்கவேண்டிய முறை இப்படிப் பட்டதென்

றும்; அப்படிப்பட்ட பார்வையிடத்தில் பர்த்தா இருக்க வேண்டிய பிரேமாதிசயம் இப்படிப்பட்டதென்றும், இவை முதலான அநேக தர்மங்களைக் காண்பித்து, ஜனங்கள் இதுபோல் அனுஷ்டிப்பதற்காகவே எடுத்த அவதாரமே யாம். இப்படிச் செய்யாமல் சங்கல்பித்த மாத்திரத்தில் ராவணனை வதைத்திருந்தால் இப்படிப்பட்ட தர்மங்களெல்லாம் உலகத்தாருக்குக்காட்ட எனக்கு எப்படிச் சாத்திய மாகும்? இப்படியே பிரதி யுகங்களிலும் துஷ்ட சம்ஹாரம் செய்வதே யல்லாமல் உலகத்தாருக்கும் அந்தந்த யுகங்களுக்கு அனுகுண்யங்களாகிய அநேகதர்மங்களைக் காண்பிப்பதற்காகவே அவதரித்துக் கொண்டிருந்தேனே யொழிய வியர்த்தமாயல்ல? (அந்த ராமாயணத்திற்கு அந்தரார்த்தம் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" சம்சாரவாசனை வாசனாத்திரயங்கள் என்பதில் "ராமஏவ பரம்ப்ரஹ்ம" என்பதில் பார்க்க.) ஆதலால், அ-3, சு-22-ல் "நமே பார்த்தா ஸ்திகர்த்தவ்யம்" என்றும் அ-3, சு-23-ல், யதி ஹ்யஹம் நவர்த்தேயம்." என்றும் இதுவரையிலேயே உனக்குச் சொல்லியிருந்தேன். அது உனக்கு ஞாபகமிருக்கின்றதா?

அர்ஜுனன்:—ஆம் ஞாபகமிருக்கின்றது.

ஜந்ம கர்மச மே திவ்ய மேவம் யோ வேத்தி தத்வதஃ
த்யக்த்வா தேஹம் புநர்ஜன்ம நைதி மாமேதி ஸோ஽ர்ஜுந! 9.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! நான் சங்கல்பித்த மாத்திரத்திலேயே பிரபஞ்ச சிருஷ்ட்டியாதி கார்யங்களை யெல்லாம் செய்ய ஸாமர்த்திய முடையவனாயிருக்க, இப்படிச் சாமான்னிய மனுஷ்யனைப்போல் அவதரித்து நடித்துக் கொண் டிருப்பதற்குக் காரணம் சொன்னேனல்லவா? இதுவே என் அவதார ரகஸ்யம். இதை யுத்தவன், விதுரன் முதலானவர்களைப்போல் அந்தரங்கபக்தர்களாய் இருக்கப் பட்டவர்கள் என் மர்மத்தை அறிவார்களேயொழிய மற்ற

வர்கள் அறியமாட்டார்கள். சாதாரணமாய் உலகத்தி என்னை அநேகர்கள் தம்மைப்போல் பிராக்ருத புருஷனாய் எண்ணுவார்களேயொழிய அவதரித்த, * அப்ராகிருத புருஷனென்று அறியமாட்டார்கள். அப்படி அப்ராகிருத புருஷனென்று என்னை அறிந்தவர்கள் மிகவும் அறிதாயிருப்பார்கள். என்றால், ஆயிரத்தில் ஒருவனிருப்பதும் கஷ்டமே. இப்படி அறிந்த இந்தச் சிலரும் நான் அவதார புருஷனென்றும் ஏதோ ஒரு காரணத்தினால், என்றால், இரண்ணியகசிபனை வதைப்பதற்காக நருசிம்ஹாவதாரமும், ராவணனை வதைப்பதற்காக ராமாவதாரமும், கம்சனை வதைப்பதற்காக கிருஷ்ணாவதாரமும் எடுத்தேனென்றும் எண்ணுவார்களே யொழிய லோக சம்ரக்ஷணார்த்தமாய் அதாவது, இதுவரையில் நான் சொல்லியதுபோல் உலகத்தாருக்கு தர்மமார்க்கங்களைப் போதித்து அதன் மூலமாய் தர்ம சம்ஸ்தாபனம் செய்வதற்கென்று அறியமாட்டார்கள். அப்படி அறிந்தவர்களாயிருந்தாலும் இவர்களில் ஆயிரத்தில் ஒருவன் மாத்திரம் என் அவதார பூர்ணோத்தேசத்தையும் நான் செய்யப்பட்ட காரியங்களையும் என் நிஜசொரூபத்தையும் நன்றாய் அறி

---

* அப்ராக்ருத (உலகத்திற்கு விலக்ஷண) மாயும் சவேச்சையாய் ஜன்மமெடுப்பவனும் சிஷ்டரக்ஷண துஷ்டசிக்ஷண தொழிலையே செய்யப் படுபவனென்று யதார்த்தமாய்த் தெரிந்து கொண்டவன் தேஹத்தை விடுவானேயானால் அவனுக்கு மறுபடியும் ஜன்ம மூலமாகிய சம்சாரத்தில் பிரவேசிக்காமல் என்னை அடைவான். என்றால், பிர்மத்தினுடைய யதார்த்த சொரூபத்தை அறிந்தவன் சீக்கிரமாய் பிரம்ம சொரூப பிராப்தியாகிய மோக்ஷம் அடைவான். இந்தசம்சார பந்தவிஷயம் ('ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்' கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது என்பதில் 'ஸச்சிதாநந்தாநுபவ ஸ்வரூபம்ஜ்ஞாத்வா, என்னும் நிராலம்போபநிஷத்துப் பார்க்க.)

வானேயொழிய மற்ற எல்லோரும் அப்படி அறிந்து கொள்வதற்குச் சாத்தியப்படமாட்டாது. அப்படி எவன் அறிந்துகொள்ளுகின்றானோ அவனே எனக்கு அந்தரங்க பக்தனாகின்றான். அப்படிப்பட்டவன் தேகம் விட்டபிறகு மறுபடியும் அவனுக்கு புனராவர்த்தி (மறுஜநநம்) உண்டாகமாட்டாது.

அர்ஜுநன்:—அப்படிப்பட்டவர்களுக்குப் புனர்ஜநநமில்லாமல் போவதற்குக் காரணமென்ன?

* வீதராக பயக்ரோதா மந்மயா மாமுபாஸ்ரிதா:
பஹவோ ஜ்ஞாந தபஸா பூதா மத்பாவ மாகதா: 10.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! என் ஜன்ம கர்மங்களினுடைய யதார்த்தத்தை அறிந்தவர்களுக்குப் புனர் ஜநநமில்லாமல் போவதற்குக் காரணமென்னவென்றால், என் யதார்த்தஸ்திதியை அறிந்தவனெவனோ, அவனே ஞானோதயமானவனாகின்றான். ஞானோதயம் எப்பொழுது உண்டாகின்றதோ, அப்போதே பரிசுத்தாந்தக் கரணமுடையவனாய் என்னையே ஆசிரயித்துக்கொண்டு அவன் மனதை எப்பொழுதும் என்னிடத்திலேயே சேர்ப்பித்தவனாகின்றான். அதெப்படியென்றால்:—

"ப்ரணவோ தநுஸ்ஸரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய முச்யதே
அப்ரமத்தேந வேத்தவ்யம் ஸரவத் தந்மயோ பவேத்."

என்னும், த்யாநபிந்தூபநிஷத் ரீதியாய் பிரணவமே தநுசு, ஜீவனே பாணம், லக்ஷியமே பரப்பிரம்மம். ஆத

* ஒரு பதார்த்தத்தில் அபேக்ஷையும், அந்தப் பதார்த்தம் சம்பவிக்குமோ என்னவோ எனனும் பயமும்: அது சம்பவிக்காமல் செய்தவன்மீது துவேஷமுமில்லாதவனும், நானே பிரம்மம் பிரம்மமே நான் என்னும் அபேத ஞானமுடையவனும், ஸதா பிரம்மநிஷ்டையென்னும் தபசினால் மிகவும் பரிசுத்தாந்தக்கரண முடையவனும் பிரம்மத்துடன் ஐக்கியமாவான்.

லால், ஒரு வேடன் ஒரு குறியில் லக்ஷியம் வைத்துப் பாணத்தை விட்டபோது அப்பாணம் குறிதப்பாமல் அந்த லக்ஷியத்திலேயே சேர்ந்து குத்திக்கொண்டு அதிலேயே ஒட்டிக்கொண்டிருப்பதுபோல், பிரம்மஞானியும் மனது என்னும் தநுசில் ஜீவனென்னும் பாணத்தைப் பூட்டி பிரம்மமென்னும் லக்ஷியத்தில் குறிவைத்து பிரயோகித்தபோது இந்த ஜீவனென்னும் பாணமானது அந்த லக்ஷியமென்னும் பரப்பிரம்மத்தில் போய்ச்சேர்ந்து, அதில் லயித்துத் தத்ரூபமாகும். அப்படி எப்பொழுது சேர்ப்பிக்கின்றானோ, அப்பொழுது அவனுக்கு பிரபஞ்சவிஷயமெதிலும் குரோதம் உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட குரோதம் எப்பொழுது இல்லையோ, அப்போதே அதை அனுசரித்து உண்டாகும் குரோதமும் பயம் உண்டாகமாட்டாது. ஆதலால், இப்படி அநேகர் பரிசுத்தர்களாயிருந்து மோக்ஷத்தை அடைகின்றார்கள்.

அர்ஜுநன்:—ஆனால், நீர் இப்பொழுது சொல்லிய விஷயத்தை யோசிக்குமளவில் உமது அவதார ரகஸ்யங்களையும், நீர் எப்படிப்பட்ட ரூபத்துடன் அவதரித்தபோதிலும், விராட்புருஷனான உமது அப்ராகிருத திவ்விய மங்கள விக்கிரஹமே யொழிய, உமது நிஜசொரூப மல்லவென்பதையும், நன்றாயறிந்த உமது அந்தரங்கபக்தர்களுக்கு மாத்திரமே மோக்ஷம் கொடுப்பதாய்க் காணப்படுகின்றது இப்படியிருக்கும் ஞானிகள் உலகத்தில் மிகவும் அரிதாய்த்தான் இருப்பார்கள். மற்றவர்களில் சிலர் கேவல மூடர்களாய்ப் பகவத் விஷயமாகிய சிந்தை எவ்வளவேனும் இல்லாமல் இருந்தபோதிலும், அநேகர் உமது நிஜசொரூபம் இப்படிப்பட்டதென்றும், நீர் அவதரித்த காரியம் இப்படிப்பட்டதென்றும் தெரிந்துகொள்ளாதவர்களாய், அப்போதைக்கப்போது நீர் தரித்திருக்கும்

அவதாரரூபத்துடன் நடித்துக்கொண்டிருக்கும் மானுஷ ரூபத்தைப்பார்த்து அந்தந்தக் காலத்திலுள்ள மனுஷ்யர்கள் அந்தந்த அவதாரரூபத்தையே உமது நிஜசொரூபமாய்ப் பாவித்துப் பஜித்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி, அவர்கள் பஜிப்பதனால் அது வியர்த்தமாகின்றதா? அப்படிக்கல்லாமல், அதனால் அவர்களுக்குப் பலன் உண்டாகின்றதா?

* யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம் ஸ்ததைவ பஜாம்யஹம்
மம வர்த்மாநு வர்தந்தே மநுஷ்யா: பார்த்த! ஸர்வஶ:. 11.

கிருஷ்ணன்:—ஹே பார்த்தா! நீ சொல்லியதுபோல் இந்த உலகத்தில் என் நிஜஸ்வரூபம் அறியாமல், என் அவதார சொரூபமே என் நிஜஸ்வரூபமென்றெண்ணி பஜிக்கப்பட்டவர்களநேகர் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களையும் நான் வியர்த்தம் செய்யமாட்டேன். அப்படிப்பட்டவர்கள் யான் பரிபூர்ணன் என்னும் ஞானத்தை அடையாமையால் மோக்ஷப் பிராப்தியைப் பெறாவிடினும், அவர்களில் எவரெவர்கள் எந்தெந்தப் பலத்தைக் கோரி, என்னை எந்தெந்த தேவதா ரூபமாய் நினைத்துப் பஜிக்கின்றார்களோ, அவரவர்களுக்கு நான் அந்தந்த தேவதா ரூபத்துடனே, அந்தந்தப் பலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இந்த உலகத்திலுள்ள ஜனங்களெல்லோரும் என்னை அநேகநேக ரூபங்களாய்ப் பஜிக்கின்றவர்களா யிருக்கின்றார்கள். நானே ஆகாசவடிவமாய் எங்கும்

---

*சிலருக்கே மோக்ஷத்தைக்கொடுத்து மற்றவர்களை சம்சாரத்தில் உழலும்படிச் செய்வதால் எனக்கும் ராகத்வேஷங்கள் இருக்கிறதென்று எண்ணுகின்றாயா? உலகத்தில் யார்யார் எந்தெந்தப் பலத்தைக்கோரி என்னை ஆச்ரயிக்கின்றார்களோ அவரவர்களுக்கு அந்தந்தப் பலத்தைத்தந்து அநுக்கிரஹிப்பேன். நித்தியானந்த ரூபமாகிய மோக்ஷத்தைக் கோரப்பட்டவர்கள் அநித்தியமாகிய

நிறைந்திருக்கும் † பரப்பிரம்மமென்று தெரிந்துகொள்ள மாட்டார்கள். நான் நிராகார பரிபூரண பரப்பிரம்மமென்று பிரஜைகள் அறியாமல், ராமனே தெய்வமென்று ராமோபாசனை செய்தாலும், கிருஷ்ணனே தெய்வமென்று கிருஷ்ணோபாசனை செய்தாலும், ந்ருஸிம்ஹனே தெய்வமென்று ந்ருஸிம்ஹோபாசனை செய்தாலும் என்னையே ஆராதித்தவர்களாகின்றார்கள். இந்திரா த்யஷ்ட திக்பாலர்களையும், நவக்கிரஹங்களையும், காளி முதலிய சக்திகளையும், மற்றுஞ்சில க்ஷுத்ரதேவதைகளையும் ஆராதிப்பவர்களுமாயிருக்கின்றார்கள். அந்தந்தத் தேவதைகளின் ரூபங்கள் என்னையன்றி வேறாய் இல்லாமையால் என்னையே ஆராதிக்கின்றவர்களாகின்றார்கள்.‡ ஆதலால், இந்தப் பிரபஞ்சத்தில், பிபீலிகாதி பிரம்ம பரியந்தமாயுள்ள சமஸ்த சராசரங்கள் என் சொரூபமே. "ஸர்வதேவ நமஸ்காரஃ கேசவம் ப்ரதிகச்சதி" என்பதுபோல் சர்வவிக்ரஹங்களின் மூலமாய்ச் செய்யும் ஆராதனைகள் யாவும் என்னையே சேருகின்

ஸூதபலன்களைக்கோரார்கள். (அஹங்கார மமகாராபிமான ரஹிதர்) அவர்களுக்கு மோக்ஷத்தையே கொடுப்பேன். துக்கத்திலிருக்கப்பட்டவர்களை அதினின்றும் நீக்கி ரக்ஷிப்பேன்: "ஸூரத்ருமோ யத்வ துபாஶ்ரிதார்த்தஃ" என்னும் சுருதிரீதியாய், என்னை ஆசிரயிக்கப்பட்டவர்கள் கோரிய பலன்களைக் கல்பக விருக்ஷம்போல் கொடுக்கப்பட்டவனாதலால் யார் எதைக்கோரியபோதிலும்அதைக் கொடுக்கப் படுபவனாயிருக்கின்றேன். ஆதலால், ஜனங்கள் என்னையே ஆசிரயிக்கின்றார்கள். என்னைக்கோராதவர்கள் யாதொரு பலனையும் அடைய ஹேதுவில்லை. இதுவே ஜனங்களின் சுகதுக்கத்துக் காரணம். ஒருவனிடத்தில் பாசமும், மற்றொருவனிடத்தில் துவேஷமும் எனக்கு இல்லை என்று அறிவாயாக.

† பரப்பிரஹ்ம லக்ஷணங்களை, "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" முதல்பேஜியில் குருஸ்துதியின் கீழ், விரிவாய்க் காணலாம்.

றன. ஆதலால், அவரவர்கள் உபாசிக்கும் தேவதாரூபங்கள் மூலமாய் அவரவர்கள் கோரியபலத்தை நானே கொடுத்துக்கொண்டு வருகிறேன். இந்த உலகத்தில், கேவல மூடர்களும், நாஸ்திகர்களும் தவிர, பக்தியுடன் உபாசனை செய்யும் எம்மதஸ்தர்களும் தேவதைகளும் என்னையே ஆராதித்தவர்களாகின்றார்கள். ஆதலால், அவரவர்களின் மனோ நிச்சயத்திற்கும் பக்திக்கும் ஆராதனைக்கும் தக்கவாறு பலத்தை நானே கொடுக்கின்றேன்.

அர்ஜுனன்:—ஐயா! எவரெவர்கள் எந்தெந்தப் பலனைக்கோரி எந்தெந்தத் தேவதையை ஆராதித்தாலும், அந்தந்த தேவதாரூபமாய்ப் பலத்தைக் கொடுக்கப்பட்டவர் நீராகவே யிருந்தால், ஜனங்கள் அந்தந்தப் பலத்தை உத்தேசித்து, உம்மையே ஆராதிக்காமல் அல்ப தேவதைகளை ஆராதிப்பதற்குக் காரணமென்ன?

* காங்க்ஷந்தஃ கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதாஃ
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா. 12.

கிருஷ்ணன்:—இந்தப் பூலோகத்திலுள்ள ஜனங்களில் பெரும்பான்மைச் சிலரே ஞானத்தைப்பெற்று மோக்ஷத்தை அடையவேண்டுமென்று எண்ணுகின்றார்கள். இவர்கள் அல்ப தேவதைகளை ஆராதிப்பதனால் பிரயோஜனமில்லையென்று தெரிந்து மோக்ஷத்திற்கு ஆதார

---

* ஸர்வேசுவரனான நான் ராகத்துவேஷங்கள் இல்லாமல், எல்லோரையும் அநுக்கிரஹித்து சமஸ்த பலன்களைகொடுக்கும் சக்தியுடையவனாயிருக்க "வாஸுதேவஸ்ஸர்வமிதி" எல்லாம் பிரம்ம சொரூபமே என்னும் ஞானமுடையவனை முக்தனாக்குவதும் மற்றவனை அவ்வாறு செய்விக்காததும் எப்படியென்று யோசிக்கின்றாயோ? சொல்லுகின்றேன் கேள். அர்ஜுனா! கர்மங்களினுடைய பலத்தைக் கோரப்பட்டவர்கள் இந்திராதி தேவதைகளை உத்தேசித்து யாகங்களை அனுஷ்டிப்பார்கள்.

மாயிருக்கும் என்னையே ஆராதித்துக் கடைத்தேறுகின்றார்கள். மற்றவர்களோவென்றால், கர்மபலத்தையே ஆசிரயித்துக் கர்மங்களையே செய்கின்றவர்களாயிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பலன்கள் சொல்ப பலன்கள். அல்ப தேவதைகளை ஆராதிப்பதனால் அவைகளை நான் சீக்கிரத்தில், அவர்கள் ஆசிரயிக்கும் அல்பதேவதா ரூபமாய், அவர்களுக்கு அவ்வல்ப பலன்களைக் கொடுக்கின்றவனாயிருக்கின்றேன். எப்படியென்றால், ரம்பா சம்போகாதி சொர்க்க பலத்தைக் கோரப்பட்டவர்கள் இந்திராதி தேவதைகளுக்கு யஞ்ஞம் செய்வார்கள்; ஸந்தானம் வேண்டுமென்று

"ஆகாஶாத் பதிதம்தோயம் யதா கச்சதி ஸாகரம்
ஸர்வதேவ நமஸ்காரஃ கேஶவம் ப்ரதிகச்சதி."

ஸமுத்திர ஜலத்தைக்கொண்டுவந்து ஆகாசமார்கமாய் வருஷிக்கின்ற வர்ஷஜலம் மறுபடியும் ஸமுத்திரத்திலேயே போய்ச் சேருகின்றது; அதுபோல், தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்பட்ட நமஸ்காரங்கள் ஸர்வேசுவரனையே சேருகின்றன. என்பதுபோல எல்லாப் பூஜைகளும் என்னையே சேருகின்றன. சமஸ்த தேவதைகளின் மூலமாய் நானே கர்ம பலத்தைக்கொடுக்கின்றேன். ஆனால், நானே கொடுக்கும் பக்ஷத்தில் மோக்ஷத்தைக்கொடாமல், சொல்பபலத்தை ஏன் கொடுக்கின்றேனென்று கேட்கின்றாயோ?

"யாத்ருஶீ பாவநா யத்ர ஸித்திர்பவதி தாத்ருஶீ"

எந்தக் காரியங்களைச் செய்யும்போது எப்படிப்பட்ட எண்ணம் உண்டாகின்றதோ, அப்படிப்பட்ட பலன்கள் உண்டாகும்; அவர்கள் நசிக்கத்தக்க பலத்தைக்கோரி சுலபமாய்ப் பலத்தை அடையலாம் என்னும் எண்ணத்தினால் யோகத்தைச்செய்வார்கள். அதனால், அழியத்தக்க சொர்க்காதி அநித்திய சுகத்தைக்கொடுப்பேன். அநேககால அப்பியாசத்தினாலும் "வாஸுதேவஸ்ஸர்வம்" என்னும் அனுபவத்தினாலும் பிரம்மஞானி அநுஷ்டித்துவருவான். அதனால், அவனுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பேன். அவரவர்களின் எண்ணத்தைப்போல் பலன்களைக் கொடுத்துக்கொண்டுவருவேன்.

கோரப்பட்டவர்கள் அரசமரத்தைப் பிரதக்ஷிணம் வருவார்கள், ஏதேனும் குரூரமான கிரஹசாரம் இருந்தால், நவக்கிரஹங்களை ஆராதித்து பிரதக்ஷணம் வருவார்கள்; ஏதேனும் ஆபத்து உண்டானால், அந்த ஆபத்துத் தீரும்படி சுந்தரகாண்ட பாராயணம் செய்வார்கள்; ஐசுவர்யம் முதலானவைகளைக் கோரப்பட்டவர்கள் சூர்ய நமஸ்காரங்களைச் செய்வார்கள். இப்படி அநேக விதங்களாகிய பலன்களை ஆசிரயித்து அந்தப் பலன்களைத் தரத்தக்க அநேக தேவதைகளை ஆராதித்துக்கொண்டிருப்பார்கள். இந்த அல்ப தேவதா ரூபமாய் நானே அவர்களுக்கு அழிந்து போகத்தக்க சொல்ப பலத்தை அவ ரவர்களுக்குத் தக்கபடி கொடுத்துக் கொண்டுவருவேன். அவர்கள் அப்படி அல்ப தேவதைகளை ஆசிரயிக்காமல், எப்பொழுதும் எந்த இச்சையுமில்லாமல் என்னையே ஆசிரயித்துவந்தால், அவர்களுக்குப் பெறுத்த ஸாம்பிராஜ்ஜிய பதவியாகிய மோக்ஷத்தைக் கொடுப்பேன். ஆனால், அவர்கள் அப்படி என்னை ஆராதிக்க மாட்டார்கள். ஏனென்றால், மனிதர்கள் பிரபஞ்ச சிருஷ்டி முதல் இதுவரையில் அநேக கோடி ஜன்மங்கள் எடுத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு ஜன்மங்களிலுமுள்ள பெண்டு பிள்ளை தனதான்னிய கிருஹம் பூமி முதலானவைகளின்மீதே ஆசையுடையவர்களாய்ப் பிசினைப்போல் பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு இருப்பதனால், நன்மார்க்கமாகிய மோக்ஷத்திற்கு இடங்கொடாமல் அந்தச் சம்சார பந்தத்திலேயே இழுத்துக் கொண்டுபோகும். இதைத்தான் பூர்வ வாசனையென்றும், பந்தமென்றும் சொல்லுவார்கள். இப்படியாக எத்தனை கல்பகோடி யுகங்களாயிருந்தபோதிலும் பிபீலிகாதி பிரம்ம தேவன் வரையில் ஏதோ ஒருகாலத்தில் என்னில் ஐக்கியமாகப்படுபவர்களாகவே யிருக்கின்றார்கள். அப்படி என்

னையடைவது மிகவும் கஷ்டம். பலாபேக்ஷையை விட்டு நிஷ்காமகர்மனாய் கர்மத்தை ஒருவன் செய்துவந்தால், அநேக ஜன்மங்களுக்குப்பின் ஞானமுண்டாய் அந்த ஞானத்தீயினால் அவனது ஆகாம்ய சஞ்சித கர்மங்கள் பஸ்மமாய், பிறகு என்னில் ஐக்கியமாவான். ஆகாம்ய சஞ்சித கர்மங்கள் உள்ளவரையில் ஜன்மங்கள் எடுத்துக் கொண்டே வரவேண்டும். எந்தநாள் எந்தக்ஷணத்தில் ஆகாம்ய சஞ்சிதங்கள் பஸ்மமாய் விடுகின்றதோ அந்த க்ஷணமே சரீர மிருக்கு மளவில் பிராரப்த கர்மத்தை அனுபவித்துவிட்டுச் சரீரம் விட்டவுடன் என்னில் ஐக்கியமாகின்றான். இதுவே வேதாந்தத்தினுடைய மஹா ரஹஸ்யம் இந்த ரஹஸ்யத்தை நான் உனக்குப் போதித்தேன். ("ஜீவ ப்ரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல். சஞ்சித பிராப்த ஆகாம்ய கர்மங்கள் என்பதைப்பார்க்க.)

அர்ஜுனன்:—நல்லது, உத்தமர்கள், ராம கிருஷ்ணாவதார ரூபங்களையும்; மத்யமர்கள், இந்திராதி தேவதைகளையும்; அதமர்கள், கங்கம்ம, அங்காளம்ம, போலேரம்ம படவேட்டம்ம, முநீசுவரன், காட்டேரி, பேதாளங்கள் முதலாகிய அல்பதேவதைகளையும் ஆராதிக்கின்றார்களே அதற்குக் காரண மென்ன?

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஶ:
தஸ்ய கர்த்தார மபி மாம் வித்யகர்த்தார மவ்யயம். 13

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இவ்வுலகத்திலுள்ள ஜனங்களில் சிலர் கேவல ஸத்வகுண பிரதானர்களும், சிலர் ஸத்வ ரஜோகுணங்கள் மிசிரமுடையவர்களும், சிலர் ரஜஸ்தமோ குணங்கள் மிசிரமுடையவர்களும், மற்றும்சிலர் கேவல தமோகுண பிரதானமுடையவர்களுமா யிருக்கின்றார்கள். இதில், முதல்வகுப்பினர்கள் என்றால், கேவல

ஸத்வகுணப் பிரதானமுடைய பிராம்மணர்களுக்கு சமம் (பஹிரிந்திரிய நிக்கிரஹம்) தமம் (அந்தரிந்திய நிக்கிரஹம்) தபஸ் முதலாகிய கர்மங்க (வியாபாரங்க)ளும் உண்டாய் தேவதைகளையே ஆராதிப்பார்கள். இரண்டாவது வகுப்பினர்கள் என்றால், ஸத்வ ரஜோகுணங்கள் மிசிரமுடைய க்ஷத்திரியர்களுக்குச் சௌர்ய (சூரத்வ)மும், தேஜஸு (பிரதாபமு)ம், ஔதர்யமும், தாட்டியத்துவமும், யுத்தமும், ராகமும், ஈசுவரத்துவமும் முதலாகிய சுபாவ குணங்களுடையவர்களாய் தேவதைகள், யக்ஷராக்ஷ சுரர்களையே ஆராதிப்பார்கள். மூன்றாவது வகுப்பினர்கள் என்றால், ரஜஸ் தமோகுணங்கள் மிசிரமுடைய வைசியர்கள், கிருஷி (வியவசாயம்) கோ சம்ரக்ஷணை (பசுக்களைக்காப்பது) வாணிஜ்யம் (வர்த்தகம்) முதலாகிய சுபாவ கர்மங்களுடையவர்களாய் யக்ஷராக்ஷச பூதப்பிரேத கணங்களை ஆராதிப்பார்கள். நான்காவது வகுப்பினர்கள் என்றால், கேவல தமோகுணப் பிரதான முடையவர்களாகிய சூத்திரர்கள் பிராம்மணர்களுக்கு சிசுருஷைசெய்வதே சுபாவகுண முடையவர்களாய்ப் பூதப்பிரேத கணங்களைமாத்திரமே ஆராதிப்பார்கள். இந்த நான்கு குணமுடையவர்களும் அந்தந்தக் குணங்களை அனுசரித்து உத்தம மத்யம அதம அதமாதமங்களான நான்கு வர்ணத்தாரையும் சிருஷ்டித்தேன். இந்த நான்கு வர்ணங்களையும் இதரலோகங்களில் சிருஷ்டிக்கவில்லை. நான் மாயா வியவஹாரத்தினால் சிருஷ்டிகர்மத்திற்குக் கர்த்தனயிருந்தாலும், பாரமர்த்தத்தில் எனக்குக் கர்திருத்வமில்லை. ஏனென்றால், பாரமார்த்தத்தில் என்னைவிட வேறு வஸ்து இருந்தாலல்லவோ, நான் அந்த வஸ்துவை சிருஷ்டித்தேனென்று சொல்லலாம். ஆதலால், என்னை அசம்சாரியாகவே நினைக்கவும்.

நமாம் கர்மாணி லிம்பந்தி நமே கர்ம பலே ஸ்ப்ருஹா
இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபிர்ந ஸபத்யதே. 14.

அப்படிப்பட்ட கர்மங்களினால் உண்டாகும் புண்ணிய பாபங்கள் என்னைப்பற்றா. கர்மபலத்தின் இச்சையும் எனக்கில்லை. இப்படி என்னை எவன் அறிகின்றானோ அவன் கர்மத்திற்குப் பாத்திரனாகமாட்டான். என்றால்: எந்த சிருஷ்ட்டியாதி கர்மத்திற்கு என்னைக் கர்த்தனாய் நினைக்கின்றானோ? பாரமார்த்தத்தில் அந்தக் கர்மத்திற்கு நான் கர்த்தனல்ல. அஸங்கனாயிருப்பதால் சிருஷ்டியாதி கர்த்திருத்துவ ரூபமாகிய கர்மங்கள் என்னைப்பற்றா. சம்சாரிகளுக்கு நான் கர்மத்தைச்செய்தேன் என்னும் அபிமானமும், தத்பலத்தில் அபிலாஷையும் இருக்குமாதலால், அவர்களுக்குக் கர்மம் உடனே உண்டாய் தேஹாதிகள் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கும். நான் அப்படிப்பட்ட அஹங்காரமில்லாதவனாதலால், எனக்குக் கர்ம பலத்தில் அபேக்ஷையில்லை. நான் எந்தப் பலத்தையும் நினையாமல், சகல கர்மங்களையும் அனுஷ்டித்து வருவேன். சூர்யன் ஜகத் வியாபாரத்திற்கு ஹேது பூதனாயிருந்த போதிலும், எந்தக் கர்மங்களையும் பற்றாமல் எப்படி அஸங்கனாயிருப்பானோ அதுபோல், நான் அந்தக் கர்மங்களுக்கு ஹேது பூதனாயிருந்தாலும் அவைகள் என்னைப் பற்றாது.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! நீர் சொல்லிய கர்மத்தின் பலன் உம்மைப் பற்றாமல் எப்படிப் போகும்? "அவஸ்ய மநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்" என்பது போல், ஒருவன் செய்த கர்மபலத்தை அவன் அனுபவித்தே தீரவேண்டுமென்னும் விதியிருக்க, உம்மைக் கர்மங்கள் பற்றாவென்று சொன்னால் யாவராயினும் நம்புவார்களா?

கிருஷ்ணன்:—நல்லது, இதுவிஷயமாய் உனக்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள். பிரபுத்துவம் செய்யப்பட்ட ஒரு ராஜனிடத்தில் குலைசெய்த ஒரு குற்றவாளியைக் கொண்டுவந்தபோது அவன்மீது குற்றம் ஏற்பட்டபடியால் ராஜன் மரணதண்டனை விதிக்கின்றான்; அப்போது அவனைக்கொன்ற பாபம் ராஜனைச் சேருகின்றதா?

அர்ஜுனன்:—அவனைக் கொன்ற பாபம் ராஜனைச் சேராது. ஏனென்றால், அவன் குற்றம் செய்தபடியால் அவனுக்குத் தக்க தண்டனை விதித்தானே யொழிய, அவனிடத்தில் துவேஷமாயினும் அவனைக் கொல்லவேண்டுமென்னும் இச்சையாயினும் ராஜனுக்கு எவ்வளவேனும் இல்லவேயில்லை. ஆதலால், அது ராஜனைப் பற்றாது.

கிருஷ்ணன்:—அதுபோல், எவனெவன் எந்தெந்தக் கர்ம முடையவனா யிருக்கின்றானோ, அவனவனுக்கு அந்தந்த வர்ணாச்சிரமங்களை ஏற்படுத்தினேனே யொழிய, ஒருவனை அபிமானித்து பிராம்மணனாகவும், மற்றொருவனை துவேஷித்து சூத்திரனாகவும் ஏற்படுத்தவில்லை. ஆதலால், அப்படிப்பட்ட கர்மங்களை என்னை ஏன் பற்றுகின்றனை?

அர்ஜுனன்:—ஆம் உம்மைப்பற்றா. ஆனால், உம்மை அறிந்தவர்களும் கர்மபத்தர்கள் ஆகமாட்டார்களென்று சொன்னீரே! அது எப்படி?

கிருஷ்ணன்:—இப்பொழுது நான் சொன்ன திருஷ்டாந்தத்திலுள்ள குற்றவாளிக்கு, ராஜன் மரணதண்டனை விதிக்கின்றானல்லவா? அப்படி ராஜனது ஆஞ்ஞையை நிறைவேற்றுபவர்கள் ராஜனது சேவகர்களல்லவா? ராஜன் குற்றவாளியை இரண்டு சேவகர்களிடம் ஒப்பித்துக் கொலைசெய்யச் சொன்னதாகக் கொள்வோம். அதில் ஒரு சேவகனுக்கு அந்தக் குற்றவாளியின்மீது ஏதோ ஒரு

த்வேஷம் இருந்தது; அதனால் அவன் ஒஹோ! இவன் நம் கையில் அகப்பட்டான்; இவனை இப்போது கொன்று நம் பகையைத் தீர்த்துக்கொள்ளச் சமயம் நேர்ந்தது என்று சந்தோஷித்துக் கொல்லும் விஷயமாகிய கர்மத்தில் பிரவேசிப்பானல்லவா? த்வேஷமில்லாத மற்றொருவனோ ஐயோ பாபம்! இவனை நம் கையால் கொல்லவேண்டிய தாய் நேரிட்டதே, இதற்கு நாம் என்ன செய்வோம். ராஜனது ஆஜ்ஞையை நாம் நிறைவேற்ற வேண்டியவனாயிருக்கின்றோமே. ராஜனாகிலும் இவனிடத்தில் த்வேஷத்தை வஹித்து இப்படிப்பட்ட ஆஜ்ஞையைச் செய்தவனல்லவே? குற்றவாளியைச் சிக்ஷித்து நியாய பரிபாலனம் செய்வது ராஜனுடைய விதியாயிருக்கின்றதே. இவன் கொலை செய்தவனாதலால் இவனுக்கு இப்பேர்ப்பட்ட தண்டனை ராஜன் விதிக்க நேர்ந்ததேயொழிய இதர உத்தேசம் ராஜனுக்கு இல்லையே. மரண தண்டனை விதிப்பது ராஜனுடைய தொழிலாயிருக்கின்றதே? இது, எவ்வளவு க்ரூர கார்யமாயிருந்தபோதிலும், ராஜனது ஆஜ்ஞையைப் போலவே செய்யவேண்டியதாயிருக்கின்றதல்லவா? இந்த க்ரூர கிருத்தியத்தைச் செய்ய எனக்கு விதிக்கப்பட்டிருக்கின்றதே; இதைச் செய்யாமலிருக்கவும் கூடாதே என்று வியசனத்துடன் அவன் தொழிலைச் செய்வானல்லவா? இவர்களிருவர்களில் எவனுக்கு இக்கர்மபாபம் சித்திக்கும்?

அர்ஜுனன்:—இதில் முதலில் சொல்லிய சேவகனுக்கு மாத்திரம் இந்தப் பாப கர்மங்கள் பற்றுமேயொழிய, இரண்டாவது சொல்லிய சேவகனைப் பற்றுமென்று தோன்றுகின்றது. ஏனென்றால், இரண்டாவது சேவகன் குற்றவாளிக்குத் தக்க தண்டனை ராஜன் சிக்ஷித்தானென்றும், தான் ராஜனது ஆஜ்ஞையை நிறைவேற்றுகின்றேனென்

றும், அந்தக்கர்மத்தில் எவ்வித ஆசக்தியுமில்லாமல் விதிகிருதமாய் செய்கின்றானதலால், அவனுக்கு அந்தக் கர்மத்தினால் எப்பேர்ப்பட்ட தோஷங்களும் அணுகமாட்டாது.

ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபிঃ
குரு கர்மைவ தஸ்மாத்த்வம் பூர்வைঃ பூர்வதரம் க்ருதம். 15.

கிருஷ்ணன்:—அதுபோல் நான் கர்த்தனல்ல, எனக்குக் கர்மபலத்தில் அபேக்ஷையுமில்லை என்கிற விஷயங்களை அறிந்துகொண்டு, பூர்வீகர்களில் முமுக்ஷுவாயிருந்த ஜனகன் முதலானவர்கள் கர்மத்தை அனுஷ்டித்தார்கள். ஜனகாதி முதலாகிய மஹான்கள் அநாதியாய்ச் செய்துவந்த கர்மத்தில் ஆத்மஜ்ஞனாய்ச் சித்தசுத்தி அடைந்த தத்துவவேத்தர்களானாலும், லோக சங்கிரஹார்த்தமாய்க் கர்மத்தைச்செய்யவேண்டும். சாஸ்திரங்களில் நம்பகம் இல்லாவிடினும், சிஷ்டர்களாகிய ஜனகாதிகள் இதில் ஏதோ விசேஷ மில்லாவிட்டால் அனுஷ்டிப்பார்களா வென்று எண்ணி, அவர்களைக் குறித்தாகிலும் இந்தப் புராதனமான கர்மயோகத்தை நீ அனுஷ்டிக்கக்கடவாய்.

கிம் கர்ம கி மகர்மேதி கவயோ ப்யத்ர மோஹிதாঃ
தத்தே கர்மப்ரவக்ஷ்யாமியத்ஜ்ஞாத்வாமோக்ஷ்யஸேஶுபாத் 16.
கர்மணோ ஹ்யபி போதவ்யம் போதவ்யஞ்ச விகர்மணঃ
அகர்மணஶ்ச போதவ்யம் கஹநா கர்மணோ கதிঃ. 17.

முமுக்ஷுக்கள் அனுஷ்டிக்கவேண்டிய கர்மம் எதுவோ, கர்மத்தில் அந்தர்ப் பூதமும் ஆத்மசொரூப ஞானரூபமாகிய அகர்மமெதுவோ என்னும் இவ்விரண்டு விசாரணையிலும் பண்டிதர்களும் மோசம் போகின்றார்கள். கர்மமென்றால் கரசரணாதிகளுடன் செய்யப்படும் தொழில். அகர்மமென்றால், தொழில் செய்யாமலிருப்பது இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் விசேஷம் என்ன

இருக்கின்றதென்று எண்ணவேண்டாம். அப்பேர்ப்பட்ட கர்ம, அகர்மங்களின் விசேஷத்தைத் தெரிவிக்கின்றேன். அதைத் தெரிந்துகொண்டால் சம்சாரபந்தம் உன்னைப் பற்றாது. கர்மமென்றால், ஸ்வர்ணாசிரம விஹிதமாகிய கர்மம். அகர்மமென்றால், கர்மத்தை அனுஷ்டிக்கப்பட்டவனுடைய ஆத்ம (தன்) ஸ்வரூபம் இப்பேர்ப்பட்டதென்று தெரிந்து கொள்ளும் ஞானம். இந்த ஞானமானது கர்மத்தில் அந்தர்ப்பூதமா யிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களையும் சாஸ்திரங் களினால் நிஷேதிக்கப்பட்ட விகர்மங்களையும் செய்யாமல் சும்மா யிருப்பதுமாகிய அகர்மங்களின் சொரூபத்தை நீ முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால், இந்தக் கர்ம அகர்ம விகர்மங்களினுடைய தத்துவங்களைத் தெரிந்துகொள்வது மிகவும் கஷ்டம்.

"கர்மாகர்ம விக்ரம மர்ம ஸூக்ஷியா போததவ்யமேவா திதஃ
கர்மஸ்யாத்விதி பூர்வகந்து மநஸா ஸர்வேந்த்ரிய வ்யாப்ருதிஃ
தத்வேதா ஸபலம் பலேந ரஹிதம் த்வாத்யம் விகர்ம ஸ்ம்ருதம்
பந்தா தந்யதகர்ம ஸூக்ஷ்திகரணு ந்நைஷ்கர்ம்யதாமாகதம்."

என்னும் சுருதிரீதியாய் யஞ்ஞத்திற்கு வேண்டிய உபகரணங்களைப் பார்ப்பதற்குக் கண் இந்திரிய வியாபாரம்; யஞ்ஞத்தைத் தெரிவிக்கும் வேதத்தைக் கேட்பது காதிந்திரிய வியாபாரம்; ஹோம தூமத்தை ஆக்கிராணிப்பது மூக்கிந்திரிய வியாபாரம்; யஞ்ஞ பாத்திரங்களைத் தொடுவது துவகிந்திரிய வியாபாரம்; புரோடாசமென்னும் ஹோம திரவ்வியத்தைப் பக்ஷிப்பது நாவிந்திரிய வியாபாரம்; யஞ்ஞ சாமத்திரயங்களைச் சம்பாதிப்பதற்காகக் கைகளாலும் கால்களாலும் வேலைசெய்வது பாணி பாதேந்திரிய வியாபாரம்; யஞ்ஞத்தில் விதிக்கப்பட்ட மந்திரங்

களைப் பாடனம்செய்வது வாக்கிந்திரிய வியாபாரம்; ருது காலங்களில் பார்யையுடன் ஸம்ஸர்க்கம்செய்வது உபஸ்தேந்திரிய வியாபாரம்; தக்ஷிணமுகமாய் பஹிர்தேசம் போவது குதேந்திரிய வியாபாரம்; இவை முதலாகிய வேதோத்தம இந்திரிய வியாபாரங்கள் கர்ம சம்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட கர்மம் சொர்க்காதி லோக சுகத்தை உண்டாக்கத்தக்கது நபலம் என்றும், மோக்ஷத்தை உண்டாக்கத்தக்கது அபலம் என்றும் இரண்டுவிதங்கள். இவ்விரண்டு விஷயங்களும் விதியினால் உண்டாகும். இந்த விதி சங்கல்பத்தினால் உண்டாவதேயாம் முதலிற் சொல்லியது அழியத்தக்க பலன் சம்சாரத்தை உண்டாக்கத்தக்கதாதலால், விகர்மமென்று சொல்லப்படும். மோக்ஷப்பிராப்தியாகிய இரண்டாவது அகர்மமென்று சொல்லப்படும். ஏனென்றால், பலாபேக்ஷ ரஹிதமாய்ச் செய்யப்படும் கர்மத்தினால் சித்தசுத்தி யுண்டாய், பிறகு அது நசித்து ஞானநிஷ்டை யென்னும் பெயரையுடைய நைஷ்கர்ம்மியாவஸ்தைக்குச் சாதனமாகின்றது. முதலில் சாஸ்திரத்தினால் நிஷேதிக்கப்பட்டது விகர்மமென்று சொல்லி, இவ்விடத்தில் ஸ்வர்க்க சாதன கர்மம் விகர்மமென்று சொல்வதற்குக் காரண மென்னவென்றால், முமுக்ஷு திருஷ்டியினால் சொர்க்கத்தைக் கோரப்பட்ட பலத்தில் சேர்ந்தது. ஆதலால், இது நிஷித்த கர்மமென்று சொல்லப்படும். பூமண்டலாதிபத்யம் கோரப்பட்டவன் கிராமாதிகாரத்தில் அஸஹ்யப்படுவானல்லவா? ஆதலால், ஓ அர்ஜுனா! இவ்வுலகத்தில் சில கர்மங்கள் வேதோத்தமமாயும், சாஸ்திரவிஹிதமாய் அனுஷ்டிக்கத்தக்கதாயும், மற்றும் சிலது அந்தவேதங்களினாலும் சாஸ்திரங்களினாலும் நிஷேதிக்கப்பட்டு அனுஷ்டிக்கக் கூடாமையாயும் இருக்கின்றனவல்லவா?

அர்ஜுனன்:—ஆம்!

கிருஷ்ணன்:—அப்படிப்பட்ட வேத சாஸ்திர பாராயணம் செய்யப்பட்ட வித்துவாம்சனுக்கு கர்மங்களில் இது முக்கியமென்பதும், இது அமுக்கியமென்பதும் தெரியுமல்லவா?

அர்ஜுனன்:—ஆம்!

கிருஷ்ணன்:—அப்படிப்பட்ட வித்வாம்சனுக்கும் சில ஸமயங்களில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தினால் செய்யும் காரியம் சாஸ்திர விஹிதமாயிருந்தாலும் இதைச் செய்யலாமாவென்றும், மற்றொரு காரியம் சாஸ்திர நிஷித்தமா யிருந்தாலும் இதை நாம் ஏன் செய்யக்கூடாது என்றும் சந்தேகத்தை உண்டாக்கும்.

அர்ஜுனன்:—இது விசித்திரமாயிருக்கிறது. ஐயா! சமஸ்த வேதங்களையும் சாஸ்திரங்களையும் அறிந்த வித்துவாம்சனுக்கு இப்பேர்ப்பட்ட சந்தேகம் எப்படி உண்டாகும்?

கிருஷ்ணன்:—ஆனால், அதற்கு ஒரு திருடாந்தம் சொல்லுகின்றேன் கேள். வேதசாஸ்த்திரங்களை நன்றாயறிந்த ஒரு வித்துவாம்சன், ஏதோ ஒரு காரியார்த்தமாய்க் காட்டுக்குச்சென்று அவ்விடத்தில் ஒரு விருக்ஷத்தினடியில் உட்கார்ந்திருந்தான். அவனுக்குச் சிலதூரத்திலிருந்த வழிபாட்டையில் ஒருவன் திரவ்வியத்தை யெடுத்துக் கொண்டு ஏகாங்கியாய் வருவதை ஆயுதபாணிகளாகிய சில திருடர்கள் பார்த்து அவனைத் துரத்திக்கொண்டு வந்தார்கள். அப்போது நிராயுதபாணியாயிருக்கும் பாட்டைசாரி பார்த்துப் பயந்து பாட்டையைத் தப்பித்துக் காட்டில் புகுந்து, இந்த வித்துவாம்சனுக்குச் சமீபத்திலிருந்த ஒரு புதரில் நுழைந்து ஒளித்துக்கொண்டான். இவைகளை யெல்லாம் அந்த வித்துவாம்சன் பார்த்துக்கொண்டே

யிருந்தான். அவன் மறைந்தவுடனே, அந்தத் திருடர்கள் வித்துவாம்சன் இருக்கும் இடத்திற்குவந்து இம்மார்க்கமாய் ஓடிவந்தவன் எப்படிச் சென்றானென்று கேட்டார்கள். அப்போது, வித்துவாம்சன் என்ன சொல்லலாம். அந்த மார்க்கஸ்தன் எதிரிலிருக்கும் புதரில் ஒளிந்திருக்கின்றானென்று யதார்த்தத்தைச் சொல்லலாமா? அல்லது மற்றொரு திசையைக் காட்டி இம்மார்க்கமாய்ச் சென்றானென்று பொய் சொல்லலாமா? அல்லது வாயைத் திறக்காமல் மௌனத்தைத் தரித்துச் சும்மா இருக்கலாமா? இம்மூன்றில் எது செய்வது யுக்தம்?

அர்ஜுநன்;—சுவாமி! எதைச் சொல்லுவதும் மிகக் கஷ்டமா யிருக்கின்றது. ஏனென்றால், வித்துவாம்சன் அந்தக் கள்ளர்களுக்கு நிஜத்தைச் சொன்னால், நிரபராதியும் நிராயுதபாணியுமாகிய மார்க்கஸ்தனுடைய பிராணத்திற்கும் தனத்திற்கும் ஆனியுண்டாகும். அப்படிச் சொல்வது யுக்தமாய்க் காணப்படவில்லை. அவர்களுக்குத் தப்பு மார்க்கத்தைக் காட்டினால் பொய் சொல்வது நிஷித்தமானதாயிருக்கின்றது. அப்படிச் சொல்வதும் சரியல்ல; மௌனத்தைத் தரித்து சும்மா இருந்தாலோ அந்தக் கள்ளர்கள் மூர்க்கராதலால் கோபித்து அந்த வித்துவாம்சனைக் கொலை செய்வார்கள். ஆகையால், அந்த வித்துவாம்சன் என்ன செய்யவேண்டுமோ அதைச்சொல்ல எனக்குக் கஷ்டசாத்தியமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட விஷயத்தில் என்ன செய்யவேண்டுமோ அதை நீரே சொல்லும் கிருஷ்ணா?

கிருஷ்ணன்:—அப்படிப்பட்ட விஷயத்தில் நிஜத்தைச் சொன்னால் நிரபராதியாகிய மார்க்கஸ்தனுடைய பிராணத்திற்கும் தனத்திற்கும் ஆனியுண்டாகும். அப்படிப்பட்ட ஆனிக்கு இந்த வித்துவாம்சனே காரணபூதனாவான். ஆத-

லால், "கர்தா காரயிதா சைவ ப்ரேரகஸ்சாநுமோதகஃ ஸுக்ருதம் துஷ்க்ருதம்சைவ சத்வாரஸ் ஸமபாகிநஃ" என்பதுபோல், அந்தக் காரியத்தினுல் கள்ளர்களுக்கு உண்டாகும் பாபத்தையும், இந்த வித்துவாம்சன் பங்கிட்டுக்கொள்ளப் பட்டவனு யிருக்கின்முன். அப்படிச் செய்யாமல் மௌனமாயிருந்தால் தன் பிராணனுக்கே ஆனிசம்பவிக்கும். அப்படிச் செய்யாமல் அவர்களுக்குத் தப்புமார்க்கத்தைக் காட்டிப் பொய்சொன்னுல் நிரபராதியானவனுடைய பிராணன் ரக்ஷிக்கப்படும். அந்தக் கள்ளர்களின் துஷ்கிருத்தியங்களுக்குப் பங்கம் நேரிடும். அதனுல், பொய் சொன்னுலும் தோஷமில்லை. பிராணனை ரக்ஷிப்பதனுல் சுகிருதம் உண்டாகும். பொய்சொல்வது சாஸ்திர விருத்தமா யிருந்தாலும், இவ்விடத்தில் பொய் சொல்வதே மேன்மை. மெய்சொல்வது சாஸ்திர விஹிதமானதா யிருந்தாலும், இவ்விடத்தில் பொய்சொல்வதே மேன்மையென்று அறியவேண்டும்.

அர்ஜுனன்:—ஆஹா! கர்ம கதி எவ்வளவு விசித்திரமா யிருக்கின்றது!

கிருஷ்ணன்:—ஆம், ஆகையினுலேயே "கஹநா கர்மணே கதிஃ" கர்மத்தினுடைய மார்க்கம் தெரிந்து கொள்வது கஷ்டசாத்தியம். பிரதிபுருஷனும் கேவல வேதசாஸ்திரத்தினுல் மாத்திரமே யல்லாமல், அந்தச் சமய சந்தர்ப்பானுசாரமாய் அப்போதைக்கப்போது எந்தெந்தக் கர்மங்களைச்செய்ய வேண்டியதா யிருக்கின்றதோ, எந்தெந்த கர்மங்களைக் செய்யக்கூடாததாயிருக்கின்றதோ அவைகளை நன்குயறிந்து செய்து கொண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்துகொண்டுவருவதால் கர்மத்தினுல் உண்டாகும் அசுத்தபலன்கள் பற்ருது. கர்மத்தை அனுஷ்டிக்கும்

போதுகவனிக்கவேண்டிய விதிகளை உனக்குச் சொல்லுகின்றேன் கேள்:—

கர்மண்ய கர்ம யஃ பஶ்யேத் அகர்மணி ச கர்ம யஃ
ஸ புத்திமாந் மநுஷ்யேஷு ஸ யுக்தஃ க்ருத்ஸ்ந கர்மக்ருத். 18.

கர்ம அகர்மங்களினுடைய தத்துவங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவைகளை உனக்குச் சொல்லுகின்றேனென்று சொன்னேனல்லவா? அவைகளைச் சொல்லுகின்றேன் கேள்:—

"கர்மணா பத்யதே ஜந்துஃ" பிராணிகள் கர்மத்தினால் கட்டப்பட்டிருக்கிறார்களென்னும் சுருதிப் பிரமாணமாய் கர்மத்தினுடைய சுபாவமே பந்தத்தைக் கொடுக்கப்பட்டதாயிருக்கின்றது. கர்மத்தில் அகர்மமும், அகர்மத்தில் கர்மமும் பார்ப்பது விருத்தமல்லவா? இப்படி விருத்தாம்சங்களை உபதேசிக்கலாமா வென்று எண்ணுகின்றாயா? சொல்லுகின்றேன் கேள். கர்மமென்றால், ஒரு தொழிலைச் செய்வது. நான் கர்த்தன்; நான் செய்த கர்மம் இது; நான் இந்தக்கர்மம் செய்வதனால் உண்டாகிய பலத்தை அநுபவிப்பேன்; நான் கர்மத்தை அநுஷ்டிக்காமல் சும்மா விருக்கின்றேன்; அதனால், ஆயாசமில்லாமல் சுகத்தை அநுபவித்துக் கொண்டிருக்கின்றேனென்று இவ்வாறாக அவித்தியா சம்பந்தத்தினால் உண்டாகும் கர்ம அகர்மங்கள், ஆத்மாவில் ஆரோபிக்கப் படுகின்றதென்று பிராஞ்ஞனாயிருக்கப்பட்டவன் அறியவேண்டும். அஃதெப்படியென்றால்:—புதிதாய் ரெயில் பிரயாணம் செய்பவன் ஸ்தாவரமாயிருக்கப்பட்ட பர்வதங்கள் விருக்ஷங்களைப் பார்த்து அவைகள் தன்புறமாய் ஓடுகின்றனவென்றும் தான் உட்கார்ந்திருக்கும் ரெயில் அசையாமல் இருக்கின்றதென்னும் பிரமையடைகின்றான். விசாரித்துப் பார்க்குமளவில் தன்புறமாய் ஓடிவரும் பர்வதங்கள், விருக்ஷங்கள்

பிரமையை உண்டாக்கின. பிறகு, அவைகள் அசங்கமா யிருந்தபோதிலும் ரெயிலினுடைய ஓட்டத்தினுல் ஓடுவ தாய்க் காணப்படுகின்றனவென்று பிரமை நீங்கித் தெளி கின்றுன். அதுபோல், அவித்தியா சம்பந்தத்தினுல் உண்டாகும் கர்த்திருத்வாதி மூலத்தை, லோக வியவஹார ரூபத்திற்குக் கர்மமென்று சொல்லப்படும். "அவ்யக்தோ யம சிந்த்யோயம்'' ஆத்மா (பரப்பிரம்மம்) கண் இந்திரியங் களினுல் தெரிந்துக்கொள்ளத் தக்கவனல்லன். மனதினு லும் இப்படிப்பட்டவனென்று ஊஹிக்கப்பட்டவனுமல் லன். "ந ஜாயதே ம்ரயதே.'' பகவான் பிறப்பும் இறப்பும் இல்லாதவனென்று சுருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட் டிருக்கின்றது. இப்படிப்பட்ட ஸ்வயம் பிரகாசமான ஆத்மாவைக் கர்மங்கள் பற்றமாட்டாது. 'நான் கர்மத்தை அனுஷ்டிக்காமல் சுகமாயிருக்கின்றேனென்று எண்ணு வதும் அஹங்காரத்திற்கு மூலமாயிருக்கின்றது. அப்படிச் சும்மாயிருக்கும் ஸ்திதியிலும், சங்கல்ப ரூபமாகிய மானசிக் வியாபாரம் இருப்பதால், அதுவும் கர்மமென்று சொல்லப் படும். ஞானநிஷ்டை செய்யும்போதும் உண்டாகும் நைஷ்கர்ம்யாவஸ்தை அகர்ம மல்லவென்று எவன் அறி கின்றுனே அவனே லோகத்தில் பண்டித (பிரம்ம தத்து வத்தை அறிந்தவ)னும், பிரம்மஞான நிஷ்டானுபவ முடை யவனும்,ஜீவன்முக்தனுமாகத் தெரிந்துகொள்ளக்கடவாய். மேலும் கர்மமென்றுல் பிரபஞ்ச சிருஷ்டி; அகர்மமென் றுல், பரப்பிரம்மம். சிருஷ்டி கர்மம், சிருஷ்டிக்குக் கர்த் தன் (பரப்பிரம்மம்). காந்தத்தின் சக்தியினுல் ஸமீபத்தி லிருக்கப்பட்ட ஊசி காந்தத்திற்கு வியாபாரத்தை உண் டாக்குகின்றது. அதாவது, காந்தத்தின் எதிரிலிருக்கும் ஊசியானது சும்மா இருக்கும் காந்தத்தில் எகிறிப்போய் அதைப் பற்றிக்கொள்ளுகின்றது. அதனுல் காந்தம் கர்ம

த்திற்குப் பந்தப்பட்டதல்ல. அப்பேர்ப்பட்ட காந்தத்திற்கு எப்படி கர்ம வியாபாரம் இல்லையோ, அதுபோல், பிரபஞ்ச சிருஷ்டியென்னும் கர்மத்தில் பரப்பிம்மமென்னும் அகர்மம் இல்லை. பரப்பிரம்மம் அகர்மமென்று தெரிந்துகொண்டவன், கர்மகார்யங்களைச் செய்வதற்குத் தகுந்த சக்தியுடைய மற்றொரு பதார்த்த மில்லாததால் நகர்மமாகிய பிரம்மாதிஷ்டானமில்லாமல் பிரபஞ்சாத்தியாச ரூபமாகிய சிருஷ்டி கர்மத்தை உண்டாக்க மாட்டாதென்று அறிந்து அகர்மத்தில் கர்மத்தைப் பார்ப்பான். உலகத்தில் யஞ்ஞனிருப்பவன் சண்டாளாதி சம்ஸர்க்கத்தை அடைந்தபோது அது சரீரத்திற்கு உண்டானதென்று தெரிந்துகொள்ளாமல், தான் தரித்திருந்த வஸ்திரத்தைவிட்டு வேறொருவஸ்திரத்தைத் தரித்த மாத்திரத்தில் அதன் தோஷம் தான் அவிழ்ந்த வஸ்திரத்துடன் போய்விட்டதென்று ஊஹிப்பான். அதனால் கர்ம சம்பந்தமுடைய சரீரத்தில் (கர்மத்தில்) கர்மசம்பந்த ராஹித்தியமும் (அகர்மமும்), கர்மசம்பந்தமில்லை யென்று யஞ்ஞன் ஊஹித்த சரீரத்தில் (அகர்மத்தில்) கர்மசம்பந்தமும் (கர்மத்தையும்) பார்ப்பான்.

ஓ அர்ஜுனா! கர்ம அகர்ம விகர்மங்களுடைய மார்க்கம் இப்படிப்பட்டதென்று, இதுவரையில் மேல் சுலோகத்தில் சொல்லியிருந்தேனல்லவா? அப்படி எவனொருவன் கர்மத்தைத் தான் செய்தும் செய்யாதவனையும், தான் செய்யமலே செய்தவனையும் எண்ணிக்கொள்ளுகின்றானோ, அவனே நைஷ்கர்ம சித்தியை அடைந்த ஞானியும், கர்மத்தை அனுஷ்டித்த யோகியும் ஆகின்றான். அஃதெப்படியென்றால், இதுவரையில் (அ-4, சு-17-ல்,) நான் சொல்லியதுபோல், காட்டில் திருடர்களுக்குப் பொய் சொல்வது சாஸ்திர விருத்தமா யிருந்தாலும், அந்தச் சமயம் நிரபரா

தியும் நிராயுதபாணியுமாகிய பாட்டைசாரியின் பிராண சம்ரக்ஷணார்த்தமாய் விதியில்லாமலே பொய் சொல்ல வேண்டியதாய் நேர்ந்ததால், அது பாப கார்யமல்லவென்றும், பொய் சொன்ன தோஷம் பற்றாதென்றும் அவன் நம்புகின்றான். ஆதலால், அவன் பொய்சொல்லுகிற கர்மத்தைச் செய்தும் செய்யாதவனாகவே நினைக்கின்றான். அதனால், அவன் கர்மத்தில் அகர்மத்தைப் பார்த்தவனாகின்றான். அப்படிக்கல்லாமல், அப்பண்டிதன் பொய்சொல்வது பாபகார்யமென்று எண்ணி, அந்தத் திருடர்கள் தன்னைக் கேட்டபோது புதரில் ஒளித்துக்கொண்டிருக்கின்றானென்று சொன்னால், புதரில் ஒளித்திருக்கும் மார்க்கஸ்தனைப் பிடித்து அவன் சொத்தை கிரஹித்து பிராணஹானி யுண்டாக்கியிருப்பார்கள். அந்தக் கள்வர்களுக்குத் தப்புவழியைக் காட்டி அவர்களைத் தூரத்திவிடத் தனக்கு சக்தியிருந்தும், அப்படிச் செய்யாமற்போனால் அந்தப் பாட்டைசாரியின் பிராணனுக்கு கெடுதி சம்பவித்திருக்கும். அதனால், உண்டாகும் பாபம் தன்னைச்சேருமென்று எண்ணிப் பொய்சொல்லுகின்றான். ஆதலால், அவன் அகர்மத்தில் கர்மத்தைப் பார்க்கின்றான்.

அர்ஜுநன்:—ஐயா! பொய்சொல்வது எப்பொழுதும் பாபகார்யமல்லவா? அப்படியிருக்க, இப்படிப்பட்ட விஷயத்தில் பொய் சொல்வதனால், தனக்குப் பாபமில்லையென்று அந்தப் பண்டிதன் எப்படி நம்பலாம்? அவன் பொய் சொல்லாமல் உண்மையைச் சொன்னால் அதன்பலன் அவனுக்கு எப்படி விருதாவாய்ப்போம்?

யஸ்யஸர்வே ஸமாரம்பா꞉ காம ஸங்கல்ப வர்ஜிதா꞉
ஜ்ஞாநாக்நி தக்தகர்மாணம் தமாஹு꞉ பண்டிதம் புதா꞉. 19.

கிருஷ்ணன்:—ஓ! அர்ஜுநா! உன் கேள்வி சரியானதே. அப்பொழுதும் பொய் சொல்வது நிஷித்த

கர்மமே. அதனால் பாபம் ஸம்பவிப்பதும் வாஸ்தவமே. ஆனால், இவ்விஷயத்தில் அது பாபகார்ய மாகமாட்டாது. ஏனென்றால், இவ்விடத்தில் இப்பண்டிதன் பொய் சொல்வதனால்தான் மேன்மையை அடையலாமென்கிற எண்ணமுடையவ னல்லன்; பொய் சொல்லவேண்டுமென்கிற சங்கல்ப முடையவனுமல்லன். ஆனால், அப்படிச் செய்வதற்குக் காரண மென்னவென்றால், தான் அந்தக் கள்வர்களுக்கு உண்மையைச்சொன்னால், நிரபராதியாயிருக்கும் ஒருவன் பிராணத்திற்குக் கெடுதி உண்டாகின்றதே யென்றெண்ணி, ஜீவகாருண்ய முடையவனாய், அப்படிப்பட்ட உபத்திரவம் அவனுக்கு உண்டாகா வண்ணம் விதியில்லாமல் பொய் சொன்னவனாகின்றான். ஆதலால், அவன் பொய் சொல்லவேண்டுமென்னும் கர்மத்தைத் தன் பிரயோஜனார்த்தமாய்ச் செய்தவனல்லன்; என்றால், அதனாலேயே ஒரு லாபமாயினும், அல்லது மேன்மையாயினும் அடையவேண்டுமென்று எண்ணிச் செய்தவனல்லன். கேவல ஜீவகாருண்ணியத்தினால் சொன்னவனாகின்றான். ஜீவகாருண்ணியத்துடன் எப்பொழுது சொன்னானோ, அந்தக் கர்மம் அப்பொழுதே பகவானுக்குப் பிரீதி கரமாயிருக்கின்றதென்று ஏற்படுகின்றது. ஆதலால், அவன் இந்தக் கர்மத்தில் பலாபேக்ஷையில்லாமல் பகவத் ப்ரீத்யர்த்தமாய்ச் சொன்னவனாகின்றான். ஆதலால், அந்தக் கர்மத்தினால் உண்டாகும் பலன், பகவானுக்கு அர்ப்பிதமாகின்றது. செய்தவனுக்கு எவ்வளவேனும் யாதொரு பலனுமில்லை. இப்படி எவனொருவன், தான் செய்யப்பட்ட கர்மங்களை யெல்லாம் தன் பிரயோஜனார்த்தமாய்ப் பலத்தைக் கோராமல் பகவத் ப்ரீத்யர்த்தமாய்ச் செய்கின்றானோ, அவன் அக்கர்ம பலன்களை அநுபவிக்கான். அப்பலன்கள் பகவானுக்கே அர்ப்பிதமாகும். அப்படிப்

பட்டவனே ஞானியென்றும், அவன் செய்யப்பட்ட கர்மங்களின் பலன்களெல்லாம் அவனைச் சேராமற் போவதனால், நசித்துவிட்டதென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். எவன் எல்லாக் கர்மங்களையும், சொர்க்காதி பலாபேக்ஷைகள் யில்லாமலே என்றால், பிரவிருத்தியினால் லோக சங்கிரஹத்திற்காகவும் ஜீவனார்த்தத்திற்காகவும் கர்ம அகர்மங்களைப் பலாபேக்ஷையுடன் செய்தபோது பந்தஹேதுவான கர்மமென்றும், பலாபேக்ஷையில்லாமல் செய்தபோது பந்தநிர்மூலத்தினால் அகர்மமென்றும் சொல்லப்படும். இந்த அகர்மமானது ஞான ரூபமாகிய அக்கினியினால், ஆகாம்ய சஞ்சித கர்மங்களை பஸ்மம் செய்விக்கும். இப்படி ஞானக்கினியினால் பஸ்மம் செய்தவனை பிரம்ம வேத்தர்கள் பரமார்த்தத்தில் பிரம்ம ஞானியென்றே சொல்லுவார்கள். இந்த ஞானக்கினியானது நாபியிலிருந்து பிரம்மகபாலம் வழியாய்ச் சென்று, ஆகாசத்தில் பரவுகின்றது. அப்படிப் பரவியபோது அந்த சுவாலையானது, பஞ்சுப்பொதியில் நெருப்புப்பொறி பட்டவுடனே அது எவ்விதமாய் பஞ்சுப்பொதிகளைப் பஸ்மம் செய்கின்றதோ அதுபோல், அவனது ஆகாம்ய சஞ்சித கர்மங்களை பஸ்மம் செய்துவிடும்.

இந்த யோகாக்கினிச் சுவாலையைக்குறித்து "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்" என்னும் நூலுக்கு முதலில் இரண்டாவதுபடத்தில் யோகாக்கினி அக்கினிஹோத்ர தியானசமாதி பூஜை யென்று ஆங்கிலேயபாஷை (English)யில் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்க. கர்மங்கள் ஆகாம்ய, சஞ்சித, பிராரப்தமென்று மூன்று விதங்கள். பிரதிமனுஷ்யனும் பதின் மூன்றாவது வருஷம் தொடங்கிய முதல்நாள் மூதற்கொண்டு அவனவன் செய்துவரும் புண்ணியபாபங்களின் கர்மங்கள் ஆகாம்ய கர்ம

மென்று சொல்லப்படும். அது சஞ்சிதத்தில் சேர்ந்து மறுபடியும் முன் ஜன்மம் வருவதற்குத் தக்க பிராரப்தத்தை உண்டாக்கிக்கொண்டேயிருக்கும். முன் ஜன்மங்களில் அநுபவித்த பிராரப்த கர்மம் போக, மறுபடியும் ஜன்மாந்தரங்களில் அனுபவிப்பதற்காக அநேக இமவத் பர்வதங்கள்போல் வளர்ந்திருப்பது சஞ்சித கர்மமென்று சொல்லப்படும். ஆகாம்ய, சஞ்சித கர்ம சங்கத்திலிருந்து, அந்தந்த ஜன்மங்களை அடைந்து அனுபவிக்கவேண்டியதாய் ஏற்படும். ஆகாம்ய சஞ்சித கர்மங்கள் ஞானோதயமானவுடனே நசித்துவிடும். பிராரப்தமோ சரீரம் இருக்கும்வரையில் சுக துக்கானுபவ ரூபமாயிருந்து அனுபவிக்கப்பட்டுச் சரீரத்துடனே நசித்துவிடும். இதுவிஷயம் ஜீவப் பிரம்மைக்ம வேதாந்த ரஹஸ்யம்'' மனேலயத்தால் சகலமும் சித்தியடைதல சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்களென்பதைப் பார்க்க. ஆசையும் சங்கல்பமும் இல்லாமல், ஈசுவரார்ப்பண புத்தியாய்க் கர்மம் செய்து வந்தால், சித்தம் சுத்தியாய், பிறகு ஞானோதயமாகும். அப்படி ஞானோதயமானவுடனே, குப்பைகளை அக்கினி எப்படி தஹித்துவிடுமோ, அதுபோல், சஞ்சித ஆகாம்ய கர்மபந்தங்களை எல்லாம் ஞானாக்கினி எரித்துவிடும். தேஹத்தையுடைய ஜீவன் பதின்மூன்றுவது வயது தொடக்கத்தின் முதல்நாள் முதல் செய்த கர்மங்கள் ஒவ்வொன்றும் பத்து ஜன்மங்களைக் கொடுக்கும். அப்படிக் கொடுத்த ஜன்மங்களில் அதன் பலனை அனுபவிக்கவுஞ் செய்யும். இவ்விதமாய்ப் பல ஜன்மங்களின் பலன்களை அனுபவித்துமுடிவுவுண்டாவதுதான் மோக்ஷம். அப்படி முடிவுவுண்டாகாமல் இருப்பது சஞ்சித கர்மமென்று சொல்லப்படும்.

பிராரப்த கர்மமென்றலோ, கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்திருக்கிற சஞ்சித கர்மங்களின் எந்தப் பாகத்தை

அனுபவிக்கும்பொருட்டு இத்தேஹம் வந்திருக்கின்றதோ, இத்தேஹத்தையுடைய இந்த ஜநநத்தில் எதன் பலனாகிய சுகதுக்கங்களை அனுபவிக்கப் படுகின்றனவோ, அதுதான், பிராரப்த கர்மமென்று சொல்லப்படும்.

அகாம்யமென்பதோ, இந்த ஜன்மத்தில் பதின்மூன்று வது வயது தொடக்க முதல் செய்கின்ற புண்ணியபாப கர்மங்கள் மேற்படி சஞ்சித கர்மத்தில் சேரத்தக்கதாயுமுள்ள கர்மம்.

த்யக்த்வா கர்மபலாஸங்கம் நித்ய த்ருப்தோ நிராஶ்ரயஃ
கர்மண்யபி ப்ரவ்ருத்தோபி நைவ கிஞ்சித் கரோதி ஸஃ. 20.

"கர்ம அகர்மங்களை அறிந்தவன் விவேகத்தினால், நிஷ்கர்ம ஸந்யாசியாய், ஜீவன் நிமித்தமாத்திரம் சஞ்சரிக்கப் பட்டவன் கர்மத்தில் பிரவர்த்திக்காதவன். ஒருவேளை விவேக முண்டாவதற்குமுன் கர்மத்தில் பிரவர்த்திக்த போதிலும், பிராரப்த கர்மமாத்திரம் சேஷமாய்க் கர்மா அகர்மங்கள் உற்பத்தியானவுடனே, ஆத்ம சொரூப உடையவனாவான். அப்படிப்பட்டவன் கர்மத்தினால் பிரயோஜனமில்லையென்று நிச்சயித்துக்கொண்டு, கர்மசாதனங்களையும், கர்மத்தையும் விட்டுவிடுவான். காரணாந்தரத்தினால் கர்ம பரித்தியாகம் செய்யாவிட்டால், கர்மத்தில் சங்கமும், கர்மபலத்தில் அபேக்ஷையும் ஸ்வப் பிரயோஜனார்த்தமா யில்லாததனால் கர்மத்தை அனுஷ்டித்த போதிலும், ஞானாக்கினியினால தஹிக்கப்பட்ட ஆகாம்ய சஞ்சித கர்மமுடையவனாதலால், அவனுக்கு யாதொரு பாதகமும் உண்டாகமாட்டாது. அப்படி அனுஷ்டிக்கும் கர்மமும், அகர்மமென்று சொல்லப்படும். (ஸம்சயத்தைத் தெளிவிக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் இந்த சுலோகார்த்தத்தை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ஜுனனுக்கு உபதேசிக்கின்றார்.)

அர்ஜுநா! இதுவரையில் (அ-4, சு-19, ல்) ஸங்கல்ப மில்லாதவன் செய்யப்பட்ட கர்மம் ஞானக்கினியினல் தஹிக்கப்படுகின்றதென்று சொல்லியிருந்தேனல்லவா. அஃதெப்படியென்றால், ஒரு பலத்தை அடையவேண்டு மென்னும் எண்ணம் ஒருவனுக்கு எப்பொழுது இல்லாமற் போகின்றதோ, அப்பொழுதே அந்தப் பலத்தை அடைவதற்காகக் கர்மத்தைச் செய்யவேண்டுமென்னும் சங்கல்பம் உண்டாகமாட்டாதல்லவா? அப்படிப்பட்ட சங்கல்பம் எப்பொழுது இல்லாமற்போகின்றதோ, அப்பொழுதே அந்தக் கர்மத்தினல் உண்டாகும் பலாபேக்ஷையும் இல்லாமற் போகும். அப்படிப்பட்ட கர்மத்தின் பலாபேக்ஷை எப்பொழுது இல்லாமற்போகின்றதோ, அப்பொழுது அவனுக்கு வேண்டியது யாதொன்றுமே யில்லை. மனதில் விஷயப்பற்றுகள் ஒன்றுமில்லாதவனாகின்றான். அவன் மனது எப்பொழுதும் திருப்தியடைந்ததாகவே யிருக்கும். அதனல், அவன் நித்திய திருப்தனென்று சொல்லப்படுபவனாகின்றான்.

அர்ஜுநா! கர்மங்களை அனுஷ்டிக்கும்போது அதன் பலாபேக்ஷையை விட்டுத் தனக்கு உண்டாயிருக்கும் ஆத்மானந்தத்தில் திருப்தியடைந்தவனாய், இந்த ஜன்மத்திலாயினும், பின் ஜன்மத்திலாயினும் கோரவேண்டிய பலன்கள் யாவும் வேண்டாதவனாய், தேஹேந்திரியங்களில் அபிமான மில்லாதவனாய் அனுஷ்டிக்கும் பிரம்ம ஞானியின் கர்மம், பாமார்த்தத்தில் அகர்மமாய் முடியும். பெரியோர்கள் அனுஷ்டிக்கவில்லையே, நாம் அனுஷ்டிக்கவேண்டிய அவசியமென்னவென்று பாமரஜனங்கள் நிராகரிப்பார்கள். லோகஸங்கிரஹ நிமித்தமாய்ப் பூர்வீகர்களான ஜனகாதிகளைப்போன்ற பிரம்ம ஞானிகள் கர்மத்தை அனுஷ்டித்த போதிலும், அவர்கள் நிஷ்கிரியா பிரம்ம சொரூபஞானம்

அடைந்தவர்களாதலால், அவர்களுக்கு அப்படிப்பட்ட கர்மத்தினுல் சங்க முண்டாகமாட்டாது. ஆதலால், அதனை அகர்மமென்று அறியக்கடவாய். அப்படிப்பட்டவர்கள் கோரத்தக்க பலன் யாதொன்று மிராது. அவர்கள் எந்த விஷயத்தைக் குறித்தாகிலும் ஆசிரயிக்கவேண்டிய அவசிய மில்லாதவர்களாகின்ருர்கள். இவர்களையே நிராசிரியர்க ளென்றும் சொல்லப்படும். இப்படி கர்மபல சங்கநிவர்த் தியும், நித்திய திருப்தியும், நிராசிரயத்துவமும் எவனுக்கு உண்டாசின்றனவோ அப்படிப்பட்டவன் எந்தக்கர்மத் தைச் செய்தபோதிலும், தன் பிரயோஜனுர்த்தமாய்ச் செய்தவனுகான். அதனுல், அந்தக்கர்மத்தின் பலன் அவனைப்பற்ருது. அவன் அந்தக் கர்மத்தைச் செய்த போதிலும் செய்யாதவனுகவே ஏற்படுகின்ருன். கர்மத் தில் அபிமானமும், பலத்தில் ஆசையும் விட்டு எப்போ தும் ஆத்மாநந்தத்தில் திருப்தி யடைந்தவனும், ஒருவ ரையும் ஆசிரயிக்காதவனுமாயும் இருப்பவன் கர்மத்தில் பிரவர்த்தித்திருந்தபோதிலும் அவன் ஒரு கர்மத்தையும் செய்யவே இல்லை. ஒருவேளை தான் உலகத்தாருக்காகக் கர்மத்தைச் செய்தபோதிலும், அவன் அந்தக் கர்மத்திற் குப் பாத்திரனுகமாட்டான். இந்தக் கர்ம விஷயம் உனக்கு நன்ருய்த் தெரியும்படி, பலதடவைகளில் சொல்லிய விஷ யங்களையே மாற்றிமாற்றிச் சொல்லிக்கொண்டு வருகின் றேன்.

அர்ஜுநன்:—ஐயா ! ஆனுல், அப்படிப்பட்டவன் தன்பிரயோஜனுர்த்தமாய் யாதொன்றும் கோரமாட்டா னென்றும், எந்த வேலையும் செய்யமாட்டானென்றும் சொன்னீரல்லவா? எது செய்தாலும் செய்யாமற்போனு லும், தன் தேஹ சம்ரக்ஷணைக்காக பிக்ஷாந்நத்தையாகிலும்

சம்பாதிக்கவேண்டியதா யிருக்கின்றது. அப்படிச் செய்வது தன் உதரபோஷணர்த்தமானதல்லவா? அவ்வளவு மாத்திரமும் தன்பிரயோஜனர்த்தமாய்ச் செய்யாவிடில் அவன் ஜீவிப்பது எப்படி?

கிருஷ்ணன்:—ஆனல் அஃதைச் சொல்லுகின்றேன் கேள்.

† நிராபீர்யதசித்தாத்மா த்யக்தஸர்வ பரிக்ரஹ:
மாரீரம் கேவலம் கர்ம குர்வ ந்நாப்நோதி கில்பிஷம். 21.

அர்ஜுநா! நீ இப்பொழுது கேட்டகேள்வி, தேஹதாரணர்த்தமான பிக்ஷாந்ந போஜனதி கிருத்தியமும், பலாபேக்ஷையுடன் தன் பிரயோஜனர்த்தமாய்ச் செய்யும் கர்மமாய், நீ எண்ணியதுபோலக் காணப்படுகிறது; அப்படிச் சிறிதும் எண்ணலாகாது. ஏனென்றல், ஒரு புருஷன் மனோ நிக்கிரகமுடையவனய் எப்பொழுது ஆகின்றனோ, அப்பொழுதே அவன் மனது, உலக சுகங்களில் சற்றும் பற்றுமலிருக்கும். அதனல், அவன் எதிலும் ஆசையில்லாதவனகின்றன்; அப்படி எப்போது அவனுக்கு எதிலும் ஆசையில்லாமற்போகின்றதோ, அப்போதே அவன் எதையாகிலும் அடையவேண்டுமென்னும் எண்ணத்துடன்

† முன் சுலோகத்தில் சொல்லப்பட்டவன் கர்மயோகநிஷ்டன்; இவன் ஆருருக்ஷு என்றும் சொல்லப்படுகின்றன். இந்த சுலோகத்தில் சொல்லப்பட்டவனே, அவனைவிட மேல்படியிலிருக்கிற பிரம்மஞானநிஷ்டன் ஆரூடனென்று சொல்லப்படுவான் என்பது, ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அபிப்பிராயம். ஆத்மாவையே முக்கிய பிரயோஜனமாய் எண்ணி பிரகிருதியினல் உண்டான வஸ்துக்களில் மமதையற்றவன் தேஹேந்திரியாதிகளில் அபிமானம் விட்டவனவான். பாப புண்ணியங்களின் பலனன சம்சாரத்தை அடைகின்றதில்லை. என்றல், கர்மயோகத்தினலேயே ஆத்மாவைப் பார்க்கின்றன் என்பது தாத்பர்யம்.

எந்தப் பிரயத்நத்தையும் செய்யமாட்டான். இதரர்கள் யாராயினும் தனக்குப் பிரீதியுடன் எதைக் கொடுத்தபோதிலும் அதைப்பெற்றுக் கொள்ளான். ஒருவேளை விதியில்லாமல் வாங்கவேண்டியதாய் நேரிட்டால் கொடுக்கப்பட்டவர்களின் மனதிற்குக் குறைவுவராமலிருப்பதற்காகப் பெற்றுக்கொள்வானேயொழிய, அது தனக்கு வேண்டியதென்றும்; அதனால் தனக்கோர் பிரயோஜனமுண்டென்றும் அபேக்ஷையுடன் பெற்றுக்கொண்டவனல்லன். அப்படிப்பட்டவன் கேவல தேஹதாரணார்த்தமாய் வேண்டிய அந்நோதகங்களுக்காகச் செய்யவேண்டிய கர்மங்களினால் அவனை எந்தக் கல்மஷங்களும் பற்றமாட்டாது. ஆசையற்று, மனதையும், இந்திரியங்களையும் அடக்கிச் சகலவித சம்பாத்தியத்தையும் விட்டுச் சரீரம் நிலைத்திருப்பதற்கு வேண்டிய ஆஹார நிமித்தமாய்ச் செய்யவேண்டிய கர்மமெவ்வளவோ அவ்வளவு மாத்திரம் செய்கின்றனாதலால், அவன் பாபத்தை அடையமாட்டான். "உபே வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜநஃ பரமம் ஸாம்யமுபைதி." என்பதுபோல் பிரம்மஞானி புண்யபாபங்கள் இரண்டையும் உதறிவிட்டு நிஷ்களங்கனாய் பிரம்ம சொரூபனாகின்றான். புண்யமும் மோக்ஷப்பிரதிபந்தகமே. ஏனென்றால், புண்யத்தினால் சொர்க்காதி சுகம் உண்டாகும்; அந்தப்புண்யம் முடிந்தவுடனே மறுபடியும் பூலோகத்தில் ஜனிக்க வேண்டியதாய் நேரிடும். புண்ய பாப ரஹிதமாகிய மஹாத்மா பிரம்ம சாயுஜ்யத்தை அடைகுவான்.

அர்ஜுநன்:—ஐயா! தானாகவே பிரயத்தினப்படாவிட்டாலும், இதரர்கள் யாராயினும் தனக்குப் பிரீதியுடன் கொடுத்தபோதிலும் அதைப்பெற்றுக்கொள்ளமாட்டானென்று சொன்னீரல்லவா? நல்லது, தனது ஆஹாரார்த்தமாய் இதரர்கள் கொடுக்கப்பட்ட அந்நபானாதிகளைப்

பக்ஷிப்பதும், வஸ்திராதிகளைத் தரிப்பதும் இவை முதலியவைகள் தன் பிரயோஜனார்த்தமாய்ச் செய்தவேலைகளே யல்லவா? அப்படியிருக்க, அவைகளினாலே பிரயோஜனமில்லையென்று நினைத்து, அவைகளைப் பிரீதியுடன் பெற்றுக்கொள்ளாதவனென்று எப்படிச் சொல்லலாம்?

யத்ருச்சா லாப ஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ விமத்ஸரஃ
ஸமஸ்ஸித்தா வஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே. 22.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! நீ சொல்லியதுபோல் இதரர்கள் பிரீதிபூர்வகமாய்க் கொடுக்கப்பட்ட அந்நவஸ்திராதிகளை, ஆத்மார்த்தமாய் உபயோகித்தபோதிலும், அதனால், தனக்கோர் பிரயோஜனமுண்டென்று, ஞானியானவன் எண்ணமாட்டான். ஏனென்றால், அப்படிப்பட்டவன் தன் தேஹதாரணார்த்தமாய் வேண்டிய அந்ந வஸ்திரங்களுக்காக இதரர்களை ஆசிரயிக்காமல், உசிதமாய் யாரேனும் கொடுக்கப்பட்டதை உபயோகப்படுத்திக் கொள்வான். அப்படித் தனக்கு எந்தெந்த வேளைகளில் என்னென்ன லபிக்கின்றதோ, அதனாலேயே திருப்தி அடைந்திருப்பான். எப்படியென்றால், ஒருநாள் ஒருவர் பஞ்ச பக்ஷண பாயசங்களுடன் போஜனமளித்ததனால் எப்படித் திருப்தியடைவானோ, அப்படியே மற்றொருநாளைக்கு மற்றொருவர் தம் சக்தியானுசாரம் களியாயினும், கூழாயினும் கொடுத்தால், அதையும் உண்டு திருப்தி யடைவானே யன்றி, முதல் பஞ்சபக்ஷண பாயசத்துடன் அந்நமளித்தவர்களின்மீது பிரீதியும், களி கூழ் கொடுத்தவர்களின்மீது பிரீதியில்லாமலும் இருக்கமாட்டான். இந்த உபய பெயர்களினிடத்திலும் சமபாவமுடையவனாகவே யிருப்பான். ஆதலால், அவன் கிடைத்தவரையில் ஸந்துஷ்டனென்று சொல்லப்படுவான். நாவிற்கு ருசிகரமாகிய பதார்த்தங்களை புஷ்களமாய்க் கிடைத்தபோது சந்துஷ்டியும், அப்படியல்லா

மல் கேவல நிஸ்ஸாரமாகிய போஜனபதார்த்தம் கிடைத்த போது சந்துஷ்டியில்லாமலும் அவ்விரண்டையும் சமரசமாய்நினைத்துத் திருப்தியடைந்தவனு யிருப்பா னுதலால், அவன் துவந்துவா தீதனென்று சொல்லப்படுவான். முதல் ருசிகரமாகிய பதார்த்தங்கள் கொடுத்தவர்களின் மீது பிரீதியும், ருசிகரமில்லாத பதார்த்தங்கள் கொடுத்தவர்களின் மீது அப்பிரீதியும் இல்லாதவனுதலால், அவன் விமத்ஸரனென்று சொல்லப்படுவான். இப்பேர்ப்பட்டவனுக்கு ஒருநாள் ஆஹாரபதார்த்தம் கிடைப்பதும், மற்றொருநாள் கிடைக்காமையும் உண்டு. அப்படிக் கிடைத்தபோது சந்தோஷமும், கிடைக்காதபோது துக்கமும் அவனுக்கு இராது எப்பொழுதும் திருப்தியடைந்த மனதுடையவனுகவே யிருப்பான். சித்தியா சித்திகளில் சமபாவ முடையவனென்று இவன் சொல்லப்படுவான். இப்படிப்பட்ட லக்ஷணமுடையவன் தேஹதாரணார்த்தமாய்ச் செய்யப்பட்ட போஜனுதி கிருத்தியங்கள் தன் பிரயோஜனார்த்தமாய்ச் செய்தவை யென்று சொல்லலாகாது. இப்படிப்பட்டவனுக்குப் பந்தஹேதுவாகிய கர்மம் ஞானக்கினியினுல் தஹிக்கப்படுவதனுல் அவனை கர்மம், அகர்மனென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞாநாவஸ்தித சேதஸ:
யஜ்ஞா யாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே. 28.

அர்ஜுநா! நான் இதுவரையில் (அ-4, சு-20-ல் "த்யக்த்வா கர்மபலாசங்கம்" என்று) சொன்னதுபோல் கர்மபலன்களிலுள்ள ஆசையைவிட்டுவிட்டு நிஷ்கிரிய பிரம்மாத்ம தரிசன முடையவனுய், கர்த்திரு கர்மங்களினுல் பிரயோஜனமில்லையென்று தெரிந்துகொண்டவன், கர்மம் அனுஷ்டிப்பதை தியஜிக்க (விட்டுவிட) வேண்டுமென்று எண்ணியபோது, சில காரணார்த்தங்களினுல், அப்படி விடாமல் முன்போலவே கர்மத்தில் ப்ரவேசித்தபோதி

னும், அவனுக்கு அப்படிப்பட்ட கர்மத்தினலாயினும்; தத் (அதன்) பலத்தினலாயினும் அக்கரை யில்லாதவனு யிருப் பான். அதனல், அவன் நிராசையுடையவனென்று சொல் லப்படுவான். அப்படி கர்மசங்கமும் அபிமானமும் இல்லாதவனும், காமக்ரோதங்களினல் உண்டாகும் அபேக்ஷையில்லாதவனும், தர்மாஅதர்மங்களின் பந்தங்க ளில்லாதவனும், கேவல பிரம்ம பாவத்தில் ஸ்திரப்பட்ட புத்தியுடையவனும், பகவத் பிரீதியர்த்தமாய்க் கர்மத்தை அனுஷ்டிக்கப்பட்ட பிரம்மஞானியினுடைய கர்மங்களும், அவைகளின் பலன்களும் வாசனைகளுடனே நசித்துவிடும். என்றால், அவன் இந்த ஜென்மத்தில் செய்யும் கர்மங்களி னுடையவும், முன் ஜன்மங்களில் செய்துவந்த கர்மங்களி னுடையவும் பலன்கள் அவனைப் பற்றுதென்று கண்டித மாய்த் தெரிந்து கொள்ளவும்.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! இதுவரையில் நீர் சொல்லி யிருக்கும் கர்மம் கேவல தேஹதாரணார்த்தமான கர்ம மென்று (அ-4, சு 21, 22 ல்) சொல்லிக்கொண்டுவந்து இப் பொழுது யஞ்ஞத்திற்காகச் செய்யப்பட்ட கர்மமென்று சொல்லுகின்றீரே அதனல், உமது அபிப்பிராயம் என்ன? யஞ்ஞமென்றால், அக்கினிஷ்டோமாதி கர்மங்களுக்கு அந் வயிக்கின்றதல்லவா? அப்படிப்பட்ட யஞ்ஞங்கள் சொர்க் காதி பலாபேக்ஷையுடன் செய்யப்படும் காம்ய கர்மங்க ளென்றும், மோக்ஷ சாதகமல்லவென்றும் இதுவரையில் (அ-2, சு-42, 43, 44-ல்) சொல்லியிருந்தீர். அப்படி யிருக்க, இவ்விடத்தில் யஞ்ஞத்திற்காகச் செய்யப்படும் கர்மம் கிரமக்கிரமமாய் நசிக்கின்றதென்றும், அதன் பலன் பற்றுதென்றும் சொல்லுகின்றீரே! அது, கேவல பரஸ்பர விருத்தமா யிருக்கின்றதே! இப்படிச் சொல்வதற்குக் காரணமென்ன?

கிருஷ்ணன்:—இல்லை யில்லை. நீ நினைத்ததுபோல் யஞ்ஞமென்பது அக்கினிஷ்டோமாதி யஞ்ஞ கர்மங்களுக்கு மாத்திரமே அந்வயிக்கத் தக்கதல்ல. பின் எப்படியென்றால், இதுவரையில் நான் சொல்லிய லக்ஷணங்களுடனே ஞான நிஷ்டனாய் பகவதர்ப்பிதமாய்ச் செய்யப்படும் கர்மங்களுக்கெல்லாம் அந்வயிக்கின்றது. அஃதெப்படியென்றால், விவரித்துச் சொல்லுகின்றேன் கேள் :—

*ப்ரஹ்மார்பணம்ப்ரஹ்மஹவிர் ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணாஹுதம்
ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்ம கர்ம ஸமாதிநா. 24

கிருஷ்ணன்:—அர்ஜுநா! சர்வ சங்க பரித்தியாகம் செய்தவன் யஞ்ஞம் எப்படிச் செய்வானென்றும், யஞ்ஞமென்றால், சமித்து முதலானவைகளுடன் செய்யப்படும் அக்கினிஷ்டோமாதி யஞ்ஞங்களே யஞ்ஞமென்று, நீ நினைத்துக்கொண்டதுபோல் தோன்றுகின்றது. இவ்விடத்தில் யஞ்ஞமென்றால், 'பிரம்மஞ்ஞானி செய்யப்படும் கர்மம், பலத்தைக் கொடாமல் பலத்துடன் கூடவே நசிக்குமென்று முன் சுலோகத்தில் சொல்வதற்குக் காரணமென்னவென்றால், முத்துச் சிப்பிகளைப்பார்த்தவன் அச்சிப்பி இன்னதென்று அறிந்தபிறகு, இது வெள்ளியல்ல,முத்துக்களின் ஓடென்று எப்படி அறிகின்றானோ அதுபோல், "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்றறிருந்த பிரம்மவேத்தன் அக்கினியில் எந்த சங்கல்பத்தினால் ஹவிஸ்ஸை ஹோமம்

---

* எவன் எல்லாம் பிரம்மசொரூபமே என்றிருக்கின்றானோ அவன், தான்செய்கிற ஒவ்வொரு கர்மத்திலும் காணப்படும் சகலமான வஸ்துக்களிலும் பிரம்மம் நிறைந்திருப்பதாக அனுசந்தானம் செய்துகொண்டு, தான்செய்யும் ஒவ்வொரு கர்மத்தையும், அதன் சாதனங்களையும், பிரம்மமென்றே அறிகின்றான். ஆதலால், அவன் பிரம்மமாவானென்பது இந்த சுலோகத்தின் கருத்து.

செய்கின்றானோ, அவையெல்லாம் பிரம்ம சொரூபமே யென்று பார்ப்பான். யஞ்ஞத்தில் எந்த வஸ்துவினால் நெய்யையெடுத்து அக்கினியில் ஹோமம் செய்யப்படுகின்றதோ அந்தவஸ்துவும் பிரம்மமே; ஆஹுதி செய்யப்படுகிற அந்நம் நெய் முதலியவைகளும் பிரம்மமே; பிரம்மமாகிய அக்கினியில் யஞ்ஞகர்த்தாவாகிய பிரம்மத்தினாலே செய்யப்படுகிற ஹோமமும் பிரம்மமே; அந்த பிரம்மமாகிய இந்த யஞ்ஞ கர்மத்தில் நிலையுள்ள மனதையுடையவனாலே அடையப்படுவதும் பிரம்மமே; பிரம்மார்ப்பணம் என்றால், உலகத்தில் ஹவிஸ் என்று வழங்கப்பட்ட பதார்த்தம், அவனது திருஷ்டிக்கு பிரம்மமாகவே யிருக்கும். பிரம்மாக்கினி யென்றால், உலகத்தில் அக்கினியென்று வழங்கப்பட்ட வஸ்து, இவனது எண்ணத்தினால் பிரம்மமே யாகின்றது; ஹோமக்கிரியைகளும் பிரம்மமே; அதனால் அடையத்தக்க பலனும் பிரம்மமே; "ஸர்வம் ப்ரஹ்மைவ ஸததம் ஸர்வம் ப்ரஹ்மைவ கேவலம். ஸர்வம் ப்ரஹ்மைவ ஸததம் ஸர்வம் ப்ரஹ்மைவ சேதநம்."—(தேஜோபிந்தூபநிஷத், 37-வது சுலோகம்.) "ஸ ப்ரஹ்மா ஸ விஷ்ணுஃ ஸ ருத்ர ஸ்ஸபிந்த்ர ஸ்ஸ ஸர்வே தேவா ஸ்ஸர்வாணி பூதாநி ஸ்ஸயேவபுரஸ்தாத் ஸ்ஸயேவபஸ்சாத் ஸ்ஸயே வோத்தரத ஸ்ஸயேவதக்ஷிணத ஸ்ஸயேவாதஸ்தாத் ஸ்ஸயேவோபரிஷ்டாத் ஸ்ஸயேவஸர்வம்."(ஸாண்டில்யோபநிஷத், 58-வது சுலோகம்.) ஆதலால், மேற்சொல்லியதுபோல் எல்லாம் பிரம்ம சொரூபமாகிய யாககர்மத்தில் ஸ்திரப்பட்ட சித்தியுடையவனாய் பிரம்ம சொரூபத்தை அடைகுவான். இப்படி போக ஸங்கிரஹார்த்தமாய் பிரம்மவேத்தனால் செய்யப்படும் யஞ்ஞகர்மம் ஸர்வம் பிரம்மம் என்னும் பாவனையுடன் செய்யப்படுவதால் அகர்மமாகும். அதுபோல், கர்மங்களைவிட்ட சந்நியாசி ஸர்வம் பிரம்மமென்

னும் நிச்சயத்தை நன்ருய் அறிவதற்காக ஸ்பஷ்டமாய் ஞானயஞ்ஞத்தில் பிரம்மஞ்ஞானி, உலகத்தில் தான் யஞ்ஞங்களுக்காக ஏற்படுத்திக்கொண்ட வஸ்துக்கள் எல்லாவற்றையும் பிரம்மமாகவே பாவனை செய்வான். கர்மயோகத்திஞல் பரிசுத்தமான சித்தமுடைய பிரம்மவேத்தன் சமஸ்த கர்மங்களும் இந்திரிய வியாபாரமென்றும், தனக்குக் கர்த்திருத்துவ மில்லையென்றும், எண்ணவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், ஓ அர்ஜுனா! சர்வசங்க பரித்தியாகியாகிய ஞானிக்கு அப்படிப்பட்ட யஞ்ஞம் செய்ய வேண்டிய ஆவசியகமில்லை. ஆனல், அவன் கேவல தேஹதாரணர்த்தமாய்ச் செய்யும் போஜனுதி கிருத்யமே யஞ்ஞமாகின்றது. எப்படியென்ருல், அவன் கேவல பிரம்மஞான நிஷ்டனைதால் தான் பிரம்ம சொரூபமே யென்றும், தான் புஜிக்கப்பட்ட பதார்த்தம் பிரம்மசொரூபமேயென்றும், தான் பிரம்ம ஸ்வரூபனுயிருப்பதால் தன்னுடைய ஜாடராக்கினியும் பிரம்ம சொரூபமே என்றும், அந்த ஜாடராக்கினிக்காகத்தான் கொள்ளப்பட்ட ஆஹாரமும் பிரம்மசொரூபமென்றும் ஹவிஸ்ஸை என்ருல் "அந்நம் பிரம்மசொரூபம்" என்னும் பிரமாணமாய் பிரம்மஞான சம்பன்னனுக்கு பிரபஞ்சத்திலுள்ள சராசரங்களெல்லாம் பிரம்ம சொரூபமாகவே காணப்படும். ஆதலால், தான் புஜிக்கப்பட்ட ஆஹாரமும் பிரம்மசொரூப ஹவிஸ் என்றும், அதைத்தான் பக்ஷிப்பதே பிரம்மாக்கினியென்றும் தன் ஜாடராக்கினியில் போடப்படுகின்றதென்றும், பிரம்மசொரூபமாகிய ஜாடராக்கினி திருப்தியடைவதனல் பிரம்மார்ப்பணமாகின்றதென்றும், நினைக்கின்ருன். அப்படிப்பட்ட பிரம்ம சர்மநிஷ்டனுகிய தான் செய்யும் போஜனுதி கிருத்தியங்களும் பிரம்மார்ப்பணம் செய்யப்படுகின்றதென்னும் நிச்சய ஞானமுடை

யவன் எவனோ அவனே பரப்பிரம்மத்தை அடைகின்றான். என்றால், பரப்பிரம்மத்தில் ஐக்கியமாகின்றான். இப்படிப் பட்டவன் மற்ற இதர புனர்ஜன்மங்களுக்குக் காரணபூதமாயிருக்கும் சொர்க்காதி போகங்களை அடையமாட்டான். இப்படிப்பட்ட பிரம்மஜான சம்பன்னன் தேஹதாரணார்த்தமாய்ச் செய்யப்பட்ட போஜனாதி நித்திய கிருத்தியமே யஞ்ஞமென்று சொல்லப்படும். இதன்றியும், அநேக விதங்களாகிய யஞ்ஞங்களும் உண்டு; அவைகளை விவரித்துச் சொல்லுகின்றேன், கேள்.

தைவமே வாபரே யஜ்ஞம் யோகிந: பர்யுபாஸதே
ப்ரஹ்மாக்நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேனைவோப ஜுஹ்வதி. 25.

எப்படி யென்றால், பிரம்மானுபவரூப ஞான யஞ்ஞம் மற்ற யஞ்ஞங்களை விட சிரேஷ்டமானது. அப்படிப்பட்ட ஞானத்தை அடையவேண்டுமென்று விரும்பி அதற்காகப் பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கும் யோகிகள், என்றால், நிஷ்காம கர்மானுஷ்டானபரர்கள் செய்துகொண்டிருக்கும் தேவதார்ச்சனாதி கிருத்தியங்களும் யஞ்ஞமேயென்று சொல்லப்படுகின்றன. இது தைவயஞ்ஞம். அப்படிப் பட்ட யோகிகள் கர்மானுஷ்டானம் செய்துகொண்டு வர வர, சில காலத்திற்குள் ஞானோதயமாய் நிஷ்காம்ய சித்தியை அடைந்தவர்களாகின்றார்கள்.

அப்படி சித்தி அடைந்தபிறகு அவர்களுக்குத் தேவதார்ச்சனாதி கிருத்தியங்களினால் பிரயோஜனமில்லை. "ஸர்வம் ப்ரஹ்மஸ்வரூபம்" என்றறிவதனால், ஞானோதயம் உண்டாகும். அதனால், அதுவரையில் உண்டாயிருந்த அஞ்ஞானம் நசித்துவிடும். அவர்கள் அஞ்ஞானமென்னும் ஹவிஸ்ஸை, பிரம்மஞானமென்னும் அக்கினியினால் தக்தம் செய்தவர்களாகின்றார்கள். அப்படி தக்தம் செய்வதும் யஞ்ஞமேயாகும். ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்

யம்,, ஜீவன் முக்திலக்ஷணம் என்பதில் "தக்தஸ்ய தஹநம் நாஸ்தி பக்வஸ்ய பசனம் யதா, ஜ்ஞாநாக்கிநி தக்த தேஹஸ்ய ந ச ஸ்ராத்தம் ந ச க்ரியா." என்னும் பயிங்க லோப நிஷத்துப்பார்க்க.) இதுவரையில் (அ-4, சு-24-ல்) சொல்லப்பட்ட யஞ்ஞம் இதுவேயாம்.

அர்ஜுநா! இன்னும் சொல்லுகிறேன் கேள். கர்ம யோக நிஷ்டர்களாகிய சிலர், இந்திரன் சூரியன் வருணன் முதலான தேவதைகளை உத்தேசித்து பிர்ம்மார்ப்பண புத்தியில்லாமல் யஞ்ஞங்களைச் செய்கின்றார்கள். ஞான யோகிகளோ அப்படியல்ல. "ஸத்யம் ஜ்ஞாந மநந்தம் ப்ரஹ்ம." அநித்யமும், ஜடமும், பரிச்சின்னமும் இல்லாதது பிரம்மம். "விஞ்ஞாந மாநந்தம் ப்ரஹ்ம" ஜடமும், துக்கமும் இல்லாதது பிரம்மமென்று இந்த சுருதிகளினால் தெரியவருகின்றதென்றும், பசி முதலான சம்சார தர்மங் களில்லாததும் "நேதிநேதி" இதல்ல, இதல்ல மற்ற எந்தப் பதார்த்தங்களு மல்லவென்றும், நிஷேதரூபகமாய்த் தெரி விக்கும் சர்வ வியாபகமாகிய வஸ்துவே பிரம்மசொரூப மென்றும் சொல்லப்படும். அப்படிப்பட்ட பிரம்மமென் னும் அக்நியில் புத்தியாதி உபாதி ஸம்யுக்தனாய் ஜீவ னென்று அத்யயனம் செய்துகொண்டிருக்கும் ஆத்மா வென்னும் ஆஹுதியை ஆத்மாவினாலேயே செய்துகொண் டிருப்பார்கள். என்றால், அவித்தையென்னும் உபாதியுடன் கூடின ஆத்மா நிருபாதிகமாகிய பரப்பிரம்ம சொரூபத் தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணி, ஹோமத்தை பிரம்மாத்மைகபாவனை நிஷ்டர்களாகிய சந்நி யாசிகள் செய்வார்கள்.

ஶ்ரோத்ராதீ நீந்த்ரியா ண்யந்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி
ஶப்தாதீந் விஷயா நந்யே இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி. 26.

அர்ஜுநா! இதுவரையில் அ-4, சு-24, 25-ல் ஞான யஞ்ஞங்களைக் குறித்தும், தைவயஞ்ஞங்களைக் குறித்தும் சொன்னேனல்லவா? இனி, இந்திரிய யஞ்ஞங்களைக் குறித்தும், விஷய யஞ்ஞங்களைக் குறித்தும் சொல்லுகின்றேன் கேள். எப்படியென்றால், சில யோகிகள் சுரோத்திர, (செவிகள்) துவக்கு, (தேஹசர்மம்) சக்ஷு, (கண்கள்) ஜிவ்ஹை, (நா) கிராணம், (மூக்கு) முதலாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தையும் விஷயங்களில் போகவிடாமல் நிக்கிரஹிக்கவேண்டுமென்று இதுவரையில் அ-2, சு-58,ல் சொல்லியிருக்கின்றேன். அப்படி நிக்கிரஹம்செய்வதே ஹோமமென்று சொல்லப்படும். எப்படியென்றால், யஞ்ஞத்தில் அநேக வஸ்துக்கள், அக்நியில் ஹோமம் செய்யும்போது சொரூபநாசத்தை அடையும். அதுபோல் இந்திரிய நிக்கிரஹமானது, இந்திரிய வியாபாரங்களை நசிக்கச்செய்யும். மற்றும் சில கிரஹஸ்தர்கள் சப்தாதிவிஷய நிக்கிரஹமென்னும் அக்நியில் இந்திரியங்களென்னும் ஹவிஸ்ஸினால் ஹோமம் செய்கின்றார்கள். என்றால், கிருஹஸ்தாசிரமத்தி லிருக்கப்பட்டவன் விஷயங்களில் சம்பந்தங்களை விட்டுவிடுவதே யஞ்ஞமாகும். எப்படியென்றால், அவன் சப்தாதிவிஷயங்களை அனுபவித்துக்கொண்டிருந்த போதிலும் அந்த விஷயங்களுடன் கூடும் சம்பந்தமே ஹவிஸ்ஸாகவும் இந்திரியங்களை அக்நியாகவும் நினைத்து ஹோமம் செய்கின்றான். அப்படிப்பட்ட இந்திரியங்கள் எந்த வஸ்துவைக் கிரஹித்தபோதிலும், அந்த வஸ்துவுடன் கூடிய சம்பந்தமும் நசித்துப்போவதே ஹோமமாகும். மற்றும் சிலர், ராகத்துவேஷ ரஹிதர்களாய் இந்திரியங்களை சுவாதீனம் செய்துகொண்டு அவைகளினால் உண்டாகும், சப்த ஸ்பர்ச ரூப ரச கந்தங்களென்னும் விஷயங்களை அனுபவித்துக்கொண் டிருந்தபோதிலும், அந்த விஷ்யங்களில் ஆசை

யில்லாதவர்களாய் அவைகளை அனுபவிக்காமலே இருப்பார்கள். இதுவிஷயமாய் (அ-2, சு-64-ல்) சொல்லியிருக்கின்றேன். அப்படிப்பட்டவர்கள் விஷயங்களென்னும் ஹவிஸ்ஸை இந்திரியங்களென்னும் அக்நியில் ஹோமம் செய்தவராகின்றார்கள். ஆதலால், இவ்விஷயங்களெல்லாம் யஞ்ஞமென்னும் பெயரையுடையனவா யிருக்கின்றன.

ஸர்வாணீந்த்ரிய கர்மாணி ப்ராணகர்மாணி சாபரே
ஆத்மஸம்ய ம யோகாக்னௌ ஜுஹ்வதி ஜ்ஞாந தீபிதே. 27.

ஓ அர்ஜுநா! இதுவரையில், ஞானயஞ்ஞ தைவயஞ்ஞ இந்திரியயஞ்ஞ விஷயஞ்ஞங்களைக்குறித்துச் சொன்னேனல்லவா? இனி, கர்மயஞ்ஞத்தைக் குறித்துச் சொல்லுகின்றேன் கேள். சில யோகிகள் செவிகள், தேகசர்மம், கண்கள், நா, மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், இவைகளின் வியாபாரமாகிய, ஸப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களும் என்றால், கேட்பது, ஸ்பரிசிப்பது, (தொடுவது) பார்ப்பது, ருசி அறிவது, வாசனை பார்ப்பதென்னும் வியாபாரங்களும்; வாக்கு, பாணி, பாத, பாயு, உபஸ்தமென்னும் கர்மேந்திரிய வியாபாரங்களும்; என்றால், வார்த்தையாடுவது, வேலைசெய்வது, நடப்பது, மலமூத்திரங்கள் விஸர்ஜிப்பதென்னும் வியாபாரங்களும்; பிராண அபான வியான உதான ஸமான மென்னும் பஞ்ச பிராணன்களினுடைய வியாபார மாகிய உஸ்வாஸ நிஸ்வாஸங்கள் சரீரமெல்லாம் வியாபித்துப் புஜித்த பதார்த்தங்களை ஜீர்ணிக்கச் செய்து, நாபிமுதல் பிர்மரந்திரம் வரையில் திரிந்துகொண்டிருக்கும். இவ்வாறு புஜித்த பதார்த்தங்களை ஜீர்ணிக்கச்செய்து, அதன்சத்தை ரத்த ரூபமாய்ச் செய்து, நாடிகளில் பிரவேசிக்கச்செய்து திப்பியைக் கீழ்ப்புறமாய் மலமூத்திரங்களாய்த் தள்ளும்படிச்செய்யும். உபவாயுக்களான, நாக கூர்ம க்ருகர தேவதத்த தனஞ்

ஐயனென்பனவாம். நாகன்:—இது, கண்டத்திலிருந்து வாந்தியை உண்டுபண்ணும்: நேத்திரங்களினால் பார்க்கச் செய்யும். கூர்மன்:—இது, கண்களிலிருந்து திறக்கவும் மூடவும் செய்யும். க்ருகரன்:—இது, தும்மலை உண்டாக்கும். தேவதத்தன்:—இது, கொட்டாவியை உண்டாக்கும். தனஞ்செயன்:—இது, கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தை வெளியில் தள்ளச்செய்யும். அன்றியும் மரணமடைந்த சரீரத்தையும் விடாமல் காஷ்டத்திற்குப் போகும்வரையில் ஸ்தூலமாகச்செய்யும்:—("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" சரீர லக்ஷணம் சாங்க்ய விசாரணை என்பதில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.) "ஜ்ஞாநதீபிகே" குருஉபதேச சுவானுபவ விவேகத்தினால் யோகிகள் மேற்சொல்லிய தசவாயுக்களையும் பந்தித்து ஆத்மசமாதி யென்னும் யோகத்திலிருக்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட ஸமாதி நிஷ்டையில் இருக்கும் வரையில் மேற்சொல்லிய ஞானேந்திரிய, கர்மேந்திரங்களினுடையவும் சேஷ்டைகளைப் பந்தித்து ஆத்மா என்னும் பரப்பிரம்ம சொரூபத்தில் லயிக்கச்செய்து தன்மயமாய் நிர்ஜீவ களேபர (பிண)ம் போல் சரீர பிரஞ்ஞை யில்லாதவர்களா யிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் மேற்சொல்லிய சமஸ்த கர்மங்களையும் சமாதி நிஷ்டையென்னும் அக்கினியில் ஹோமம் செய்தவர்க ளாகின்றார்கள்.

த்ரவ்யயஞ்ஞா ஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞா ஸ்ததாபரே
ஸ்வாத்யாய ஞாநயஜ்ஞாஶ்ச யதயஸ் ஸம்ஶிதவ்ரதாః. 28.

ஓ அர்ஜுனா! இதுவரையில் நான்சொல்லிய ஞானயஞ்ஞம், தைவயஞ்ஞம், இந்திரியயஞ்ஞம், விஷயயஞ்ஞம், கர்மயஞ்ஞம் ஆகிய இவைகளெல்லாம் ஐஹிகா முஷ்மிகங்களில் (இஹ பர சுகங்களில்) இச்சையில்லாதவர்கள் செய்யப்படும் யஞ்ஞமாகும். இனி, அப்பேர்ப்பட்ட அபேக்ஷை

களை உடையவர்கள் செய்யும் யஞ்ஞங்கள் சில உண்டு. அவைகளை விவரித்துச் சொல்லுகின்றேன் கேள். எப்படி யென்றால், இவ்வுலகத்தில் அநேகர்கள் அநேகவிதங்களாகிய எண்ணங்களை உடையவர்களாய் என்றால், சிலர் திரவ்யாபேக்ஷையுடையவர்களும், சிலர் ஸந்தானாபேக்ஷையுடையவர்களும், சிலர் பிரயத்தனப்பட்ட காரியங்கள் நிறைவேறவேண்டுமென்று கோரப்பட்டவர்களும், மற்றும் சிலர் தமக்குண்டாகிய ஆபத்துகள் தீரும்படி கோரப்பட்டவர்களும், இவ்வாறு அநேகர்கள் அநேகவித எண்ணங்களுடையவர்களாய் அந்த எண்ணங்கள் நிறைவேறுவதற்காக பகவத் பிரீத்தியர்த்தமாய்ச் சிலர் புண்ய க்ஷேத்திரங்களில் தானாதி கிருத்தியங்களைச் செய்வதிலும், சிலர் தேவாலய தடாகங்கள் கட்டுவதிலும், சிலர் அன்னதானம் முதலாகிய ஸத்விஷயத்தில் தனத்தை விரயம்செய்து அதன் மூலமாய் தமது எண்ணங்களை அடைய நினைப்பார்கள்; இது திரவ்விய யஞ்ஞமென்று சொல்லப்படும். அப்படி தனத்தை விரயம் செய்வதற்குச் சக்தியற்றவர்கள், தேஹகார்யங்களாகிய உபவாச தபங்களைச் செய்து அதன் மூலமாய் தமது இச்சையை நிறைவேற்றிக்கொள்ள எண்ணங்கொள்ளுவார்கள். அது, தபோயஞ்ஞமென்று சொல்லப்படும். சிலர் யம நியமாத்தியஷ்டாங்க யோகங்களை அப்பியசித்து, அதன் மூலமாய் தமது எண்ணங்களை அடையக் கோருவார்கள். அது, யோகயஞ்ஞமென்று சொல்லப்படும். மற்றும் சிலர் வேதாத்தியயன சுந்தர காண்ட பாராயணாதி கிருத்தியங்களைச் செய்து அதன் மூலமாய் தமது எண்ணங்கள் நிறைவேறவேண்டுமென்னும் எண்ணத்துடன் செய்வார்கள். இது, சுவாத்தியாய ஞானயஞ்ஞமென்று சொல்லப்படும். இன்னும் சிலர், கடினமாகிய விரதமுடையவர்கள் என்றால், பிரதிதினம் ஸஹஸ்ர (ஆயிர

லிங்கபூஜை) சம்பூர்த்தியானாலன்றிப் புஜிப்பதில்லை யென்றும், சிலர் திரவ்யம் சம்பாதித்து ஆலயம் பூர்த்தி செய்யும்வரையில் அர்கண்டத்தை எடுக்கேனென்றும், சிலர் வியாதிதீர்ந்தால் ஏழுமலையானுக்கு அங்கப் பிரதக்ஷிணம் (புரண்டுபோகுதல்) செய்வேனென்றும் இவை முதலான மடினவிரத முடையவர்களுமாய் இருக்கின்றார்கள்.

அர்ஜுனன்:—ஓ சுவாமி! இப்பொழுது நீர் சொல்லிய யஞ்ஞத்தில் யோகயஞ்ஞமும் என்றால், யம, நியம, பிராணயாமாதி யஷ்டாங்க யோகத்தையும், ஓர் யஞ்ஞமாய்ச் சொன்னீரல்லவா? அதுவும் எப்படி யஞ்ஞமாகும்? அதில் ஹவிஸ் எது? அக்கினி எது? விவரித்துச் சொல்லும், கிருஷ்ணா!

அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேஉ பானம் ததாபரே
ப்ராணாபாநகதீ ருத்வா ப்ராணாயாம பராயணா:. 29.
அபரே நியதாஹாரா: ப்ராணாந் ப்ராணேஷு ஜுஹ்வதி. 29½.

கிருஷ்ணன்;—ஓ அர்ஜுனா! யோகயஞ்ஞமென்பது உனக்குச் சரியாய்த் தெரியவில்லைபோல் தோன்றுகிறது. அதனை மறுபடியும் விவரித்துச் சொல்லுகின்றேன் கேள். யோகத்திற்கு முக்கியமான அங்கம் பிராணாயாமம். அந்தப் பிராணாயாமம் எப்படிப்பட்டதென்றால், நாசிகா ரந்திரங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் வாயுவை மந்திர பூர்வகமாய் ஹிருதயத்தில் நிறுத்தவேண்டும். பிராணாயாமம் செய்வதற்கு ரேசக, பூரக, கும்பகமென்று மூன்று வித சாதனங்கள் உண்டு. (இந்தச் சாதனங்கள் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" ப்ராணயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல் என்பதில் விவரமாய் எழுதப்பட்டிருக்கின்றன.) ரேசகமென்றால் கர்ப்பத்திலிருக்கும் சுவாசத்தை நாசிகா ரந்திரங்களின் வழியாய் வெளியில் விடுவது; இது உசுவாசமென்று சொல்லப்

படும். பூரகமென்றால்,வெளிவாயுவை நாசிகாரந்திரங்களின் வழியாய் சுவாசத்தை உள்ளுக்கு இழுப்பது ; இது நிசுவாச மென்று சொல்லப்படும். இதன் பாகமே குதஸ்தானத்தின் வழியாய்ப் போவது. இது, அபானனென்று சொல்லப்படும், கும்பகமென்றால், உள்ளே இழுத்த ஸ்வாசத்தை வெளியில் விடாமல் மந்திர பூர்வகமாய் நிறுத்துவது. பிராணனென்றால், ஹிருதயத்திலிருக்கப்பட்ட வாயு ; அபானனென்றால், குதஸ்தானத்திலிருக்கப்பட்ட வாயு ; என்றால், ஊர்த்துவமுகமா யிருக்கப்பட்ட வாயு பிராணனென்றும், அதோமுகமாய் இருக்கப்பட்ட வாயு அபானனென்றும் சொல்லப்படும். பிராணாயாமம் செய்யப்பட்டவன் ஓர் நாசிகை மூடி மற்றொருநாசியில் வாயுவை யிழுத்து நிறுத்தி மறுபடியும் சுவாசத்தை விடும்போது முன் மூடியிருந்த நாசிகா துவாரத்தின்வழியாய் விடுவிக்கின்றான். இப்படி வாயுவை அப்பியாசம் செய்வதனால் ஊர்த்துவ வாயுவும்அதோவாயும் சேர்ப்பித்தவனாகின்றான். ஆதலால், பிராணனை அபானத்தில் சேர்த்ததாகின்றது. இப்படிச் செய்வதே பிராணனை அபானத்தில் ஹோமம் செய்வது என்று சொல்லப்படும். இதற்கே பூரகமென்றும், நிசுவாசமென்றும், அபானனென்றும், பெயர். உள்ளுக்கிழுத்த வாயுவை வெளியில் விடுவதால் அதோமுகமாயிருக்கும் வாயு ஊர்த்துவமுகமாய்ச் செல்லும். அதாவது, அபானத்தை பிராணனுடன் சேர்த்ததாகின்றது. இதுவே ரேசகமென்றும், உசுவாசமென்றும் சொல்லப்படும். சிலர் சொல்ப ஆஹாரத்தைப் புஜித்து பிராணவாயுவை வெளியில் விடாமல் ஹிருதயத்திலேயே நிறுத்துவார்கள். இதுவே கும்பகமென்னும் பிராணாயாமம். இப்படிச் செய்து பிராணவாயுவை பந்திக்கின்றார்கள். என்றால், பிராணாபான வியானோதான சமானனென்னும் பஞ்சபிராணன்

களினுடைய வியாபாரங்களாகிய உசுவாச நிசுவாசங்களை யும், நாக கூர்ம க்ருகர தேவதத்த தநஞ்சயனென்னும் உபப்பிராண வாயுக்களையும் ஸ்தம்பித்து (நிறுத்தி) நிஸ் சேஷ்டிதரா யிருப்பார்கள்.

அர்ஜுநன்:—ஓ சுவாமி! அப்படிச்செய்வது கேவல சரீர சாதனமா யிருக்கின்றது. இது சாதாரணமாய் காரடி வித்தைக்காரன் உதரபோஷணார்த்தமாய் அப்பியசிக்கும் வித்தையா யிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட வித்யை எப் படி மோக்ஷ சாதனமாகும்? இதனால், யோகிகளுக்கு என் னப் பிரயோஜனம்?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! நீ சொல்லியது வாஸ்தவமே ஆனால், காரடி வித்தையைச்செய்பவன், தான் வாயுதாரணத் தின் சாமர்த்தியங்களை இதரர்களுக்குக் காட்டி அதனால் உதரபோஷணார்த்தம் செய்துகொள்ளுகின்றானேயொழிய, அவனுக்கு அது மோக்ஷ சாதனமல்ல. யோகிகளோ அப் படியல்ல. அவர்கள், இதை ஏன் அப்பியசிக்கின்றார்களென் றால், மனம் ஓர் லக்ஷியத்தில் சலிக்காமல் நின்றிருப்பதற்கு, அனுகூலமானதாய் இருக்கின்றதென்று அப்பியசிக்கின்றார் கள். என்றால், அவர்கள் தமது மனதைப் பரமாத்மாவில் ஐக்கியம் செய்பவர்களா யிருக்கின்றார்கள். இப்படி ஐக் கியம் செய்ய இது சாதனமா யிருக்கின்றது. ஆதலால், இதனை அப்பியாசம் செய்கின்றார்கள். இது, மோக்ஷ சாதனங்களில் முக்கியமானதாயிருக்கின்றது.

அர்ஜுநன்:—ஐயா! இப்பொழுது நீர் சொல்லிய பிராணாயாமங்களில் கும்பகமென்னும் பிராணாயாமத்திற்கு சொல்ப ஆஹாரத்தைப் புஜித்து பிராணவாயுவை வெளி விடாமல், கர்ப்பத்திலேயே நிறுத்திவைப்பார்களென்று சொல்வதற்குக் காரணமென்ன? மற்ற பிராணாயாமங்

களுக்கு இல்லாத சொல்ப ஆஹாரம் இதற்கு மாத்திரம் எப்படி உண்டாயிற்று?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! இந்தக் கும்பகமென்னும் பிராணாயாமம் மற்ற ரேசக பூரகங்களைவிட, இது மிகவும் கஷ்ட சாத்தியமானது. கேவல சொல்ப ஆஹாரத்தைப் புஜிப்பவர்களுக்கு மாத்திரமே இது சாத்தியமாகுமே யொழிய இதரர்களுக்குச் சாத்தியமாகமாட்டாது. ஏனென்றால், இந்தப் பிராணாயாமம் செய்யும்போது குடலில் தாராளமாய் இடம் யிருக்கவேண்டியதா யிருக்கின்றது. ஆதலால், சொல்ப ஆஹாரம் புஜிக்கவேண்டும். வயிறு ரப் புசித்தால் பிராணவாயு குடலில் தங்குவதற்கு இடமில்லாமலிருக்கும். ஆதலால் பிராணாயாமம் செய்பவர்கள் மிதமான ஆஹாரம் புஜிக்கவேண்டும். அங்ஙனம் புஜித்தால்தான், பிராணவாயு கும்பகத்தினால் குடலில் தங்கியிருக்கும். இப்படி பிராணவாயுவைக் கும்பித்து ஜலத்தின் மீது சயனித்துக்கொண்டால், சரீரமானது தக்கையைப் போல் ஜலத்தின்மீது மிதந்துகொண்டிருக்கும். அப்போது கும்பித்த பிராணவாயுவிலிருந்து ஸ்வல்பவாயுவை வெளியில் ஓடவிட்டு, அதை உசுவாச நிசுவாசங்களாய், விட்டுக்கொண்டு மிகுதிப்பட்ட வாயுவையெல்லாம் கர்ப்பத்திலேயே நிறுத்தி முதலில்விட்ட சொல்ப சுவாசத்தில்தானே உபந்நியாசமும் செய்யலாம். அல்லது, எந்த எண்ணங்களுமில்லாமல் ஜலத்தின்மீதே எத்தனை தினங்களாயினும் சயனித்துக்கொண்டிருக்கலாம். (இவ்வாறு ஜலத்தின்மீது சயனித்திருப்பதை "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்தரஹஸ்யம்" பிராணாயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல் என்பதில் பார்க்க.) இந்த அப்பியாசம் செய்தவர்கள், பூமியிலிறங்கி சுவாசத்தைக் கும்பித்து

அன்னபானுதிக ளில்லாமல், அநேக ஆயிர வருஷகாலம் சமாதியிலிருப்பார்கள். அர்ஜுனா! இன்னும் தெரியும்படி மற்றொருவிதமாய்ச் சொல்லுகின்றேன் கேள்:—சிலர் பிராணவாயுவினுடைய விருத்தியாகிய பூரகத்தை, அபான வாயுவின் விருத்தியில் சேர்ப்பார்கள். என்றால், பிராணயாமம் செய்யும்பொழுது பிராணனை அபானத்தில் சேர்ப்பார்கள். சிலர், அபானவாயுவின் விருத்தியாகிய ரேசகத்தை, பிராணவாயுவின் விருத்தியில் சேர்ப்பார்கள். என்றால், பிராணயாமம் செய்யும்பொழுது அபானவாயுவை பிராணத்தில் சேர்ப்பார்கள். மற்றும் சிலர் வாயிலிருந்தும் நாசியிலிருந்தும் ஓடிக்கொண்டிருக்கும் உசுவாசத்தைப் பந்தித்து எண்ணங்களையெல்லாம் நிறுத்திக் கும்பகமென்னும் பெயரையுடைய பிராணயாமத்தை ஹோமம் செய்வார்கள். ("யதா யதா ஸதாப்யாஸாத் மநஸঃ ஸ்திரதா பவேத், வாயுவாக் காய த்ருஷ்டீநாம் ஸ்திரதா சததா ததா.") மனது நிச்சிந்தையாயிருக்க அப்பியாசம் செய்யச் செய்ய, மனதுக்கு அசலத்துவ முண்டாகும். அப்படி அசலத்வம் உண்டாவதனால் பிராணுதி வாயுக்களினுடைய உசுவாச நிசுவாச திகள் நின்றுவிடும்: அப்போது, வாக்கில் எந்த இதர சம்பாஷணையும் வாராமல் திருஷ்டியானது பரப்பிரம்ம லக்ஷியத்தில் தானே நின்றுவிடும்.

ஸர்வே ப்யேதே யஞ்ஞவிதோ யஞ்ஞ க்ஷபித கல்மஷா:. 30.
யஞ்ஞஶிஷ்டா ம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம்
நாயம் லோகோऽஸ்த்ய யஜ்ஞஸ்ய குதோऽந்ய: குருஸத்தம! 31.

ஓ குரு சிரேஷ்டனே! இப்பொழுது (அ-4, சு-24-ல், ஞான யஞ்ஞமும், (அ-4, சு-25-ல்) தைவயஞ்ஞமும், (அ-4, சு-26-ல்) இந்திரியவிஷய யஞ்ஞமும், (அ-4, சு-27-ல்) கர்ம யஞ்ஞமும், (அ-4, சு-28-ல்) திரவ்வியயஞ்ஞ தபோயஞ்ஞ

யோகயஞ்ஞ ஸ்வாத்தியாய யஞ்ஞங்களும், (அ-4, சு-29-ல்) பிராணயாம யஞ்ஞமும் முதலானவைகளையேனும், அவைகளில் சிலவற்றையேனும் அநுஷ்டித்தவர்கள் மாத்திரமே யஞ்ஞத்தை அறிந்தவர்களும்; யஞ்ஞத்தினால் பாபத்தைப் போக்கடித்துக் கொண்டவர்களுமாகின்றார்கள். இவர்கள் யஞ்ஞ உச்சிஷ்டா ம்ருதத்தைப் புஜித்து மோக்ஷத்தையடைவார்கள். யோகாப்பியாசஞ்செய்து வாயுவையும், இந்திரியங்களையும் சுவாதீனம் செய்துகொண்டால் மனது நிச்சலத்துவத்தை யடையும். மேற்சொல்லிய யஞ்ஞங்களில் எதையும் அநுஷ்டிக்காதவர்களுக்கு மோக்ஷப் பிராப்தி உண்டாகமாட்டாது. அப்படிப்பட்டவர்கள் இவ்வுலகத்தில் அதிநீசர்களாகின்றார்கள். இவர்களுக்கு இந்த உலக சௌக்யமே உண்டாகமாட்டாது. அப்படியிருக்க, பரலோக சௌக்யம் எப்படியுண்டாகும்?

அர்ஜுனன்:—ஐயா! யஞ்ஞசிஷ்டாம்ருத மென்றால், அக்நிஷ்டோமாதி யஞ்ஞத்தில் தேவதாப் பிரீதிக்காக ஹோமஞ்செய்து சேஷமாய் நின்றது அம்ருதமல்லவா? அதனைப் புஜிப்பது எப்படி?

கிருஷ்ணன்:—யஞ்ஞசிஷ்டாம்ருத மென்றால், அக்கினியில் ஹோமம் செய்யும் வஸ்துக்களல்ல. பின் எப்படிப்பட்டதென்றால், இப்போது நான் சொல்லிவந்த ஞானதி யஞ்ஞங்களைச் செய்துவரவர, தயிரிலிருக்கும் வெட்டையெடுத்து மத்தினால் கடையக்கடைய வெண்ணெய் வருவதுபோல் ஆத்மஞானம் உத்பத்தியாகும். அப்படிப்பட்ட ஆத்மஞானமே இந்த யஞ்ஞத்திலுள்ள அம்ருதமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட ஆத்ம ஞானனுபவமே அம்ருதத்தைப் புஜிப்பதாகின்றது. அக்நிஷ்டோமாதி அம்ருதானுபவத்தினால் சொர்க்காதி போகங்கள் உண்டா

வதுபோல் இந்த யஞ்ஞத்தினுல் உண்டாகும் ஆத்மானுபவத்தினுல் மோக்ஷப் பிராப்தி யுண்டாகின்றது.

ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே
கர்மஜாந் வித்தி தாந் ஸர்வா நேவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே.32

இப்போது நான் சொல்லிய யஞ்ஞங்களெல்லாம் பிரம்மதேவனுடைய முகத்திலிருந்து உத்பத்தியான வேதத்தில் சவிஸ்தாரமாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றன. இதில் யஞ்ஞத்தை அனுஷ்டிக்கும் விதத்தையும் வேதத்தில் விவரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், வேதங்களைச் சரியாய் உணர்ந்தவர்கள் இந்த யஞ்ஞங்களெல்லாம் கர்மயஞ்ஞமென்றும் என்றுல், சரீரத்தால் செய்யப்படும் அக்நிஷ்டோமாதி கர்மத்தினுல் உண்டான யஞ்ஞமென்றும் சிலர், வாக்கினுல் செய்யப்படும் ஸ்வாத்யாயாதி கர்மத்தினுல் உண்டான யஞ்ஞமென்றும், மற்றும் சிலர் மனதினுல் செய்யப்பட்ட இந்திரிய நிக்கிரஹாதி கர்மத்தினுல் உண்டாகும் யஞ்ஞமென்றும் தெரிந்துகொள்வார்கள். இந்த சமஸ்த யஞ்ஞங்களும், மனது வாக்கு தேஹம் இவைகளின் செய்கையாகிய கர்மத்தினுல் உண்டாயிற்றென்று அறியக்கடவாய். இவ்விதமாய் அறிந்து ஞானநிஷ்டையை யடைந்தால் சம்சார பந்தத்திலிருந்து விமுக்தனுவாய். "இவ்விதமாயறிந்து, ஞான நிஷ்டையை அடைந்தால் சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவாய்." என்று சொன்னதின் தாத்பர்யம் என்னவென்றுல், யஞ்ஞ முதலிய கர்மங்கள் ஆத்மாவைச்சேர்ந்ததல்ல; மனோவாக்கு தேஹங்களினுடைய செய்கையென்று அறியவேண்டும், ஆத்மஞான நிஷ்டையிலேயே இருப்பானுகில் சம்சாரபந்தம் இவனைத் தொடராது. அநேகவிதமான கர்மயோகங்கள் ஆத்ம சொரூப நிச்சய மடைவதற்குக் காரணங்களாயிருக்கின்றன. இப்படி பிரதிதினம் தவருமல் கர்மத்தை

அனுஷ்டித்து வந்தால் அதன் மூலமாய் சித்தசுத்தியும், அந்த சித்தசுத்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோக்ஷமும் சித்திக்கும். இதன் தாத்பர்யமே அ-3, சு-13-ல்; சொல்லப்பட்டிருக்கின்றது.

அர்ஜுனன்:—ஆனால், ஐயா ! இப்பொழுது, நீர் சொன்னவைகள் அனேக விதங்களாகிய யஞ்ஞங்களாயிருக்கின்றன; இவைகளை யெல்லாம் ஒரு புருஷனே அனுஷ்டிப்பது கஷ்டசாத்தியமல்லவா ? இவைகளில் சிரேஷ்டமான யஞ்ஞம் எதுவோ அதை சொல்லக்கடவீர் கிருஷ்ணா !

ஶ்ரேயாந் த்ரவ்யமயா த்யஜ்ஞாத் ஜ்ஞாந யஜ்ஞஃ பரந்தப !
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ! ஜ்ஞாநே பரிஸமாப்யதே. 33.

கிருஷ்ணன்:—ஹே பார்த்தா ! திரவ்வியத்தினால் கர்ம யஞ்ஞம் செய்வதைவிட ஞானயஞ்ஞமே சிரேஷ்டமானது. ஏனென்றால், திரவ்வியயஞ்ஞம் பலத்தைத்தரும். ஞானயஞ்ஞமோ அப்படிச்செய்யாமல், பலத்தை நசிக்கச்செய்யும் மஹத்தாகிய ஸமஸ்த கர்மங்களும் மோக்ஷ சாதனத்திற்கு அந்தர்ப்பூதமா யிருக்கின்றன. அதாவது, ஞானநிஷ்டையுடையவனுக்குக் கர்மத்தினால் பிரயோஜனமில்லை. கிருஹஸ்தனே புத்திபூர்வகமாய்க் கர்மத்தை விடலாகாது. ஞானம் பரிபக்குவஸ்திதிக்கு வந்தவுடன் தனக்குத் தானாகவே கர்மம் செய்வதற்கு அவகாசமில்லாமற்போகும். இதை அ-4, சு-25-ல், சொல்லியிருக்கின்றேன். அர்ஜுனா! ஈசுவரார்ப்பணமாய்ச் செய்யப்படும் சகல கர்மங்களும் அதன் பலன்களுடன் பிரம்மஞானத்தில் அடங்கியிருக்கும் திரவ்விய முதலானவைகளினால் செய்கிற யஞ்ஞத்தில் ஞானம் அடங்கியிருக்கும். எப்படியென்றால், யஞ்ஞரூபமான ஒவ்வொரு கர்மத்திலும் ஒரு பாகம் கர்மமாயும், மற்றொரு பாகம் ஞானமாயும் இருக்கின்றன. கர்மபாகத்தைக் காட்டிலும் ஞானபாகம் சிரேஷ்டமானது. சகல கர்

மமும் அந்தக் கர்மத்திற்கு உபயோகமான சகல வஸ்த்துக்களும், ஞானத்தில் முடிவையடையும். அதாவது, இவ்வாறு கர்மம் செய்து வந்தால், அந்தக் கர்மமே ஞானுகாரமாய்விடும். ஆதலால், ஞான யஞ்ஞமே சிரேஷ்டமானது.

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிந ஸ்தத்வதர்ஶிந:. 34.
யத்ஜ்ஞாத்வா நபுந ர்மோஹ மேவம் யாஸ்யஸி பாண்டவ !
யேந பூதாந்ய ஶேஷேண த்ரக்ஷ்ய ஸ்யாத்ம ந்யதோ மயி. 35.

ஹே பாண்டவா ! ஞானேதயமான பிறகு கர்மங்களெல்லாம் நசித்துவிடும். முன் சுலோகத்தில் ஞானயஞ்ஞமே சிரேஷ்டமானதென்று சொன்னேனல்லவா? அப்படிச் சொல்வதற்குக் காரணமென்னவென்றால், ஞானேதயம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுதே உனக்கு உண்டாயிருக்கும் அஞ்ஞானரூபமாகிய பந்தவிஷயமான பாமரத்துவம் உன்னைவிட்டு ஒழிவதேயல்லாமல் உன்னிடத்திலும், என்னிடத்திலும், மற்ற எல்லாப் பிராணிகளிடத்திலும் இருக்கப்பட்ட ஆத்மா ஒன்றே யென்கிற நிச்சயபுத்தி, உண்டாகும். (இதன் தாத்பர்யத்தை "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" கர்பத்தில் பிண்டம்தரிப்பது என்பதில் ப்ருஹதாரண்யோபநிஷத், மாண்டுக்யோப நிஷத், கேனேப நிஷத்துகளைப்பார்க்க.) நீ அப்படிப்பட்ட ஞானத்தை அடைவதற்காகப் பிரயத்தினம் செய்.

அர்ஜுனன்:— ஐயா ! அப்படிப்பட்ட ஞானத்தை நான் எப்படிச் சம்பாதிக்கக் கூடுமோ, அந்த உபாயத்தை எனக்குச் சொல்லும் கிருஷ்ணு !

கிருஷ்ணன்:—அப்படிப்பட்ட ஞானம் அடைவதற்குத் தத்துவ வேத்தர்களாகிய பெரியோர்களை ஆசிரயித்து அவர்களை நமஸ்கரித்து சிஷ்யனுய்ச் சேவை செய்துகொண்

டிருந்து பிறகு கேட்பாயாகில், அவர்கள் உனக்கு உப செய்வார்கள்.

அர்ஜுநன்:—நல்லது, நீர் இப்படிச்சொன்னீரல்லவா? அப்படிப்பட்ட தத்துவ வேத்தர்களா யிருக்கப்பட்டவர்கள் ப்ரபேக்ஷர்களாயும், அபிமான ரஹிதர்களாயும் ஸமத்வ முடையவர்களாயும், கிருபை யுடையவர்களாயும் இருக்கவேண்டு மல்லவா? இப்படிப்பட்ட லக்ஷணமுடையவர்களை யாவராயினும் ஆசிரயித்தவுடனே அவர்களை அனுக்கிரஹித்து ஞானோபதேசம் செய்பவர்களாயிருக்க, அப்படிச் செய்யாமல் தம்மிடத்தில் உபதேசார்த்தமாய் ஆசிரயித்து, வந்தவர்களினால் நமஸ்காரமும் சிசுரூஷையும் அபேக்ஷிப்பதற்குக் காரணமென்ன? அவர்கள் நிரபேக்ஷர்களும், ஸர்வம் ஸமத்துவ முடையவர்களென்றும் எப்படிச் சொல்லலாம்? அப்படிப்பட்டவர்களினுடைய உபதேசங்களினால் ஞானோதயம் எப்படி உண்டாகும்?

கிருஷ்ணன்:—இப்பொழுது நீ கேட்டகேள்வி யுக்தமானதாகவே யிருக்கின்றது. அதற்குச் சமாதானம்,சொல்லுகின்றேன் கேள். நீ சொல்லிய நமஸ்காரங்களும் சிசுரூஷைகளும் மற்ற எந்தவிஷயங்களும் யாரிடத்திலிருந்தாகிலும் தெரிந்து கொள்ளவேண்டு மென்னும் எண்ணம், அப்படிப்பட்டவர்களுக்கு உண்டாகமாட்டாது. ஆனால், அப்படி சிசுரூஷை செய்யப்பட்டவர்களுக்கே தான் அவர்கள் உபதேசம் செய்வார்கள். அஃதேனென்றால், ஸர்வசங்க பரித்தியாகிகளாகிய அப்படிப்பட்டவர்களுக்கு இதரர்கள் செய்யும் சிசுரூஷாதிகளினால் எப்பேர்ப்பட்ட பிரயோஜனம் இல்லாவிடினும் ஞானோபதேசார்த்தமாய்த் தம்மை ஆசிரயித்த சிஷ்யர்கள் அப்படிப்பட்ட சிசுரூஷை செய்தால்தான் உபதேசிப்பார்கள். அந்த சிசுரூஷைகளினால் தமக்கு ஓர் பிரயோஜனமென்று

எண்ணி உபதேசிப்பதல்ல. தம்மால் ஞானோபதேசம் பெறுவதற்காக ஆசிரயித்த சிஷ்யனது மனோபாவத்தை அறிவதற்காக அப்படிச் செய்கின்றார்களென்று நீ அறியக்கடவாய். அதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—ஓர் ஆசார்யனிடத்தில் ஞானோபதேசார்த்தமாய் இரண்டு சிஷ்யர்கள் ஆசிரயித்தார்கள். அந்த ஆசார்யரானவர் இருவர்களுக்குள் ஒருவனுக்கேனும் உபதேசம் செய்யவில்லை. அப்படி அவர்கள் அநேக காலமிருந்தும், அவர்களில் ஒருவன் 'நாம் இவ்வளவுகாலமாய் இவரை ஆசிரயித்திருந்தும் உபதேசம் செய்யாமற்போனாரல்லவா, இப்படிப்பட்ட குருவை ஏன் ஆசிரயிக்கவேண்டும்' என்று எண்ணிச் சென்றுவிட்டான். மற்றவனோ அவ்வாறு செய்யாமல் அவரது கருணையினால் உபதேசம் அடையவேண்டுமென்று ஆசையுடையவனாய் நாளுக்குநாள் அந்த ஆசார்யரிடத்தில் பக்தி விசுவாசங்கள் விசேஷித்து விநய விதேயத்தை யுடையவனாய் அவருக்குச் சிசுருஷை செய்துகொண்டுவந்தான். அப்படிச் செய்வது தன்பிரயோஜனார்த்தமாய்ச் செய்வதேயொழிய, அந்த ஆசார்யர் இச்சிப்பதற்கல்ல. இவ்வாறு செய்துகொண்டு வர வர அந்தச் சிஷ்யனது மனோபரிபக்குவம் இப்படிப்பட்டதென்று சிசுருஷாதிகளினால் கண்டறிந்து, இவனது வியாபாரம் அசஞ்சலமானது, இவனுக்கு உபதேசித்தால் ஞானோதயம் நிச்சயமா யுண்டாகுமென்றும், அதனால் அவன் மோக்ஷத்தை அடைகுவானென்றும் தன்புத்திக்கு எப்பொழுது ஸ்திரமாய்த் தோன்றுகிறதோ அப்பொழுது தான் உபதேசம் செய்வார். இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், உபதேசிப்பதற்காக ஆசிரயிக்கும் சிஷ்யன் செய்யும் பரிசாரங்கள் ஆசார்யருடைய பிரயோஜனார்த்தமல்லவென்றும் ஸ்வப்பிரயோஜனார்த்தமே யென்றும்

ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின் றதல்லவா? ஆதலால், ஓ அர்ஜுநா! ஆசார்யரால் உபதேசிக்கப்பட்டபின் ஞானத்தை யடைவாய். அந்த ஞானத்தை அடைந்தபின், நான் என்னுடையவர்கள் என்னும் அஹங்கார மமகார ரூபமாகிய மோஹத்தை அடையமாட்டாய். அப்பேர்ப்பட்ட ஞானத்தினால் தான் பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமுள்ள சகல பூதங்களையும் உன்னிடத்தில் பார்ப்பாய். பிறகு, இவைகளை யெல்லாம் பரமேசுவரனான என்னிடத்தில் பார்ப்பாய். அதாவது, க்ஷேத்திரஞ்ஞர் (ஜீவி)கள் என்றுசொல்லப் பட்ட சகல பூதங்களையும் சமஸ்த வேதாந்தங்களையும் பிரதிபாதிக்கப்படும் ஐக்கியத்தைக்காண்பாய். பிறகு வாசுதேவனான என்னைப் பார்ப்பாய். அப்பொழுது ஸர்வமும் பிரம்மமயம் என்னும் நிச்சயஞானம் உண்டாகும்.

அபிசே தஸி பாபேப்ய ஸர்வேப்யஃ பாபக்ருத்தமஃ
ஸர்வம் ஜ்ஞாநப்லவே நைவ வ்ருஜிநம் ஸந்தரிஷ்யஸி. 36.

அர்ஜுநா! இப்பொழுது நான் சொல்லியதுபோல ஸத் குருவை ஆசிரயித்து அவரை வந்தன சிசுருஷைகளினால் மெய்ப்பித்து அவர் செய்யும் உபதேசத்தினால் ஞானத்தை யடைவாயாகில், அப்படிப்பட்ட ஞானத்தினால் உனக்கு உண்டாகும் பிரயோஜன மென்னவென்றால் அநாவரையில் ஜன்மாந்திரங்களாய் நீ செய்துவந்த பாபங்கள் அபிரிமிதமாய் இருந்தபோதிலும் அதாவது, மற்ற எல்லோரும் செய்த பாபத்தைவிட அதிகமா யிருந்தாலும் அப்படிப்பட்ட பாபமென்னும் சமுத்திரத்தை இந்த ஞானமென்னும் ஓடத்தினால் கடந்துவிடுவாய். என்றால், அப்படிப்பட்ட பெருத்த பாபமா யிருந்தபோதிலும் நசித்துவிடும். அஃதெப்படி யென்றால், சொல்லுகின்றேன் கேள்:—

† யதைதாம்ஸி ஸமித்தோக்நி ர்பஸ்மஸா த்குருதேஉர்ஜுந !
ஜ்ஞாநாக்நி ஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸா த்குருதே ததா, 37.

ஹே! அர்ஜுநா! அக்கினி சரியாக எரிவதற்குமுன் அதன் மீது நன்ருய் உலர்ந்த விறகுகளை வைத்தபோதி லும் அது தணிந்துவிடும். அப்படிக்கல்லாமல் அந்த அக்கினி சரியாய் ஜுவாலைவிட்டு எரியும்போது அதன்மீது பச்சை விறகுகளைப் போட்டபோதிலும் அந்த விறகிலுள்ள ஜலத்தை க்ஷணத்திற்குள் இழுத்துக்கொண்டு உடனே அவைகளை பஸ்மமாய்ச் செய்வதை நாம் பார்த்துக்கொண் டிருக்கின்ருே மல்லவா? அதுபோல் அல்ப ஞான முடையவனுடைய கர்மங்கள் நசிக்கமாட்டாது. அகண்ட ஞானத்தினுல்தான் கர்மங்கள் நசிக்கும்; என்ருல், அக்கி னியே அல்ப ஞானம், ஜுவாலைவிட்டு எரிந்துகொண்டிருக் கும் சுடரே அகண்ட ஞானம். அந்த அகண்டஞானத்தை இதுவரையில் (அ-6, சு-35-ல்,) நான் சொல்லியதுபோல் சமஸ்த பூதங்களையும் உன்னிடத்திலும், உன்னை என்னிடத் திலும் பார்ப்பாயாகில் அதுவே அகண்ட ஞானமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட ஞானம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுதே சமஸ்த கர்மங்களும் நசிக்கின்றன. புண்ணியமும் மோக்ஷத்திற்கு விரோதமா யிருப்பதால் ஞானதிருஷ்டிக்கு இந்தப் புண்ணியமும் பாப

---

† நன்ருய் ஜொலித்துக்கொண்டிருக்கும் அக்நியானது விறகுகளை எப்படி எரித்துச் சாம்பலாக்குமோ அதாவது, விறகின் ரூபமில்லாமல் எப்படி பஸ்மமாக்குமோ அதுபோல், ஞான மாகிய அக்கினியானது, தன்னை அடுத்த சகல சஞ்சித கர்மங்களையும் அவைகளின் பலன்களுடனே பஸ்மம் செய்துவிடும். என்ருல், அநாதியாய்த் தொடர்ந்துவரும் கர்மங்களினுடைய அநேக கூட்டத்தை அடியோடே பஸ்மம் செய்துவிடும் என்பதாம்.

மாகவேயிருக்கும். ஆதலால், ஞானத்தினால் புண்ணிய பாபங்களை நசிக்கச் செய்யவேண்டும்.

நஹி ஜ்ஞாநேந ஸத்ருஶம் பவித்ர மிஹ வித்யதே
தத்ஸ்வயம் யோகஸம்ஸித்த: காலேநாத்மநி விந்ததி. 38.

அர்ஜுநா! இந்த உலகத்தில், தபசு யோகம் முதலானவைகளினால் உண்டாகும் ஞானத்தைப்போல் மற்றொன்றில்லை ஏனென்றால், கர்மயோகத்தினால் சித்தசுத்தியும் அதன்மூலமாய் உண்டாகும் சமாதியோகமும் அடையவேண்டும். அந்த சமாதியோகத்தை அடைந்த முமுக்ஷு, காலக்கிரமத்தினால் தன் நிஜசொரூப ஞானத்தை தனக்குத் தானாகவே பெறுவான். ஆதலால், ஞானத்தைச் சம்பாதித்துக்கொள்ள விவேகியானவன் பிரயத்தனப்படுவான். அப்படிப்பட்ட ஞானம் சுலபமாய் லபிக்குமென்று யோசிக்கின்றாயா? அப்படி யோசிக்கவேண்டாம்; அது லபிப்பது மிகவும் கஷ்டசாத்தியம். இதுவரையில் நான் சொல்லியதுபோல் ஓர் ஸத்குருவை ஆசிரயித்து அவருக்கு வந்தன சிசுரூஷைகள் செய்து இந்திரிய மனோ நிக்கிரஹம் செய்துவந்தால் சில காலங்களுக்குள் யோகசித்தியை அடைகுவாய். அதாவது, ஞானோத்பத்திக்குத் தகுந்த சித்தசுத்தியை அடைவாய். அப்படிப்பட்ட மன பரிபக்குவத்திற்கு எப்பொழுது வருகின்றாயோ அப்பொழுது செய்யப்படும் உபதேசத்தினால், ஞானம் தனக்குத்தானாகவே பிரகாசிக்கும். இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்:— இரண்டு மனிதர்கள் ஓர் நிலத்தைச் சமபாகமாய்ப் பாகித்துக்கொண்டு பிரத்தியேகமாய் விவசாயம் செய்தார்கள். அதில் ஒருவன் தன் பாகத்திற்கு வந்தநிலத்தைச் சரியாய் உழாமலும் எருப்போடாமலும் விதைவிதைத்தான். மற்றொருவன் அப்போதைக்கப்போது நான்கு முறைகள் நன்றாய் உழுது மழைபெய்தபோது சேடையாக்கித்

தழையும் எருவும்போட்டுப் பூமியைச் சித்தப்படுத்தித் தக்கசமயத்தில் விதையை விதைத்தான். இவர்களிருவரும் ஒரேநிலத்தைப் பயிரிட்டபடியால் பயிர் ஒரேவிதமா யிருக்குமா? அல்லது வேறுயிருக்குமா?

அர்ஜுநன்:—ஐயா! நிலம் ஒன்றாயிருந்தபோதிலும் இரண்டாவது மனிதன் நிலத்தைச் சரியாய் உழுது சேடையாக்கித் தழை எரு முதலானவைகளைப் போட்டுச் சித்தப் படுத்திக்கொண்டு, விதைப்பதால், அவனுடைய பயிரே சரியான பலத்தைத் தருமேயொழிய, சரியாய் உழாமலும், தழை எரு முதலானவைகள் போடாமலும் விதைத்தவனுடைய நிலம் பலத்தைத் தராது. போட்டவிதை முளைப்பதும் கஷ்ட சாத்தியமாகவே யிருக்கும்.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! மனதும் அப்படிப்பட்டதே யென்றும் அறியக்கடவாய். மனது நிலத்தைப்போன்றது. ஞானமடைவதற்காகச் செய்யும் குரு சிசுருஷைகள் க்ருஷியைப் போன்றன. இப்படி மனது என்னும் பூமி பரிபக்குவமான வுடனே குருவின் உபதேசமென்னும் விதையை மனது என்னும் பூமியில் விதைத்தால் ஞானமென்னும் முளை உடனே முளைக்கின்றது. அதாவது, ஞானோத்பத்தியாகின்றது. ஓர் குருவானவர் ஒரு சிஷ்யனைப் பன்னிரண்டாண்டு சோதித்த பிறகு ஞானோபதேசம் செய்வார். ஏனென்றால், பன்னிரண்டு வருஷங்களுக்குள், அவனது புத்திர மித்திர களத்திர கிருஹ தன தான்னியாதிகளையும் விட்டு, குருகுலவாசமே செய்துகொண்டிருப்பதால், மேற்சொல்லியவைகளிலுள்ள ஆசாபாசங்களெல்லாம் நாளாவட்டத்தில் குறைந்து, கடைசியாய் எல்லாவற்றையும் மறந்து, யாதொரு பற்றில்லாத பரிசுத்த மனமுடையவனாய் விடுகின்றான். அப்போது அவன் ஞானமடைய அதி தீவிர பக்குவமுடையவனா யிருக்கின்றான். அந்தத் தருணத்தில்

உபதேசம் செய்தால் உடனே பலிதமாகும். மஹான்களா யிருக்கப்பட்ட பெரியோர்கள் யாவருக்கும் உபதேசம் செய்யமாட்டார்கள். ஏனென்றால், உபதேசம் பெற வந்தவர்களினுடைய ஹிருதயத்தில் காமக்குரோதாதிகளென்னும் அழுக்குகள் பூர்த்தியாய் நிறைந்திருப்பதனால், அவ்வழுக்கில் உபதேசமெனும் விதையை விதைத்தால் பூர்த்தியால் நாசமாய்விடும். பெரியோர்கள் இதனை நன்றாய் அறிந்தவர்களாதலால் உபதேசம் செய்யார்கள்.

* ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர ஸ்ஸம்யதேந்த்ரியஃ
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்தி மசிரே ணாதிகச்சதி. 39.

அர்ஜுனா! நான் இதுவரையில் (அ-4, சு-38-ல்) சொல்லியவைகளெல்லாம் சரியாய்த் தெரிந்ததல்லவா?

அர்ஜுனன்:—ஆம், சரியாய்த் தெரிந்தது.

கிருஷ்ணன்:—ஞானமடைய ஆசையுடையவன் அதற்காக ஆசிரயிக்கப்பட்ட ஸத்குருவிடத்தில் பக்தி சிரத்தையுடையவனாய் ததேகநிஷ்டனாய், இந்திரிய நிக்கிரஹமுடையவனாய் எவன் இருக்கின்றானோ, அப்படிப்பட்டவனுக்கு ஞானம் சித்திக்குமேயொழிய, இதரர்களுக்குச் சித்திக்கமாட்டாது. அப்படி ஞானமடையும் வரையில் கஷ்டமேயொழிய, அடைந்தபிறகு பிரயாசையில்லாமலே சித்தசாந்தி உண்டாகின்றது. இதற்குத் திருஷ்டாந்தமாய் நமக்கு அனுபவமான விஷயம் ஒன்றுண்டு. அதைச் சொல்லுகின்றேன் கேள். பூர்வத்தில் உன்னுடைய தமையனான தர்மபுத்திரர், நாரதர் வசனத்தினால், ராஜஸூய யாகம் செய்யும்பொழுது. ஓர் அத்புதமான விஷயம் ஒன்று

---

* குருவினால் உபதேசம்பெற நம்பிக்கை வைத்து, ஞானம் சம்பாதிப்பதிலேயே முயற்சியுள்ளவனாய், எவன் இந்திரியங்களை அடக்குவானோ, அவனே ஞானத்தையடைந்து சீக்கிரமாய் மோக்ஷத்தை அடைவான்.

நடந்தது. அது யாதெனில், பிரமசாரியும் கேவல வைராக்கிய சீலனுமாகிய ஓர் பிராம்மணன் சத்குருவை ஆசிரயித்து அவருடைய அநுக்கிரஹத்தால் உபதேசம் பெற்று அதன் மூலமாய்க் கடைத்தேறவேண்டுமென்று நிச்சய புத்தியுடையவனாய் அந்தக் குருவை ஆசிரயித்து அவருக்கு அதிக சிரத்தை பக்தியுடன் சிசுரூஷை செய்துகொண்டு அநேக காலம் காத்துக் கொண்டிருக்க, ஒருநாள் குரு சிஷ்யர்களிருவரும் ஒரு கானகத்தின் வழியாய்ச் செல்லும் போது குருவிற்கு அகஸ்மாத்தாய் அவசான (மரண) காலம் சமீபித்து மிகவும் தாகமுடையவனாய் நடக்கச் சக்தியற்று ஓர் விருக்ஷத்தினடியில் படுத்துக்கொண்டு தாகத்திற்கு ஜலம் கொண்டுவரும்படி சிஷ்யனுக்கு ஆஞ்ஞாபித்தான். சமீபத்தில் ஜலமில்லாததனாலே வெகுதூரம் போகவேண்டியதாய் நேர்ந்தபடியால் சிஷ்யன் ஜலம் கொண்டுவர கொஞ்சம் தவக்கப்பட்டது. இதற்குள் இவ்விடத்தில் அந்தக் குருவிற்கு பிராணப் பிரயாணகாலம் சமீபித்து விட்டபடியால் பிராணனை விடும்போது தன் சிஷ்யனை நினைத்து, அவன் தனக்கு இதுகாலமாய் பக்தி சிரத்தையுடன் தன்னை ஆசிரயித்தவனா யிருந்தவனாதலால், அவனை வியர்த்தப் படுத்தலாகாதென்று எண்ணினவனாய் அவனுக்கு உபதேசஞ் செய்ய நினைத்திருந்த வாக்கியத்தைப் பூமியின்மீது விரலாலெழுதித் தன்சமீபமாய் கழுதைகளை மேய்த்துக் கொண்டிருந்த ஓர் தொம்பறச்சிக்குத் தன் சிஷ்யன் வந்தவுடனே அவனுக்கு இதைக் காட்டவேண்டுமென்று சொல்லிவிட்டு பிராணனை விட்டுவிட்டான். அதன் பிறகு தொம்பறச்சி, தரையிலெழுதிய அவ்வெழுத்துகள் காற்றினாய் கலைந்துவிடுமென்று நினைத்தவளாய் அதை ஓர் ஓலையில் அந்த லிகிதத்தைப்போல் (எழுத்தைப்போல்) முள்ளினால் எழுதிக்கொண்டு அந்த

அக்ஷரங்களையெல்லாம் துடைத்துவிட்டு ஓலையைச் சுருளை யாக்கித் தனது காதில் அணியா யிட்டுக்கொண்டாள். சிஷ்யன் ஜலங்கொண்டுவந்து மரணமடைந்த தன் குருவைப் பார்த்து மிகவும் துக்காக்கிராந்தனாய்ச் சோகித்து, அதுவரையில் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம் அந்தத் தொம்பறச்சியால் அறிந்தவனாய் அவளுடைய காதணியா யிருந்த அவ்வோலையைக் கொடுக்கும்படி ஆத்திரத்துடன் அவளைக்கேட்டான். அப்படிப்பட்ட அவனது ஆத்திரத்தைப்பார்த்து அந்தத் தொம்பறச்சியானவள் அவனைச் சில காலம் தன்னிடத்தில் சேவை செய்விக்கவேண்டுமென்று நினைத்து அவ்வோலையை அவனுக்குக் கொடாமல் அவனைத் தன் கழுதைகளை மேய்க்கும்படிச் சொன்னாள். அவனும் அவளது வார்த்தையைப்போல் கழுதைகளை மேய்த்துக்கொண்டு வந்தான். அவளது அனுக்கிரஹத்தால் குருவாக்கிய லிகிதமாகிய காதணியை அடையவேண்டுமென்று நினைத்துத் தன் குருவை எப்படி பக்தி சிரத்தையுடனே ஆசிரயித்துக்கொண்டிருந்தானோ அதுபோலவே, அவளை ஆசிரயித்து அவளிட்ட வேலைகளையெல்லாம் செய்துகொண்டு தனக்குத் தீர்ந்தபோது கிராமத்திற்குள் சென்று பிராம்மண அக்கிரஹாரத்தில் பிக்ஷை வாங்கிப் புஜித்து, மற்றக் காலங்களெல்லாம் அவளையே ஆசிரயித்துக்கொண்டு அவள் எங்கு சென்றபோதிலும் உடன் சென்று அவளைச் சேவித்துக்கொண்டு காதிலிருக்கும் ஓலையைக் குறியாகவே பார்த்துக்கொண்டு அவளுடன் கூடவே திரிந்துகொண்டிருந்தான். இப்படியாய் அநேக காலம் சென்றபிறகு ஒருநாள், தொம்பறக் கூட்டமெல்லாம், தர்மபுத்திரர் செய்யும் ராஜசூய யாகசாலைக்குச் சமீபத்தில் கூடாரம்போட்டு இறங்கினார்கள். அவ்விடத்திலும் இந்தப் பிராம்மணன் அந்தத் தொம்பறச்சி ஆஞ்ஞா

ஸாரமாய்க் கழுதைகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது க்ஷுத்பாதை (பசி)யினால் மிக வருந்தினவனும் தன் சமீபமாயிருந்த யாகசாலை மடப்பள்ளியிலிருந்து ஓடிக்கொண்டிருக்கும் சாதம வடித்த கஞ்சிநீரில் நான்கு கையெடுத்து உட்கொண்டான். அப்பொழுது யஞ்ஞசாலையில் லக்ஷப்பிராம்மண சந்தர்ப்பணைக்கு ஒருவிசை தனக்குத்தானாய் அடிக்க ஏற்படுத்திக் கட்டியிருக்கும் மாயாமணியானது ஓயாமல் அடிக்கமுயன்றது. அதைக்கேட்ட உனது தமையனாராகிய தர்மபுத்திரர் இத்தனைலக்ஷ பிராம்மணர்களுக்கு ஏககாலத்தில் எப்படி சந்தர்ப்பணை ஆயிற்றென்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தார். நான் அதனுடைய நிஜஸ்திதி அறிந்தவனாதலால், அதுவிஷயத்தைக் குறித்து நிதானமாய் விசாரிக்கலாமென்று அவருக்கு அப்போது சமாதானம் சொல்லி, பிறகு அந்தத் தொம்பறச்சியைக் கழையின் மீது ஆடச்செய்து வேடிக்கைப்பார்க்கும்படியாய் தர்மபுத்திரரை பிரேரேபணைசெய்தேன். அவரும் அப்படியே அந்த தொம்பறச்சியைக் கழையின்மீது ஆடும்படி உத்தரவுசெய்தார். அவளும் மிக உச்சாஹத்துடன் தன் சாமார்த்தியங்களையெல்லாம் அந்தச் சபையாருக்குக் காட்டி ஆடிக்கொண்டிருக்கும் சமயத்தில், அவளுக்குப் பரிசளிப்பதாகக் கொண்டுவந்த ரத்திநமிழைத்த கம்மலை மேலே உயர்த்தி வீசுகிறோம், கழையின் மீது ஆடிக்கொண்டே அந்தக்காதணியைக் கைகளால், பிடித்துக் காதில் போட்டுக்கொள்ளவேண்டுமென்று அவளுக்கு ஆஞ்ஞாபித்தார்கள். அவள் அதுபோல் ஏந்திக்கொண்டு, தன்காதில் அதுவரையில் தரித்திருந்த ஓலைக்கம்மலைக் கழற்றிக் கீழேஎறிந்துவிட்டு அந்தக் காதில் ரத்திநக்கம்மலை தரித்துக்கொண்டாள். ஓலைக்கம்மல் கீழேவிழுந்தவுடனே அதற்காகக் காத்திருக்கும் பிராம்மணோத்தமன் எடுத்துக்

கொண்டுப் போய்விட்டான். இந்தவிஷயம் நான்தவிர மற்றெவரும் கவனித்தவர்களல்லர். அதன்பிறகு மறுநாள் உதயத்தில் நான் தர்மபுத்திரரை ஏதோ ஒருவிஷயமாய் என்னுடன் கூட அழைத்துக்கொண்டு பாதசாரியாய் சமீபத்திலிருக்கும் நதிதீரத்தில் கேளிவிலாசமாய்த் திரிந்துகொண்டிருக்கும்போது, மேற்படி பிராம்மணன், தன் குரு உபதேசம் செய்த வாக்கியம் எழுதப்பட்டிருந்த ஓலைக் கம்மலை அவிழ்த்துக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை நாங்களிருவரும் பார்த்து அவனருகிற்சென்று எச்சரிக்கை செய்து பார்த்தபோது அவன் நிர்ஜீவனாயிருந்தான். அதைப்பார்த்து உமது தமையனார் ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருக்க, அப்பொழுது நான் பிராம்மணனுடைய சவிஸ்தாரங்களையெல்லாம் சொல்லி, இந்தப் பிராம்மணனே நேற்றையதினம் யஞ்ஞசாலையின் சமீபத்தில் ஒடிக்கொண்டிருக்கும் கஞ்சியை நான்கு கை சாப்பிட்டான். அவன் சாப்பிட்ட கஞ்சியில் எத்தனைத்துளி பிந்துக்களிருந்தனவோ அத்தனை லக்ஷப் பிராமணர்களுக்கு சந்தர்ப்பணை செய்ததற்குச் சமானமாயிற்று. அதனால், அந்த மாயாமணி ஓயாமல் அத்தனை விசைகள் அடித்ததென்றும், அந்தப் பிராம்மணனுக்கு இப்படிப்பட்ட மஹாத்மியம் குருவினிடத்தில் உண்டாயிருந்த பக்தியினாலும், அந்தக் குருபதேச வாக்கியம் லபிக்கச் செய்துகொள்ள அதிலுண்டாகிய சிரத்தையினாலும் உண்டாயிற்றென்றும், அப்படிப்பட்ட சிரத்தையினால் அவனுக்கு அந்தவாக்கியம் லபித்த உடனே அவனிடத்திலுள்ள ஆத்மா கிளம்பி பரமாத்மாவில் ஐக்கியமாயிற்றென்றும் தெரியச்சொன்னேன். அதன் பிறகு தர்மபுத்திரர் அந்தக் களேபரத்தைச் சமாதி செய்வித்து அதற்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தார். ஆதலால், ஓ அர்ஜுனா! இதனால் என்ன ஏற்படுகின்றதென்

ருல், சிஷ்யனுக்கு குருவினிடத்தில் இருக்கவேண்டிய பக்தி இப்படிப்பட்டதென்றும், அந்தக் குரு உபதேசத்தை அடைவதற்காக இருக்கவேண்டிய சிரத்தை இப்படிப்பட்டதென்றும், அப்படிப்பட்ட சிரத்தையினுல் உண்டாகும் நிச்சயஞான மிப்படிப்பட்டதென்றும், அப்படிப்பட்ட நிச்சய ஞானத்தினுல் உண்டாகும் அவசானம் (மிருத்யு) இப்படிப்பட்டதென்றும் அறியக்கடவாய்.

* அஞ்ஞஶ்சா ஶ்ரத்ததாநஶ் ஸம்ஶயாத்மா விநஶ்யதி
நாயம் லோகோ உஸ்திநபரோ நஸுகம் ஸம்ஶயாத்மந: 40.

அர்ஜுநா ! ஆத்மஞானம் சம்பாதிப்பதற்காக ஆசிரயிக்கப்பட்ட குருவினிடத்தில் பக்தி சிரத்தை யுடையவனுக்கே ஞானோதயமாகுமென்று இதுவரையில் (அ-4, சு-39-ல்) சொல்லியிருந்தேன். அவ்வாறு ஞானம் சம்பாதிக்க வேண்டுமென்னும் எண்ணமும், குருவினிடத்தில் பக்தி சிரத்தையில்லாதவனும், குரு உபதேசம் செய்யும் வாக்கியத்தில் நம்பகமில்லாதவனுமாய் இருப்பாஞகில், அப்படிப்பட்டவனுக்கு ஞானோதயம் உண்டாகவேமாட்டாது. அப்பேர்ப்பட்டவன் நசித்துப்போவான். அவனுக்கு இஹபரங்களிரண்டிலும் சுகமுண்டாகமாட்டாது. ஆதலால், ஓ அர்ஜுநா ! இதுவரையில் நான் சொல்லிய விஷயத்தில் சம்மயம் கூடாது. சம்சயம் பாபகரமானது.

எப்படியென்ருல்:—ஆத்மஞானமில்லாதவனும், சிரத்தையில்லாதவனும், உபதேசிக்கப்பட்ட அம்சத்தில் நம்பகமில்லாதவனும் கெட்டுப்போவானென்னும் வாக்கியமே

---

* குருபதேசத்தை தெரிந்துகொள்ளாதவனும், அதில் நம்பகமில்லாதவனும், பலனுண்டாமோ உண்டாகாதோ என்கிற சம்சயமுடையவனும் கெட்டுப்போவான். சம்சயமுடையவனுக்கு இந்த உலகத்திலாவது அல்லது, எந்த சொர்க்காதி உலகத்திலாவது பிரயோஜனமு மில்லை. சுகமுமில்லை.

பிரமாணம். மேலும் எல்லாராலும் பாபிஷ்டியென்று சொல்லக்கூடிய விசுவாஸஹீனனுக்கு. இஹலோக சுகமே உண்டாகமாட்டாது. அப்படியிருக்க, பரலோக சுகம் அவனுக்கு ஏது? ஏனென்றால், எல்லாவற்றிலும் சந்தேஹமே யொழிய அவைகளை அடையத்தக்க பிரயத்நம் செய்வதற்கு அவகாசம் உண்டாகமாட்டாது. ஆதலால், இஹபரலோக சுக பிரதிபந்த கர்மமாகிய சம்சயத்தை அடையாமல் நான் தெரியச் சொன்ன அம்சத்தை நம்பி, அப்படியே செய்யக்கடவாய்.

† யோகஸந்யஸ்த கர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்ந ஸம்ஶயம்
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய! 41.

ஹே தநஞ்சய! குரு உபதேச வாக்கியத்தில் சிரத்தையில்லாமல் ஸம்சயமுண்டாய் அஞ்ஞானியாயிருக்கப்பட்டவனுக்கு இஹபரங்களிரண்டும் இல்லையென்று இதுவரையில் (அ-4, சு-40-ல்) சொல்லியிருந்தேன். அப்படிக்கல்லாமல் ஆத்ம ஞானமுடையவனும், சம்சயமில்லாதவனுமாகிய நிஷ்காம கர்மயோகி செய்யப்பட்ட கர்மங்களினுடைய பலன்களாகிய புண்ணியபாபங்கள் அவனைப் பற்றமாட்டாது. அப்படிப்பட்டவனுக்கு இஹத்திலும் பரத்திலும் சுகமுண்டாகும். பரமார்த்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் யோகத்தினால் நீக்கப்பட்ட தர்மாதர்மரூப கர்மமுடையவனும், ஞானத்தினால் சகல சந்தேஹங்களும் போக்கடித்துக்கொண்டு மறுபடியும் அஞ்ஞானத்தினால் மூடப்படாமல் பஹு ஜாக்கிரதையாய் இருக்கப்பட்டவன் பலாபேக்ஷையில்லாமல் உலகத்தாருக்காகச் செய்யப்

† பலாபேக்ஷையைவிட்டு, ஈசுவரார்ப்பண புத்தியாய்க் காமம் செய்கிற நிஷ்காம கர்மயோகி பிரம்மஜ்ஞானத்தினால் சகல சம்சயங்களையும் போக்கடித்துக்கொண்டவனும், பிரம்மநிஷ்டனும் இருப்பவனைச் சம்சாரபந்தம் கட்டுப்படுத்தமாட்டாது.

படும் கர்மத்தினுல் அவனுக்கு யாதொரு பிரயோஜனமு மில்லை. அப்படிப்பட்ட கர்மம் அவனைப்பற்ருது.

† தஸ்மாः தஜ்ஞாந ஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநாத்மநः।
சித்வைநம் ஸம்ஶயம் யோக மாதிஷ்டோத்திஷ்ட பாரத! 42.

ஹே பார்த்த! சம்சயமுடைய அஞ்ஞானிக்கு இஹ, பரங்களில்லையென்று இதுவரையில் (அ-4, சு-40-ல்) சொல்லியிருந்தேன்; சம்சயமில்லாத ஞானிக்குக் கர்மபந்தமில்லை யென்று (அ-4, சு-41ல்) சொல்லியிருந்தேன். அப்படியிருக்க, இப்பொழுது உனக்கு உண்டாயிருக்கும் சம்சயம் அதாவது, பந்துஜன வதாரூபமாகிய யுத்தம் செய்யலாமா செய்யக்கூடாதா என்னும் சந்தேஹம் அஞ்ஞானமாகிய சோக மோஹாதிகளினுல் உண்டானதா யிருக்கின்றது. நான் அஞ்ஞானத்தினுல் மூடப்பட்டவனு யிருக்கின்றே னென்றும், அப்படிப்பட்ட அஞ்ஞானத்தைப் போக்கடிக்க வேண்டுமென்றும் உம்மைக் குருவாகப் பாவிக்கின்றேன். நான் சிஷ்யத்துவத்தை வஹிக்கின்றேன். உபதேசம் செய்யவேண்டுமென்றும், இதுவரையில் (அ-2, சு-7-ல்) நீ சொல்லியிருந்தாய். ஆதலால், குருவினிடத்தில் சிஷ்யன் எவ்விதமாய் இருக்கவேண்டுமென்றும், குரு உபதேசவாக்கியத்தில் சிஷ்யனுக்கு எப்படிப்பட்ட நம்பகம் இருக்க வேண்டுமென்றும், இதுவரையில் (அ-4 சு-39-40-41-ல்) சொல்லியிருந்தேனல்லவா? ஆதலால், சிஷ்யனுகிய நீ, குருவாகிய நான் சொல்லிய வாக்கியங்களை நம்பவேண்டும்.

---

† அர்ஜுநா! இதுவரையில் கேட்ட என்னுடைய உபதேசத்தினுல் உனக்குமோஹம் நீங்கியிருக்கலாம். ஆதலால், உன்னுடைய புத்தியை மூடப்பட்டிருக்கின்ற அஞ்ஞானத்தை (பந்து முதலானவர்களைக் கொல்லலாமா என்கிற சம்சயத்தை) ஞானமாகிய கத்தியினுல் வெட்டி, ஞானயோகத்தை அடைவதற்குக் கர்மயோகத்தையே அனுஷ்டானம்செய் அர்ஜுநா? என்பதேயாம்.

அப்படி நம்பினால் உனக்கு இதுவரையில் அஞ்ஞானத்தினால் உண்டாயிருந்த சம்சயங்கள் விட்டொழிந்து ஞானேதயமாகும். அப்படிப்பட்ட ஞானமென்னும் கத்தியினால் சேதிக்கப்பட்டு சம்சயமில்லாதவனாய், கர்ம பலாபேக்ஷையை விட்டு, இதுவரையில் நான் சொல்லியிருந்ததுபோல் சுகதுக்கங்கள், லாபநஷ்டங்கள், ஜயாபஜயங்கள் முதலானவைகளில் சமபுத்தியுடையவனாய் (அ-2 சு-38-ல்) சொல்லியது போல் யுத்தம்செய்தால், உன்னைப் புண்ணியபாபங்கள் எதுவும் பற்றமாட்டாது. ஆதலால், யுத்தம் செய்யக் கடவாய்அர்ஜுநா!

அத்யாய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் சுலோகம்.

"ப்ராஹ்யம் கர்மாகமோக்தம் த்விவிதமபி விநஶ்யத்பலம் தத் விகர்ம ஸ்யாத் தச்சாகர்ம யத்ஸ்யாதம்ருதபலமத: கர்மணைஷ்கர்ம்யயோஸ்து, அந்யோந்யம் ஸாஹசர்யம் பவதி. ததகிலம் மாமிஹோத்திஶ்ய கார்யம் தத்வை ப்ரஹ்மார்பணம் ஸ்யாத்விவிதய ஜநத: ப்ராஹ பார்த்தம் சதுர்த்தே"

இந்திரிய வியாபார ரூபமாகிய வேதோக்த கர்மம் விகர்மமென்றும், அகர்மமென்றும் இரண்டுவிதமாம். அநித்யமாகிய சொர்க்காதிபலத்தைத் தரப்பட்டது விகர்மமென்றும், மோக்ஷரூபபலத்தைத் தரப்பட்டது அகர்மமென்றும் சொல்லப்படும். ஆதலால், பலாபேக்ஷையுடன் செய்தபோது பந்தஹேதுவாகிய கர்மமும், பலாபேக்ஷையில்லாமல் செய்தபோது மோக்ஷத்தைத் தரப்பட்டது அகர்மமென்றும், கர்மம் செய்வதில்லையென்று சும்மாயிருப்பதும் அபிமானமென்னும் சித்த வியாபாரமே யாதலால், அது கர்மமேயென்று சொல்லப்படும். இப்படி கர்ம, அகர்மங்களை அறிந்து, சகல கர்மங்களையும் பரப்பிரம்மத்தை உத்தேசித்துச் செய்தால் பிரம்மார்ப்பணமாய்ப், பிரம்ம சாயுஜ்ஜியத்தை உண்டாக்குமென்று அர்ஜுந

னுக்கு இந்த நான்காமத்தியாயத்தை ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி உபதேசித்தார்.

ஸ்ரீ பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதே
ஜ்ஞாநயோகோ நாம
சதுர்த்தோத்யாயஃ.

இது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுநனை யுத்தத்திற்கு பிரயத்தினப்படுத்தி லோகோத்தாரணார்த்தமாய் கிருபை செய்த உபநிஷதர்த்தப் பிரதிபாதகமாகிய பகவத்கீதா சாஸ்திரம் ஞாநயோகமென்கிற சதுர்த்தோத்தியாயம் சம்பூர்ணம்.

ஓ ஸஹோதரர்களே! ஸஹோதரிகளே! ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு உள்ளபேதங்களை உபநிஷத்வாக்யங்களின் மூலமாய் இதனடியில் தெரிவித்திருப்பதைக் காண்க. சஞ்சலத்துடன் கூடிய ஜீவாத்மாவை நிஷ்களங்கமான பரப்பிரம்மத்தில் ஐக்கியம் செய்வதற்காக "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதை ஒவ்வொருவரும் வாசித்து அதிலுள்ள உபதேசங்களை அறிந்து அதுபோல் அப்பியசித்து வரவேண்டும்.

"கடஸம்ப்ருத மாகாசம் லீயமாநே கடே யதா
கடோ லீயதே நாகாசஸ் ஸ்தத்வஜ்ஜீவோ கடோபமஃ"

கடம் (குடம்) உடைந்தவுடன் கடத்திலிருந்த ஆகாசம் வெளியிலிருக்கும் மஹாகாசத்துடன் கலக்கின்றது. ஆனால், கடத்திலிருக்கும் ஆகாசம் கடாகாசமென்று வியவஹாரத்தில் மாத்திரம் சொல்லப்படுமேயொழிய, ஆகா

சம் குடத்தில் இருப்பதனால் அதற்குக் கடாகாசமென்று பெயருண்டானதுபோல் சொல்லக்கூடாது. ஏனென்றால், ஆகாசம், ரூபமில்லாதது. ஸர்வ வியாபகமானது, அகண்டமானது, ஸர்வ பரிபூரணமானது, சலனமில்லாதது. அப்படிப்பட்ட ஆகாசம் குடத்தில் நுழைவதில்லை. குடம், முதலில் மண்ணாயிருந்து பிறகு குயவனால் குடமாய்ச் செய்யப்பட்டு, நாமரூபங்களை நூதனமாய் அடைந்தது. ஆனால், குடத்திலிருக்கும் ஆகாசம் மாத்திரம் எப்போதும்போல் அரூபமாய் அகண்டமாய் இருக்கின்றதேயொழிய, நூதனமாய் நாமரூபங்களையுடைய குடத்தின் சம்பந்தமாயிருக்கும் ஆகாசத்திற்குப் புதிதாய்க் கடாகாசமென்று உண்டானதுபோல் கல்பிக்கப்பட்டதல்ல. ஆகாசம் எப்பொழுதும் ஒரேவிதமா யிருக்கின்றதேயொழிய குடம் உடைவதனால் ஆகாசம் பின்னமாவதில்லை. ஆகாசம் குடத்திலிருந்தபோதிலும், அந்தக் குடத்தின் சம்பந்த மில்லாமலும், அதன் நாமரூபங்களை அடையாமலு மிருக்கும். அதுபோல், பரப்பிரம்மாகிய ஆத்மா, ஸர்வத்ர பரிபூரணமாய் வியாபித்திருக்கின்றது. அந்தப் பரப்பிரம்மத்தில் கல்பிக்கப்பட்ட நாமரூபங்களாகிய சராசர ஜகத்து சர்வமும் நசித்தபோதிலும், பரப்பிரம்மமாகிய ஆத்மா நசிக்கமாட்டாது. ஆகாசத்திற்கு கடம் கல்பிதமாதலால் கடம் உடைந்து நசித்த போதிலும், அதிலிருக்கும் ஆகாசம் மாத்திரம் உடைவது, நசிப்பது முதலாகிய விகாரங்களில்லாமல் இருப்பதுபோல் பரப்பிரம்மமாகிய ஆத்மாவில் ஜீவேசுவர ஜகத்து முதலானவைகள் கல்பிதமாதலால், ஜீவேசுவர ஜகத்துக்கள் நசித்தபோதிலும், பரப்பிரம்மமாகிய ஆத்மா நாசமில்லாமல். எந்த விகாரத்தையும் அடையாமல், சதா ஏகரீதியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

"கடவத் விவிதாகாரம் பித்யமாநம் புநः புநः
தத்பேதேச ந ஜாநாதி ஸ ஜாநாதி ச நித்யஶः"

குடம் அனேகவிசை உடைந்து, மறுபடியும் அனேக ரூபங்களை அடைவதுபோல், சிதாபாஸ ஜீவன் அனேகவிசை பிறந்திறந்து ஜநந மரணமென்னும் சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும். குடம் உடைவது, தான் அறியாதது போல் சிதாபாஸஜீவன் தான் அனேகவிசை ஜநந மெடுத்தபோதிலும், அதில் ஒன்றுகிலும் அறியமாட்டாது. ஆனால், குடம் உடைந்து அநேக விகாரங்களை அடைந்த போதிலும், அந்தக் குடத்திலிருக்கும், ஆகாசம் எந்த விகாரத்தையும் அடையாமல், ஏக ரீதியாய் (ஒரேவிதமாய்) யிருப்பதுபோல், சிதாபாஸஜீவன் அநேகவிசை பிறப்பு இறப்பென்னும் விகாரங்களை அடைந்திருந்தபோதிலும் அந்த ஜீவனுக்குச் சாக்ஷியாய் அதிஷ்ட்டானமாய் இருக்கும் பரப்பிரம்மமாகிய ஆத்மா, ஜநந மரணங்களை அடையாமலும், எந்த விகாரங்களில்லாமலும் ஒரேவிதமாயிருக்கின்றது. மேலும், விகாரத்தை அடையும் குடம், அதிலுள்ள நிர்விகார ஆகாசத்தைத் தான் அறியாததுபோல், ஜநந மரணாதி விகாரங்களை அடையும் ஜீவன், தன்னில் சாக்ஷியாய் வியாபித்திருக்கும் ஆத்மாவை அறிய மாட்டாது.

"த்வா ஸுபர்ணௌ பவதோ ப்ரஹ்மணோ ஹம்ஸபூதஸ்ததேதரோ போக்தா பவத்யந்யோ ஹி ஸாக்ஷீ பவதீதி வ்ருக்ஷதர்மேதௌ திஷ்டதः."

என்னும் கோபலாதாபிந்யுபநிஷத் ரீதியாய், நிர்விகாரமாகிய ஆத்மா சுபம் ஞானசொரூபமாய் சாக்ஷியாயிருப்பதனால் தன்னையும் அறியும், விகாரியாகிய ஜீவனையும் அறியும். ஆனால், ஜீவன் தன்னுடைய விகாரத்தை அறிய மாட்டாது, தனக்கு ஸாக்ஷியாயிருக்கும் ஆத்மாவினுடைய

நிர்விகார ஸ்திதியையும் அறியமாட்டாதென்பது திண்ணம். அப்பா குழந்தாய்! அந்த ஆத்ம சொரூப லக்ஷணத்தைக் குறித்து விவரித்துச் சொல்லுகின்றேன் கேள்.

ஶ்ரு "தேஶாத்தேஶாந்தர ப்ராப்தௌ ஸம்விதோ மத்யமேவ
யத் நிமேஷேண சிதாகாஶம் தத் வித்தி முநிபுங்கவ."
[மஹோபநிஷத்]

ஓர் வஸ்துவைக்குறித்து மனதானது நினைத்து முடிந்து மற்றோர் வஸ்துவை நினைப்பதற்குள்ளாக இடையில் ஒன்றையும் நினையாமல் யாதொரு விகல்பங்களுமில்லாமல் நிர்க்குணமாயும் நிராகாரமாயும் நின்றவிடமே ஆத்மா. மறுபடியும் நினைவுவந்தால் மனமுண்டாகிறது. சங்கல்ப விகல்பங்களற்ற (நினையாமையென்னும்) ஆத்மாவைச் சங்கல்ப விகல்பமாயும் நினைவே சொரூபமாயும் இருக்கப்பட்ட மனமானது அறியமாட்டாது. இந்தக் கருத்தை வைத்து ஓர் ஜ்ஞானி "நினைவழிதப்பினதன்பின்னே நினையாமை யெழுமத்தை, நினைவரியா வறிவுருநா மென்றவற்றி னயனிற்பாய், மனிதரறியாவிந்த மாருத சுகோதயத்தைத்தனியிருந்து காண்டியாற் சகங்கடந்த தவத்தோயே" என்று கூறினர். ஆதலால், ஆத்மாவின் சொரூபம் இதுவேயாம். இதைச் சாவகாசமாய்த் தனியேயிருந்து அனுபவத்தினல் காண வேண்டும். சங்கல்ப (நினைப்பு) விகல்ப (மறப்பு) மற்று ஞானமயமாய் எங்கும் ஒருவடிவமாய் ஏகமாயிருப்பதே ஆத்மாவென்று சொல்லப்படும். அந்த ஆத்மாவினிடத்தில் கயிற்றினிடத்து அரவு (பாம்பு) தோன்றுவதுபோல் மாயையுண்டாயிற்று. இதன் விவரம் 5-வது, அத்தியாயம் கடைசியில் காணலாம்.

ஸ்ரீ க்ருஷ்ண பர ப்ரஹ்மணே நம꞉.

ஐந்தாமத்யாயம் - கர்மஸந்யாஸ யோகம்.

அர்ஜுந உவாச.

ஸந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண । புநர்யோகஞ்ச ஶம்ஸஸி
யச்ரேய ஏதயோ ரேகம் தந்மே ப்ரூஹி ஸு நிஶ்சிதம் 1.

அர்ஜுநன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! நீர் ஒரு போது ஸந்நியாஸம் அதாவது, கர்ம பரித்தியாகம் மிகவும் சிரேஷ்டமென்றும், மற்றொருபோது யோகம் அதாவது, நிஷ்காமகர்மானுஷ்டானம் சிரேஷ்டமென்றும் சொல்லுகின்றீர். நீர் இப்படிச் சொல்வதனால் இவ்விரண்டில் சிரேஷ்டமானது எதுவென்றும் தெரியாமலிருக்கின்றேன். ஆதலால், சிரேஷ்டமானதை நிச்சயித்துச் சொல்லும் கிருஷ்ணா!

ஸ்ரீ பகவாந் உவாச.

* ஸந்யாஸ꞉ கர்மயோகஶ்ச நிஶ்ரேயஸ கரா வுபௌ
தயோஸ்து கர்மஸந்யாஸாத் கர்மயோகோ விஶிஷ்யதே. 2.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! கர்மஸந்நியாஸமும் கர்மானுஷ்டானமுமாகிய இவ்விரண்டு மார்க்கங்களும் மோக்ஷத்

* கர்மயோகமானது நேராய் மோக்ஷத்திற்குக் காரண மாகா விட்டாலும், ஞானத்திற்குக் காரணமா யிருக்கின்றது. அந்த ஞானமானது மோக்ஷத்திற்குக் காரணமா யிருக்கின்றது. ஞானியானவன் கர்மத்தை விடலாம். அதிகாரவிஷயமாய்ப் பார்க்கையில் உன்னைப்போலொத்தவன் கர்மத்தை விடலாகாது.

திற்குச் சாதனமாகவே யிருக்கின்றன. இவ்விரண்டு மார்க்கங்களிலும் கர்மஸந்நியாசத்தைவிட கர்மானுஷ்டானமே சிரேஷ்டமானது. கர்மானுஷ்டானம் மோக்ஷசாதனமாயில்லாவிட்டாலும், சித்தசுத்தியுண்டாய் ஞானேத்பத்திக்குச் சாதனமாயிருக்கின்றது. அந்த ஞானம் மோக்ஷத்தை உண்டாக்கும். ஆதலால், கர்மானுஷ்டானத்தினால் பரம் பராக்கிரமமாய் மோக்ஷமுண்டாகும். கர்ம தியாகரூபமாகிய ஸந்நியாசத்தினால் மோக்ஷமுண்டாகும். அப்படிப்பட்ட ஸந்நியாசி கர்மத்தைவிடலாம். நீயோ கர்மத்தை விடுவதற்கும் ஞானனுஷ்டானம், செய்வதற்கும் அதிகாரியல்ல. உனக்குக் கர்மயோகமே சிரேஷ்டமானதாகையால், பதில்வார்த்தையாடாமல் கர்மமென்னும் யுத்தத்தைச் செய்யும், அர்ஜுநா!

ஜ்ஞேய ஸ்ஸ நித்யஸந்யாஸீ யோ நத்வேஷ்டி நகாங்க்ஷதி
நிர்த்வந்த்வோஹி மஹாபாஹோ! ஸுகம் பந்தாத் ப்ரமுச்யதே 3.

ஹே மஹாபாஹோ! (ஓ பெரிய தோள்களையுடைய அர்ஜுநா) இந்த உலகத்தில் எந்தப் புருஷனிருந்தபோதிலும் கர்மபந்தத்திலிருந்து விமுக்தனுனலேயொழிய மோக்ஷத்திற்கு அருஹனுகமாட்டான். அப்படிப்பட்ட கர்மபந்தம், ராகத்வேஷ சுகதுஃக ஜயாபஜய முதலானவைகள் இல்லாத மஹான்களுக்கே மோக்ஷப்பிராப்தி உண்டாகுமேயொழிய மற்றவர்களுக்கு உண்டாகமாட்டாது. ராகத்வேஷங்களில்லாமல் எவனிருக்கின்றானே அப்படிப்பட்டவனே நிஜமான ஸந்நியாசி. ராகத்வேஷங்களை விடாமலே கர்ம பரித்தியாகம் செய்தவன் ஸந்நியாசியாகமாட்டான். கர்மானுஷ்டானங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும் ராகத்வேஷ ரஹிதனுகாவிட்டால், அவன் ஸந்நியாசியாவதுமில்லை. கர்ம பரித்தியாகம் செய்தவனுயிருந்தபோதிலும் அல்லது கர்மானுஷ்டான பரனுயிருந்த

போதிலும் ராகத்துவேஷ ரஹிதனே ஸந்நியாசியாவான். ராகத்துவேஷ ரஹிதனுயிருந்து, கர்மத்தை அனுஷ்டிக்காவிட்டால் சந்நியாசி ஆகான். விருக்ஷத்தின் வேரைக் களைந்துவிட்டால் அது பிழைக்காததுபோல் சம்சாரமூலத்திற்கு வேராயிருக்கும் ராகத் துவேஷங்களை நிர்மூலம்செய்தால் சம்சாரமிருக்குமா ? இராது. ஆதலால், நீ ஜயத்திற்காக சத்துரு துவேஷத்துடன் யுத்தம் செய்வாயாகில் அது, சம்சாரபந்தத்தைப் போக்கடிக்க மாட்டாது. அப்படிக்கல்லாமல், ராகத்துவேஷத்தையும் கர்த்திருத்துவத்தையும் விட்டு யுத்தம் செய்வாயாகில் அதுவே கர்ம ஸந்நியாஸமென்று சொல்லப்படும். கிருஹஸ்தன் பலாபேக்ஷையை விட்டுக் கர்மத்தை அனுஷ்டித்துவந்தால் அதுவே அவனுக்கு ஸந்நியாசமாகும்.

* ஸாங்க்யயோகௌ ப்ருதக்பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா:
ஏக மப்யாஸ்தித ஸ்ஸம்ய குபயோர் விந்ததே பலம். 4.

ஞானயோகமும், கர்மயோகமும் வேறானவையென்று ஸம்பூர்ணமான ஞானமில்லாதவர்கள் சொல்லுவார்களேயன்றி, பண்டிதர்கள் (ஸம்பூர்ணமான ஞானமுள்ளவர்கள்)

---

* ஞானயோகமானது மோக்ஷத்திற்குக் காரணமென்றும், கர்மயோகமானது ஞானத்திற்குக் காரணமென்றும், ஞானயோகமே சிரேஷ்டமென்றும் முன்னே சொல்லப்பட்டிருக்கிறன்து. இனியும் சொல்லப்படப்போகின்றது. இவ்விரண்டும் ஒன்றேயாம். இவ்விரண்டின் பலன் ஒன்றேயென்று சொன்னது எப்படிப்பொருந்துமென்றால், ஞான நிஷ்டைக்கு யோக்கியனுக இல்லாமலும், கர்மயோகத்திற்கு அதிகாரியுமா யிருக்கிறவனைக்குறித்து, "ஞானநிஷ்டையே சிரேஷ்டமானது, அதைத்தான் நீ அனுஷ்டிக்கவேண்டியதென்று" சொல்லும்பக்ஷத்தில், ஞானநிஷ்டை செய்யச் சக்தி யில்லாதவன் கர்மத்திலும் சக்தியற்று இரண்டுங் கெட்டவனுய்விடுவான். ஆகையால், கர்மத்தையே சிலாக்கியமாய்ச் சொன்னதாகக் கொள்ளவேண்டும்.

சொல்லமாட்டார்கள். இவ்விரண்டில் ஒன்றையாகிலும் நன்ருய்ச் செய்தவன் ஒரே பலத்தை அடைவான். இந்திரியங்களை விஷயங்களில் போகவிடாமல் திருப்பிக்கொண்டு ஆத்மானுபவநிஷ்டையில் இருப்பவனே கர்மத்தை ஸந்நியசித்த சாங்க்யனென்று சொல்லப்படுவான். இது, எந்தக் கர்மானுஷ்டான பரர்களாகிய யோகிகளா யிருந்தபோதிலும் செய்ய வேண்டிய வேலையா யிருக்கின்றது. இவர்கள் ஸம்சாரத்திற்கு ஹேதுபூதமாயிருக்கும் மமகாரத்தை விட்டுவிடவேண்டும். இப்படிப்பட்ட இருவர்களுக்கும் பேதமில்லை யென்று பண்டிதர்கள் சொல்லுவார்கள். பாமரர்களோ, இப்படிப்பட்டவர்களின் யோக்கியதையை அதாவது, சித்தசுத்தியை அறியாதவர்கள் கர்மத்தை விடுவதால் ஸாங்க்கியனென்றும், கர்மத்தை அனுஷ்டிப்பவர்கள் யோகிகளென்றும் இருவர்களுக்கும் பேதமுண்டென்று சொல்லுவார்கள் இவ்வளவே யொழிய அவர்களின் விருத்தியை ஆலோசிக்காமல் அவர்களிருவருக்கும் பேதத்தை உண்டாக்குவார்கள். கர்மத்தை அனுஷ்டிப்பவனாகிலும் அல்லது, கர்மத்தை விட்டவனாகிலும் இதுவரையில் சொல்லியதுபோல் இந்திரிய நிக்கிரஹமுண்டாய் ராகத்துவேஷமில்லாதவர்களா யிருப்பார்களாகில் அப்படிப்பட்ட உபயர்களும் மோக்ஷத்தையே அடைகின்றார்கள்.

* யத் ஸாங்க்யைః ப்ராப்யதே ஸ்தாநம் த த்யோகை ரபிகம்யதே
ஏகம் ஸாங்க்யஞ்ச யோகஞ்ச யః பஶ்யதி ஸ பஶ்யதி. 5.

ஞானயோகத்தை அனுஷ்டித்த ஸந்நியாசிகள் அடையப்படும் பலனெதுவோ அதுவே, கர்மயோகத்தை அனுஷ்

* முன்னே கர்மயோகம் சிரேஷ்டமென்றுசொல்லி, பிறகு ஞானயோகம், கர்மயோகமாகிய இரண்டும் ஒன்றேயென்றும் எப்படிச்சொல்லலா மென்ருல், கர்மயோகம் ஞானத்தை உண்டாக்கி முடிவில் மோக்ஷத்தைக் கொடுக்கின்றது. ஞானமும்

டித்தவர்களும் அடையப்படுவதாகும். ஞானயோகமும் கர்மயோகமும் ஒன்றேயென்று எவன் தெரிந்துகொள்ளுகின்றானோ அவனே புத்திமானாவான். அதாவது, ஸாங்க்கியர்களால் அடையத்தக்க ஸ்தானமெதுவோ அதுவே யோகிகளும் அடையத்தக்கதா யிருக்கின்றது. யோகியைப் போல் ஸாங்க்கியனும், ஸாங்க்கியனைப்போல் யோகியும் ஆத்மானுபவ முடையவர்களென்றும் அவர்களிருவரும் அவலம்பிக்கும் மார்க்கம் ஒன்றேயென்றும், வெளிக்கு மாத்திரம் பேதமேயன்றிச் சித்தவிருத்தியில் பேதமில்லை.

மோக்ஷத்தைத்தான் கொடுக்கின்றது. முடிவானபலன் இரண்டிற்கும் ஒன்றே யாதலால், இரண்டும் ஒன்றென்று சொல்லப்பட்டன. ஞானயோகத்தைவிட கர்மயோகம் ஒருபடி தாழ்ந்ததாயிருக்க, கர்மயோகமே சிரேஷ்டமானதென்று எப்படிச் சொல்லலாமென்றால், கர்மம் செய்யாமல் விடுவதாகிய ஸந்நியாசம் சிரேஷ்டமா? அல்லது கர்மயோகம் சிரேஷ்டமா என்று அர்ஜுனன் கேட்டபடியால் அர்ஜுனன் கர்மாதிகாரியாயிருப்பதனால் கர்மயோகமே சிரேஷ்டமானதென்று சொன்னார். வாஸ்தவத்தில், ஞானயோகந்தான் சிரேஷ்டமானது. ஸாங்கியமென்பது ஞானம்; யோகமென்பது நிஷ்காம கர்மம்; ஞானத்திற்குப் பலன் மோக்ஷம் நிஷ்காம கர்மத்திற்கும் பலன் ஞானம். இவ்விரண்டுக்கும் பலன் ஒன்றேயாம் எப்படியென்றால், ஞானம் உடனே மோக்ஷத்தைக் கொடுக்கும். நிஷ்காம கர்மம் சொல்ப காலம்சென்றபிறகு மோக்ஷத்தைக் கொடுக்கும். ஆதலால், பலன் ஒன்றே யென்று சொல்லப்பட்டது. மேலும், ஞானகர்மங்கள் கார்யா காரணரூபமாய் ஒன்றாகவே யிருக்கின்றன. யதியாகிய ஞானி, மோக்ஷத்தில் ஆனந்த விருத்திக்காகக் கர்மம் செய்யவேண்டும். கிருஹஸ்தனான கர்மயோகி மோக்ஷமடைவதற்காக ஞானமடைய, கர்மம்செய்யவேண்டும். அதிகாரக் கிரமமாய்ப் பார்த்தால் ஸீனியரா யிருக்கும் ஞானி செய்யும் கர்மம் மோக்ஷத்திற்கும், ஜூனியரா யிருக்கும் கர்யோகிக்கு ஞானம் வேண்டியதா யிருப்பதனால், ஞானமும் கர்மமும் ஒன்றேயென்று சொல்லப்பட்டன.

ஆதலால் யோகியென்றாலும் ஸாங்க்கியனென்றாலும் ஒன்றே யொழிய வேறல்ல, என்று எவன் அறிகின்றானோ அவனே தத்துவவேத்தனென்று சொல்லப்படுவான்.

அர்ஜுநன் :—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இப்பொழுது நீர் சொல்லிய விஷயங்களைக்குறித்து யோசிக்குமளவில் சாங்க்கியயோகி (கர்மஸந்நியாஸி)யும், யோகியும (கர்மாநுஷ்டானனும்) இந்திரிய நிக்கிரஹங்களினாலும், ராகத்வேஷ நிக்கிரஹங்களினாலும் சமானர்களேயென்றும் அவர்களுக்குப் பேதமில்லையென்றும், அவர்களிருவரும் ஒரேபலத்தை என்றால், மோக்ஷத்தை அடைவார்களென்றும் ஏற்படுகின்றதல்லவா? அப்படியானால், மேற்சொல்லிய இந்திரிய நிக்கிரஹாதி லக்ஷணமுடைய ஸந்நியாசத்தை அனுஷ்டிப்பதே மேலானதாயிருக்க அதைச் சொல்லாமல் "தயோஸ்து கர்மஸந்யாஸாத் கர்மயோகோ விஶிஷ்யதே" கர்மஸந்நியாசத்தைவிட கர்மயோகமே சிரேஷ்டமானதென்று சொல்வதற்குக் காரணமென்ன?

† ஸந்யாஸஸ்து மஹாபாஹோ! து:கமாப்து மயோகத:
யோகயுக்தோ முநிர்ப்ரஹ்ம நசிரே ணாதிகச்சதி. 6.

கிருஷ்ணன்:—ஓ மஹாபாஹோ! கர்மத்தை அனுஷ்டிப்பதைவிட, ஸந்நியசித்திருப்பதே ஸுகமானதென்று நீ நினைக்கின்றனைபோல் தோன்றுகிறது அப்படி எவ்வளவேனும் நினைக்கவேண்டாம். கர்மத்தை ஸந்நியசித்திருப்பதே மிகவும் கஷ்டமென்று அறியவும். கர்மத்தை ஸந்நிய

† பாரமார்த்த ஸந்நியாசத்தைக் கர்மயோகியாகாதவன் அடைவது பிரயாசையாயிருக்கும். கர்மயோகத்திலிருக்கிறவன் பிரம்மஞான மடைந்து பிரம்மத்தைச் சீக்கிரமாய் அடைவான். ஸந்நியாசமென்பது காமக்குரோதாதிகளை விடுதல். யோகமென்பது பலாபேக்ஷயன்றி ஈசுவரார்ப்பண புத்தியாய்ச் செய்கிறதாகிய நிஷ்காம கர்மம்.

சிப்பவன் எப்படி யிருக்கவேண்டுமென்றால், வனத்திலுள்ள சந்தமூல பலாதிகளை யாயினும் அல்லது கிருஹஸ்தர்கள் கொடுக்கப்பட்ட பிக்ஷான்னத்தையாகிலும் தின்று, எப்படிப்பட்ட ருசிகரமா யிருந்தபோதிலும் சரியே. அல்லது எவ்வளவு சொல்பமாயிருந்தபோதிலும் சரியே, அதனால் பசியைத் தணித்துக்கொண்டு, பஞ்சபக்ஷண பாயசத்தைப் புஜித்தவனைப்போல் திருப்தி அடைந்திருக்கவேண்டும். ஸ்திரீ சாங்கத்திய முதலாகிய வாஞ்சைகள் மனசில் எப்பொழுதும் நாடாமலே யிருக்கவேண்டும். எவனுடைய மனம் அப்படி பரிபக்குவமாகின்றதோ, அவனே நிஜமாகிய ஸந்நியாஸி யாவானே யொழிய, காஷாய தண்ட கமண்டலாதி சின்னங்களைத் தரித்தமாத்திரத்திலேயே ஸந்நியாசி யாகமாட்டான். ஒருவன் ஞானோதயமாகாமலே ஏதோ ஓர் கஷ்டத்தால் தன் கிருஹஸ்தாசிரம தர்மத்தை விட்டுத் தலையை மொட்டையடித்துக்கொண்டு, காஷாய தண்ட கமண்டலாதி சின்னங்களைத் தரித்தமாத்திரத்திலேயே அவனுக்கு ஞானம் உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட குறியினாலேயே அவனுக்கு முக்தி உண்டாகமாட்டாது. விரக்தி எப்படி உண்டாகவேண்டுமென்றால், நிஷ்காம கர்மத்தை அநுஷ்டிப்பதனால் உண்டாக வேண்டுமே யன்றி இதர உபாயங்களினால் உண்டாகமாட்டாது. எந்தப் புருஷன் இந்திரிய நிக்கிரஹமுடையவனாய், தன் குலாசார தர்மத்தை யதாவிதியாய் அநுஷ்டித்துக் கொண்டிருக்கின்றானோ, அவன் கிருஹஸ்தாசிரமத்தி லிருந்து கொண்டு மேற்சொல்லிய ஸந்நியாசியைப்போல் கந்தமூலாதிகளைப் புஜிக்காமல் தன் வீட்டில் தன் இஷ்டானுசாரமாய்ச் சமைத்த பதார்த்தங்களைத் தேவதார்ச்சனை செய்து அந்த சேஷான்னத்தைப் புஜித்துக்கொண்டு, க்ஷுத்பாதையைத் தணிக்கப்பட்டவனாயும், எப்பொழுது

ஸ்திரீ வாஞ்சையுண்டாகின்றதோ அப்போது தன் பார்யையின் மூலமாய்த் தீர்த்துக்கொண்டு தனக்கு வேண்டிய இதர விஷயங்களையெல்லாம் தான் ஞாயமாய்ச் சம்பாதித்த தனத்தினால் செலவு செய்துகொண்டு தனது புத்திர மித்திர களத்திராதிகளுடன் சுகமாய் ஜீவித்துக்கொண்டிருப்பான். இவ்வாறான கர்மயோகத்தை அனுஷ்டித்துக்கொண்டு வருவதனால், கிரமக்கிரமமாய் விரக்தி யதிகரித்து ஸந்நியசிப்பது மேலானது. அப்படிப்பட்ட நிஜமான விரக்தி உண்டாகாமுன்னமே ஸந்நியசிப்பது கஷ்ட சாத்தியம். ஆதலால், ஓ அர்ஜுனா! எவனொருவன் யோகயுக்த ஸந்நியாசியா யிருக்கின்றானோ என்றால், மனது ஸந்நியாசமுண்டாய் பலாபேக்ஷையைவிட்டு, ஜநந (பிறந்து) ஜரா (கிழத்தனத்தினால்) மரண பயமுடையவனாய், எதிலும் மமகாரமில்லாதவனாய் தன்குலாசார தர்மானுகுணமாய்க் கர்மத்தை அனுஷ்டிக்கின்றானோ அப்படிப்பட்டவன், கர்ம ஸந்நியாசியைவிட சீக்கிரமாய் மோக்ஷத்தை யடைவான். இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன்கேள்:—

மேற்கே இருந்து கிழக்காய் பிரவாஹம் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் நதியுண்டு. அது மழைகாலத்தில் பூர்த்தியாய் ஓடுவதுண்டு. அந்த நதிதீரத்தில் ஒரு கிராமமுண்டு. அந்த கிராமத்திற்குப் போவதற்காக இருவர்கள் பிரயாணமானார்கள். அதில், ஒருவன் அந்த கிராமத்திற்கு மேற்கே இரண்டு காதவழி தூரத்திலிருந்து, அதே நதிதீரத்தில் இருக்கும் ஒரு கிராமத்திலிருந்து படகேறிப் புறப்பட்டான்; மற்றொருவன் அந்த கிராமத்திற்குக் கிழக்கே இரண்டுகாத தூரத்திலிருந்து அதே நதிதீரத்திலிருக்கும் மற்றோரூரிலிருந்து படகேறிப் புறப்பட்டான். அவர்களிருவரும் ஒரே காலத்தில் அந்த கிராமத்தைச் சேரவேண்டியவர்களா யிருக்கின்றார்கள்; அப்படிச் சேருவார்களா? அல்லது முன்னும் பின்னுமாய்ச் சேருவார்களா?

அர்ஜுநன்:—அவ்விருவர்களில் மேற்கேயிருந்து புறப்பட்டவன், கிழக்கிலிருந்து புறப்பட்டவனைவிட முன் சேருவான். ஏனென்றால், பிரவாஹம் மேற்கிலிருந்து கிழக்காய் ஓடுகின்றது. ஆதலால், மேற்கிலிருந்து கிழக்கே போகும் படகு, அந்த பிரவாஹத்தில் வேகமாயும் சீக்கிரமாயும் சுலபமாயும் போய்ச் சேரவேண்டிய ஸ்தானத்தைச் சேரும். அந்தப் படகைச் செலுத்துபவன் மாத்திரம் சுக்கானைச் சரியாய்ப் பிடித்து அந்தப் படகைத் தப்பு மார்க்கத்தில் போகவிடாமல் திருப்பிக்கொண்டு வரவேண்டும். அவன் அப்படிச் செய்து வந்தால் அந்தப் படகானது குறித்த விடத்தில் போய்ச்சேரும். இனி, கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் படகோ, அந்த பிரவாஹத்தை எதிரிட்டுப் போக வேண்டியதா யிருக்கின்றது. ஆதலால், அதை நடத்துபவன் சுக்கானைத் திருப்பிக் கொள்வதே மாத்திரமல்ல. சாதனத்தால் பலகையினால் ஜலத்தைத் தள்ளிக்கொண்டு நடத்தவேண்டியவனுயு மிருக்கின்றான். இப்படி மிகவும் பிரயாசைப்பட்டு நடத்திக்கொண்டு போனபோதிலும், மேற்கேயிருந்து கிழக்கே செல்லும் படகைப்போல் சீக்கிரமாய் நடக்கமாட்டாது. ஆதலால், அது நிதானமாகவே சேர வேண்டியதா யிருக்கின்றது.

கிருஷ்ணன:—அர்ஜுநா! இந்திரிய விஷய விருத்திகளும் இப்படிப்பட்டப் பிரவாஹம் போன்றதே யென்று அறியக்கடவாய். எப்படியென்றால், எவனொருவன் கிருஹஸ்தாசிரம தர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டு ஆயாசமில்லாமல் இந்திரிய விஷயபோகங்களை அநுபவித்துக் கொண்டு, அந்த இந்திரியங்களைத் தப்பு மார்க்கத்தில் போகவிடாமல் மனமென்னும் படகை புத்தியென்னும் சுக்கானால் திருப்பிக்கொண்டு சரியான மார்க்கமாய்ப் போகும்படிச் செய்கின்றான். அவனுக்குத் தான் அநுப

விக்கும் விஷயங்களிலெல்லாம், காலக்கிரமமாய்த் தனக்குத் தானாய் விரக்தி யுண்டாகும். அஃதெப்படியென்றால், ஓர் பதார்த்தம் எவ்வளவு ருசியாயிருந்தபோதிலும் அதை விசேஷமாய்ப் புஜிப்பதனால், அதுவரையில் அதன் மீதுள்ள அதிக ருசி கிரமக்கிரமமாய்க் குறைந்துகொண்டு வந்து கடைசியில் அந்தப் பதார்த்தத்தில் மிச்சை எப்படி உண்டாகின்றதோ அதுபோல், அநேக விசைகள் அனுபவிக்கப்பட்ட இந்திரிய விஷயங்கள் கிரமக்கிரமமாய் ஆசையைவிட்டுக் கடைசியில் அந்த விஷயங்களில் பூர்த்தியாய் விரக்தியுண்டாகும். எப்பொழுது விரக்தியுண்டாகின்றதோ, அப்பொழுது அவனுக்கு ஸ்திரமான வைராக்கியமும், அப்படிப்பட்ட வைராக்கியத்தினால் ஞானோத்பத்தியும், அப்படிப்பட்ட ஞானத்தினால் மோக்ஷமும் சீக்கிரமாய் உண்டாகும். "காமியாகாமல் மோக்ஷகாமியாகான்" என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அப்படிக்கல்லாமல் எவனொருவன், விஷயவாஞ்சை நிவர்த்தியும், ஸ்திரமான வைராக்கியமும் அடையாமுன்னமே, கிருஹத்தில் ஏதோ ஓர் மனோ வியாகூலத்தினால் ஸந்நியாசம் பெற்றால், அப்படிப்பட்டவனுடைய இந்திரியங்கள், மனது இவைகள் யாவும் விஷயங்களில் பற்றியிழுத்துச் செல்லும். அவன், மனோவியாகூலத்தினால் ஸந்நியாசம் பெற்றவனாதலால், விஷய வாஞ்சையைத் திருப்பிக்கொள்ளத் தன் மனதிற்கு பஹு கஷ்டமாயிருக்கும். கிருஹஸ்தாசிரமத்திலிருக்கப்பட்ட நிஷ்காம கர்மானுஷ்டானனுக்கு, ஒருவேளை ஏதாகிலும் ருசிகரமாகிய பதார்த்தத்தைப் புஜிக்க வேண்டுமென்னும் எண்ணமுண்டானால், அப்படிப்பட்ட பதார்த்தத்தை தன் வீட்டில் சமைக்கச்செய்து பகவதர்ப்பணம் செய்து அந்த சேஷத்தைப் புஜித்துத் தன் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்வான். மற்றொருவேளை ஸ்திரீவாஞ்சை

யுண்டானால், தன் பார்வையினால் தீர்த்துக்கொள்வான். அப்படிப்பட்டவன் விஷய வாஞ்சையைச் சுலபமாயும் நியாயவிதிகளைத் தப்பாமலும் நடத்திக்கொண்டு போகப் பட்டவனா யிருக்கின்றான். இனி, ஸந்நியாசிக்கென்றாலோ, அப்படிப்பட்ட இச்சை உண்டானபோது, அவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சக்தியில்லாதவனா யிருக்கின்றான். தனதிச்சை பூர்த்தியாகாவிட்டால், ஸ்திரமான வைராக்கியமும், ஞானமும் உண்டாகமாட்டா. இவனை விட நிஷ்காம கர்மாநுஷ்டானனே சீக்கிரமாய் ஞானத்தையும், அதன் மூலமாய் மோக்ஷத்தையும் அடைவானென்று சொல்லப்படுவான்.

அர்ஜுநன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இப்பொழுது நீர் சொல்லியது, கிருஹத்தில் ஏதோ ஒரு மனோவியாகூலத்தினால் சந்நியாசம் பெறுகின்றார்களென்றல்லவா சொன்னீர்? அப்படியானால், உலகத்தில் ஸந்நியாசம் பெறப்பட்டவர்களெல்லாம் அப்பேர்ப்பட்டவர்களா? சிலராகிலும் மோக்ஷாபேக்ஷைக்காக ஸந்நியாஸம் பெற்றவராயிரார்களா? இப்படிப்பட்டவர்களைக் காட்டிலும் நிஷ்காம கர்மியே சீக்கிரமாய் மோக்ஷத்தை அடைகுவானா?

கிருஷ்ணன்:—ஆஹா! நிஷ்காம கர்மயோகியே சீக்கிரமாய் மோக்ஷத்தை அடைவான் என்பதற்குத் தடையென்ன? ஏனென்றால், அப்படிப்பட்டவர்கள் மோக்ஷத்தை அடைய வேண்டுமென்று அபேக்ஷித்து ஸந்நிய சித்தவர்களாகின்றார்கள். விஷய வாஞ்சை விரக்தியிருந்து, வைராக்கியத்தினால் ஸங்யசித்தவர்களல்ல. ஸந்நியாசிகள் தங்கள் மனதை எவ்வளவு பத்திரமாய் வைத்துக்கொண்டிருந்தபோதிலும் அதை இந்திரியங்கள் விஷயங்களில் இழுத்துக்கொண்டே யிருக்கும். நிஷ்காம கர்மயோகியோ, அப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் அநுபவித்து விட்டு

விடுகின்றான். ஆதலால், அவன் மனது மறுபடியும் அந்த விஷயங்களை இச்சிக்காது. அஃதெப்படியென்றால், ஒருவன் தன்னெதிரிலிருக்கும் ருசிகரமாகிய பதார்த்தத்தைப் புஜிக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கின்றான். அதைப் புஜித்தால் அதன் துர்க்குணத்தினால் தனக்கு அஜீர்ணாதி பாதையை உண்டாக்குமென்னும் பயத்தினால் புஜிக்காமலிருக்கிறான். அப்படியிருந்தபோதிலும் அவனது மனது அதன் அபேக்ஷையினால் பிடிக்கப்பட்டதாயிருக்கின்றது. இது இப்படியிருக்க, மற்றொருவன் எதிரிலிருக்கும் தனக்கிஷ்டமான பதார்த்தத்தை ஆசைதீரக் கண்டம் வரையில் புஜிக்கின்றான். அப்படிப் புஜிப்பதனால் அவனுக்கு அஜீர்ணாதி பாதையுண்டாய் வமனம்செய்து அதில் மிகவும் அஸஹ்யமுண்டாய் மறுபடியும் அந்தப் பதார்த்தத்தைப் பார்த்தபோதிலும் அல்லது அதன்பேரைக் கேட்டபோதிலும் வமனமுண்டாக்கத்தக்க அஸஹ்யம் உண்டாகின்றது. அப்படிப்பட்டவனுடைய மனது மறுபடியும் அந்தப் பதார்த்தத்தை அபேக்ஷிக்கமாட்டாது. அப்படியே நிஷ்காமயோகி, விஷயங்களை அனுபவித்ததனால், அவைகளின் மீது விரக்தியுண்டானவனும், அப்படிப்பட்ட விஷயானுபவமில்லாமலே ஸந்நியஸித்தவனும், தன் மனோபலத்தினால் விரக்தியடைந்தவனுமாயிருப்பதால், வைராக்கியத்தினால் நின்று இருப்பதற்கு நிஷ்காம கர்மயோகிக்குச் சுலபமாய்ச் சாத்தியப்பட்டதுபோய் ஸந்நியாஸிக்கு ஸாத்தியப்படமாட்டாது. நிஷ்காம யோகத்தை அவலம்பிக்காமலே ஸந்நியஸிப்பது கஷ்டசாத்தியமென்று சொல்வதற்குக் காரணமாயிருக்கின்றது. ஆனால், அர்ஜுநா! மோக்ஷத்திற்குப் பரம்பரை ஸாதனமாகிய கர்மயோகத்தைவிட ஸாக்ஷாத் சாதனமாகிய ஸந்நியாசமே சிரேஷ்டமானது— "தயோஸ்து கர்மஸந்யாஸாத் கர்மயோகோ விஸிஷ்யதே"

என்று ஏன் சொன்னீரென்று கேட்கின்றாயோ, அதற்குக் காரணம் சொல்லுகின்றேன் கேள். ஞான ரஹித ஸந்நியாசமும் கர்மயோகமும் இவ்விரண்டில், எது சிரேஷ்டமானதென்று நீ பிரசினை செய்தாய். அதற்கு அனுகுண்யமாய் ஞானஹீன ஸந்நியாசத்தைவிட கர்மயோகமே சிரேஷ்டமானதென்று நான் சொன்னேன். ஸாங்க்கிய சப்தத்துடன் சொல்லப்படும் ஸந்நியாசம் ஞானத்துடன் கூடியிருப்பது. அதுவே, பரமாத்மாவென்று சொல்லப்படும். வேதவிஹித கர்மானுஷ்டானம் ஞான நிஷ்டை யென்னும் ஸந்நியாசத்திற்கே கர்மயோகமென்றும், ஸந்நியாசமென்றும் நாமாந்தரமுண்டு. கர்மயோகானுஷ்டான மில்லாமல் ஞான ஸஹித கர்மஸந்நியாசம் சம்பவிக்கமாட்டாது. கர்மானுஷ்டான மில்லாமலே சிலருக்குப் பரமார்த்த ஸந்நியாசம் உண்டாகின்றதே யென்று கேட்கின்றாயோ, அவர்கள் கர்மானுஷ்டானத்தைப் பூர்வ ஜன்மங்களிலேயே தப்பாமல் செய்தவர்களென்று அறியக்கடவாய். ஸந்நியாசம் பிரம்மசப்த வாக்கியமென்பதற்கு பிரமாணம்:—"ந்யாஸ இதி ப்ரஹ்ம ப்ரஹ்ம ஹிபர:" என்பதால் ஸந்நியாசம் பிரம்மமென்று சொல்லப்படும். பிரம்மமே ஸர்வோத்கிருஷ்டமானதென்று சுருதியின் தாத்பர்யம். ஆதலால், நீ கேட்ட ஞான ரஹித ஸந்நியாசத்தைவிட கர்மயோகமே சிரேஷ்டமானது. நீ கர்மானுஷ்டானத்திற்கு யோக்யமுடையவனாதலால், உன் அதிகாரத்திற்குத் தக்கபடி கர்மயோகமே சிரேஷ்டமானதென்று சொன்னேன். வாஸ்தவமாய் ஞானயோகமே சிரேஷ்டமானது.

† யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய:
ஸர்வபூதாத்ம பூதாத்மா குர்வந்நபி நலிப்யதே. 7.

---

† கர்மயோகியாயும் பரிசுத்தமான மனதையுடையவனும், தேஹேந்திரியங்களை அடக்கினவனும், சகல பூதங்களிலுள்ள

ஆதலால், எவனொருவன் "ஸம்ஸாரம் அஸார" மென்னும் அனுபவமுடையவனாய், ஞானத்தினால் சுத்தாந்தக்கரண முடையவனாய், இந்திரியங்களை ஜயித்தவனாய், ஸர்வ பூதங்களும் தன்னைப்போன்றனவே யென்றும் எண்ண முடையவனாய் இருக்கின்றானோ, அவனே யோகியெனப்படுவான். பிரம்ம ஞானத்திற்குச் சாதனமாகிய கர்மயோகத்தை அனுஷ்டிக்கப்பட்டவன் பரிசுத்தமாகிய சித்த சுத்தியும், சித்த சுத்தியினால் சரீரத்தை சுவாதீனம் செய்து கொண்டு கிரமக்கிரமமாய்ச் சமஸ்த இந்திரியங்களும் சுவாதீனமாய் பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமுள்ள சகல பூதங்களுக்கும் சாக்ஷிபூதமாய் இருக்கும் ஆத்மாவான தன்னை அறிந்தவனும் இருக்கப்பட்டவன், எந்தக் கர்மங்களை அனுஷ்டித்தபோதிலும் அப்படிப்பட்ட கர்மங்களினுடைய பலன்கள் அவனைப் பற்றமாட்டா.

நைவகிஞ்சித் கரோமீதி யுக்தோ மந்யேத தத்வவித்
பஶ்யந்ஶ்ருண்வந் ஸ்ப்ருஶஞ் ஜிக்ரந்நஶ்நந் கச்சந் ஸ்வபந்ஶ்வஸந் 8.
ப்ரலபந் விஸ்ருஜந் க்ருஹ்ணந் நுந்மிஷந் நிமிஷந்நபி
இந்த்ரியா ணீந்த்ரியார்த்தேஷு வர்த்தந்த இதி தாரயந். 9.

நிஷ்காம கர்மயோகி தத்வஞான சம்பந்நனாதலால், பார்த்தாலும், கேட்டாலும், தொட்டாலும், முகர்ந்தாலும், புஜித்தாலும், நடந்தாலும், தூங்கினாலும், சுவாசம்

பரமாத்மாவும், தன் ஆத்மாவும், ஒன்றென்று தெரிந்துகொண்டவன், உலகத்தாருக்காகக் கர்மங்களைச்செய்தாலும் கர்மபந்தம் அவனைப்பற்றாது. தேவாதி சகலபூதங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிறசொரூபத்தையே தனக்கும் ஆத்மாவென்று அறிகிறவன் என்றால், ஞானாகாரத்தினால் ஆத்மாக்களெல்லாம் சமானமானவர்களென்று தெரிந்துகொண்டவன் பிரமன் முதலாயுள்ள சகலபிரபஞ்சத்திற்கும் ஈசுவரனெவனோ அவனே தனக்கும் ஈசுவரனென்று அறிவான்.

விட்டாலும், பேசினாலும், மலஜலம் விசர்ஜித்தாலும், எடுத்தாலும், கண்களை விழித்தாலும், மூடியதாகிய செய்கைகளைச் செய்தவனா யிருந்தாலும் ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் தம்தம் கார்யங்களைச் செய்கின்றதே யொழிய, தான் எதுவும் செய்வதில்லை யென்று எண்ணு கின்றான். தத்துவஞான சம்பந்தன் எப்படி யிருக்க வேண்டுமென்றால், "கள்ளனொருவன் ஒரு வீட்டில் இருக்கப்பட்டவர்களுடன் ஸிநேஹம்செய்து அவர்களுக்குத் தன்னிடம் நம்பகமுண்டாகும்படி நடந்துகொண்டிருந்து சமயம் பார்த்திருந்து, அந்த வீட்டிலிற்கும் சொத்துக் களையெல்லாம் எப்படி அபகரித்துக்கொண்டுபோய் விடுவானோ அதுபோல்." தான் கிருஹஸ்தா ஸிரமத்திலிருந்து தத்சம்பந்தமான வேலைகளில் ஆசையுடையவனைப்போல் நடித்துக்கொண்டு தாரா புத்திர பந்து மித்ராதிகளுடன் கலந்துகொண்டு அவர்களின்மீது அத்தியந்தப் பிரீதியுடையவனாய் நடித்துக்கொண்டு இவையெல்லாம் மித்தையென்று அறிந்து அந்தர்முகமாய் ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்ய"த்தில்_ மௌனமென்றால் எது? சமாதியென்றால் எது? என்பதில் சொல்லியதுபோல்) ஆத்மானுபவம் செய்துகொண்டு எதிலும் பற்றில்லாமல் இருப்பான். அப்படிப்பட்டவன் ஒவ்வொரு சமயத்தில் ஏமாந்து பிரம்ம நிஷ்டையை விட்டுவிட்டால் அவனுடைய மனதும் சலித்துவிடும். அப்படி சலித்தபோதிலும் சம்சார துக்கங்களைப் பாமரர்களைப்போல் அடையமாட்டான். உடனே தன் புத்தியினால் ஆலோசித்து அறிவையறிந்து ராகத்வேஷங்களை அடக்கிவிடுவான். அதெப்படி யென்றால், வண்டல்ஜலத்தைத் தெளிவிப்பதற்காகத் தேற்றாங் கொட்டையின் சந்தனத்தை விட்டபோது அந்தச் சந்தனமானது வண்டலை அடியில் தங்கச்செய்து தானும் தேற்றாங்

கொட்டையின் சந்தனமும் அந்தச்சேற்றில் அழுந்தி ஜலத்தை சுத்தோதகமாய்ச் செய்வதுபோல் அவன் மனதி லுள்ள கலக்கம் நீங்கி நிர்மலமுடையவனாய் எப்போதும் போல் பிரகாசித்துக் கொண்டிருப்பான்.

அர்ஜுநன்:—ஐயா, நீர் சொல்லுவது சரியே. அப் படி எவனாயினும் ஆசையில்லாமல் கர்மத்தை அநுஷ்டித்த போதிலும் தன் குலாசார தர்மங்களை நிறைவேற்றும் பொழுது, நல்ல விஷயங்களுடன் கூட குரூர கிருத்தியங் களையும் செய்யவேண்டியதா யிருக்கின்றதல்லவா? அதா வது, இப்பொழுது நான் க்ஷத்திரியனாயிருப்பதால் என் குலாசார தர்மமாகிய இந்த யுத்தமென்னும் பந்து மித்திர வதா ரூபமாகிய கோர கிருத்தியங்களைச் செய்ய வேண்டிய தாய் ஏற்படுகின்றதல்லவா? இப்பொழுது நீர் சொல்லி யதுபோல் யுத்தம் செய்தபோதிலும் இதனால், அநேகர் கள் பாதைகளை அடையவேண்டியவர்களா யிருக்கின்றார் களல்லவா? இப்படி இதரர்களுக்குப் பாதையை உண்டாக் கும் வேலையைச் செய்தபோதிலும் அந்தக் கர்மபலமாகிய பாபம் பற்றாதா?

† ப்ரஹ்மண்யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி யஃ
லிப்யதே ந ஸபாபேந பத்மபத்ர மிவாம்பஸா. 10.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! அப்படி எவனொருவன் தன் குலாசார தர்மானுசாரமாய்ச் செய்யவேண்டியகிருத்

† தேஹத்தினால் செய்யப்பட்டது ஸ்நானம், மனதினால் செய் யப்பட்டது தியானம், புத்தியினால் செய்யப்பட்டது தத்வநிச்சயம் இந்திரியங்களினால் செய்யப்பட்டது சிரவண கீர்த்தனாதிகள். இந்த சிரவண கீர்த்தனாதிகள் செய்யப்பட்டவர்கள் பலாபேக்ஷைக் கல்லவென்றும், ஈசுவரனுக்காகவே செய்கின்றோமென்றும் தாம் செய்யும் கர்மத்தில் இந்திரியங்கள் கிரஹிக்கப்பட்ட வஸ்துக்களில் இச்சையும் துவேஷமுமில்லாமல் ஸத்வசுத்திக்காகவே கர்மங்களை அனுஷ்டிப்பார்கள்:

தியங்களை யெல்லாம் ஈசுவரார்ப்பணமாய்ச் செய்கின்றானோ அதாவது, பகவானால் அப்படிப்பட்ட குலாசார தர்மம் ஏற்பட்டனவென்றும். தன்னை அந்தக்குலத்தில் ஜன்மிக்கச் செய்ததால் அந்தக் குலத்திற்குச் சம்பந்தமான கார்யங்களையெல்லாம் செய்வதற்காகத் தன்னை பகவான் நியமித்தாரென்றும், அப்படிப்பட்ட கார்யங்கள் எதுவாயிருந்தபோதிலும் சரி, அதாவது, இதரர்களுக்கு பாதகரமாயிருந்தபோதிலும் சரி அல்லது, சாதகங்களாயிருந்தபோதிலும் சரி, பகவதாஞ்ஞானுசாரமாய் பத்தனாயிருக்கின்றேனென்று எண்ணி அப்படிப்பட்ட மனோ நிச்சயத்துடன் எவன் செய்கின்றானோ அப்படிப்பட்டவனுடைய நடவடிக்கை எப்படியிருக்குமென்றால், அவன் அனுஷ்டிக்கும் கர்மங்களினுடைய பலன்களாகிய புண்யபாபங்கள் "சூர்யன் ஸமஸ்த ரசங்களை இழுத்தபோதிலும், அந்த ரசங்களிலுள்ள குணதோஷங்கள் சூர்யனைப் பற்றாமலிருப்பதுபோலும், தாமரையிலையின்மீதுள்ள ஜலபிந்து அவ்விலையில் பற்றாமலிருப்பதுபோலும், சர்வத்தையும் பக்ஷிக்கப்பட்ட அக்நியை,வஸ்துக்களின் தோஷம் பற்றாமலிருப்பதுபோலும், பிள்ளைப் பூச்சி சேற்றிலிருந்தபோதிலும் அந்தச் சேற்றைப் பற்றாமலிருப்பதுபோலும்" அவனைப் பற்றாது. அர்ஜுனா ! இன்னும் சொல்லுகின்றேன் கேள். "ஸ்படிக ப்ரதிபிம்பேந யதா நாயாதி ரஞ்ஜநம் தத்தஸ: கர்மபலே நாந்த ஸததா நாயாதி ரஞ்ஜஸம்." ஸ்வச்சமாகிய ஸ்படிகத்தின் எதிரில் சிவப்பு வரணமுள்ள புஷ்பத்தை வைத்தபோது அந்தப் புஷ்பத்தின் சிவப்புவர்ணம் ஸ்படிகத்தில் பிரதிபிம்பித்தபோதிலும், அந்த வர்ணமானது ஸ்படிகத்தில் எப்படிப் பற்றாதோ அதுபோல், பிரம்மம் ஸர்வ சரீரங்களிலும் வ்யாபித்திருந்தபோதிலும் சரீராதி சம்பந்தமாகிய கர்மபலன்களின் சம்பந்தம் அந்தப் பிரம்மத்தைப் பற்றாது.

காயேந மநஸா புத்யா கேவலை ரிந்த்ரியைரபி
யோகிநஃ கர்மகுர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே. 11.

ஆதலால், அப்படிப்பட்ட மஹானுபாவன் பிராரப்த வசத்தினால், தன் குலாசார தர்மங்களைச்செய்துகொண்டு ததனுகுண்யமாய் மனோ வாக் காயகர்மங்களையும், ஞானேந்திரிய கர்மேந்திரிய வியாபாரங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும், அவைகளையெல்லாம் ஆத்மசுத்திக்காகவே செய்துகொண்டிருப்பானேயொழிய, வேறெந்த பிரயோஜனங்களைக் குறித்தும் செய்தவனல்லன். அஃதெப்படியென்றால், பர புருஷ கமனமுடைய ஒரு ஸ்திரீ தன் வீட்டிலுள்ள புருஷனுடையவும், மாமி மாமன் மூத்தார் நாத்தினார் முதலானவர்களின் இஷ்டானுசாரமாய் நடந்துகொண்டிருந்தபோதிலும் தன் மனது மாத்திரம் எப்பொழுதும் சோரநாயகனிடத்திலேயே லயித்து அவனையே நினைத்து அவனிடம் சேர்வதற்குத் தக்கசமயங்களை எப்படி எதிர் பார்த்துக்கொண்டிருப்பாளோ அதுபோல் யோகியும் கிருஹஸ்தாசிரமத்தி லிருந்துகொண்டு வேண்டிய வேலைகளையெல்லாம் செய்துகொண்டு அவைகளில் ஆசையில்லாதவனாய், தன் மனதை ஸதா பரப்பிரம்மத்திலேயே ஐக்கியம் செய்துகொண்டிருப்பான்.

யுக்தஃ கர்மபலம் த்யக்த்வா ஶாந்திமாப்நோதி நைஷ்டிகீம்
அயுக்தஃ காமகாரேண பலேஸக்தோ நிபத்யதே. 12.

கிருஹஸ்தாசிரமத்திலிருந்து இந்திரியங்களை ஜயித்து நிஷ்காமபரனாய், பிராரப்த கர்மங்களை அனுபவித்துக்கொண்டு ஆத்ம ஞானமுடைய புருஷன் காமக்குரோத லோப மோஹ மத மச்சரமென்னும் அரிஷட்வர்க்கங்களை ஜயித்து முக்தனாகின்றான். அப்படிப்பட்ட நிச்சய புத்தியில்லாதவன் சம்சார விருக்ஷத்திற்கு முக்கிய மூலமாயிருக்கும் காமத்தி (ஆசையி)னால் பரவசனாகிக் கர்மத்தை அனு

ஷ்டிப்பான். மேற் சொல்லியவன் கர்மத்தினுல் கட்டுப் படமாட்டான். அப்படிப்பட்ட ஞான நிஷ்டை செய்வதற்கு நீ அருஹனல்ல. கர்மாதிகாரியாகிய நீ பலாபேக்ஷையை விட்டு ஈசுவரார்ப்பணமாய்க் கர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். அர்ஜுநா! எவன் இந்திரியங்களை ஜயிக்கமாட்டானே அவன் காமியாயிருப்பான். அப்படிப்பட்டவன் கர்மத்தைவிட்டு வனவாசியா யிருந்தபோதிலும் அவனுக்குச் சம்சாரபந்தம் சித்திக்காமல் போகாது.

ஸர்வகர்மாணி மநஸா ஸந்யஸ்யாஸ்தே ஸுகம் வஶீ
நவத்வாரே புரே தேஹீ நைவகுர்வந் ந காரயந். 13.

பரப்பிரம்ம சொரூப ஞான முடையவனும் இந்திரியங்களை ஜயித்தவனும் நித்திய நைமித்யக காம்யமென்னும் சமஸ்த கர்மங்களையும் கர்மத்தில், அகர்மத்வ ஞானமென்னும் விவேகத்தினுல் தியஜித்து, வாக் மனஃ காய வியாபாரமில்லாதவனுய், பரமார்த்த யதியாய், ஆயாசம் யாதொன்றுமில்லாதவனுய், நிர்மல சித்தமுடையவனுய், ஸ்வானுபவத்தைவிட இதர பிரயோஜன மில்லாதவனுய், நவத்துவாரங்களுடன் கூடிய பட்டணத்தில் தன் பரிவாரங்களுடன்கூட இருக்கப்பட்ட பிரபுவைப்போல் இரண்டு நாசிகள், இரண்டு செவிகள், இரண்டு நேத்திரங்கள், வாய், குதம், உபஸ்தமென்னும் ஒன்பது துவாரங்களாயிருக்கப்பட்ட சரீரமென்னும் பட்டணத்தில், ஆத்மா என்னும் பிரபுவும், அந்த ஆத்மாவின் நிமித்தமாய் சகல காரியங்களையும் செய்யும் இந்திரியங்கள் மனே புத்தியென்னும் பரிவாரத்துடன் கூடி கர்த்திருத்துவ மூலமாகிய அஹங்காரமும், நான் என்னும் மமகாரமும் இல்லாதவனுய்ச் சுகமா யிருப்பான். பட்டணமென்று உபமானமாய்ச் சொன்னதின் கருத்தென்னவென்றுல், (ஒரு கோட்டையிலிருந்துகொண்டு தானுகவும், தன் மந்திரி முதலாகிய பரிவாரங்கள் மூலமாகவும் பல விஷ

யங்களில் பிரவர்த்தித்துக்கொண்டும், பல செய்கைகளைச் செய்துகொண்டும், செய்வித்துக்கொண்டும், நெடுங்காலம் ராஜ்ஜியதந்திரம் நடத்திவந்த ஓர் அரசன், ராஜ்ஜியாதிகாரத்தில் வெறுப்புற்று அந்த அதிகாரத்தை வேறொருவர்வசம் செய்துவிட்டு அந்தப் பட்டணத்திலேயே வாசஞ்செய்து கொண்டிருந்தான். அவன் அந்தப்பட்டணத்திலேயே வாசம் செய்து கொண்டிருந்தாலும் ராஜ்ஜிய தந்திரத்தினாலுண்டாகும் சகல கவலையும் அவ்வரசனை விட்டு நீங்கிக் கவலையில்லாமல் அவ்வரசன் எப்படிச் சுகமாயிருப்பானோ அதுபோல்) தேஹமென்னும் கோட்டைக்குள் இருந்து கொண்டு, இந்திரியங்கள், மனது, புத்தி, அஹங்காரம், தேஹம் இவைகளால் செய்யப்படும் சகல கர்மங்களையும் தானே செய்வதாகவும் பிரமையடைந்து, அதனால் சுகதுக்கங்களைத் தன்னுடையதாக நினைத்துவந்த இந்த ஆத்மா, ஞானமடைந்து தான் அநுபவித்துவந்த துக்க சுகாதிகள் தன்னுடையதல்ல, தேஹேந்திரியாதிகளின் செய்கையே யென்று அறிவானாகில், தேஹாதிகளால் அவைகளின் வியாபாரம்நடந்துகொண் டிருந்தபோதிலும் அவைகளின் சம்பந்தத்தைவிட்டு தேஹத்திற்குள் சுகமாயிருப்பான் என்பதை விளைவிக்கும்பொருட்டு, தேஹம் பட்டணமென்று திருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டது.

நகர்த்ருத்வம் நகர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு:
நகர்ம பலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே. 14.

அர்ஜுநா! ஈசுவரன் ஜனங்களுக்காகக் கர்த்திருத்வத்தையாவது, கர்மங்களையாவது, கர்ம பலன்களையாவது, உண்டாக்குகிறதில்லை. "தைவீஹ்யேஷா" என்று (அ-7, சு-14-ல்,) சொல்லியதுபோல் அவித்தையாகிய மாயையே இந்த ஸமஸ்த பிரபஞ்சங்களை உண்டாக்குவதற்கும், பிரவர்த்திக்

கச் செய்வதற்கும் மூலகாரணமா யிருக்கின்றது. ஆத்மாவோ நிர்விகாரமானது. தேவ மனுஷ்ய பசு பக்ஷி ஸ்தாவராதிரூபங்கள், பிரகிருதி சம்பந்தத்தோடு கூடியிருக்கிறதுமான இந்த உலகத்திலுள்ள தேவமனுஷ்யாதிகளில் அவரவர்களுக்குத் தனித்தனி கர்த்திருத்வத்தையும், அவரவர்களுக்குத் தனித்தனி கர்மங்களையும் அந்தந்தக் கர்மங்களாலுண்டான பலன்களில் அவரவர்களுக்குத் தனித்தனி சம்பந்தத்தையும், கர்ம பந்தமும் நீக்கி தன் நிஜசொரூபத்தோடிருக்கிற ஆத்மாவானவன், எதையும் உண்டாக்குகிறதில்லை. பிரகிருதி வாசனையானது அநாதிகாலமாய்த் தொடர்ந்துவந்த பூர்வகர்மங்களாலுண்டான தேவ மனுஷ்யாதி ஆதாரங்களாகிய பிரகிருதி சம்பந்தத்தினால் உண்டான தேஹாபிமான வாசனையானது உண்டு பண்ணுகின்றது. ஆகலால், ஓ அர்ஜுநா! கர்த்திருத்வாதி சுபாவத்தினால் உண்டானதேயன்றி ஆத்மாவிற்கு கர்த்திருத்வமில்லை. ஜடவஸ்துக்களைப்பார்க்கிலும் சமர்த்தனான ஜீவன் ஜனங்களுக்காவது, தனக்காவது, கர்த்திருத்ருத்வத்தையும், கர்மத்தையும், கர்ம பலன்களையும், கர்மபலன்களின் பற்றுதலையும், சுவதந்திரனாய் உண்டு பண்ணுவதாவது தானடையவாவது சக்தனல்லன். சுவதந்திரமாய் சகலத்தையும் உண்டு பண்ணுகிறவனாகிய ஈசுவரன், ஸ்வதந்திரனாய் உண்டுபண்ணுகின்றான். அர்ஜுநா! இன்னும் சொல்லுகின்றேன் கேள். உலகத்திலுள்ள பிரதி மனுஷ்யனும் திரிகுணாத்மகங்களாகிய அதாவது ஸத்வ, ரஜ, தமோ குணங்களுடன், கூடிய பிரகிருதியினால் மூடப் பட்டவர்களாயிருக்கின்றார்கள். இந்த பிரகிருதிக்கே சுபாவமென்று சொல்லப்படும். இந்த சுபாவமே அந்தச் ஜீவனால் எல்லாக் காரியங்களைச் செய்விக்கச் செய்யுமேயொழிய ஜீவனுக்கு அந்தக் காரியங்களில் எவ்வளவேனும் கர்த்ருத்வமுண்டாக

மாட்டாது. அதனாலேயே இதுவரையில் (அ-3, சு-5-ல் "கார்யதே ஹ்யவஸ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர் குணை:") என்று சொல்வதற்குக் காரணமாயிற்று. இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒருவிஷயம் சொல்லுகின்றேன் கேள். இந்த உலகத்திலுள்ள மனிதர்களெல்லோரும் ஒரேவிதமாய் நடவாமல் நானாவிதமாய் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோமல்லவா? அதாவது, ஒருவன், தனக்கு மற்றொருவன் எவ்வளவு அபகாரம் செய்தபோதிலும் அவனுக்குப் பிரதி அபகாரம் செய்யாமல் அதற்குப் பதிலாய் உபகாரமே செய்துகொண்டிருப்பதையும், தன்னை நிர்நிமித்தமாய் வைதபோதிலும், அவனை மறுபடியும் வையாமல் பூஷிப்பதையும் பார்த்துக்கொண்டிருக்கின்றோமல்லவா? அது எதனாலென்று அறிவாயா?

அர்ஜுநன்:—ஆம், அறிவேன்; அவர்கள் ஸத்துவகுணப் பிரதானமுடையவர்களாதலால், அவர்களுக்கு அப்படிப்பட்ட குணங்கள் உண்டாகின்றதென்று தோன்றுகின்றது.

கிருஷ்ணன்:—நல்லது, அதுபோல், மற்றொருவன் இதரர்களால் தூஷிக்கப்பட்டபோதிலும், அபகாரம் செய்யப்பட்டபோதிலும் மறுபடியும் அவர்களைப் பதின்மடங்கு அதிகமாய்த் தூஷிப்பதும், தனக்கு அவர்கள் செய்த அபகாரத்தைவிட பதின்மடங்கு அதிகமாய் பிரதியபகாரம் செய்வதுங்கூடப் பார்த்துக்கொண்டிருக்கின்றோமல்லவா? அது எதனாலென்று தெரியுமா?

அர்ஜுனன்:—ஆம்: அப்படிப்பட்டவர்களையும் பார்க்கின்றோம். அவர்கள் கேவல ரஜோகுணப் பிரதானர்களென்று தோன்றுகிறது.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! நான் முதலில் சொல்லிய சத்வகுணப் பிரதானமுடையவனுக்கு அபகாரம் செய்யும்

புத்தியும், இரண்டாவது சொல்லிய ரஜோகுணப் பிரதான முடையவனுக்கு உபகாரம் செய்யும் புத்தியும் எப்போதாகிலும் உண்டாகுமா?

அர்ஜுநன்:—அப்படி உண்டாகமாட்டாது. ஏனென்றால், அவனுக்கு அநுகுணியமாகிய வேலையை அவனும், இவனுக்கநுகுண்யமாகிய வேலையை இவனும் செய்து கொண்டிருப்பானேயொழிய அந்தக்குணங்களுக்கு விபரீதமான வேலைகளைச் செய்யான்.

கிருஷ்ணன்:—அப்பொழுது பிரதி புருஷனும் செய்யப்படும் வேலைகள், அவன் சுபாவத்தை அநுசரித்தேயல்லவா செய்கின்றான்? அதனால் அந்த வேலைகள் அவனது சுபாவகுணமே செய்விக்கின்றதென்றல்லவா ஏற்படுகின்றது.

அர்ஜுநன்:—ஆம், அவன் சொபாவகுணமே செய்விக்கின்றது என்று சொல்லவேண்டியதாயிருக்கின்றது.

கிருஷ்ணன்:—ஆகையினாலேயே பிரதி புருஷனும் செய்யும் கர்மங்களினுடைய கர்த்திருத்துவம் அவனவன் சுபாவகுணங்களால் உண்டாகிறதேயொழிய அவனிடத்தில் இல்லையென்று அறியக்கடவாய்.

அர்ஜுநன்:—ஓ சுவாமீ! இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், பிரதி கர்மங்களினுடைய கர்த்திருத்துவமும், சுபாவத்திலேயே உண்டாயிருக்கின்றதென்று என் புத்திக்கு இப்பொழுது ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆனால், இன்னொரு சந்தேஹம் உண்டு. அது என்னவென்றால், உலகத்திலுள்ள மனிதர்கள் சுகிருதத்தையும், துஷ்கிருதத்தையும், செய்கின்றார்களல்லவா? அப்படிப்பட்ட சுகிருதங்களினுடைய பலன் புண்ணியங்களாயும், துஷ்கிருதங்களினுடைய பலன் பாபங்களாயும் இருக்கின்றனவல்லவா? அப்படிப்பட்ட புண்ணிய பாபங்கள் அந்தக் கர்

மத்தை அநுஷ்டித்த ஜீவனுக்குக் கர்த்திருத்துவமில்லாததால் அந்த ஜீவனைப் பற்றாதல்லவா? அந்த ஜீவனால் மேற்படி கர்மங்களைச் செய்விக்கும் சுபாவம் அசேதன பதார்தமாதலால், அதனையும் பற்றாதல்லவா? இனி அந்தப் புண்ணிய பாபங்கள் யாரைப்பற்றுகின்றன? இந்த ஜீவனையும் பிரகிருதியையும் சிருஷ்டித்த ஈசுவரனுக்கே யல்லவா சேரவேண்டியதா யிருக்கின்றது.

நாதத்தே கஸ்யசித் பாபம் நசைவ ஸுக்ருதம் விபுஃ
அஞ்ஞானே நாவ்ருதம் ஞானம் தேந முஹ்யந்தி ஜந்தவஃ. 15.

கிருஷ்ணன்:—ஆம்: அவனவன் செய்யும் புண்ணிய பாபங்கள் ஈசுவரனைச் சேரா; ஜீவனையே சேரும். எப்படியெனில்:—

ஸ்ரு||"ஸூர்யோ யதா ஸர்வலோகஸ்ய சக்ஷுர் ந லிப்யதே சாக்ஷுஷை ர்பாஹ்ய தோஷைஃ ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா ந லிப்யதே லோக துஃகேந பாஹ்யஃ."

என்னும் கடோபநிஷத் வாக்ய ரீதியாய், சூர்யன் பிரகாசித்துக்கொண்டிருக்கும்போது, அவனது கிரணங்கள் சுகந்த வஸ்துக்களாகிய புஷ்பங்களிலும், துற்கந்த வஸ்துக்களிலும் வியாபித்திருந்த போதிலும், அந்த வஸ்துக்களினுடைய சுகந்த துற்கந்தங்கள் அந்த சூரியனைப்பற்றாமலிருப்பதுபோல், சகல ஜந்துக்களின் ஹிருதயத்தில் வசித்துக்கொண்டிருக்கும் ஆத்மாவிற்கு, அந்தந்த ஜந்துக்கள் செய்யும் புண்ணியபாபங்கள் பற்றமாட்டா. ஆத்மா புண்ணியபாபங்களில்லாத நிர்த்தோஷி யாதலால், நிர்மலனாகின்றான்.

ஸ்ரு|| ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நிஃ தமேவ பாந்த மநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி."

என்னும் கடோபநிஷத்து வாக்கிய ரீதியாய், தேஜோமயமாகிய சூரியன், சந்திரன், அக்கினி, நக்ஷத்திரங்கள் முத

லானவைகளும் சுயம்பிரகாச பரப்பிரம்மமாகிய ஆத்மா ஸத்தா மாத்திரத்தினாலேயே பிரகாசிக்கின்றதே யொழிய அவைகள், ஆத்மாவை பிரகாசிக்கச் செய்யமாட்டா. அக்கினியினுடைய சேர்க்கையினால் விறகுகள் அக்கினிரூபமடைந்து இதர பதார்த்தங்களைத் தஹிப்பதுபோல், ஆத்மா ஸத்தா மாத்திரத்தினாலேயே, சூரிய சந்திராதிகளும் தேஜோமயமாய் இதர பதார்த்தங்களைப் பிரகாசிக்கச் செய்கின்றன. ஆத்மாவை பிரகாசிக்கச்செய்யும் வஸ்துக்கள் ஒன்றுமில்லை. ஆத்மா, தனக்குத்தானாகவே ஸஹஜமாய் ஞான பிரகாசமா யிருக்கின்றது.

அர்ஜுநன்:—இதென்ன அந்யாயம்! ஈசுவரன் கர்மங்களினுடைய கர்த்திருத்வம் ஜீவர்களுக்குக் கொடுக்கவில்லை யென்றும், அந்த ஜீவர்களுக்குச் சம்பந்தித்திருக்கும் பிரகிருதியே அந்தக் கர்மங்களைச் செய்கின்றதென்றும் நீர் இப்போது சொன்னீரல்லவா? அப்படியிருக்க கர்த்திருத்துவ மில்லாத ஜீவனுக்கு பிரகிருதியினால் செய்யப்படும் கர்மங்களினுடைய பலன்களாகிய புண்ணிய பாபங்கள் எப்படிச் சேரும்?

கிருஷ்ணன்:—அஃதெப்படியென்றால், ஜீவன் தான் ஒன்றும் செய்யாவிடினும் பிரகிருதியினால் செய்யப்படும் கர்மங்களைத் தான் செய்வதாய் எண்ணுகின்றான். அதனால் அந்தக் கர்மத்தைத் தன்மீது போட்டுக் கொள்ளுகின்றான். இப்படிச்செய்வதே அஹங்காரமென்று சொல்லப்படும். இந்த அஹங்காரத்தினால் அந்தக் கர்மபலன்கள் அவனைச் சேருகின்றன.

அர்ஜுநன்;—ஐயோ பாவம்! இந்த ஜீவன் நிர்நிமித்தமாய்த் தான் செய்யாத காரியங்களைத் தன்மேல் சுமத்திக்கொண்டு, அதனால் ஏன் பத்தனாகவேண்டும்?

கிருஷ்ணன்:—அஞ்ஞானத்தினல் அப்படிச் செய்கின்றான். இந்த அஞ்ஞானத்திற்கே, அவித்தை என்றும், மாயையென்றும் பெயருண்டு. இதனாலேயே சமஸ்த ஜந்துக்களினுடைய ஞானம் மூடப்பட்டிருக்கின்றது. இந்த அஞ்ஞானத்தினல், மோசம் போய் அஹங்காரத்தை வஹித்து அதனல் பந்தப்பட்டவனாகின்றான்.

அர்ஜுனன்:—அப்படியானல் இந்த மாயை யாரால் கல்பிக்கப்பட்டது ?

கிருஷ்ணன்:—ஈசுவரனாலேயே கல்பிக்கப்பட்டது.

அர்ஜுனன்:—அப்படியானல் ஜகத்சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய ஈசுவரனே இந்த மாயையை உண்டாக்கி அதனால் ஜீவர்களை மோஹிக்கச் செய்துகொண்டு, அதன் மூலமாய் அவர்களைக் கர்மபத்தர்களாய்ச் செய்வித்துத் தான் எதுவும் செய்யாதவனைப்போல் எந்தப் பலன்களையும் பற்றாமல் விலக்ஷணனாய் எப்படி இருக்கலாம் ?

கிருஷ்ணன்:—ஈசுவரன் ஜீவர்களையும் மாயையையும் சிருஷ்டி செய்தது வாஸ்தவமே ! ஆனால், மாயையினால் கட்டுப்பட்டிருக்கும் ஜீவர்கள் அந்த மாயையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் சக்தியையும் கொடுத்திருக்கின்றார். அதுவே புத்தி என்று சொல்லப்படும். எந்த ஜீவனுக்கு மானிட ஜன்மம் வருகின்றதோ, அப்பொழுது புத்தியைச் சரியாய் உபயோகப்படுத்தித் தன்னுடையவும், மாயையினுடையவும் சொரூப சுபாவத்தைச் சரியாய்த் தெரிந்து கொண்டவனாய் சமஸ்த கர்மங்களும் மாயையின் சம்பந்தமே என்றும், அவைகளினால் தனக்கு யாதொரு சம்பந்தமில்லையென்றும், அறிந்துகொண்டு எவனெவன் நடக்கின்றானோ, அப்படிப்பட்டவன் அந்த மாயையிலிருந்து நீங்கினவனாகின்றான். அப்படிப்பட்டவன் அந்தக் கர்மத்திற்குப் பந்தனாகமாட்டான். அப்படிச்செய்யாமல் எந்த ஜீவன்

மனுஷ்யஜன்மம் அடைகின்றதோ அதற்குப் பகவான் கொடுத்திருக்கும் புத்தியைச் சரியாய் உபயோகப்படுத்தாமல், அஹங்கார மமகார முடையவனாய் பிரகிருதியினால் செய்யப்படும் காரியங்களை எல்லாம் தானே செய்வதாய் நினைக்கின்றானே அப்படிப்பட்டவன், மதயானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வதுபோல், மாயையினால் செய்யப்படும் கர்மங்களைத் தன்னில் ஆரோபித்துக்கொண்டு, அதனால் கர்மபத்தனாய் அந்தக் கர்மங்களின் பலாபலன்களை அனுபவிக்கின்றான். பகவான் அவனைக் கர்மபத்தனாய்ச் செய்வதில்லை. இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்! ஓர் யஜமான் இரண்டு சேவகர்களை அழைத்து நீங்கள் தாமரைத் தடாகத்திற்குச் சென்று தாமரையிலைகளும் புஷ்பங்களும் கொண்டு வரவேண்டுமென்று சொல்லி, "அந்தத் தடாகத்தில் தாமரைக் கொடிகளும், அல்லிக் கொடிகளும் மிகவுமுண்டு. அவைகள் கால்களில் சுற்றிக்கொண்டால், நீங்கள் எவ்வளவு நீச்சல் கற்றவர்களாயிருந்தபோதிலும் அது பிரயோஜனப்படாது. ஆதலால், நீங்களிருவரும் இவ்விரண்டு கத்திகளைக் கொண்டுபோய்க் கொடிகள் காலில் சுற்றிக் கொள்ளும்போது அவைகளைக் கண்டித்து விடுங்கள்" என்று இரண்டு கத்திகளைக் கொடுத்தனுப்பினான். இருவருள் ஒருவன் தன் யஜமான் ஆஞ்ஞானுசாரமாய் அவன் கொடுத்த கத்தியை மறவாமல் எடுத்துக்கொண்டுபோய் காலில் சுற்றிக்கொண்ட கொடிகளையெல்லாம் கண்டித்துக் கொண்டு அந்தக் கொடிகளால் கட்டுப்படாமல் இலைகளையும் புஷ்பங்களையும் பறித்துக்கொண்டுவந்தான். மற்றொருவனோ. அப்படிச்செய்யாமல் யஜமான் கொடுத்த கத்தியை வீட்டில் வைத்து மறந்து கையில் ஆயுதமில்லாமலே தடாகத்திலிறங்கிச் சென்றவுடனே கொடிகள் கால்களில்

சுற்றிக்கொண்டபடியினால் நீந்துவதற்குச் சாத்தியமாகாமல் தத்தளித்துத்தடுமாறி பிராணனைவிட்டான். இவ்வாறு பிராணனைவிட்ட இவனுடைய மரணத்திற்குக் காரணபூதன் யஜமான் ஆகின்றானா? அல்லது தானே யாகின்றானா?

அர்ஜுனன்:—யஜமான் காரணபூதனல்லன். ஏனென்றால், அவனை அந்தத் தடாகத்திற்கு அனுப்பும்போதே அவ்விடத்திலுள்ள கொடிகளின் விஷயமாய்ச் சொல்லியும் அதை நிவர்த்தி செய்துகொள்வதற்குத் தக்க ஆயுதமும் கொடுத்தனுப்பினான். ஆனால், அதை அவன் உபயோகப் படுத்திக்கொள்ளாமற் போனதனால் அவனுக்கு இப்படிப் பட்ட கதி சம்பவித்தது. ஆதலால், அந்த தோஷம் யஜமானனைப் பற்றாது.

கிருஷ்ணன்:—ஆனால், அந்தச் சங்கதி அறியாதவர்கள் என்ன சொல்வார்கள்?

அர்ஜுனன்:—அந்த யஜமானே அவன் மரணத்திற்குக் காரண பூதனென்று சொல்வார்கள்.

கிருஷ்ணன் :—அதுபோல், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள மனிதர்களும் அஞ்ஞானத்தினால் அவர்கள் அனுபவிக்கும் பலன்களுக்கு ஈசுவரன் காரண பூதனாயிருக்கின்றானென்று எண்ணிக்கொள்ளுகின்றார்கள்.

அர்ஜுனன்:—ஆனால், பிரதி ஜீவனுக்கும் மானவஜன்மம் உண்டானபோது மாயையை நிவர்த்திசெய்துகொள்ளச் சாதனமாகிய புத்தியை பகவான் கொடுத்திருக்க அந்தப் புத்தியினால் மாயையை உதறிவிட்டு மோக்ஷத்தை அடையத்தக்க பிரயத்தினத்தைச் சுலபமாய்ச் செய்யலாமல்லவா? அப்படியிருந்தும் அதுபோல் செய்பவர்கள் மிகவும் அரிதாயிருக்கின்றார்கள். என்றால், லக்ஷத்தில் ஒருவன் இருப்பதும் அரிதாயிருக்கின்றதே! அதற்குக் காரணமென்ன?

கிருஷ்ணன்:—ஓஹோ! மாயையை ஜயிப்பது சுலப சாத்தியமென்று நீ எண்ணிக்கொண்டாய்போல் தோன்றுகின்றது. அந்த மாயாசக்தியைக் குறித்து ஓர் கதை சொல்லுகின்றேன் கேள்:—பூவுலகில் கோசலதேசத்தில் 'காதி' என்னும் ஓர் பிராம்மணன் இருந்தான். அவன் ஒரு காரியத்தை மனதில் நினைத்துப் பந்து ஜனங்களை விட்டு நீங்கி, வனத்திற்குச் சென்று, ஒரு தடாக நீரின் மத்தியில் கழுத்தளவு முழுகநின்று, மேலாகிய தவத்தைச்செய்தான். எட்டுமாதங்கள் கழிந்தபோது, விஷ்ணுமூர்த்தி அவனுக்கு பிரத்தியக்ஷமாய், 'உனக்கென்ன வரம் வேண்டும்? தெரிவித்தால் அதனைத் தருவோம்' என்று சொன்னவுடனே, அந்தப் பிராம்மணன் கரையேறி வந்து, திருமாலைக் கை குவித்து வணங்கி, "சுவாமீ! உமது மாயா சொரூபத்தைத் தரிசிக்க விரும்புகின்றேன்" என்றான். அதைக்கேட்ட பகவான், 'அப்படியே என் மாயாசொரூபத்தைக் காணக்கடவாய், கண்டபிறகு அதனை நீங்கக்கடவாய்' என்று, அநுக்கிரஹித்து மறைந்தவுடன், பகவானைச் சேவித்த சந்தோஷத்தையுடைய அவ்வேதியன், அந்த வனத்தில் சில நாள் தவம் செய்துகொண்டிருந்து, ஒருநாள், முன்னே திருமால் அருளிச்செய்த வாக்கியத்தை நினைத்துக்கொண்டே ஒரு தாமரைத் தடாகத்தில் இறங்கி மூக்கைப் பிடித்துக்கொண்டு ஒரு முழுக்குப் போட்டவுடன் பந்துக்கள் இருக்கும் தன் வீட்டில், தான் வியாதியினால் இறந்தவனாகத் தன்னைக் கண்டான். அப்போது தன் பந்துக்களும், தன் மனைவி, தன் தாய் முதலானவர்கள் தன்மேல் விழுந்து கட்டிக்கொண்டு கதறவும் பார்த்தான். இதற்குமேல், தன்னை ஸ்மசானதிற்குக் கொண்டுபோய்ச் சுட்டுச் சாம்பலாக்கவும் பார்த்தான். பின்னும் அந்த ஜலத்தின் மத்தியிலிருக்கும் பிராம்மணன் ஊணதேசத்தின் ஒருநகரமுடிவில் இருக்

கிறகீசர் குலத்தில், ஒரு பெண்ணின் வயிற்றில் வெந்த கரிக் கட்டைபோல் ஆண்மகனாய்ப் பிறந்து, அந்தக் குலத்துப் பெண்ணொருத்தியை மணம்புரிந்து, அவளோடுகூட மலைகளிலும் வனங்களிலும் இருந்து, மனமும் பிராணவாயுவும் போல் ஒற்றுமையாய்க் கலந்து வாழும்நாளில், தன் குலம் விளங்கச் சில புத்திரர்களைப்பெற்றான். சிலநாளைக்குப் பிறகு மூப்பு வந்தடையவே, தன் சேரிக்குக் கொஞ்சதூரத்தில் ஒரு சிறு தழைக்குடில் கட்டி அதில் வசித்துக்கொண்டிருந்தபோது, தன் மக்களுக்கும் தனக்கும் கிழத்தனம் வந்தடைந்தது. தன் மனைவி மக்களுக்கும் தனக்கும் ஒரு மிக்க கிழத்தனம் வந்ததைப் பார்த்து வருந்துங்காலத்தில், தன்னைவிட்டு மற்றவர்களெல்லாம் காலன் கொண்டு போய்விட, தான் தனியேயிருந்து வாய்விட்டலறி சகிக்க மாட்டாமல், மனங்கலங்கி, பிரமைபுள்ளவனாய், அநேக காடுகளில் வெகுகாலம் திரிந்துகொண்டிருந்தான். இப்படியிருக்க, ஒரு நாள் கீரநாட்டின் ராஜதானியில் புகுந்து, சொர்க்க லோகத்தில் பொன்மயமாயிருக்கிற வீதியைப் போன்ற ஒரு வீதியில் போய்க்கொண்டிருந்தான். அதற்கு முன் அந்நகரத்தரசன் மாண்டிருந்தபடியால், பூமியைக் காக்க வேறோர் அரசனைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வாவென்று சொல்லி யனுப்பப்பட்ட பட்டத்துயானையானது, எதிரே வரப்பட்ட இவன் கழுத்தில் புஷ்ப மாலையைப் போட்டுத் துதிக்கையாலெடுத்துத் தன் பிடரியில் ஏற்றிக் கொண்டு போயிற்று. அப்பட்டத்து யானையால் கொண்டு வரப்பட்ட இவனை, மாதர்கள் அலங்கரித்தார்கள்; பழைய மந்திரிமார்கள் சேனாதிபதி முதலானவர்கள் இவனை அரசனாக முடிசூட்டி, இவனது ஆஞ்ஞையைச் சிரசாக வகித்து நடத்தி வந்தார்கள். பிராம்மணனாகிய சண்டாளன் கவலன் என்கிற பெயர் பெற்றுக் கீரதேசத்தில் நீதியாகச்.

செங்கோல் செலுத்திச் சிம்ஹாசனத்தின்மேல் சொகுசாக வீற்றிருந்தான். இப்படி எட்டுவருஷங்கள் கழியவே, ஒருநாள் தனியனாய்க் காலால் நடந்து, தன் அரண்மனையின் தெருப்புறத்தில், சேவகரோடு உலாவுஞ் சமயத்தில், அவ்விடம் சில சண்டாளர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒரு முதியோன் வந்து இவனைப் பார்த்தவுடன், ஆசையோடு தழுவி, முன் பெயரைச் சொல்லி, எங்களுக்குப் பழைய சுற்றத்தானாகிய நீ எம்மைவிட்டு எங்கே போனாய்? இப்போது எவ்விடத்தி லிருக்கின்றாய்? என்று இவனது பழைய வரலாற்றை உள்ளபடி சொல்லி விசாரித்தான். அதைக்கேட்ட இவன், இங்குள்ள யாராயினும் இதனைக் கேட்பாராயின் நமக்குப் பழியாய் முடியுமென்று, அச்சண்டாள முதியோனை, உரத்த சத்தத்தோடு அதட்டித் துரத்திவிட்டு விரைவாகத் தனது அந்தப்புரத்தில் பிரவேசித்தான். இவற்றையெல்லாம், சாளர வாயிலில் நின்று கண்டும், கேட்டுமிருந்த ராஜஸ்திரீகள், மந்திரிமார்களுக்கு அறிவிக்க, அவர்களும் இவன் பூர்வத்தில் சண்டாளனா யிருக்கலாமென்று ஊஹித்தறிந்துகொண்டு, மிகவும் மனவருத்த மடைந்தார்கள் இவன் மாத்திரம் மனங் கலங்காமல், அவைகளை அறியாதவன்போல் பழைய படியே சிம்ஹாசனத்திருந்தான். இவனை மாதர்கள் மந்திரிமார்கள் முதலானோர்கள் தீண்டுதற்கு அஞ்சினவராய், பிரேதத்தை அருவருத்தல்போல் அருவருத்திருந்தார்கள். இவன், அங்கு கல்வி செல்வங்களிரண்டுமில்லாத பிராணிகள் போன்றிருந்தான். அந்த நகர மாந்தரெல்லோரும், இவனுடைய சம்பந்தத்தால் நாமெல்லோரும் பதிதரானோம்; இனி, ஒரு பிராயச்சித்தத்தாலும் பரிசுத்தராகமாட்டோம்; நாம் பரிசுத்தராவதன்பொருட்டுத் தீப்பாய்வோமென்று நிச்சயித்து, அக்கினி குண்டத்தை வளர்த்தி அதில்

எல்லோரும் விழுந்து மடிந்தார்கள். இவன், அவர்கள் மடிந்ததைக்கண்டு, நமது தொடர்பாலல்லவோ இத்தனை பேரும் நாசமடைந்தார்கள். இனி, நாமும் மாண்டு போவதே தக்க காரியமென்று அக்கினி குண்டத்தில் குதித்தான். குதித்தவுடன் தாமரைத் தடாகத்தில் முன் முழுகிய சிரசை மேலுக்கெடுத்தான். ஓர் முழுக்குப் போடுவதற்குள் இத்தனை அனர்த்தங்கள் நேரிட்டன. உடனே நீரைவிட்டுக் கரையேறி மஹா மாயையினின்றும் நீங்கி ஈசுவரனது சர்வ சக்தியைக் குறித்துப் புகழ்ந்து மனங்களித்திருந்தான். இக்கதை மேலும் போம். இவ் விடத்திற்கு வேண்டியது இவ்வளவேயாதலால், இம்மட்டில் நிறுத்தப்பட்டது. கதை முழுதும் அறிய விரும்பு வோர் ஞானவாசிட்டம் 23-வது, கதையில் விபரமாய்க் காணலாம். இன்னும், மாயை எப்படிப்பட்டதென்றால். உலகத்தில் சுகமடைய வேண்டுமென்று எண்ணி பல வழி களில் பிரயத்தனம் செய்து கோரிய சுகத்தை அடைந்த பின்னும் அதில் திருப்திகொள்ளாமல் மென்மேலும் சுகத்தை விரும்பி ஓடி உழலுவதே மாயை. தினந்தோறும் ஜனங்கள் இறப்பதைக் கண்டும் அநேகர் நாம் இறக்கப் போகிறதில்லையென்று நினைத்து அநேக வருஷங்களுக்கு. வேண்டிய ஏற்பாடுகள் செய்கின்றார்கள்; இதுதான் மாயை. உலகத்தில் எத்தனை தரம் துன்பத்தில் அடிப்பட்டாலும் இவ்வுலகத்திலிருந்து வாழவேண்டுமென்று மனிதர்கள் எண்ணுகின்றார்கள். இதுதான் மாயை. ஒரு சமயத்தில் ஒருவன் அதிக சந்தோஷத்தை அடைகின்றான். மற்றொரு சமயத்தில் அம்மனிதனே துக்கத்தை அடைகின்றான்; இதுதான் மாயை. இன்னும் சொல்லுகின்றேன் கேள்.—

அர்ஜுநா! பகவானான என்னிடம் ஒரு சமயம் நாரதர் வந்து, "சுவாமி! எனக்கு மாயையைக் காண்பிக்க

வேண்டுமென்று கேட்டனர். அதற்குப் பகவானுன நான் அப்படியே ஆகட்டுமென்று கூறிச் சும்மாவிருந்தேன். சில நாள் கழிந்தன. பிறகு, ஒருநாள் நாரதரை என்னுடன் ஓர் வனத்திற்கு பிரயாணமாய் வரவேண்டுமென்று கேட்டேன். அதற்கு நாரதர்சம்மதிக்க. இருவருமாகப் பிரயாணப்பட்டு அநேக மைல்கள் தூரம் நடந்தவுடன் எனக்கு அதிக தாக மூண்டாயிற்று. அப்போது நாரதரை நோக்கி, ஐயா நாரதரே! எனக்கு அதிக தாகமாயிருக்கின்றது. ஜலம் கொண்டு வாருமென்று அனுப்பினேன். நாரதர் உடனே ஜலம் கொண்டுவரச் சென்றார். சில தூரத்தில் கிராமம் ஒன்று அவருக்குத் தெரிந்தது. அக்கிராமத்தில் ஜலமகப் படுமென்று நாரதர் சென்றார். அவர் செல்லும் வீதியில் ஓர் பெரிதான மெத்தைவீட்டைக் கண்டு அவ்வீட்டின் கதவைத் தட்டினுர். உடனே கதவைத் திறந்துகொண்டு அதிக அழகு வாய்ந்த ஒரு பெண்மணி வந்து நின்றாள். அவளைக் கண்டவுடன் நாரதர் தாம் வந்த காரியத்தை மறந்து அப்பெண்ணுடன் வேடிக்கையாய்ப் பேச ஆரம் பித்தார். அன்று முழுதும் அவ்விடத்தைவிட்டு அவர் அசையவில்லை. மறுநாளும் அவ்விடத்திலேயே பேசிக் கொண்டிருந்தார். கண்ணன் ஜலம் கொண்டுவரச் சொன் னுரே என்பதை அடியோடே மறந்தார். பெண்ணுடன் பேசுவதே அவருக்கு ஆனந்தமாய்விட்டது. பேச்சு முற் றவே ஆசையுண்டாயிற்று. ஆசையினுல், மோஹம் உண் டாயிற்று; அந்த மோஹத்தைத் தீர்த்துக்கொள்ளப் பெண் ணின் தகப்பனுரிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு, நாரதர் அப்பெண்ணை மணம் புரிந்து அவளுடன் கூடி இன்ப மனு பவித்துக்கொண்டிருந்தார். இப்படியாகப் பன்னிரண் டாண்டு கழிந்தன. நாரதருடைய மாமனுர் ஏதோ ஓர் வியாதி சம்பந்தத்தால் உலகவாழ்க்கையைத் துறந்தான்.

அவனுடைய சொத்துக்களெல்லாம் நாரதருக்குக் கிடைத்தன. விசேஷதனமும், வீடும், நல்ல மனைவியும் தமக்கு நேர்ந்ததை எண்ணி அதிசுகமாக நாரதர் அக்கிராமத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார். அநேக குழந்தைகளையும் பெற்றெடுத்து அவைகளைச்சீராட்டி முத்தமிட்டு சம்சாரசுகத்திலிருக்குங் காலத்தில், அடுத்த நதியில் வெள்ளம் வந்து இவரிருக்கும் கிராமத்திற்குப் புரண்டுவந்தது. வீடுகளெல்லாம் வீழ்ந்து ஆடுமாடுகளையும் மற்றுமுள்ள ஜீவர்களையும் ஆற்றுவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அப்போது நாரதர் தம் மனைவியை ஓர் கையிலும், ஓர் குழந்தையை மற்றோர் கையிலும், மற்றுமிரண்டு குழந்தைகளை தோள்களின்மீதும் ஏற்றிக்கொண்டு வெள்ளத்தைத் தாண்டி அக்கரை செல்ல உத்தேசித்து நதியில் இறங்கிச் சென்றார் பாதி நதி கடந்தவுடன் மேல்வெள்ளம் அதிகமாய் வந்தபடியால், ஜலத்தின் உருட்டினால் எல்லாக் குழந்தைகளும் மனைவியும் இழந்தவராய் தான் மாத்திரம் மிகவும் கஷ்ட சாத்தியத்துடன் அக்கரை ஏறினார். அந்தச் சமயத்தில் நாரதருக்கு எப்பேர்ப்பட்ட துக்கம் சம்பவித்திருக்கலாம்? அதை நீயே யோசித்துப்பார்! அந்தத் துக்கத்தைப் பொறுக்கமாட்டாமல் நாரதர் பூமியில் விழுந்து புரண்டு ஓ! வென்று கூச்சலிட்டு அலறி அழுதார். அத்தருணத்தில் கபடநாடக சூத்திரதாரியான யான், நாரதருடைய முதுகை மெள்ளக் கையினால் தட்டி, ஐயா நாரதரே! தாகம் தணிக்க ஜலமெங்கேயெனக் கேட்டனர். இதோ ஜலம்கொண்டுவருகின்றேனென்று சொல்லிப்போய் இருபது வருஷகாலம் சம்சாரத்தில் அகப்பட்டு அலைந்ததே மாயை. மனிதனுக்கு ஓர் விஷயம் கெட்டதென்று தெரிந்திருந்தாலும் அவ் விஷயத்தையே மறுபடியும் அனுஷ்டித்து வருகின்றான். அப்படி அனுஷ்டித்துவருவதே

மாயை. இந்த மாயையானது எங்கும் பரிபூரணமான ஆத்மாவை (பிரம்மத்தை) ஆசிரயித்துக்கொண்டிருக்கின்றது.

அர்ஜுனன்:—ஓ சுவாமீ! ஆத்மா ஒன்றுதானே உள்ளது. மாயையொன்று கூட இருந்தால் வஸ்து இரண்டாகவில்லையோ?

கிருஷ்ணன்:—ஆம். ஆத்மா ஒன்றென்பது உண்மையே. அதனுடன் மாயையென்பது ஒன்று சேர்ந்திருப்பதும் உண்மையே. ஆனால், வஸ்துக்கள் இரண்டாகவில்லை. எப்படியென்றால், கயிற்றினிடத்தே பாம்பு தோன்றுகிறது. அதனால், கயிறு ஒன்று, பாம்பு ஒன்று ஆக இரண்டுபொருளாகிவிடுமா? அது இரண்டு பொருளானால், ஆத்மாவும் மாயையும் இரண்டு பொருளாகலாம். மேற்கூறிய உதாரணத்தில் கயிற்றினிடத்துப் பாம்பு தோன்றினும் உற்றுநோக்குங்காலத்தில் கயிறே சத்தியப் பொருளாயும் பாம்பின் தோற்றம் பொய்ப் பொருளாயும் போகின்றன. அதுபோல் உற்றுநோக்காத தோஷத்தால், ஆத்மா ஒன்றும் மாயையொன்றுமாக இரண்டுபொருளாகத் தோன்றுகின்றன. உண்மையாய் விசாரிக்குமளவில் ஆத்மா யதார்த்தப் பொருளாயும் மாயை தோற்றப பொருளாயும் முடிகின்றன. ஒரே பொருள் பிராந்தியினால் பாம்பாகவும், பிராந்தி நீங்கித் தெளிவை அடைந்தபோது கயிறாகவும் தோன்றுவதுபோல், ஒரே பொருள் மருட்சியினால் மாயையாகவும் அல்லது, ஜகத் ஜீவ பரங்களாகவும், தெளிவை அடைந்தபோது ஆத்மாவாகவும் தோன்றுகின்றது. கயிறு பாம்பாகத்தோன்றுங்காலத்து கயிறு தோற்றுவதற்கேதுவான சக்தி, பாம்பு ஆக மூன்றுள்ளன. அது போல் ஆத்மா, மாயை, ஜகத் ஜீவ பரங்கள் ஆக மூன்றுள்ளன. கயிறும் சக்தியும் பாம்பும் வியவகாரத்தில் மூன்றாக இருப்பினும், உள்ளது கயிறு ஒன்றேயாம். கயி

றுள்ள இடத்திலேயே சக்தியிருக்கிறது; அச்சக்தி உள்ள விடத்திலேயே பாம்பிருக்கின்றது. அவ்வாறே ஆத்மா வுள்ள விடத்தில் மாயை இருக்கின்றது. மாயையிலேயே ஜகத் ஜீவ பரங்களிருக்கின்றன. ஆதலால், மாயாசக்தி ஆத்மாவைக் காட்டிலும் வேறல்ல. இந்திர ஜாலவித்தை யானது, அவ்வித்தையைக்கற்ற வித்வானைத்தவிர வேறி ல்லை. ஜகத்ஜீவ பரங்களுக்குக் காரணமாகிய மாயாசக்தி யும், சக்தனாகிய ஆத்மாவைக்காட்டிலும் வேறன்று. இந்திர ஜாலவித்தை செய்யும்போதும்செய்யாதபோதும் வித்வான் இருப்பதுபோல், மாயாசக்தி இருக்கும்போதும் இல்லாத போதும், ஆத்மாவிற்கும் இந்திரஜாலவித்தை பொய். வித்வானே மெய். அதுபோல், மாயையே பொய். ஆத்மாவே மெய் என்று அறியக்கடவாய்.

அர்ஜுனன்:—மாயை பொய்யானால், உலகம் தோன் றிக்கொண் டிருக்கின்றதே! பொய்யென்று எப்படிச் சொல்லலாம்?

கிருஷ்ணன்:—அர்ஜுனா! கானல் நீர் தோன்றிக்கொண் டிருக்கிறதல்லவா? அந்நீர் சத்தியமா, அல்லது அசத் தியமா? சத்தியமானால், ஸ்நானபானாதிகளுக்கு உபயோகப் படவேண்டும், அசத்தியமானால், நீ சொல்வதுபோல் அது தோன்றாம லல்லவோ இருக்கவேண்டும்! எது, சத்து மல்லாமல் அசத்துமல்லாமல் இருக்கிறதோ, அது கடைசி யில் இல்லாமற் பொய்யாகவே முடியும். ஜகத்ஜீவ பரங்கள் தோன்றியபோதிலும் அவைகள் சத்தியமல்ல, ஆத்மாவே சத்தியமாகிய பொருளென்று அறியக்கடவாய்.

அர்ஜுனன்:—ஓ சுவாமீ! கானல்நீர் தோற்றமாத் திரமாயிருந்து பொய்யாய்ப்போகிறது. மாயையாலுண் டான உலகம் தோன்றிக்கொண்டிருப்பதுடன் அதிலுள்ள சுகதுக்கங்களை அனுபவத்திலும் காண்கின்றோமே? அதை

எப்படிக் கானல்நீர்போல் அசத்திய சென்று சொல்லலாம்.

கிருஷ்ணன்:—சொப்பனத்தில் காணும் காட்சியை, சொப்பன உலகமென்று சொல்லப்படும். சொப்பன உலகத்திற்கு ஆதாரம் மனமேயாம். மனதினால் விளைந்த சொப்பன உலகில் சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்தங்கள் அனுபவிக்கப் படுகின்றன. அதெப்படியென்றால், ஓர் காதலன் தான் நெடுநாளாய் ஆசைகொண்ட காதலியை சொப்பனத்தில் கண்டு, அவளை ஆலிங்கனம் செய்து அவளுடன் இன்ப சுகத்தை அனுபவிக்கின்றான். அப்போது அவன் அந்தக் காதலியையும் அவளாலுண்டான சுகத்தையும் சத்தியமென்றே நினைக்கின்றான். சொப்பனம் நீங்கி விழித்தவுடன் அவ்வளவும் பொய்யாய்ப் போகிறதைக் கண்டு, அக்காதலன் மனம நொந்து அவஸ்தைப் படுகின்றான். உலகானுபவமும் இவ்வாறே. எப்படி சொப்பன உலகு ஜாக்கிர உலகை நோக்கப் பொய்யாயிற்றோ, அது போல், ஜாக்கிர உலகில் ஆத்மாவை நோக்கப் பொய்யாம். கயிற்றில் பாம்பும், கானல்நீரும், சொப்பன உலகும் அந்தந்தக் காலத்தில் உண்மையாயும் அனுபவமாயும் இருந்தாலும், அந்தக் காலங்களில் கூட அவைகள் எப்படிப் பொய்யோ, அப்படியே, இந்த உலகமும் உண்மைபோல் தோன்றினாலும் அனுபவத்திற்கு வந்தாலும பொய்யே.

அர்ஜுனன்:—இப்பொழுது நீர் சொல்லிய விஷயத்தைப் பார்த்தால் மனுஷ்யர்களில் யாரும் இந்த மாயையை ஜயிக்கமாட்டார்கள்போல் தோன்றுகின்றது.

ஜ்ஞானேந து தத்ஜ்ஞானம் யேஷாம் நாஶித மாத்மநஃ
தேஷா மாதித்யவ ஜ்ஞானம் ப்ரகாஶயதி தத்பரம். 16.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! அப்படிச் சொல்லவேண்டாம். மாயையை ஜயிப்பது, மிகவும் கஷ்டசாத்தியமே. ஆயினும், எல்லோரும் அப்படி ஜயிக்கமாட்டார்களென்று

சொல்லலாகாது. மாயையை ஜயிப்பதற்கு புத்தியென்னும் சக்தி ஒன்றைப் பகவான் பிரதி புருஷனுக்கும் கொடுத்திருக்கின்றாரென்று இதற்கு முன் சொல்லியிருந்தேனல்லவா? அதை அநேகர்கள் சரியாய் உபயோகப் படுத்தாவிடினும் அங்கங்கே ஒருவராயினும் அதைச் சரியாய் உபயோகப் படுத்திக்கொண்டு வருவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ராகத்வேஷாதிகள் நீங்கிவிடும். எப்பொழுது அவைகள் நீங்கிவிடுகின்றனவோ, அப்பொழுது அவர்களுக்கு ஞானோதயமாகின்றது. அப்படிப்பட்ட ஞானம் எப்பொழுது உண்டாகின்றதோ, அப்பொழுது சூர்யோதயமானவுடனே அதுவரையில் இருளில் திருஷ்டிக்குக் காணப்படாத வஸ்துக்களெல்லாம் எப்படி ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றனவோ, அதுபோல், அதுவரையில் அநாதியாய் பிரவர்த்தித்திருக்கிற ஆகாம்மியத்தினால் உண்டாகிய சஞ்சிதகர்மக் கூட்டங்களாகிய அஞ்ஞானமானது எந்த ஞானத்தினாலே, அதாவது, ஆத்மசொரூப விஷய ஞானத்தினால், (பஞ்சுப்பொதிகளில் நெருப்புப்பொறி பட்டவுடனே பொதிகளெல்லாம் பஸ்மமாவதுபோல்) நசிக்கப்பட்டதோ, அந்த அஞ்ஞானம் நீங்கினவர்களுடைய பரிபூர்ணமானதும், சுபாவமானதுமாகிய அந்த ஞானமானது, சூர்யனுடையப் பிரகாசம் போல் சகலத்தையும் பிரகாசிப்பிக்கின்றது. அப்பொழுது அஞ்ஞானாந்தகாரத்தினால் மனோதிருஷ்டிக்குக் காணப்படாமலிருந்த பரப்பிரம்ம சொரூபம் ஸ்பஷ்டமாய்க் காணப்படும். அப்படிக் காணப்படுவதனால், ஸம்சாரபந்தம் விமுக்தியாகும். பூர்வத்தில் பிரம்மதேவர், நாரதருக்குப் பரப்பிரம்ம சொரூபத்தைத் தெரிந்துகொள்வதற்காகப் பிரயத்தினப்பட்டு அதன் நிமித்தமாய் அநேக தபசுமுதலாகியவைகளைச் செய்து கொண்டிருக்கும் முநீந்திரர்களாயிருந்த

போகினும், துர்வாதம் செய்துகொண்டு அஞ்ஞானமுள்ளவர்களாய் இருக்கும்வரையில் அந்த பகவத் சொரூபத்தைக் காணமாட்டார்களென்றும், அப்படியல்லாமல், இந்திரிய நிக்கிரஹமுண்டாய் நிர்மல மனதுடையவர்களாய் எப்பொழுது ஆகின்றார்களோ அப்பொழுது அந்த பகவத் சொரூபத்தைப் பார்ப்பார்களென்றும் சொல்லியிருக்கின்றார்.

தத்புத்தய ஸ்ததாத்மாந ஸ்தந்நிஷ்டா ஸ்தத் பராயணா:
கச்சந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூத கல்மஷா: 17.

எந்த பரப்பிரம்ம தத்துவம் ஞானத்தினுல் பிரகாசிக்குமோ, அப்படிப்பட்ட பரப்பிரம்ம சொரூபத்தில் நிச்சய புத்தியுடையவர்களும், பரப்பிரம்மமே ஆத்மாவென்று அறிந்தவர்களும், சமஸ்தகர்மங்களையும் விட்டுக் கேவலமாகிய பரப்பிரம்மத்துடன் கலந்திருப்பவர்களும், பரப்பிரம்ம சொரூபமே தாமென்று இருப்பவர்களும், சம்சாரத்திற்குக் காரணமாயிருக்கும் பாபம் முதலாகிய தோஷங்களை ஞானத்தினுல் நசிக்கச் செய்தவர்களும் மறுபடியும் சம்சாரத்திற்கு வராத ஸ்தானமாகிய மோக்ஷத்தை அடைவார்கள்.

வித்யா விநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி
ஶுநி சைவ ஶ்வபாகேச பண்டிதா ஸ்ஸமதர்ஶிந: 18.

அஞ்ஞானத்தை ஞானத்தினுல் நசிக்கச்செய்த பிரம்மநிஷ்டர்களை எப்படி அறியலாம், அவர்கள் சமஸ்த பதார்த்தங்களினும் எப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாயிருப்பார்களென்று கேட்கின்றாயோ அதைச் சொல்லுகின்றேன் கேள். ஆத்மஞானமும் சாந்தமும் சத்வகுணப் பிரதானமுடைய (பண்டித) பிராம்மணர்களிடத்திலும், ரஜோகுணப் பிரதானமுடைய கோக்களிடத்திலும், தமோ

குணப் பிரதானமுடைய யானைகள், நாய்கள் சண்டாளர்கள் முதலாகியவைகளிடத்திலும், ஸத்வாதி குணங்களினுலும் தத்கிருத சம்சாரத்தினுலும், ராஜச தாமச தத்சம்பந்தமாகிய சம்சாரத்தினுலும் பூர்த்தியாய் பற்றுதலில்லாமல் ஸர்வத்திலும், சமமாயும் ஏகமாயும் விகாரமில்லாததுமாகிய பிரம்மசொரூபத்தில் சாக்ஷாத்கரிக்கும் ஞானிகள் சமபுத்தி யுடையவர்களா யிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களே பண்டிதர்கள் எனப்படுவார்கள்.

இஹைவ தைர்ஜித ஸ்வர்கோ யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மந:
நிர்தோஷம் ஹி ஸமம்ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே
ஸ்திதா:. 19

அப்படி யாரொருவருக்கு, இந்தப் பிரபஞ்சத்தில் பிபீலிகாதி பிரம்ம பரியந்தமுள்ள சமஸ்த ஆத்மாக்களெல்லாம் சமமென்கிற பாவத்தில் மனது நின்றதோ அவர்களே, கர்மானுஷ்டான காலத்திலேயே ஸம்சாரத்தை ஜயித்தவர்கள். அதாவது, மாயையை உதறிவிட்டவர்களாகின்றார்கள். ஏனென்றால், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பிபீலிகாதி பிரம்மபரியந்தம் வரையில் ஸமஸ்த ஜந்துக்களிலும் அந்தப் பரமாத்மாவே வியாபித்திருக்கின்றான். அப்படிப்பட்ட பரமாத்மா தோஷரஹிதனுதலால், சமஸ்த ஜந்துக்களையும் பரப்பிரம்ம சொரூபமாயும் தோஷ ரஹிதமாயும் யார் எப்பொழுது தெரிந்துகொள்ளுகின்றார்களோ அப்பொழுது அவர்கள் மாயையை உதறிவிட்டவர்களாகின்றார்கள். அப்பொழுது அஞ்ஞானம் நசித்தவர்களாய்த் தாமும் அந்த பரப்பிரம்ம சொரூபமாகவே பிரகாசிப்பார்கள். அதாவது, பரப்பிரம்மத்திலேயே சேர்ந்திருக்கின்றவர்களாகின்றார்கள் என்பதாம்.

அர்ஜுனன்:—ஈசுவாமி! அப்படி அஞ்ஞானம் நசித்தவர்கள் பரப்பிரம்ம சொரூபர்களாவர்களென்று சொன்னீ

ரல்லவா? அப்படிப்பட்டவர்களின் லக்ஷணம் எப்படிப் பட்டது.

நப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம்
ஸ்திரபுத்தி ரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்திதஃ. 20

கிருஷ்ணன்:—அர்ஜுநா! அப்படி பிரம்மத்துடன் சேர்ந்திருப்பவனே அதாவது, பிரம்ம சொரூபத்தை அறிந்தவனே பிராம்மணன். அப்படிப்பட்டவனுடைய லக்ஷணம் எப்படிப்பட்டதென்றால், இஷ்டத்தை அடைந்த போது சந்தோஷமும், அநிஷ்டத்தை அடைந்தபோது வியசனமும் படுகிறதில்லை. இப்படிப்பட்ட பிரம்ம நிஷ்டனுக்கு இஷ்ட அநிஷ்டங்கள் எப்படி யுண்டாகுமென்றாலோ, அவனுக்கு இஷ்டமானதும் அநிஷ்டமானதும் இல்லையென்பது நிச்சயம். ஆனால், பிராரப்தகர்மமானது அவனை இந்தத் தேஹமுள்ளவரையில் விடாது. அதை அவன் அநுபவித்தே தீரவேண்டும். அப்படி அநுபவிக்கும் விஷயத்தில், அந்தத் தேஹத்திற்கு உண்டாகிற இஷ்ட அநிஷ்டங்களை அவன் அநுபவிப்பதேயில்லை. ஆனால், அவனே அநுபவிப்பவனைப்போல் பிறருக்குக் காணப்படுவான்,

அர்ஜுநன்:—ஓ சுவாமி! அதை நன்றாய் விவரித்துச் சொல்லவேண்டும்.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! விவாஹம் செய்துகொள்வதற்காக ஊர்கோலத்துடன் மாமியார் வீட்டுக்குச் செல்லும்போது சந்தோஷமும், தன்னைக் கொலை செய்வதற்காகக் கொலையாளிகள் கொண்டுபோகும்போது வியசனமும் இல்லாமல் ஒரேமனதாய் இருக்கப்பட்டவனே சுக துக்கங்களில் சமபுத்தி யுடையவனென்று சொல்லப்படுவான்.

அர்ஜுனன்:—ஐயையோ! அப்படிப்பட்ட சமயத்திலும் மனோதிருடமா யிருக்கப்பட்டவர்களும் இருக்கின்றார்களா?

கிருஷ்ணன்:—ஆஹா! இருக்கின்றார்கள். ஆனால், அப்படியிருப்பவர்கள் மிகவும் அரிது. அப்படியிருந்தவர்களில் ஒருவரை உனக்குத் திருஷ்டாந்தமாய்ச் சொல்லுகின்றேன் கேள். இதுவரையில் ஓர் விஷயமாய் உனக்கு (அ2, சு 69-ல்) ஜடபாதனை திருஷ்டாந்தமாய்க் காட்டி ஒரு கதை சொல்லி யிருந்தேனல்லவா? அந்த ஜடபாதனுடைய தாயின் சக்காளத்திப் பிள்ளையானவன் ஜடபாதனை வயலுக்குக் காவலாய் வைத்தான். அவ்விடத்தில் ஜடபாதன் சமாதிநிஷ்டனாயிருக்கும்போது அந்தப் பட்டணத்தை ஆளும் விருஷலராஜன் சந்தானத்திற்காகக் காளிகாதேவிக்குப் பலிகொடுக்க நியமித்திருந்த நரபசுவை அவனது சேவகர்கள் காளி கோயிலுக்குக் கொண்டு போகும்போது அந்த நரபசு அவர்களை ஏமாற்றித் தப்பித்துக்கொண்டோட அப்பொழுது சேவகர்கள் ஓடோடியும் தேடி அவனைக் காணாததால், சமீபத்திலுள்ள கழனியில் சமாதி நிஷ்டனாயிருக்கும் இந்த ஜடபாதனைப் பலி கொடுப்பதற்காகப் பிடித்துக்கொண்டுபோய் அப்பியங்கன ஸ்நானாதி கிருத்தியங்களைச் செய்வித்துக் காளிக்கெதிரில் உட்காரவைத்தார்கள். அப்பொழுது விருஷலராஜன் பாதனைப் பசுவாய்ப் பலி கொடுப்பதற்கு பிரயத்தனப்பட்டு உறையிலிருக்கும் கட்கத்தை உருவி பலியிடும் சமயத்தில் இப்படிப்பட்ட மஹானுபாவனைத் தனக்குப் பலிகொடுக்க எண்ணின அந்த விருஷலராசன்மீது காளிகாதேவி கோபாவேசங்கொண்டு அந்த ராஜனைப் பரிவாரங்களுடன் ஸம்ஹாரம் செய்துவிட்டாள். ஆதலால், இவ்வாறான மனோதிருடமா யிருக்கப்பட்ட மஹானுபாவர்களும் இருக்

கின்றார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்கள் இந்தப் பிர பஞ்சத்தில் கிடைப்பது மிகவும் அருமை.

பாஹ்யஸ்பர்ஶேஷ்வஸக்தாத்மா விந்த த்யாத்மநி யத்ஸுகம்
ஸப்ரஹ்மயோகயுக்தாத்மா ஸுக மக்ஷய மஶ்நுதே, 21

ஆதலால், மஹானுபாவர்கள் பாஹ்ய விஷயத்தில் ஆசை யில்லாதவர்களாய் அதாவது, கண்கள் மூக்கு வாய் செவிகள் தேஹசர்மம் என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் சப்தாதி விஷயங்களில் ஓடும்போதும், வாய் கைகள் கால்கள் குதம் உபஸ்தம் என்னும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் தம்தம் வியாபாரங்களில் ஓடும்போதும் அப்படிப்பட்ட விஷயங்களில் எவ்வித மனோவிகாரங்களையும் அடையாமல், தமது மனோ திருஷ்டியினால் அந்தப் பரப்பிரம்ம சொரூபத்தையே தரிசித்துக்கொண்டே ஆனந்தித்திருப்பார்கள். அவர்களே பிரம்ம சமாதியில் இருக்கப்பட்டவர்களாவார்கள். என்றால், அந்தப் பரப்பிர்மத்தில் ஐக்கியமாய் பிரம்மாநந்தத்தை அடைந்துகொண்டிருப்பார்களேயன்றி பாஹ்ய விஷய சுகங்களில் எவ்வளவேனும் ஆனந்திக்கமாட்டார்கள்.

யேஹி ஸம்ஸ்பர்ஶஜா போகா துஃகயோநய ஏவ தே
ஆத்யந்தவந்தஃ கௌந்தேய ! நதேஷு ரமதே புதஃ. 22.

கிருஷ்ணன்:—ஹே குந்திபுத்ரா! இந்த பாஹ்ய (வெளி) விஷய சம்பந்தங்களால் உண்டாகின்ற சுகங்கள் எவையோ, அவை துக்கஹேதுக்களே. அஃதெப்படியென்றால், ஒருவன் மிகவும் ருசிகரமாகிய பதார்த்தங்களைப் புஜித்து ஆனந்தித்துக்கொண்டிருப்பான். அந்தப் பதார்த்தம் கிடைக்காமல் அருசிகரமாகிய பதார்த்தங்கள் கிடைத்தபோது தன் மனதுக்கு வியசனம் உண்டாகாமற் போகமாட்டா. அந்தருசிகரமாகிய பதார்த்தங்களை அனு

பவிக்காமலே இருந்தபோதிலும், அல்லது, அது கிடைத்த போது புஜித்தாலும், அவைகள் தனக்கு எப்பொழுதும் கிடைக்கத்தக்கதல்ல என்னும் எண்ணத்துடன் அவைகளின்மீது அதிக ஆசையில்லாதவனுயிருக்கும்பக்ஷத்தில், அந்தப் பதார்த்தங்கள் கிடைக்காவிட்டாலும் அவன் மனதிற்கு அப்படிப்பட்ட வியசனம் உண்டாகமாட்டா. அது போல், மற்ற எல்லா இந்திரிய விஷய சுகங்களும் சாசுவதமல்லவென்றும், அது கிடைக்கும் வரையில் மாத்திரம் சுகத்தைத் தந்து, கிடைக்காதபோது வியசனத்தை உண்டாக்குமென்றும் சொல்லப்படும். ஆதலால், ஞானியானவன் அப்படிப்பட்ட விஷயங்களில் ரமிக்கமாட்டான். அந்த விஷய சுகங்களை பிராரப்த கர்மானுசாரமாய் அனுபவித்துக்கொண்டிருந்தாலும் அப்போதைக் கப்போது விரக்திமார்க்கத்தை அனுஷ்டித்து இவையெல்லாம அநித்யமென்றும் கடைசியில் வியசனத்தையே உண்டாக்குமென்றெண்ணி அவைகளின்மீது மிகவும் ஆசையில்லாதவனாய் இருக்கவேண்டும்.

அர்ஜுனன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! எவனொருவன் ருசிகரமாகிய பதார்த்தத்தைப் புஜித்து ருசியறிகின்ருனே மறுபடியும் அதனையே புஜிப்பது அவனுக்கு ஸஹஜமாயிருக்கின்றது. அதுபோல் ப்ரதி இந்திரிய விஷய சுகத்தை அனுபவிக்கப்பட்டவன் அதிலுள்ள ருசியை அறிவது ஸஹஜமான விஷயமாயிருக்கின்றது. அப்படியிருக்க, ருசியறியாமல் விரக்தி அடைந்திருப்பது பஹு கஷ்டசாத்தியமல்லவா?

ஶக்நோதீஹைவ ய ஸோடும் ப்ராக் சரீரவிமோக்ஷணாத்
காமக்ரோதோத்பவம் வேகம் ஸயுக்த ஸ்ஸஸுகீ நர꞉. 23.

கிருஷ்ணன்:—ஆம், அப்படிச் செய்வது மிகவும் கஷ்ட சாத்தியமே. எல்லாராலும் அவ்வாறு செய்ய சாத்

தியப்படமாட்டாது. பிரதிபுருஷனும் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவித்திருக்கும் வரையில் காமக்குரோதாதிகளினால் பீடிக்கப்பட்டுக்கொண்டே யிருப்பான். அப்படிப்பட்ட காமக் குரோதாதிகளினுடைய வேகத்தை எவன் சஹிக்கின்றானோ, அதாவது விடுகின்றானோ அப்படிப்பட்டவனுக்கே அவ்வாறு செய்வதற்கு சாத்தியமாகுமேயொழிய மற்றவர்களுக்குச் சாத்தியப்படமாட்டா. ஆதலால், அவனே வாஸ்தவமான சுகியாவன். விஷயசுகங்களை அனுபவிக்கப்பட்டவன் சுகியல்லன். ஆனால், அப்படியிருப்பது சம்பூரணமாகிய யோகபல முடையவர்களுக்கே யொழிய சொல்ப யோகியினால் சாத்தியப்படமாட்டாது. அஃதெப்படி யென்றால், ஒருநதி பூரணமாய் ஓடிக்கொண்டிருக்கும்போது அந்த ஓட்டத்தில் பலயீனனாயுள்ள ஒருவன் இறங்கினால், அவன் அதில் நிலைக்காமல் எப்படி அடித்துக்கொண்டு போகப்படுவானோ அதுபோல், யோகபலமில்லாதவனுடைய மனது விஷயங்களால் இழுக்கப்படும். யோகசித்தியை அடைந்து திருடசித்தனுயிருந்தால் (அந்த நதி ஓட்டத்தை யானைசட்டைசெய்யாமல் எவ்வாறு கடந்து செல்லுமோ அதுபோல்) இந்திரிய விஷயங்களினுடையவும் காமக் குரோதாதிகளினுடையவும் பலத்தை எவ்வளவேனும் சட்டைச்செய்யாமல் அவைகளினால் தன்மனதைச் சலிக்கவிடாமல் நிறுத்துவான். ஆனால், அப்படிப்பட்ட யோகபலம் ஒரே விசையாய் உண்டாகமாட்டாது. பின் எப்படியென்றால், யோகாப்பியாசியானவன் ராகமோஹாதிகளையும், காமக்குரோதாதிகளையும் அடக்கிக்கொண்டே வர கிரமக்கிரமமாய் யோகபலம் உயர்ந்துகொண்டு கடைசியில் சம்பூரண யோகசித்தியை அடைவான். அப்படிப்பட்ட யோகசித்தி எப்பொழுது சம்பூர்ணமாகின்றதோ அப்பொழுது (பெரிய மச்சங்கள் வலையில் அகப்பட்டுக்

கொண்டபோது, அந்த வலையை படாப்பஞ்சாய் எப்படிக் கிழித்துக்கொண்டோடுமோ அதுபோலவும், மிகவும் பலமுடைய மிருகங்கள். உறிவலையில் அகப்பட்டுக்கொண்டபோது அந்த உறிக்கயிற்றை தமது பலத்தினால் அறுத்துக் கொண்டு எப்படி ஓடிவிடுமோ அதுபோலவும்) காமக்குரோதாதிகளினால் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு எப்பொழுதும் ஸன்மார்க்கத்திலேயே பிரவர்த்தித்துக்கொண்டிருப்பான் (நடந்துகொண்டிருப்பான்.) அப்படிச் சம்பூர்ணமான யோகசித்தியை அடையாதவனுடைய கதி என்னவென்றால், பலமில்லாத சிறிய மச்சங்களாயினும் மிருகங்களாயினும் வலையிலும், உறியிலும் அகப்பட்டுக் கொண்டபோது அவைகளை அறுத்துக்கொண்டோடச் சக்தியில்லாமல் அந்த வலையிலும் உறியிலும் அகப்பட்டுக் கொண்டு எப்படி மரணமடைகின்றதோ அதுபோல், சம்பூர்ணமான யோகபலமில்லாத சொல்பமாத்திர யோகி காமக்குரோதாதிகளை ஜயிக்கும் சக்தி போதாமல் அவைகளுக்குட்பட்டுப் பத்தனாகின்றான். (கட்டுப்பட்டவனாகின்றான்.)

அர்ஜுனன்:—யோகத்தை அப்பியசிக்கப்பட்டவன், யோகபலத்தினால் கிரமக்கிரமமாய் உயர்த்திக்கொண்டே வர வர சில நாளைக்குள் சம்பூர்ணமான பலத்தை அடைவானென்று சொன்னீரல்லவா? அதற்குக் காரணமென்ன? யோகமென்றால், இந்திரிய நிக்கிரஹமுண்டாகிக் காமக்குரோதாதிகளை அடக்கிச் சகல கர்மங்களையும் யதாவிதியாய் அனுஷ்டித்துக்கொண்டு நிஷ்காமனாய் இருப்பதேயல்லவா? அவ்வாறே யோகியாகவேண்டுமென்று எண்ணிய பிரதிபுருஷனும் சுலபமாய் அனுஷ்டிக்கலாமே. அப்படி எப்பொழுது அனுஷ்டிப்பதற்கு பிராரம்பிக்கின்றானோ அப்பொழுதே யோகியாகின்றானல்லவா? அப்படிப்பட்ட

வனுக்கு அந்த யோகத்தின் ஸம்பூரண பலம் உடனே உண்டாகாமல் அநேககாலம் வரையில் அப்படி அனுஷ்டித்துக்கொண்டே வர கிரமக்கிரமமாய் உயர்ந்து பிறகு சம்பூரணபலம் உண்டாவதற்குக் காரணமென்ன ?

கிருஷ்ணன்:—ஓ வேற்ா! நீ அப்படி எண்ணிக்கொண்டிருக்கின்றாய் போல் தோன்றுகின்றது. புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டதுபோல், ஓர் யோகியைப் பார்த்துத் தானும் அப்படியே யோகியாக வேண்டுமென்றும் அந்த யோகி நடிப்பதுபோல் தானும் நடித்த மாத்திரத்திலேயே யோகசித்தி உண்டாகுமென்றும் எண்ணிக்கொண்டாய் போலத் தோன்றுகின்றது. அப்படி எவ்வளவேனும் உண்டாகமாட்டாது. இந்திரிய விஷயங்களினுடையவும், காமக்குரோதாதி விஷயங்களினுடையவும் நிரோதம் மனோபலத்தினால் செய்ய வேண்டியதாயிருக்கின்றது. அப்படிப்பட்ட மனோபலமென்றாலோ, அப்பியாசத்தினால் குருமுகமாய் அறிந்துகொண்டு (யானைகளையும், புலிகளையும் கரடிகளையும் நாளாவட்டத்தில் வசப்படுத்திக்கொள்வதுபோல்) வாயுதாரணையை கிரமக்கிரமமாய் வசப்படுத்திக்கொண்டு வரவேண்டும். ஒரே தடவை உண்டாகத்தக்கதல்ல. அஃதெப்படியென்றால், ஓர் அணுப்பிரமாண அக்கினியைக் கொண்டுவந்து ஒரு கந்தைத்துணியிலாவது, அல்லது வைக்கோலிலாவது வைத்துச்சுற்றி ஊதினால் அது எரிகின்றதல்லவா ? அதன்மேல் உலர்ந்த சிறிய சுள்ளிகளை வைத்தபோது அந்தத் தீ கொஞ்சம் அதிகமாகின்றதல்லவா ? அப்போது அதன்மீது விறகுகளைச் சேர்த்துக்கொண்டே வர, பிறகு அந்தத்தீ பிரபலமாகின்றதல்லவா ? அப்போது அதன்மீது எவ்வளவு விறகுகளைப் போட்டபோதிலும் அவ்வளவுக் கவ்வளவு அந்த அக்கினி ஜ்வலித்து வாடையை வீசிக்கொண்டு அக்கி தணியாதல்

லவா ? முதலில் கொண்டுவந்த அணுப்பிரமாண அக்கினியைப் பெருத்த தியாக்கி ஜ்வலிக்கச் செய்யவேண்டுமென்று எண்ணினவன் இப்பொழுது நான் சொல்லியது போல் கிரமக்கிரமமாய் விருத்தி செய்வதற்குப் பதிலாய் அந்த அணுமாத்திர அக்கினியின்மீது ஒரே விசையாய் ஒரு சுமை விறகுகளைப் போட்டபோது அது எரிந்து ஜ்வாலையை உண்டாக்குமா ?

அர்ஜுனன்:—அது ஜ்வாலையை உண்டாக்கமாட்டாது. அதற்குப் பதிலாய் அந்த அக்கினியை தணிக்கச் செய்யும்.

கிருஷ்ணன்:—இப்பொழுது நான் சொல்லியதுபோல் கிரமக்கிரமமாய் ஜ்வலிக்கச்செய்து அதன்மீது ஒரு சுமை விறகுகளைப் போட்டபோது எப்படியாகும் ?

அர்ஜுனன்:—அப்பொழுது இன்னும் கொஞ்சம் ஜ்வாலை அதிகரிக்கும்.

கிருஷ்ணன்:—இந்த யோகாப்பியாசமும் அப்படிப்பட்டதேயென்று அறியக்கடவாய். அதாவது, யோகாப்பியாசத்தினால் இந்திரியங்கள் தமக்குத்தாமாகவே வசமாகின்றன. அப்பொழுது மனதினுடைய பலம் கிரமக்கிரமமாய்க் குறைந்து கடைசியில் சூன்னியமாய்விடும். அப்படிப்பட்ட ஸ்திதிக்கு எப்பொழுது ஒருவன்வருகின்றானோ அப்பொழுது அவன் காமக்குரோதாதிகளை ஜயிக்க சக்தனாகின்றான். சமஸ்த பாபங்களுக்கு மூலாதாரமாயிருக்கும் காமக்குரோதங்களை ஜயித்தாலல்லொழிய சம்பூரணனான யோகியாகமாட்டான். யோகம் சம்பூரணமானவனுடைய ஸ்திதி எப்படி இருக்கவேண்டுமென்றால், "ப்ராணே கதே யதா தேஹ: ஸுகதுகே ந விந்ததி, ததா சேத் ப்ராணயுக்தோபி ந கைவல்யாஸ்ரயோ பவேத்" பிராணன் போன

பிறகு ஸ்திரீகள் ஆலிங்கனம் செய்வதனாலும், புத்திரன் தகனம் செய்வதனாலும் எப்படி மனோவிகார முண்டாகிற தில்லையோ, அதுபோல் உயிரோடிருக்கையிலேயே தன் தேஹ விஷயமாயுண்டாகும் சுகதுக்கங்களிலும் விகார மடையாம லிருக்கவேண்டும். அர்ஜுனா! இன்னும் சொல்லுகின்றேன் கேள். ஆசை எப்படிப்பட்டதென்றால், தனக்கு எது சுகமென்று காணப்படுகின்றதோ, அந்த வஸ்துக்களைப் பார்ப்பது, கேட்பது, முதலியவைகளால் உண்டாகும் விருப்பு, கோபம் எப்படிப்பட்டதென்றால், தனக்கு எது துக்கத்தை உண்டாக்குகின்றதோ அந்த வஸ்துக்களைப் பார்ப்பது, கேட்பது, நினைப்பது முதலிய வைகளால் உண்டாகும் வெறுப்பு, மனத்துடிப்பு, இது காமத்தினால் உண்டாவது, கோபத்தினால் உண்டாவது என்று இருவகைப்படும். கோபத்தைக் குறித்து முன் சொல்லப்பட்டது. இப்பொழுது காமத்தினால் உண்டா வதைக்குறித்துச் சொல்லப்படும். அதாவது, காமத்தி னால் உண்டாவது மயிர்க்கூச்செறிவது, கண்கள் முகம் இவைகளில் மலர்ச்சியுண்டாவது, கண்களில் ஆநந்தபாஷ்ப முண்டாவது, புன்சிரிப்புண்டாவது, இப்படிப்பட்டவை களினால் மனதிலுண்டாகும் படபடப்பு, அதாவது, வேர்ப் பது உதட்டைக் கடிப்பது கண்கள் சிவப்பது, வாய் குளறு வது இவைகளினால் மனதிற்குப் படபடப்புண்டாகும். சகிப்பது; இது எப்படிப்பட்டதென்றால், மேற்கண்ட காமக்குரோதங்களினால் உண்டாகும் மனத்துடிப்பு. அது உண்டானவுடனே, அதற்குட்படாமல் விவேகத்தினால் அடக்குவது. அர்ஜுனா! பசுபக்ஷியாதி தேகத்தை அடைந்தால் காமக்குரோதாதிகளை அடக்குவது சாத்திய மல்ல; ஆகையால், இந்த மனுஷ்ய தேகத்திலிருக்கையி லேயே அடக்கவேண்டும்.

யோந்தஸ்ஸுகோ ந்தராராம ஸ்ததாந் தர்ஜ்யோதிரேவ யஃ
ஸயோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோ திகச்சதி. 24

காமக்குரோதங்கள் ஞானிக்கு நித்திய வைரியென்றும், ஞானம் அவைகளினால் மூடப்பட்டிருக்கின்றதென்றும் இதுவரையில் (அ - 3, சு - 37, 38 - ல்) சொல்லியிருக்கேன். ஆதலால், எவனொருவன் அப்படிப்பட்ட காமக்குரோதங்களை ஜயிப்பதற்குத்தக்க சம்பூரணமான யோகத்தை எப்பொழுது அடைகின்றானோ, அப்பொழுது அவனுடைய ஞானம், சத்துரு ரஹிதமும் மாயா ரஹிதமும் உண்டாய் நிர்மலமாய் பிரகாசிக்கும். அப்படிப்பட்ட நிர்மல ஞானம் எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுது அந்த யோகி இந்தத் தேகத்திலேயே பிரம்ம சொரூபத்துடன் இருந்தவனாய் மோக்ஷத்தை அடைவான். அதாவது "ததேவ ஸந்தஸ்தது தத்பவாமஃ" பிரம்மாத்மானுஸந்தானம் செய்துகொண்டு பிரம்மத்தை அடைவான் என்னும் சுருதியின் பிரகாரம் பிரம்மநிஷ்டன் இருப்பான்.

அர்ஜுநன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தீ! இப்பொழுது நீர் சொல்லியவைகளையெல்லாம் சரியாய் ஆலோசித்துப் பார்க்குமளவில் எவனாயிருந்தாலும் சரி, எந்த ஆசிரமத்திலிருந்தாலும் சரி, 'பிரம்ம பதவியை அடைவதற்கு அருஹனாயிருப்பதாய் எனக்குத் தோன்றுகின்றது. அப்படி எனக்குத் தோன்றும் இந்த அம்சம் சரியா, சரியல்லவா சொல்லும் கிருஷ்ணா?

லபந்தே ப்ரஹ்மநிர்வாணம் ம்ருஷயஃ க்ஷீணகல்மஷாஃ 25
சிந்நத்வைதா யதாத்மாந ஸ்ஸர்வபூதஹிதே ரதாஃ.

கிருஷ்ணன்:—ஆஹா! உனக்குத் தோன்றிய அபிப்பிராயம் சரியே. ஆனால், அந்தந்த ஆசிரமத்தில் அவரவர்களுக்குத் தாரதம்மியமும், நாமபேதமும் உண்டு. அஃ

தெப்படியென்றால், இந்த உலகத்தில் பிரம்மசர்ய கிருஹஸ்த வானப்பிரஸ்த யதியாசிரமமென்று நான்கு ஆசிரமங்கள் உண்டல்லவா? அதில், ஸ்ரீ சுகரைப்போல் பிரமசர்யத்திலிருந்தே முமுக்ஷுவாய் மற்ற ஆசிரமத்தை அடையாமல் யோகத்தை அப்பியசித்து முக்தர்களானவர்கள் சிலரும், ஜனக சக்கிரவர்த்தியைப்போல் கிருஹஸ்தாசிரமத்திலிருந்தே நிஷ்காம கருமயோகத்தை அனுஷ்டித்து முக்தர்களானவர்கள் சிலருமாயிருக்கின்றார்கள். இவ்விரண்டு ஆசிரமங்களையும் யதாவிதியாய் நடத்தி முமுக்ஷுக்களாய் வானபிரஸ்தாசிரமத்தை அவலம்பித்து முக்தர்களானவர்கள் சிலருமா யிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட இவர்களெல்லோரும் ரிஷிகளென்று சொல்லப்படுவார்கள். இந்த மஹாரிஷிகள் மனோநிக்கிரஹமுடையவர்களும், ஸம்சய ரஹிதர்களாயு மிருக்கின்றார்கள். ஸம்சய ரஹிதர்களென்றால்; தம்மில் இருக்கும் ஜீவாத்மாவிற்கும் மற்ற சமஸ்த ஜந்துக்களிலும் இருக்கும் ஜீவாத்மாக்களுக்கும் யாதொரு பேதமில்லையென்றும், இவையெல்லாம் அந்தப் பரமாத்ம சொரூபமேயென்றும் தெரிந்துகொண்டவர்களாய் அந்த விஷயத்தில் யாதொரு சந்தேஹமுமில்லாமல் நிச்சய புத்தியுடையவர்கள் என்பதாம். ஆகையால் அப்படிப்பட்டவர்கள், சமஸ்தபூதங்களும் தம்மைப்போன்றனவேயென்று தெரிந்துகொண்டவர்களாதலால், அவர்கள் எப்பொழுதும் சமஸ்த பூதங்களுக்கும் மேன்மையே செய்ய விரும்புவார்கள். அப்படிப்பட்டவர்கள் பிரம்ம பதவியை அடைவார்கள்.

காமக்ரோதவியுக்தாநாம் யதீநாம் யதசேதஸாம்
அபிதோ ப்ரஹ்மநிர்வாணம் வர்ததே விதிதாத்மநாம். 26

மேற்சொல்லிய மூன்று ஆசிரமங்களில்லாமல் நான்காமாசிரமமாகிய ஸந்நியா ஸாசிரமத்தி லிருக்கப்பட்டவர்கள்

எப்படிப்பட்டவர்களென்றால், அவர்களில் சிலர் மேற் சொல்லிய பிரமசர்ய கிருஹஸ்த வானப்பிரஸ்தா சிரமங்கள் மூன்றையும் யதாவிதியாய் நடத்தி, அந்த ஆசிரமங்களில் அவர்களுக்கு உண்டாகிய அனுபவஞானத்தினால் நிஜ மாகிய வைராக்கிய முடையவர்களாய் ஸந்நியசித்தவர் களும், மற்றும் சிலர் அவரவர்களின் பூர்வ ஜன்ம சுகிரு தானுசாரமாய் அப்படிப்பட்ட மூன்று ஆசிரமங்களிலுள்ள தர்மாசிரமங்களையும் கிரமக் கிரமமாய் நிவர்த்திக்காத முன்பே, அவர்களுக்குப் பூர்வ ஜன்மங்களின் அனுபவத்தி னால் விரக்தியுண்டாய் சந்நியசிக்கின்றார்கள். இப்படி நிஜ மாகிய விரக்தியுண்டாய் ஸந்நியசித்தவர்களே யதிகளென் றும், சாங்க்கியர்களென்றும் சொல்லப்படுவார்கள். இவர் களே நிஷ்கர்ம்ம சித்தியை அடைந்தவர்கள். அதாவது, எப்படிப்பட்ட கர்மங்களையும் அனுஷ்டிக்க வேண்டிய அவசியமில்லாதவர்களாயும் பரப்பிரம்ம சொரூபர்களாயும் பிரவர்த்தித்துக்கொண் டிருப்பார்கள். அவர்களே ஜிதேந் திரியர் (இந்திரியங்களை ஜயித்தவர்)கள்; காமக்குரோதாதி ரஹிதர்கள்; இந்த பிரபஞ்சமெல்லாம் பரப்பிரம்ம சொரூ பமேயென்று தெரிந்துகொண்டவர்களே, சுகத்தை அனு பவிக்கப்பட்டவர்கள்; இப்படிப்பட்டவர்களெல்லாம் முக் தர்களாகவே யிருப்பார்கள். இவர்கள் இத்தேஹத்தை விட்டபோதிலும் முக்தர்களே; இத்தேஹத்துடன் இந்த உலகத்தில் இருந்தபோதிலும் முக்தர்களே. அர்ஜுனா ! ஜீவித்திருக்கும்போதே எப்படி முக்தர்களாவாரென்று கேட்கின்றாயோ? தேஹேந்திரியங்களின் அபிமானத்தை விட்டு ஸர்வம் பிரம்ம மயம் என்று சமாதி நிஷ்டையைச் செய்யும் பிரம்ம நிஷ்டனுக்கு பிரபஞ்ச சம்பந்த தர்மம் நீங்கிவிடுவதே முக்தியெனப்படும். ஆதலால், அப்படிப் பட்டவனே ஜீவன் முக்தன்.

ஸ்பர்மாந்க்ருத்வா பஹிர்பாஹ்யாம் ஶ்சக்ஷுஶ்சைவாந்தரே
[ப்ருவோஃ
ப்ராணுபாநௌ ஸமௌக்ருத்வா நாஸாப்யந்தரசாரிணௌ. 27

யதேந்த்ரிய மநோபுத்திர்முநிர்மோக்ஷபராயணஃ
விகதேச்சாபயக்ரோதோ யஸ்ஸதா முக்தஏவஸஃ. 28

தேஹத்திற்கு வெளியில் இருப்பதாகிய சப்தாதி விஷயங்களைத் தேஹத்திற்குள் சேரவொட்டாமல் வெளியில் தள்ளி, கண்களைப் புருவங்களின் மத்தியில் நிறுத்தி, பிராணுபான வாயுக்களை மூக்குக்குள்ளாகச் சமமாய் நடக்கும் படிச் செய்து, இந்திரியம் மனது புத்தி இவைகளை அடக்கி, ஆசை பயம் கோபங்களைவிட்டு, மோக்ஷத்தையே எதிர்பார்த்துக்கொண்டு, மௌனத்தோடும் கூடியிருக்கும் யோகியெவனே, அவனே எப்பொழுதும் முக்தனுவான். என்றுல், சகல துக்கங்களிலுமிருந்து விடுபட்டவனுவான்.

"வெளியிலுள்ள விஷயங்களை வெளியில் தள்ளி" என்றுல், இந்திரியங்களுக்குப் புலப்படுவதாகிய சப்த ஸ்பர்ச ரூப ரச கந்தங்களிலுடைய வஸ்துக்களே விஷயங்களென்று சொல்லப்படும். இந்த விஷயங்களை இந்திரியங்கள் கிரஹித்துக்கொண்டுபோய் மனதினிடத்தில் சேர்ப்பிக்கின்றது. மனது அந்த விஷயங்களைப் புத்தியினிடத்தில் சேர்ப்பிக்கின்றது. புத்தியானது அந்த விஷயங்களைத் தன் சமீபத்திலிருக்கிற ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கின்றது. ஆத்மா, அந்த விஷயங்களை கிரஹித்ததனுல் அந்த விஷயங்களிலுண்டாகிற சுகதுக்கங்களை அடைகின்றுன். அந்த சுகதுக்கங்களை ஆத்மா கிரஹித்துக் கொண்டிருக்கிற வரையில் நிஷ்டைசெய்ய யோக்கியனுக மாட்டான். ஆகையால், தேகத்திற்கு வெளியிலிருப்பதாகிய விஷயங்களை தன்னிடத்திற்குக் கொண்டுவந்து சேர்க்க இடங்கொடாமல், வெளியே தள்ளிவிடவேண்டு

மென்று சொல்லப்பட்டது. தன் சமீபமாய் வந்துவிட்ட விஷயங்களை அநுபவிக்காமலே தள்ளிவிடுவதற்கு நல்ல ஞானியே தகுந்தவன். அர்ஜுனா! விஷயங்கள் எதெது தன்னிடம் கொண்டுவந்து சேர்ப்பிக்கின்றதோ அந்த புத்தி மனது இந்திரியங்களை அடக்கவேண்டும். அதாவது, இவைகளில் இந்திரியங்களை முதல் அடக்கவேண்டும். ஏனென்றால், அவைகளே முதல் விஷயங்களை கிரஹிக்கின்றன. ஆதலால், அப்பியாசத்தினால் முதல், இந்திரியங்களையும், பிறகு மனதையும், பிறகு புத்தியையும் கிரமமாய் அடக்க வேண்டும். "இந்திரியேப்ய: பரா ஹ்யர்த்தா அர்த்தேப்யஸ்ச பரம் மந: மநஸஸ் ச பரா புத்தி:" என்னும் சுருதிரீதியாய் இவைகளை சுவாதீனம் செய்துகொள்ளும் மார்க்கம் இதில் சொல்லப்படும். அஃதெப்படியென்றால், கண்களை மூடிக்கொண்டால் தூக்கம் வரும்; திறந்திருந்தால் விஷயங்களை கிரஹிக்கும். ஆகையால் அரைக்கண்கள் மூடியும், அரைக்கண்கள் திறந்துமிருக்கும் படிச்செய்து அவைகளின் பார்வையைப் புருவங்களின் மத்தியில் பிராணபான வாயுக்கள் மூலமாய் அந்த உசுவாச நிசுவாசங்களாகிய வாயுக்களை வெளியிலும் உள்ளும் அதிகமாய்ச் சஞ்சரிக்கவிடாமல் மூக்குக்குள்ளாகவே சுவாசத்தை சொல்பமாய் வெளியில் விட்டுக்கொண்டும் உள்ளுக்கிழுத்துக்கொண்டும் இருக்கவேண்டும். (மூக்கு வாசனைகளை அறிவதனால் மனது கிரஹிக்கின்றது.) வாயுக்களை முழுதும் அடக்கிவிட்டால் பிராணன் நிற்கமாட்டாது. சுவாசத்தை முழுதும் விட்டு இழுத்துக்கொண்டிருந்தால் வாசனைகளை கிரஹித்துக்கொண்டு வரும். ஆதலால், சுவாசத்தை அதிகமாய் விடாமல் சொல்பமாய் விட்டுக்கொண்டு மௌனம் அதாவது, வாக்கு நாக்கு இவைகளின் விருத்தியினால் நிறுத்தவேண்டும். அதனால்தான் மௌனத்தில்

வாக்கை நிறுத்தும்படி சொல்லப்பட்டது. "ப்ருவோரந்தர் கதா த்ருஷ்டிர் முத்ரா பவதி கேசரீ! ந ரோகோ மரணந்தத்ர ந நித்ராக்ஷுத்ருடாதய:" என்று யோகமார்த்தாண்ட மென்னும் கிரந்தத்தில், புருவமத்தியில் திருஷ்டியை நிறுத்துவது கேசரியென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படிப் பட்டமுத்திரைகள் ஐந்துண்டு. (அவைகள் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" சொல்லப்பட்டிருக்கின்றன.) ப்ராவ்ருத்தம் சித்தம் யதி பவதி பாஹ்ய வ்யவஹ்ருதே ரஸத்யா யஸ் ஸத்சம் கலயதி ததாப்யாஸவஸத:, க்ஷுதார்த்தஸ் ஸம்விஷ்ட: க்ஷணமநுபவந் ஸ்வாப்நமஸநம் ம்ருஷா மத்வா போதே புநரபி ச போக்தும் ப்ரயததே" மித்தையாகிய பிரபஞ்ச வியவஹாரத்திலிருந்து திரும்பிய பிரம்ம நிஷ்டன், அப்பியாச விசேஷத்தினால் ஸத்தியமாய் பிரம்ம தத்துவ விசாரணையைச் செய்வான். எப்படியென்றால், பசியுடன் உட்கார்ந்திருப்பவனுக்குத் தூக்கம் கொஞ்சம் உண்டாகும். அந்தத் தூக்கத்தில் சாப்பிட்டதாய்க் கனவு கண்டு விழித்து அது அஸத்யமென்று தெரிந்துகொண்டு மறுபடியும் நிஜமாகிய சாதத்தைச் சாப்பிட பிரயத்தினப்படுவான். அதுபோல், விவேகமுடைய சிரேஷ்டர்களும், பிரம்மஞான முடையவர்களும், பிரபஞ்சமென்னும் தீர்க்க சொப்னத்திலிருந்து விழித்துக்கொண்டு, சத்தியமாகிய பர ப்பிரம்மைக்யத்தைத் தெரிந்துகொள்வார்கள். அதாவது, நமது முதுகெலும்பிற்கு பிரம்மதண்டியென்று பெயர். அதற்கு மத்தியில் வெள்ளை நரம்பொன்றுண்டு; அதற்கு மத்தியில், தாமரைக்கொடியிலுள்ள சிறிய நூலைப் போல் மிகவும் சிறிய துவாரம் அந்த நரம்பில் உண்டு; அது தான் ஸுஷும்நா நாடியென்று சொல்லப்படும். அந்த நாடியின் வழியாய் கும்பித்த பிராணவாயுவைக் கொண்டு போய் பிரம்ம கபாலத்தில் நிறுத்தி பிரம்மநிஷ்டைசெய்யும்.

புருஷன் தசவித வாத்தியங்களைக் கேட்டு ஆனந்தித்துப் பிறகு சத்யமாகிய பிரம்ம சொரூபானுபவத்தை அடைவான். இந்த தசவித நாத விவரங்களையும் கேட்கவேண்டுமானால், "ஜீவப் பிரம்மைக்யவேதாந்த ரஹஸ்யத்தில்" தசவித நாதங்கள் என்பதைப் பார்க்க.

போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோக மஹேஶ்வரம்
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்சதி. 29

ஆதலால், ஓ அர்ஜுநா! அப்படிப்பட்ட லக்ஷணமுடைய யதிகளும், ரிஷிகளும் என்னுடைய நிஜ சொரூபத்தை அறிந்தவர்களாகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சமஸ்த பூதங்களையும் பரப்பிரம்ம சொரூபமென்று எண்ணி அந்த பூதங்களுக்கு எப்பொழுதும் நன்மையே செய்து வருவார்கள். மேலும், அவர்கள் என்னைத் தேவ மனுஷ்யாதி சமஸ்த லோகங்களுக்கும் ஈசுவரனென்று அறிந்தவர்களாய் ஆகின்றார்கள். யார் யார், எதை எதை உத்தேசித்து யஞ்ஞத்தையாகிலும், தபஸ்ஸையாகிலும் செய்தபோதிலும் அப்படிப்பட்ட யஞ்ஞங்களையும், தபஸ்ஸுகளையும் அனுபவிக்கப்பட்டவன் நானே. என்றால், அவையெல்லாம் என்னையே சேருகின்றதென்று அறிந்தவர்களாகின்றார்கள். அப்படி எப்பொழுது என்னை அறிந்தவர்களாகின்றார்களோ அப்போதே மோக்ஷத்தை அடைவார்கள். இதற்குச் சுருதி பிரமாணம் என்னவென்றால்:—

"ய ஏவம் வேத அஹம் ப்ரஹ்மாஸ்மீதி ஸ யிதம் ஸர்வம் பவதி"
ப்ருஹதாரண்யோபநிஷத்து.]

எவன் ஆத்ம சொரூபியாகிய நானே பிரம்மமென்று தெரிந்துகொள்ளுகின்றானோ, அவனே அந்த பரப்பிரம்ம சொரூபமாகின்றான்.

"த்வமேவாஹம் நபேதோஸ்தி பூர்ணத்வாத் பரமாத்மந:"
[மண்டல ப்ராஹ்மணோபநிஷத்.]

நீயே நான், நானே நீ, நாம் இருவரும் ஸர்வ பரி பூரண பரப்பிரம்மமாகிய ஆத்மசொரூபிகளே. நாம் இரு வரும் ஏக பரப்பிரமமே. நம் இருவருக்கும் ஸத்தியமாய் எவ்வித பேதங்களும் இல்லை.

"பூதேஷு பூதேஷு விசிந்த்யதீரா:
ப்ரேத்யாஸ்மாங்லோகா தம்ருதாபவந்தி" [கேநோபநிஷத்து.]

சமஸ்த வஸ்துக்களிலும் ஆத்மசொரூபியாகிய பிரம் மமே இருக்கின்றதென்று தெரிந்துகொண்ட புண்ணிய வான் எவனோ, அவன் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷத்தை அடைகின்றான். மோக்ஷம் எப்படிப்பட்டதென்றால்:—

"யதா பஞ்சாவதிஷ்டந்தே ஜ்ஞாநாநிமநஸா ஸஹ புத்திஶ்ச நவிசேஷ்டதி தாமாஹுர் பரமாங்கதிம்" [கடோபநிஷத்து.]

மெய் வாய் கண்கள் மூக்கு செவிகள் என்னும் ஞா னேந்திரியங்கள் ஐந்தும், மனதும் ஆத்மாவில் லயித்து இதர வியாபாரங்களில்லாமல் சகல எண்ணங்களையும் மறந்து நிச்சலமாய், தன்மயமாய் இருப்பதே மோக்ஷ மென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

அத்தியாய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் சுலோகம்.

ஜ்ஞாநம் ஸம்பாத்ய ஸம்யக் க்ரமவிரமவத: கர்மணோ யா ஸமாப்தி: ஸந்யாஸ: கர்மயோக: ஸ யதமலதிய: கர்மகௌஶல்யமாப்யாம் ப்ரஹ்மண்யாதியதே யத்ஸுக்ருத ஶதஜுஷ: கர்ம ஸர்வேந்த்ரி யோத்தம் ப்ராணாயாமேந சித்தம் வ்ரஜதி பரபதம் பஞ்சமே ப்ரோக்தமேதத்.

பூர்ணமான ஞானம் உண்டானவுடனே கிரமமாய் கர்மங்களை விடுவதே ஸந்நியாசமெனப்படும். பலாபேக்ஷை யன்றி சித்தசுத்திக்காக கர்மத்தை அனுஷ்டிப்பது கர்ம

யோகமென்று சொல்லப்படும். இவ்வித சந்நியாசகர்ம யோகத்தினால், பிரம்மஞானி சமஸ்த இந்திரிய வியாபார ரூபமாகிய கர்மங்களை பிராணாயாம அப்பியாசத்தினால் லயிக்கச் செய்வான். அவனே பிரம்ம ஸாயுஜ்யத்தை அடைவானென்று இந்த ஐந்தாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டது.

இதி ஸ்ரீ பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஸாஸ்த்ரே ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதே கர்மஸந்யாஸ யோகோநாம பஞ்சமோத்யாயஃ.

உபநிஷதர்த்தப் பிரதிபாதகமும், பிரம்ம வித்யாரூபமும், யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமான பகவத்கீதையில், கர்ம ஸந்நியாஸ யோகமெனும் ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

அன்பார்ந்த ஐயா! சஞ்சலத்துடன் கூடிய ஜீவாத்மாவை நிஷ்களங்கமான பரப்பிரம்மத்தில் ஐக்கியம் செய்வதற்காக சில உபநிஷத்துக்களின் திருஷ்டாந்தங்கள் இதுவரையில் 4-வது அத்தியாயம் கடைசியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன் தொடர்ச்சியே இதுவாகும். அதாவது:—அந்த ஆத்மாவில் மாயையென்பது ஒன்று கல்பிதமா யிருக்கின்றன. அஃதெப்படியென்றால், மனிதனுக்கு ஓர் விஷயம் கெட்டதென்று தெரிந்திருந்தாலும் அவ்விஷயத்திலேயே அவன் பிரவர்த்திக்கின்றான். இது தான் மாயை. இந்த மாயையானது எங்கும் பரிபூரணமான ஆத்மாவை (பிரம்மத்தை) ஆசிரயித்துக்கொண்டிருக்கும்.

"ஆத்மா ஒன்றுதானே உள்ளது. மாயையும் ஒன்று கூட இருந்தால் வஸ்து இரண்டாகவில்லையோ" என்று கேட்கின்றாயோ அதைச் சொல்லுகின்றோம் கேள். ஆத்மா ஒன்றென்பது உண்மையே. அதனுடன் மாயையென்பது ஒன்று சேர்ந்திருக்கின்றது. அப்படியிருந்தபோதிலும்

வஸ்துக்கள் இரண்டாகவில்லை. எப்படியென்றால், கயிற்றினிடத்தே பாம்பு தோன்றுகிறது. அதனால் கயிறு ஒன்று, பாம்பு ஒன்றாக இரண்டு பொருளாகிவிடுமா ? இரண்டு பொருளாகுமானால், ஆத்மா ஒன்றும் மாயை ஒன்றும் ஆக இரண்டு பொருளாகலாம். மேற்கூறிய உதாரணத்தில் கயிறே சத்யப்பொருளாயும், பாம்பு தோற்றமாத்திரமாய்ப் பொய்ப்பொருளாயும் போகின்றது. அதுபோல் உற்றுநோக்காத தோஷத்தால் ஆத்மா ஒன்றும் மாயையொன்றும் ஆக இரண்டு பொருளாகத் தோன்றுகின்றது. உண்மைவழியாய் விசாரித்தால் ஆத்மா யதார்த்தப்பொருளாயும் மாயை தோற்றப்பொருளாயும் முடிகின்றது. ஒரே பொருள் பிராந்தியினால் பாம்பாகவும், பிராந்திநீங்கித் தெளிவை யடைந்தபோது கயிறாகவும் தோன்றுவது போல், ஒரே பொருள் மருட்சியினால் மாயையாகவும் அல்லது ஜகத் ஜீவ பரங்களாகவும், தெளிவையடைந்தபோது ஆத்மாவாகவும் தோன்றுகின்றது. கயிறு பாம்பாகத் தோன்றுங்காலத்தில் கயிறு பாம்பு தோற்றுவதற் கேதுவான சக்தி, பாம்பு ஆக மூன்றுள்ளன. அதுபோல் ஆத்மா மாயை ஜகத் ஜீவபரங்கள் ஆக மூன்றிருக்கின்றன. கயிறும், சக்தியும், பாம்பும் வியவஹாரத்தில் மூன்றாகவிருப்பினும் உள்ளது கயிறு ஒன்றேயாம். கயிறுள்ளவிடத்திலேயே சக்தியிருக்கின்றது. அச்சக்தியுள்ள விடத்திலேயே பாம்பிருக்கின்றது. அவ்வாறே ஆத்மா உள்ள இடத்திலேயே மாயையும் மிருக்கின்றது. மாயையிலேயே ஜகத் ஜீவ பரங்க ளிருக்கின்றன. ஆதலால், மாயாசக்தியானது ஆத்மாவைக்காட்டிலும் வேறல்ல. இந்திரஜால வித்தையானது, அவ்வித்தையைக் கற்ற வித்துவானைத் தவிர வேறில்லை. ஜகத் ஜீவ பரங்களுக்குக் காரணமாகிய மாயாசக்தி ஆத்மாவைக்காட்டிலும் வேறன்று. இந்திரஜால

வித்தையை செய்யும்போதும், செய்யாதபோதும், வித்து வான் இருப்பதுபோல், மாயாசக்தி யிருக்கும்போதும் இல்லாதபோதும் ஆத்மா இருக்கும். இந்திரஜாலவித்தை யே பொய்; வித்துவானே மெய். அதுபோல் மாயை பொய்; ஆத்மாவே மெய்.

"சைதந்யம்வினா கிஞ்சின்னாஸ்தீதி ஸாக்ஷாத்காரானுபவ: ஜ்ஞானம் நாநாத்ம பேதகல்பிதம் ஜ்ஞான மஜ்ஞானம்."

[நிராலம்போபநிஷத்து.]

தேஹத்திரய(ஸ்தூல, சூக்ஷ்ம, காரண)த்திற்கு வேறாய் சாக்ஷியாயிருக்கும் ஆத்மாவே தானென்றும், தன்னால் அறியப்பட்ட தேஹேந்திரியாதி நாநாவித நாமரூப பிர பஞ்சம் திருசியமென்றும், ஜடமென்றும், ஸர்வப் பிரபஞ் சத்தையும் அறியப்பட்ட ஞானானந்த மயமாகிய தான் திருக்கென்றும், சமுத்திரஜலத்தில் உண்டாகிய அலைகள் ஸமுத்திர ஜலத்தைவிட வேறா யிராததுபோல், ஸர்வ பிர பஞ்சமும் தன்னில் கல்பிதமானதால் தன்னைவிட வேறான தல்லவென்றும், ரஜ்ஜு—ஸர்ப்பம்போல் பிரபஞ்சம் அஸத்ய மென்றும், ஆத்மசொரூபியாகிய தான் சத்திய ஞானானந்த பரப்பிரம்மமென்றும் அறிந்து, சகல சந்தேஹங்களையும் விட்டு, நிஷ்காமியாய், ஆத்மத்தியானபரனாய், நிர்விகல்ப னாய் எந்த எண்ணங்களும் இல்லாமல், சகல திருசியங்களும் மறந்து, கேவல சாக்ஷிமாத்திரனாய் ஆநந்தித்துக்கொண் டிருப்பதே ஞானமென்று சொல்லப்படும். அப்படி ஆத்ம சொரூபனாகிய தானே பிரம்மமென்று அறியாமல் தேஹ மே தானென்று எண்ணி தேஹாபிமான முடையவனாய், சகல சராசர பிரபஞ்சமும் தன்னைவிட வேறானதென் றெண்ணி, காமக்குரோதாதி துற்குணங்களுடையவனாய், ஜீவஹிம்சை, வியபிசாராதி பாபகிருத்தியங்களைச் செய்து கொண்டு தாரேஷணை (பார்யாளின்மீது ஆசை), புத்ரே ஷணை (புத்திரன் முதலானவர்களின்மீது ஆசை), தனே

ஷணை (திரவ்வியத்தின்மீது ஆசை), என்று சொல்லப் பட்ட தாரா புத்திராதிகளாகிய ஈஷணாத்திரய வலையில் அகப்பட்டுக்கொண்டு, தாபத்திரயங்களினால் துக்கித்துக் கொண்டு, தனக்கு ஜநநமரணங்கள் உண்டென்று பிரமித்து இருப்பதே அஞ்ஞானம். இதனால் ஜநந மரணங்கள் தப்பாமல் சித்திக்கும்.

"ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ
நிதித்யாஸி தவ்யஃ." [ப்ருஹதாரண்யோபநிஷத்து.]

ஆத்மலக்ஷணம் இப்படிப்பட்டதென்று குருவினால் தெரிந்துகொண்டு சதா சிரவண மநந நிதித்தியாசனங் களைச் செய்வதனால், அஞ்ஞான விபரீத சம்சயங்கள் நிவர்த்தியாய் முக்தி அடையலாம். ஆத்மசொரூப லக்ஷணத் தைச் சொல்லுகின்றோம் கேள்:—

"அஶரீரம் ஶரீரேஷு அநவஸ்தே ஷ்வவஸ்திதம்." [கடோபநிஷ].

இந்தச் சரீரத்திலிருக்கும் ஆத்மா, தனக்கு சரீரமில் லாமல் நாச ரஹிதனாய் வசித்துக்கொண்டிருக்கின்றான்.

"அநாயமஶரீரோ அம்ருதஃ." [ப்ருஹதாரண்யோபநிஷத்து.].

இந்தச் சரீரத்திலிருக்கும் ஆத்மா, நாசமில்லாதவன், தனக்குச் சரீரமில்லாதவன்.

"அயமாத்மா ப்ரஹ்ம" [ப்ருஹதாரண்யோபநிஷத்து.].

இந்த தேஹத்தில்வஸிக்கும் ஆத்மாவே பரப்பிரம்மம்.

'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மஸ்ய ஜந்தோர்நிஹிதோ, குஹாயாம். [கடோபநிஷத்து.].

இந்த உலகத்தில் எறும்பைவிட மிகவும் சிறிய ஜந்துக் களினுடையவும், யானையைப்போன்றதும் அல்லது, மஹம். மேருபர்வதம்போன்ற பெரிய ஜந்துக்களினுடையவும். சரீரத்தில் ஆத்மா வசித்துக்கொண்டிருக்கும்.

"யதேவேஹ ததமுத்ர ததந்விஹ ம்ருத
ஸ்ஸம்ருத்யு மாப்நோதிய இஹ நாநேவ பஶ்யதி."

[கடோபநிஷத்து.]

இந்த உலகத்தில் நமது சரீரத்திலிருக்கும் ஆத்மாவே, அந்தப் பரலோகத்தில் பரப்பிரம்மமா யிருக்கின்றது. அந்தப் பரலோகத்திலிருக்கும் பரப்பிரம்மமே, இந்த உலகத்தில் நமது சரீரத்தில் ஆத்ம சொரூபமாய் நிவசித்துக் கொண்டிருக்கின்றது. ஓர் ஆகாசமே கடோபாதியினால் கடாகாசமென்றும், உபாதியில்லாவிடில் மஹாகாசமென்றும் சொல்வதுபோல், சர்வ பரிபூரணமாகிய பரப்பிரம்மம் இந்த தேஹத்தில் வசிப்பதனால் தேஹ உபாதியினால் ஆத்மாவென்று சொல்லப்படும்.

"அந்தஶ்ஶரீரே நிஹிதோ குஹாயாம்." [அத்யாத்மோபநிஷத்து.]

இந்த ஆத்மா, பஞ்சகோசமாயிருக்கும் இந்தச் சரீரத்தில் வசித்துக்கொண்டிருக்கின்றானதலால், பஞ்சகோசங்கள் இன்னதென்று தெரியாவிட்டால், ஆத்ம சொரூபம் இப்படிப்பட்டதென்று தெரியமாட்டாது. ஆதலால், பஞ்சகோச லக்ஷணத்தைச் சொல்லுகின்றேன், சிரத்தையுடன் கேள்:—இந்த சரீரம் ஐந்துகோசங்களாய் இருக்கின்றது, அவைகள், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயமென்று சொல்லப்படும். 'உறை' கத்தியையும், 'ஓடு' புளியையும், 'உமி' பிண்டத்தையும் மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதுபோல், ஆத்மாவை ஐந்து கோசங்கள் மூடிக்கொண்டு காணப்படாமல் செய்கின்றன. ஞானசொரூபமாகிய ஆத்மாவை, அஞ்ஞான சொரூபமாகிய இந்தக் கோசங்கள் எப்படிக் காணப்படாமல் செய்கின்றதென்றால், சூர்ய கிரணத்தினால் உண்டாகிற மேகங்கள் சூர்யனை மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதுபோலும், அக்கினியினால் உண்டாகிற

புகை அக்கினியை மூடிக்கொண்டு காணப்படாமல் செய்வதுபோலும், ஆத்மசத்தாவினால் உண்டாகிற இந்தக் கோசங்கள் ஆத்மாவை மூடிக்கொண்டு காணப்படாமல் செய்கின்றன. ஆனால், 'உறை' கத்தியையும், 'ஓடு' புளியையும் 'மா' பிண்டத்தையும் மூடிக்கொண்டு காணப்படாமல் செய்தபோதிலும், பரிக்ஷித்துப் பார்த்தபோது உறை வேறு கத்தி வேறாகவும், ஓடு வேறு புளி வேறாகவும், மா வேறு பிண்டம் வேறாகவும் தோன்றுவதுபோல், ஆத்மாவை இந்தப் பஞ்சகோசங்கள் மூடிக்கொண்டு ஒன்றாய்த் தோன்றியபோதிலும் தத்துவ விவேகத்தினால் ஆத்மா வேறு, பஞ்சகோசங்கள் வேறாய்த் தோன்றும். ஆதலால், ஆத்மா வேறு பிரம்மம் வேறென்று பேதமாய் நினைக்கப்பட்டவர்கள், ஜநநமரண துக்க சமுத்திரத்தில் மூழ்கித் துக்கித்துக்கொண்டிருப்பார்கள்.

"ஏகோ வசீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம் பீஜம் பஹுதா யஃ கரோதி" [கடோபநிஷத்]

சூக்ஷ்மமாகிய ஆலம் விதையானது அநேக கிளைகள், மலர்கள், புஷ்பங்கள், பிஞ்சு, காய், கனிகள், இலைகள் முதலானவைகளுடன் பெரிய விருக்ஷமானபோதிலும், அந்த விதையினுடைய சத்தே அந்த விருக்ஷமெல்லாம் வியாபித்திருப்பதுபோல், சகல சராசர பிரபஞ்சத்திலும் ஆத்மாவாகிய தான் ஒருவனே வியாபித்திருக்கின்றான்.

"ஏகோதேவ ஸ்ஸர்வபூதேஷு கூட ஸ்ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா கர்மாத்யக்ஷ ஸ்ஸர்வபூதாதி வாஸஸ்ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச." [ஶ்வேதாஶ்வதரோபநிஷத்து.]

ஒரு முத்துச்சரத்திலுள்ள ஒவ்வொரு முத்திலும் ஒரே நூல் வியாபித்திருப்பதுபோல், பரப் பிரம்மமாகிய ஆத்மா சகல ஜீவஜந்துக்களிலும் அதிசூட்சுமமாய் வியா

பித்து அந்தந்த ஜீவர்கள் செய்யப்பட்ட கர்மங்களுக்குச் சாக்ஷியாயிருக்கின்றது.

"அக்னிர்ய தைகோ புவநம் ப்ரவிஷ்டோ ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பபூவ ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பஹிஸ்ச." [கடோபநிஷத்து.]

ஒரு வத்தியில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தீபத்திலிருந்து அநேக வத்திகளை ஏற்றியபோது, அந்தத் தீபமொன்றே அந்த வத்திகளிலெல்லாம் வியாபித்து அநேக தீபங்களாய்த் தோன்றுவதுபோல், ஒரு ஆத்மாவே அநேக தேஹத்தில் வியாபித்து அநேக ஆத்மாக்களாய்த் தோன்றுகின்றான்.

"வாயுர்யதைகோ புவநம்ப்ரவிஷ்டோ ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பபூவ ஏகஸ்ததா ஸர்வபூதாந்தராத்மா ரூபம்ரூபம் ப்ரதிரூபோ பஹிஸ்ச" [கடோபநிஷத்.

ஒரு வாயுவே பிரபஞ்சமெல்லாம் வியாபித்து மலயமாருத மென்றும், பிராணவாயுவென்றும், சுழல்காற்றென்றும் நானு விதங்களாய்த் தோன்றுவதுபோல், ஓர் ஆத்மாவே பிபீலிகாதி பிரமதேவன் வரையில் சகல சரீரங்களிலும் வியாபித்து அநேக ஆத்மாக்களாய்த் தோன்றிக்கொண்டிருக்கும்.

"ததேதத் ப்ரஹ்ம பூர்வமபர மநந்தர மபாஹ்யம்." [ப்ருஹதா]

இந்தப் பிரபஞ்சத்திற்கு முன்னும் பின்னும், வலது இடது பக்கங்களிலும், உள்ளும் புறம்பும், கீழும் மேலும், எங்கும் பரிபூர்ணமாகிய ஆத்மா நிறைந்திருக்கின்றது.

"ஸ வா எஷ மஹாநஜ ஆத்மா ஜரோ மரோ ம்ருதோ பயோ ப்ரஹ்மாபயம் ஹி வை ப்ரஹ்மா பவதி."[ப்ருஹதாரண்யோபநிஷ].

பால்ய யௌவன கௌமார அவஸ்தைகள் இந்தச் சரீரத்திற்கு உண்டே யொழிய, ஆத்மாவிற்கு இல்லை. இந்த ஆத்மா பால்ய யௌவன கௌமாரங்க ளில்லாதவன்;

மரணமில்லாதவன்; நாசமில்லாதவன்; பயமில்லாதவன்; இவனே பரப்பிரம்மம்.

"நஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந்நாயம் குதஶ்சிந்ந பபூவ கஶ்சித் அஜோ நித்யஃ ஶாஶ்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே." [கடோபநிஷத்து.]

இந்த ஆத்மா பிறப்பு இறப்பில்லாதவன். இவனே சர்வ ஸாக்ஷி. இந்த ஆத்மா, ஒருவனால் பிறப்பிக்கப்பட்டவனல்லன். ஒருவனால் கொல்லப்படுபவனுமல்லன். புநர் ஜநந மில்லாதவன்; நித்தியமானவன்; சாஸ்வதன்; ஆதி மத்யந்த ரஹிதன். இந்தச் சரீரம் நசித்தபோதிலும், ஆத்மா எப்பொழுதும் நாசமில்லாமலிருப்பவன்.

"ஹந்தா சேந்மந்யதே ஹந்தும் ஹதஶ்சேந்மந்யதே ஹதம் உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே." [கடோப]

பிறப்பு இறப்பில்லாத பரப்பிரம்மமாகிய இந்த ஆத்மா, ஒருவனால் கொல்லப்படமாட்டாது. தானும் ஒருவரைக் கொல்லமாட்டாது. ஏனென்றால், கைகள் கால்கள் முதலாகிய அவயவங்களில்லாதவனாதலால் ஒருவனைக் கொல்லமாட்டாது; ரூப நாமங்களில்லாதவனாதலால் தானும் ஒருவரால் கொல்லப்படமாட்டாது. மூடர்கள் மாத்திரம் ஆத்மா இறக்கின்றதென்றும் பிறக்கின்றதென்றும் எண்ணுவார்கள்.

"கதம ஆத்மேதி யோயம் விஜ்ஞாநமயஃ" [ப்ருஹதாரண்யோப]

ஆத்மா எப்படிப்பட்டதென்றால், ஸகல ஜீவஜந்துக்களின் ஹிருதயத்தில் வசித்துக்கொண்டு (அஹம் அஹம்) நான் நான் என்றும், என்கண்கள் என்மூக்கு என்செவிகள் என்சரீரம் என்பார்யை என்தனம் என்று சொல்லிக்கொண்டு, தேஹாதி பிரபஞ்சம் ஸர்வம் எது அறிகின்றதோ, அந்த ஞான சொரூபமான வஸ்துவே ஆத்மா எனப்படும்.

ஸ்ரீ க்ருஷ்ண பர ப்ரஹ்மணே நமః.

ஆறாவது அத்யாயம் - ஆத்மஸம்யம யோகம்.

ஸ்ரீபகவாந் உவாச.

அநாஶ்ரித: கர்மபலம் கார்யம் கர்ம கரோதி ய:
ஸ ஸந்யாஸீ ச யோகீ ச ந நிரக்நி ர்நசா க்ரிய:. 1

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுனா! தபோயஜ்ஞாதி சகல கர்மங்களையும் அனுபவிக்கப்பட்டவன் நானே யென்று அறிந்தவனே மோக்ஷத்தை அடைவானென்று இதுவரையில் (அ-5 சு. 29-ல்) சொல்லியிருந்தேன். ஆதலால், அப்படி எவனொருவன் சரியாய் அறிகின்றானோ அவன், தான் செய்யும் கர்மங்களினுடைய பலத்தை ஆசிரயிக்காமல், அந்தக் கர்மத்தை எனக்கே அர்ப்பணம் செய்துகொண்டிருப்பான். அப்படி எவனொருவன், பலாபேக்ஷையில்லாமல் தான் செய்யவேண்டிய நித்திய நைமித்யகாதி கர்மங்களை அனுஷ்டிக்கின்றானோ, அவனே நிஷ்காம கர்மானுஷ்டான யோகியாவான். அப்படி கர்ம பலாபேக்ஷ யில்லாமல் கர்மத்தை அனுஷ்டிக்கப்பட்டவன், கர்மத்தை அனுஷ்டிக்காமல் சும்மா இருக்கப்பட்டவனுக்குச் சமானமாவான் என்று இதுவரையில் சொல்லியிருந்தேன். அப்படிப்பட்டவனே சமஸ்த கர்மங்களையும் பரித்தியாகம் செய்த சந்நியாசியென்றும் சொல்லப்படுவான். அப்படி நிர்மலமான சித்தமில்லாத கிருஹஸ்தர்கள் நித்திய கிருத்தியமாய்

அனுஷ்டிக்கவேண்டிய ஔபாசனாதி யஞ்ஞ கார்யங்களை யும், இன்னும் இதர நித்திய நைமித்யகாதி கர்மங்களையும் விட்டுவிட்டு, சிகா யக்ஞோபவீதங்களையும் விசர்ஜித்து, காஷாயதண்ட கமண்டலாதி சின்னங்களைத் தரித்த மாத்தி ரத்தில் ஸந்நியாசி யாகமாட்டான். கர்ம ஸந்நியாசமும் கர்மானுஷ்டானமும் இவ்விரண்டு மார்க்கங்களும் மோக்ஷத்திற்குச் சாதனமா யிருக்கின்றதென்றும், இவ்விரண்டு மார்க்கங்களிலும் கர்ம ஸ்ந்நியாசத்தைவிட, கர்மானுஷ்டானமே சிரேஷ்டமானதென்றும் இதுவரையில் (அ - 5. சு 2-ல்,) சொல்லியிருந்தேன். ராகத்துவேஷங்களில்லாமல் எவன் இருக்கின்றானோ, அவனே நிஜமான ஸந்நியாசி யென்று (அ-5, சு 3-ல்,) சொல்லியிருந்தேன். இந்திரியங்களை விஷயங்களில் போகவிடாமல் திருப்பிக்கொண்டு ஆத்மானுபவ நிஷ்டையில் இருப்பவனே கர்மத்தை ஸந்நியசித்த சாங்க்கியனென்று (அ - 5, சு 4-ல்,) சொல்லியிருந்தேன். ஞானயோகத்தை அனுஷ்டித்த ஸந்நியாசிகள் அடையப் படும் பலன் எதுவோ அதுவே, கர்மயோகத்தை அனுஷ்டித்தவர்கள் அடையும் பலனென்று (அ - 5, சு 5 - ல்,) சொல்லியிருந்தேன்.

* யம் ஸந்யாஸ மிதி ப்ராஹுர்யோகம் தம் வித்தி பாண்டவ !
ந ஹ்யஸந்யஸ்த ஸங்கல்போ யோகீபவதி கச்சந. 2.

ஆதலால், ஹே பாண்டுபுத்ரா ! பெரியோர்கள் சந்நியாசமென்று அதாவது, கர்ம பரித்தியாகமென்று எதைச் சொல்லுகின்றார்களோ அதையே நிஷ்காம கர்மானுஷ்டானமென்று அறியக்கடவாய். நிஷ்காம கர்மானுஷ்டான

* பரமார்த்த சந்நியாசியையும், நிஷ்காம கர்மயோகியையும் எப்படிச் சமமாய்ச் சொல்லலாமென்றால், பலனில் இச்சையை விட்ட விஷயத்தில் இருவரும் சமமாகையால் அப்படிச் சொல்லப் பட்டார்கள்.

னுக்கும் கர்ம பரித்தியாக ஸாங்கியனுக்கும் யாதொரு பேதமில்லை. ஏனென்றால், இந்த உலகத்தில் எவனுயிருந்த போதிலும் சரி, நித்திய நைமித்யகாதி கர்மங்களை அனுஷ்டித்து சங்கல்ப ரஹிதனுய் இருந்தால்தான் அவன் அனுஷ்டிக்கும் கர்மம் நிஷ்காம கர்மமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட நிஷ்காம கர்மானுஷ்டானத்தை அனுஷ்டித்தாலேயொழிய கர்மம் சித்திக்கமாட்டாது. அப்படிப் பட்ட யோகம், எப்பொழுது ஒருவனுக்குச் சித்தியாகின்றதோ அப்பொழுது அவன் சர்வ சங்கல்ப வர்ஜிதனுகின்றான். அப்படி சர்வசங்கல்ப வர்ஜிதனுய் எப்பொழுது ஆகின்றானோ, அப்பொழுதே அவன் கர்மத்தை அனுஷ்டித்தபோதிலும் அனுஷ்டிக்காதவனே யாகின்றான். ஆதலால், (அ-5, சு 5-ல்,) "ஏகம் ஸாங்க்யஞ்ச யோகஞ்ச யஃ பஸ்யதி ஸபஸ்யதி" என்று நான் இதுவரையில் உனக்குச் சொல்லியிருந்தேன்.

* ஆருருக்ஷோர் முனேர்யோகம் கர்மகாரண முச்யதே
யோகாரூடஸ்ய தஸ்யைவ ஶமஃ காரண முச்யதே. 3

"தியான யோகத்திற்குக் கர்மயோகம் பஹிரங்க (வெளி) சாதனமா யிருப்பதனுல் கர்மயோகமே தியான யோகத்திற்குச் சாதனமென்னும் அம்சத்தை விவரிக்கின்றார்."

அர்ஜுனா ! கர்மயோகம், ஞானயோகம் இவ்விரண்டிற்கும் பேதமுண்டு. அதைச் சொல்லுகின்றேன் கேள்.

---

* பகவத் ஞானத்திற்கு சதாகால நிஷ்டையும், ஸ்தோத்திரம் கீர்த்தனம் நமஸ்காரம் அர்ச்சனை முதலியனவும் முக்திக்கு உபாயமாகச் சொல்லப்படுகின்றன. அதாவது, மனது புத்தி சித்த அஹங்காரமாகிய இந்நான்கையும், அவைகளின் விஷயங்களில் பிரவேசிக்க விடாமல் தடுப்பது என்பதாம்.

யோகத்திற்கு யம, நியம, ஆசந, பிராணாயாம, பிரத்தியாஹார, தாரண, தியாந, சமாதியென்னும் எட்டுப்படிகளுண்டென்றும், அவைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு கிரமக் கிரமமாய் ஏறவேண்டுமென்றும் இதுவரையில் (அ-3, சு 3-ல்,) சொல்லியிருந்தேன். அந்தப் படிகளில் முதற்படியாகிய யமம் அநுஷ்டித்தால் நியமமும், நியமம் அநுஷ்டித்தால் ஆசனமும், ஆசனம் அநுஷ்டித்தால் பிராணாயாமமும், பிராணாயாமம் அநுஷ்டித்தால் பிரத்தியாஹாரமும், பிரத்தியாஹாரம் அநுஷ்டித்தால் தாரண தியான சமாதிகளும் அநுஷ்டிப்பதற்குச் சக்தியுண்டாகும். ஆதலால், ஒவ்வொரு படியாய் கிரமக்கிரமமாய் ஏறி யோகசித்தி அடையவேண்டும். யம, நியம, ஆசந, பிராணாயாம, பிரத்தியாஹாரமென்னும் ஐந்துபடிகள் ஏறும் வரையில் கர்மத்தை அநுஷ்டித்தே தீரவேண்டும். இந்த ஐந்து படிகளை ஏறினவுடன் மனது நசித்துவிடுகின்றது. அது நசித்தபிறகு கர்மம் எவ்விதமாய்ச் செய்வான். மனது இருந்தாலல்லவோ கர்மம் செய்யமுடியும். அப்படி மனது ஒடுங்கித் தன்னைத்தான் மறந்திருப்பதே தியானமென்றும், சமாதியென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். கர்மம் பூர்த்தியானாலேயன்றிச் சமாதிநிலை உண்டாகமாட்டாது. இந்தச் சமாதிநிலையை பழக்கத்தால் காணலாம். யோகம் சித்தியாகும் வரையில் கர்மத்தை அநுஷ்டித்தே தீரவேண்டும். அதாவது, கர்மத்தை விட்டுவிடுவது காரணமாகச் சொல்லப்படுகின்றது. ஏனென்றால், ஆத்மதர்சனம் வரையில் கர்மம் செய்யவேண்டும். தன் ஆத்மசொரூபத்தைத் தர்சித்து மோக்ஷவீடடைந்தவன் கர்மத்தை விட்டுவிடலாம். இந்த அம்சம் வியாசரால் சொல்லப்பட்டது. அஃதெப்படியென்றால், “நைதாத்ருஸம் ப்ராஹ்மணஸ்யாஸதி வித்தம் யதைகதா ஸமதாஸத்யதாச, ஸீலம் ஸதிதிர்தண்டநிதா

நமார்ஜவம் தத ஸ்தஸ்சோபரமஃ க்ரியாப்யஃ.'' பிரபஞ்சத்தில் காணப்படும் சமஸ்த பூதங்களுக்கும் அதிஷ்டானமாகிய வஸ்து ஞானம் ஒன்றே. ஸர்வ பூதங்களும் வியவஹாரத்தில் வெவ்வேருய்த் தோன்றினும், பாரமார்த்தத்தில் பிரம்ம சொரூபமாகிய ஞானம் ஒன்றே யாம். சகல பூதங்களுக்கும் நன்மை உண்டாகும்படி பிரவர்த்திப்பதும், சுபாவமுண்டாயிருப்பதும், பிரதிகார்யத்திலும் தைர்யம் உண்டாயிருப்பதும், பூதங்களின் ஹிம்சையை சஹிக்காமலிருப்பதும், குடும்ப பிரவர்த்தனம் இல்லாமலிருப்பதும், அப்பியாச விசேஷத்தினல் கிரமக்கிரமமாய்க் கர்மங்களை விட்டுவிடுவதும் புருஷார்த்த சாதனமுடைய பிராம்மணனுக்கேயொழிய வேருெருவருக்கில்லை. ஆதலால், இவைகளே பிராம்மணனுக்கு வேண்டிய புருஷார்த்த சாதனங்களென்று அறியவேண்டும்.

அர்ஜுனன்:—சுவாமீ! இப்பொழுது நீர் சொல்லியதை யோசிக்குமளவில், யோகசித்தியடையும் வரையில் கர்மத்தை அனுஷ்டிப்பது ஆவசியகமென்றும், அதன்பின் கர்மத்தினல் பிரயோஜனமில்லையென்றும் தெரியவருகின்றது. ஆனல், யோகாப்பியாசி யோகாரூடத்வ தசையை எப்பொழுது அடைந்தவனுகின்ருன்? எப்படிப்பட்ட லக்ஷணமுடையவன் யோகாரூடனென்று சொல்லப்படுவான்?

யதாஹி நேந்த்ரியார்த்தேஷு நகர்ம ஸ்வநுஷஜ்ஜதே
ஸர்வஸங்கல்ப ஸந்யாஸீ யோகாரூட ஸ்ததோச்யதே. 4

கிருஷ்ணன்:—யோகாப்பியாசியானவன் யோகாரூடதசை எப்பொழுது அடைவானென்ருல், யம நியமாதி நிஷ்டைகளை நடத்திக்கொண்டு ததனுகுணியமாய்க் கர்மங்களைப் பலாபேக்ஷையில்லாமல் அநுஷ்டித்துக்கொண்டே

வர சிலகாலங்களுக்கெல்லாம் அவனுடைய இந்திரியங்கள், சப்த ஸ்பர்ச ரூப ரச கந்தங்களிலும், ஸ்திரீ சந்தன புஷ்ப தாம்பூலாதிகளிலும் சென்று பற்றமாட்டாது. அதாவது, அவைகளெல்லாம் நிஸ்ஸாரமென்றும், அநித்தியமென்றும் தோன்றி அவைகளின்மீதுள்ள இச்சையெல்லாம் விட்டுப் போகும். இப்படி இச்சை ஒழிவதனால் அப்போதே கர்மங்களை அநுஷ்டிப்பதற்கு இச்சையில்லாமல் போகும். அப்பொழுது ஸர்வ சங்கல்பங்களை (எண்ணங்களை) விட்டவனும், கேவல சத்வகுண பிரதானமுடையவனும் ஆகின்றான். அப்படிப்பட்ட ஸ்திதிக்கு எப்பொழுது வருகின்றானோ அப்பொழுதே யோகாரூடனென்று சொல்லப் படுவான். அப்படிப்பட்ட யோகாரூடத்வத்தை அடைந்தவன் கர்மத்தை ஸந்நியசிக்க அருஹனேயொழிய மற்றவர்கள் ஆகார். சமஸ்த கோரிக்கைகளும் சங்கல்பத்தினாலல்லவோ உண்டாகின்றன. இதற்கு சுருதிப்பிரமாணம் "ஸங்கல்பமூலஃ காமாவை யஞ்ஞா ஸ்ஸங்கல்ப ஸம்பவாஃ" கோரிக்கைகள் சங்கல்பத்தினால் உண்டாகின்றன. யஞ்ஞரூப கர்மங்கள் சங்கல்பத்தினாலேயே உண்டாகின்றன. மேலும், காம ஜாநாமி தே மூலம் ஸங்கல்பாத்வம் ஹித் ஜாயஸே, ந த்வாம் ஸங்கல்பயிஷ்யாமி தேந மே நபவிஷ்யஸி.' "ஓ ஆசையே! உன் குணத்தை நான் அறிவேன். நீ சங்கல்பத்தினாலல்லவோ உண்டாகின்றாய், உன்னை சங்கல்பிக்கமாட்டேன்; அப்படி சங்கல்பிக்காமல் இருந்தால்தான் நீ என்னிடத்தில் உண்டாகமாட்டாய்" என்றிருக்கின்றது. சர்வ எண்ணங்களையும் விட்டுவிட்டால் சர்வ கர்ம சந்நியாசம் சித்தித்ததாகும். "ஸ யதா காமோ பவதி தத் க்ரதுர் பவதி தத் கர்ம குருதே." புருஷன் எந்த பலத்தைக் கோருகின்றானோ அந்த பலத்திற்கு சாதனம் செய்யவேண்டும் என்கிற எண்ணம் உண்டாகின்றது. அதுவே யஞ்ஞமென்று

சொல்லப்படும். அதைச்செய்யப் பிரயத்தினப்படுவது, கர்மமென்று சொல்லப்படும். சமஸ்தமும் கோரிக்கையினாலேயே உண்டாகின்றன, "யத் யத் குருதே ஜந்து: தத்தத் காமஸ்ய சேஷ்டிதம்" உலகத்திலுள்ள பிராணிகளெல்லாம் எந்தக் கர்மங்களைச் செய்கின்றார்களோ அவைகளெல்லாம் கோரிக்கையினால் உண்டானவைகளே. யோகாரூடன் எப்படிப்பட்டவனென்றால், சமஸ்த கோரிக்கைகளுக்கும் மூலமாயிருக்கும் சங்கல்பத்தை விட்டுவிடுபவனே யோகாரூடனென்று அறியக்கடவாய்.

அர்ஜுனன்:—ஐயா, கிருஷ்ணமூர்த்தியே! அப்படிப்பட்ட யோகாரூடத்தை அடையும் வரையில் இந்திரியங்களையும் மனதையும் நிக்கிரஹித்திருப்பது மிகவும் கஷ்டசாத்தியமல்லவா? அப்படி இருப்பதற்கு உபாயமெதுவோ அதைச் சொல்லும் கிருஷ்ணா?

உத்தரே தாத்ம னாத்மானம் நாத்மான மவஸாதயேத்
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து ராத்மைவ ரிபு ராத்மன:. 5

கிருஷ்ணன்:—நல்லது, அதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—(ஜீவப் பிரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்! மனதின் சுபாவம் என்பதில் "மனஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதைப் பார்க்கவும்.) ப்ரதி புருஷனுக்கும் தன் மனதே பந்தமோக்ஷத்திற்குக் காரணமாயிருக்கின்றது. அந்த மனதைவிட புத்தி சிரேஷ்டமானது; அந்தப் புத்தியினால் மனதை நிக்கிரஹித்துக் கர்மமென்னும் சத்துருவை ஜயிக்கவேண்டுமென்று இதுவரையில் (அ - 3, சு 42, 43-ல்,) சொல்லியிருந்தேன். ஆதலால், தன் மனதினாலேயே தன்னைச் சம்சாரமாகிய சமுத்திரத்திலிருந்து கரையேற்றிக்கொள்ளவேண்டும். தன்னைச் சம்சார துக்கமென்

னும் நரகத்தில் விழும்படியாய்க் கெடுத்துக் கொள்ள லாகாது. ஏனென்றால், தன் மனதே தனக்குப் பந்து (சாதகம்) அப்படிக்கில்லாத அபரிசுத்தமான மனதே தனக்கு சத்துரு (பாதகம்). ஒவ்வொருவரும் மோக்ஷம் (ஜீவாத்ம பரமாத்ம ஐக்யம்) அல்லது, நரகம் (துக்கம்) அடைவதற்கு அவன் சொந்தபிரயத்தினமே காரணமாயிருக்கின்றது. உலகத்தில் புத்திர மித்திர களத்திர பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்களெல்லோரும் மோக்ஷத்திற்கு விரோதிகள். (இதற்கு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பந்த மோக்ஷ ஆத்ம அநாத்ம லக்ஷணங்கள் என்பதில் "பிதிரு மாத்ரு ஸஹோதர தாராபத்ய க்ரஹாராம க்ஷேத்ராதி மமதா ஸம்ஸாராவரண ஸங்கல்போ பந்தஃ" என்னும் நிராலம் போபநிஷத் பார்க்க.) ஆதலால், அவர்கள் பந்துக்களாகார். தானே தனக்குப் பந்துவாகவும் சுகிருதனுகவும் ஆகவேண்டும். தன் மனதே தனக்குப் பந்து என்றால், பரமாத்மாவே பந்து. அதாவது, பகவானை, தைலதாரையைப் போலவும் கண்டா நாதரீதியாயும் இடைவிடாதபடி பக்தி செய்தால் பந்துவைப்போலாகின்றார். அப்படிச்செய்யாமல் மாயையால் மூடப்பட்டு சம்சாரமென்னும் சமுத்திரத்திலேயே மூழ்கிப் பரமாத்மாவை பக்திசெய்யாதவன், பரமாத்மாவிற்குச் சத்துருவாகின்றான்.

பந்துராத்மா த்மநஸ்தஸ்ய யேநாத்மை வாத்மநாஜிதஃ
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்த்ததாத்மைவ ஶத்ருவத். 6.

எவனாலே மனதானது ஜயிக்கப்படுகின்றதோ அவனுக்கு, மனது உபகாரத்தைச் செய்ததாகின்றது. மனதை ஜயிக்காதவனுக்கு, அந்தமனம் அவனுக்குச் சத்துருவைப் போல் அபகாரத்தைச் செய்ததாகின்றது எந்த ஜீவனாலே பரமாத்மாவானவர் ஐக்கியப்பட்டாரோ என்றால்,

பக்தியினால் சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டவரானாரோ அந்த ஜீவனுக்கு அந்தப் பரமாத்துமா பந்து. பரமாத்மாவினிடத்தில் பக்தி செய்யாதவனுக்கு அந்தப் பரமாத்மாவே சத்துருவைப்போல் அபகாரம் செய்கின்றார். அர்ஜுனா! பரமாத்மாவிற்கு பந்துத்வமும், சத்துருத்துவமும் உண்டாகும் மார்க்கத்தைச் சொல்லுகின்றேன் கேள் :— ஒரு புருஷனுடைய மனது விஷயங்களில் எப்பொழுது ஓடிக்கொண்டிருக்கின்றதோ, அப்பொழுதே தன் புத்தியினால் அதைத் தப்பு மார்க்கங்களில் போக விடாமல் இழுத்துப் பிடிப்பானானால் அவனே, தன் புத்தியின் பலத்தால் தன் மனதை ஜயித்தவனாகின்றான். அஃதெப்படியென்றால், ஓர் புருஷன் மற்றொரு புருஷனை நிஷ்காரணமாய் வைவானாகில் அப்பொழுது வையப்படுகிறவனுடைய மனது குரோதத்தை அடையுமல்லவா? அப்படி வையப்பட்டவனுக்கு குரோதம் உண்டாகு முன்னமே அவன் தன் ஸ்திர புத்தியினால் தீர்க்கமாய் ஆலோசித்து வைதவனை மறுபடியும் வைவது யுக்தமல்லவென்று எண்ணி சஹித்துக்கொண்டிருப்பதே சிரேஷ்டமானதென்று எண்ணுவானானால் அவனுக்குண்டாகும் கோபம் தணிந்து சாந்தம் பிரகாசிக்கு மல்லவா? இவ்வாறு பொறுத்துக்கொள்பவன் அடையும் பலன் என்னவென்றால், தன்னை வைதவனுடைய புண்ணியங்களையெல்லாம் இழுத்துக் கொண்டவனாகின்றான். ஆதலால் அவனது சாந்த விருத்தியுள்ள மனது இதரர்கள் செய்த புண்ணியங்களை அவனுக்கு லபிக்கும்படி செய்விக்கின்றது. அதனால் அது அவனுக்கு பந்துவைப்போல் மேன்மை செய்கின்றதாகும். இவன் விஷயம் இப்படியிருக்க, இனி இவனை வைதவனுடைய கதி என்னமாகின்றதென்றால், அவன் ஏதோ ஓர் சொல்ப காரணத்தினால் தன்

கோபத்தை அடக்க முடியாமல் இவனை வைவதனால் தான் அதுவரையில் செய்திருந்த புண்ணியங்களை எல்லாம் அவனுக்கு தாரவார்த்தவனாகின்றான். புத்தியின் பலத்தை மீறி அதன் வார்த்தையைக் கேளாதவனுடைய மனது அவனுக்குச் சத்துருவைப்போல் கெடுதிசெய்த தாகின்றது. இப்படியே பிரகிருதி புருஷனுடைய மனதும் இந்திரியங்களும் விஷயங்களில் ஓடும்போது காமக்குரோதாதிகளினால் பிரேரேபிக்கப்பட்டு தப்பு மார்க்கங்களில் பிரவேசிப்பதைப் பார்த்துக்கொண் டிருக்கும் புத்திமான் தன் புத்தி பலத்தினால் அந்த மனதை திருப்பிக்கொண்டு வருவானானால் அது தப்புமார்க்கங்களில் பிரவர்த்திக்காமலே அவன் சுவாதீனத்திலேயே இருக்கும். அப்படி சுவாதீனமான மனதுடன் செய்யும் கர்மங்கள் நிஷ்காம கர்மங்களாவதனால் காம்மிய கர்மங்களுக்குப் பந்தப்படாமல் மோக்ஷாரூடனாகின்றான். ஆதலால், அவனுக்கு, அந்த மனது மேன்மை செய்ததாகின்றது. அதனால் அதைப் பந்துவென்று சொல்வதற்குக் காரணமாயிற்று.. அப்படி மனோ நிக்கிரஹம் செய்யாமல் அதன் விஷயங்களில் தன்னிஷ்டம்போல் நடக்கும்படிச் செய்தால் ததனுகுண்யங்களாகிய காம்மிய கர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டு அந்தக் கர்மங்களுக்கு பத்தனாகின்றான். ஆதலால், அவன் மனது அவனுக்குக் கெடுதி செய்த தாகின்றது. அதனால், அதைச் சத்துருவென்று சொல்வதற்குக் காரணமா யிருக்கின்றது.

அர்ஜுனன்:— மனதை ஜயிப்பதென்றால் எப்படி? மனோஜய முடையவனுடைய லக்ஷணம் எப்படியிருக்கும்?

ஜிதாத்மந: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:
ஶீதோஷ்ண ஸுகது:கேஷு ததா மாநாவமாநயோ:. 7

கிருஷ்ணன் :— அர்ஜுனா! மனோஜயமுடையவனு டைய லக்ஷணம் எப்படிப்பட்டதென்றால், அதைச் சொல் லுகின்றேன் கேள். ஒரு புருஷனுடைய மனது காம, க்ரோத, லோப, மோஹ, மத, மச்சரமென்னும் அரிஷட் வர்க்கங்களின் விகாரங்களை அடையாமல் (இந்தக் காமக் குரோதாதி அரிஷட்வர்க்கங்களை "ஜீவப் பிரம்மைக்ய 'வேதாந்த ரஹஸ்யம்'" பிரபஞ்ச விரக்தி மார்க்கம் என் பதில் பார்க்கும்படி (அ-3, சு-39-ல்,) சொல்லப்பட்டிருக் கின்றது.) லாபா லாபங்கள் ஜயாபஜயங்கள் நிந்தாஸ்துதி கள் சுபாசுபங்கள் மானுவமானங்கள் முதலானவைகளி னால் உண்டாகும் சுகதுக்கங்களில் சமபாவமுண்டாய், அதாவது, சீதோஷ்ணுதிகள் சுகமாயிருக்கும்போது சந் தோஷிப்பதும், துக்கமா யிருக்கும்போது வியசனப்படு வது மில்லாமல் அவ்விரண்டையும் சமமாய் எப்பொழுது நினைக்கின்றானோ, அப்பொழுது அவன் மனதை ஜயித்தவ னாகின்றான். அப்படி மனதை ஜயித்தவன் எப்படி யிருப் பானென்றால், தன்னைத் தூஷித்தவர்களிடத்தில் கோபம் வையாமலும், பூஷித்தவர்களிடத்தில் பிரீதி வையாமலும், தன்னை யாராயினும் அடித்தபோதிலும் அவர்களின்மீது கோபிக்காமலும் இருப்பான். இப்படிப்பட்ட மனோ ஜயத்தினால் மிகவும் சாந்தி அடைந்தவனுடைய சித்தம் இன்னும் எப்படி இருக்குமென்றால், சந்தோஷ கார்யங் களுக்கெல்லாம் பெருத்தது தன் விவாஹ கார்யமன்றோ? அப்படிப்பட்ட விவாஹத்திற்காகத் தன்னை மாப்பிள்ளை யாக அலங்கரித்து ஊர்கோலத்துடன் அழைத்துக் கொண்டு போவபோதிலும் சந்தோஷிக்காமலும், துக்க கரமாகிய கார்யங்களுக்கெல்லாம் தன் மரணத்தைவிட வேறொன்றில்லையாதலால், தன்னை ஒருவன் கொலை செய்யக் கொண்டு போனபோதிலும் வியசனமும், பயமும், விகா

ரங்களும் அடையாமல் அந்தந்தக் காலங்களுக்குத் தக்க படி அந்தந்தக் கார்யங்கள் நடக்கின்றதென்னும் நிச்சய ஞானமுடையவனாய் சஹித்துக்கொண் டிருப்பான். இதன்றியும், இன்னும் எப்படி இருப்பானென்றால், சுபகார்யங்கள் உண்டானபோது சந்தோஷிப்பதற்குப் பதிலாய் துக்கிப்பதும், கெடுதி சம்பவித்தபோது துக்கிப்பதற்குப் பதிலாய் சந்தோஷிப்பதும் உண்டு. இவ்விதமாய் இந்திரியங்களையும் மனதையும் ஜயித்தவனுடைய இருதயத்தில் பரமாத்மா பிரகாசித்துக்கொண் டிருப்பார். 'இப்படிப்பட்ட ஆத்ம சொரூபமானது, பிரகிருதி பந்தத்தைப் போக்கடித்துக்கொண்டு சுத்தமாயிருப்பதனால், பரமாத்மாவென்று சொல்லப்பட்டது. அதாவது, ஆத்மாவானது அதிகமாய் பிரகாசிக்கின்றது.

ஜ்ஞாந விஜ்ஞாந த்ருப்தாத்மா கூடஸ்த்தோ விஜிதேந்த்ரியஃ
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்ம காஞ்சநஃ. 8.

ஆதலால், அப்படி எவனொருவன் ஞான விஞ்ஞானங்களினால் அதாவது, சாஸ்திர ஞானத்தினாலும், அனுபவ ஞானத்தினாலும் திருப்தியடைந்த மனதையுடைய கூடஸ்தனாயும், [அதாவது இதுவரையில் சொல்லப்பட்டது போல் சீதோஷ்ணாதிகளினாலும், காமக்குரோதாதி அரிஷட்வர்க்கங்களினாலும் சலிக்காமல் (எவ்வித மனோவிகாரங்களையு மடையாமல்) ஒரேவிதமாய் இருக்கப்பட்டவனும்] இந்திரிய நிக்கிரஹ முடையவனும், மண்கட்டி, கல், பொன், இவைகளில் சமதிருஷ்டி உடையவனுமா யிருக்கின்றானோ, அப்படிப்பட்டவனே பரப்பிரம்ம சொரூபத்தை அறிந்தவனும், நிரஞ்ஜனனும் அதாவது, தோஷ ரஹிதனும் நீறு பூர்த்த அக்கினியைப்போல் கேவல ஞான சொரூபனாயும் பிரகாசித்துக்கொண் டிருப்பான். ஆதலால், அப்படிப்பட்ட

வனே ஞானயோகத்திற்கு அதாவது, கர்ம சந்நியாச யோகத்திற்கு அருஹனாகின்றான்; என்றால், நைஷ் கர்ம சித்தியை அடைந்தவனாகின்றான்.

அர்ஜுநன்:—ஐயா! ஞான விஞ்ஞானங்களினால் திருப்தி யடைந்த மனதுடையவனென்று சொன்னீரல்லவா? அப்படி என்றால் என்ன? ஞானமென்றால் எப்படிப்பட்டது? விஞ்ஞான மென்றால் எப்படிப்பட்டது? இவ்விரண்டிற்கும் பேதமென்ன? இவைகளினால் திருப்தி அடைவது எப்படி? விவரித்துச் சொல்லவேண்டும் கிருஷ்ணா!

கிருஷ்ணன்:—ஞானமென்பது ஆத்ம சொரூப ஞானமே. விஞ்ஞானமென்பது சகல கிரியைகளையும் நடத்துகிறது; பிரகிருத்தியேயன்றி ஆத்மாவிற்குச் சம்பந்தமில்லை என்று தெரிந்து கொள்வது. அன்றியும் ஞானமென்பது பகவத் சொரூபத்தை யறிகிற ஞானம்; அல்லது, பகவத் விஷயமான சிரவண மனனாதிகளா லுண்டாவது. விஞ்ஞானமென்பது பகவத் மஹிமைகளை விசேஷமாய் அறிவது; அல்லது, சிரவணாதிகளால் உண்டான ஞானத்தினால் கிடைக்கும் பகவத் தர்சனம். பகவான் சர்வோத்தமன் என்பதை வேதங்களினால் அறியவேண்டும். பகவானான ஆத்மா, தேவ மனுஷ்யாதி தேகங்களில் இருந்தாலும் ("ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பந்த மோக்ஷ ஆத்மாநாத்ம லக்ஷணங்கள் என்பதில் 'கவாமநேக வர்ணாநாம் க்ஷீரஸ்யாப்யேக வர்ணதா, க்ஷீரவத் பஸ்யதே ஜ்ஞாநம் லிங்கிநஸ்து கவாம் யதா, என்பதைப் பார்க்க) சீதோஷ்ணாதிகளால் விகாரமடையமாட்டான். அதாவது, பகவத் விஷயம் இப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்வது ஞானமென்று சொல்லப்படும். அந்த பகவத்விஷயம் தன் சுவாநுபவத்தினால் தெரிந்துகொள்வது, அதைவிட

விசேஷமானது. ஆதலால், அது விஞ்ஞானமென்று சொல்லப்படும். இதற்கோர் திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள்:—

ஒருவன் மற்றொருவனுக்கு ஓர் கற்கண்டுக் கட்டியையும், ஓர் படிக்காரக் கட்டியையும், ஓர் வெண்காரக் கட்டியையும், ஓர் ஸபிந்தலவணக் கட்டியையும், ஓர் வெள்ளைக்கல் துண்டையும் காட்டி அவைகளின் பேர்களையும் அதன் குணங்களையும் சொல்லுகின்றான். அப்பொழுது அவைகளின் பெயர்களைக் கேட்டுக்கொண்டும், ரூபங்களைப் பார்த்துக்கொண்டும் இருந்த மற்றொருவன் இதுவிது இன்னின்ன வஸ்துவென்று தெரிந்துகொள்ளுகின்றானல்லவா? இப்படித் தெரிந்துக்கொள்வதே ஞானமென்று சொல்லப்படும். ஆனால், அப்படித் தெரிந்துகொண்டாலும் அவையெல்லாம் ஒரே ரூபமாயிருப்பதால் அவைகளைத் தனக்குக் காட்டிச் சொன்னவன் ஒருவேளை பிசகாய் ஒன்றை மற்றொன்றாகச் சொல்லியிருக்கலாமென்றும் சம்சயம் உண்டாகுமல்லவா? அப்பொழுது அவன் ஒவ்வொரு கட்டியையும் தனித்தனியே எடுத்து நாவால் ருசி பார்த்தபோது அவ் வஸ்துக்களில் எது கற்கண்டு, எது படிக்காரம், எது வெண்காரம், எது ஸபிந்தலவணம், எது வெள்ளைக்கல் என்று நிச்சயமாய் அறிகின்றானல்லவா?

அர்ஜுநன்:—ஆம். அந்தந்தப் பெயரையுடைய வஸ்து இதுவிதுவென நிச்சயமாய் அறிகின்றான். ஆதலால், அப்பொழுது அவன் மனது திருப்தியையடைகின்றது.

கிருஷ்ணன்:—இப்படித் தெரிந்துகொள்வது, முதல் தெரிந்துகொண்டதைவிட விசேஷமானதால், இதுவே விஞ்ஞானமென்று சொல்லப்படும். இப்படித் தெரிந்துகொண்ட பிறகு, அவன் மனதுக்கு, முதல் தனக்குச்

சொன்னவன் சரியாய்ச் சொன்னானென்று நிச்சயம் உண்டாகின்றது. அப்பொழுது அந்த விஷயத்தில் திருப்தி அடைந்த மனதுடையவனா யிருக்கின்றான்.

ஸுஹ்ருந்மித்ரா ர்யுதாஸீந மத்யஸ்தத்வேஷ்யபந்துஷு
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்தி ர்விஶிஷ்யதே. 9.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! மேற்சொல்லிய சுலோகங்களில் சொல்லப்பட்ட லக்ஷணமுடையவன் கர்மசந்நியாஸ யோகத்திற்கு அருஹனாகின்றானென்று சொல்லியிருந்தே னல்லவா? அப்படிப்பட்டவர்களிலும் உத்கிருஷ்டமானவர்கள் சிலர் உண்டு. அவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால், சொல்லுகின்றேன் கேள்:—

ஸுஹிருத் (பிரதி பிரயோஜனத்தை யெதிர்பாராமலே உபகாரம் செய்கிற சிநேகிதன்,) மித்திரன் (பிரதி பிரயோஜன உத்தேசத்துடன் சிநேகம் செய்கிறவன்,) அரி (அபகாரம்செய்கிறவன்,) உதாசீனன் (விவாதப்படுகிற இரு கக்ஷிக்காரர்க ளிடத்திலும் சாதக, பாதகம் செய்யாமல் ஒதுங்கி யிருப்பவன்,) மத்தியஸ்தன் (விவாதப் படுகிற இரு கக்ஷியாரையும் சமாதானம் செய்பவன்,) துவேஷ்ய (வெறுக்கத் தக்கவன்,) பந்து (விசுவாச முள்ள உறவின் முறையான்,) இவர்க ளிடத்திலும், சாதுக்க ளிடத்திலும், பாபிக ளிடத்திலும், சமமான புத்தியை உடையவனே சிரேஷ்டனா யிருக்கின்றான். ஒருவன் தனக்கு வேண்டுபவனென்றும், மற்றொருவன் தனக்கு விரோதியென்றும் பேதபுத்தி யில்லாமல் யாவரிடத்தும் சமபுத்திபுடையவனா யிருக்கின்றான். இப்படிப்பட்டவனுடைய மனதில் எந்தக் காரணத்தினாலும் சிநேகபாவமும், துவேஷபாவமும், உண்டாகவேண்டிய காரணமில்லை. அப்படிப் பட்டவனுடைய மனதிற்கு எப்பொழுதும் சந்தோஷமும்,

வியசனமும், உண்டாகமாட்டாது. அப்பேர்ப்பட்டவனே மிகவும் சிரேஷ்டவனாகின்றான்.

அர்ஜுநன்:—ஓ சுவாமி! இப்படிப்பட்ட லக்ஷணங்களெல்லாம் சம்பூரணமாய் இருந்தாலல்லவோ யோகியாவான்? அப்படியிருக்க இவர்களிலும் உத்கிருஷ்ட நிகிருஷ்டத்வங்களுமுடையவர்களிருக்கின்றார்களா?

கிருஷ்ணன்:—ஆம். இப்படிப்பட்ட லக்ஷணங்களெல்லாம் இருந்தால்தான் யோகியாவான். மற்றவர்கள் யோகியாகார்கள் இப்படியிருப்பவர்களிலும் சிலர் யாராயினும் கெடுதி செய்தால் அவர்களிடத்தில் குரோதமுடையவர்களாய் அவர்களைச் சபிப்பார்கள் மற்றும் சிலர், எப்பொழுதும் அப்படிப்பட்ட குரோதங்கள் தம் மனதில் வைக்காமலும் இருக்கின்றார்களென்று நாம் அநேக ரிஷ்யாதி சரித்திரங்களினால் தெரிந்துகொண்டிருக்கின்றோமல்லவா? அப்படிப்பட்டவர்களில் சிரேஷ்டர்கள் எப்பொழுதும் சாந்த சித்தமுடையவர்களா? அல்லது, எப்போதைக் காயினும் குரோத மனமுடையவர்களா?

அர்ஜுநன்:—ஓ சுவாமி! எப்பொழுதும் சாந்தசித்தமுடையவர்களே சிரேஷ்டர்களென்று சொல்லவேண்டியதாயிருக்கின்றது. ஆனால், அப்படிப்பட்ட யோகாரூட ஸ்திதிக்கு வருவதற்கு எப்படிப் பிரயத்தினம் செய்யவேண்டும்?

யோகீ யுஞ்ஜீத ஸததமாத்மாநம் ரஹஸி ஸ்த்தித:
ஏகாகீ யதசித்தாத்மா நிராசீரபரிக்ரஹ:. 10.

கிருஷ்ணன்:—அர்ஜுநா! யோகம் அப்பியசிக்கப்பட்டவன் என்ன செய்யவேண்டுமென்றால், தன் இந்திரியங்கள் விஷயங்களில் ஓடும்போது, அந்த விஷயங்களில் மனதைப் போகவிடாமல் புத்தியினால் இழுத்துப்பிடித்து

ஐஹிக சம்பந்தமாகிய எந்த விஷயங்களையும் கோராதவனும், அது தனக்குத் தானாய் லபித்தபோதிலும் அதைப் பெற இச்சையில்லாதவனும், சர்வமும் விட்டு ஏகாந்த ஸ்தலத்தில் ஏகாங்கி (ஒன்றி)யாயிருந்து சதாகாலமும் தன் மனதை ('ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்' ஜகத்சிருஷ்டி மனோ சிருஷ்டி லயம் என்பதில் "தைலதாரமிவாச்சிந்நம் தீர்க்க கண்டாநிநாதவத் உபாஸ்யம் ப்ரணவஸ்யாக்ரம் யஸ்தம் வேத ஸ வேதவித்." என்னும் தியாநபிந்தூபநிஷத்துரீதியாய்) அவிச்சின்னமாகிய தைலதாரை ரீதியாயும், கண்டாநாத ரீதியாயும் இடைவிடாமல், இரவும் பகலும் அணுவளவேனும் சோர்வடையாமல் பிரணவத்துடன் சதாகாலமும் ஸ்மரித்துக்கொண்டே வர அவ்வப்பியாச முதிர்ச்சியினால் அநேக எண்ணங்களையுடைய மனது ஓர் எண்ணத்தில் நிற்கும். (இது அ-3, சு-31, 32-லும், "ஜீவப் பிரம்மைக்கியத்தி"லும் சொல்லப்பட்டிருக்கின்றது.) இப்படி நிற்பதே சகுணோபாசனமென்று சொல்லப்படும். பிறகு அந்த ஓரெண்ணமும் சூந்நியமாய் ஒன்றுமில்லாமல் ஆகாச வடிவமாய் நின்று விடுவதே நிர்க்குணோபாசனமென்று சொல்லப்படும். என்றால், மனம் எவ்விடத்தே உதித்ததோ அவ்விடத்திலேயே லயித்தபோது சேஷமாய் நின்றது, ஆகாச வடிவமேயாகும். பெரியோர்கள் முக்கியமாய் முதலில் சகுணோபாசனத்தை ஆராதித்தவர்கள். சகுணோபாசனத்தினால் சித்தசுத்தியடைந்தபிறகு நிர்க்குணோபாசனத்திற்குப் பிரயத்தினப்பட்ட சத்புருஷர்களின் மர்மங்களைக் காணாமல் பிரமித்து மனது பரிபக்குவமாகாத மந்தபுத்தியுடையவர்களிற் சிலர் அவர்களைப்போல் தாமும் இருக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு சகுணோபாசனததை திரஸ்கரித்து நிர்க்குணோபாசனத்தை ஆரம்பிப்பார்கள். இது, எப்படியிருக்

கின்றதென்றால், புலியைப் பார்த்துப் பூனை குடுபோட்டுக் கொண்டதுபோல் சித்த சுத்தியில்லாததனால் இரண்டிற்கும் பிரஷ்டனாய் துக்கத்தை அனுபவிக்கவேண்டியதாய் நேரிடும். இந்திரியங்களை ஜயித்து மனதை யடக்கி காமக்குரோதாதி அரிஷட்வர்க்கங்களை நிக்கிரஹித்தவன் எப்படிப்பட்டவனா யிருந்தபோதிலும் நிர்க்குணோபாசனையைச் செய்யத்தகுமே யொழிய, இதரர்கள் செய்யத்தகாது. மற்ற விஷயங்களை "ஜீவப் பிரம்மைக்யத்தில்" காணலாம்.

அர்ஜுநன்:—ஏகாந்த ஸ்தலத்தில் ஏகாங்கியா யிருக்க வேண்டுமென்று சொன்னீரே அது ஏன்? ஏகாந்தஸ்தலமென்றால் எப்பேர்ப்பட்டது?

கிருஷ்ணன்:—மனது சலிக்காமல் ஒரே நிலையா யிருப்பதற்காக ஜன சம்பந்தமில்லாத நிர்ஜனப் பிரதேசமா யிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட ஸ்தலங்கள் எவை யென்றால், பாழடைந்த ஆலயம், குடியில்லாத வீடு, மலையி லுள்ள குகை, பூமிக்குள்ளிருக்கும் குகை, வனம் இவை முதலான ஸ்தலங்களில் ஜன சந்தடி யிராததனால், இந்த ஸ்தலங்களிலிருந்து யோகத்தை அப்பியசித்தால் மனதை இழுக்க இந்திரியங்களுக்குச் சக்தி உண்டாகமாட்டாது. அதாவது, மனது சலிப்பதற்குக் காரணம் உண்டாகமாட்டாது. அவ்விடங்களில், யோகாப்பியாசம் செய்வதற்குச் சுகமாயிருக்கும்.

அர்ஜுநன்:—நிர்ஜனப் பிரதேசத்தில் யோகத்தை அனுஷ்டிப்பது பிரம்மசர்யாதி நான்கு ஆசிரமத்தி லிருப்பவர்களும் செய்யவேண்டுமா? அல்லது யதியாசிரமத்தி லிருப்பவர்கள் மாத்திரமே செய்யவேண்டுமா?

கிருஷ்ணன்:—நான்கு ஆசிரமத்தி லுள்ளவர்களில் யாவராயிருந்தாலும் அவர்களும் இவ்வாறே செய்ய வேண்டும்.

அர்ஜுனன் :—ஐயா ! அப்படிப்பட்ட ஸ்தலத்திலிருந்து அப்பியசிப்பது, பிரம்மசர்ய வானப்பிரஸ்த யதியாசிரமத்தி லிருப்பவர்களுக்கு மாத்திரம் சாத்தியப்படுமேயொழிய கிருஹஸ்தாசிரமத்தி லிருப்பவர்களுக்குச் சாத்தியப்படாதல்லவா? அப்படிப்பட்டவர்கள் என்னசெய்யலாம்?

கிருஷ்ணன்:—சாத்தியமான வரையில் முன்சொல்லியதுபோல் நிர்ஜனமாயும், நிஸ்ஸப்தமாயும் இருக்கப்பட்ட ஸ்தலத்திலிருந்தே சாதனம் செய்யவேண்டும். இப்படிப்பட்ட ஸ்தலத்தில் செய்வதனால் மனது லயப்படும். ஒருவேளை அவ்வாறான ஸ்தலம் அகப்படாவிட்டால் சஜ்ஜனர்கள் இருக்கப்பட்ட ஸ்தலத்திலாயினும் செய்யலாம். ஏனென்றால், சஜ்ஜனர்களா யிருக்கப்பட்டவர்கள் அவனது யோகத்திற்கு விகாதமுண்டாகும் சம்பாஷணைகளையாயினும், சப்தங்களையாயினும் உண்டாக்கமாட்டார்கள். ஆதலால், அப்படிப்பட்ட ஸ்தலங்களிலும் செய்யலாம்

அர்ஜுனன் :—ஐயா ! கிருஷ்ணமூர்த்தியே ! இப்பொழுது நீர் சொல்லிய விஷயத்தை யோசிக்குமளவில் பிரம்மசர்ய கிருஹஸ்த வானப்பிரஸ்தாசிரமங்களி லிருப்பவர்கள், தம்தம் வர்ணாசிரமாசாரோசித கிருத்தியங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அனுகூலமாக தமது கிருஹங்களின் ஸமீபத்திலிருக்கும் ஸ்தலங்களில் ஆசிரமத்தை ஏற்படுத்திக்கொள்ள அவகாசமுண்டு. யதியாசிரமத்தி லிருப்பவர்களுக்கு அப்படிச் செய்துகொள்ளக் கூடாமையா யிருக்குமல்லவா ? ஒருவேளை அவர்கள் வெகுதூரமாய் வெளியில் அவ்வாறு ஏற்படுத்திக்கொண்ட போதிலும் அவர்களுக்கு அந்நபானாதிகள் எவ்வாறுகிடைக்கும் ? அவைகளில்லாவிடில் பசியினால் வருந்துவார்களல்லவா ?

கிருஷ்ணன்:—அப்படி வேண்டாம்; மழை காலங்களில் மழை சரியாய்ப் பெய்து புல்லும் ஜலமும் யதேஷ்டமாய் இருக்கப்பட்ட ஸ்தலங்களில் பசுக்கள் சென்று வயிறாரப் புசித்து ஜலத்தைப் பானம்செய்து தமதிருப்பிடம் வருவதுபோல், ஞானியாய் ஸந்நியசித்தவன் எவ்விடத்தில் தனக்கு அன்னபானாதிகள் சுலபமாய் அகப்படுகின்றதோ அப்படிப்பட்ட ஸ்தலங்களுக்குச் சென்று பிக்ஷைசெய்துகொண்டும், அல்லது கந்தமூலங்கள் சமிருத்தியாய் அகப்படும் காடுகளிலும் மலைகளிலும் சென்று புசித்துத் தன் குறையிலிருந்தும் பிராரப்த கர்ம நாசம் வரையில் ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" சங்கல்பத்தால் உண்டான சரீரவிருக்ஷத்தில் ஜீவாத்மா பரமாத்மா வசிப்பது என்பதில் "ராகத்வேஷ பயாதீநா மநுரூபம் சரந்நபி யோந்தர்வ்யோம வதத்யஸ்ச்ச ஸ ஜீவந்முக்த உச்யதே" என்பதைப் பார்க்க.) காலங் கழித்துப் பின் மோக்ஷத்தை அடையவேண்டும்.

அர்ஜுனன் :—அப்படிப்பட்ட விஜன ஸ்தலங்களில் யோகம் எப்படி அப்பியசிக்கவேண்டும்.

ஶுசௌ தேஶே ப்ரதிஷ்ட்டாப்ய ஸ்த்திர மாஸந மாத்மநஃ
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சேலாஜிந குஶோத்தரம் 11.
தத்ரைகாக்ரம் மநஃ க்ருத்வா யதசித்தேந்த்ரிய க்ரியஃ
உபவிஶ்யாஸநே யுஞ்ஜ்யாத் யோக மாத்மவிஶுத்தயே. 12.
ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந்நசலம் ஸ்த்திரஃ
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சா நவலோகயந். 13.
ப்ரஶாந்தாத்மா விகதபீர் ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்த்திதஃ
மந ஸ்ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பரஃ. 14.

கிருஷ்ணன்:—அர்ஜுனா! யோகம் எப்படி அப்பியசிக்கவேண்டுமென்றால், ஏகாந்தமான ஸ்தலத்தில் பரிசுத்தமான இடத்தில் எறும்பு மூட்டுப்பூச்சி முதலானவைகளின்

பாதையில்லாமலிருப்பதற்காக மிகவும் உயரமாயும் தாழ்வாயும் இல்லாமல் இரண்டங்குல உயரமுள்ள ஓர் பெரிய மணையை யமைத்து மனது சலனமில்லாமல் நிச்சலனமாய் நின்று யோகாப்பியாசம் செய்வதற்காக அந்த மணையின் மீது தர்ப்பாசனமும், அதன்மீது மான்தோலும் போட்டு பிராணாயாமம் செய்யும்போது சுவாசத்தை நாசிகா ரந்திரங்களின் வழியாய்க் குரு உபதேசித்ததுபோல் இழுத்து அதை வெளியில் விடாமல் நிறுத்தியபோது அப்பியாச முதிர்ச்சியினால் கும்பித்த (நிறுத்திய) வாயு வெளியில் வாராதபடி கண்டத்தை மூடிவிடுவதனால், மூலாதார (குதஸ்தான)த்தின் வழியாய் அது அபானவாயுவாய்ப் போக ஆரம்பிக்கும். அச்சமயத்தில் அதை வெளியில் போக விடாமல் இரண்டு பிருஷ்டபாகங்களையும் கெட்டியாய் இறுக்கிப் பிடிக்கவேண்டும். நூதனப்பியாசிகள் எவ்வளவு இறுக்கிப் பிடித்தபோதிலும் அபானவாயுவாக வெளியில் செல்லும். அப்பியாசம் முதிர்ந்தவர்களுக்கு வெளியில் செல்லாமல் குடலில் தானே நின்றுவிடும். (இதை "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பிராணாயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல் என்பதில் யோகாப்யாசம் நாளுக்குநாள் விருத்தியாகி வருவதனால் உள்ளே நிறுத்தியிருக்கும் வாயு குடலில் பிரவேசிக்கும் என்பதைப்பார்க்க.) அப்படி அந்த அபானவாயு ஷை மான் தோலின்மீது படாமலிருப்பதற்காக அதன்மீது வெள்ளை வஸ்திரம் மடித்துப்போட்டு, மணையின்மீது உட்கார்ந்து இந்திரியங்களின் வியாபாரத்திலிருந்து மனதைத் திருப்பி நிச்சலனமாகச் செய்து அந்தஃகரண பரிசுத்த நிமித்தமாய் யோகாப்பியாசம் செய்யவேண்டும். இவ்வப்பியாசம் செய்வதற்குமுன் தன் சரீரத்தை எப்படிப் பழக்க வேண்டுமென்றால், சொல்லுகின்றேன் கேள்:—

தேஹம், சிரசு, கழுத்து இடுப்பு முதலானவைகளை அசைக்காமலும் சாய்க்காமலும் சமமாய் நிறுத்தி, இங்குமங்கும் திக்குகளைப் பாராமலும் அசையாதவனாய்த் தன் மூக்கு நுனிக்குறியில் திருஷ்டியை நிறுத்தினவனாய், பிறகு தன் குரு உபதேசித்த யோகாப்பியாசத்தை அனுஷ்டித்து வரவேண்டும். சரீரம் நிற்பதற்காக பிக்ஷைசெய்து ஸ்திரீ எண்ணமில்லாதவனாய் சம்சார சமுத்திரத்தை எவ்விதமாய்க் கடப்பேன் என்னும் பயமுடையவனாய், மனதை விஷயங்களில் ஓட விடாமல் திருப்பிக் கொண்டு, நிச்சலனமுடைய மனதுடையவனாய் குருபதேசத்தினால் ஸ்வஸ்வரூபத்தில் (தன் ஆத்மாவில்) மனதைச் சேர்க்கத் தியான யோகத்தை அப்பியசிக்கவேண்டும். தன் மூக்கு நுனியில் திருஷ்டியை நிறுத்தச் சொல்லிய காரண மென்னவென்றால்:—மூக்கு நுனியில் திருஷ்டியை நிறுத்தினால் மனது மூக்கு நுனிக்குறியிலேயே நின்றிருக்குமென்று கிரஹிக்கவும். தியான யோகத்தின்படி சொல்லப்படும் பிரமாணம் என்னவென்றால்:—

ஶ்லோ || "ஸுகாஸநே ஸமாஸீநः தத்வாப்யாஸம் ஸமாசரந் ஸதாப்யாஸேந தத்கார்யாத் பரதத்வப்ரகாஶநம், ஆஸநம் ப்ராண ஸம்ரோதः ப்ரத்யாஹாரோத தாரணா த்யாநம் ஸமாதிரேதாநி யோகாங்காநி வராநநே, ஏகாந்தே விஜநே ரம்யே குஹாயாம் புண்யபூமிகே ரஹிதே மாரகைர் தம்ஶைர் தேவாயதநகேபிலா சித்த க்ஷேத்ரே மஹாதீர்த்தே த்யாநஸித்திः ப்ரஜாயதே தத்ரஸித்தாஸநம்பத்வா ருஜுகாயஸ்து காரயேத்." என்றும் சொல்லுவதுமேயல்லாமல், இன்னும் யோக மார்த்தாண்டமென்னும் கிரந்தத்தில்,

"யுக்தாஸநம் ஸமாருஹ்ய ஸம காய ஶிரோரः நாஸாக்ர த்ருஷ்டி ரேநாந்தே ஜபேதோங்காரமவ்யயம் பூர்புவः ஸ்வரிமே லோகாः ஸோமஸூர்யாக்நி தேவதாः யஸ்ய மாத்ராஸு திஷ்டந்தி தத்பரஞ்ஜ்யோதி ரோமிதி, ஆஸநேந ருஜம்ஹந்தி ப்ராணாயாமேந பாதகம் விகாரம் மாநஸம் யோகி ப்ரத்யாஹாரேண

முஞ்சதி தாரணார்த்தம் மனோதைர்யம் த்யாகம் நிச்சலமத்புதம்
ஸமாதேர் மோக்ஷமாப்னோதி த்யக்த்வா கர்மபராபரம்:”

என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, மனது சஞ்சலமில்லாமல் நிச்சலனமாயிருக்க சித்தாசனத்தில் உட்கார்ந்து பரதத்துவ தியானப்பியாசம் செய்து கொண்டு அந்த அப்பியாச விசேஷத்தினால் பரதத்துவ சாக்ஷாத்காரத்தை அடையவேண்டும். யம, நியம, ஆசன, பிராணயாம, பிரத்தியாஹார, தாரண, தியான, சமாதியென்னும் இந்த எட்டும் யோகாங்கங்களென்று தெரிந்து கொள்ளவேண்டும். யோகாப்பியாசம் செய்யப்பட்டவன் ஜனசஞ்சாரமில்லாததாகியும், வியாக்ராதி (புலி முதலாகிய) ஜந்துக்களின் பயங்கரத்தொனியில்லாததாகியும் இருக்கப்பட்ட குகையிலாகிலும், மஹான்களிருந்து பவித்திரமான பிரதேசத்திலாகிலும், கிராமத்திற்குத் தூரத்தில் ஏகாந்தமாய் இருக்கப்பட்ட தேவாலயங்களிலாகிலும், யோகிகள் சித்தியடைந்த ஆசிரமங்களிலாகிலும், புண்ணிய தீர்த்த தீரங்களிலாகிலும் சுகாசனத்தில் உட்கார்ந்து, இடுப்பு மார்பு கழுத்து சிரசு முதலானவைகளைச் சரியாய் நிறுத்தி அப்பியசித்தால், யோகசித்தியை அடையலாம். யோகாப்பியாசி எந்த ஆசனத்திலாகிலும் உட்கார்ந்து, சித்தியடையும் வரையில் நிச்சலனமாய் ஆசனத்தில் உட்கார்ந்து, [“ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்” உபநயந காயத்ரீ மந்த்ரோபதேசம் என்பதில் “தத்ஸவிதுர்வரேண்யம்” “பர்கோதேவஸ்ய தீமஹி” “தியோ யோநஃ ப்ரசோதயாத்” என்னும் இம்மூன்று வாக்கியங்களும் ‘அ’கார, ‘உ’கார, ‘ம’காரங்களாய் ‘ஓங்’காரமாயிருக்கின்றன. இந்த பிரணவாக்ஷரம் ரேசகமே (சுவாசம் வெளியில் விடுவதே) ‘அ’காரம். பூரகமே (சுவாஸம் உள்ளுக்கிழுப்பதே) ‘உ’காரம். கும்பகமே (உள்ளுக்கிழுத்த சுவாஸம் வெளியில் விடாமல் நிறுத்து

வதே) 'ம்'காரம். இந்த ஓங்காரமே 'ஸோஹம்.' "ஸோ" என்பதில் 'ஓ' என்னும் ஜீவாக்ஷரமும் 'ஹம்' என்பதில் 'ம்' என்னும் ஜீவாக்ஷரமும் சேர்ந்து 'ஓம்' என்னும் சப்தம் உண்டாயிற்று; மற்ற விஷயங்களை மேற்படி ஜீவப் பிரம்மைக்கியத்தில் காணலாம்.] ஓம் என்னும் பிரணவத்தைக் குரு உபதேசித்ததுபோல், உசுவாச நிசுவாசங்களில் சேர்த்து உள்ளுக்கிழுத்தும், வெளியில் விட்டுமாய் அப்பியாசம் செய்யவேண்டும். இந்த மூன்று அக்ஷரங்கள் அடங்கிய ஓங்காரமே, ஸமஸ்த பிரம்மாண்டமாயும், சூர்யன், சந்திரன், அக்நி முதலான தேஜோவஸ்துக்களாயும் சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணமாகிய பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்களாயும், இவைகளுக்கெல்லாம் மூலமாகிய பரப்பிரம்ம சொரூபமாயும் இருக்கின்றது. சாசுவதமான ஓங்கார வாக்கியத்திற்கு லக்ஷ்யமான ஜோதி சொரூபமாகிய தன் நிஜசொரூபத்தை தியானம் செய்ய வேண்டும். இது குருபதேசம். யம நியமங்களினால் இந்திரிய நிக்கிரஹம் உண்டாகும். ஆசன சுத்தியினால் ரோகங்களெல்லாம் நசிக்கும். பிராணாயாமம் செய்வதனால் பாபங்களெல்லாம் நசிக்கும். பிரத்தியாஹாரம் செய்வதனால், மனோ விகாரங்களெல்லாம் நசிக்கும். தாரணை செய்வதனால் யோக சித்தியை அடைவோமென்னும் மனோ தைர்யம் உண்டாகும். தியானத்தால் தன் சரீரம் மறந்து இதரர்களுக்கு ஆச்சர்யத்தை உண்டாக்கும். சமாதியென்றால் புண்ணிய பாபங்கள் ஒழிந்து முக்தியை அடைவது. (இந்த அஷ்ட வித அப்பியாசம் செய்யும் மார்க்கங்கள், "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" பிராணாயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல் என்பதைப் பார்க்க.) 12, பிராணாயாமம் செய்தால் ஒரு பிரத்தியஹாரம்; அதாவது, 12-பிராணாயாமம் செய்வது எவ்வளவு கஷ்டமோ, ஒரு பிரத்தியஹாரம் செய்வது அவ்

வளவு கஷ்டம், 12-பிரத்தியஹாரம் செய்தால் ஒரு தாரணை. அதாவது, 12-பிரத்தியஹாரம் செய்வது எவ்வளவு கஷ்டமோ, ஒரு தாரணை செய்வது அவ்வளவு கஷ்டம்; 12-தாரணை கஷ்டப்பட்டுச் செய்தால் தியானம் சித்திக்கும். அந்த தியானத்திலிருந்து சமாதியை அடையலாம். இப்படி பஹுகாலம் நிச்சலனமாய் சமாதியிலிருந்த யோகி பிரம்ம சாக்ஷாத்கார ரூபசித்தியை அடைவான். இதற்குச் சாமவேதத்தில் 46-வது, யோகசூடா மண்யுபநிஷத்தில்,

"ப்ராணாயாம த்விஷட்கேந ப்ரத்யாஹாரஃ ப்ரகீர்த்திதஃ, ப்ரத்யாஹார த்விஷட்கேந ஜாயதே தாரணாஶுபா, தாரணா த்வா தஶ ப்ரோக்தம் த்யாநம் யோகவிஶாரதைஃ, த்யாந த்வாதஶகே நைவ ஸமாதிரபிதீயதே, யத்ஸமாதௌ பரஞ்ஜோதிரநந்தம் விஶ்வதோமுகம், தஸ்மிந் த்ருஷ்டே க்ரியா கர்மயாதாயாதோ ந வித்யதே." "ஸுகாஸநே ஸமாக்ருஷ்ய வாயுமப்யாஸ யோகிநா, விதிவத்து கும்பகம் க்ருத்வா ரேசயேச் சீதரஶ்மிநா, உதரே பஹுரோகக்நங் க்ரிமிதோஷம் நிஹம்தி ச, முஹுர் முஹுரிதம் கார்யம் ஸூர்யபேத முதாஹ்ருதம், நாடீப்யாம் வாயுமாக்ருஷ்ய குண்டல்யாஃ பார்ஶ்வயோஃ க்ஷிபேத், தாரயேது தரேபஶ் சாத் ரேசயே திடயா ஸுதீஃ கண்டே கபாதி தோஷக்நம் ஶரீராக்நி விவர்தநம், நாடீஜலாபஹம் தாது சததோஷ விநாஶநம். கச்சதஸ் திஷ்டதஃ கார்யமுஜ்ஜாயாக்யந் து கும்பகம், முகேந வாயும் ஸங்க்ருஹ்ய க்ராணரந்த்ரேண ரேசயேத், ஶீதலீ கரணஞ்சேதம் ஹந்தி பித்தம் க்ஷுதாம் த்ருஷம், ஸ்தநயோரதபஸ்ரேவா லோஹகாரஸ்யவேகதஃ, ரேசயேத் பூரயேத்வாயு மாஶ்ரமந்தேஹகந்தியா, யா ஶ்ரமோ பவேத் தேஹேததா ஸூர்யேண பூரயேத், கண்டஸங்கோசநம் க்ருத்வா புநஶ்சந்த்ரேண ரேசயேத் வாதபித்த ஶ்லேஷ்மஹரம் ஶரீராக்நி விவர்தநம், குண்டலீபோதகம் வக்த்ர தோஷக்நம் ஶுபதம் ஸுகம், ப்ரஹ்மநாடீ முகாந்தஸ்த கபாத்யர்கள நாஶனம், ஸம்யக் பந்த ஸமாத் பூதம் க்ரந்தித்ரய விபேதகம், விஶேஷேணைவ கர்தவ்யம் பஸ்த்ராக்யம் கும்பகம் த்விதம், பந்தத்ரயமதேதாநீம் ப்ரவக்ஷ்யாமி யதாக்ரமம், நித்யம் க்ருதேநதேநாஸௌ

வாயொர்ஜயமவாப்நுயாத்.” 63-யஜுர்வேத யோகசிகோப நிஷத்து. “ப்ராணயாமோ பவேதேவம் பாலகேந்த நபாவக:.”

இந்தப் பிராணயாமத்தினால் ஸர்வரோகங்களும் நிவாரணை யாவதேயன்றி புண்ணிய பாபங்களென்னும் விறகுகளை பிராணயாமமென்னும் அக்கி தக்தம் செய்துவிடும். புண்ணிய பாப கர்மங்கள் எப்பொழுது நசித்துவிடுகின்றனவோ அப்பொழுதே சஞ்சிதமென்னும் மூட்டை பஸ்மமாய் விடுகின்றது. புண்ணிய பாபங்கள் எப்பொழுது பஸ்மமாகின்றனவோ அப்பொழுதே புனர் ஜநநமில்லாத விதேஹ முக்தியை அடைகின்றான்.

அர்ஜுநன்:—ஓ கிருஷ்ணமூர்த்தியே! யோகி தியானம் செய்யும்பொழுது, தேகம் சிரசு கண்டம் முதலானவைகளை அசைக்காமலும், இங்குமங்கும் திக்குகளைப் பாராமலும் அசையாதவனாய்த் தன் மூக்கு நுனிக்குறியில் திருஷ்டி நிறுத்தவேண்டியதேன்?

கிருஷ்ணன்:—அப்படிச் செய்வதனால் அவனுடைய திருஷ்டி சுற்றுப் பக்கங்களிலிருக்கும் இதர விஷயங்களில் ஓடமாட்டாது. அதனால், அவனுடைய மனது விஷயங்களின்மீது ஓடுவதற்கு அவகாசமிராது.

அர்ஜுநன்:—ஆனால், சுவாமீ! அப்படி தியானம் செய்யும்போது பிராணவாயுவை பந்தனம் செய்யவேண்டுமென்று இதற்குமுன் சொல்லிவந்தீரே அது ஏன்?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! அப்படிச் செய்யாவிட்டால் திருஷ்டியை மூக்குநுனியில் நிறுத்துவதற்குச் சாத்தியப்படாது. திருஷ்டியானது மூக்கு நுனிக்குறியில் நிற்காவிட்டால் சித்தம் (மனது) சலித்துக்கொண்டே யிருக்கும்.

அர்ஜுநன்:—ஆனால், அப்படிப் பிராணவாயுவை பந்தனம் செய்வதனால் பிராணனுக்கு அபாயம் உண்டாகாதா?

கிருஷ்ணன்:—யோகாப்பியாசி, ("ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்யம்" பிராணாயாமத்தில் சொல்லியது போல்) கிரமக்கிரமமாய் பிராணவாயுவை நிறுத்தி, அப்பியாசம் செய்துவந்தால் அபாயம் உண்டாகாது. அதனால் மனதானது ஒரே திருஷ்டியில் சலிக்காமல் நின்று பகவத் சொரூபமென்னும் லக்ஷ்யத்தில் நின்றிருக்கும்.

யோகாப்பியாசி, மனோ புத்தி இந்திரியங்களினுடையவும், பிராணவாயுவினுடையவும், சரீரத்தினுடையவுமான வியாபாரங்களையெல்லாம் இதுவரையில் யான் சொல்லியது போல் நிறுத்தினவனும், சாந்த சித்தனும், பிரம்மசர்ய விரதத்தில் இருப்பவனும் இருக்கப்பட்ட ஓர் சத்குருவை ஆசிரயித்து அவருக்குச் சிசுரூஷைகளைச்செய்து அவரால் உபதேசம்பெற்று ஜன சமூஹமுள்ள இடங்களில் இல்லாமலும், ஒருவேளை ஜனங்கள் இருக்கப்பட்ட இடத்திற்கு தான் வந்தபோதிலும் அவர்களுடன் தான் கலக்காமலும், பிக்ஷான்னம் புஜித்து ராகத்துவேஷ ரஹிதனாயிருந்து யாரிடத்தும் எந்தக் காரணத்தினாலும் விரோதிக்காமல் இருப்பதே பிரம்மசர்ய விரதமென்று சொல்லப்படும். ஆதலால், அப்படிப்பட்ட விரதத்திலிருந்து சதா என்னிடத்திலேயே மனதை நிறுத்தி என்னையே தியானித்துக்கொண்டிருக்க வேண்டும்.

யுஞ்ஜந் நேவம் ஸதாத்மாநம் யோகீ நியதமாநஸ: 15.
ஶாந்திம் நிர்வாண பரமாம் மத்ஸம் ஸ்தாமதிகச்சதி.

அர்ஜுனா! (10-11-12-13-14-சுலோகங்களில் சொல்லியதுபோல்,) தன் மனதை யோகத்தினால் நிறுத்த அப்பியாசம் செய்துவந்தால் கடைசியில் அந்த யோகம் பழுத்துச் சித்தசாந்தி உண்டாகும். எப்பொழுது சாந்த சித்தனாகின்றானோ அப்பொழுது என்னை அடைந்தவனாகின்றான். என்றால், ஜநந மரணாதி சம்சார ரஹிதமாய் நிர்வாண பதவியை அடைகின்றான்.

நாத்யஶ்நதஸ்து யோகோ ஸ்தி நசைகாந்த மஶ்நதஃ
நசாதி ஸ்வப்ந ஶீலஸ்ய ஜாக்ரதோநைவ சார்ஜுந. 16

அர்ஜுநா! இப்பொழுது யோகியினுடைய ஆஹாராதி விஷயத்தைக்குறித்துச் சொல்லுகின்றேன் கேள். தியானயோக ஸமாதி சித்தியடையும்வரையில், சரீரம் நிற்பதற்காக வேண்டிய ஆஹாரம் மாத்திரம் புஜிக்கவேண்டும். இதற்குச் சதபத சுருதி பிரமாணம்.

"*யதுஹவா ஆத்மஸம்மித மந்நம் ததவதிதந்ந ஹிநஸ்தி*
யத் பூயோ ஹிநஸ்தி தத்யத் கநீயோ ந தத்வதி."

சரீரம் நிற்பதற்காக வேண்டிய ஆஹாரத்தை மாத்திரம் புஜித்தால் அது, யோகாப்பியாசிக்கு தியானுனுஷ்டானத்தில் யோக்கியதையை உண்டாக்கி அவனைக் காப்பாற்றுமேயொழிய, அநர்த்தத்தை உண்டாக்கமாட்டாது.

'*பூரயே தஶநேநார்த்தம் த்ருதீய முதகேந து, வாயோஸ் ஸஞ்சாரணார்தாய சதுர்த மவஶேஷயேத்.*' '*அர்தமஶநஸ்ய ஸவ்யஞ்ஜநஸ்ய த்ருதீயமுதகஸ்யது வாயோஸ் ஸஞ்சாரணார்தந்து சதுர்த மவஶேஷயேத்.*'

யோகாப்பியாசி தன்வயிற்றில் இவ்வளவுதான் செல்லுமென்று தோன்றிய ஆஹாரத்தில் பாதி புஜிக்கவேண்டும். மூன்ருவது பாகத்தை ஜலபானத்தால் நிரப்பவேண்டும். பிராணாதி வாயுக்கள் சுவேச்சையாய் சஞ்சரிப்பதற்காக நான்காவது பாகத்தை விட்டுவைக்கவேண்டும். இதற்கு அதிகமாய்ப் புஜித்தால் அது அநர்த்தத்தை உண்டாக்கும். என்ருல், அப்படிப்பட்ட ஆஹாரம், இந்திரியங்களுக்கு மிகவும் பலத்தை யுண்டாக்கி விஷயங்களில் பிரவேசித்து யோகத்திற்கு பிரஷ்டத்தவத்தை உண்டாக்கும். மேற்சொல்லிய மிதமான ஆஹாரத்தை விட, குறைவாய்ப் புஜித்தால், சரீரத்திலுள்ள இந்திரியங்களுக்குப் பூர்த்தியாய்

பலங்குறைந்து, தியானுனுஷ்டானத்திற்கு யோக்கியதையை உண்டாக்கி அவனை ரக்ஷிக்கும். ஆதலால், யோகாப்பியாசியானவன், ஆஹாரத்தை சாஸ்திரத்தில சொல்லியதைவிட அதிகமாகவேனும், குறைவாகவேனும் புஜிக்கலாகாதென்று அறியவேண்டும். அதுபோல் யோகி, இந்திரியங்களின் அலுப்பைத் தீர்த்துக்கொள்ள மிதமான நித்திரை செய்யவேண்டுமேயொழிய அதிக நித்திரை செய்தால், நித்திரை சித்திக்குமே யொழிய யோகம் சித்திக்காது. யோகி, நித்திரை பூர்த்தியா யில்லாமலு மிருக்கலாது. நித்திரை யில்லாம லிருந்தால் இந்திரியங்கள் மிகவும் அலுப்புண்டு யோகாப்பியாசம் செய்ய அதிக கஷ்டத்தை உண்டாக்கும். உலகத்திலுள்ள மற்ற ஜனங்கள், அதிக நித்திரை செய்து விழித்துக்கொண்டு தாம் விஷயங்களில் பிரவர்த்திப்பது போல், யோகியும் இருப்பானுகில் யோகத்திற்குப் பங்கத்தை உண்டாக்கும். இதற்கு நாரதபுராணம் பிரமாணம்.

"நித்ராஹார பயஶ்வாஸசேஷ்டா தந்த்ராதி தர்ஹநம்
க்ருத்வா நிமீலிதா...ஸ்து ஹத்தோத்யாயந் ப்ரவலித்யதி."

அதிக ஆஹாரம், அதிக நித்திரை, உணவு, பயம், விசுவாஸம், சேஷ்டை, சோம்பல், கரசரணுதி அவயவ வியாபாரம், மந்தபுத்தி இவைகளைவிட்டு நேத்திரங்களைமூடி தியானத்தி லிருப்பவனே யோகசித்தியை அடைந்தவனுவான். இந்த ஆஹாரவிஷயமாய் 4-வது, அத்தியாயம் 29 - 29½, சுலோகத்தில் சொல்லப்பட் டிருக்கின்றது. 17-வது சுலோகத்திலும் சொல்லப்படும்.

யுக்தாஹார விஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு
யுக்த ஸ்வப்நாவபோதஸ்ய யோகோ பவதி துகஹா. 17.

அர்ஜுனா! யோகிக்கு தியானயோகம் எவ்வாறு சித்திக்குமென்று கேட்கின்ருயோ சொல்லுகின்றேன் கேள்: —

மேற்சொல்லிய சுலோகங்களில் சொல்லியதுபோல் யோகாப்பியாசி மிதஆஹாரம், மிதநடை, (தேஹ ஸம் ரக்ஷணார்த்தமாய் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு வரையில் ஆஹாராதிகளைச் சம்பாதிக்கச் செய்யவேண் டிய வேலைகளைமாத்திரம் செய்து) மிதநித்திரை, உள்ள வனுக்கு, சம்சார துக்கத்தைப் போக்கடித்து ஞானத் தை உண்டாக்கும் தியானயோகம் சித்திக்கும். (யோகி யானவன் மிதஆஹாரம் புஜிக்கும் விஷயத்தைக் குறித்து "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பிராணயாமாப் பியாஸத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல் என் பதில் கொள்ளவே பாசிப்பயறு படியரைக்கால் குருணை நெல் பச்சரிசி படியரைக்கால் என்பதைப் பார்க்க.)

யதா விநியதம் சித்த மாத்மந்யேவா வதிஷ்டதே
நிஸ்ப்ருஹ ஸ்ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா. 18.

கிருஷ்ணன்:—ஆதலால், ஓ அர்ஜுனா! இப்படி நான் சொல்லியதுபோல், மனதை நிறுத்தி யோகத்தை அப்பிய சித்துக்கொண்டேவந்தால், சிலகாலங்களுக்கெல்லாம் அந்த யோகியினுடைய மனது தனக்குத்தானாய் பரமாத்ம சொரூபத்தில், (கர்ப்பூரத்தை எரித்தபோது ஒன்றும் சேஷமாகாமல் கர்ப்பூரமெல்லாம் எரிந்து ஜோதியில் கலந்துவிடுவதுபோல்) கலந்துவிடும். அப்படிப்பட்ட மஹாயோகியானவன்,

"எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்."

என்னும் பட்டினத்தடிகளின் கட்டளையின்படியே, எவ்விடத்தி லிருந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும் அவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் ஓடிக்கொண்

டிருந்தாலும் மனதுமாத்திரம் எந்தவிஷயங்களிலும் அகப்படாமல் எப்பொழுதும் ஆத்மசொரூபத்திலேயே லயித்திருக்கும். அவனுடைய மனது எப்பொழுது அப்படிப்பட்ட ஸ்திதிக்கு வருகின்றதோ, அப்பொழுது அவன் யோகசித்தியை அடைந்தவனாகின்றான். என்றால், யோகாப்பியாசம் செய்யப்பட்டவனுடைய மனது சொரூபத்தில் கலந்து நிச்சலமா யிருக்கவேண்டும். அப்படியிருப்பவன் சமாதிநிஷ்டனென்று சொல்லப்படுவான். (இச்சமாதி "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" மௌனமென்றால் எது? சமாதி என்றால் எது? என்பதில் பார்க்க.)

அர்ஜுநன்:— அவ்வாறு எவ்வளவுகாலம் அப்பியசித்தால் யோகசித்தியை அடைவான்?

கிருஷ்ணன்:—பிரதிதினம் நியமம் தவறாமல் காலை மாலைகளில் அப்பியசித்துவந்தால் நிர்மல நிஸ்சல சித்த விருத்தியுடைய புருஷர்களுக்கு ஷட்(ஆறு)மாதங்களிலும், மந்தபுத்தி யுடையவர்களுக்கு வருஷத்திலும், கேவல மூடாத்மாக்களுக்கு த்வாதச வருஷங்களிலும் சித்திக்குமென்று யோகசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அர்ஜுநன்:—ஐயா! யோகாப்பியாசம் செய்து கொண்டே வருவானாகில் அவன் மனது பரமாத்ம சொரூபத்தில் கலந்துவிடுமென்று சொன்னீரல்லவா? அப்பொழுது அவன் மனது எவ்விதமாயிருக்கும்?

யதாதீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமாஸ்ம்ருதா
யோகிநோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மந:. 19.

அர்ஜுநா! அப்படிப்பட்டவனுடைய மனது எப்படியிருக்குமென்றால், யோகத்தை அப்பியசித்துக்கொண்டேவர, ஐயாயிரம் பிரவணங்களை உச்சரிக்கும்வரையில் சுவாசத்தை நிறுத்தப் (கும்பிக்கப்) பழகினவன் மனது காற்றில்லாத இடத்தில் வைக்கப்பட்ட தீபம், அசையாமல் தன்

சமீபத்திலிருக்கும் வஸ்துக்களை மாத்திரம் எப்படி பிரகா சிக்கச் செய்கின்றதோ, அதுபோல், சுவாதீனமான மன துடைய யோகி சகல எண்ணங்களையும் மறந்து, சிலாவடிவ மாய்ச் சலிக்காமலிருப்பான். அப்பொழுது அவனுடைய இந்திரியங்கள் விஷயங்களில் சலிக்காமல் மேற்சொல்லிய அசையாத தீபம்போலிருக்கும். அஃதெப்படியென்றால், தீபத்தை அசையும்படிச் செய்வது வாயுவல்லவா? வாயு வில்லாவிடில் தீபம் அசைவதற்குக் காரணமில்லையல்லவா? அதுபோல், மனதை அசையும்படிச் செய்வது இந்திரிய விஷயங்கள். சமாதி நிலையில் நின்றபோது இந்திரிய விஷயங்களும் மனதும் மேற்சொல்லிய தீபம்போல் அசையா மலிருக்கும். ஆதலால், யோகியினுடைய மனது அசை யாமல் மேற்படி தீப நிலைமைக்கு எப்பொழுது வருகின் றதோ, அப்பொழுது அந்த மனது சாந்தத்தை அடைந்த தாகும். அதனால் அவன் யோகசித்தியை அடைந்தவ னாகின்றான். "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" பிராணயாமாப்பியாசத்தினால் பிராணன் சரீரத்திலிருந்து விடுபடுதல் என்பதில் தாரணையில் சொல்லியதுபோல் கஷ் டப்பட்டுப் பதினையாயிரம் பிரணவங்களை உச்சரிக்கும் வரையில் சுவாஸம் நிறுத்தப் பழகினவனுடைய மனமா னது எல்லா விஷயங்களிலும் தனக்குத்தானாகவே யோக பலத்தினால் விரக்தியை அடையச்செய்யும். அப்பொழுது, சாதாரண மனுஷ்யர்களுக்கும் தனக்கும் எவ்வளவோ பேதமிருக்கின்றதென்று தன் மனதிற்கே தோன்றி, இது ரர்களிடம் யாதொன்றும் பேச எண்ணமில்லாத ஸ்திதியில் கொண்டுவந்து மனதை ஒரே நிலையில் நிறுத்துகின்றது. இதுவிஷயம் நீங்கள் பிராணயாமம் செய்துவரும் அனு பவத்தினால் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்க் காணலாம். ஆதலால், இதை வாசிக்கப்பட்ட அன்பர்கள் யாவரும் எப்

படியாயினும் கஷ்டப்பட்டு நாளாவட்டத்தில் க்ரமக்ரமமாய்ச் சிறுகச் சிறுக சுவாஸம் முதல் 25-பிராணவங்கள் எண்ணும் வரையில் நிறுத்தி சிலநாள் பழகி, பிறகு 50-பிராணவங்கள் எண்ணும் வரையில் நிறுத்தி சிலநாள் பழகியபின் 75-பிராணவங்கள் எண்ணும்வரையில் நிறுத்தி இப்படிச் சிலநாள் பழகி, பிறகு 100-பிராணவங்கள் எண்ணும் வரையில் நிறுத்தி இப்படிச் சிலநாள் பழகி, பிறகு 125-பிராணவங்கள் எண்ணும் வரையில் நிறுத்தி இப்படிச் சிலநாள் பழகி, பிறகு 150-பிராணவங்கள் எண்ணும் வரையில் நிறுத்தி இவ்விதமாய்ப் பதினையாயிரம் எண்ணும் வரையில் சுவாஸத்தை நிறுத்தி, "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" சொல்லியதுபோல் உயர்த்திக்கொண்டே வந்தால் மேற்சொல்லிய விஷயங்களை எல்லாம் தமது சுவானுபவத்திலேயே காணலாம்.

யத்ரோ பரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா
யத்ரசை வாத்ம நாத்மாநம் பச்யந்நாத்மநி துஷ்யதி. 20.

ஸுக மாத்யந்திகம் யத்தத்புத்தி க்ராஹ்ய மதீந்த்ரியம்
வேத்தி யத்ர நசைவாயம் ஸ்தித ப்சலதி தத்வத꞉. 21.

யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத꞉
யஸ்மிந் ஸ்திதோ ந து꞉கேந குருணாபி விசால்யதே. 22.

தம் வித்யா து꞉கஸம்யோக வியோகம் யோகஸஞ்ஞிதம்
ஸ நிச்சயேந யோக்தவ்யோ யோகோ நிர்விண்ணசேதஸா. 23.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா ! யோகாப்யாசம் செய்யப்பட்ட மஹாத்மாவினுடைய லக்ஷணம் இன்னும் எப்படிப்பட்டதென்றால், சொல்லுகின்றேன் கேள்:—

யோகாப்யாச பலத்தினால் காற்றில்லாத ஸ்தலத்தில் இருக்கப்பட்ட தீபம்போல் நிச்சலனமாய் ஏகாக்ரமாயிருக்கப்பட்ட மனது சுவானுபவ ரூப சமாதியிலிருந்து சலிக்காமலிருக்கும். அந்தச் சமாதியினால் அந்தக்கரணம் பரி

சுத்தமாய் பரஞ்சோதி சொரூபத்தை அடைந்து ஆநந்தித்துக்கொண்டிருப்பான். இந்தப் பரஞ்சோதி சொரூபம் இந்திரியங்களால் தெரிந்துகொள்ளத் தக்கதல்ல. அதாவது, நேத்திரங்களால் பார்க்கத்தக்கதும், செவிகளால் கேட்கத்தக்கதும், மூக்கினால் முகரத்தக்கதும், வாக்கினால் சொல்லத்தக்கதும், தேஹத்தினால் ஸ்பரிசிக்கத் தக்கதுமல்ல. பின் எப்படிப்பட்டதென்றால், ஞான கர்மேந்திரிய விஷயங்களுக்கு எட்டாததும், யோகாப்பியாசத்தினால் பரிசுத்தமான புத்திக்கு மாத்திரம் எட்டுவதுமாயும் இருக்கப்பட்டது. இவ்வித சுகத்தை அனுபவித்துக்கொண்டிருப்பவன் அந்தச் சுகத்தைவிட்டு நீங்கான். அப்படிப்பட்ட சுவானுபவ சுகத்திலிருப்பவன் இதரமான சுகங்களை மித்தையென்றும், துச்சமானதென்றும் நினைப்பான். மித்யாபூதமான பிரபஞ்சத்தில் சரீரம் இருக்கும் வரையில் பிராரப்த வசத்தினால் உண்டாகும் ரோகாதி துக்கங்களுக்கு வியசனப்படமாட்டான். அர்ஜுனா! சமஸ்த துக்கசாகரமாகிய சம்சாரத்திலிருந்து விமுக்தியடைவதற்குச் செய்யப்படும் பிரயத்தின விசேஷமே யோகமென்று சொல்லப்படும். அந்த யோக சித்தியைப் பிடிவாதத்துடன் இருந்து அப்பியசிப்பவர்கள் அதாவது, ரசவாதம் செய்யப்பட்டவர்கள் பொன் வெள்ளி செய்வதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டுப் பாடுபட்டுக்கொண்டு வந்தபோதிலும், சித்தியாகாவிடில் வியசனப்படாமல் மறுபடியும் அதை விடாமல் அப்பியசிப்பதுபோல், யோகியும் அநேகவித உபாதைகளைப் பட்டபோதிலும் அவைகளை லக்ஷ்யம் வைக்காமலும் இவ்வளவு காலம் வரையில் யோகாப்பியாசம் செய்தும் சித்திக்கவில்லையே யென்னும் மனக்கவலையில்லாதவனாய், எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் சஹித்துக்கொண்டு சாதித்து அதை அடையவேண்டுமென்னும் வைராக்கியத்

தடவிருந்தாலேயன்றி, அப்படிப்பட்ட யோகஸித்தி லபிக்கமாட்டாது.

ஸங்கல்பப்ரபவாந் காமாம் ஸ்த்யக்த்வா ஸர்வாநஶேஷத:
மநஸைவேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத:. 24.

ஶநை ஶ்ஶநை ருபரமேத் புத்த்யா த்ருதிக்ருஹீதயா
ஆத்மஸம்ஸ்தம் மந: க்ருத்வா ந கிஞ்சிதபி சிந்தயேத். 25.

ஆதலால், ஓ அர்ஜுநா! யோகியானவன் முக்கியமாய்ச் செய்யவேண்டிய விஷயம் என்னவென்றால், இந்திரியங்களை நிறுத்தவேண்டும். நிறுத்துவதென்றாலோ, கண்கள் மூக்கு வாய் செவிகள் முதலானவைகளினால் செய்யத்தக்கதல்ல; ஏனென்றால், ஓர் வஸ்துவை நேத்திரங்களால் பார்த்து அதில் இச்சையுண்டானபோது நேத்திரங்களை மூடிக்கொண்டால் அந்த வஸ்துவில் உண்டாகிய ஆசை அவ்வளவிலேயே விட்டு ஒழியாது. இப்படியே ஒவ்வோரிந்திரியங்களினாலும் உண்டாகும் ஆசை, அந்தந்த இந்திரியங்களை மூடிக்கொண்டமாத்திரத்திலேயே நிவர்த்தியாகமாட்டாது. பின் எப்படி நிவர்த்தியாகுமென்றால், மனதினால் மாத்திரமே நிவர்த்தியாகவேண்டியதாயிருக்கின்றது. ஏனென்றால், இந்திரியங்கள் எந்த விஷயங்களில் ஒடிக்கொண்டிருக்கின்றனவோ அந்த விஷயங்களில் உண்டாகும் இச்சை ஸங்கல்பத்தினால் உண்டாகின்றது. அந்த சங்கல்பத்திற்கு உத்பத்தி ஸ்தானம் மனதாகவேயிருக்கின்றது. ஆதலால், சங்கல்பத்திற்கு மனது இடங்கொடாமலிருந்தால் எண்ணங்கள் உண்டாகாமலிருக்குமல்லவா? ஆதலால், யோகியானவன் தன் மனதுக்கு எப்பேர்ப்பட்ட சங்கல்பத்தையும் சங்கல்பிக்க இடங்கொடுக்கலாகாது. அப்படிச் செய்வதனால் அவனுடைய மனதில் அநேக எண்ணங்கள் உண்டாகமாட்டாது. எப்பொழுது எண்ணங்கள் உண்டாகாமலிருக்கின்றனவோ, அப்பொழுது

அவன் இந்திரியங்கள் எந்த விஷயங்களில் ஓடியபோதிலும் அந்த விஷயங்களில் அவனுக்கு இச்சையிராது. அதனால் அவன் இந்திரியங்களை மனதினால் ஜயித்தவனாகின்றான். ஆனால், அப்படிச்செய்வது புத்தி பலமுடையவனுக்கே யன்றி சலிக்கின்ற மனதுடையவனுக்கல்ல. திடமான நிச்சயமுடைய புத்தியினால் மனதை மேற்சொல்லியதுபோல் வசப்படுத்தவேண்டும். சங்கல்ப விகல்பமுடைய மனதைக் குறித்து, சுலோகம் பிரமாணம்.

"ந யாஹி சேதஸ்த்வமி தஸ்ததோபி தேஹேந்த்ரியாத்யைர் ந [க்ருஷ்வ கர்ம
த்வம் யத்ரகுத்ரா ப்யுபவிஶ்யநித்யம் விசாரய ஸ்வஸ்வநிதாநமந்தஃ."

ஓ சஞ்சலமுடைய மனதே! உன்னிஷ்டப்படி இங்குமங்கும் குரங்கைப்போல் ஓடாதே, சரீரம் இந்திரியம் முதலானவைகளுடன் கூடி முக்திக்குப் பிரதிபந்தகமாகிய விஷயப் பிரவர்த்தி ரூபகர்மங்களைச் செய்யாதே. அப்படிப்பட்ட விஷய பிரவர்த்தியைவிட்டு நீ முதலாகிய சமஸ்த பிரபஞ்சத்திற்கும் அதிஷ்டானமாயிருக்கும் ஆத்மசொரூப விசாரணையைச் செய். அதாவது, அவித்யை நசித்து தன்னிஜ சொரூபானுபவம் உண்டானபோது மித்தையாகிய ஜகத்து உண்டென்னும் பிரமை உண்டாகமாட்டாது.

யதோ யதோ நிஶ்சரதி மநஶ்சஞ்சல மஸ்திரம்
ததஸ்ததோ நியம்யைத தாத்மந்யேவ வஶம்நயேத். 26.

ஆனால், ஓ அர்ஜுநா! மனது மிகவும் சபல சுபாவமுடையதாதலால் அதை எவ்வளவு இழுத்துப் பிடித்தபோதிலும் நிலையாய் நிற்கமாட்டாது. ஏதாகிலும் ஒரு விஷயத்தில் ஓடிக்கொண்டே யிருக்கும். அஃதெப்படியென்றால், ஏதேனும் நல்ல வஸ்துக்களைப் பார்த்தபோது அதை கிரஹிப்பதற்குக் கோரும். ஏதேனும் சங்கீதம்

பாட்டைக்கேட்கும்போது அதை இன்னும் சற்றுக் கேட்க வேண்டுமென்றே கோரும். ருசிகரமாகிய பதார்த்தத்தைக் கண்டால் அதைப் புசிக்கவேண்டுமென்றே கோரும். சுகந்த வாஸனைவந்தபோது அதை ஆக்கிராணிக்கவேண்டுமென்றே கோரும். வெய்யிற் காலங்களில் குளிர்ந்த காற்றைக் கோரும். குளிர்காலங்களில் உஷ்ணத்தைக் கோரும். இப்படியே எப்பொழுதும் எதிலோ ஒன்றில் மனதிற்கு ஆசை யுண்டாகின்றதோ அப்போதைக்கப்போது அந்த விஷயங்களிலிருந்து மனதைத் திருப்பிக்கொண்டே வந்தால் சிலகாலங்களுக்குள் அந்த மனது சபலத்துவத்திலிருந்து நீங்கி, விஷயங்களின் ஆசையொழிந்து தன் சுவாதீனமாகும். அதாவது, சாந்தியடையும் என்பதாம்.

ப்ரஶாந்தமநஸம் ஹ்யேநம் யோகிநம் ஸுகமுத்தமம்
உபைதி ஶாந்தரஜஸம் ப்ரஹ்மபூத மகல்மஷம். 27.

அப்படி மனது எப்பொழுது சாந்தியை அடைகின்றதோ அப்பொழுது யோகியானவன், ரஜோகுணத்தினால் உண்டாகும் காமக்குரோதாதிகள் இல்லாதவனாய்ப் புண்ணிய பாபங்களை உதறிக்கொண்டு ஜீவன்முக்தனாவான். இந்தக் காமக்குரோதங்களே ஸமஸ்த பாபங்களுக்கு ஹேதுபூதமாயும், ஞானத்திற்கு விரோதமாயும் இருக்கின்றன. இவைகள் எப்பொழுது விட்டு ஒழிகின்றனவோ அப்பொழுது கல்மஷ ரஹிதனாகின்றான். அதாவது, பரப்பிரம்ம சொரூபனாகின்றான். என்றால், புண்ணிய பாபங்கள் எப்பொழுது ஒழிந்தனவோ அப்பொழுது எல்லாவற்றிலும் சிரேஷ்டமானதும், சாஸ்வதமானதுமாகிய பிரம்மானந்தத்தை யோகி அடைகின்றான்.

யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ விகதகல்மஷ:
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶ மத்யந்தம் ஸுகமஶ்நுதே. 28

ஆதலால், இப்பொழுது நான் சொல்லியதுபோல் எவனொருவன் தன் மனதை விஷயங்களிலிருந்து திருப்பி யோகாப்பியாசத்தை அப்பியசித்துக்கொண்டு வருகின்றானோ அப்படிப்பட்டவன் விகத கல்மஷனாய் என்றால், ஆகாம்ய சஞ்சித பிராரப்தங்களாகிய புண்ணியபாபங்கள் நசிக்கப்பட்டு (புண்ணியபாபங்களில்லாதவனாய்) பரப்பிரம்ம சொரூபனாய் நித்தியாநந்தத்தை அனுபவிப்பான்.

அர்ஜுநன்:—பரப்பிரம்ம சொரூபன் எப்படிப்பட்டவன்? அவனுடைய லக்ஷணம் எப்படியிருக்கும்?

ஸர்வபூதஸ்த மாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶநः. 29.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! பிரம்மசொரூபன் எப்படிப்பட்டவனென்றால், இதற்குமுன் நான் சொல்லியது போல் யோகத்துடன் கூடிய மனதுடையவனாய் எவன் இருக்கின்றானோ, அப்படிப்பட்டவன், சர்வ வஸ்துக்களிலும் சமதர்சனனென்றே சொல்லப்படுவான். அதாவது, பிபீலிகாதி பிரம பர்யந்தமாயுள்ள சமஸ்த ஜந்துக்களும் பரப்பிரம்ம சொரூபமேயென்று தெரிந்துகொண்டு அவைகளை யெல்லாம் சமபாவமாய்ப் பார்க்கின்றான். ஆதலால், அப்படிப்பட்டவன் இதர சமஸ்த ஜந்துக்களிடத்திலும், தான் இருப்பதாயும், தன்னில் இதர ஜந்துக்கள் இருப்பதாயும் நினைக்கின்றான். இப்படிப்பட்ட லக்ஷணங்கள் இருப்பதனால் அவன் பிரம்ம சொரூபனென்று சொல்லப்படுவான்.

அர்ஜுநன்:—அப்படிப்பட்டவன், சமஸ்த ஜந்துக்களும் பிரம்ம சொரூபமே யென்று எப்படித் தெரிந்து கொள்வான்?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! மிடா, முடக்கு, பானை, சட்டி முதலானவைகள் மண்ணினால் செய்யப்பட்டன

வென்றும்; மகரகுண்டலம், கிரீடம் முதலாகிய பூஷணங்கள் பொன்னினால் செய்யப்பட்டனவென்றும்; கத்தி, சூலம், கரண்டி முதலானவைகள் இரும்பினால் செய்யப்பட்டனவென்றும்; நீர்க்குமிழிகள், நுரைகள், திவலைகள் முதலானவைகள் ஜலத்தினால் உண்டானவைகளென்றும்; நானாவித வஸ்திரங்கள் நூலினால் செய்யப்பட்டனவென்றும் எப்படித் தெரிந்துகொள்ளுகின்றானோ, அதுபோல் யோகியானவன் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த ஜந்துக்களுக்கும் நாமரூபங்களினால் பேதங்கள் உண்டாயிருந்த போதிலும், அவைகளெல்லாவற்றிலும் இருக்கப்பட்ட ஜீவாத்மாக்களெல்லாம் அந்தப் பரமாத்ம சொரூபமே யொழிய, இதரமானவை யல்லவென்று தெரிந்துகொள்வான்.

யோமாம் பஶ்யதி ஸர்வத்ர ஸர்வஞ்ச மயி பஶ்யதி
தஸ்யாஹம் ந ப்ரணஶ்யாமி ஸச மே நப்ரணஶ்யதி. 30.

அர்ஜுனா! அப்படி எவனொருவன் ஸமஸ்த பூதங்களையும் பரப்பிரம்ம சொரூபமாய் அறிகின்றானோ அவனுக்கு நான் காணாமல் போகிறதுமில்லை, அவன் என்னைப் பார்க்காமல் இருப்பதுமில்லை. நானே அவன்; அவனே நான். நாங்கள் இருவரும், ஒன்றாய் விடுகின்றோம்.

ஸர்வபூதஸ்திதம் யோமாம் பஜத்யேகத்வ மாஸ்திதঃ
ஸர்வதா வர்தமாநோபி ஸ யோகீ மயி வர்த்ததே. 31.

ஸர்வம் ஆத்ம சொரூபமே என்னும் ஐக்கிய ஞானத்துடன் என்னைத் தியானிக்கப்பட்டவன் சமாதியில் இருக்கும்போதும், இல்லாதபோதும் என்னில் ஐக்கியமாயிருப்பான். இதற்கு சுருதிப்பிரமாணம் சொல்லுகின்றேன் கேள்.

"யஸ்மிந் ஸர்வாணி பூதாநி ஆத்மைவாபூத் விஜாநதঃ
தத்ர கோ மோஹঃ கঃ ஶோக ஏகத்வ மநுபஶ்யதঃ"

பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமாயுள்ள சகல பூதங்களும் ஆத்மசொரூபமாய் எப்புருஷனுக்குத் தோன்றுமோ அவனுக்கு மாயாவிலாச ரூபமாகிய அஞ்ஞானம் (மோஹம்) உண்டாகமாட்டாது. இப்படிப்பட்ட அஞ்ஞானத்தினால் உண்டாகும் துக்கம் அவனுக்கு இராது. ("ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" கர்ப்பத்தில் பிண்டம் தரிப்பது என்பதில் "யயேவம் வேதாஹம் ப்ரஹ்மாஸ்மீதி ஸ இதம் ஸர்வம் பவதி" என்று ப்ருஹதாரண்யோபநிஷத்தில் சொல்லியதுபோல்) எவன், ஆத்ம சொரூபியாகிய நானே பிரம்மமென்று தெரிந்து கொள்ளுகின்றானோ, அவனே அந்தப் பரப்பிரம்ம சொரூபனாகின்றான். அதாவது, சமஸ்த பூதாந்தராத்மாவாகிய என்னை அபேத புத்தியுடன் எவன் பார்க்கின்றானோ அப்படிப்பட்ட மஹாநுபாவன் நிஜமாய் என்னை அறிந்தவனாகின்றான்.

அர்ஜுநன்:—ஆனால், ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இப்படிச் சொன்னீரல்லவா, அப்படிப்பட்டவன் இதரர்களுக்கு அனுகூலம் செய்யப்பட்ட கார்யங்கள் உமக்கு அனுகூலமாயிருக்கலாம். ஒருவேளை அப்படிப்பட்டவன் ஏதேனும், பிரமாதத்தினாலேயோ, விதியில்லாமலோ, அல்லது புத்தி பூர்வகமாயோ இதரர்களுக்குப் பாதகரமாகிய ஹிம்சாதி கிருத்தியங்களைச் செய்தால் அந்தக் கிருத்தியங்களுக்கு நீர் உட்பட்டிருப்பீரா?

ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோர்ஜுந
ஸுகம்வா யதிவா துக்கம் ஸ யோகீ பரமோ மதஃ. 32.

கிருஷ்ணன்:—ஓ அர்ஜுநா! நீ கேட்ட கேள்விக்குச் சமாதானம் சொல்லுகின்றேன் கேள். எவனொருவன் தன்னிடத்திலும் இதர ஜந்துக்களிடத்திலும் பரமாத்மா ஒருவனே வியாபித்திருக்கின்றானென்று தெரிந்துகொள்ளுகின்றானோ அவன், இதரர்களுக்கு உண்டாகும் சுகதுக்கங்

கள் தனக்கு உண்டானதுபோல் அதாவது, இதரர்களுக்குச் சுகம் உண்டானபோது அந்தச் சுகம் தனக்கு உண்டானதாகவே எண்ணிச் சந்தோஷிப்பதும், அல்லது, அவர்களுக்கு துக்கம் உண்டானபோது அந்தத் துக்கம் தனக்கும் உண்டானதாகவே எண்ணி வியசனப்படுவதுமா யிருப்பான். இப்படி எவனொருவன், இதரர்களின் சுக துக்கங்களைத் தன் சுக்துக்கமாய் நினைக்கின்றானோ அப்படிப் பட்ட யோகியே சிரேஷ்டமானவன். இப்படிப்பட்டவன் இதரர்களுக்கு ஹிம்ஸாதி கிருத்தியங்களைப் புத்தி பூர்வகமாய் எப்படிச் செய்வான். ஆனால் தனக்குத் தெரியாமல் அபுத்தி பூர்வகமாய் தன் தேஹத்தின் மூலமாய் இதர ஜந்துக்களுக்கு ஹிம்சையுண்டாகும் வேலையைச் செய்யலாம். அதாவது, பூமியின் மீது நடக்கும்போது எறும்பு முதலான அல்பஜந்துக்களை மிதிப்பதும், சிறுநீர் விடும்போது அவைகளுக்கு அது சமுத்திரம்போல் இருந்து, அதில் அடித்துக் கொண்டுபோவது, இவை முதலான காரியங்கள் தனக்குத் தெரிந்து செய்யலாகாது. சிறுநீர் விடும்போது எறும்புகளில்லாத விடத்தில் சூர்யனுக்கு எதிரே உட்காராமல் தெற்கு முகமாய் உட்காரவேண்டும். ஆதலால், இவையெல்லாம் தெரிந்து புத்திபூர்வகமாய்ச் செய்வதல்ல. தனக்குத் தெரியாமல் செய்வதனால், அந்த ஹிம்சை அவனால் செய்யப்பட்டதல்ல. இதுபோல், இன்னும் ஹிம்சாதி கிருத்தியங்களை விதியில்லாமல் செய்யவேண்டியதா யிருக்கின்றது. அது எதுவென்றால், எறும்பு கொசு மூட்டுப் பூச்சு இவைகள் சுருக்கென்று கடித்தவுடனே அவ்விடத்தைக் கையினால் தடவித் தேய்க்கின்றான். அதனால் அந்த ஜந்துக்கள் சாகின்றன. இவை முதலான காரியங்கள் விதியில்லாமல் செய்வதேயொழிய புத்தி பூர்வகமாய்ச் செய்பவைகளல்ல. வேண்டுமென்று புத்திபூர்வகமாய்ச் செய்யும்

காரியங்களே யல்லவா அவனுக்குக் கெடுதியை உண்டாக்கும்? அப்படிப்பட்ட காரியங்களை அவன் செய்யவே செய்யான். ஆதலால், அவன் செய்யும் காரியங்களெல்லாம் எனக்கு நியாயமாகவே யிருக்கின்றன.

அர்ஜுனன்:—ஆனால், ஒருவன் துஷ்ட மிருகங்களைப் பார்த்தபோது அவைகளால் தனக்குக் கெடுதி யுண்டாகுமென்று நினைத்துப் பயந்தவனாய் அவைகள் இவனுக்குக் கெடுதி செய்யாம லிருந்தபோதிலும், அவைகளைக் கொல்வது ஹிம்சிப்பது முதலான காரியங்களைச் சிலர் செய்கின்றார்களல்லவா? அப்படிப்பட்ட காரியங்கள் புத்திபூர்வகமாய்ச் செய்யப்பட்ட காரியங்களே யாகின்றனவல்லவா?

கிருஷ்ணன்:—ஆம், ஆனால் நிஜமான யோகி, அதாவது நான் இப்பொழுது சொல்லிய லக்ஷணங்களையுடையவன், இப்படிப்பட்ட குரூர ஜந்துக்களைப் பார்த்தால் அவைகளினால் தனக்கொரு கெடுதியும் உண்டாகுமென்னும் பயத்தை அடையான். அந்த மிருகங்களும் எவ்வளவு குரூர சுபாவ குணங்களையுடையனவா யிருந்தபோதிலும் அப்படிப்பட்டவனுக்குக் கெடுதியை உண்டாக்குவதற்குப் பதிலாய் அவனுக்கு அடிமையாய் ஊழியம்செய்ய நினைக்கும். ஏனென்றால், "யத்பாவம் தத்பவதி" என்பதுபோல் இவனுக்கு, அந்த ஜந்துக்களின்மீது குரூர எண்ணமில்லாமல் பரமாத்மசொரூபமே யென்னும் எண்ணம் உண்டாயிருக்கும். அதுபோல், அந்த ஜந்துக்களுக்கும் இவனிடத்தில் அந்த எண்ணமே உண்டாகும். ஏனென்றால், பிபீலிகாதி பிரம்மதேவன் வரையில் சகல ஜீவ ஜந்துக்களினும் அந்தர்யாமியாயும் சாக்ஷிமாத்திரனாயும் இருக்கப்பட்ட ஆத்மாவானது, மஹான்களுக்கு யாதொரு கெடுதியும் செய்யாவண்ணம் அந்த மிருகங்களின் மனதைத் திருப்பிவிடுகின்றது. அதனால், அந்த மிருகங்கள் அவர்களுக்கு ஊழியம்

செய்ய நினைக்கும். ஆதலால், யோக சித்தியடைந்த மஹான்கள், குரூரமான மிருகங்கள் சஞ்சரிக்கும் காட்டில் நிர்ப்பயமாய் சஞ்சரித்துக்கொண்டும், நித்திரை செய்து கொண்டுமாய் இருப்பார்கள். அப்படி இதரர்கள் செய்யச் சாத்தியப் படமாட்டாது.

யோயம் யோகஸ்த்வயா ப்ரோக்த ஸ்ஸாம்யேந மதுஸூதந
ஏதஸ்யாஹம் நபஸ்யாமி சஞ்சலத்வாத் ஸ்திதிம் ஸ்திராம். 33.
சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ! ப்ரமாதி பலவத் த்ருடம்
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம். 34.

ஹே ! மதுவென்னும் ராக்ஷதனைக்கொன்ற ஸ்ரீ கிருஷ்ணா ! இப்பொழுது நீர் சொல்லிய வார்த்தைகளெல்லாம் சரியே. அதாவது, சகல வஸ்துக்களையும் பிரம்மமாயும், பிரம்மத்தைச் சகல வஸ்துக்களாயும் சமமாய் அறிய வேண்டுமென்று சொன்னீரல்லவா? மனது சஞ்சலமுடையதாதலால் அப்படிப்பட்ட அபேத புத்தி ஸ்திரமாயுண்டாவது மிகவும் பிரயாசையல்லவா ? ஆனால், பிரகிருதி சம்பந்தத்தினால் தேவதைகள் வேறாகவும், மனிதர்கள் வேறாகவும், மற்ற ஜந்துக்கள் வேறாகவும் இருக்கின்றார்களென்று தோன்றுகின்றது.

பிரகிருதி சம்பந்தம் நீங்கினால் எல்லா ஆத்ம சொரூபங்களும் ஞானாகாரங்களானதனால், தேவ மனுஷ்யாதி பேதமில்லாமல் சமமாகவே யிருக்கும். அப்படி பிரகிருதி சம்பந்தம் நீங்கி ஞானாகாரமாயிருக்கும் ஆத்மாவும், பரமாத்மாவும் நாம பேதமுள்ளவர்களாய்த் தோன்றினாலும், பரமாத்மாவுக்கு எப்படி பிரகிருதி, சம்பந்தமும், கர்மாதிகளுமில்லையோ, அதுபோல் பிரகிருதி, விமுக்த ஆத்மாக்களுக்கும் இல்லை ஆகையால்,

ஜீவேசுவர ஆகார பேதமான சமத்வம் சொல்லப் பட்டது. அதை யறிவதுதான் சமதர்சன யோகம் என்பதாகவும் சொன்னீர். இது அசாத்தியமென்று எனக்

குத் தோன்றுகின்றது. ஏனென்றால், ஜீவனுடைய கர்ம வாசனையினால், அவனுடைய மனதானது, அநேக ஜன்மங்களாய் எப்பொழுதும் விஷய போகங்களிலேயே முழுகி, அந்த விஷயங்களிலும் ஒரு நிலையையும் அடையாமல் சஞ்சலமாகவே யிருக்கின்றது. இப்படி வெகுகாலப் பழக்கத்தினால் வைரமேறியிருக்கிற இந்த மனதை என்றைக்கும் காணாததும், கேட்காததும், நினையாததுமாகிய பிரகிருதி விமுக்த ஆத்ம சொரூப தர்சனமாகிற தியான யோகத்தில் நிலையாய் வைத்திருக்கவேண்டுமென்றால் எப்படிச் சாத்தியமாகும்? பெருங்காற்றைத் தடுத்து நிறுத்துவது எப்படி அசாத்தியமோ அதுபோல், தடுக்கக்கூடாததாயும் பலவந்தமாய்த் தன்னிஷ்டம்போல் பிரவேசிக்கிறதாயு மிருக்கிற மனதை நிறுத்துவது அசாத்தியமென்று எனக்குத் தோன்றுகின்றது கிருஷ்ணா!

அஸம்ஸயம் மஹாபாஹோ ! மநோ துர்நிக்ரஹம் சலம்
அப்யாஸேந து கௌந்தேய வைராக்யேண ச க்ருஹ்யதே. 35

அஸம்யதாத்மநா யோகோ துஷ்ப்ராப இதி மே மதி:
வஸ்யாத்மநா து யததா ஸக்யோ வாப்து முபாயத:. 36.

கிருஷ்ணன்:—ஹே! மஹாபாஹோ! (ஓ! பெரிய தோள்களையுடைய அர்ஜுனா) சஞ்சலமான மனதை நிறுத்தக்கூடாதது என்பதற்கு ஸம்சயமில்லை. ஓ குந்தீ புத்ரா! அந்த மனதை யதேச்சையாய்த் தன்னிஷ்டம் போல் விட்டுவிடலாகாது. பின் எப்படிச் செய்யவேண்டுமென்றால், அப்பியாசத்தினாலாகிலும், வைராக்கியத்தினாலாகிலும் அதை வசப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்பியாசத்தினால் வசப்படுத்திக்கொள்வது எப்படியென்றால், இதற்குமுன் நான் அ-6-சு-25, 26-ல் சொல்லியதுபோல், திடமான புத்தி பலத்தினால் தன் மனதை விஷயங்களில் ஓடவிடாமல் இழுத்துப்பிடித்து இதர எண்ணங்களை விட்டு

சிறுகச்சிறுக ஆத்மநிஷ்டையில் நிறுத்தவேண்டும். அப்படி அனுஷ்டித்துக்கொண்டு வந்தபோதிலும் எப்பொழுதாகிலும் ஒரு சமயத்தில் தன் சுபாவமாகிய குரங்குச்சேஷ்டைகளை விடாமல் விஷயங்களில் அந்த மனம் ஓடிக்கொண்டேயிருக்கும். அப்படி அந்த மனதானது எப்பொழுதாகிலும் ஓடினால், உடனுக்குடனே அந்த விஷயங்களிலிருந்து திருப்பிக்கொண்டே வரவேண்டும். இப்படிப் பிரதிதினம் செய்து வருவதே அப்பியாசயோகம் என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட அப்பியாசயோகத்தைச் சிலகாலம் வரையில் செய்துகொண்டேவந்தால், அந்த மனதினுடைய சபல சுபாவம் கிரமக்கிரமமாய்க் குறைந்துகொண்டே வந்து கடைசியில் நிச்சலனமாய் ஈசுவரனிடத்தில் ஐக்யமாகின்றது. இதற்கு திருஷ்டாந்தமாய் இதற்குமுன், ' ஓர் கள்ளன் ராஜனுடைய பள்ளியறையைச்சேர்ந்து ஆபரணங்களை அபகரிக்கச் சமயம் பார்த்தபோது ராஜகுமாரத்தி விவாஹ விஷயமாய் நடந்த பிரஸ்தாபங்களை அந்தக் கள்ளன் கேட்டபிறகு, அந்த ராஜனுடைய மனோநிச்சயப்படி நடத்தி ராஜனுடைய குமாரத்தியையும் பாதிராஜ்ஜியத்தையும் அடையவேண்டுமென்னும் நிச்சய புத்தியுடையவனாய் ஆறுமாதம்வரையில் இடைவிடாமல் பகவந்நாமத்தையே உச்சரித்துக்கொண்டிருந்தபடியால், அந்த அப்பியாச முதிர்ச்சியினால்அவன் மனது பரிபக்குவத்தை அடைந்தது. அதன்பிறகு விஷயங்களின்மீதிருந்த இச்சை ஒழிந்தது. ராஜன் தன் குமாரத்தியைக் கொடுப்பதாய்ச் சொன்னபோதிலும் அவள்மீது இச்சையில்லாமல் நிராகரித்து விட்டானென்று அ-2 - ல் 61-ல், சொல்லியிருந்தேன்.

முதல் அவன் மனது கேவல தார்விஷபத்தில் ஓடிக்கொண்டிருந்தபோதிலும், அதாவது, சொல்பமாகிய ஐஹிக சுகத்தில் அதிகப் பிரீதிவைத்து தன்மனதை பக

வத் குணனுபவத்தில் ஆறுமாதம் மன்ரயில் நிறுத்திய மாத்திரத்திலேயே இப்படிப்பட்டவைராக்கியம் உண்டான போது, இனி சாசுவத பதவியாகிய பிரம்மாநந்த பதவியில் லக்ஷியத்தை வைத்து மனதை நிறுத்தினல், அது ஏன் ஐக்கியமாகாது? ஆதலால், அப்படிப்பட்ட அப்பியாசத்தினல் மனதை சுவாதீனம்செய்துகொள்ளலாம். பூர்வஜன்ம சுகிருதத்தினல் ஸ்ரீ சுகர், ஜடபரதர் முதலானவர்களைப்போல் வைராக்கிய சீலர்களாய் ஆவதுமுண்டு. மேற்சொல்லியவிஷயங்களெல்லாம் அதாவது, இவர்கள் யோகத்தை முன் ஜன்மத்திலேயே முடித்தவர்களாதலால், இந்த ஜன்மத்தில் மனது அதிசுலபமாய் சுவாதீனமாயிற்று. ஆதலால், ஓ அர்ஜுனா! இந்த இரண்டு விதங்களில் எதனுலாகிலும் சரி மனதை ஜயித்தவன்மாத்திரமே உபாயத்தினல் யோகத்தை அடைவானேயொழிய மனே ஜயமில்லாதவனுக்கு யோகம் செய்யப் பூர்த்தியாய்ச் சாத்தியப் படமாட்டாது.

அர்ஜுநன் :—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! இப்பொழுது நீர் சொல்லியவைகளெல்லாம் எனக்கு மிகவும் தெளிவாய்த் தெரியவந்தன. ஆனல், மனோஜயமுடையவன் யோகத்தை உபாயத்தினல் அடைவானென்று சொன்னீரல்லவா? அந்த உபாயம் எப்படிப்பட்டதோ அதை அறியவேண்டும்; விவரமாய்ச் சொல்லக்கடவீர் கிருஷ்ணு!

கிருஷ்ணன் :—ஆனல், சொல்லுகின்றேன் கேள். மனதை ஜயிப்பதற்கு, காமக்குரோதாதி அரிஷட்வர்க்கங்களை ஜயிக்கவேண்டும். அதாவது காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை (இவைகளை ஸ்ரீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம் பிரபஞ்ச விரக்தி மார்க்கம் என்பதில் பார்க்க.) இந்தக் காமக்குரோதங்களை பலதடவைகளில் சொல்வதற்குக் காரணமென்னவென்றல்; இவைகளெல்லாம் மோக்ஷஸாதனத்

திற்குறிய விஷயங்களை அப்பியசிக்கவிடாமல் மாயா(மா-ஏது, யா-இல்லையோ அதுவே மாயை) சம்சாரத்திற்கு வேண்டிய விஷயங்களிலேயே எப்பொழுதும் மனம் ஓடிக் கொண்டு புருஷனை அதோகதி செய்விக்கின்றமையால் இதை அநேக தடவைகளில் சொல்லவேண்டியதாய் நேரிட்டது.) இவைகளைத் தன்மனதில் நுழையவிடாமலும், ஒரு வேளை நுழைந்தாலும் அதை மனதில் தீர்க்க காலம் நிறுத்தாமல் உடனே நிவர்த்தி செய்து விடவேண்டியதே யென்று அறியக்கடவாய். இப்படிப்பட்ட உபாயத்தினால் மனது வெளியில் ஓடாமல் நின்றுவிடும். அப்படி மனது எப்பொழுது நின்றுவிடுகிறதோ அப்பொழுதே அவனுக்கு யோகசித்தி சுலபமாய் லபிக்கும். ஆனால், அந்தக் காமக்குரோதாதிகளின் உத்பத்திக்குக் காரணங்களும், அவைகளைச் ஸம்ஹரிக்கும் விதங்களும் தெரிந்துகொண்டால் அப்போது, சுலபமாய் அந்தக் காமக் குரோதங்களை நிவர்த்தி செய்துகொள்ளலாம். அவைகளைச் சொல்லுகின்றேன் கேள்:—

1. சங்கல்பத்தினால் மனதுக்குக் காமம் (இச்சை) உண்டாகின்றது; அப்படிப்பட்ட இச்சை எதன்மீதாகிலும் உண்டானால், தேஹம் க்ஷணபங்கமானதென்றும் இப்படிப்பட்ட க்ஷணபங்கமாகிய தேஹத்திற்கா இந்த வீணான இச்சைகள் உண்டாகின்றன வென்று எண்ணின மாத்திரத்தில் அந்தக் காமம் (இச்சை) உடனே நீங்கும். மனது எண்ணிய எண்ணங்களெல்லாம் அப்போது நாசமாகும்.

2. இதரர்கள் தனக்குச் செய்யும் அபகாரத்தினால், குரோதம் உண்டாகும். அபகாரம் செய்யப் பிரயத்தினப் பட்டவன் அதற்குமுன் ஏதாகிலும் உபகாரம் செய்திருப்பானல்லவா? அந்த உபகாரத்தை நினைத்துக் கொண்டிருந்

தால் அவனை க்ஷமிக்க வேண்டுமென்னும் புத்தி உண்டாகின்றது. அதனால் அந்தக் குரோதம் நீங்கிவிடும்.

3. ஜீவிதகாலம் க்ஷணபங்கமென்று அறியாததனால் எவர்களுக்கும் எதையும் கொடுக்கலாகாதென்னும் லோபத்துவம் உண்டாகின்றது. தன் ஜீவிதகாலம் இப்படிப்பட்டதென்றும் அறிந்துகொண்டால் உடனே அந்த லோபத்துவம் நீங்கிவிடும்.

4. அஞ்ஞானத்தினால் மோஹம் உண்டாகும். அந்த மோஹமானது அதிக ஆசையை விருத்திசெய்விக்கும். நாம் ஜீவித்திருப்பது சொல்பகாலம். ஆதலால், அதர்மத்தில் பிரவேசிக்கக் கூடாதென்னும் நிச்சயம் செய்துகொண்டால் மோஹம் நிவர்த்தியாகும்.

5. குலம், வித்யை, தனம் இவை எல்லாமாகினும், அல்லது ஏதாவது ஒன்றாகிலும் இருந்தால் மதம் (கர்வம்) உண்டாகும். புத்திமானாயிருக்கப்பட்டவன், தன்னைவிட அதிக குலம், வித்தை, தன முடையவர்கள் அநேகர்கள் இருக்கின்றார்களென்றும், அவர்களைவிட தான் அதிக சொல்பனென்றும் தெரிந்துகொண்டால் அந்த மதம் அடங்கிவிடும்.

6. சாத்விகனை யிராவிட்டால் மச்சரம் உண்டாகும். அதாவது, தன்னைப்போல் இதரர்கள் சுகம் அனுபவிக்கக் கூடாதென்னும் எண்ணம் உண்டாகும். அப்படிப்பட்ட மச்சரம் சஜ்ஜந சஹவாசத்தினால் விட்டொழியும். இந்த ஆறு குணங்களினாலேயே ஸமஸ்தவிதமான அபாயங்களும் உண்டாகின்றன. இவைகள் இல்லாதவனுக்குச் சுகமுண்டாகும். ஆதலால், இவைகளுக்கு அரிஷட் வர்க்கமென்று நாமங்களுண்டாயின. இவைகள், திட மனதுடையவனை ஒன்றும் செய்யமாட்டாது. ஆதலால், அவனுக்கே யோகம் சித்திக்கும்.

அர்ஜுந உவாச.

அயதி ஶ்ரத்தயோபேதோ யோகாச்சலித மாநஸ:
அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம்கதிம் க்ருஷ்ண கச்சதி. 37.

அர்ஜுநன்:—ஹே கிருஷ்ணா! மனோ ஜயமில்லாதவனுக்கு யோகம் சித்திக்காதென்று 36-வது, சுலோகத்தில் சொன்னீரல்லவா? நல்லது, எவனுகிலும் சிரத்தையுடன் யோகம் சந்தோஷமாய்ச் செய்து வந்தபோதிலும் யோகம் சித்தியாகாமுன் மரணம் சமீபித்தபோது பிராரப்த கர்மவசத்தினுல் பிரஞ்ஞை தப்பி யோகப் பிரஷ்டனாய் பிராணனை விட்டவனுடைய கதி என்ன?

கச்சிந்நோபயவிப்ரஷ்ட ஶ்சிந்நாப்ரமிவ நஶ்யதி
**அப்ரதிஷ்டோ மஹாபாஹோ! விமூடோ† ப்ரஹ்மண: பதி.* 38.

புஜபலமுடைய ஓ கிருஷ்ணா! மோக்ஷபதவிக்கு யோகமே ஏணியைப் போன்றதென்றும் இதைவிட உத்தமமான தர்மம் வேறொன்றுமில்லையென்றும் சொன்னீர். அதாவது, இந்த யோகமே பிரம்ம பதவி. என்றால், மோக்ஷத்திற்கு மார்க்கமாயிருக்கின்றது. இந்தயோகம் அப்பியசிக்கும்போது வெறுப்பு சலிப்பில்லாமல் அப்பியசிக்கவேண்டும். இப்படிப்பட்ட யோகத்தில் மூடனுயிருக்கப்பட்ட எவனுகிலும் ஒருவன் மனதை நிறுத்துவதற்கில்லாமலோ, அல்லது வெறுப்பினுலோ யோகத்தில் சிரத்தை இல்லாமலிருந்தால் யோகம் சித்திக்காதல்லவா? அது எப்பொழுது சித்தியாகவில்லையோ, அப்பொழுது பரத்திற்கு அதாவது, மோக்ஷத்திற்குக் கெட்டவனுகின்று

---

*"அப்ரதிஷ்ட:" என்றால், கர்மத்தில் பிடிப்பில்லாமலும், ஞானப் பிராப்திக்கு சாதனமாகிய தியானயோகத்தில் பிடிப்பில்லாமலும் இருப்பது † "ப்ரஹ்மண: பதி" என்றால் அப்பியாசம், வைராக்கியம், மனோ நிக்கிரஹம், இந்திரிய நிக்கிரஹம், சிரத்தை, பிடிவாதம் முதலானவைகள்.

னல்லவா? போகட்டும். இஹத்தி (இவ்வுலகத்தி) லாகிலும் சுகத்தை அனுபவிக்கின்றானா என்றாலோ, அதுவுமில்லை. ஏனென்றால், முதல் யோகத்தை அப்பியசிக்காமலே யிருந்தால் தன்னிஷ்டம்போல் விஷயானுபோகங்களை அனுபவித்துக்கொண்டு இஹலோக சௌக்கியத்தை அடைந்து கொண்டிருப்பான். இதைவிட்டு, யோகத்தை அப்பியசித்தால் அவன், மனதை விஷயசுகங்களிலிருந்து திருப்பினவ அவன் னாகின்றான். இப்படிச் செய்வதனால் விஷயானுபோகங்களில் இருந்துத் தப்பினவனாகின்றான். அதனால், இவ்வுலக சௌக்கியத்திற்குக் கெட்டவனாயும், யோகத்தை அப்பியசிப்பதனால் இப்போது கர்மானுஷ்டானமும் அற்று, முன் செய்த கர்மங்களினுடைய பலனை ஈசுவரார்ப்பணம் செய்துவிட்டானாகையால், கர்மங்களினுடைய பலனாகிய சொர்க்காதி சுக பலனுமில்லை. அப்பியாசம், வைராக்கியம், மனோநிக்கிரஹம், இந்திரிய நிக்கிரஹம் முதலான சாதனங்களில் முயற்சி யில்லாததனால் ஞான யோகசித்தியை அடைந்து மோக்ஷபலனை அடைய ஹேதுவும் இல்லாமல், பெரியமேகம் இரண்டாய்ப் பிரிந்தபோது வாயுவேக வசத்தினால் அவ்விரண்டிலிருந்து பிரத்தியேகமான சிறிய சிறிய மேகங்கள் நிராதாரமாயிருப்பதால், வாயு வேகத்தினால் தொலைவாய்ச்சென்று இரண்டு பெரிய மேகங்களினும் போய்ச் சேருவதற்குச் சக்தியில்லாமல் காற்றினால் கலைந்து நசிக்கும். அதுபோல், அவன் இரண்டிற்கும் கெட்டவனாய் உபய பிரஷ்டனாகின்றான்.

ஏதன் மே ஸம்ஶயம் க்ருஷ்ண ! சேத்து மர்ஹஸ்ய ஶேஷத꞉
த்வதந்ய ஸ்ஸம்ஶய ஸ்யாஸ்ய சேத்தா நஹ்யுப பத்யதே. 39.

ஆதலால், ஓ ஸ்ரீ கிருஷ்ணா ! இப்படிப்பட்ட என் சந்தேஹத்தைத் தீர்ப்பதற்கு சர்வஞ்ஞரும், கருணையுடையவருமான நீரே சரியாய்ப் போதிக்கப்பட்டவர். தேவ

தைகளானாலும், ரிஷிகளானாலும் உம்மைப்போல் என் சந்தேஹத்தைத் தீர்க்கமாட்டார்கள். ஏனென்றால், ஜீவாத்மாக்களாகிய நான் முதலானவர்களும், பரமாத்மாவாகிய நீரும் இதுவரையில் அநேக ஜன்மங்கள் எடுத்திருக்கின்றோமென்றும், என்னுடைய ஞானம் பிரகிருதியினால் மூடப்பட்டிருப்பதனால், பூர்வஜன்ம ஞானம் எனக்கு இராதென்றும், நீர் மாயைக்கு விலக்ஷணராயிருப்பதனால், எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் எந்தெந்த ஜன்மத்தில் என்னென்ன செய்ததும் அறிவேனென்றும் இதுவரையில் அ-4, சு 5-ல், சொல்லியிருக்கின்றீர். ஆதலால், இந்த ஜன்மத்தில் யோகப்பிரஷ்டனானவன் மறுஜன்மத்தில் என்னவாகின்றானோ அதைத் தெரிந்துகொள்வதற்குச் சென்றகாலம், வருங்காலம், நிகழ்காலங்களை அறிந்த உமக்குச் சாத்தியமாகுமல்லவா ? ஆதலால், எனக்குச் இப்பொழுது உண்டாகிய சம்சயத்தை நிவர்த்தி செய்பவர்கள் உம்மைவிட இதரர்கள் யாரும் இருப்பதாய்க் காணப்படவில்லை, கிருஷ்ணா !

பார்த்த ! நைவேஹநா முத்ர விநாஶ ஸ்தஸ்ய வித்யதே
நஹி கல்யாண்க்ருத் கஶ்சித் துர்கதிம் † தாத ! கச்சதி. 40

கிருஷ்ணன்:—ஹே அர்ஜுநா ! அப்படிப்பட்ட யோகப்பிரஷ்டன் இஹபரங்கள் இரண்டிற்கும் கெட்டவ

† தாத! என்னும் சப்தத்திற்கு "ஆத்மா வை புத்ரநாமாஸி" என்னும் சுருதிநீதியாய் தன்னைக் குமாரனாய்ப் பிறப்பித்துக்கொள்வான் என்பது பொருள். அதாவது, தகப்பனே குமாரனாகின்றானாதலால், குமாரனையும் தாத சப்தத்திற்குப் பொருளாக்கலாம். புத்ரஸ்ய ஶிஷ்யஸ்ய ச நாஸ்தி பேதஃ" என்னும் வசனநீதியாய் சிஷ்யன் புத்திரனுக்குச் சமானமாகின்றானாதலால், ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்குப் பரம பிரீதியுடையவனாயும முக்கிய சிஷ்யனாயும் இருப்பதனால் அர்ஜுநனை தாத என்று கூப்பிட்டதாய் கிரஹிக்க வேண்டும்.

னென்று நீ ஸந்தேஹிக்க வேண்டியதில்லை. அப்படிப் பட்டவனுக்கு இஹத்திலாகிலும் பரத்திலாகிலும் கெடுதி சம்பவிக்காது. ஏனென்றால், அவன் துன்மார்க்கவேலை எதுவும் செய்தவனல்லன். மோக்ஷத்தை அடைய வேண்டுமென்னும் எண்ணத்துடன் யோகத்தைச் சில காலம் அப்பியசித்தவன். ஆதலால், அவன் நல்ல காரியங்கள் செய்தவனே யாகின்றான். ஓ அர்ஜுனா! நல்ல தொழிலைச் செய்த எவனுக்காகிலும் கெட்டபலன் உண்டாகுமா? உண்டாகாதல்லவா? "ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்" இந்த யோகத்தைக் குரு உபதேசித்ததுபோல் சொல்பமாய் அநுஷ்டத்தபோதிலும், அது சமுத்திரம் போன்ற ஜநந மரணாதி சம்சார பயத்திலிருந்து ரக்ஷிக்குமென்று இதுவரையில் அ-2, சு 40-ல், சொல்லியிருக்கின்றேன்.

அர்ஜுநன்:—ஆனால், "அஸம்யதாத்மநா யோகோ துஷ்ப்ராப யிதி மே மதிః" மனதை ஜயித்தவன்மாத்திரமே, உபாயத்தினால் யோகத்தை அடைவானேயொழிய, மனோஜயமில்லாதவனுக்கு யோகம் சித்திக்காதென்று இதுவரையில் அ-6, சு 36-ல், சொல்லியிருந்தீர். அப்படியானால், யோகம் சித்தித்தாலேயன்றி மோக்ஷத்திற்கு அருஹனாகமாட்டானல்லவா? மோக்ஷமடைந்தவனுக்கேயல்லவா ஜநந மரணாதி சம்சார நிவர்த்தியுண்டாகும்? அப்படியிருக்க, யோகத்தை சொல்பமாய் அப்யாசித்து சித்தியாகாமுன்னமே பிரஷ்டனானவனுக்கு சம்சார பயம் எப்படி நிவாரணையாகும்?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! நீ கேட்ட கேள்வி மிகவும் யுக்தமானதாகவே யிருக்கின்றது. எப்படியென்றால், யோகப்பிரஷ்டனானவன் கொஞ்சமாகிலும் யோகத்தை அநுஷ்டித்தவனாதலால், அவனுக்கு இந்த ஜன்மத்தி

லேயே சம்சார நிவர்த்தி (மோக்ஷம்) உண்டாகாமற்போன போதிலும், மறு ஜன்மத்தில் இந்த யோகத்தை அப்பிய சித்துக்கொண்டு கிரமக் கிரமமாய் யோகசித்தியடைந்து முக்தனுகின்ருன். அதை விவரித்துச் சொல்லுகின்றேன் கேள்.

ப்ராப்யபுண்ய க்ருதாந் லோகா நுஷித்வா மாஶ்வதீ ஸ்ஸமாঃ
மு‌சீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோ பிஜாயதே. 41

அதவா யோகிநாமேவ குலே பவதி தீமதாம்
எதத்தி துர்லபதரம் லோகே ஜந்ம யதீத்ருமம். 42

அர்ஜுநா! அதிக பாதையுடன் கஷ்டப்பட்டு யோகாப்பியாசத்தைச் செய்து சித்தியடையா முன்னமே மரணமடைந்தால், அநேக அசுவமேத யாகங்கள் செய்து அடையும் புண்ணியலோகமாகிய தேவலோக சுகத்தை யும் மேற்படி யோகியானவன், யாதொரு யாகமும் செய்யாமலே தேவலோக போகசுகங்களை யடைந்து, சில காலம் அனுபவித்துப் பிறகு சதாசார சம்பந்நர்களான விசேஷ ஐஸ்வர்ய முடையவர்களின் வீட்டில் பிறக்கின்ருன். (இவன், சிலநாள் யோகாப்பியாசம் செய்து மரணமடைந் தவனென்று அறியவும்.) இப்படிக்கில்லாமல் ஞானிகளாகிய யோகிகளின் வம்சத்தில் பிறப்பதும் உண்டு. ஆனல், இவ்வுலகத்தில் விசேஷ ஐஸ்வர்ய முடையவர்களாயும், சதாசார சம்பந்நர்களாயும் இருக்கப்பட்டவர்களின் வீட்டில் ஜன்மிப்பதைவிட, ஞானிகளாகிய யோகிகளின் வீட்டில் ஜன்மிப்பது மிகவும் சிரேஷ்டம். ஏனென்ருல், ஐஸ்வர்ய முடையவர்களின் வீட்டில் ஜன்மித்தால் அவனுடைய மனது தனத்தைச் சம்பாதிப்பதிலும், அந்த தனத்தைக் கள்ளர்கள் கொண்டுபோகாவண்ணம் அதைக் காப்பாற்றிக் கொள்ளுவதிலும், வியவஹாரம் வைத்துக் கொண்டிருக்கின்ருன். இப்படிப்பட்டவன் பூர்வ ஜன்ம

வாசனு வசத்தினுல் மறுபடியும் இந்த ஜன்மத்தில் யோகத்தை அப்பியசித்தபோதிலும் விக்நமுண்டாய் யோகம் நிறைவேறமாட்டாது. இப்படிக்கில்லாமல் திரவ்விய ஹீனர்களாகிய யோகிகளின் வம்சத்தில் ஜனித்தால் திரவ்வியம் சம்பாதிப்பது, காப்பாற்றுவது முதலாகிய பயம் யாதொன்று மில்லாததால் அவனுடைய மனது கபடமில்லாததாய், நிர்மலமானதாய், நிச்சிந்தையாயிருக்கும். ஆதலால், அந்த வம்சத்தில்,யோகாப்பியாஸம் வம்ஸா சாரமாயிருப்பதால், அவனுக்கு அந்த ஜன்மத்தில் யோகம் அப்பியசிக்க, முன் ஜன்மத்தைவிட அதிக சுலப ஸாத்தியமா யிருக்கும். ஆதலால், அப்படிப்பட்ட யோகிகளின் வம்சத்தில் பிறப்பதே மிகவும் சிரேஷ்டமானது.

அர்ஜுநா ! 41-வது, சுலோகத்தில் குறிக்கப்பட்டவன், சொல்பகாலம் யோகாப்பியாசம் செய்து விட்டுவிட்டவனென்றும், 42-வது. சுலோகத்தில் குறிக்கப்பட்டவனே, வெகுகாலம் யோகாப்பியாசம் செய்துவந்து சித்தியடையும் சமயத்தில் விட்டுவிட்டவனென்றும், அறியக்கடவாய்.

தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதைஹிகம்
யததே ச ததோ பூய ஸ்ஸம்ஸித்தௌ குருநந்தந. 43.

குருவம்சத்தில் பிறந்த ஓ அர்ஜுநா ! அப்படி யோகிகளின் வம்சத்தில் பிறந்தவன், பூர்வஜன்மத்தில் யோகத்தை அப்பியசித்து ஈசுவரனிடத்தில் மனதை லயப்படுத்தினவனுகின்றுன். அந்த வாசனு விசேஷத்தால் இந்த ஜன்மத்திலும் அந்த யோகத்தை அப்பியசிக்க வேண்டுமென்னும் புத்தியுண்டாகும். அப்படிப்பட்ட புத்தி எப்பொழுது உண்டாகின்றதோ அப்பொழுது, மறுபடியும் அந்த யோகத்தை அப்பியசிப்பதற்குத் தக்கப் பிரயத்நம் உடனே செய்கின்றுன். இவ்விதமாய் இவனுடைய புத்தியைப்

பேதித்து யோகம் செய்யும்படி செய்விப்பவன் நானே. அதைக் கீழ் சுலோகத்தில் சொல்லுகின்றேன்.

பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஶோபி ஸஃ
ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய ஶப்தப்ரஹ்மாதிவர்த்தே. 44.

ஐஸ்வர்யவான்வீட்டில் ஜனித்தால் தமது தனத்தை விருத்தி செய்வதற்காக சர்வதா பிரவிருத்தி மார்க்கத்திலேயே ஆசையுடையவனாய் இருப்பதனால், இவனுக்குப் பூர்வஜன்ம ஸம்ஸ்காரம் இருந்தபோதிலும், இந்த ஜன்மத்தில் சீக்கிரமாய் யோகாப்பியாசம் ஆரம்பிக்கச் சாத்தியப்படமாட்டாது. தரித்திரர்களாகிய யோகிகளின் கிருஹத்தில் ஜன்மித்தால் அவர்களுக்கு பிரவிருத்தி பிரபல சாதனமாகிய ஐஸ்வர்யமில்லாததனால் அவர்கள், சர்வதா நிவிருத்தி மார்க்க பிரயத்தின முடையவர்களாய் இருப்பார்கள். அதனால், இவனுக்குப் பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரம் சீக்கிரத்திலுண்டாய் உடனே யோகாப்பியாசம் ஆரம்பிப்பதற்கு மிகவும் சாதகம் உண்டாகும். இந்தச் சாதகத்தினால் சீக்கிரம் மோக்ஷத்தை அடைகின்றான். இதனாலேயே யோகிகளின் கிருஹத்தில் ஜன்மிப்பது மிகவும் அரிதரிதென்று சொல்லப்பட்டதென்று கிரஹிக்கவேண்டும்.

அர்ஜுநா! பூர்வஜன்மத்தில் யோகம்செய்து பிரஷ்டனானவன், இந்த ஜன்மத்தில் விஷயங்களில் ஆசையுடையவனா யிருந்தபோதிலும், பூர்வ ஜன்மத்தில் தான் செய்த யோகாப்பியாச விசேஷத்தினால் மறுபடியும் சித்தியை உண்டாக்கும் யோகாப்பியாசத்திலேயே இழுக்கப்படுவான். என்றால், அதர்மம் முதலாகிய கர்மங்கள் பூர்வ ஜன்ம யோகாப்பியாசத்தினால் நசிக்கப்பட்டு மறுபடியும் இந்த ஜன்மத்தில் அதிகமாய் யோகாப்பியாசம் செய்ய புத்தியுண்டாகும். அப்படியல்லாமல் அதர்மம் அதிகமாயிருந்தால் அப்படிப்பட்ட அதர்மத்தினால் யோகாப்பியாசம் செய்ய உடனே இடங்கொடுக்கப்படமாட்டாது. அந்த அதர்மம் சத்சங்கத்தினால் க்ஷீணித்தபிறகு என் அநுக்கிரஹத்தினால் மறுபடியும் யோகம் செய்ய அவனுடைய புத்

தியைத் திருப்புகின்றேன். எப்படியென்றால், பூர்வ ஜன்மாப்பியாசத்தினால் தானாகவே பிரயத்தினப்படாவிட்டாலும் நானே அவனை பலாத்காரமாய் யோகம் செய்வதற்கு நிர்ப்பந்தம் செய்கின்றேன். ஏனென்றால், பூர்வ ஜன்மத்தில் நானே அவனுக்குள் அந்தர்யாமியா யிருந்து யோகாப்பியாசஞ் செய்வித்தேன். இந்த ஜன்மத்திலும் நானே அவனுக்குள் அந்தர்யாமியா யிருக்கின்றேன்; அவன் பூர்வஜன்மத்தில் எது எவ்வளவு செய்ததும் எனக்குத் தெரியும். ஆதலால், யோகாப்பியாசம் பூர்வஜன்மத்தில் கால் செய்திருந்தால் அரையும், அரை செய்திருந்தால் முக்காலும், முக்கால் செய்திருந்தால் பூர்த்திசெய்யும் கடமை என்னுடையதே யொழிய அவனுடைய வேலையல்ல. அதர்ம மார்க்கத்தில் அதிகநாள் பிரவர்த்தித்தால் அவன் கெட்டுப் போவான். பூர்வஜன்ம ஸம்ஸ்காரம் எப்பொழுதும் வியர்த்தமாகாது. யோக சொரூபத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன், யோகாப்பியாசம் செய்த ஸந்நியாசி யோகப் பிரஷ்டனானாலும், வேதோக்த கர்மானுஷ்டானத்தினால் உண்டாகும் பலத்தை அடைவான். இதுவிஷயமாய் யோக சொரூபத்தைத் தெரிந்துகொண்டு அந்த யோகாப்பியாசத்தைச் செய்தால் கர்மானுஷ்டானத்தினால் உண்டாகும் சொர்க்காதி பலத்தைவிட விசேஷ பலத்தை அடைவானென்று வேறே சொல்லவேண்டுமோ? இதற்கு விஷ்ணுபுராணத்தில் என்ன சொல்லுகின்றதென்றால்,

"அநிஷ்பந்ந ஸமாதிஸ்து பரப்ரஹ்மோ பலப்திமாந் யத்யந் தராய தோஷேண துஷ்யதே ஹ்யஸ்யமாநஸே ஜந்மாந்தரைரஸ்யஸதோமுக்திः பூர்வஸ்ய ஜாயதே" "விநிஷ்பந்ந ஸமாதிஸ்து முக்தி மத்ரைவஜந்மநி, ப்ராப்நோதி யோகி யோகாக்நி தக்தகர்ம சயோசிராத்."

பிரம்ம சாயுஜ்யபதவி ஞானத்தினல் உண்டாகுமென்னும் எண்ணத்துடன் யோகாப்பியாசம் செய்யப்பட்டவனுக்கு, பிராரப்த வசத்தினுல் அந்த ஜன்மத்தில் சித்தியாகாவிடினும், மறுஜன்மத்தில் பூர்வ ஜன்மஸம்ஸ்காரத்தினுல் மறுபடியும் யோகத்தை அப்பியசித்து சித்தியடைந்து முக்தனுகின்றுன். யோகாப்பியாசத்தை ஆரம்பித்த ஜன்மத்திலேயே யோகசித்தியை அடைந்தால் யோகாப்பியாசமென்னும் அக்நியில் புண்ணிய பாபகர்மங்களை தக்தம் செய்ததனுல் நிரஞ்ஜனனுய் சீக்கிரமாய் பிரம்ம தத்துவத்தை அடைவான்.

ப்ரயத்நா த்யதமாநஸ்து யோகீ ஸம்ஶுத்த கில்பிஷஃ
அநேகஜந்ம ஸம்ஸித்த ஸ்ததோ யாதி பராங் கதிம். 45.

அநேக ஜன்மங்களில் சம்பாதித்த புண்ணிய கர்மங்களால், பாபங்களைப் போக்கடித்துக்கொண்டு சித்தியை அடைந்தவனுயும், மறுபடியும் யோகத்தில் பிரயத்தினம் செய்கிறவனுயும் இருக்கிற யோகியானவன், யோகத்திலிருந்து சலித்த போதிலும், யோகாப்பியாச மஹிமையினுல், மோக்ஷத்தை அடைவான். அர்ஜுநா! மோக்ஷத்திற்கு பிராரப்த, சஞ்சித, ஆகாம்யங்களென்னும் சமஸ்த புண்ணிய பாபங்கள் நசிக்கவேண்டும். இவ்வாறு நசிக்கச் செய்தவனே கல்மிஷ ரஹிதனும் பரிசுத்தனுமாகின்றுன். அவ்வாறு எப்பொழுது பரிசுத்தனுகின்றுனே, அப்பொழுது "கர்மஜம் புத்தியுக்தா ஹி பலம்த்யக்த்வா மநீஷிணஃ, ஜந்மபந்த விநிர் முக்தாஃ பதம் கச்சந் த்யநாமயம்" என்றும், அ. 2, சு. 51-ல், சொல்லியதுபோல் மோக்ஷத்தை அடைகின்றுன்.

தபஸ்விப்யோ திகோ யோகீ ஜ்ஞாநிப்யோऽபி மதோ திகஃ
கர்மிப்ய ஶ்சாதிகோ யோகீ தஸ்மாத் யோகீ பவார்ஜுந ! 46.

இந்தக் காரணத்தினுல்தான் தபசு செய்கிறவர்களை விடவும், ஞானிகளை விடவும், சத்கர்மானுஷ்டானம் செய்கிறவர்களை விடவும் யோகியே சிரேஷ்டனென்று என்னுடைய அபிப்பிராயம். ஆதலால், ஓ அர்ஜுநா! நீ யோகத்தையே அப்பியசிக்கக்கடவாய்.

அர்ஜுநன்:—ஐயா கிருஷ்ணமூர்த்தியே! யோகி, தபசிகளைவிட அதிக சிரேஷ்டனென்று சொல்வதற்குக் காரணமென்ன? பிரபஞ்சத்தில் சமஸ்த கர்மங்களிலும் தபஸ்ஸே சிரேஷ்டமானதென்று எண்ணிப் பெரியோர்கள் அனுஷ்டிப்பதாகக் கேட்கின்றோமல்லவா? அப்படியிருக்க, அந்தத் தபசிகளைவிட யோகியே சிரேஷ்டமானவனென்று சொல்வதற்குக் காரணமென்ன?

கிருஷ்ணன்:—ஆம், நீ சொல்வது வாஸ்தவமே. ஆனல், தபசு எப்படிப்பட்ட ஆஹாரத்தையும் விட்டு அனுஷ்டிக்கத்தக்கது. அப்படி ஆஹாரத்தை விட்டிருக்கத்தக்க சக்தி எவனுக்கு உண்டாகின்றதோ அப்படிப்பட்டவனுக்கே தபசு சித்திக்குமே யொழிய மற்றவர்களுக்கு சித்திக்கமாட்டாது. அப்படி தபசு சித்தித்தவனுக்கு சராசரமெல்லாம் வசமாகும். ஆனல் இந்திரிய நிக்கிரஹ மனே நிக்கிரஹங்களே எவ்வளவோ கஷ்டசாத்தியமாயிருக்க, தேஹதாரணைக்கு முக்கிய ஆதாரமாஇருக்கும் ஆஹாரத்தை விட்டுவிடுவது எவ்வளவு கஷ்டம். அதை நீயே யோசித்துப்பார். யோகியென்றலோ, அப்படிப்பட்ட ஆஹாரத்தை விடவேண்டிய ஆவசியகமில்லை. க்ஷுத்பாதை உண்டானபோது அதைத் தீர்த்துக்கொள்ளத் தகுந்த மிதமான ஆஹாரத்தை புஜித்துக்கொண்டு, இந்திரிய மனே நிக்கிரஹங்களை மாத்திரம் செய்து வந்தால் யோகம் சித்திக்கும். ஆதலால் தபசிகளைவிட யோகியே சிரேஷ்டனென்று சொல்ல நேர்ந்தது.

அர்ஜுநன்:—நல்லது; ஞானம், எல்லாவற்றினும் சிரேஷ்டமானதென்றும், ஞானமடைந்தவன் அதிசீக்கிரமாய் மோக்ஷத்தை அடைவானென்றும் இதுவரையில் அ. 4, சு 39-ல், சொல்லியிருந்தீரல்லவா? யோகம் சித்தித்தா லல்லவோ அப்படிப்பட்ட ஞானம் உண்டாகப்போகின்றது. அப்படியிருக்க, ஞானியைவிட யோகியே சிரேஷ்டனென்று சொல்வதற்குக் காரணமென்ன?

கிருஷ்ணன்:—அர்ஜுநா! ஞானம், சாஸ்திர ஞானமென்றும், ஆத்ம ஞானமென்றும் இரண்டுவிதங்கள். சாஸ்திர ஞானமென்றால், வேதங்கள் சாஸ்திரங்கள் புராணங்கள் இதிஹாசங்கள் முதலானவைகளை வாசிப்பதனாலும், கேட்பதனாலும் அவைகளிலுள்ள விஷயங்களைத் தெரிந்துகொள்வது, சாஸ்திரஞானமென்று சொல்லப்படும். ஸதஸத் விவேகமுண்டாய் பரமாத்மசொரூபம் இப்படிப்பட்டதென்று தெரிந்துகொள்வது ஆத்மஞானமென்று சொல்லப்படும். சாஸ்திரஞானம் இல்லாவிட்டாலும் ஆத்மஞானமிருந்தால் கடைத்தேறலாம். சாஸ்திர ஞானமாத்திரமிருந்து ஆத்மஞானம் இல்லாவிட்டால் கடைத்தேறுவதற்குச் சாத்தியப் படமாட்டாது. ஆதலால், அப்படிப்பட்ட சாஸ்திர ஞானமுடையவர்களைவிட யோகியே சிரேஷ்டனென்று என் அபிப்பிராயம். இன்னும் சத் கர்மானுஷ்டான பரர்களைவிட யோகியே சிரேஷ்டனென்று சொல்வதற்குக காரணமென்னவென்றால், இந்த பிரபஞ்சத்தில் அநேகர்கள் அநேகவித ஸத்கர்மங்களைச் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோமல்லவா? அவர்கள் எல்லோரும் ஓர் பலத்தை உத்தேசித்தே அப்படிப்பட்டகர்மத்தை அனுஷ்டிக்கின்றார்கள். என்றால், சிலர் சொர்க்காதி போகங்களை அபேக்ஷித்து யஞ்ஞங்களையும், சிலர் சந்தானத்தை அபேக்ஷித்து அரசமரப் பிரதக்ஷிணாதிகளையும், சிலர் போகபாக்

கியங்களை அபேக்ஷித்துத் தானதிகளையும் செய்வார்கள். யோகி அப்படிப்பட்ட ஸத் கர்மங்களை அனுஷ்டித்தபோதிலும் அவைகளையெல்லாம் பகவத் பிரீதியர்த்தமாய்ச் செய்வானே யொழிய, தன் பிரயோஜனார்த்தமாய் என்றால், அதனால் தனக்குப் பிரயோஜனம் உண்டாகவேண்டுமென்னும் எண்ணத்துடன் செய்யான். ஆதலால், அப்படிப்பட்ட ஸத் கர்மானுஷ்டான பரர்களில் யோகியே சிரேஷ்டமானவனென்று சொல்வதற்குக் காரணமாயிற்று.

யோகிநா மபி ஸர்வேஷாம் மத்கதே நாந்தராத்மநா
ஶ்ரத்தாவாந் பஜதே யோமாம் ஸமேயுக்த தமோமதஃ. 47.

சகலவித யோகிகளில், குரு உபதேசித்ததுபோல் எந்தயோகி என்னிடத்தில் பக்தி சிரத்தையுடன் மனதை ஐக்கியம் செய்கின்றானோ, அந்த யோகியே சிரேஷ்டமானவனென்பது என் அபிப்பிராயம். அதாவது, அத்யாயம், 4 சு 25-முதல் 31-வது, சுலோகங்கள் வரையில் சொல்லப்பட்டிருக்கிற யஞ்ஞங்களை விட ஈசுவர பக்தி செய்து ஈசுவரனையே பஜிக்கிற தியானயோகியே சிரேஷ்டன்; இவனைவிட, இந்த அத்தியாயம், 29-வது, சுலோகத்தில் குறித்த யோகியே சிரேஷ்டன்; இவனைவிட, 30-வது, சுலோகத்தில் குறித்த யோகியே சிரேஷ்டன்; இவனைவிட, 31-வது, சுலோகத்தில் குறித்த யோகியே சிரேஷ்டன்; இவனைவிட, 32-வது, சுலோகத்தில் குறித்த யோகியே சிரேஷ்டனென்று அந்தந்த சுலோகத்தின் அவதாரிகையில் சொல்லியிருக்கிறதுமல்லாமல், அந்த நால்வகை யோகிகளைவிட இவனே சிரேஷ்டனென்று இதிலும்சொல்லியிருக்கின்றார். சில யோகிகள், யோகசமாதியிலிருக்க, தியானத்திற்கு விஷயமாக ருத்ரன், இந்திரன், சூர்யன், சுப்ரமண்யன், கணபதி முதலிய தேவதைகளில் ஒன்றை உபாசனமூர்த்தியாய்க் குறித்துக்கொள்ளுகிறார்கள். சில யோகி

கள் தியானத்திற்கு விஷயமாக பரமாத்மாவையே குறித்துக்கொண்டு அதிக பக்தி விஸ்வாசத்துடன் தியானம் செய்கின்றார்கள். இவர்களுக்குள்ளே பரமாத்மா தியானமுள்ள யோகியே சிரேஷ்டனென்று சொல்லுகின்றார்''

ஏஹ்யேஹி புத்தே பவபீதிஶாந்த்யை கச்சாஶு கோவிந்த
பதாரவிந்தம்
யத்யந்தரா த்வாம் விஷயாபிஹந்ய: க்ரோஶத்வமம்போருஹ
லோசநேதி''

ஓ புத்தியே ! வருவாய் ! உனக்கு ஹிதமான வார்த்தையைச் சொல்லுகின்றேன் கேள். அஃதென்னவென்றால், ஸம்ஸாரத்தினால் உண்டாகும் பயத்தைப் போக்கடித்துக்கொள்ள இஷ்டமிருக்கும்பக்ஷத்தில், சீக்கிரமாய் ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாதத்தில் மனதை அர்ப்பணம் செய். அப்படிச் செய்வாயாகில், உன் பிரயாணகாலத்தில் சம்சாரபந்தம் உன்னைக் கட்டுப்படுத்தாது.

அத்யாய தாத்பர்யத்தைத் தெரிவிக்கும் ஸ்லோகம்:—

"ப்ரோக்தோ விஜ்ஞாநயோக: ஸ்திரமநஸி ஸதாத்மாநு
[ஸந்தாநரூபோ
நோபேதப்யாஸயோகோ பஹிருபவிஶதே சாஸநாதி க்ரமேண
அந்தர் யோகநு வ்ருத்தௌ ஸ்வயமுபரமதே த்ருஶ்யத:
[ப்ராப்யதோக்ஷம்
வைராக் யாப்யாஸ யோகாத் பரிஹரதி ஶநைர்வேக மித்யாவா
[ஷஷ்டே."

மனதை நிஸ்சலனமாய்ச் செய்து ஆத்மானுபவ ரூபமாகிய யோகத்தைச் செய்யவேண்டும். வியவஹாராதி நியமங்களை சாஸ்திர விதிப்படி குரு உபதேசித்தது போல் நிர்ஜன பிரதேசத்தில் ஸுகாசனை சீலனாய் இருந்து யோகாப்பியாசம் செய்யவேண்டும். அப்படிப்பட்ட அப்பியாசத்தினால் பிரபஞ்சமெல்லாம் மித்யையென்னும் ஞான

முண்டாய் பரப்பிரம்ம சொரூபத்தில் ஆநந்தத்தை யடைந்து கிரமக் கிரமமாய்ப் புண்ணியபாபங்கள் ஒழிந்து சம்சார விமுக்தனான யோகி பிரம்ம தத்துவத்தை அடைவான். ஆதலால், யோகியானவன் உத்தமனென்று இந்த ஆறும் அத்தியாயத்தில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுநனுக்கு உபதேசித்தார்.

ஸ்ரீபகவத்கீதாஸு-உபநிஷத்ஸு-ப்ரஹ்மவித்யாயாம்
யோகஸாஸ்த்ரே ஸ்ரீ க்ருஷ்ணார்ஜு-ந ஸம்வாதே
ஆத்மஸம்யம யோகோநாம ஷஷ்டோத்யாயः.

இதில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுநனை யுத்தத்திற்கு பிரயத்நப்படுத்தி லோகோத்தாரணார்த்தமாய் பிரம்ம வித்யையென்னும் யோகசாஸ்திரத்தை கிருபை செய்த உபநிஷ தர்த்தப் பிரதி பாதகமாகிய பகவத்கீதா சாஸ்திரத்தில் ஆத்ம சம்யமயோக மென்னும் ஷஷ்டோத்யாயம், (ஆறுவது அத்தியாயம்) ஸம்பூர்ணம்.

ஸாமவேதத்தில், தைத்ரோயோபநிஷத்து த்விதீயாத்யாயம்.

ஶ்ரு| "ஆப்யாயந்து மமாங்காநி வாக்ப்ராணஶ் சக்ஷு-ஶ்ரோத்ரமதோபல மிந்த்ரியாணிச ஸர்வாணி, ஸர்வம் ப்ரஹ்மோப நிஷதம் மாஹம் ப்ரஹ்ம நிராகுர்யாம், மாமா ப்ரஹ்ம நிராகரோதநிராகரண மஸ்த்வ நிராகரணம் மே அஸ்து, ததாத்மநி நிரதேய உபநிஷத்ஸு- தர்மாஃ ஸ்தேமயி ஸந்து, தே மயி ஸந்து. ஓம் ஶாந்திஶ் ஶாந்திஶ் ஶாந்தி."

அடியேனுடைய வாக் பாணி பாத பாயுரு உபஸ்தங்களாகிய கர்மேந்திரியங்களும், சுரோத்ர த்வக் சக்ஷு-ஜிஹ்வை கிராணங்களாகிய ஞானேந்திரியங்களும், மனோ புத்தி சித்த அஹங்காரங்களாகிய அந்தஃகரணங்களும், பஞ்ச பிராணங்களும், சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களாகிய தந்மாத்திரைகளும்,நாக கூர்ம கிருகர தேவதத்த தநஞ்

ஐய னென்னும் உபவாயுக்களும் விஷயாதிகளில் பிரவர்த்திக்காமல் பரப்பிரம்மமாகிய ஆத்ம ஸ்வரூபத்தில் நின்று திருப்தி யடையக்கடவது. வேதாந்த பிரதிபாதகமாகிய ஸச்சிதானந்த பரப்பிரம்ம ஸர்வ சொரூபியாகக்கடவது. ஆத்மசொரூபியாகிய அடியேன் அந்தப் பரப்பிரம்பத்தை நிராஹரிக்காம லிருக்கக்கடவேனாக. அந்தப் பரப்பிரம்மம் ஆத்ம சொரூபியாகிய அடியேனை நிராஹரிக்காம லிருக்கக் கடவதாக. அந்தப் பரப்பிம்மத்தினுடைய ஆதரணை அடியேனுக்கு உண்டாகக்கடவதாக. அடியேனுக்கு அந்தப் பரப்பிரம்மத்தில் விஸ்வாஸமும், அந்தப் பிரம்மலக்ஷ்ய பாவமும் உண்டாகக்கடவன. மேலும், அந்தப் பரப்பிரம்மத்தில் ஆசையுடைய அடியேனுக்கு உபநிஷத்துகளில் சொல்லப்பட்ட தர்மங்கள் உண்டா யிருக்கக்கடவன. ஸகல தர்மங்களும் அடியேனிடத்தில் உண்டா யிருக்கக்கடவன. ஓ பிரணவ சொரூபமாகிய பரப்பிரம்மமே! ஓ நாராயணா! சாந்திः சாந்திः ஸாந்திः சகல விக்கினங்களும் பரிஹரிக்கக்கடவாய் கிருஷ்ணா!

ஸ்ரீ பகவத்கீதை.

ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதம்.

பிரதம ஷஷ்டோத்தியாயः

ஸம்பூர்ணம்.

பரமஹம்ஸ ஸச்சிதானந்தேந்

கடிகோட்டை. வீரபல்லி போஸ்ட்டு.

ராயசோடி தாலூக்கா.

கடப்பை ஜில்லா.

ஓ பரம பக்தர்களே!

கரும்பைத்தின்னக் கூலிவேண்டுமா! என்பதுபோல் ஆத்ம ஞானம் வேண்டாதார் யாவர்? துக்க நிவர்த்தி சுக பிராப்தி கோராதார் எவர்? ஒருவருமில்லை. ஆனால், மோக்ஷப்பிராப்தி எப்படி உண்டாகுமென்றால், முதல் முதல் இளநீரில் ஜலம் சேர்ந்து அதன் சம்பந்தத்தினால் சிறுகச் சிறுக வழுக்கையுண்டாய் அது முதிர்ந்து தேங்காயாவது போல், பிரம்மசிருஷ்டிமுதல் நாளதுவரையில் ஜன்மாந்திரங்கள்தோறும் நாம் செய்து வந்த புண்ணிய பாபங்களெல்லாம் சிறுகச்சிறுக ஒன்றுசேர்ந்து முன் சொல்லிய தேங்காயைப்போல் பெரிதாகிய மூட்டையாயிற்று. அந்தப் புண்ணிய பாபங்களின் மூட்டையே சஞ்சித கர்மமென்று சொல்லப்படும். இது விஷயம் ("ஜீவப் ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" மஞ்ஜலையத்தால் சகலமும் சித்தியடைதல் ஸஞ்சித, பிராப்த, ஆகாம்ய கர்மங்கள் என்பதைப் பார்க்க) இந்த ஸஞ்சிதமென்னும் மூட்டையை ஞானமென்னும் அக்கினியினால் பஸ்மம் செய்தாலல்லவோ ஜநந மரணமென்னும் விறகுகள் பஸ்பமாய் மோக்ஷமென்னும் வீட்டை அடையக்கூடும். ஒவ்வொரு புருஷனும் இவ்வித காரியத்தில் முயலாததனால் அத்தியாயம் 3, சு 16-ல், பகவானான ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லியது போல் இது முதலென்றும், இது கடைசியென்றும் தெரிந்துகொள்ளக்கூடாத சக்கிரம்போன்ற பிறப்பு இறப்பாகிய சம்சாரமென்னும் சக்கிரத்தில் உழன்று வருகின்ற நாம் முக்தியை அடையும்பொருட்டு நமக்காக கட்பை "ஸ்ரீ பரமஹம் ஸஸச்சிதானந்த யோகீஸ்வரர்" ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஜய" மென்னும் நூலையும், அதற்கு உபமானமாய்க் காட்ட ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமான ஸ்ரீ பகவத்கீதை முதல் 6-அத்தியாயம்வரையி எழுதி

முடித்தனர். இனி தாம் நிர்விகல்ப சமாதி நிஷ்டைக்குப் போக பிரயத்தினப்பட்டு அதற்கு வேண்டிய குகை முதலானதும், கடிகோட்டைக்கு வரப்பட்டவர்கள் தங்குவதற்காக மடமும் கட்ட முயன்றிருப்பதனால் மற்ற பன்னிரண்டு அத்தியாயங்களையும் எழுத அவகாசமில்லை. குகை கட்டி முடிந்தவுடன் நிர்விகல்ப சமாதியிலிருப்பதாக மேற்படி சுவாமிகள் குகைக்குள் பிரவேசித்துவிடுவார். இப்படிப்பட்ட கட்டட கைங்கர்யத்திற்குப் பொருள் சஹாயம் செய்ய ஈடுபட்டால் ஜன்ம ஸாபல்யமாவதற்கு விதித்த விதிப்படி நடவாமல், பஹுலேசாக ஜநநரகிதம் பெறலாமென்பதே வேதசம்மதம். ஆதலால், தேசிய சாது சஜ்ஜனர்களாகிய மஹாத்மாக்கள் இப்பெருங் கைங்கர்யத்திற்குத் தம்தம் சக்திக்குத் தக்கபடி தொகையை ஈசுவரார்ப்பணமாய்த் தந்தால் ஐஹிக கீர்த்தி சுகத்தை அடைவதுமன்றி முக்திமார்க்க பராபரவஸ்து தரிசன நிஷ்டாபரர்களாய்ச் சாயுஜ்ய பதவியை அடைவார்களென்னும் விஷயத்தைக் குறித்து எழுதப் புகுவது உபசார வார்த்தையன்று.

ஈசுவரார்ப்பணமாய்க் கொடுக்கும் பொருளை அடியில் கண்டிருக்கும் சுவாமிகளின் விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

இப்படிக்கு,

அடியார்க்குமடியேன், T. கல்யாணசுந்தரம்.

ரூபாய் அனுப்பவேண்டிய விலாசம்:—

ஸ்ரீபரமஹம்ஸஸச்சிதானந்தயோகீஸ்வரர்,
கடிகோட்டை, வீரபல்லி போஸ்ட்டு.
ராயசோடி தாலூக்கா.
கடப்பை ஜில்லா,

A. No. 39252 LIBRARY, KOVILOOR

அபூர்வமான ரகஸ்யம்! வெளி வந்துவிட்டது!!

ஒன்பதாம் பதிப்பு. அதிகோப்யமான நூல்.

ஜீவப் பிரம்மைக்ய

வேதாந்த ரஹஸ்யம்.

இச்சிறந்த நூல், கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரரவர்களால் எழுதப்பட்டு வெளி வந்திருக்கின்றது. வேதங்களினுடையவும், ருஷிகளினுடையவும் அரும் பெரும் ரகஸ்யங்களையெல்லாம் மானிடர்கள் அறிந்துய்யும் பொருட்டு இந்நூலில் எல்லா ரகசியங்களும் வெட்டவெளியாய் வெளியாக்கி, உலகத்திற்கோர் உயர்ந்த இன்ப மனுபவிக்க நன்மை செய்துள்ளார். இதில், தமிழிலுள்ள அரிய வேதங்கள், உபநிடதங்கள், ஸ்ரீ பகவத்கீதை இன்னும் பெரிய நூல்களையெல்லாம் மேற்கோளாய் எடுத்துக் காட்டி யாவரும் உணருமாறு மிகவும் எளிய நடையில் எழுதியுள்ளார். யோகாப்பியாசம் செய்யப்பட்டவர்களுக்கும், மனோஇட்டத்தை நிறுத்த

ஸ்ரீ பரமஹம்ஸ
ஸச்சிதானந்த யோகீஸ்வரர்.
கடிகோட்டை, கடப்பைஜில்லா.

வேண்டுமென்று எண்ணங் கொண்டவர்களுக்கும், மனதை சமாதி நிலையில் நிறுத்தவேண்டுமென்று ஈசுவரனைத் துதி செய்யப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் சுலப மான வழியை இவ் "ஒன்பதாம் பதிப்பில்" உபதேசமாய்ச் சொல்லி இருக்கின்றார். இந்நூல், இதுவரையில் எட்டு பதிப்புகள் பதினொண்ணாயிரம் வரையில் அச்சிட்டு செல வழிந்து இப்போது ஒன்பதாம் பதிப்பு 960-பக்கங்களும், 40-படங்கள் வரையிலும் சேர்த்து "ஐயாயிரம்" நூல்கள் அச்சிட்டு வெளிவந்திருக்கின்றது. இதில், முன்பதிப்புகளை விட இன்னும் அனேக தேவ ரஹஸ்யங்களும், முன் படங் களைவிட இன்னும் அதிகபடங்களும் அந்தந்த சந்தர்ப்பங் களில் அதிகமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மனதை ஓட் டத்தை நிறுத்த மிகவும் சுலபமான வழியை படத்தின் மூலமாய்க்காட்டி உபதேசமாய்ச் சொல்லி யிருக்கின்றார். அன்றியும்,

தாயின் கர்ப்பத்திலுள்ள பிண்டத்தின் இருதயகமலத் தில் ஜீவன் ஏழாம்மாதம் போய்ச்சேர்ந்து பூர்வஞானத் துட னிருந்து சிசு ஜநநமாகும்போது, இருகைகளையும் குவித்து சிரசின்மேல் வைத்து ஈசுவரனைக் கும்பிட்டுக் கொண்டே பூமியில் பிறந்தவுடன், பூர்வஞானம் மறைந்து க்வா! க்வா! க்வா! என்று திமிரி வீரிட்டு அழும் ரஹஸ்ய மும், நமது சரீரத்தில் மூக்குத் துவாரங்களின்வழியாய் பிரதிதினம் இருபத்தி ஒராயிரத்து அறுநூறு பேர்கள் நடந்து நடந்து, ஒவ்வொருவராய் இறந்துகொண்டேவந்து முடிவில் இச்சரீரத்தைவிட்டு ஓடிவிடும் ரஹஸ்யமும், சமுத்திரத்தில் காற்றினால் உண்டாகும் அலையில், நுரை திவலை குமிழிகள் அடிக்கடி அதிசீக்கிரமாய்ப் பிறந்து பிறந்து மறைவதுபோல், ஸ்திரீ புருஷர்கள் விடும் சுவாசம் (மூச்சு) என்னும் காற்றில் மனது என்னும் அலையும், அவ் வலையிலிருந்து எண்ணங்களென்னும் குமிழிகளும் அடிக்கடி

அதிசீக்கிரமாய்ப் பிறந்துபிறந்து அந்தக்ஷணமே மறைந்து விடுகின்றதென்று மனதிற்கு, அலை நுரை திவலை குமிழி களைத் திருஷ்டாந்தங்களாய்க் காட்டி மனோ ஓட்டத்தை நிறுத்தும் ரஹஸ்யமும்,

பரமசிவன், நமது சரீரத்திலிருக்கும், பிராண, அபான வியான, உதான, சமானனென்னும் ஐந்து வாயுக்களையும் ஐந்து சர்ப்பாபரணங்களாய்ப்பூண்டு, உடுக்கை மான் சூலம் அக்கினிகளைக் கைகளில்பிடித்து இராக்ஷதனைத் தன் காலால் மிதித்துக்காட்டிய ரஹஸ்யமும், தில்லைநடராஜன் நடனம் செய்துகாட்டிய ரஹஸ்யமும், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதர் ஆதிசேஷன்மீது ஸயனித்து யோகநித்திரையிலிருக்கும் ரஹஸ்யமும், ஸோஹம்மந்திரம், ஸ்ரீ ராமமந்திரம், பஞ்சாக்ஷரம் முதலாகிய மந்திரங்களை ஜபம் செய்யப்பட்டவர்கள், அம்மந்திரங்களைக் கர்மவாக்கினுல் சொல்லாமலும், மனதில் நினையாமலும் ஜபம் செய்யவேண்டிய முறையை இந்நூலில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கின்றார். இவ்வுபதேசங்களினுல், மனோலயமாய் பிரம்மானந்த சுகத்தைத் தப்பாமல் அனுபவிப்பார்கள். இவைகள் யாவும் இந்நூலில் அந்தந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி அந்தந்தப் பாடல்களை திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டி அதன் ரஹஸ்யார்த்தங்களை யெல்லாம் வெட்ட வெளியாய் இந்நூலில் தெரிவித்திருக்கின்றார். சம்சார மென்னும் சமுத்திரத்தைக் கடந்து மோக்ஷமென்னும் வீட்டை அடைய இந்நூல் ஒன்றே போதுமானதாயிருக்கின்றது எல்லாவேதவாக்கியங்களும் அதற்குத் தக்கபாடல்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் புகழ்ந்து எழுதுவதனுல் பிரயோஜனமில்லை. இதை வாங்கி வாசிக்கப்பட்டவர்களுக்கே இதன் அனுபவம் பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாய்த் தெரியவரும்.

மேற்படி யோகீசுவர ரவர்களால் எழுதிய நூல்கள்.

	ரூ.	அ.
அனேக தேவரஹஸ்யங்களும், அனேக படங்களும் அடங்கிய ஒன்பதாம் பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" உயர்ந்த காலிகோ பயிண்டு	4	0
ஷை நூல் இங்கிலீஷ் முதற்பாகம்	2	8
ஜீவப் பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம் ... தெலுங்கு	4	4
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத் கீதை நான்காம்பதிப்பு உயர்ந்த காலிகோ பயிண்டு	2	4
ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் மூன்றாம் பதிப்பு	2	4
தத்துவ பரிசோதனை அன்னதான பலன் என்னும் நூல் மூன்றாம் பதிப்பு...	0	8
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம் மூன்றாம்பதிப்பு ...	0	6
மனோ ஓட்டத்தை நிறுத்திக் காட்டும் நூல்... ...	0	4
ஷை நூல் இங்கிலீஷ்	0	4
ஸ்ரீ ஸச்சிதானந்தர் பாமாலை	0	4
1¼-மணிநேரம் எரியும் உயர்ந்த ஊதுவத்தி 100-க்கு ...	2	0

மூன்றுமாதம் 13-று, தினங்கள் யோக நிஷ்டையிலிருந்து வெளிவந்தபோது பிடித்த போட்டோவிற்கு முன்னதாய் ரூபா 1—0—0 அனுப்பினால் அவர்களுக்குப் போட்டோ ரிஜிஸ்டர் மூலமாய் அனுப்பப்படும். இது. வி. பி. யில் அனுப்புவதில்லை.

ஷை புஸ்தகங்களுக்கு வி. பி. சிலவுகள் பிரத்தியேகம்.

இவைகள் யாவும் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்:—

ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி,
169-ஸ்டிராஹன்சு ரோட்டு, ரூளேப்பட்டாளம்,
பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.